Indian Antiquities

Amarar Puranam,

BEING

The antiquities of the gods of India, as described in the Sacred Writings of the Hindus, treated historically.

அமரர் புராணம்

என்னும்

தேவர் குலவிளக்கம்.

இஃது

இந்துமத வேதாகம புராண இதிகாசங்கள் முதலிய பூர்வநூல்கள்
கூறும் தேவர்களின் பூர்வோத்திர விஷயங்களைச்சரித்திர
சம்பந்தமாய் விளக்கிக்காட்டுகின்ற நூல்.

BY

J. S. CORNELIUS NADAR,

CLERK, COLLECTOR'S OFFICE, SALEM.

Copy-right Registered.

SALEM

Printed by A. Ram[illegible] at the Union Press.

1901

Price Rs. 1. விலை ரூபாய் ௧.

PREFACE.

The author has undertaken the publication of this Puranam with the view of bringing out certain historical truths, concealed under symbols, in those grand mythological treasures of India, named, Vedahs, Itihasas and Puranas, which contain the mythical history of the Devas and the Asuras, the earliest inhabitants of this land, who were constantly churning the ocean and fighting for the Amrita produced thereby. It is admitted, no doubt, that these mythical records have been greatly tampered with, to the despair of the historian, after the Muhammedan conquest of this land; but it must be remembered that it is impossible to find ancient history in any country without any mixture of fable and that India is no exception to this rule. Speaking about the Itihasas, Sir *Edwin Arnold* M.A., K.C.I.E., C.S.I. says

> "Yet these twain mighty poems contain *all the history of ancient India*, so far as it can be recovered, together with such inexhaustible details of its political, social and religious life that the antique Hindu world really stands epitomised in them. The Old Testament is not more interwoven with the Jewish race, nor the New Testament with the civilisation of Christendom, nor the Koran with the records and destinies of Islam, than are these two Sanskrit poems—the *Mahabharata* and *Ramayana*—with that unchanging and teeming population which Her Majesty, Queen Victoria, rules as Empress of Hindustan."
>
> (Indian Poetry).

In a similar way the author of the District Manual of Madura (J. H. Nelson, M.A., I.C.S.) is convinced that the Puranas are not devoid of historical facts; for, he says

> "Scientifically handled and attentively read together with the Sthala Puranas of Sriranga, Kanchipura, and other holy places, the Madhura Sthala Purana will doubtless furnish the Orientalist with much valuable knowledge. It contains a considerable amount of information touching the primitive doctrines of the Saiva faith and the customs of the inhabitants of the Pandya country. And it *unquestionably* contains a few *strictly historical facts*." (Chap: I of Part [illegible] the Madura Manual).

The missionary, the antiquary and the historian will surely obtain an inexhaustible fund of information in these sacred writings of the Hindus which, in spite of their puerile exaggeration, contain most interesting stories of ancient times. The missionary who remains ignorant of these ancient relics can do little service to the cause of Christianity in this land of the Devas, and the antiquary and the historian, unacquainted with these ancient records, cannot but leave the history of the Hindu Period (a period extending from the Noachian deluge to the eleventh century of the Christian era) an undesirable blank or a confused jumble of historic and legendary names.

It is almost an irony of fate that the past should be considered a blank in the history of a nation which, according to Herodotus, the first Greek historian of the 5th century B.C., was the greatest nation of the age. Scholars say that this land was the cradle of human civilisation long before the Roman's occupation of Britain and in the words of the late S. V. Thomas Nadar :—

> "When the wealthiest and proudest nations of modern Europe were yet naked savages or wandering robbers, when their arts and industries still slept in the wide womb of uncreated night, this great people had their fenced cities and marble palaces, their magnificent temples and gorgeous processions, their schools of sacred learning and academies of science and art, their observatories and fire-arsenals, their great statesmen and soldiers, their poets, philosophers and mathematicians."

That such a nation should have only a history of its conquerors and not of its primitive indigenous rulers, that the real history of India should only commence from the period of the Muhammadan occupation of this land, that the student of history should know little of the Suras and Asuras, the Yakshas and Rakshas, the mighty princes of the Solar and Lunar races whose histories are depicted in the glorious pages of the Vedas, Itihasas and Puranas and that the whole world should be in ignorance as to who the modern representatives of those Devas of the most venerable antiquity are, is really deplorable. Eminent European scholars and antiquarians have worked during the last 100 years with the help of the Sanskrit language, but are still unable to bring together the results of their learned researches in the shape of a connected history. When western scholars become more thoroughly

alive to the facts that *Tamil**, and not Sanskrit, is the most primitive language of India, and that Hinduism originated, as Wilson says in his Introduction to the Catalogue, in the *Pandya country*$, it will surely awaken in them a historical interest and a desire to enquire into the ancient history of India from original sources and a flood of light will then be thrown on Indian antiquities.

The author does not intend to give in this little Puranam a sketch of the Hindu Heroic gods and kings but only mentions a few interesting facts respecting their origin, their primitive land, their language and the race to which they belonged. He has taken copious extracts from the Hindu mythical works, as it is of the highest importance to furnish the reader with the text on which the conclusions are based. He entertains the hope that if all the particulars given in this book be carefully studied, the reader will be convinced that the subject is fully gone into and accurately described.

May 3rd, 1901,
SALEM.

J. S C.

* Vide pages 42, 112 and 113 of the Manual of the Administration of the Madras Presidency by Dr. C. D. Maclean, Vol: I.

$ Vide page 48, chapter II of part II, of the District Manual of Madura by J. H. Nelson M.A., I.C.S.

நூன்முகம்.

அண்ட புவன சராசரங்களைப்படைத்துக்காத்து இரட்சித்து வருகின்ற அகண்டபரிபூரண சட்சிதாநந்த சொரூபியாகிய கடவுள் ஒருவரேயன்றிப்பலரல்லவென்று யாவருமறிவோம். ஆகையினாலே வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய பூர்வகால சரித்திரங்களடங்கிய நூல்களிலெல்லாம், சுரர்குல தேவர்கள் முப்பத்துமுக்கோடியென்றும், அசுரர்குல தேவர்கள் அறுபத்தாறுகோடியென்றும், மற்றும் பிரிவினராகிய தேவர்கள் எண்ணிக்கைக்கடங்காதவர்களென்றும் சொல்லப்படும் தேவர்களென்னப்பட்டவர்கள், அதிபூர்வ யுகங்களில் இப்பாரதகண்டத்தைக்கைப்பற்றி யரசாண்ட வீரர்களேயல்லாமல் கடவுளர்களல்ல. இவ்வீரர்களின் சரித்திரங்கள் தான் இந்தியாவின் புராதன நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்நூல்களானவை மகமதிய அரசாட்சி இந்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட கி. பி. பதினோராவது நூற்றாண்டுக்குப்பின்பு அநேகமாய்த்திருத்தி யெழுதப்பட்ட காரணத்தினால், இந்நாட்டிலே சுமார் 4000 வருஷக்காலமாய் இராஜ்யபாரஞ்செய்துவந்த சோமசூரியாக்கினி முதலிய தேவர்கள் குலத்தவர்களின் சரித்திரங்களானவை நாளதுவரை அப்புராதன நூல்களில் புதைபொருளாகவே இருக்கின்றன. தேவர்களரசு புரிந்த இந்நாட்டை மகமதியர் கைப்பற்றிய பின்னிட்டுள்ள ஒன்பது நூற்றாண்டின் சரித்திரங்களைத்தான், இந்துதேச சரித்திர புஸ்தகங்களில் பார்க்கிறோம். அதிபூர்வ காலமுதல் மகா மேன்மை பெற்றிருந்த இந்து ராஜாக்களின் ஆதியோடந்தமான சரித்திரமானது இந்துதேச சரித்திரப்புஸ்தகங்களுக்கு வராதிருப்பது இந்நாட்டாருக்குப் பெருங்குறைவென்றறிவோம். இக்குறையை நீக்கும்பொருட்டுப் புராதன நூல்களில் மறைந்து கிடக்கும் சத்தியங்களை ஒவ்வொன்றாய் வெளிக்குக் கொண்டு வரும்படி முயலுகின்ற ஒவ்வொருவருடைய முயற்சிகளும் வியந்துகொள்ளப்படத்தக்கவைகளாகையால், தேவர்களென்னப்பட்ட பூர்வ இந்து ராஜாக்கள் யாரென்றும், அவர்கள் எங்கிருந்தவர்களென்றும், அவர்களுடைய சுபாவமென்ன, குலமென்னவென்றும் காட்டுவதற்கான பூர்வ நூலாதாரங்களை இந்நூலில் எடுத்துக்காட்ட முயன்றேன். சத்தியத்தை மறைக்க முயலுவது தீயமக்கள் சுபாவமென்று யாவரும் அறிவோம். மேன்மக்களோவெனில் தேவர்களின் பூர்வோத்திர உண்மை விஷயங்களை ஸ்தாபிக்கும்படியாக விடாமுயற்சி செய்து மூடாந்தகாரத்தை நீக்குவார்கள். எம்பெருமான் அவர்கள் முயற்சிகளை ஆசிர்வதிப்பார்.

1901-௵ மே-மீ 3-வ }
சேலம். }

கோ. சா. கோ.

அமரர் புராணம்.

அத்தியாய அட்டவணை.

	பக்கம்.
1-வது இந்தியாவின் பூர்வ குடிகள் தேவர்கள் ...	1
2-வது தேவர் கடவுளரல்ல மனிதர்	12
3-வது தேவர் நிறம் கறுப்பு	31
4-வது தேவர்கள் அரசகுலத்தவர்	41
5-வது சோமசூரியாக்கினி குலங்கள்	48
6-வது பூர்வரிஷிகள் க்ஷத்திரியர்	84
7-வது தேவர்களின் பூர்வஸ்தலம் தென்தேசம் ...	102
8-வது தேவர்களின் பூர்வபாஷை தமிழ்	135
9-வது தேவர்கள் அமுதகுலத்தவர் ...	147
10-வது நான்கு ஜாதிகள்	184
11-வது சிவபெருமான் குலவிளக்கம்	219
12-வது மூவேந்தர் குலவிளக்கம்	[illegible]
13-வது தேவேந்திரன் குலவிளக்கம்	372
14-வது விட்டுணு குலவிளக்கம்	391
15-வது ஆஞ்சநேயர் குலவிளக்கம்	405
16-வது இராமர் குலவிளக்கம்	414
17-வது கிருட்டிணன் குலவிளக்கம்	450
18-வது பிரமன் குலவிளக்கம்	476
19-வது சான்றாண்மை என்னும் சான்றோர் குணநலம் ...	486

விளம்பரம்.

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் இதன் விலை ரூ 3, தபாற் செலவு அணு 6, ஆக மொத்தம் ரூ 3—6—0-யும் அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்:—

யோ. சா. கோர்நேலியூ நாடார்,
கலெக்டராபீஸ் குமாஸ்தா,
கோட்டை, சேலம்.

☞ ஒரே தபாவில் 25 புஸ்தகங்கள் மொத்தமாக வாங்குகிறவர்களுக்கு ஒரு புஸ்தகமும், 50 புஸ்தகங்கள் மொத்தமாக வாங்குகிறவர்களுக்கு மூன்று புஸ்தகங்களும் அதிகமாகக் கொடுக்கப்படும்.

அமரர் புராணம்.

I-வது அத்தியாயம்.

இந்தியாவின் பூர்வகுடிகள் தேவர்கள்.

1. தேவர்கள் பூர்வகுடிகள், இரண்டு முக்கிய பிரிவினர், ஏகரு லத்தவர், 2. தேவகணங்கள் பதினெண்வகைப்படும், அவர்களில் முக்கியமானவர்களாவன :— 3. அமரர், 4. அசுரர், 5. கின்னரர், 6. கிம்புருடர், 7. கந்தருவர், 8. இராக்ஷதர், 9. இயக்கர், 10. பூதர், 11. வானரர், 12. நாகர், 13. முனிவர் என்பவர்களே, 14. இவர்கள் தோன்றிய காலம் ஆதியுகம்.

இந்தியாவென்னும் இப்பரத கண்டத்தை அதிபூர்வயுகங்களில் முதலில் கைப்பற்றினவர்கள் யாரென்றறியும்படி இந்நாட்டிலுள்ள வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலான பூர்வ நூல்களை எல்லாம் திருப்பித்திருப்பிப்பார்க்கினும், இத்தேசத்தில் தேவர்கள்வசித்தார்களென்றே கண்டிருக்கிறது. அவர்களுக்கு முன்னிட்டு இத்தேசத்தில் எவர்களுமிருந்ததாக எந்த சாஸ்திரமும் தெரிவிக்கிறதில்லை. பூர்வகுடிகளாகிய தேவர்கள் பற்பல பிரிவினராயிருந்தார்களென்றும், அவர்களுள் சுரர், அசுரர் என்னும் இரண்டு பிரிவினரும் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் போர்புரிந்து கொண்டேயிருந்தார்கள் என்றும் நூல்கள் கூறுகின்றன. இவ்விரு வகுப்பினருக்கும் இந்த நூல்களில் பற்பல பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றமையால், அவற்றிற் சிலவற்றைக் கூறுவாம்:—

சுரர் பெயர்.

அண்டர், அதிதிமைந்தர், அதிதர், அமரர், அமுதர், அய்யர், ஆதித்தர், இமையவர், இலேகர், உம்பர், உயர்நிலத்தோர், கடவுளர், சுடாமவுலியர், சுரர், சுவர்க்கத்தோர், தானவர்பகைவர், தேவர், பட்டாரகர், புண்ணியர், புகவர், புத்தேளிர், புலவர், மேலோர், வானோர், வானவர், விண்ணவர், விபுதர் என்பவைகளே.

அசுரர் பெயர்.

அசுரர், அவுணர், கருவர், தநுசர், தானவர், திதிமைந்தர், தைத்தியர், நிசாசரர், [illegible], பூர்வதேவர், [illegible] என்பவைகளே.

ஒருவருக்கொருவர் பகைவரான இவ்விரு திறத்தாரும் ஒரே குலத்தில் தோன்றியவர்களென்று பூர்வநூல்களாலறியலாம். சுராசுரர் ஏககுலத்தவர் என்னும் ஐதிகத்தைக்கொண்டே, இராமாயணத்தில் சடாயு மகாராஜன் இராமலட்சுமணர்களுக்குச் சொல்லிய கதையில் பிரமாவின் குமாரரிலொருவராகிய தக்கன் என்னும் பிரசாபதிக்கு 50-பெண்கள் பிறந்தார்களென்றும், அவர்களில் பதின்மூவரை தக்கனென்பவர் தம்முடைய சகோதரனை மரீசி பிரசாபதியின் குமாரனாகிய காசிபருக்குக் கலியாணஞ் செய்துகொடுக்க, அவர்களில் அதிதி என்பவளிடம் சுரர் தோன்றினார்கள் என்றும், அவள் சகோதரியாகிய திதி, என்பவளிடம் அசுரர் உதித்தார்களென்றும் சடாயு சொல்லுகிறார் :—

கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சடாயு காண்படலம்.

25-வது கவி.

தக்கனணி வயிற்றுதித்தா ரைம்பதின்மர் தடங்கொங்கைத் தையலாருள்
தொக்கபதின் மூவரைமக் காசிபனும் புணர்ந்தன னத்தோகைமாருள்
மிக்கவதிதிப்பெயரான் முப்பத்து முக்கோடி விண்ணோ ரீந்தாள்
மைக்கருங்கண் திதி யென்பாளதிவிரட்டி யசுரர் தமைவயிறுவாய்த்தாள்.

வான்மீகியின் உத்தர ராமாயணத்தில் பிரகஸ்தன் [illegible] பார்த்து குபேரனரசாண்ட லங்காநகரைக் கைப்பற்றும்படியாகக் கூறிய ஆலோசனையிலும் சுராசுரர் ஒரே மரபினரென விளம்பியிருக்கிறது. அதின் விவரமாவது :—

"அதுகேட்டுச் சுமாலி ஒன்றும் பேசாதேசெல்ல, சிறிதுகாலத்தின்பிறகு பிரகஸ்தன் தசமுகனிடம் வந்து [illegible] அப்பா! நீ குபேரனிடத்துத் தமையனென்று முறைபாராட்டல் தகுதியன்று; சூரர்க்குத் தகப்பனென்பதும் தமையனென்பதும் தம்பியென்பதுமில்லை; இதற்கொரு திருஷ்டாந்த முரைக்கின்றேன் கேள்; கசியபமாமுனிவர்க்குத் திதி அதிதியென மனையாட்டியரிருவருளர். அவ்விருவரும் சகோதரிகளே; திதிக்குப்பிறந்தவர் அசுரர். அதிதிக்குப் பிறந்தவர் சுரர். முற்பிறந்த தயித்தியர்களே மூவுலகத்தாட்சியு முன்னிருந்தது. அதனை ஆதித்தராகிய சுரர் விட்டுணுவைக்கொண்டு வென்று பெற்றுக்கொண்டனர். இப்படி முற்பட்டவர் ஒழுக்கத்தை யோசித்து நீ இலங்கையைக் கைவசப்படுத்திக்கொள்வதே நீதியென்றனன்."

கூர்மபுராணம், இராமன் வனம்புகுந்த வத்தியாயம், 37-வது கவியில் தக்கனுக்கு 60-பெண்களிருந்ததாகவும், அவர்களி லொருமரைக் [illegible], அவர்களுள் அதிதியிடம் சுரரும், திதியிடம் [illegible] கூறப்பட்டிருக்கிறது :—

ஆசறுதக்கனீன்ற அறுபது மகளிர் தம்மில்
வேசறு [illegible] காசிபற் கீய்ந்தான் [illegible]
[illegible] திதியி [illegible]
[illegible]

இவ்விருதிறத்தாராகிய தேவர்களுள் அசுரர்தாம் முதலில்இந்நாட்டிலரசாண்டவர்கள்; அவர்களுக்குப் பின்பு சுரர் விட்டுணுவினுதவியால் அசுரரைச் சங்கரித்து அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆகையால் அசுரருக்குப் பூர்வதேவர்களென்றும், சுரருக்குத் தேவர்கள் என்றும் பெயர். அசுரருக்கு பழைய தேயித்தியர் என்னும் பெயர் வில்லிபுத்தூராழ்வார் பாரதம், உத்தியோகபருவம், கிருட்டிணன் தூது சருக்கம், 23-வது கவியில் வழங்கியிருக்கிறது:—

"தேவராயினும் பழைய தேயித்தியராயினு மற்றுஞ் செப்புகின்றோர்
யாவராயினு மெதிர்த்தோருயிருணை வென்றிருப்பதுவே யென்கைவாளி
மூவராயவர்களுக்கு முதல்வனாகிய மூர்த்தி முகிலேய் பூக
மீவராலுகளும் வயற்குருநாடென்னிவனவன் பால்வேண்டுமாறே."

பஞ்சபாண்டவர்களில் முதல்வராகிய தருமர் கிருட்டிணமூர்த்தியைப்பார்த்து துரியோதனனிடம் தூதுசென்று பாண்டவர்களின் இராஜ்ஜியத்தை அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கவேண்டுமென்று கேட்கச்சொன்னபோது, அவருடைய தம்பியாகிய அருச்சுனன் சொன்னவாக்கு:—

"மும்மூர்த்திகளுக்கும் முதல்வனாகிய கிருட்டிணமூர்த்தியே! தேவர்களானாலும் அவர்களுக்குமுன் அரசராயிருந்த அசுரரானாலும் வேறு யாவரானாலும் போரில் எதிர்த்தவர்கள் உயிரைஉண்ணும்பொருட்டாகவே என்று கையில் அம்பு இருக்க, மேகங்களளாவ வுயர்ந்த பாக்கு மரங்களின்மீது மீன்கள் குதிக்கப்பெற்ற நீர்வளம் பொருந்திய குருநாட்டை, நீர் துரியோதனனிடம் தூதுசென்று இரக்க தருமர் விரும்புவதுயாது காரணம்?"

என்றுள் ளது பொருள். ஆகையால் இந்தியாவின் பூர்வகுடிகளாகிய தேவர்களில், பூர்வ தேவரென்னப்பட்ட அசுரர்தாம் இத்தேசத்தில் முதல் முதல் ராஜ்ஜிய பாரஞ் செய்தவர்களென்றும், அவர்களுடைய இராஜ்ஜியத்தைப் பின்விட்ட காலங்களில் தேவர்களென்னப்பட்ட சுரர் விட்டுணுவினுதவியால் கைப்பற்றினரென்றும், சுரர் அசுரர் என்னும்இருவகைத் தேவர்களும், இதிகாசங்கள் கூறுகிறபடி, ஒரே குலத்திலுதித்தவர்களென்றுமறிக.

2. தேவகணங்களில் சுராசுரரே முக்கியமானவர்களானபோதிலும், அவர்களோடுசேர்ந்த வேறு பதினாறு கணங்களுமுண்டு. அவர்களைச் சேர்த்து தேவகணங்கள் பதினெண்வகைப்படும். அவற்றின் பெயர்களாவன:—

1. அமரர்,
2. சித்தர்,
3. அசுரர்,
4. தைத்தியர்,
5. கருடர்,
6. கின்னரர்,
7. நிருதர்,
8. கிம்புருடர்,
9. காந்தருவர்,
10. இயக்கர்,
11. விஞ்சையர்,
12. பூதர்,
13. பைசாசர்,
14. அந்தரர்,
15. முனிவர்,
16. உரகர்,
17. ஆகாயவாசிகள்,
18. போகபூமியர்.

"கின்னரர் கிம்புருடர் விச்சாதரர் கருடர்
பொன்னமர் பூதர் புகழியக்கர்—மன்னும்
உரகர் சுரர்சாரணர் முனிவர் மேலாம்
பரகதியோர் சித்தர்பாலர்."

"காந்தருவர் தாரகைகள் காணப்பசாசுகள்
ஏந்துபுகழ் மேயவிராக்கத ரோடாய்ந்த திறல்
போகாவியல் புண்ணியபோக பூமியாருடனே
ஆகாயவாசிகளவார்."

என்னும் சூத்திரங்களாலுமறிக. இவர்களில் முக்கியமானவர்கள் சிலரின் குலங்களை விளக்கிக்காட்டும் ஆதாரங்களைச் சுருக்கமாக வரைவோம்.

3. அமரர்.—இவ்ர்கள் யாரென்று முன்னமே கூறினோம். இவர்களின் தொகை முப்பத்து மூன்றுகோடி என்பதாக மேலே நாம் எடுத்துரைத்த கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சடாயுகாண்படலம், 25-வது கவியாலறியலாம். இந்த முப்பத்துமூன்று கோடிதேவர்களும் அதிதியின் குமாரரல்ல. அதிதியின் குமாரர் பன்னிருவர் என்று மகாபாரதம் ஆதிபருவத்தில் கண்டிருக்கிறது. அப்பன்னிருவர் பெயர்களாவன:—

1.	தாதா,	(அதாவது)	நகையாளன்.
2.	மித்திரன்,	,,	சிநேகிதன்.
3.	ஆரியமன்,	,,	ஆரியகுலத்து மேன்மகன்.
4.	சக்கரன்,	,,	மேன்மகன். இது இந்திரனுடைய பெயர்களிலொன்று.
5.	வருணன்,	,,	நற்குடிப்பிறந்தோன்.
6.	அங்குசன்,	,,	யானையை நடத்தும் குடாரியையுடையவன், யாவரையும் வசப்படுத்துகிறவன்.
7.	வாகன்,	,,	சுந்தரன், அழகன்.
8.	விவசுவான்,	,,	பரவசமான மேன்மகன்.
9.	பூசன்,	,,	அழகிய அன்பன்.
10.	சவிதன்,	,,	அழகன், சுந்தரன்.
11.	தட்டன்,	,,	பல்லன், பல்நீண்டவன்.
12.	விட்டுணு,	,,	ஆகாயத்தையும் நடுங்கச்செய்கிறவன்.

"And Marichi's son is Kasiyapa, and from Kasiyapa have sprung these creatures. Unto Daksha (one of the *Prajapatis*) were born thirteen daughters of great good fortune. The daughters of Daksha are * * * Aditi * * *. From Aditi have sprung the twelve Adityas who were the *lords of the universe*. And O Bharata,

as they are according to their names shall I recount them to thee. They are *Dhata, Mitra, Aryama, Sakra, Varuna, Angsa, Vaga, Vivaswan, Pusha, Savita, Tashta and Vishnu.*"

(*vide* Protap Chundra Roy's translation of the Mahabharata, Adi Parva, Section LXV.)

அதிதியின் மக்களாகிய இப்பன்னிருவரின் குலத்தில் தோன்றிய தேவர்கள்தான் முப்பத்துமுக்கோடி தேவர்கள். இவர்களே அமரர்.

4. அசுரர்.—இவர்கள் காசிபருக்கு அதிதியின் சகோதரியாகிய திதியென்பவளிடம் பிறந்த பிள்ளைகள் என்று மேலே பார்த்தோம். கம்பராமாயணத்தில் அதிதியின் மரபினர் 33-கோடியென்றும், திதியின் மரபினராகிய அசுரர் அதற்கு இரண்டத்தனையரானவர்கள் என்றும் கூறியிருப்பதால், அசுர குல தேவர்கள் அறுபத்தாறு கோடி யென்றறியலாம். இந்த அறுபத்தாறுகோடி தேவர்களும் திதிக்குப் பிறந்தவர்களல்ல, திதியின் மரபிலுதித்தவர்கள் என்றே பொருள். திதிக்குப் பிறந்த பிள்ளைகளிருவர் :—

1. இரணியன், (அதாவது) பொன்னிறமானவன்.
2. இரணியாக்கன், பொன்னிறச் செவ்வன் என்பவர்களே.

இலிங்கபுராணம், தேவரசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம்.

11-வது கவி.

உரைத்த தவத்துக் காசிபன்றன் மனைவிமாரிலொளிர திதி
விரிக்குங் கதிரோர் பன்னிருவர் தம்மை விழைவினுடனீன்றுள்
வரிப்பூணுதலாள் திதியிரணியாக்கனோடு மறங்கனிந்து
தருக்காலுயர்ந்த விரணியனைத் தந்தாளுவகைதழைவுறவே.

என்னுமாதாரத்தாலறிக. ஆகையால் திதியின் மக்களாகிய இரணியன், இரணியாக்கன் என்னும் இருவர் மரபில் தோன்றிய தேவர்கள் அறுபத்தாறுகோடிப் பேர். இந்த இரணியன் மரபில் கீர்த்திபெற்ற மாவலிச் சக்கரவர்த்தியும் வாணசூரனும் தோன்றினார்கள்; அருணசலபுராணம், திருமலைச்சருக்கம், 9, 10-வது கவிகளைப் பார்க்க.

5. கின்னரர்.—இவர்கள் இருபிரிவினர். ஒரு பிரிவார் பிரமனின் குமாரனாகிய புலஸ்தியன் மரபில் தோன்றினவர்கள். மகாபாரதம், ஆதிபருவத்தில் கின்[illegible] [illegible], குரங்குகளோர் [illegible] வானரர், இயக்கர் என்னும் நான்கு பிரிவினரும் புலஸ்தியன் மரபினர் என்று கண்டிருக்கிறது.

"And, O tiger among kings, the sons of *Pulastya* of great wisdom are the Rakshasas, Vanaras, *Kinnaras* and Yakshas."

(*Mahabharata.*)

புராணங்களிலிருந்தும் ஓர் ஆதாரம் கூறுவோம்.

அருணசல புராணம், திருமலைச்சருக்கம்.

14-வது கவி.

அங்கிராசன பதிகள் காந்தருவரை யளித்தார்
தங்குமத்திரி கதிர்மதி புலத்தியன் றனையர்
பொங்கிராக்கதர் வானரர் கின்னரர் புலக
னெங்குமைந்தர் கிம்புருடர் பின்விலங்கையுமளித்தான்.

ஆகையால் கின்னரரில் ஒரு பிரிவார் புலத்தியன் மரபிலுதித்தவர்களென்றறிக.

இரண்டாவது பிரிவினர் காசிபருக்கு தக்கன் மகளாகிய அரிட்டையென்பவளிடம் பிறந்தவர்கள். இலிங்கபுராணத்தில் இவர்கள் மரபு தெரிவித்திருக்கிறது.

இலிங்கபுராணம், தேவரசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம்.

16-வது கவி.

சுடர்செப்பகம் பொற்குவடேய்ப்பத் துணைத்து வீங்கிப்பணைத்தமுலை
யிடுகுநசப்பி லரிட்டை யென்பாள் யாழ்தேர்ந்துயர் கின்னரரொடு
மடைவேயிபற் கந்திருவர் தமைப் பயந்தனமரு பிரையென்பாள்
கொடி கடருக்களிவற்றையனங் குளிர்க்கும் வண்ண முயிர்த்தனளால்.

இக்கவியில் காசிபரின் மனைவியும் தக்கனுடைய மகளுமாகிய அரிட்டையின் மரபில் கின்னரரும் கந்திருவரும் தோன்றினார்கள் என்று சொல்லியிருப்பதால், கின்னரரில் இரண்டாவது பிரிவினர் காசிபரின் மனைவியாகிய அரிட்டையின் மரபினர் என்றறிக.

6. கிம்புருடர்.—இவர்கள் பிரமனின் குமாரனாகிய புலகனுடைய மரபினர். மகாபாரதம், ஆதிபருவத்தில், புலகனுடைய மரபிலே சாலவர்கள், சிம்மர்கள், கிம்புருடர் முதலானவர்கள் தோன்றினார்கள் என்று கூறியிருக்கிறது. அதே பிரகாரம், அருணசல புராணம், திருமலைச்சருக்கம், 14-வது கவியிலும், கிம்புருடர் புலகன் மரபினரென்று கண்டிருக்கிறது. இக்கவியானது கின்னரரைப்பற்றிச் சொல்லுமிடத்தில் பெயர்த்தெழுதப்பட்டிருக்கிறதைப் பார்க்க.

7. காந்தருவர்.—இவர்கள் மூன்று பிரிவினர்.

(a) பிரமனின் குமாரனாகிய அங்கிரன், சனபதி யென்னு மிருவர் [illegible] காந்தருவர் ஒரு பிரிவினர். அருணசலபுராணம், திருமலைச் சருக்கம், 14-வது கவியில்,

அங்கிராசனபதிகள் காந்தருவரை யளித்தார்

என்று விளம்பியிருக்கிறது.

(b) [illegible] பிரிவினர் காசிபருக்கு அரிட்டையின் [illegible] பிறந்த [illegible] இலிங்கபுராண ஆதாரத்தில் [illegible]

ரைப்பற்றிக் கூறிய இடத்தில் பெயர்த்தெழுதியிருக்கிறேம். இப்பிரிவினருற்பத்தி விஷயமாய்க் கூர்மபுராணிகர் கூறுமோர் ஆதாரம் இவ்விடம் பெயர்த்தெழுதுவோம்.

கூர்மபுராணம், வாணைசுரன் சாருபமடைந்த வத்தியாயம்.
9-வது கவி.

அழகஞ்சுமர் கலைற்றும் லிலனு மருங்கு லரிவை வெனுங்
கழைகொன்றெளிரும் பசுநெடுந்தோட் கதிர்வெற்கண் ணிபருள்மைந்தர்
மழவெங்கதிருஞ்செவி மழுங்க வயங்குமொளி கொப்பளித்தலரு
மிழைசேர்தடக்தோட் கந்திருவ ரீனைகுஞற்றின்மேலுனரால்.

ஆகையால் காந்தருவரின் இரண்டாவது பிரிவினர் காசிபருக்கு அரிட்டையிடம் தோன்றிய மரபினென்றறிக.

(c) காந்தருவரின் மூன்றாவது பிரிவார் காசிபருக்கு இலங்கினையென்பளிடம் பிறந்த பதினறு பிள்ளைகளின் மரபினர்.

அருணசல புராணம், திருமலைச் சருக்கம்.
13-வது கவி.

அரிட்டையென்பவளிடத்திலே [illegible]
திரட்டிமங்கையர் பிறந்தன ரிலங்கினை முனிவ
னருட்டவத்திலெண்ணிரட்டி கந்தருவரை யளித்தா
னுருட்டுவாள்விழிக்கபிலவைப் பதின்மர்வர் துதித்தார்.

இம்மூன்று பிரிவினராகிய காந்தருவருக்குள்ளே அரிட்டையின் மரபில் தோன்றிய காந்தருவ [illegible]ர்கள் மாத்திரம் ஆயிரத்துக்கதிகம் என்கிறுர் கூர்மபுராணிகா.

8. இராக்கதர்.—இராக்கதர் மூன்றுவகுப்பினர். ஒரு வகுப்பார் புலத்தியன் மரபிலுதித்தவர்கள். இவர்களைப்பற்றி மகாபாரதம், ஆதிபருவத்தில் புலத்தியன் மரபில் இராக்கதர், வானரக்கொடிவேந்தர், கின்னரர், இயக்கர் என்னும் நான்கு வகுப்பினரும் தோன்றினுர்கள் என்று கண்டிருக்கிறது. அருணசல புராணம், திருமலைச்சருக்கம், 14-வது கவியாலும் இராக்கதர், வானரர், கின்னரரென்னு மூன்று பிரிவினரும் புலத்தியன் மரபிலுதித்தவர்களெனப் பார்த்தோம். இராமாயணம், உத்தரகாண்டத்தில் இராவணுதி இராக்கதர்கள் புலத்தியனிலிருந்துண்டான வமிச வரிசை விபரம் கண்டிருக்கிறது. ஆகையால் புலத்தியன் மரபினர் ஒரு கிளை இராக்கதர் என்றறியலாம்.

இராக்கதரில் இரண்டாவது பிரிவினர் காசிபருக்குக் [illegible] மாளாகிய குரோதவசையிடம் பிறந்த மரபினர். இவர்களைப்பற்றி, [illegible]ங்க புராணம், [illegible] 15-வது கவியில்

[illegible] குரோதவசை [illegible]

[illegible] புராணம், வாணைசுரன் [illegible]
15-வது கவியில்

'குனிவார்புருவக் குரோதவசை கொடிய வரக்கர் தமைப்பயந்தாள்'

என்றும் விளம்பியிருக்கிறது. ஆகையால் இராக்கதரின் இரண்டாவது பிரிவு காசிபருக்குக் குரோதவசையிடம் பிறந்த மரபினர் என்றறியலாம்.

இராட்சதரின் மூன்றாவது பிரிவு வருணபகவானுடைய குமாரனாகிய அதருமனுக்கு நிருதியென்பவளிடம் பிறந்த மரபினர். ஆகையால் அவர்களுக்கு நிருதர் என்னும் பெயருண்டாயிற்று. மகாபாரதம், ஆதிபருவம், சம்ப பருவத்திலே, வருணனுணவர், பிருகு முனிவரின் குமாரனாகிய சுக்கிரனுடைய குமாரியாகிய தீவியென்னும் மாதைத் தம்முடைய மூத்ததாரமாக மணம்புரிந்தார் என்றும், அவளிடம் சுரை என்னும் குமாரத்தியும், வாலன், அதருமன், வாயன், மகாவாயன், மிருத்தியு என்னும் குமாரரும் உதித்தார்கள் என்றும், அவர்களில் அதருமன் நிருதியென்பவளை மணம்புரிந்தானென்றும், அவளிடம் நிருதர் என்னப்பட்ட இராட்சதர் தோன்றினார்கள் என்றும் கண்டிருக்கிறது. ஆகையால் இராட்சதரின் மூன்றாவது பிரிவினர் வருணன் மரபினர்.

9. இயக்கர்.—இவர்கள் மூன்று பிரிவினர்.—

(a) மகாபாரதம், ஆதிபருவத்தில, புலத்தியன் மரபில் இயக்கர் தோன்றினார்கள் என்று கூறியவிபரம் முன்னமே எடுத்துரைத்தோம்.

(b) இரண்டாவது பிரிவினர் காசிபருக்குச் சுதியென்பவளிடம் பிறந்த பிள்ளைகள். இலிங்க புராணம், தேவரசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம், 15-வது கவியில்

'வெங்கார் விடநேர்விழிச் சுதியியக்கர் தம்மை வியந்தளித்தாள்'

என்று கூறியிருப்பதாலறிக.

(c) மூன்றாவது பிரிவினர் காசிபருக்குக் கிரிடையென்பவளிடம் பிறந்த பிள்ளைகள். கூர்ம புராணம், வாணாசுரன் சாரூபமடைந்தவத்தியாயம், 13-வது கவியில,

'முல்லைக்கறிபினைதிரில்லாத கிரிடையென்னு மொய்குழலாள்
மல்லிற்பொலிதோளியக்கர் தமையினிதின்வயிறு வாய்த்தனளால்'

என்று கண்டிருக்கிறது.

10. பூதர்.—தேவகணங்களிலொன்றாகிய பூதரென்னப்பட்டவர்கள் மரீசியின் குமாரனாகிய காசிபருக்குத் தக்கன் மகளாகிய சுரசையென்பவளிடம் பிறந்த மரபினர்.

கூர்ம புராணம், வாணாசுரன் சாரூபமடைந்த வத்தியாயம்.

8-வது கவி.

அன்கவிழுந்திவாய்காய்ந்தவரில் வேனெடுங்கண்பணைத்தோட்
சுரசைபுதல்வர்பகுறலைய சற்பர்பலர்வீழ்கரும் பூதர்
விரைசெய்மலர்ப்பைந்தரு நீழல்விண்ணோர்பதிமுமேதக்க
திருவீத்திருக்குமா நகரிற்சிறப்பினேடுந்திரிந்திடுவார்.

என்னும் கவியாலறிக.

11. ஆகாயவாசிகள்—இவர்களுக்கு வானரர் என்றும் பெயர். வான் என்னும் பெயருக்கு ஆகாயம், மேன்மை என்று பொருள். ஆகையால் வானரர் என்னும் பெயருக்கு ஆகாயவாசிகள் என்றும், மேன்மக்கள் என்றும் பொருள். வானரர் மலைப்பிரதேசங்களிற் குடியேறின காரணத்தாலவர்களுக்கு ஆகாயவாசிகள் என்னும் பெயருண்டாயிற்று. இவர்களுடைய கொடி குரங்குக்கொடியான காரணத்தாலும், வானரம் என்னும் பெயருக்குக் குரங்கு என்னும் பொருள் ஒன்றிருக்கின்ற காரணத்தாலும், இந்துக்கள் வானரராகிய ஆகாயவாசிகளைத் தேவர்களென்று அதிபூர்வ காலங்களிலெண்ணி வந்த பூர்வ உற்பத்தி விவரத்தை மறந்து பிற்காலங்களில் வானரமாகிய குரங்கை தெய்வமென்று எண்ணிப் பூசித்துவந்ததாகத் தெரிகிறது. ஆகாயவாசிகள் என்னப்பட்ட வானரர்கள் சுரர், அசுரர், கந்தருவர், கின்னரர், கிம்புருடர் முதலானவர்களைப்போன்ற ஒரு தேவகணம். இவர்களில் இரண்டு பிரிவுகளுண்டு. ஒரு பிரிவார்புலத்தியன் மரபில் தோன்றினவர்கள், இதைப் பற்றிய மகாபாரத ஆதாரமும், அருணாசல புராண ஆதாரமும் கின்னரரைப்பற்றிச் சொல்லிய இடத்தில் பெயர்த்தெழுதி யிருக்கிறோம்.

இரண்டாவது பிரிவினர் வாயுபகவானின் மரபினர். இவர்களைப் பற்றி இராமாயணத்தில் வாசிக்கிறோம். அதில் மேரு மலைக்கருகிலிருந்த கேசரி என்னும் வானரனுக்கு அஞ்சனாதேவியிடம் பிறந்த குமாரனாகிய ஆஞ்சநேயர் என்னும் அனுமாரை வாயு புத்திரன் என்று கூறியிருக்கிறது. அதாவது வாயுவின் மரபில் தோன்றிய கேசரி என்னும் வானரனுடைய புத்திரன் என்று பொருள்.

ஆகையால் புலத்தியன் மரபில் தோன்றிய வானரர் ஒரு பிரிவாரென்றும், வாயுவின் மரபில் தோன்றிய வானரர் வேறோர் பிரிவார் என்றுமறிக.

12. உரகர்.—உரகர் என்பது நாக ஜாதியாருக்குப் பெயர். இவர்கள் அதிபூர்வ காலமுதல் நாகங்களை வணங்கிவந்த காரணத்தால் இவர்களுக்கு உரகர், நாகர், சற்பர், பணி என்னும் பெயர்களுண்டாயிற்று, (உரகம்-பாம்பு). மகாபாரத யுத்த காலத்தில் அவர்கள் அத்தினபுரிக்கருகிலுமிருந்தார்களெனப்பார்க்கிறோம்.

"The Aryan colony at Hastinapur was not, however, without its neighbours. Amongst others was a Naga people, who dwelt in cities, and had perhaps attained a certain stage of civilization."

(Page 23 of Talboys Wheeler's History of India, 1st Chapter, Retrospect of Vedic India.)

இவர்கள் அரசாட்சிபுரிந்த நாடு மத்திய இந்தியாவிலுள்ள நாகபுரி (Nagpore) பிரதேசங்கள்.

நாகர்கள் இருவகுப்பினர்:—

முதலாவதுபிரிவினர்.—காசிபருக்குச் சுரசையென்பவளிடம்பிறந்த பிள்ளைகளின் மரபினர். கூர்மபுராணம், வாணாசுரன் சாருபமடைந்த வத்தியாயம், 8-வது கவியில்,

'சுரசை புதல்வர் பதறலைய சர்ப்பர்'

என்று கண்டிருப்பதாலறிக.

இரண்டாவது பிரிவினர்.—காசிபருக்குக் கத்துரு வென்பவளிடம் பிறந்த பிள்ளைகள். இவர்களுப்பத்தியைப்பற்றி அருணாசல புராணம், திருமலைச்சருக்கம், 12-வது கவியில்,

"ஆலமேர் விழிக் கத்துருபணி யெலாமளித்தாள்"

என்றும், கூர்மபுராணம், வாணாசுரன் சாருபமடைந்த வத்தியாயம், 10-வது கவியில்,

"கடைந்தமணிச் செப்பெனப்பிணைத்த கதிர்மென் முலைக் கத்துரு வென்னு மடந்தை பராந்தன் முதறகம் வயிறு வாய்த்தாள் * *"

என்றும் கண்டிருக்கிறது. இம்மரபினரில் ஆதிசேடன், அனந்தன், வாசுகிமுதலான நாகர்கள் அதிகக் கீர்த்தி பெற்றவர்களென மகாபாரதம் கூறுகிறது.

நாகர்குல தேவர்களின் தொகை இரண்டாயிரம். சுரசையின் மரபினர் ஆயிரம், கத்துருவின் மரபினர் ஆயிரம்.

இலிங்கபுராணம், தேவாசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம்.
14-வது கவி.

சுரசை கரியவிடங் கனன்று சொரிதரும் பெயிற்றகொடுஞ்சர்ப்பம்
விரைவி னோராயிரம் வயறுவாய்த்தாள் விளங்கு கத்துருவு
மெரியுமணி சேர்தலைகளாயிரங்களுடைய வெருழ்வலிய
வரிசேர்மிட்ற்ற படநாக மளித்தாளோராயிரம் கிழ்வால்.

13. முனிவர்.—இவர்களும் தேவகணங்களி லொரு பிரிவார். முனிவரென்றால் இருடிகள் என்றருத்தமன்று. காசிபருக்கு முனியம் மாளிடம் பிறந்த பிள்ளைகள் என்றறிவோருள். இலிங்கபுராணம், தேவ [illegible] த்த வத்தியாயம், 15-வது கவியில்,

"அங்[illegible] முனிவர் [illegible]த்தாள்"

என்று கூறியிருப்பதாலறிக. இவ்வாறு முனியம்மாளிடம் பிறந்த பிள்ளைகள் [illegible] என்பதாக மகாபாரதம் கூறுகிறது. [illegible]

[illegible]

1. வீமசேனன்,	(அதாவது)	பயங்கரசேனாபதி,
2. உக்கிரசேனன்,	,,	மூர்க்கசேனாபதி,
3. சுபநுணன்,	,,	நல்லபாணவீரன்,
4. வருணன்,	,,	நற்குடிப்பிறந்தோன்,
5. கோபதி,	,,	இராஜராஜன்,
6. திரிதராஷ்டிரன்,	,,	மூன்றுலகத்திலும்பராக்கிரமசாலி,
7. சூரியவர்ச்சன்,	,,	சூரியமகாராஜன் மகுடத்தை நீக்குகிறவன்,
8. சத்தியவாக்கன்,	,,	ஒருசொல் வாசகன்,
9. அருக்காபரணன்,	,,	சூரியமகாராஜனுடைய ஆபரணங்களை யணிபவன்,
10. பிரயதன்,	,,	பத்துலக்ஷம் பேருக்குச் சமானமானவன்,
11. வீமன்.	,,	பயங்கரமானவன்,
12. சித்திரரதன்,	,,	சிறந்தரதவீரன்,
13. சாலிசிரன்,	,,	அமுதகுல நல்லவன்,
14. பார்ச்சன்னியன்,	,,	பூமிக்குச் சிநேகம் போன்றவன்,
15. காளி,	,,	சிங்கம்,
16. நாரதன்,	,,	மேகம்போல் கொடுப்பவன்,

என்பவர்களே. இவர்கள் மரபினர் தாம் முனிவர் என்னும் தேவகணத்தவர்.

14. இத்தன்மைய உற்பத்தி விபரங்கள் கூறப்பட்ட இந்தியாவின் பூர்வகுடிகளே [illegible]தவர்கள். இவர்களுக்குமுன் இந்நாட்டில் வேறெவருமிருந்ததாகத் தெரியவில்லை. எப்படியெனில் இந்தியாவின் பூர்வநூல்களிலெல்லாம் கால அளவைக்காட்டும்படிக்கு யுகங்களாக அமைத்துப் பிரித்திருக்கிறார்கள். இத்தன்மைய யுகங்கள் நான்கு:—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பவைகளே. இவற்றிற்கு முன்னிட்டுள்ள கணக்கிடக்கூடாதகாலத்துக்கு ஆதியுகம் என்றுபெயர். கிரேதாயுகத்தில் இராவணனை ராட்சதர்களுக்கு முற்பிதாவாகிய புலத்திய பிரசாபதியிருந்தாரென்று உத்தர ராமாயணத்தில் வாசிக்கிறோம். திரேதாயுகத்தில் சுரருக்கும் அசுரருக்கும் கொடும்போர் ஒன்று விளைந்ததென்றும், அப்பொழுது [illegible] அயோத்தியா[illegible] சயன் சென்று அசுரரை ஜெயித்தான் என்றும் விஷ்ணுபுராணம் [illegible]கிறது. இராமர் [illegible] காலத்தில் திரேதாயுகம் முடிந்து துவாபரயுகம் ஆரம்பித்ததென்று இராமாயணத்திலும், பாரதயுத்தம் [illegible] [illegible] இவ்வா[illegible]

ஆரம்பித்து முடிவுபெற்றதென்று அங்கிலேய வித்துவான்கள் முதலாய்க் கணக்கிடக்கூடாததாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக டாக்டர் C. D. மக்ளின் துரை, (*vide* Manual of Administration of the Madras Presidency, Volume 1, page 113) நான்கு யுகங்களுக்கும் கடையுகமான கலியுகமானது கிறிஸ்து பிறக்குமுன் 3101-ம் வருஷத்தில் ஆரம்பித்ததென்கிறார். பென்ற்லி துரை தாமியற்றிய இந்து சோதிட சாஸ்திரப் புஸ்தகம் (Bentley's Hindu Astronomy) 62-வது பக்கத்தில் கி. மு. 1600-ம் வருஷமானது முதல்யுகமாகிய கிரேதாயுகத்தைச் சேர்ந்ததென்கிறார். இந்துதேசசரித்திரமெழுதிய டால்பாய் வீலர் துரை (J. Talboys Wheeler) துவாபர யுகத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் மகாபாரத யுத்தமானது சுமார் கி. மு. 1500-ம் வருஷம் நடந்ததாகக்கூறுகிறார். இவ்வாறு கிரேத, திரேத, துவாபர, கலியுகங்களென்று இந்துக்களால் வரையறுக்கப்பட்ட நான்கு யுகங்களின் கால அளவு இன்னதென்று தற்காலம் கணக்கிடக்கூடாததாயிருப்பதால், இந்து நூல்களுண்டான காலத்தில் முதலாய்க் கணக்கிடக்கூடாததாயிருந்த ஆதியுகத்தின் கால அளவைக் கண்டுபிடிப்பது சாத்தியமல்லவென்பது திண்ணம்.

இவ்வளவு அதிபூர்வகாலமாகிய ஆதியுகத்தில் சுராசுரர் முதலான தேவர்களுற்பத்தியானார்கள் என்று இந்து நூல்கள் கூறுகிறபடியால், இவர்களே இந்நாட்டை முதலில் கைப்பற்றினவர்களென்றும், அவர்களுக்குமுன் ஒருவரும் இந்நாட்டிலிருந்தார்களென்று சொல்லுவதற்குப் பூர்வநூல ஆதாரமில்லை என்றுமறிக.

—o—

II-வது அத்தியாயம்.

தேவர் கடவுளரல்ல மனிதர்.

1. தேவர்கள் என்னும் பன்மைமொழி கடவுளுக்குப் பொருந்தியதல்ல, 2. இருக்கு வேதத்தில் 3340-தேவர்கள் சொல்லப்பட்டிருக்கின்றது, 3. அவர்களில் முக்கியமானவர் எண்மர், பிறப்பிலிகளன்று, அவர்களுற்பத்தி விபரம், 4. திரிமூர்த்திகள் மனிதர், ஔவையார் வாக்கு, திருமூலர் வாக்கு, 5. மூவரும் பிறப்பிலிகளன்று, நாரதீயபுராணம், இலிங்கபுராணம், மார்க்கண்டபுராணம், வராகபுராணம், அருணாசலபுராணம், ஐந்தாம்வேதமாகிய மகாபாரதம், 6. மூவரும் ஏககுலத்தினர், 7. மும்மூர்த்திகளின் நடவடிக்கைகள் மனிதசம்பந்தமானவை, 8. மூவரும் இல்லறம் நடத்தினவர்கள், சிருஷ்டிகர்த்தா நிஷ்கரிஷையில் [illegible] 9. [illegible] உலகங்களைச்சிருஷ்டித்தார், 10. பிரமன்சி[illegible] சிருஷ்டிக்கமுடியாது [illegible], சிருஷ்டிப்பின்வ[illegible] 11 விட்டுணு சிருஷ்டித்தார், விட்டுணு பிரம வாக்கு [illegible] 12. [illegible] சிருஷ்டித்தார், 13 தக்கன்மகள் சக்தி உலகீன்றாள், 14. உமையவள் உலகீன்றாள், 15. [illegible] 16. [illegible] 17. [illegible] புல், பூண்டு, பட்சி, மிருகம் [illegible] மனிதர்.

தேவர்களுக்குள் முக்கியமான சிலபிரிவுகளை மாத்திரம் முந்தின அத்தியாயத்தில் எடுத்துரைத்தோம். அவற்றில நாம் எடுத்துரையாத வேறே ஏராளமான பிரிவுகளுமிருப்பதாகப் பூர்வ நூல்கள் பகர்கின்றன. அவைகளில் மிச்சமானவர்கள் பிரமனின் குமாரனாகிய தக்கபிரசாபதியின் மக்களுக்கு, மரீசி பிரசாபதியின் குமாரனாகிய காசிபரால் பிறந்தபிள்ளைகளின் மரபினர். மற்றவர்கள் பிரமனின் மற்றும் குமாரரான புலத்தியன், புலகன், அங்கீரன், சனபதிமுதலானவர்களின் மரபினர். இவர்களெல்லாரும் ஒரே மரபிலுதித்த பற்பல கிளைப்பிரிவினரேயன்றி இவ்வண்டசராசர புவனங்களை யெல்லாம் படைத்தவர்கள் அல்ல. எப்படியெனில் கடவுள் ஒருவரேயன்றிப் பலரல்லவென்று இந்துக்களில் ஒப்புக்கொள்ளாதவர்களிருக்கமாட்டார்களெனத் தயிரியமாய்க் கூறலாம். கொங்கணரும் இதைப்பற்றி,

"கடவுளோ னொருவனுண்டே வேத மொன்றே
காரண சற்குரு தீட்சை ஸ்தான மொன்றே
அடவுடனே யவரருளும் பதவி யொன்றே
அம்புவியில் மனுப்பிறவி யான தொன்றே
நடைவழியும் பலமனுவோர்க் கொன்றே யல்லால்
நால்வேத மறுசமய நடக்கை வேறாய்த்
திடமுடைய தேவர் பலருண்டென் போர்கள்
தீநரகுக்காளாவார் திண்ணந் தானே"

என்று எழுதி வைத்திருக்கிறார். பலதேவர்களுண்டென்று யாவருஞ் சொல்லத் துணியார்களாகையால் கடவுள் ஒருவர் தான் என்பதற்குறிய ஆதாரங்களை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை. ஆகையால வேதாகமபுராண இதிகாசங்களிலெல்லாம் சுரர் குலதேவர்கள் 33 கோடியென்றும், அசுரர் குலதேவர்கள் 66 கோடியென்றும், மற்றும் பிரிவினராகிய தேவர்கள் எண்ணிறந்தவர்கள் என்றும் கூறியிருக்கிறபடியால், இந்தியாவுக்கு 99 கோடிக்கு மேற்பட்ட கடவுளர்களுண்டென்றெண்ணாமல், இந்தியாவை முதலில் கைப்பற்றிய பூர்வகுடிகளின் குலத்தவர்கள் மிகவும் ஏராளமாய்ப் பரவி இந்நாட்டிலிருந்தார்களென்றே சொல்லவேண்டும்.

2. நான்கு வேதங்களுக்கு முதல் வேதமாகிய இருக்கு வேதத்தில் (நான்காவது மண்டலம் 9. 9. பார்க்க.)

"மூவாயிரத்து முன்னூற்று முப்பதொன்பது தேவர்களும் அக்கினிபக வானை மகிமைப் படுத்தினார்கள்"

என்று கூறியிருப்பதைப் பார்த்தாலுமே, இருக்கு வேதத்தில் வழங்கிய தேவர்கள் என்னும் பன்மை மொழியானது ஒன்றான மெய்க்கடவுளைக் குறிக்கிறதில்லை யென்றும், இந்தியாவின் அதி பூர்வ குடிகளின் சந்ததியாராகிய மனிதரையே குறிக்கிறதென்றும் தெளியலாம்.

3. நான்கு வேதங்களுமே அநேக தேவர்களைப் பற்றிப் பேசுகிறபடியால் அத்தேவர்களெல்லாம் அநாதியாய்ச் சுயம்புவாயிருந்த கடவுளரல்ல. அவர்களில் எண்மர் அதிக பிரஸ்தாப கீர்த்தி பெற்றவர்களாக நான்கு வேதங்களும் கூறுகின்றன. அவர்களுக்குத்தான் அட்ட திக்கு பாலர்கள் என்று பெயர். அவர்கள் பெயர்களாவன :—

The Eight Vedic Dii Selecti.

1. அக்கினி	5. சோமன் என்னும் சந்திரன்
2. இந்திரன்	6. வருணன்
3. வாயு	7. இயமன்
4. சூரியன்	8. குபேரன்,

என்பவர்களே. வேதங்கள் கூறும் இந்த எட்டு முக்கியமான தேவர்கள் முதலாய்ப் பிறப்பிலிகளல்ல. இவர்களுடைய உற்பத்தி விபரம் இதிகாசங்களிலும் புராணங்களிலும் விளம்பியிருக்கிறது. அனலன் என்னப்பட்ட அக்கினியும், அநிலன் என்னப்பட்டவாயுவும், சோமன் என்னப்பட்ட சந்திரனும் (நெ. 1, 3, 5) அட்டவசுக்களென்னப் பட்ட எட்டுத்தேவர்களில் மூவர் என்று மகா பாரதத்தில் பார்க்கிறோம். அந்த வசுக்கள் எண்மரும் பிரசாபதி யென்பவரின் புத்திரர், பிரசாபதியானவர் மனுவின் புத்திரன், மனுவென்பவர் பிரமனின் புத்திரரில் ஒருவர். ஆகையால் அம்மூவரும் அநாதியாயிருந்த, பிறப்பிலிகளான கடவுளரல்ல. இந்திரன் என்னப்பட்ட சக்கரனும், விவசுவான் என்னப்பட்ட சூரியனும், வருணனும் (நெ. 2, 4, 6) காசிபருக்கு அதிதியிடம் பிறந்த பிள்ளைகள் என்றறிகிறோம்; காசிபரோ பிரமனின் குமாரனாகிய மரீசியின் புத்திரன்; அதிதியோ மரீசியின் சகோதரனான தக்கனுடைய மகள்; ஆகையால் இம்மூன்று தேவர்களும் அநாதியாயிருந்த பிறப்பிலிகளல்ல. இயமனை (நெ. 7) விவசுவான் என்னும் சூரியனுடைய குமாரனென்று இருக்கு வேதமே கூறுகிறது. குபேரனானவர் (நெ. 8) பிரமனின் குமாரனாகிய புலத்தியருக்குப் பிறந்த விசிரவசு என்பவரின புத்திரனென்று இராமாயணத்தில் பார்க்கிறோம். ஆகையால் நான்கு வேதங்களும் கூறும் முக்கியமான தேவர்களாகிய அட்டதிக்குபாலர்களிலொருவராகிலும் அநாதியாய்ப் பிறப்பிலிகளாயிருந்த கடவுளரல்ல. அவர்கள் இனமுறை சம்பந்தம் பின் வருமாறு விபரமாய்க் காட்டலாம்.



இவ்வாறு குலவிளக்கம் கூறப்படும் அட்டதிக்குபாலர்களும் அதிபூர்வ காலங்களிலிருந்த பேர்பெற்ற மனிதரேயன்றிக் கடவுளர்களல்ல.

4. வேதங்களில் சொல்லப்பட்ட தேவர்களைப்போலவே, புராணங்களுமிதிகாசங்களும் கூறும் தேவர்களும் கடவுளரல்ல மனிதரே. எப்படியெனில் புராணங்களிலும் இதிகாசங்களிலும் கூறப்பட்டமுக்கியமான தேவர்கள் மூவர் :—

1. சிவன் 2. பிரமன் 3. விட்டுணு

என்பவர்களே. இம்மூவரும் மனிதரென்பதாக ஒளவையாரும் திருமூலரும் எழுதிவைத்திருக்கிறார்கள்.

ஒளவை.

"மாலுமனிதன் மலரோனுந்தான் மனிதன்
ஆலமுண்டகண்டனவன் மனிதன்—சீலமுடன்
உற்றுமுணர்ந்த வுகந்த பெரியோர்கள்
கற்றுமறிந்தாரில்லைக்காண்".

☞ மால்—விட்டுணு ; மலரோன்—பிரமன் ; ஆலமுண்டகண்டன்—சிவன்.

திருமூலர்.

"பலகலைகளோதுவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால்வேதமாறு சாஸ்திரம்
அலையுடனேயஞ்செழுத்தும் வெளியும் தானு
மவைகளிலே பொய் களவு அதர் மஞ்சேரும்
மலையரசன் சிவன்பிரமாவரியுந்தானும்
மாசில்லாநாதருடை வழியைக்காணார்
நிலைபெருகமோக்ஷ வழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்றே நிகழ்த்தினேனே."

என்கிறார். ஆகையால் மும்மூர்த்திகளும் மனிதரென்றறியலாம்.

5. புராணங்களும் இம்மூவரை அனாதியாயிருந்த பிறப்பிலிகளல்லவென்றே கூறுகின்றன. திருஷ்டாந்தமாக:—

(a) நாரதீய புராணத்திலே நாராயணனுடைய வலது பக்கத்திலிருந்து பிரமன் தோன்றினானென்றும், இடது பக்கத்திலிருந்து விட்டுணு தோன்றினார் என்றும், நடுவிலிருந்து சிவன் தோன்றினானென்றும் சொல்லியிருப்பதால், இப்புராணக் கோட்பாட்டின்படி திரிமூர்த்திகள் அனாதியாய்ச் சுயம்புவாயிருந்தவர்களல்ல, நாராயணனுடைய பிள்ளைகள் என்றறியலாம்.

(b) இலிங்க புராணத்திலே [illegible] சிவன் தோன்றினானென்றும், [illegible] வலது பக்கத்திலிருந்து பிரமனும் சரஸ்வதிதேவியும், இடது பக்கத்திலிருந்து விட்டுணுவும் இலக்குமியும் தோன்றினார்கள் என்றும் சொல்லியிருக்கிறது. இப்புராணக் கோட்பாட்டின் படியும், சிவன், இவ்வுலக அண்டம் உண்டான பிற்பாடு தோன்றினவராகச் சொல்லியிருப்பதால், அநாதியாயிருந்தவரல்லவென்று ருசுவாகிறது; விட்டுணுவும் பிரமனும் சிவனிலிருந்து தோன்றினவர்கள் என்று கூறியிருப்பதால் [illegible] அநாதியாயிருந்த கடவுளரல்ல.

(c) மார்க்கண்டபுராணத்தில் இலக்குமியிலிருந்து விட்டுணுவும், காளியிலிருந்து சிவனும், சரசுவதியிலிருந்து பிரமனும் தோன்றினார்கள் என்று சொல்லியிருப்பதால் இப்புராணக் கோட்பாட்டின் படியும், திரிமூர்த்திகள் அநாதியாயிருந்த கடவுளரல்லவென்று அறிகிறோம்.

(d) ஆனால் இலக்குமி, காளி, சரசுவதி தேவிகள் என்னும் இம்மூன்று மாதுசிரோமணிகளும் அநாதியாயிருந்தார்களோவென்று பார்க்கில், வராக புராணத்தில் திரிமூர்த்திகளிலிருந்து சத்தி தோன்றி, அந்தச் சத்தியிலிருந்து இலக்குமி, காளி, சரசுவதி யென்னும் மூவரும் தோன்றினார்கள் என்று விளம்பியிருப்பதால், அம்மாதுக்களும் அநாதியாயிருந்த கடவுளரல்ல.

(e) அல்லது நாரதிய புராணத்தில் சொல்லப்பட்ட நாராயணன் தான் அநாதியாயிருந்தாரோவெனில், அவர் இமயமலையாசனிடம் தோன்றிய நாராயணியென்னும் பார்வதி தேவியாருக்கு உடன் பிறந்தவரென்று அருணாசலபுராணம் கூறுகிறபடியால் அவரும் அநாதியாயிருந்த கடவுளல்ல.

(f) இந்துக்களால் ஐந்தாவது வேதமென்று மதிக்கப்படும் பிரஸ்தாப கீர்த்திபெற்ற இதிகாசமாகிய மகாபாரதத்தின் ஆதி பருவத்தில் மும்மூர்த்திகளினுற்பத்தியைப் பற்றிய விபரத்தைப் பார்த்தாலும், இவ்வுலகமானது ஆதியில் ஒளியற்று இருளால் மூடப்பட்டிருந்ததென்றும், அப்போது மகா திவ்வியம் என்னும் பெயர் கொண்ட முட்டையொன்று தோன்றினதென்றும், அந்த முட்டையிலிருந்து பிரசாபதி யென்றும், பிதாமகனென்றும் பெயர் பெற்ற பிரமன் தோன்றினானென்றும், பிரமனிலிருந்து மரீசி, தக்கன், தனு முதலிய பிரசாபதிகள் தோன்றினார்களென்றும், அவர்களில் மரீசியின் குமாரனாகிய காசிபர், தக்கனுடைய மகளாகிய அதிதி யென்பவளை மணம்புரிந்து இந்திரன், வருணன், விட்டுணு வென்பவர்களைப் பெற்றார் என்றும், தனு வென்னும் பிரசாபதிக்கு ஈசனாகிய சிவப்பெருமான் தோன்றினானென்றும், வாசிக்கிறோம்.



இந்த ஐந்தாம் வேதத்தில் கூறிய விபரத்தைப் பார்த்தாலும் மும்மூர்த்திகள் அனாதியாயிருந்தவர்களல்ல. பிரமன் உலகத்தை யுண்டாக்கினவரல்ல, அது ஆதியிலிருந்தது, அதிலிருந்து மகா திவ்வியம் தோன்றினது, அதிலிருந்து பிரமன் தோன்றினார். ஆகையால் அவர் அனாதியல்ல; அவரே யனாதியல்லவென்று பார்க்கும்போது அவரிலிருந்து தோன்றிய விட்டுணுவும் சிவப்பெருமானும் அனாதியல்லவென்று சொல்ல வேண்டிய நிமித்தியமில்லை.

ஆகையால் மும்மூர்த்திகளும் அனாதியாயிருந்த கடவுளரல்லவென்றறிக.

6. மும்மூர்த்திகளினுற்பத்தி விஷயமாய், மேலே நாம் எடுத்துக் காட்டிய, ஒன்றோடொன்று வித்தியாசப்படும் விபரங்களைப் பார்த்தால் ஒன்றில் மும்மூர்த்திகளும் சகோதரரென்றும், ஒன்றில் பிரமனும் விட்டுணுவும் சிவனுடைய பிள்ளைகள் என்றும், ஒன்றில் மும்மூர்த்திகளும் மூன்று சகோதரிகளுடைய பிள்ளைகளென்றும், ஒன்றில் பிரமனுக்கு சிவன் பேரன், விட்டுணு பேரனுடைய குமாரனென்றும் கண்டிருப்பதின் சரித்திர சம்பந்தமான உண்மையென்னவெனில் மும்மூர்த்திகள் ஏக குலத்தினர், அதி பூர்வ காலங்களிலிருந்தவர்களானபடியால இதிகாச புராணிகர்களுக்கு அவர்கள் உற்பத்தி விபரம் நிஷ்கரிஷையாய்த் தெரியவில்லையென்றே ஏற்படுகிறது.

7. மும்மூர்த்திகளுடைய நடவடிக்கைகளைக்குறித்து இந்து மதாபிமானிகளே யெழுதிவைத்திருக்கும் புராண விபரங்களைப் பார்க்கினும், அவர்கள் மனிதரென்றேயறியலாம்.

(a) மும்மூர்த்திகளும் அத்திரி பிரசாபதியின் பெண்சாதியாகிய அனசூயை என்பவளிடம் சென்று பிச்சை கேட்டதாகவும், அவள் பிச்சையிட வந்தபோது அவளை நிர்வாணத்தோடு வரச்சொன்னார்களென்றும் வாசிக்கிறோம்.

(b) பிருகு முனிவரின் பெண்சாதி நாகவல்லியைக் கற்பழிக்க இம்மூவரும் எத்தனித்தார்களென்றும் கூறியிருக்கிறது.

(c) ஆதியில் சுரருக்கு அமுதளிக்கும் தருணத்தில் அசுரர் அதை யருந்தாதபடி அவர்களை மோசஞ்செய்யவேண்டுமென்ற கருத்தாய் விட்டுணு மோகினி ரூபம் எடுத்தார் என்றும், அம்மோகினியைச் சிவன் கண்டு மோகித்தார் என்றும் நூல்கள் கூறுகின்றன.

(d) பிரமன் தான் சிருஷ்டித்த ஊர்வசியை யிச்சித்துக் கலைமான் ரூபமெடுத்து அவளோடு அலைந்து திரிந்தாரென்றும், அதன்பின் திலோத்தமையைச் சிருஷ்டித்து அவள் ரூபத்தைக் கண்டு மோகித்தபடியால் அவன் சிவப்பெருமானிடம் [illegible] பறித்தாரென்றும் பார்க்கிறோம்.

(e) தாருகாவனத்து ரிஷிகளுடைய தபசைக் கெடுக்கும்படி விட்டுணு ஸ்திரீ ரூபமானாரென்றும், அந்த ரிஷி பத்தினிகளுடைய கற்பையழிக்கும்படி சிவன் பரதேசி ரூபமெடுத்த[illegible] யிருக்கிறது.

(*f*) விட்டுணு அவதாரமாகிய கிருட்டிணமூர்த்தி திருவாய்ப்பாடியில் அநேகம் ஸ்திரீகளோடு லீலைகள் செய்தாரென்றும்; காளிந்திநதி யென்னப்படும் யமுனை (The Jumna) ஆற்றங்கரையிலிருந்த கோகுலக் கன்னிகைகளைக் கற்பழித்தாரென்றும்; தன் மாமனாகிய கஞ்சனுடைய மந்திரிமார் பெண்கள் ஒன்பது பேர் குளத்தில் ஸ்நானஞ்செய்துகொண்டிருக்கும்போது, அவர்களுடைய வஸ்திரங்களைப் புன்னை மரத்தில் கட்டி வைத்து, அந்தப் பெண்கள் தன்னிஷ்டப்படி செய்த பின்பு வஸ்திரங்களை யவர்களிடம் கொடுத்தார் என்றும்விளம்பியிருக்கிறது.

இவ்வாறுக்கூறிய சரித்திரங்களையெல்லாம் இந்து மதாபிமானிகளே யெழுதிவைத்திருப்பதால், இவற்றில் கொஞ்சமாகிலும் உண்மையிருக்கவேண்டுமென்றே யனுமானிக்க இடமுண்டு. நெருப்பில்லாமல் புகையெழும்பாது. ஆகையால் இச்சரித்திரங்கள் முற்றிலும் பொய்யானகட்டுக்கதைகளென்று சொல்லுகிறதற்கு இடமில்லை. மதாபிமானிகள் தாங்கள் அனுமானிக்கும் தேவர்களைத் தாங்களேயிகழ்ந்துபேசவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, பொய்யைப்பிணைத்துக் கட்டுப்பாடுசெய்தெழுதிவைத்தார்களென்று சொல்வது நியாயமன்று. ஏனெனில் மதாபிமானிகள் பொய்யாகிலும் சொல்லித்தங்கள் மதத்தைப் புகழ்ந்து பேசுவார்களே யன்றி, பொய்யைத்தாங்களே கல்பனைசெய்து தங்கள் மதத்தைத் தாங்களே யிகழார்கள். ஆகையால் மகாகீர்த்தி பெற்ற புண்ணிய புருஷர்களாய்த்தொழுது தோத்திரிக்கப்படும்திரிமூர்த்திகளிடத்திலும், பாவக்கிருத்தியங்களிருந்ததென்னும்ஐதீகத்தை (traditionary belief) வைத்தே இவ்வித சரித்திரங்களைப் புராணிகர் வரைந்தாரென்று தெரிகிறபடியால் மும்மூர்த்திகளும் பாவக்கிருத்தியங்களுக்குட்பட்ட மனிதரேயன்றிக் கடவுளரல்ல.

8. மும்மூர்த்திகளும் அதிபூர்வகாலங்களில் நம்மைப்போல இல்லறம் நடத்திவந்தவர்களாகவே தெரிகிறது. சிவப்பெருமானுடைய மனைவிகள் மூவர் :—

1. தக்க பிரசாபதியின் குமாரத்தியாகிய தாக்காயணி என்னும் சத்திதேவியார்,

2. மலையரசன் மகளும் நாராயணனென்னும் மைநாகனுக்குச் சகோதரியுமான பார்வதிதேவியார்,

3. மதுரையிலரசாண்ட மலயத்துவசபாண்டியன்மகளாகிய தடாதகைப்பிராட்டியார்,

என்பவர்களே. அதுபோல பிரமனுக்கும் வாணி, சாவித்திரி, காயத்திரி என்பவர்களாகிய மூன்று மனைவிகளிருந்தார்கள் என்றும்; விட்டுணுவும் பிருகுமுனிவரின் மகளாகிய இலக்குமியை மணம்புரிந்து [illegible] கிறபடியாலும் மும்மூர்த்திகள் [illegible]

9. இவ்வாறு மனிதராயிருந்தவர்களை யெல்லாம் பிந்தியகாலத்தில் தேவர்களாக்கிவிட்ட காரணத்தால், இவ்வுலகத்தைச் சிருஷ்டித்தவர்யாரென்று இந்துக்கள் நிஷ்கரிஷையாய்க்கூறச்சக்தியற்றிருக்கிறார்கள். எப்படியெனில் பலராலும் இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டதாக இந்[illegible] கூறுகின்றன :—

<u>திருவருணைக்கலம்பகம்.</u>

53-வது கவி.

காலையு மாலையுங் கைமலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோன்
இமைக்கு முலக மியாவையும் படைத்தோன்
தனக்கொரு தாயுந் தந்தையுமில்லோன்
பழவினைக்கயிற்றிற் பல்லுயிர்ப்பாவை
அழகுற நடிக்கத் திருநடம்புரிவோன்

* * * *

இக்கவியில் சிவன், பிரமா, விட்டுணுவென்னும்மும்மூர்த்திகளில் திருமாலாகிய விட்டுணுவும், அயன் என்னும் பிரமனும் வணங்குதற்கரியவராகிய சிவன் இமைப்பொழுதிலே இவ்வுலகங்களையெல்லாம் படைத்தார் என்று விளம்பியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், நரிபரியாக்கிய படலம்.

18-வது கவி.

எந்தா யனைத்துலகமீன்[illegible]த் தேவர்க்குத்
தந்தாய் செழுங்குவளைத்தாரா[illegible]பெருந் துறையில்
வந்தாய் மதுரைத்திருவாலவாயு[illegible]றையுஞ்
சிந்தாமணியே சிறியேற்கிரங்கா[illegible]யா.

இக்கவியிலும் சிவப்பெருமானே எல்[illegible]ாவுலகங்களையு மீன்றார் எனக் கூறியிருக்கிறது.

ஆனால் நாம் மேலே பார்த்தபடி, சிவப்பெருமானானவர் எவ்வளவு கீர்த்திபெற்ற புண்ணிய புருஷராயிருந்தபோதிலும், அவர்மனிதனேயன்றிக் கடவுளரல்லவென்று இந்து நூல்கள் தெரிவிக்கின்றபடியால் அவர் இவ்வுகத்தைச் சிருஷ்டித்தார் என்பது உண்மையன்று.

10. பிரமன் இவ்வுலகங்களைச் சிருஷடித்தார் என்றும் பார்க்கிறோம்.

அருணாசல பு[illegible]ணம். [illegible]

18-வது கவி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இக்கவியில் பிரமனானவர் ஏழு வுலகங்களையும், ஏழுதீவுகளையும், ஏழு மேகங்களையும், ஏழு சமுத்திரங்களையும், ஏழுபருவதங்களையும், மரீசி முதலான மனிதரையும் படைத்தேன் என்று விட்டுணுவிடம்சொல்லுகிறார். எழுபிறப்பின் எண்பத்துநான்குநூறாயிரம் யோனிபேதம் இன்னவையென்று விளக்கிக்காட்டுகின்ற,

"ஊர்வபதினொன்று மொன்பதுமானிட
நீர்பறவை நாற்காலோர்பப் பத்தாஞ்—சீரிய
பந்தமாந் தேவர் பதினாலயன்படைத்த
வந்தமில் சீர்த்தாவர நாலைந்து"

என்னுஞ்செய்யுளிலும், பிரமனே இவ்வுலகத்தைச்சிருஷ்டித்தாரென்று கண்டிருக்கிறது. இதுவும் உண்மையல்லவென்று புராணங்களாலேயேயறியலாம். எப்படியெனில், இலிங்கபுராணத்திலே பிரமன் சகலவுலகங்களையும் சிருஷ்டிக்கும்படி தவம்புரிந்தும், தம்மால் யாதொன்றும் சிருஷ்டிக்கக்கூடாமை பற்றிக் கண்ணீர் சொரிந்து மெய்வாடி தான் செய்த புண்ணிய தவத்திற்கு இதுதானோ பிரதி பலனென்று தம்முடைய வுயிரை மாய்த்துக்கொண்டாரென்றும் வாசிக்கிறோம்.

இலிங்க புராணம், பஞ்சப்பிரமத்தின் சிறப்புரைத்தவத்தியாயம்.

1-வது கவி.

படுதிரைப்புவனம் யாவும்படைத்திட வேண்டுமென்னாத்
தடமலர்க்கமலப் புத்தேடவம்பல புரிந்தன்மற்றவ்
வொடிவினற்றவத் தினாலெவ்வுவு முற்றிடாமைநோக்கிக்
கடிமலர்க்கண்ணீர் வாரக்கலைமழி வெகுளியுற்றான்.

2-வது கவி.

கண்வழியொழுகு நீராற்கதழ்வினைக் கொடியபாந்த
ளெண்ணறத்தோன்ற நோக்கிப்பிரங்கிமெய் சோர்ந்துவாடிப்
புண்ணியதவத்திற் கிதோபொருந்துவ தென்றுகூறித்
தண்ணறுங்கமலத் தண்ணறன்னுயிர் நீங்கினானே.

இவ்வாறு பிரமன் உயிர் விட்டபோதிலும் அவர் நினைவினாலே முதலாவது மலைகளும், பின்பு மிருகங்களும், அதன் பின் தேவர்களும், அதன்பின் மனிதரும், அதன் பின் பேய்களும் தோன்றினார்கள் என்று அதே புராணம் கூறுகிறது. தவத்தால் முடியாதது நினைவினால் முடிந்ததென்று கூறுவது சத்தியமன்று.

இலிங்க புராணம், படைப்பு வகையுரைத்தவத்தியாயம்.

2-வது கவி.

ஆழ்முழக்கிய சருக்கத்தி லகன் வான்றடவு வரையுதித்த
[illegible] றெண்ணிவேறு நினையுங்கா[illegible]
[illegible] விலங்கு தோன்றப்பின்னு நினையுங்கா[illegible]
[illegible] தேவர் [illegible] தோன்றினராம்.

3-வது கவி.

பொன்னங்கமலத்தவிசுறையும் புத்தேண்மீட்டு நினையுங்கான்
மன்னுமக்களுதித்தனரான் மனத்திற் பின்னு நினையுங்காற்
றுன்னற்கரிய பூதமுதற்பல பேயனைத்துந் தோன்றினவா
லின்னவகைய வோரைந்து படைப்பு மற்றுஞ்செய்தியவால்.

கூர்மபுராணத்திலும் சிருஷ்டிப்பின் வரிசையிந்தவொழுங்காகவே கூறப்பட்டிருக்கிறது.

கூர்மபுராணம், பலவகைத்தோற்றமுரைத்தவத்தியாயம்.

3-வது கவி.

மற்றவை தமஞ்சூழ்போத வாயிலி குழ்பத்திட்ட
நற்பொருள் போலத்தோன்று தொழிந்தன முன்னர்நாட்டும்
வேற்பே லாஞ்சிறந்தவாற்றால் முக்கியமென்று வேத
மற்பினிற் புகன்றதென்ன வரைந்தனரறிவின் மிக்கோர்.

4-வது கவி.

ஈங்கிதுபடைப்பிற் கேதுவன் றெனக்குறுக்காய் நோக்க
வீங்குபல்விலங்கு தோன்றவெறுத்து மேலாக நோக்க
யோங்கிய விண்ணோர் யாருமுதித்தனரேது வன்றென்
றுங்கவன்கீழாய் நோக்க மானுட ருதித்தாரன்றே.

5-வது கவி.

பின்னுமோர் சிருட்டிக்காகப் பிழிதுகர்ந்தறு கால்பாடும்
பொன்னவிர் கமலத்தோட்டுப் புங்கவனெண்ணு மெல்லை
கன்னவில் திரடோட்செங்கட் கழிபுலால் கமழும்வெண்பற்
றுன்னிய குறுத்தாட் பூதம்பேயோ டுந்தோன்றிற்றன்றே.

11. விட்டுணுவும் உலகத்தைச்சிருஷ்டித்தாரென்பதாகவும் நூல்கள் கூறுகின்றன.

கூர்மபுராணம், கண்ணனவதரித்த வத்தியாயம்.

8-வது கவி.

என்றுரையகர்ந்து வெண்மை கருமை சேர்மயிரிரண்டு
நன்றெனவழங்கிப்போற்று நான்முகன்முதலினோர்கட்
கொன்றுபேரன் பினோடும் விடை நல்கியுலகம்பூத்த
மன்றலந்துளவப்புத்தேள் மாயையை நோக்கிச் சொல்வான்.

இக்கவியில் துளவமாலையணிந்த விட்டுணுவானவர் உலகம் பூத்தவர் என்று சொல்லியிருக்கிறது.

கூர்மபுராணம், சுவேதவராககற்பமுரைத்த வத்தியாயம்.

6-வது கவி.

காரணமுதலொன்றாய் னைந்தலை யுலகத்தெல்லாங்
காரணமுதலி யந்தக்காரணங்கடந்து நின்ற
பூரணனாகிப் பூமேலுறைந்திடும் புனிதனுமி
காரணமுடிவாய் நின்ற வள்ளலே போற்றி போற்றி.

விட்டுணு அவதாரமாகிய நாரணன் உலகங்களெல்லாமுண்டாக்குவதற்குக் காரணர் என்று இக்கவி தெரிவிக்கின்றது. ஆனால் விட்டுணுவானவர் சிவப்பெருமான், பிரமன் முதலானவர்களைப்போலுற்பத்தி பெற்ற மனிதனேயன்றிக் கடவுளல்லாதபடியால், அவரும் இவ்வுலகத்தைச்சிருஷ்டித்தாரென்பதும் உண்மையல்ல.

விட்டுணுவானவர் தம்மாலுலகமுண்டாயிற்றென்று சொல்லப்பிரமன் அதைமறுத்துத் தம்மாலேயேயுண்டாயிற்றென்று கூறி, ஒருவருக்கொருவர் வாதாடினார்கள் என்றும் பார்க்கிறோம்:—

கூர்மபுராணம், கண்ணன் சிவபூசை பண்ணின வத்தியாயம்.
8-வது கவி.

உலகெலாம்யின்று மீன்று மோரடிப் படுத்துங்காத்து
மலகிலாமாயை செய்யுமண்ணல் யானென்றேனுக்
கலரயன் முறுவல் கோட்டி வகுத்துலகளித்தப்பின்னர்
நிலையறத் துடைக்கின்றேனும் யானென நிகழ்த்தினானால்.

ஆகையால் விட்டுணுவாலுலகம் உண்டாகவில்லையென்று பிரமன் அதிபூர்வகாலங்களிலேமறுத்தாரென்றும், பிரமனால் உலகமுண்டாகவில்லையென்று விட்டுணுவானவர் அக்காலத்திலேயே சாதித்தாரென்றுமறிகிறோம். இவ்விருவரும் உலகத்தை உண்டாக்கினவர்களல்ல. இந்நூல்கள் கூறுகிறபடி உலகம் உண்டானபின்பு மும்மூர்த்திகளும் அதில் தோன்றி, இல்லறம்நடத்தினவர்களேயன்றி இம்மூவரிலொருவரும் உலகத்தைச்சிருஷ்டிக்கவில்லை. ஏனெனில் இவ்வுலகமானது இம்மூவரும் தோன்றுமுன்னதாகவே யிருந்ததென்று இந்தியாவின் பூர்வநூல்கள் தெளிவாகவிளம்புகின்றன.

12. சந்திரவம்சத்திலுதித்தவரும், பஞ்சபாண்டவர்களுக்கு மைத்துனரும், விட்டுணு அவதாரமுமாகிய கிருஷ்ணமூர்த்தியும் உலகீன்றாரெனக்கூர்மபுராணம் கூறுகிறது. அதற்குமேற்கோள் கூறுவோம்:—

கூர்மபுராணம், கண்ணனவதரித்த வத்தியாயம்.
26-வது கவி.

ஆவணித்திங் கடன்னிலமர பக்கத்தினன்கு
மேவுரோகணி யிற்றாய்தாய் விளங்குமட்டமியினாளுந்
தாவில்சீர் புதன்வாரத்திற்றனைக பெருங்கங்குற்பாலு
டேவகி யுலகீன்றசெல்வனை யினிதினீன்றாள்.

இக்கவியில் சந்திரகுலத்தவனாகிய வசுதேவனுடைய மனைவியாகிய தேவகி உலகமீன்ற செல்வனாகிய கிருஷ்ண மூர்த்தியைப் பெற்றாள் என்று கண்டிருக்கிறது.

31-வது கவி.

தமரவெண் டிரைக்கைதன்னாற் சங்கொடுமுத்தஞ் சிந்தும்
பழனையெவ்வுலகு மீன்ற குழவியை யினிதினோக்கிக்
குமரிவண் டரற்ற முட்டாட் கொளு மலர்க்கரங்கள் கூப்பி
யமைவுறுமங்கை போ லேருமொழி விடுத்ததன்றே.

33-வது கவி.

பொறையுயிர்த்திட்ட மாயைப் புணர்ப்பினுக்கேசோதை யோடு
முறைதருமகளிர் யாருமுறங்குழி யுலகம் பூத்த
[illegible]வனை யசோதைதன் பாற்கிடத்தி யவ்வசோதையீன்ற
[illegible]கொள்வேற் கண்ணிதன்னைக் கைக்கொடு விரைவிற்போந்தான்.

43-வது கவி.

அள்ளிலை வயிரப்பைம்பூணக்தகோ னகிலமீன்ற
பிள்ளையை யுச்சிமோந்து பிறந்துழி யியற்றுகின்ற
கள்ளருங்கரும மாற்றித்தன் கிளைத்தலை வரோடும்
வெள்ளணி யணிந்துகோடி விழுநிதிமறை யோர்க்கீந்தான்.

இக்கவிகளிலெல்லாம் கிருஷ்ண மூர்த்தி உலகமீன்றார் என்று கூறியிருக்கிறது.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், உத்தியோக பருவம்,
கிருட்டிணன்றூது சருக்கம்.

12-வது கவி.

மூத்தோன்மற்றிவை யுரைப்ப விளையோன் வெகுசின மனத்தின் மூளமூள
காத்தோமினுரை பதரக்கது நினைவுற்றெழுந் திறைஞ்சி ஞாலமெல்லாம்
பூத்தோனே பூந்தவிசிற்பூவை புணர்மணி மார்பா புன்மை யாவுந்
தீர்த்தோனே யூனமிலான் மானமிலாதுரைப் பதற்கென் செய்வதென்றான்.

இக்கவியில் பஞ்சபாண்டவர்களி லொருவராகிய வீமர் கிருஷ்ணனைப்பார்த்து 'ஞாலமெல்லாம் பூத்தோனே', அதாவது சகல வுலகங்களையுமுண்டாக்கினவனே என்றழைக்கிறார். ஆனால் கிருஷ்ண மூர்த்தியானவர் மும்மூர்த்திகளிருந்த காலத்துக்கு சுமார் 70-தலைமுறைக்குப் பின்தோன்றினவரென்றும், துவாபர யுகத்திலிருந்தவரென்றும் நூல்கள் கூறுகின்றபடியால், நான்குயுகங்களுக்கு முன்னிட்ட ஆதியுகத்திலுமிருந்த வுலகத்தை துவாபர யுகத்தில் தோன்றிய கிருட்டிண மூர்த்தி சிருஷ்டித்தார் என்று சொல்வது சத்திய விரோதம்.

13. தக்கன் என்னும் பிரசாபதியின் மகளாகிய தாக்காயணி எனும் சத்திதேவியார் உலகங்களைப் படைத்தாள் என்றும் வாசிக்கிறோம்.

கூர்மபுராணம், பார்வதி தோற்ற [illegible]த்தியாயம்.

11-வது கவி.

என்னுடை யுலகெலாம் பெற்றதாயிவள்
[illegible] பொன்மலர்க [illegible]
[illegible] தக்கன் புதல்வி [illegible]
[illegible] மகளாகித் தோன்றினள்.

கூர்மபுராணம், திருக்கலியாணவத்தியாயம்.

1-வது கவி.

என்றனு மிவ்வுலகீன்றருட்கண் மகளாயுதித்த வியல்புஞ்செம் பொற்
குன்றரையன் மகளாகிப் பிறந்ததுவும் விரித்தெமக்குக் கூறுகென்ன
மன்றல் கமழ்தருவினிழலுறைவோனு மகபதியாழ் முனியுங்கேட்பக்
கன்றுகுணிலாய் விளவின் கனியுகுத்த மாமாயன் கழறலுற்றான்.

திருநெல்வேலிப்புராணம், சிறப்புப்பாயிரம்.

2-வது கவி.

வேதனு நெடியமாலும் விளம்புதற் கரியதான
நாதனு முலகமீன்ற நங்கையு நயந்துமே[illegible]
டுதவமொழித்து மேலாஞ்சீர் கெழுமனுவிற்காக்க
மாதவமியற்று நாடுவண்டமிழ்க்கன்னிநாடு.

இக்கவிகளிலே தக்கன்மகளாகிய சத்திதேவியார் உலகத்தைச்சிருஷ்டித்தாள் என்று கூறியிருக்கிறது. சத்திதேவியார் தக்கனுடைய மகளானபடியால் அநாதியாயிருந்தவளல்ல. அவள் உலகத்தை உண்டாக்கினாளென்பதும் உண்மைமொழியல்ல.

14. இமவான் என்னும் பர்வதராஜனுக்கு மனோரமை என்னும் மேனகையிடம் பிறந்த புத்திரியும், மைநாகன் என்னும் நாராயணனுக்குத் தங்கையுமான பார்வதி என்னும் நாராயணி உலகத்தைச் சிருஷ்டித்தாள் என்றும் வாசிக்கிறோம்.

அருணாசல புராணம், திருவவதாரச்சருக்கம்.

37-வது கவி.

கலைவளரு மதிபோன்று சிவனைவெல்ல
மதன்றொடுக்குங்கரும்பே போன்றும்
பலகலையுந் தெளிந்துயர்ந்து பந்துகழங்
கூசல் பற்றிப்பயிலு நாளில்
மலையரசனி டத்தின் மறைநாரதனு
றொருநாளில்மகிழ் வாவெய்தி
யுலகமெலாந் துடியிருக்குந் திருவயிற்று
விலக்கணம் பார்த்துரைக்க லுற்றார்.

58-கவி.

ஒருகரும்புருவச் சாபமொடியினு முலகமீன்ற
விருகரும்புருவச் சாபமுளவெனு மெழுச்சியாலே
பொருகணை தொடுத்தான் சென்றுபரஞ் சுடுகணையினனு
மொருகணை விடுத்தான் மாரனுடலெலாங் கொளுத்திற்றன்றே.

86-வது கவி.

முன்னையாரணன் வதுவையின் சடங்கெலா முடித்து
வன்னிமேற்பொரி யிறைத்தநெய் சொரிந்தமந்திரத்தா
லென்னையா ளுடையிறைவனு மேழுலகீன்ற
கன்னி செங்கரம் பிடித்தமுவலஞ் செய்தான்கனலே.

அருணாசல புராணம், திருக்கண் புதைத்த சருக்கம்.

64-வது கவி.

நின்னிலைமை கன்னியிறை நீள்பிரமசாரி
என்னுமறை யன்றுமுதலின்று வரையெல்லா
முன்னியுகித் துலதுயிர்த்தோகை களெல்லா
மன்னேயெது முன்பெருமையா ரறியவல்லார்.

65-வது கவி.

நித்தனை முதற்றருவை நித்தனிடத்தே
சத்தியென நீவருவைசத்தி சிவமென்றே
இத்தகைமைகொண் டுயிர்கள்யாவையு மளிப்பா
யத்துவித மாகுமுனையா ரறியவல்லார்.

கூர்ம புராணம், அட்டமூர்த்தி யியல்புரைத்த வத்தியாயம்.

17-வது கவி.

கொண்டன் மேனியான்முதலிய கடவுளோர்குப்புற்
றண்டம்யாவையு மிறந்துபாழாகிய வமையத்
திண்டிறற்கவைச் சூலவேல்திரித்துலகீன்றுள்
கண்டுவப்ப நின்றுடியகடவுளே போற்றி.

காசிக்கலம்பகம்

71-வது கவி.

முத்தாடி மடித்தலத்தோரிளஞ்சேயை யுலகீன்ற முதல்வியோடும்
வைத்தாடுவீர் பொதுவினின்றுடு முமக்கிந்த வாரமென்னே
கொத்தாடு சடையொடு மாநந்த வனத்தே யுறைந்தாணெடும்பூதத்தோ
டொத்தாடு வீரடிகளெல்லாமும் பித்தாகளென்று ணர்ந்திடரே.

இக்கவிகளிலெல்லாம் மலையரசன் மகளாகிய பார்வதி தேவியார் உலக மீன்றுள் எனப்பார்க்கிறோம். பார்வதி தேவியார் சிசுவாய்ப்பிறக்கு முன்னதாகவே அவளுடைய பிதாவாகிய மயன் என்னும் இமவானெ ன்பவர் மலைப்பிரதேசத்தை யரசாண்டுவந்தார். அப்பொழுதே மலைக ளும் உலகமுமிருந்தன. பார்வதி தேவியார் மேனையின் கற்பத்திலு ருவாகுமுன்னே உலகமும் மலைகளுமிருந்தபடியால், பார்வதிதேவியார் என்னும் அம்மன் இவ்வுலகங்களைச் சிருஷ்டித்தாளென்பதும் மெய் யல்ல.

15. பாண்டியன் மகளாகிய தடாதகைப்பிராட்டியாரும் உலகமீ ன்றுள் என்றுபார்க்கிறோம்.

திருவிளையாடற்புராணம், ஏழுகடலழைத்த படலம்.

5-வது கவி.

தவவலியாலுலகீன்றதடாதகைக்குத்தாயானாய்
சிவபெருமான் மருகனெனுஞ் சீர்பெற்றாய் திறன்மலயத்
துவசனருங்கற்புடையாய் நீயறியாத்தொல்விரத
மவனியிடத்தெவர்தீர்வாரானாலு மியம்பக்கேள்.

இக்கவியில் மதுரையிலரசாண்ட குலசேகரபாண்டியன் மகனாகிய மலயத்துவச பாண்டியனுக்கு, சூரிய குலத்திலுதித்த சூரசேன மகாராஜன் குமாரியான காஞ்சனமாலையிடம் பிறந்த தடாதகைப் பிராட்டியார் உலகீன்றாள் என்று கண்டிருக்கிறது. இத்தத்தடாதகை உக்கிரவருமபாண்டியனுக்குத்தாய்; இவளுக்கு மீனாட்சியம்மன், அங்கயற்கண்ணி, கயற்கண்ணி முதலான பெயர்களுமுண்டு.

மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி.

41-வது கவி

பாயிருக்கத் தரைகிடத்தும் வினையின் பான்மை
பழமிருக்கக் காயுதிர்க்கும் பழுத்திடாத
காயிருக்கப் பழமுதிர்க்குமென வொண்ணாத
கழிமானு மடபிணியுங்கவிழ நீக்காய்
சேயிருக்குங் கொன்றையணி சொக்கே மிக்க
திலகநுதற் கயற்கணேனு முலகமீன்ற
தாயிருக்க நீயிருக்கத் துணையிலார் போற்
றளர்ந்திருக்கநீதியுண்டோசரண்புக்கேனே.

இக்கவியிலும் கயற்கண்ணியெனும் தடாதகைப் பிராட்டியார் உலகமீன்றாள் எனக்கூறியிருக்கிறது.

திருவிளையாடற்புராணம்

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்.

76-வது கவி

ஒளியாலுலகீன்று வளர்த்து மீன்போற் செவ்வியுர நோக்கி
யளியால்வளர்க்கு மங்கயற்கண்ணன்னே கன்னியன்னமே
யளியாவிமவான்றிருமகளாயாவியன்ன மயில் பூவை
தெளியாமழலைக் கிளிவளர்த்து விளையாட்டருஞ் செயவென்னே.

இக்கவியிலும் அங்கயற்கண் என்னும் தடாதகைப் பிராட்டியாருலகீன்றுள்ளமை பார்க்கிறோம்.

அங்கயற்கண்ணியென்றும், மீனாக்ஷியம்மையென்றும் பெயர் கொண்ட தடாதகைப் பிராட்டியார், மதுரையில் பாண்டிய ராஜாக்களுடைய சிம்மாசனமேறிய மூன்றாவது அரசி. மதுரையிலரசாண்ட தடாதகைப்புராணத்தின்படி முதலரசன் குலசேகர பாண்டியன். அவன் மரித்த பின்பு அவனுடைய குமாரனாகிய மலயத்துவசபாண்டியன் பட்டத்துக்கு வந்தான். மலயத்துவசனுக்கு ஆண் சந்ததியில்லை. ஆகையால்

அவன் மரணமடைந்த பின்பு அவனுடைய குமாரியாகிய தடாதகைப்பிராட்டியார் சிறிதுகாலம் கன்னிகையாயிருந்து மதுரையிலரசாட்சி புரிந்து அநேக ராஜ்ஜியங்களை ஜெயித்து, அதன் பின்பு சிவப்பெருமானை மணம்புரிந்து, பாண்டிநாட்டரசாட்சியை அவரிடம் ஒப்புக்கொடுத்தாள். தடாதகைப் பிராட்டியார் பிறக்கிறதற்கு முன்னமே மதுரையிலிருந்து அரசரிருந்தார்கள் என்று புராணங்கள் கூறுகிறபடியால், தடாதகைப்பிராட்டியார் இவ்வுலகத்தையீன்றாள் என்று சொல்வதும் மெய்யல்ல.

16. இவர்களெல்லா மீன்றெடுத்த வுலகங்கள் போகாததுபோல், பிரமனின் குமாரனாகிய புலகன் மிருகங்களைப் பெற்றார் என்றும், அவருக்கு உடன் பிறந்தவராகிய தக்கபிரசாபதியின் குமாரத்திகளில் சிலரை மரீசிரிஷியின் குமாரனாகிய காசிபர் மணம்புரிய, அவர்களில் சுரசை, கத்துரு என்னும் மாதுக்களிடம் பாம்புகளும் நாகங்களும் பிறந்ததென்றும், தாம்பிரை, சுரி என்பவர்கள் கிளி, பருந்து, கழுகு, மயில், அன்னம் முதலான பறவைகளைப் பெற்றார்கள் என்றும், சுரபி என்பவளிடம் பசு, மான், எருமை முதலான மிருகங்கள் ஜெனித்ததென்றும், இராவதி, அமருபிரை என்பவர்கள் புல், பூண்டு, விருட்சவர்க்கங்களைப் பெற்றெடுத்தார்கள் என்றும புராணங்கள் கூறுகின்றன :—

அருணசலபுராணம், திருமலைச்சருக்கம்.
14-வது கவி.

அங்கிராசனபதிகள் காந்தருவரையளித்தார்
தங்குமத்திரி கதிர் மதிபுலத்தியன்றன்னவர்
பொங்கிராக்கதர் வானரர் கின்னரர் புலக
னங்குமைந்தர் கிம்புருடர் பின் விலங்கையு மளித்தான்.

இக்கவியில் புலகர் மிருகங்களைப் பெற்றார் என்றிருக்கிறது.

கூர்மபுராணம், வாணாசுரன் சாரூபமடைந்தவத்தியாயம்.
8-வது கவி.

அரசு விழுங்கி வாய் [illegible]ந்த வயில்வேனெடுங்கண் பணைத்தோட்
சுரசை புதல்வர் பருறலைய சற்பர் பலர் வீழ்சுரும் பூதர்
விரை செம்மலர்ப் [illegible]டைந்தரு நீழல் விண்ணோர் மகிழுமேதக்க
திருவீற்றிருக்கு மாக[illegible]ற்சிறப்பிலேனும் திரிந்திடுவார்.

10-வது கவி.

கடைந்த மணிச்செப்பெனப் பணைத்தகதிர் மென்முலைக்கத்துரு வென்னு
மடந்தையனந்தன் முதனாகம் வயிறுவாய்த்தாளாங்கவைகள்
துடர்ந்து புகல் காப்பியக்க[illegible]ன்னுமுரைப்பத்தொலையாத
மடங்காச் செல்வங்கடந்தே[illegible]ர் பாதலத்தின் வைகியவே.

இலிங்கபுராணம், தேவாசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம்.
14-வது கவி.

சுரசை கரியவிடங்கனன்று சொரிதரும் பெயிற்ற கொடுஞ்சர்ப்பம்
விரை[illegible] ராயிரம் வயறுவாய்த்தாள் விளங்கு கத்துரு
[illegible] தலைகளாயிரங்களுடைய [illegible]
[illegible]

அருணாசல புராணம், திருமலைச் சருக்கம்.
12-வது கவி.

காலகேயர்களறு வரைப்பயுந் தனள்காலை
சாலநீள் சிறைக்கருடனு மருணனுந்தவிர
நாலுபாலரைப் புதல்வராவினதையு நயந்தாள்
ஆலநேர்விழிக் கத்துருபணி யெலாமளித்தாள்.

இக்கவிகளில் சர்ப்பங்களையும் நாகங்களையும் காசிபருடைய மனைவிகளாகிய சுரசையும் கத்துருவும் பெற்றார்கள் என்று பார்க்கிறோம்.

கூர்ம புராணம், வாணாசுரன் சாரூபமடைந்த வத்தியாயம் 11-வது கவியிலும், இலிங்கபுராணம், தேவாசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம், 13-வது கவியிலும், தாம்பிரையும் சுரியும், கிளி, பருந்து, பிசாசு, கழுகு, மயில், அன்னம் முதலான பறவைகளைப் பெற்றார்கள் என்று சொல்லியிருக்கிறது.

கூர்ம புராணம்.

தாமச்செப்பினடி பரந்ததரளமுலைத் தாம்பிரை யென்பாள்
காமர்க்கிளியை மென்பருந்தைக் கங்குற்றிரியும் பசாசினத்தை
தூமத்தழற்கட் சிறைக்கழுகைத் தோகைமயிலை யோதிமத்தை
யேமம்பயக்குங் காசிபன்ற னருளாலினிதி னீன்றனளால்.

இலிங்க புராணம்.

உரைக்கும்வினதை யருணனையுங்கலுழன் றனையுமொளிர் வளைக்கை
வரிப்பூணுதலிண் மின்னென்னு மடந்தைதனையு மகிழ்ந்தளித்தாள்
செருக்கியகன்று குழைமிழிக்குஞ்சேல்நேர் தடங்கட் சுரியென்பாள்
விரிக்குஞ்சிறைய பிலவமெனும் பறவைதன்னை விழைந்தீன்றாள்.

இக்கவிகளில் பறவைகளைச் சுரி, தாம்பிரையென்னும் பெண்கள் பெற்றெடுத்தார்கள் எனக்கூறியிருக்கிறது.

பசு, எருமை, மான் முதலிய மிருகங்களைக் காசிபரின் மனைவியாகிய சுரபி யீன்றாள்.

கூர்ம புராணம், வாணாசுரன் சாரூபமடைந்த வத்தியாயம்.
12-வது கவி.

பங்கப்பழனத் திடைப்பிறவாப் பதுமமலரி னெழில்கவர்ந்து
கொங்குகமழுமதி முகத்துச் சுரபியென்னுங் குவிமுலையா
ளங்கணுலக மினிதேத்து மானினொடுமேதி பொருவுஞ்
செங்கட்காலாய் போட்டெருமை யனைத்துஞ்சிறப்பி னீன்றனளால்.

இலிங்க புராணம், தேவாசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம்.
15-வது கவி.

கொங்கார் கூந்தற்குரோத வசைகொடிய வரக்கர்தமை யீன்றாள்
வெங்கார் விடநேர்விழிச் சுகியுமியக்கர் தம்மையீந் தனித்தனள்
மங்காவெழிற்சேர் சுரபி யென்பாளீன்றாள் பசுக்கண் மடிமேதி
[illegible] முனிவர் [illegible] அளித்தாள்.

அதே பிரகாரம் மரங்களும் செடிகளும் பெற்றெடுத்தவர்களிருவர். தக்கனுடைய மக்களும் காசிபரின் மனைவிகளுமான அமருபிரை, இராவதியென்பவர்களாம்.

இலிங்க புராணம், தேவரசுரர் தோற்றமுரைத்த வத்தியாயம்.

16-வது கவி.

சுடர்செய் பசும்பொற் குவடேய்ப்பத் துணைத்துவீங்கிப் பணைத்தமுலை
விடுருநுசுப்பி னருட்டை யென்பாளியாழ் தேர்ந்துயர் கின்னரொடு
மடைவேயியற் கந்திருவர் தமைப்பயந்தா ளமருபிரை யென்பாள்
கோடிகடநுக்கு ளிவற்றை யுளங்குளிர்க்கும் வண்ணமுயிர்த் தனளால்.

கூர்ம புராணம், வாணசூரன் சாரூபமடைந்த வத்தியாயம்.

13-வது கவி.

வெவ்வேற்றடங்கண் ணிராவதி யென்றுரைக்கும்வேய்த்தோட்கொடியன்னாள்
புல்லுமரலும் பூங்கொடியுமானும் பொலிவினினிதுயிர்த்தாள்
முல்லைக்கற்பி னெதிரில்லாக் கிரீடையென்னு மொய்குழலாள்
மல்லிற்பொலி தோளியக்கர் தமையினிதின்வயி றுவாய்த்தனளால்.

இதற்கனுசரணையாகக் கம்பராமாயணம், ஆரணிய காண்டத்தில் சடாயுமகாராஜனை இராமலக்குமணர்கள் கண்டபோது உலக முற்பத்தியான விதத்தைச் சடாயு அந்த தசரத புத்திரருக்குத் தெரிவிக்கிறான். அதன் விபரமானது கம்பராமாயண வசனத்தில் கண்டபடி யிவ்விடம் பெயர்த்தெழுதுவோம் :—

"பிள்ளைகளே! கேளுங்கள். பூர்வத்திலே தக்க பிரசாபதிக்கு அன்பது பெண்கள் பிறந்தார்கள். அதிலே பதிமூன்று பெண்களைக் காசிப மகாரிஷி கலியாணம் பண்ணிக்கொண்டார். அதிலே அதிதி என்கிறவள் முப்பத்து முக்கோடி தேவர்களையும் வாமனாவதாரமான விட்டுணுவையும் பெற்றாள். திதி என்கிறவள் அறுபத்தாறு கோடி அசுரரைப் பெற்றாள். மதி என்கிறவள் மனுஷரையும் அவர்கட்கியல்பாகிய வருட முதலியவைகளையும் பெற்றாள். சுரபி என்கிறவள் பசுக்களையும் சராசரங்களையும் பெற்றாள். குரோதவசை என்கிறவள் கழுதை, கடம்பை, ஒட்டகம் இவை முதலியவைகளைப் பெற்றாள். வினதை என்கிறவள் காற்று, இடி, மின்னல், அருணன், கருடன், கூகை, பருந்து, பட்சி இவை முதலியவைகளையும் பெற்றாள். தாம்பிரை என்கிறவள் ஊர்க்குருவி, கௌதாரி, காடை முதலியவைகளைப் பெற்றாள். கழை என்கிறவள் கொடிகளையும் செடிகளையும் பெற்றாள். கத்துருவை என்கிறவள் பல பல சிரசுகளையுடைய சர்ப்பங்களைப் பெற்றாள். சுதை என்கிறவள் ஒரு தலைப்பாம்பு முதலானவைகளைப் பெற்றாள். அரிட்டை என்கிறவள் ஓணான், உடும்பு, அணில் முதலியவைகளைப் பெற்றாள். இழை என்கிறவள் ஜலசர முதலியவைகளைப் பெற்றாள். இப்படியாக அதிதி, திதி, தனு, மதி, சுரபி, குரோதவசை, வினதை, தாம்பிரை, கழை, கத்துருவை, சுதை, அரிட்டை, இழை என்று சொல்லப்பட்ட இந்தப் பதிமூன்று ஸ்திரீகளாலே [illegible] உலக முண்டாயிற்று."

என்கிறதாகச் சடாயு இராமலக்குமணருக்குத் தெரிவித்ததாகக் கண்டிருக்கிறது.

17. இவ்வாறு பற்பல மனிதர்களே யுலகங்களையும் மரங்களையும் செடிகளையும் மிருகங்களையும் பறவைகளையு மீன்றுர்கள் என்று சொல்லியிருப்பதோடு கூட, மிருகங்களுக்கும் செடிகளுக்கும் பறவைகளுக்கும் பாத்திரங்களுக்கும் மனிதர் பிறந்தார்கள் என்றும் வாசிக்கிறேம், திருஷ்டாந்தமாக :—

யானை வயிற்றில்	அசல முனியும்
தூரங்கி யிருந்து	கபில முனியும்
மானி விருந்து	சுருங்க முனியும்
அகத்தியபுஷ்பத்தி னின்று	அகத்திய முனியும்
கூசாப்புல் லிலிருந்து	கௌசிக முனியும்
சாலச்செடியைப்பற்று மோர் கோடி யிலிருந்து	கௌதம முனியும்
அந்தை யிலிருந்து	கேசபிங்கள முனியும்
கேளதாரி யிலிருந்து	தைத்திர முனியும்
புழதி யிலிருந்து	பரசுராமரும்
மட்குடத்தி விருந்து	துரோணனும்

தோன்றினர்கள் என்பதாக நூல்கள் கூறுகின்றன.

சங்கராசாரியார் வாக்கு.

உலகிலேபிறந்து முன்னேரோதிய கலைகளெல்லாம்
நிலையதாஞ் சோதிதன்னை நிசமதாய்ச் சொன்னதில்லை
பலபலபேதமாகப் பங்கமாய்க் கூறுசெய்தே
அலகைபோற் பொய்ம்மைப்பேசி யருநரகழுந்தினரே.

இத்தன்மையாகப் பொய்யின் மக்கள் தங்கள் மனதில் தோன்றினபடி யெல்லாம் எழுதிப் பூர்வநூல்களைப் பாழ்பண்ணி, சரித்திர சம்பந்தமான சத்தியங்களுக்கூடே பொய்யை நுழைத்திருக்கிறார்களென்றறிக.

ஆகையால் இந்தியாவின் பூர்வகுடிகளாகிய தேவர்களெல்லாரும் மனிதரேயன்றிக் கடவுளரல்லவென்றும், அவர்களில் ஒருவராகிலும் இவ்வுலகத்தைச் சிருஷ்டித்ததாக நிஷ்களிஷையாய்க்குறிப்பிட்டுச்சொல்லுதற்கு வேதாகம புராண இதிகாசங்களில் இடமில்லை யென்றுந்தெளிவாயறியலாம்.

அண்ணலாம் பரமசோதியற்புதமறியாதாலே
மண்ணிலே கண்டவெல்லாங் கதிருங்கடவுளென்று
பண்ணுவர் சோர் [illegible] வரன்முறைப்படியிலே [illegible]
எண்ண [illegible] மழுங்கிஎரி நரகில்வீழ்வார்.

III-வது அத்தியாயம்.

தேவர் நிறம் கறுப்பு.

1. சந்திரன் கறுத்தவர், 2. வாயுபகவானின் நிறம் கறுப்பு, 3. சூரியன் கறுத்தவர், 4. இந்திரன் நிறம் கறுப்பு, 5. இராட்சதர் கறுத்தவர்கள், 6. விட்டுணு கறுத்தவர், 7. சிவன் கறுத்தவர், 8. பார்வதிதேவியார் நிறம் கறுப்பு, 9. ஐயனார் கறுத்தவர், 10. பிரமன் கறுத்தவர், 11. இராமன் கறுத்தவர், 12. கிருட்டிணன் கறுத்தவர், 13. தேவர்களின் பொதுவான நிறம் கறுப்பு.

இந்தியாவின் திபூர்வ குடிகளாகிய தேவர்கள் மனிதரேயன்றிக் கடவுளரல்லவென்று பார்த்தோம். மனிதராகிய அவர்களுடைய பொதுவானநிறம் என்னவென்று காட்டும்படிக்கான சில ஆதாரங்களை இவ்வத்தியாயத்தில் வரைவோம்.

வேதங்கள் கூறும் தேவர்களில் முக்கியமானவர்கள் அட்டதிக்கு பாலர்கள். அவர்களில் சோமன் என்னப்பட்ட சந்திரன் என்பவரும் ஒருவர். இவருக்கு நூல்களில் வழங்கும் பெயர்களிற் சிலவற்றால் இவருடைய நிறமின்னதென்றொருவாறு அனுமானிக்கலாம். அப்பெயர்களாவன :—

1. அல்லோன், 2. இந்து, 3. களங்கன், 4 நிசாகரன், 5. நிசாபதி,

என்பவைகளே. வடகீழ்த்திசைப்பாலனாகிய சந்திரனுக்கு வழங்கிய இப்பெயர்கள் பிற்காலத்தில் ஆகாயத்திலுலாவும் சந்திரனுக்கு மாற்றப்பட்டபோதிலும் சந்திர மகாராஜனுக்கு வழங்கிய இப்பெயர்களின் மூலதாற்பரியம் என்னவென்று பார்த்தால், அவைகள் சந்திரமகா ராஜனுடைய நிறமின்னதென்று காட்டும் :—

அல்லோன் என்னும் பெயருக்கு இருள்போன்றவன், இரவைப்போல் கறுத்தவன் என்பது மூலபொருள்.

அல் = இராத்திரி, இருள் (சதுரகராதி).

இந்து என்றால் அடுப்புக்கரி நிறமானவன், கறுத்தவன் என்றுபொருள்.

இந்து = கரி (சதுரகராதி).

களங்கன் என்றாலும் கறுத்தமேனியன் என்றே பொருள்.

களங்கம் = கறுப்பு (சதுரகராதி).

நிசாகரன் என்றால் இரவைப்போற் கறுத்த கைகையுடையன் என்று பொருள்.

நிசா = இராத்திரி } [illegible]
[illegible]

நிசாபதி என்றால் இரவைப்போற் கறுத்த அரசன் என்று பொருள்.

பதி = அரசன் (சதுரகராதி).

ஆகையால் இப்பெயர்களையுடைய வடகீழ்த்திசைப் பாலனாகிய சந்திர மகாராஜன் கறுத்தமேனியையுடையவராயிருந்திருக்கவேண்டுமென்றனுமானிக்கலாம்.

2. அட்டதிக்கு பாலர்களில் வாயுபகவானும் ஒருவர். அவருடைய நிறமின்னதென்று இராமாயணத்தாலறியலாம். இந்த இதிகாச நூலிலே தற்காலத்தில் மைசூர் ராட்சியம் என்று பெயர் வழங்கியநாட்டிலிருக்கும் கிட்கிந்தாபுரியில் பூர்வகாலத்திலரசாண்ட சுக்கிரீவமகாராஜனுடையமந்திரியும் தளகர்த்தனுமாகிய ஆஞ்சநேயர் என்னப்பட்ட அனுமானை வாயுபுத்திரன் என்று கூறியிருக்கிறது. வாயுபுத்திரன் என்றால் இருக்கு வேதத்தில் சொல்லப்பட்ட வாயுவின் குமாரன் என்றல்ல. வாயுபகவானிருந்த காலத்துக்குச்சுமார் 70-தலைமுறைக்குப் பின்னிட்ட இராமருடைய காலத்திலிருந்த அனுமார் வாயுவின் குமாரனென்பது மதியீனம். வாயுபுத்திரனென்றால வாயுவின் மரபிலுதித்தவர் என்றே பொருள். அனுமாருடைய தாய் அஞ்சனாதேவி, தகப்பன் கேசரி. கேசரி என்பவர் வாயுபகவானின் மரபிலுதித்தவரானபடியால், கேசரியின் குமாரனான அனுமாருக்கு வாயுபுத்திரன் என்னும் பெயருண்டாயிற்றென்றறிக. அனுமாருடைய நிறம் கறுப்பென்பதாக இராமாயணத்தில் திரும்பத்திரும்பக்கூறியிருப்பதால், அவருடையபிதாவாகிய கேசரியும் அவருடைய முற்பிதாவாகிய வாயுபகவானும்பொதுவாய்க் கறுத்த மேனியை யுடையவர்களாயிருந்திருக்க வேண்டுமென்றே அனுமானிக்க இடமுண்டாகிறது. அனுமாருடைய தாய்க்கு வழங்குகிற அஞ்சனாதேவி என்னும் பெயருக்குக் கறுப்பாயி என்றே பொருள்.

அஞ்சனம் = கறுப்பு, மை (சதுரகராதி).

ஆகையால் வாயுபுத்திரனாகிய அனுமாரும் அவருடைய குலத்துக்கு முன்னோனாகிய வாயுவும் கறுத்தமேனியை யுடையவர்கள் என்றனுமானிக்கலாம். மேலும் வாயுவுக்கு நூல்களில்வழங்கும் நீலம், மால் என்னும்பெயர்களும் அவருடைய நிறமின்னதென்றுவிளக்கிக்காட்டுகின்றன.

நீலம் = கறுப்பு } (சதுரகராதி).
மால் = கருமை }

ஆகையால் அட்டதிக்கு பாலர்களிலொருவராகிய வாயுபகவானும் கறுத்த மேனியையுடையவர் என்றறிக.

3. அட்டதிக்கு பாலர்களில் சூரியமகாராஜனும் ஒருவர். அவருடைய நிறமும் கறுப்பென்று காட்டும்படிக்கான மூலபொருள் கொண்ட சிலபெயர்கள் நூல்களில் வழங்கியதைப்பார்க்கிறோம். அப்பெயர்களாவன :—

1. இரவி, 2. எல்லி, 3. [illegible] என்பனவாகும்.

இவற்றில் இரவி என்னும் பதத்துக்கு இரவைப்போற் கறுத்தவன் என்பது மூலபொருள் (இரவு-இராத்திரி). எல்லி என்றாலே இராத்திரி என்று பொருள் என்பதாகச் சதுரகராதி கூறுகின்றது. அதே பிரகாரம் கதிரவன் என்னும் பெயருக்குக் கருங்காலி போன்ற நிறமுடையவன் என்று பொருள் (கதிரம்-கருங்காலி). ஆகையால் இப்பெயர்கள் கொண்ட சூரியமகாராஜனும் கறுத்தமேனியையுடையவரென்றனுமானிக்கலாம்.

4. அட்டதிக்கு பாலர்களில் இந்திரனும் ஒருவர். இவர் முப்பத்து முக்கோடி தேவர்களென்னப்பட்ட சுரர்களுக்கரசன். இவருடைய நிறமும் கறுப்பென்று காட்டும்படி பல பெயர்களுண்டு. அவையாவன :—

1. கரியவன், 2. காரி, 3. மால்,

என்பனவைகளே. கரியவன் என்றால் அடுப்புக்கரி போன்ற நிறத்தையுடையவன், கறுத்தவன் என்றும், காரி என்றால் கரிக்குருவி நிறமுடையவன் (காரி—கரிக்குருவி) என்றும், மால் என்றால் கறுத்தவன் என்றும் பொருளாகிறதென்று சதுரகராதியால் அறியலாம். இந்திரனுடைய நிறம் கறுப்பென்பதற்கு வேறோர் ஆதாரம் கூறுவோம் :—

திருவிளையாடற் புராணம், பாண்டித்திருநாட்டுப் படலம்.

5-வது கவி.

சுந்தரன் றிருமுடி மிசைத் தூயநீராட்டும்
இந்திரன் றனையொத்தகார் சொரிசிதென்மலைமேல்
வந்துபெய்வளைத் தவிழுதன் மௌலிமேல்வலாரி
சிந்து மின்றலைப் போதெனப் பன்மணிதெறிப்ப.

தென் பாண்டி நாட்டில் கன்னியாகுமரிக்குச் சமீபத்திலிருக்கும் பொதியமலை ("The Parnassus of the Dravidians")யின் சிறப்பை வர்ணிக்கும் புராணிகர், அம்மலைக்குமேலாக மேகங்களுயர்ந்து மழையை வருவிப்பது எத்தன்மையாயிருந்ததென்றால், நீண்டகோதண்டபாணியான இராமர் அன்புகனித்து மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் முடிமேல் பரிசுத்த நீரைக்கொண்டு திருமஞ்சனஞ்செய்வதுபோலிருந்தது என்று சொல்லிய பின்பு, அம்மேகங்கள் சிந்திய மழைத்துளிகளாகிய முத்துக்களின் வர்ணனையை இக்கவியில் கூறுகிறார். இதன் தாற்பரியமாவது :—

சோமசுந்தரக் கடவுள் திருமுடிமேலே நன்னீரைக்கொண்டு அபிஷேகஞ்செய்த இந்திரனையும் ஒப்பான கறுத்த மேகங்கள், அந்த இந்திரன் [illegible] கடவுள் முடிமேல் அருச்சனைசெய்கிற கையிலிருந்து [illegible] பூக்கள் தெறித்தல்போல, அந்தப்பொதிய மலைமேலே பலவித மணிகள் [illegible] யாகிய [illegible] என்பதாம்.
[illegible] வந்து கவிக் [illegible]

5. சுரர்குல அரசனாகிய இந்திரனைப்போல தேவகணங்களிலொன்றாகிய இராட்சதர் என்னும் தேவர்களும் கறுத்தவர்கள் என்பதாகப் பல தடவைகளிலும் கம்பராமாயணத்தில் விளம்பியிருக்கின்றது:—

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுத படலம்.

88-வது கவி.

வீரரும்விரைவிற்போனார்"விலங்கன்மேலிலங்கைவெய்யோர்
சோர்விலாக்காவற்பாடும் பெருமையு மரணுங்கொற்றக்
கார்நிறத்தரக்கரென்போர் முதலியவளப்பிலாத
வார்கழலனுமன்சொல்ல வழிநெடிதெளிதிற்போனார்.

இதன் கருத்து.

சுக்கிரீவன் முதலான வானரக்கொடி வீரர்களும் (மைசூர் இராட்சியத்திலுள்ள கிஷ்கிந்தாபுரிப் பட்டணத்திலிருந்து) விரைந்து சென்றார்கள், மேருவின் சிகரத்தின் மேலுள்ள இலங்கைகளைக் கொடியவர்களாகிய இராட்சதர் சோர்வில்லாமற்காக்கும் காவற்பாட்டையும், அதன் பெருமையையும், மதில்முதலிய அரணகளையும், வெற்றியையும், கருநிறமுடைய இராட்சதரென்போர் முதலான அளவில்லாத விஷயங்களையும், நீண்ட வீரகண்டை கட்டிய அநுமார் விவரித்துக்கூற, நெடிய வழியை எளிதாகக் கடந்து சென்றார்கள் என்பதாம்.

இக்கவியில் இராட்சதரைக் கார்நிறத்தரக்கர் என்று சொல்லியிருப்பதால், அவர்கள் கருநிறமுடையவர்கள் என்றறிகிறோம். கார் என்னும பதத்துக்கு உவின்ஸ்லோ ஆசிரியர், கருமை (Blackness), இருள் Darkness, Gloom of night) என்றருத்தம் கூறியிருக்கிறார்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம்.

63-வது கவி.

நீனிறவரக்கர் தங்குருதித்தநீர்
வேலைமிக்கார்ற்றெடுமீளவேலைசூழ்
ஞாலமுற்றுங்கடையுகத்துநச்சரக்
காலனும் வெறுத்துயிர் காலக்காண்டியால்.

இக்கவியில் நீல்நிற அரக்கர் என்று பார்க்கிறோம்; அதாவது நீலநிறத்தையுடைய இராட்சதர் என்று பொருள். நீலம் என்னும் பெயருக்கு உவின்ஸ்லோ ஆசிரியர்,

கறுப்பு=(Blackness).
இருள் =(Darkness)

என்றருத்தங்கூறியிருப்பதால், இராட்சதர் கறுத்தமேனியையுடையவர்கள் என்றறிக.

[illegible] காண்டம், உருக்காட்டுப்படலம்.

74-வது கவி.

உழைக்குலத்திய மாயவுருவொ[illegible]செய்தான்
மழைக்கருநிறத்து மாயவரக்கன்மாரீசனென்பான்
[illegible]
[illegible]

இக்கவியில் மாயமான்வடிவமெடுத்து, சேலத்துக்கருகாமையிலுள்ள பொய்மான்கரடு என்னும் இடத்தில் இராமருடைய அம்புக்கு இரையான மாரீசன் என்னும் இராட்சதனை மழைக்கருநிறத்தவன் என்று சொல்லியிருக்கிறது. அதற்கு மழைக்காலிருட்டு (Darkness of a rainy night)ப்போன்ற மேனியையுடைய மாரீசன் என்று பொருள்.

ஷை காண்டம், காட்சிப்படலம்.

[illegible]வது கவி.

விரிமழைக்குலங்கிழித் தொளிருமின்னெனக்
கருநிறத்தரக்கியர் குழவிற்கண்டனன்
உருநிறத்தொருதனிக்கொண்டலூழியான்
இருநிறத்துற்றவெற்கிமைந்த காந்தத்தை.

இக்கவியிலும் இராட்சதப் பெண்களைக் கருநிறத்தரக்கியர் என்று சொல்லியிருப்பதால், அவர்கள்கரியநிறமுடையவர்களென்றறிகிறோம்.

ஆகையால் இராட்சதருடைய சாதாரணமான நிறம் கறுப்பு என்பதற்கையமில்லை. பதினெண்கண தேவர்களும், நாம் முதலாவது அத்தியாயத்தில் விரித்துரைத்தபடி, ஏககுலத்தவர்களாகையால், இராக்ஷதர்களைப்போலவே மற்றும் தேவகணங்களும் கருநிறமுடையவர்கள் என்றறிக.

6. இந்திரனுடைய இளைய சகோதரன் உபேந்திரன் என்னும் விட்டுணு. இவ்விருவரும் காசிபருக்கு அதிதியிடம் பிறந்த பிள்ளைகள்.

"உபேந்திரன். The younger brother of Indra an incarnation of Vishnu, விட்டுணு." (Winslow).

விட்டுணுவும் கறுத்தமேனியையுடையவர் என்றே பார்க்கிறோம்.

திருவிளையாடற் புராணம், உக்கிர பாண்டியனது திருவவதாரப்படலம்.

3-வது கவி.

கரியவன் கமலச்செம்மன்மறை முதற்கலைகள்காண்டற்
கரியவனன்பர்க்கென்று மெளியவனருமேன்மை
தெரியவன்பகன்றசிந்தைத் தென்னவன்றனக்குங்கற்பிற்
குரியவடனக்குங்காதன் மகளெனவுமையைத்தந்தான்.

இதன் தாற்பரியம்.

விட்டுணு, பிரமன், வேதமுதலிய சாஸ்திரங்களாலும் காணுதற்கரியவனாகிய சந்திரசூடனென்னும் சுந்தர சுவாமி, தாம், அன்பர்களுக்கு எளியவனாக இருக்கும் பெருமையை [illegible]வருக்கும் காட்டும்பொருட்டு, மிகுந்த அன்பு பூண்ட சித்தத்தையுடைய மலையத்துவச பாண்டியனுக்கும் அவன்மனைவியாகிய காஞ்சனமாலைக்கும் ஆசைக்குரிய [illegible]யன்னும் மகளாகப்பார்வதி [illegible]யாரை அருளிச் செய்தார் என்பதாம். சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி தேவியார் மலையத்துவச பாண்டியனுக்கும் காஞ்சனமாலையிடம் மகளாக அவதரித்தாள் என்பது கருத்து. [illegible] இக்கவியில் விட்டுணுவுக்குக் கரியவன் என்னும் பெயர் வழங்கியிருப்பதால், அவர் கரிய நிறமுடையவரென்றறிய[illegible]

உவின்ஸ்லோ (Winslow) அகராதியாசிரியரும் கரியவன், கரியமால் என்னும் பெயர்கள் விட்டுணுவின் நாமதேயங்களென்று விளம்புகிறார். கரியமால் என்னும் பெயர் விட்டுணுவுக்கு வழங்கியதற்கோர் திருஷ்டாந்தம் கூறுவோம். சிவபெருமானுடைய குமாரனாகிய சுப்பிரமணியக் கடவுள், விட்டுணுவின் மகளும் சுவர்க்கலோகத்தில் வளர்ந்தவளுமான தெய்வயானையைக் கட்டினவரானபடியால், விட்டுணுவுக்குச் சுப்பிரமணியர் மருமகன். சுப்பிர[illegible]யரைக் கரியமால் மருகன் என்று கண்டிருக்கிறது.

சுப்ரமண்யர் மாலே.

27-வது கவி.

அறிந்தறியாமற் செய்திடும் பிழையை ஆண்டவா பொறுப்பதுன் செயலே
தெரிந்து நின்மனத்தில் குற்றமாய்வைத்து தெண்டனைசெய்திடவேண்டாம்
புரிந்துபுன துமைந்தனென்றெண்ணிப்பவுசுபாக்கியங்களைக்கொடுப்பாய்
கரியமால்மருகா அரனிடபுதல்வா காங்கயா சுப்ரமண்யனே.

காசிக்கலம்பகத்தில் விட்டுணுவின் நிறத்தை மேகத்துக்கு ஒப்பிட்டிருக்கின்றது.

42-வது கவி.

புயல்வண்ணக்க[illegible]ன்றுகொளித்தவக்கள்வன் புணர்ப்பையென்னுள்
காவல்வண்ணக்கண்[illegible]ிதன் கண்ணினுட்புக்கது கண்டிருந்தும்
செயல்வண்ண[illegible]கண்டிலள் வாளாப்புறந்தெங்குத்தேடுகின்றாள்
வயல்வண்ணப்பண்ணையவி[illegible]த்தானை மனத்துள்வைத்தே.

[illegible]2-வது கவி.

உண்ட[illegible]கிலகோடியுமுமிழ்ந்திடு[illegible]ன்முகிலே[illegible] மொக்கப்பிழிந்தகடலேழ்
[illegible]டன்வாய்மடுத்திடுவன்வடமேருமூலத்[illegible]ம் பிடுங்கிச் சுழற்றி
அண்டபகிரண்டமுமடித்துடைப்ப[illegible]புவன மவையேழு பிலமேழுமாய்
அடைவடைவடுக்கிய வடுக்கைக்குலைப்பனிவை யத்தனையும்வித்தையலவாம்
கொண்டல்மணிவண்ணனுமுண்டகக்கண்ணனும் குஞ்சிதச்செஞ்சரணமுங்
குடிலகோடரமுந்தேடிய தலமுமண்ட கோளமுந்துருவியோடப்
புண்டைமறையோலமிடவெளியினடமாடும் பரஞ்சுடர்பொலிந்தகாசிப்
பதியிலடையாமலிப்பல்லுயிர்த்தொகுதியும் பரமபதமடைவிப்பனே.

இவ்விரண்டுகவிகளிலும் விட்டுணுவை

(a) புயல்வண்ணக்கண்ணன்

(b) கொண்டல்மணிவண்ணன்

என்று குறிப்பிருக்கிறது. அவற்றிற்கு முறையே

(a) மேகம்போற் கருநிறமுடைய விட்டுணு;

(b) மேகம்போலுமாகிய நிறமுடையவன்

என்று பொருள். ஆகையால் விட்டுணுவும் கறுத்த [illegible]

[illegible]

7. விட்டுணுவைப்போலவே சிவனும்கருநிறமுடையவர் என்று வாசிக்கிறோம்.

மதுரைக்கலம்பகம்.

62-வது கவி.

கண்டமுங்காமர்மெய்யுங்கறுத்தவர்வெளுத்தநீற்றர்
எண்டருமதுரை[illegible]சிற்றிடைச்சிபேரிடைச்சியென்பீர்
தொண்டைவாயமுதிட்டென்றன்பாலிங்குத்தோயீர்வானா
மண்டுமென்னகத்திலெண்ணீர்மத்திட்டுமிக்கின்றீரே.

இக்கவியில் கழுத்தும் அழகியமேனியும் கருநிறமுடையவரென்று சிவபெருமானைக்குறித்துச் சொல்லியிருப்பதால் அவருடைய நிறமும் கருமை என்றறியலாம்.

8. சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி தேவியாரும் கருநிறத்தவள் என்று விளம்பியிருக்கிறது.

இலிங்கபுராணம், தேவிமாலைசூட்டினவத்தியாயம்.

9-வது கவி.

பொருவினன்முத்தமாலைதாழ்ந்தொளிரும் பொழிகதிர்வெண்மதிபோல
வெரிகதிர்ப்பசும்பொற்காம்புமயடுத்த வெழில்செய்தண்குடைநிழற்
றிருமணிமவுலிக்கதிர் திசையளப்பத் திண்டிறலணிந்ததோள்வருணன்
கருநிறத்தடங்கண்மையமால்வல்லி [illegible]மணங்காணியவடைந்தான்.

இக்கவியில் மலையரசன் [illegible]ளாகிய பார்வதி தேவியாரைக் கருநிறத்தடங்கண்மையமால் வல்லி என்று சொல்லியிருப்பதால், அம்மனும் கறுத்தமேனியையுடையவ[illegible]றறியலாம். அம்மனும் சிவபெருமானும் கறுத்தமேனியையுடையவ[illegible]ளானதால், அவர்கள் புத்திரராகிய விநாயகரும் சுப்பிரமணியக் கடவுளும் கருநிறமுடையவர்களாகவேயிருந்தார்களென்றுமனுமானிக்கலாம்.

9. சிவபெருமானுக்கு மோகினியிடம் பிறந்த குமாரனாகிய சாத்தன் என்னும் ஐயனாரும் கறுத்தவர்.

திருவிளையாடற்புராணம், திருநகரங்கண்டபடலம்.

43-வது கவி.

ஓட்டிசைக்கரியசாத்தனுக்கென்சார் [illegible]
கோட்டிளர்களபக்கொம்மைசெய் [illegible]
[illegible]
[illegible]

இக்கவியில் கரியசாத்தன் என்று [illegible] சிவபெருமான் [illegible] கறுத்தமேனியையுடை[illegible] [illegible]றறியலாம்.

10. சிவபெருமானும் விட்டுணுவும் கறுத்தமேனியையுடையவர்களென்று பார்த்தோம். பிரமனுடைய நிறமும் அத்தன்மையாகவேயிருந்திருக்கவேண்டும். ஏனெனில் நாம் முந்தின அத்தியாயத்தில் விளக்கிக்காட்டியபிரகாரம் இம்மூவரும் ஒரே குலத்திலுதித்த மகாத்துமாக்கள். பிரமனுடைய நிறத்தைப்பற்றிய ஓர் குறிப்பு அருணசலபுராணத்தில் கண்டிருக்கிறது.

அருணசலபுராணம், திருமலைச் சருக்கம்.
22-வது கவி,

சித்தகமுனிப்பிருகு விட்டமுனிவரே
பத்துருவெடுத்தனை பகுத்தறிகிலாயோ
வத்தனையுடற்களுமமைத்தபடியாலென்
கைத்தலமுமிப்படி கறுத்தபடிபாராய்.

பிரமனும் விட்டுணுவும் தங்களில் யார் பெரியவரென்று ஒருவருக்கொருவர் தர்க்கம்செய்து கொண்டிருக்கும்போது, பிரமன் விட்டுணுவைப் பார்த்துச் சொன்ன கவி இது. இக்கவியில் விட்டுணுவைப் பத்துத்தரம் படைத்ததினுலே பிரமனுடைய கை கருநிறங்கொண்டதென்று சொல்லிய குறிப்பால், சிவனையும் விட்டுணுவையும்போல பிரமனும் கறுத்தவரென்றனுமானிக்கலாம்.

ஆகையால் சிவன், பிரமா, விட்டுணுவென்று சொல்லப்படும் மும்மூர்த்திகளும் கருநிறமுடையவர்களென்றறிகிறோம்.

11. விட்டுணுவினவதாரமாகிய இராமரும் கரியவர் (Blackman) என்று காட்டும்படிக்கான இரண்டொரு ஆதாரங்கள் பார்க்கலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப்படலம்.
8-வது கவி.

துப்பினுற்செய்தகைகொடுகால்பெற்ற துளிமஞ்
சொப்பினுன்றனைநினைதொறுநெடுங்கண்களுகுத்த
அப்பினுனைந்தருந்துயருயிர்ப்புடையாக்கை
வெப்பினுற்புலர்ந்தொருநிலையுறுதமென்றுகிலாள்.

இக்கவியில் இராமருடைய நிறத்தைத் துளிமஞ்சுக்கு ஒப்பிட்டிருக்கிறது. துளிமஞ்சு=மழைமேகம் (Rain clouds). இதே பிரகாரம் அயோத்தியா காண்டம், மந்திரப்படலம், 54-வது கவியில் இராமரை மழைமுகிலனைய அண்டர் நாயகன் என்றும், 88-வது கவியில் கொண்டல்வண்ணன் என்றும் கூறியிருக்கிறது.

1. துளிமஞ் சொப்பினுன்
2. மழைமுகிலனையவன்
3. கொண்டல் வண்ணன்

என்னும் பெயர்களுக்கெல்லாம் மழைமேகத்துக்கு ஒப்பானவன் என்ற பொருளாகிறபடியால் இராமர் கரிய நிறமுடையவர் என்றறியலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலம்.

3-வது கவி.

கருமேகநெடுங்கடல்காரனையான்
தருமேதனியேனெனதாருயிர்தான்
உருமேறுறழ்வெஞ்சிலை [illegible]ணெவிதான்
வருமேயுரையாய்வலியார்வலியே.

இக்கவியில் இராமருடைய நிறமானது

1. கருமேகம்=The black clouds,

2. நெடுங்கடல்=The extended sea,

3. கார்=The gloom of night,

என்பவற்றிற்கொப்பான தென்று கண்டிருப்பதாலும் இராமர் கரியநிற முடையவர் என்றறியலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுத படலம்.

75-வது கவி

வஞ்சனையரக்கர் செய்கையிதுவெனமனக்கொண்டேயு[illegible]
அஞ்சனவண்ணத்தான் றன்பெயருரைத்தனிடையென்பால்
அஞ்சாறுபொழுதிற்றந்தாய் துறக்கமென் றுவந்துசொன்னாள்
மஞ்செனவனமென்கொங்கைவழிகின்ற மழைக்கணாள்.

இக்கவியில் இராமருடைய நிறத்தை கண்ணுக்கிடும் மைக்கு ஒப் பிட்டிருக்கிறது.

அஞ்சனம்=Black paint for the eye-lids.

ஆகையால் இராமர் கறுத்தவர் என்றறியலாம்.

12. விட்டுணு அவதாரமாகிய கிருட்டிணமூர்த்தியின் நிறமும் கறுப் பென்றறியாத இந்துக்களிருக்கமாட்டார்கள். கிருட்டிணன் என்னும் பெயரே காரணப்பெயர். அவர் மிகவும் கறுத்தமேனியையுடையவரா னதால கிருட்டிணன் (கிருட்டினம்—கறுப்பு) என்று பெயராயிற்று. அவருடைய இயற்பெயர் கண்ணன் (கண்ணைப்போலருமையானவன்). இது அவர் பெற்றோராகிய வசுதேவரும் தேவகிதேவியும் அவருக்கிட்ட நாமம். கண்ணனுடைய நிறம் எத்தன்மையதென்று பார்க்கலாம்.

கூர்மபுராணம், கண்ணனவதாரத்தியாயம்.

19-வது கவி.

[illegible]கருநெய்மாய்க்கருழகில்வண்ண[illegible]
[illegible]
[illegible]பங்கப்பரு[illegible]
[illegible]

இக்கவியில் கிருட்டிண மூர்த்தியைக் கருமுகில்வண்ணனென்கிறார் புராணிகர். அதற்குக் கருமேகம்போன்ற நிறமுடையவன் (கரு=கறுத்த, முகில்=மேகம், வண்ணம்=நிறம்) என்று பொருள்.

29-வது கவி.

வணங்கிய தந்தைதன்னைமாயையாலறிவு நீக்கி
யணங்கரவணையிற்றுஞ்சு மஞ்சனக்கொண்டலன்று
விணங்கமழ்கதைவாள் சங்கநேமியம்படைவில்லாய
கணங்கொள்வெம்படைகள் யாவுங்கரந்திவையுகளுமன்றே.

இக்கவியிலும் கிருட்டிணமூர்த்தியை அஞ்சனக்கொண்டலன்றன் என்று கூறியிருக்கிறது. அதற்கும் கறுத்தமேகம்போன்றவன், என்றே (அஞ்சனம்=கறுப்பு, கொண்டல்=மேகம்) பொருள்.

62-வது கவி.

மையுறுமுகமுங்கண்ணுங்காலுமுந்தித்தடமுஞ்
செய்யகமலம்பொருவுங் கரியசெம்மறன்னை
மையமருங்குற்செவ்வாயசோதைகுறங்கினேற்றி
வையமுழுதுமுண்டமலர்வாயுச்சிமோந்தாள்.

இக்கவியில் கிருட்டிணனைக் கரியசெம்மல் என்கிறார். அதற்குக் கறுத்த புத்திரன் (கரிய=கருநிறமான, செம்மல்=புதல்வன்) என்றுபொருள்.

13. இப்படியாக நான்கு வேதங்களும் விசேஷித்துக்கூறுகின்ற மூவாயிரத்து முந்நூற்றுக்கு மேற்பட்ட தேவர்களில் முக்கியமானவர்களாகிய அட்டதிக்குபாலர்கள் என்னும் எண்மரில் சந்திரனனவருக்கு வழங்கிய அல்லோன், இந்து, களங்கன், நிசாகரன், நிசாபதி என்னும் ஐந்து பெயர்களின் மூலதாற்பரியங்களைக் கொண்டு, அவர் கறுத்தமேனியையுடையவராயிருந்திருக்கவேண்டுமென்று அனுமானித்தோம். அதேபிரகாரம் வாயுபகவானுக்கும் வழங்கிய நீலம், மால் என்னும் பெயர்களாலும், அவருடைய மரபிலுதித்த ஆஞ்சநேயர் என்னப்பட்ட அநுமாரைப்பற்றி இராமாயணத்திலுள்ள விபரங்களாலும் வாயுபகவானும் கறுத்தவரெனப்பார்த்தோம். சூரியமகாராஜனனவருக்கு வழங்கிய இரவி, எல்லி, கதிரவன் என்னும் பெயர்களால் அவருடைய நிறமும் எத்தன்மையாயிருந்திருக்கவேண்டுமென்றறிந்தோம். முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் அரசனாகிய தேவேந்திரனுடைய நிறமுங்கறுப்பென்பதாகத் திருவிளையாடற் புராணத்தில் கறுத்தமேகங்களை இந்திரனுக்கு ஒப்பிட்டிருப்பதாலும், அவருக்கு வழங்கிய கரியவன், காரி, மால் என்னும் பெயர்களின் மூலதாற்பரியத்தாலுமறிந்தோம். ஆகையால் வேதங்கள் கூறும் தேவர்கள் பொதுவாய்க் கறுத்தமேனியையுடையவர்களாகவேயிருந்திருக்கவேண்டும். அதுபோலவே இதிகாசங்களும் புராணங்களும் விசேஷித்துக்கூறும் சிவன், பிரமா, விட்டுணு, இராமா, கிருட்டிணமூர்த்தி முதலானவர்களெல்லாம் கறுத்தவர்களென்பதாகவும் மேலே நாம் கூறிய பற்பல ஆதாரங்களால் தெரிகிறது. ஆகையால் இந்தியாவி னதிபூர்வகுடிகளாகிய தேவர்கள் என்னப்பட்டவர்கள் சாதாரணமாய்க் கறுத்த மேனியையுடையவர்களென்றறியலாம்.

IV-வது அத்தியாயம்.

தேவர்கள் அரசகுலத்தவர்.

1. இருக்குவேதம் க்ஷத்திரியர் என்று கூறுகிறது. 2. தேவர்கள் பெயர்களின் மூலதாற்பரியத்தாலும் க்ஷத்திரிய ரென்றேற்படுகிறது. 3. தேவர்கள் ஆரியர், இந்திரன் ஆரியன், வருணன் ஆரியன், சிவன் ஆரியன், ஐயனார் ஆரியன், பார்வதி ஆரியை இராமர் ஆரியன், கிருட்டிணன் ஆரியன். 4. ஆரியரே க்ஷத்திரியர், திவாகரம், டாக்டர் பர்ட் [illegible]ட் அபிப்பிராயம். 5. தேவர்கள் என்பது க்ஷத்திரியபதம், திருவிளையாடற் புராணம் டாக்டர் மக்ளீன் அபிப்பிராயம், திவாகரம், கல்வெட்டு சாசனம், தெலுங்காதாரம். 6. அரசரை வணங்குவதே இந்தியாவின் பூர்வ வழக்கம். 7. தேவர்களரசபுரிந்த 56 தேசங்கள்.

இந்தியாவின் அதிபூர்வ குடிகளுக்கே தேவர்களென்று பெயரென்பதாகவும், அவர்கள் மனிதரே யன்றிக் கடவுளரல்லவென்பதாகவும், பொதுவாய்க் கறுத்தமேனியையுடையவர்களென்பதாகவும் முந்தின அத்தியாயங்களில் பார்த்தோம். இனிமேலவர்கள் அரசர் குலத்தவரென்னும் விஷயத்தை இவ்வத்தியாயத்தில் கூறுவோம்.

எத்தேசத்திலும் அரசர்களுடைய சரித்திரங்கள் பூர்வ காலங்களிலெழுதப்பட்டதாகப் பார்க்கிறோமேயன்றிக் குடியானவர்களுடைய சரித்திரங்களெழுதப்பட்டதாகப் பார்க்கிலேம். இராஜாக்களுடைய சரித்திரங்களைத்தான் பூர்வ நூல்கள் கூறுகின்றன. நான்கு வேதங்களுக்கும் முதல் வேதமான இருக்குவேதத்தில் தேவர்களை க்ஷத்திரியர் என்றே சொல்லியிருக்கிறது. திருஷ்டாந்தமாக இருக்குவேதம், ஏழாவது மண்டலம், 64.2.ல் வரும் சுலோகத்தையும், அதே மண்டலத்தல் 89.1.ல் வரும் சுலோகத்தையும் பார்க்க. ஆகையால் வேதங்களில் சொல்லப்பட்ட தேவர்கள் சத்திரியரென்னும் அரசர் குலத்தவரென்று தெரிகிறது.

2. வேதங்களில் சொல்லப்படும் தேவர்களில் முக்கியமானவர்களான அட்டதிக்கு பாலருக்கு வழங்கும் பெயர்களாலும், தேவர்கள் சத்திரிய குலத்தவரென்றறியலாம். திருஷ்டாந்தமாக:—

அட்டதிக்கு பாலரில் ஒருவரும் தென்கீழ்த்திசைப் பாலனுமாகிய அக்கினிபகவானுக்கு வழங்கும் சூரன் என்னும் பெயருக்கு வீரன், வீரர் குலத்தவன், சத்திரியன் என்றே பொருள்; சூரம்=வீரம (சதுரகராதி). கீழ்த்திசைப் பாலனுகிய இந்திரனுக்கு வழங்கும் வாசவன் என்னும் பெயருக்கு அம்பு வித்தையில் வல்லவர்கள் குலத்தவன், அதாவது, சத்திரிய குலத்தவன் என்று பொருள்; [illegible] (ச[illegible])

வடமேற்றிசைப்பாலனாகிய வாயுபகவானுக்கு வழங்கிய சமீரன் என்னும் பெயருக்குப் போர் வீரன், அதாவது, சத்திரியன் என்றும், ஆசுகன் என்னும் பெயருக்கு அம்பு வித்தையில் வல்லவர்கள் குலத்தவன், அதாவது, சத்திரிய குலத்தவன் என்றுமே பொருள்; சமீரம்=போர், ஆசுகம்=அம்பு என்பதாகச் சதுரகராதியாலறிக. அப்படியே தென்மேற்றிசைப் பாலனாகிய சூரியமகா ராஜனுக்கும் சூரன் என்னும் சத்திரியகுலப் பெயரும், சண்டன் (சண்டை=போர்), அதாவது, போர் வீரன் என்னும் சத்திரியகுலப்பெயரும் வழங்கினதாகப் பார்க்கிறோம். வடகீழ்த்திசைப்பாலனாகிய சந்திர மகாராஜனுக்கும் போர் வீரன், சத்திரியன் என்று பொருள்படும் தெவ்வு (தெவ்=போர்) என்னும் பெயரும், அம்புவித்தையில் வல்லவர்கள் குலத்தரசன் என்று பொருள்படும் உடுபதி (உடு=அம்பு, பதி=அரசன்) என்னும் சத்திரிய குலப்பெயரும் வழங்கி வந்திருக்கின்றன. அதே பிரகாரம் சூரியமகா ராஜன் புத்திரனும் தென்றிசைப்பாலனுமாகிய இயமனுக்கும் போர் வீரன், சத்திரியன் என்று பொருள் கொடுக்கும் சண்டன் (சண்டை=போர்), சமன் (சமம்=போர்), மறலி (மறல்=போர்) என்னும் பெயர்களும், வீரன் என்று பொருள் கொடுக்கும் சௌரி (சௌரியம்=வீரம்) என்னும் சத்திரியகுலப்பெயரும் வழங்கினதாக வாசிக்கிறோம். ஆகையால் இருக்கு வேதத்தில் சொல்லியபடி தேவர்களென்னப்பட்டவர்கள் சத்திரியரென்னும் அரசர் குலத்தவர் என்று விசிதமாகிறது.

3. தேவர்களுக்குச் சத்திரியர் என்னும் பெயரோடு ஆரியர் என்னும் குலவிளக்கப் பெயரும் வழங்கியிருக்கிறது. திருஷ்டாந்தமாக இருக்கு வேதம், 1-வது மண்டலம், 103.3-ல் இந்திரனைப் பார்த்து வஜ்ஜிர பாணியாகிய இந்திரனே தாசியூஜனங்களை உன் வஜ்ஜிராயுதத்தால் சங்கரித்து, ஆரியருடைய கீர்த்தியைப் பெருகச் செய்வாயாக என்று கூறியிருப்பதால் சத்திரியனாகிய இந்திரன் ஆரியர்குலத்தவன் என்றறியலாம். மேலும் இருக்குவேதம், ஏழாவது மண்டலம், 86.7-ல்

> "எங்கள் ஆசையை நிறைவேற்றி எங்களை ஆதரித்து வரும் வருணபகவானை, நான்பாவதோஷமல்லாமல அடிமையைப்போல் உண்மையாய் அர்ச்சனைசெய்வேன்; நாங்கள் அறிவீனர், ஆகையால் ஆரியகுல தேய்வமே! எங்களுக்கு அறிவைத்தாரும்"

என்று விளம்பியிருப்பதால் சத்திரியனாகிய வருணபகவானுக்கும் ஆரியன் என்னும் குலவிளக்கப்பெயர் வழங்கியிருக்கிறதென்றறிகிறோம். வருணபகவான் ஆரிய குலதெய்வம் என்பதாக வேதங்கள் கூறுகிறபடியால், அவருடைய இனத்தாரான மற்றும் திக்குபாலர்களும் வருணபகவானைப்போலவே ஆரிய குலத்தவர்களென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆகையால் வேதங்களில் சொல்லப்பட்ட தேவர்கள் ஆரியர் என்றறிக. புராணங்கள் கூறும் தேவர்களும் ஆரியர்தான்.

மும்மூர்த்திகளிலொருவராகிய சிவப்பெருமானுக்கும் ஆரியன் என்னும் [illegible] வழங்கி[illegible]றது.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவம்மானை.

2-வது கவி.

பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தா
ராராலுங்காண்டற் கரியாளெமக்கெளிய
பேராளன்றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாராவழியருளி வந்தென்னுளம் புகுந்த
வாராவமுதாயலை கடல் வாய்மீன் விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காணம்மானாய்.

சிவபெருமானுக்கு மோகினியிடம் பிறந்த குமாரனாகிய ஐயனாருக்கும் ஆரியன் என்னும் பெயர் வழங்கினதாகச் சதுரகராதி யாசிரியர் பொருளகராதியில் கூறுகிறார். சிவனுடைய மனைவியாகிய பார்வதிதேவியாருக்கும் ஆரியை என்னும் பெயர் வழங்கினதாகத் திவாகரம், தெய்வப் பெயர்த் தொகுதி, 15-வது சூத்திரத்தில் கண்டிருக்கிறது.

உமையவள் பேர்.

காமக்கோட்டி யம்பிகை கௌரி
ஆரியை சத்தி யயிராணி பார்வதி
இமையவல்லியுமையவள் பேரே.

விட்டுணு அவதாரங்களாகிய இராமமூர்த்திக்கும், கிருட்டிண மூர்த்திக்கும் ஆரியன் என்னும் பெயர் வழங்கியதற்கு ஒவ்வொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், தைலமாட்டு படலம்.

46-வது கவி.

ஆரியனிளவலை நோக்கி யையவிச்
சீரியவல்லன செப்பலென்ற பின்
பாரிடைவணங்கினன்பதைக்கு நெஞ்சினன்
தேரிடைவித்தகன்சேறல்மேயினன்.

இக்கவியில் இராமருக்கு ஆரியன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

கூர்மபுராணம், கண்ணனவதரித்த வத்தியாயம்.

209-வது கவி.

சார்தலுமக்குரூரன் றண்புனல்படியுமெல்லை
தேரிவிற்புனலிற் [illegible]
ஞரியன் [illegible]
[illegible]

இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்கு ஆரியன் என்னும் பெயர் வழங்கியிரு[illegible] [illegible] புராணங்கள் கூறும் [illegible] [illegible] ஆரிய குல [illegible]

4. இப்படியாக வேதங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் கூறப்படும் தேவர்களுக்கு ஆரியர் என்னும் பெயர் வழங்கியிருப்பதாலும் தேவர்கள் என்னப்பட்ட சத்திரியர் அரசர் குலத்தவரென்றறியலாம். எப்படியெனில் தமிழில் ஆரியன் என்னும் பெயரானது அரசர் குலப்பெயரேயன்றிப் பார்ப்பாருக்கும் வைசியருக்கும் சூத்திரருக்கும் வழங்கிய பெயரல்ல. திவாகரம் என்னும் பூர்வ தமிழகராதியில், மக்கட்பெயர்த்தொகுதி என்னும் பிரிவில், நான்கு ஜாதிகளையும் பற்றிய 33 சூத்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில்

1 முதல் 8-வரையுள்ள சூத்திரங்கள் **குருக்கள்** பெயர்களையும்,
9 முதல் 31 வரையுள்ள சூத்திரங்கள் அரசர் பெயர்களையும்,
32-வது சூத்திரம் வணிகர் பெயர்களையும்,
33-வது சூத்திரம் சூத்திரர் பெயர்களையும்,

கூறுகின்றன. இவற்றில் அரசர் குலப்பெயர்கள் கூறும் சூத்திரங்களில் ஒன்றாகிய 11-வது சூத்திரத்தில் ஆரியர் என்னும் பெயர் வழங்கியிருக்கிறபடியால், ஆரியர் என்பது அரசகுலப் பெயரென்றறிகிறோம். ஆகையால் தேவர்களுக்கு வழங்கிய ஆரியர் என்னும் பெயராலும் தேவர்கள் அரசர் குலத்தவர்களாகிய சத்திரியரென்றறியலாம். இதற்கிணங்க டாக்டர் பர்ட் உட் துரையும் தாமியற்றிய புஸ்தகமொன்றில் * பிராமணர் துரேனிய ஜாதிப் பிரிவைச் சேர்ந்த மந்திரவாதிகள் என்றும், சத்திரியர் ஆரியவீரர்கள் என்றும், வைசியர்கள் கலந்துபோன ஆரியர்களும் பூர்வகுடிகளுமென்றும், சூத்திரர் ஜெயிக்கப்பட்ட இந்தியாவின் பூர்வ குடிகளென்றும் கூறுகிறார். டாக்டர் பர்ட் உட் கூறும் இந்த அபிப்பிராயத்தில் ஆரியரைப்பற்றிச் சொல்லிய விஷயமானது இந்தியாவிலுள்ள பல நூல்களுக்கொத்திருக்கிறபடியால், ஆரியரே சத்திரியர் என்னும் விஷயம் ஒப்புக்கொள்ளவேண்டியதே. ஆகையால் தேவர்களென்னப்பட்டவர்கள் ஆரியரென்றும், சத்திரியரென்றும் கூறப்படும் அரசர் குலத்தவர் என்றறிக. ஆரியருடைய மேன்மையினாலும் நல்லொழுக்கத்தாலும் நல்லரசாட்சியினாலும் அவர்கள் தேவர்களாகமதிக்கப்பட்டார்கள்.

5. தேவர்கள் என்னும் பெயருக்கே அரசர் என்று பொருளானபடியாலும் தேவர்கள் அரசர் குலத்தவரென்றறியலாம். திருஷ்டாந்தமாக சுந்தரேசபாத சேகர பாண்டியன் குமாரனாகிய வரகுண பாண்டியனைத் திருவிளையாடற் புராணத்தின் ஓரிடத்தில் வரகுண தேவன் என்றும் வேறோரிடத்தில் வரகுண வேந்து என்றும் கூறியிருக்கிறது.

* "The *Brahmans* possibly represent the Shamans, or magicians of the prehistoric Turanian immigrants into India; the *Kshatriyas* their Aryan conquerors; the *Vaisyas*, the mixed Aryas and earlier settlers and aborigines; and the *Sudras*, the conquered earlier settlers, and true aborigines of India." (*Page [illegible] of the Industrial Arts of India by. Dr. G. C. M. Birdwood.*)

திருவிளை[illegible]யாடற் புராணம்.

[illegible]ரகுணனுக்குச் சி[illegible]லோகங் காட்டிய படலம்.

எழுசீரடி[illegible]யாசிரிய விருத்தம்.

பண்கொண்ட வேதமுதல[illegible]நாடரிய
பரமானந்த வொருவனி[illegible]
னெண்கொண்ட காணிபொரு[illegible] கவர்ஞாதிமாதுலரை
யெதிரேறிவென்றபடி யித[illegible]ராங்
தண்கொண்டநேமிவரகுணதேவ[illegible]னய்துபழி
தன்னைத் துடைத்தனையமன்னன்
கண்கொண்டுகாண்வுயர் சிவலோ[illegible]மதுரைதனில்
வருவித்தகாதையினிமொழிவாம்.

பலகையிட்ட படலம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

இறையருள் வரிசைபெற்றபத்திரனு மேலுயர்த்தவரைநாற்போது
முறையினால் வழிபட்டொழுகுவானாக முடிகெழு வரகுணவேந்து
மறைமுதலடிகள் வந்து வந்தமையால் வழுத்தவான்சில்பகல்கழிய
நிறைபெருஞ்சடரோன்றிருவருவுடைந்தநெறியினாற்சிவபுரமடைந்தான்.

இவ்விரண்டு கவிகளிலும் வரகுண பாண்டியனைக்குறிக்கும் பதங்களாகிய வரகுணதேவன், வரகுணவேந்து என்னும் பெயர்கள் ஒரு பொருட்கொண்டமொழிகள்.

[illegible]ரகுணதேவன் = வரகுணவேந்து

ஆகையால்

[illegible]தவன் = வேந்து
= அரசன்

எ[illegible]றே பொருள்.

Compare with this what Dr. Macl[illegible] has stated about the religion of the Dravidians (Tamulians).

"The early Dravidians probably had for religion a *worship of the spirits of ancestors*, coupled with that of hostile demoniac personages of other and various descriptions. When religions observances developed they appear to have taken the form of the sacrifice of living animals, and those peculiar rites of devil-priests which have been elsewhere described. But at all stages religion is composite. It is stated that கோ (ko) means the deity and கோவில் (kovil) or temple means the house of the deity. But that these meanings are primitive requires verification. கோ. *means originally a ruler and* கோவில் *a ruler's residence. No traces exist of any early worship paid to a supreme deity.*" (Page 113 of the Manual of the Administration of the Madras Presidency.)

டாக்டர் மக்ளின் துரை மேலே கண்டெழுதியிருக்கிற பிரகாரம் கோவில் (கோ + இல்) என்னும் பெயருக்கு அரசர்வீடு என்பது மூலார்த்தம். திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 21, 22, 23-வது சூத்திரங்களில், சேரசோழ பாண்டியர்களுக்கு முறையே கோச்சேரன், கோச்சோழன், கோப்பாண்டியன் என்னும் பெயர்கள் வழங்கியிருப்பதால், கோவென்பது அரசரைக் குறிக்கிறதென்றும், கோவில் என்றால் அரசர் மாளிகையென்பதே மூலார்த்தம் என்றுமறிக.

வரகுணபாண்டியனுக்குத் தேவன் என்னும் பெயர் வழங்கிய பிரகாரம், ஒரு காலத்தில் பாண்டியர்களை செயித்தாண்டு வந்த குலோத்துங்கசோழராஜனுக்குக் குலோத்துங்க சோழ தேவர் என்னும் பெயர், திருவானைக்காச் சிவாலயத்தில் கோச்செங்கட்சோழனாற் கட்டப்பட்ட மூன்றாவது மதில் கீழ்க்கோட்டைவாசல் தென்புறமதிலிலுள்ளதோர் கல்லில் வெட்டப்பட்டிருப்பதாலும் தேவன் என்பது அரசனைக்குறிக்கிற தென்றறியலாம். தமிழிலிருந்து உண்டான தெலுங்குப்பாஷையில் தேவரா என்னும் பதத்துக்கு அரசனே என்று பொருள்.

6. நம் தேசத்தில் அரசர் குலத்தவர்களே பூர்வ காலத்தில் தேவர்களாக வணங்கப்பட்டுவந்தார்கள். மதுரையில் சந்திரவம்சத்தரசனாகிய சுந்தரபாண்டியனை வணங்குகிறார்கள். கொங்குநாட்டிலுள்ள தலைய நல்லூர் என்னும் பூர்வ நகரில் சேரனுக்கும் சோழனுக்கும் நடந்த யுத்தத்தில் சோழன் மடிந்துபோக, மேற்படி ஸ்தலத்திலுள்ள வீரமாகாளி கோவிலில் சூரிய குலத்தரசனாகிய சோழனுக்கு முன்பூசையும் காளிக்குப்பின் பூசையும் நடந்துவருகின்றது. சூரிய குலத்தில் தோன்றியவரும், தசரத மகாராஜன் குமாரனும், சீதையின் கொழுநனுமாகிய இராமருக்கு இந்தியா முழுவதிலும் கோவில்களுண்டு. அதே வம்சத்தில் தோன்றிய கிஷ்கிந்தை நாட்டரசனாகிய சுக்கிரீவ மகாராஜனுடைய தளகர்த்தனும் மந்திரியுமான ஆஞ்சநேயர் என்னும் பெயர் கொண்ட அனுமார் என்னும் அரசகுலத்தவனையும் வணங்குகிறதைப் பார்க்கிறோம். சந்திர வம்சத்திலுதித்தவரும், பஞ்சபாண்டவர்களுக்கு மைத்துனருமாகிய கிருட்டிண மூர்த்தியை நம்முடைய தேசமெங்கும் வணங்குகிறார்கள். அவருடைய தமையனாகிய பலராமன் என்னும் தாலகேதுவுக்குப் பலதேவன் என்னும் பெயரும், அவருடைய தகப்பனுக்கு வசுதேவன் என்னும் பெயரும் வழங்கியிருக்கின்றன. மேலும் பூர்வ அரசகுலத்திலுதித்தருந்திதேவி, சுமத்திரைதேவி, கோசலைதேவிமுதலானவர்களையும் வணங்கிவருகிறார்கள். அரசகுலப்பெண்களும், பஞ்சகன்னிகைகள் என்ற பெயர் பெற்றவர்களுமாகிய அகலியை என்னும் ராஜரிஷி கௌதமர் பத்தினியையும், துரோபதையென்னும் பாண்டவர்கள் மனைவியையும், சீதையென்னும் இராமருடைய தேவியையும், தாரையென்னும் சந்திர மகாராஜன்பாரியையும் மண்டோதரியென்னும் இராவணனுடைய பத்தினியையும், அந்திசந்தியிலும் பிராமணர்கள்பூசிக்கிறதைப் பார்க்கிறோம்.

“ அகலியா துரோபதி சீதா தாரா மண்டோதரீ ததா
பஞ்சகந்யா ஸ்மரேந்நித்யம் மகா பாதகநாசனம் ”

அகலியை, திரௌபதை, சீதை, தாரை, மண்டோதரியென்னு மிப்பஞ்சகன்னிகைகளை நித்திய காலமும் பூசித்து வருகிறவர்களுக்குச் சகல பாவங்களும் விமோசனமாகிவிடுமென்பதாம்.

தேவர்களென்னப்பட்டவர்கள் க்ஷத்திரியரென்று வேதங்கள் கூறுகிறபடியாலும், அவர்களுக்கு வழங்கிய பற்பல பெயர்கள் க்ஷத்திரியத் தொழிலை விளக்கிக்காட்டுகின்றவைகளாயிருப்பதாலும், அவர்கள் ஆரியர் குலத்தவர்கள் என்று கண்டிருக்கிறபடியாலும், தேவர் என்னும்பெயருக்கு அரசரென்றும் கோவில என்னும் பெயருக்கு அரசர் அரண்மனை என்றும் மூலபொருளாகிறபடியாலும், அரசர்குலத்தவராகவேவணங்கப்பட்டு வருகிறதை நாம் அனுதினமும் இத்தேசத்தில் பார்த்துவருகிறபடியாலும், அக்குல மானுக்களுடைய நாமங்களை உச்சரிப்பதினாலே பஞ்சபாதகங்கள் முதலாய் விமோசனமாகிவிடுமென்பதாகப் பார்ப்பார் நாளதுவரை எண்ணிவருகிறதினாலும் தேவர்களென்னப்பட்டவர்களெல்லாம் அரசகுலத்தவர்கள் தாமென்று ஐயமற அறிகிறோம்.

7. இந்த தேவர்களின் குலத்தவர்கள் இந்நாட்டை 56 தேசங்களாகப் பங்கிட்டு அரசாண்டு வந்தார்களெனப் பூர்வ நூல்கள் கூறுகின்றன. அத்தேசங்களின் பெயர்களாவன :—

1. அங்கம்	15. காம்போசம்	29. சவ்வீரம்	43. பப்பரம்
2. அருணம்	16. கிராடம்	30. சாலவம்	44. பல்லவம்
3. அவந்தி	17. குருகு	31. சிங்களம்	45. பாண்டியம்
4. ஆந்திரம்	18. குடகம்	32 சிந்து	46. புலிந்தம்
5. இலாடம்	19. குந்தளம்	33. சீனம்	47. போடம்
6. இயவனம்	20. குரு	34. சூரசேனம்	48. மகதம்
7. ஒட்டியம்	21. குலிந்தம்	35. சோழம்	49. மச்சம்
8. கருசம்	22. கூர்ச்சரம்	36. சோனகம்	50. மராடம்
9. கலிங்கம்	23. கேகயம்	37. திராவிடம்	51. மலையாளம்
10. கன்னடம்	24. கேரளம்	38. துளுவம்	52. மாளவம்
11. கன்னுடம்	25. கொங்கணம்	39. தெங்கணம்	53. யுகந்தரம்
12, காசம்	25. கொல்லம்	40. நிடதம்	54. வங்கம்
13. காசிமீரம்	27. கோசலம்	41. நேபாளம்	55. வங்காளம்
14. காந்தாரம்	28. சகம்	42. பாஞ்சாலம்	56. விதர்ப்பம்

என்பவைகளே. இப்படியாக இத்தேசத்தைப் பங்கிட்டு அரசு புரிந்து வந்த க்ஷத்திரிய ராஜாக்களில் முக்கியமானவர்கள் தான் இந்தியாவிலே தேவர்களாக நாளதுவரை வணங்கப்பட்டு வருகிறார்கள். ஆகையால் வேதமார்க்கமானது சத்திரியவணக்கமேயன்றி மெய்த்தேவ வணக்கமல்லவென்றறிக.

—o—

V-வது அத்தியாயம்.

சோம சூரியாக்கினி குலங்கள்.

—(:o:)—

1. மூன்று முக்கிய இராஜ குலங்கள். 2. சூரிய மகா ராஜன் உற்பத்தி. 3. கருசதேசாதிபதிகள். 4. வைசாலியரசர். 5. ஆனர்த்த தேசாதிபதிகள். 6. அயோத்தியரசர். 7. கபிலையரசனுகிய கௌதமபுத்தன். 8. மிதிலையரசர். 9. சந்திர மகாராஜனுற்பத்தி. 10. காசி ராஜாக்கள். 11. அக்கினிகுலம். 12. மதுக்கள். 13. சைத்திரர். 14. சாத்துவதர். 15. போஜர். 16. சேய்நேயர். 17. கிருட்டிணமூர்த்தி குலம். 18. துருவ வசுக்கள். 19. காந்தாரகர். 20. அங்க, வங்க, கலிங்க, சிம்ம, பௌண்டர தேசாதிபதிகள். 21. பாஞ்சாலதேசாதிபதிகள். 22. பஞ்சபாண்டவ துரியோதனுதிகள். 23. மகத நாட்டரசர்.

தேவர்களென்னப்பட்டவர்கள் இந்தியாவின் பூர்வ குடிகளென்றும், அவர்கள் கடவுளரல்ல மனிதரென்றும், கருநிறமானவர்கள் என்றும், அரசர் குலமென்னப்பட்ட க்ஷத்திரியரென்றும் முந்தின அத்தியாயங்களில் பார்த்தோம். அவர்கள் தான் முதலில் இந்நாட்டைக் கைப்பற்றி அதிபூர்வ காலமுதல் மகமதிய அரசாட்சி ஆரம்பிக்கும் வரையில் இந்நாட்டில் அரசுபுரிந்து வந்தார்கள். இந்தப் பூர்வ ராஜபரம்பரையில் சூரிய, சந்திர, அக்கினி குலங்களென்னும் மூன்றும் அதிகபிரஸ்தாப கீர்த்திபெற்ற இராஜ கிளைகள். இம்மூன்று கிளைகளில் முக்கியமானவற்றை இவ்வத்தியாயத்தில் இனமுறை சம்மந்தமாய் விளக்கிக் காட்டுவோம்.

2. சூரிய குலத்து முதலரசன் சூரியமகாராஜன். இவருடைய உற்பத்தி வியாயானது பலவாறுகச்சொல்லப்பட்டிருக்கிறது. பிரமனின் குமாரர்களாகிய பிரசாபதிகளில் (1) அத்திரி பிரசாபதியின் குமாரனென்று சில நூலகளும், (2) தக்கபிரசாபதியின் குமாரத்தியாகிய அதிதியை மணம்புரிந்தவரும், மரீசிபிரசாபதியின் புத்திரனுமாகிய காசிபருடைய குமாரனென்று சில நூல்களும் கூறுகின்றன.

அருணசலபுராணம், திருமலைச் சருக்கம்.

14-வது கவி.

அங்கிராசனபதிகள் கார்க்குவரையளித்தார்
தங்குயத்திரிகதிர்மதி புலத்தியன் றனையர்
பொங்கிராக்கதர் வானரர் கின்னரர்புலக
னங்குமைந்தர் கிப்புருடர்பின்விலங்கையுமளித்தான்.

இக்கவிக்கு மழவை மகாலிங்கையரவர்கள் எழுதிய வுரையில்

"——அத்திரியென்பவர் சூரிய சந்திரரிருவரையும் பெற்றார்"

என்பதாகக் கூறியிருக்கிறது. இதனால் சூரிய மகாராஜன் அத்திரி பிரசாபதியின் குமாரனென்றறியுலாம்.

விஷ்ணு புராணம், நாலாமம்சம், முதலத்தியாயத்தில் தக்கனுடைய மகளாகிய அதிதியினிடம் சூரியமகா ராஜன் தோன்றினதாகக்கண்டிருக்கிறது.

> "From the right thumb of Brahma originated the Patriarch Daksha, whose daughter was Aditi, who was the mother of the Sun" (*vide* Translation of Vishnupuranam by Manmatha Nath Dutt, M. A., M. R. A. S.).

அதிதியானவளோ மரீசி பிரசாபதியின் குமாரனாகிய காசிபருடைய மனைவி.

அருணாசலபுராணம், திருமலைச்சருக்கம்.

8-வது கவி.

உன்னு மைந்தரின் மரீசிபாற் காசிபனுதித்தான்
பன்னுதக்கனு மைம்பது பெண்களைப் பயிந்தா
னன்ன காசிபனவர் பதின்மூவரை யணைந்தான்
முன்னளாகிய அதிதி பாலிமையவர் முகிழ்த்தார்

ஆகையால் சூரியமகாராஜன், காசிபருக்கு அதிதி யென்பவளிடம் பிறந்த குமாரன் என்றறிகிறோம். இலிங்கபுராணமும் கூர்மபுராணமும் சூரியமகாராஜன் காசிபருடைய குமாரன் என்றே விளம்புகின்றன.

இலிங்கபுராணம், சூரியன் வங்கிசமுரைத்த வத்தியாயம்.

2-வது கவி.

மாசறு தவத்தாலுமர்ந்தழியாத மறையொரு நான்கையு முணர்ந்த
காசிபன்புதல்வன் கலிகெழுபரவைக் கருங்கடன் முகட்டினிற்றோன்றி
யேசலி லலருமாசறமூடி யிருள்படக்கதிர்க்குலம் பரப்பித்
தேசுகண்படுக்கும் பசும்பொன் மால்வரையை வலம்வருந்தினகரனுமால்.

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்த வத்தியாயம்.

2-வது கவி.

அருமறைநான்கு மங்கமோராறு மறத்தொடு மினிதிருந்தாலும்
பொருவருஞ் சென்னக் காசிபனென்னும் புன்மயறு முனிவரன் மைந்தன்
விரிதிரையுடுத்த வுலகமோரேழும் விழுங்கிருட் பிழம்புசித்தொளிரு
மெரிசுடர்க்கற்றை யேழ்பரித் தடந்தேர் கடவிய விரவியஞ்செல்வன்.

இவ்வாதாரங்களால், சூரியமகாராஜனானவர் காசிபருடைய குமாரன் என்றறிகிறோம்.

ஆகையால் அருணாசல புராணம் கூறியபடி சூரியமகாராஜனானவர் அத்திரி பிரசாபதியின் குமாரனாயிருந்தாலும், அல்லது கூர்ம, இலிங்க, விஷ்ணு புராணங்களில் கூறியபடி சூரியமகாராஜனானவர் மரீசி, தக்கன்

என்னும் பிரசாபதிகளின் மரபினராயிருந்தபோதிலும், எப்படியும் அவர் பிரமனின் குமாரர்களாகிய பிரசாபதிகளின் குலத்தவர் என்னும் விஷயம் தெளிவாயிருக்கிறது.

சூரிய மகாராஜனுடைய மனைவிகளில்

(a) சங்கதை யென்பவளிடம்,

1. வைவச்சுதன் என்னும் மனுமகாராஜனும்,
2. இரேவந்தனும்,
3. நமன் என்னும் இயமதர்மராஜனும்,
4. இயமுனை யென்னும் பெண்ணும் பிறந்தார்கள்;

☞ இருக்கு வேதத்தில் சங்கதை என்பதற்குப்பதிலாக சரணியு என்று கண்டிருக்கிறது.

(b) பிரபை யென்பவளிடம்,

5. காலனுதித்தான்,

(c) சாயை யென்பவளிடம்,

6. சாவன்னி யென்பவனும்,
7. சனிபகவானும்,
8. தபதி யென்னும் பெண்ணும்,

பிறந்தார்கள் யென்பதாக இலிங்கபுராணிகர் கூறுகிறார்.

இலிங்கபுராணம், சூரியன் வங்கிசமுரைத்த வத்தியாயம்.

3-வது கவி.

தடவரையனைய முலைசுமந்தேங்கித் தளரிடைச் சங்கதை யென்பாள்
சுடரொளிவிரிக்கும் பருதியை மணந்து தூயவைவச்சுதனென்னு
மிடல்கெழுதிணி தோள்மனுவையு மிரேவந்தனையு நன்னமனையுமிளிரும்
வடுவகிர் நெடுங்கண் யமுனையா மடந்தை தன்னையும் வயிறுவாய்த்தனளால்.

4-வது கவி.

பூங்குழற் பிரபை யென்பவள் புணர்ந்து புலரியாங் காலத்தை யுயிர்த்தாள்
வாங்குவின் மருங்குற் சாயை யென்பவளு மற்றவன் வரைப்புயந்தழுவி
யோங்குசாவன்னி யென்பவன் றனையுஞ் சனியையு மொளிநகைச் செவ்வாய்
மாங்குயிற் குதலைத் தபதியென்றுரைக்கு மடந்தை தன்னையு மளித்தனளால்.

சூரியமகாராஜனின் மக்களில் இயமன் அதிகப்பிரஸ்தாப கீர்த்திபெற்ற அரசன். இவரைப்பற்றிய பயமும் நடுக்கமும் இந்துக்களில் ஒருவருக்கும் இன்னும் நீங்கவில்லை. இவர், மரணத்துக்கும் நரகாபுரிக்கும் அதிபதி யென்றும், மரித்துப் போனவர்களுக்கு நியாயத்தீர்ப்பு அளித்து யோக்கியர்களை சொர்க்கலோகத்திற்கும் அயோக்கியரை நரகத்துக்கும் அனுப்புகிறவர் என்றும் புராணிகர் வரைந்திருக்கிறார்கள்.

"*Yama*, the god of death, regent of the south, and king of hell (நரகம்) the place of his Capital, in which he sits in judgment on departed souls sending the good to *Swerga* and the wicked to *Naraka*."

(Winslow.)

ஒருவன் மரணப்படுக்கையிலிருக்கும்போது இயமதூதர்கள் வந்துவிட்டார்கள் என்றும், மரித்தபின்பு இயமலோகஞ் சென்றான் என்றும் இந்துக்கள் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இவர் தாமிருந்த காலத்தில் இவர் குலத்தவர்களாகிய சத்திரியருக்கு எவ்வித துன்பமும் விளைவிக்காத காரணத்தால் அக்குலத்தவர்களால் இவர், தருமன், இயமதருமராஜன் என்னும் பெயர்களாலும் நமன், அதாவது நம்முடையவன், நம்முடைய இனத்தான் என்னும் பெயராலும் அழைக்கப்பட்டார்.

இயமனுடைய சகோதரனாகிய சனிபகவானும் அதிகப்பிரஸ்தாப கீர்த்திபெற்றிருந்தவரானபடியால் வாரத்தின் ஏழுகிழமைகளில் ஒன்றுக்குச்சனிக்கிழமை, சனிவாரம் என்னும் பெயர்கள் இவரிலிருந்துண்டாயின. இவரைப்பற்றிய பயமும் இந்துக்களுக்கு இன்னும் நீங்கவில்லை. ஒருவனுக்குமிகுந்த ஆபத்துண்டானகாலத்தில் அவனைச்சனியன் பிடித்துக் கொண்டான் என்றும், ஒருவனால் மிகுந்த தீமையுண்டாகிக்கொண்டிருக்கும்போது இந்தச்சனியன் என்றைக்குத் தொலையுமோவென்றும் சொல்லுகிறார்கள். அஷ்டமச்சனி, ஏழரைநாட்சனியென்னும்பதங்களும் சனிபகவானைக் குறித்துண்டானவைகள்தான். இவற்றால் அவர் கொடியவனாயிருந்தார் என்று விளங்குகிறது.

சூரியமகாராஜனுக்குப்பிரபை யென்பவளிடம் பிறந்த குமாரனாகிய காலனைப்பற்றிய புராணவிபரங்களால் சிலர் காலன் என்பது இயமனையே குறிக்கிறதென்றும், சிலர் சனிபகவானைக் குறிக்கிறதென்றும் அனுமானிக்கிறார்கள். சதுரகராதி யாசிரியரும் உவின்சலோ அவர்களும் இவ்வபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். ஆனால் புராணிகர் கூறும் உற்பத்திவிபரங்களில் இயமன்வேறு, சனிவேறு, காலன்வேறு என்றுதெளிவாய்க்கண்டிருக்கிறபடியால் இயமன்தான் காலன் என்பதும், அல்லது சனிபகவான்தான் காலன் என்பதும் தப்பபிப்பிராயம் என்று தெரிகிறது. இயமன், சனி, காலன் என்னும் மூவரும் சூரியமகாராஜன் என்னும் ஒரே தகப்பன் வயிற்றுப்பிள்ளைகளாயிருந்தபோதிலும், இலிங்கபுராணிகர் அம்மூவருடைய தாய்மாரும் வெவ்வேறானவர்களென்று கூறுகிறார். அப்புராணத்தின்படி இயமன் சங்கையிடமும், காலன் பிரபையிடமும், சனி சாயையிடமும் பிறந்தவர்கள் என்று பார்த்தோம். ஆகையால் இயமனுக்கும், சனிபகவானுக்கும், காலன சகோதரன் என்றறிகிறோம். இந்துக்களுடைய சாஸ்திரங்கள் காலனையும் கடவுளாக்கி, அவர்காலத்துக்கதிபதியென்றும், சிருஷ்டிப்பு, பரமரிப்பு, சங்காரம் என்னும் முத்தொழிலிலும் திரிமூர்த்திகளுக்குச் சமானமான வல்லமையுடையவரென்றும் கூறுகின்றன. சற்சனா [illegible] யும்போதும் துர்சனா [illegible] துக்கு விலகிக்கொள்ளும்போதும் காலனிசெயல் என்று சொல்லக்கேட்கிறோம். இச்சம்பவங்களுக்கெல்லாம் காலனே அதிபதியென்பது இந்து மதாபிமானிகளின் கொள்கை.

இயமனுடைய சகோதரி இயமுனை. இவ்விருவரும் இரட்டைப்பிள் [illegible] இயமுனை என்னும் பெயரானது இயமனுடைய சகோதரி யென [illegible] லுண்டான [illegible] பெயர். [illegible]

பயையென்று உத்தரராமாயணத்தில் சொல்லியிருக்கிறது. இவள் இராட்சதனும் மிகுந்த சவுரிய தயிரிய வீரிய சம்பன்னருமான ஏதிராஜனைக்கலியாணம்செய்து வித்தையுச்சவனைப்பெற்றாள். இவள் மரபில் இராவணன், விபீடணன், கும்பகருணன் என்னும் இராட்சதர்கள் தோன்றினார்கள்.

சூரிய மகாராஜனுடைய பட்டத்துக் குமாரனான மனுச்சக்கரவர்த்தியின் மரபில் இக்குவாகு, மாந்தாதா, இராமர், சோழன் முதலான சூரிய குலத்தரசர்கள் தோன்றினார்கள். மனு மகாராஜனுக்கு வைவச்சுதன் என்றும் பெயரெனப் பார்த்தோம். இவர் இயமதரும ராஜனுக்கு முன் பிறந்தவரானபடியால் இயமனால் வெல்லப்படக்கூடாதவர் என்னும் ஐதீகத்தைக்கொண்டு இப்பெயருண்டாயிற்று. வைவச்சுதன் (வீவன்+அச்சுதன்) என்றால் வீவனுக்கு அச்சுதன், வீவனால் அழிக்கப்படக்கூடாதவன், அதாவது இயமனால் அழிக்கப்படக்கூடாதவன் என்றுபொருள்.

வீ = மரணம், Death.
வீவன் = இயமன், God of death.
அச்சுதம் = அழிவின்மை, Indestructibleness.

இவர்கள் தான் சூரியமகாராஜன் மக்களில் முக்கியமானவர்கள். இனிமேல் சூரியகுலத்து முக்கியமான கிளைகளில் சிலவற்றின் வமிசவரிசையட்டவணையைக் கூறுவோம்:—

3. சூரிய குலத்தில் தோன்றிய கருச தேசத்தரசர்கள்:—

பிரமன்
|
தக்கப்பிரசாபதி { தக்கன் = மேன்மகன்
| { பிரசாபதி = அமிர்தநாதன்.
அதிதி (புதியவள்)

அதிதி யென்பவள் பிரமனின் குமாரனாகிய மரீசியின் புத்திரனாகிய காசிபரை மணம்புரிந்தாள்.

அதிதி
|
விவசுவானென்கிற சூரிய மகா ராஜன்
|
மனு (மேன்மகன், மன் = மேன்மை)
|
இக்குவாகு — நாபாகன் — நெடிற்றன் — கருசன் — கருபாதி — இளை (பெண்)

கருசன்
||
கருசதேசத்தரசர்

விஷ்ணு புராணம், காலாமம்சம், ராஜ வமிச சரிதங்கள், மூலைத் திரயம் கருக்குழி சரித்திரத்தில் சொல்லியிருக்கும் ஓர் வாக்கியம்.

"கருசனிடத்திலிருந்து கருசதேசத்தைக் காத்துவந்த மகா பலபராக்கிரமவான்களான க்ஷத்திரியர் பிறந்தார்கள்."

இக்குலத்தில் தோன்றிய விருததர்ம மகாராஜன் (விருதன்-படைவீரன்) என்பவன், பாண்டவர்கள் தாயாகிய குந்திதேவியின் சகோதரியான சுருதிதேவியை (சுருதி=வேதம்) மணம்புரிந்து தந்தவக்கிரன் (தந்தம்=பல், வக்கிரம்=கொடுமை) என்னும் மகா அசுரனைப் பெற்றான்.

4. சூரியகுலத்தில் தோன்றிய வைசாலி நகரத்தரசர்கள்:—

சூரிய மகா ராஜன்
|
மனு
|
இக்குவாகு — நாபாகன் — நெடிற்றன் — கருசன் — சருயாதி — இளை (பெண்)

கருசன் || கருசதேசாதிபதிகள்

நெடிற்றன்
|
நாபாகன் (வாக்குவல்லவன், நா=நாக்கு, பாகு=பனங்கற்கண்டு)
|
பலந்தனன் (பலத்தில் செல்வன்)
|
வற்சப்பிறை (பிரகாசிக்கும் மார்புடையவன், வற்சம்=மார்பு)
|
பரஞ்சன் (பர=மேலான, அஞ்சம்=அன்னப்பறவை)
|
பரசானி (மேலவர் குலத்து மேன்மகன், சானி=மேன்மகன்)
|
கனைத்திறன் (கனை=நிறைவு, திறம்=வலி)
|
சககபன் (சகம்=பூமி, சுபம்=நன்மை)
|
விம்மிதன் (அ... மானவன்)
|
விஞ்சன் (அறிவுடையோன், சான்றோன், விஞ்சை=கல்வி)
|
வீவஞ்சாதி (மரணத்துக்குப் பயப்படாதவன், வீவு=சாவு)
|
கனிநேத்திரன் (கண்ணழகன்)
|
அதிவிபூதி (அதிகமேன்மை பெற்றவன், சான்றோன், விபூதி=மேன்மை)
|
கரந்தமன் (மாலை சூட்டிய மேன்மகன்)
|
அவிச்சித்து (தேவருணவை யாகஞ்செய்தவன், அவி=தேவருணவு, சித்து=யாகம்)
|
மருத்தன் (மருத நிலத் தலைவன்)

இந்த மருத்தனுடைய யாகத்தில் இந்திரன், சோமபானத்தால் உடம்பு தெரியாதிருக்கும்படி களித்தான் என்று சொல்லியிருக்கிறது.

சக்கரவர்த்தியாகிய மருத்தன்
|
நரிசயந்தன் (நரிகளைக் கொன்றவன்)
|
தமன் (பொன்னிறமானவன், தமனியம்=பொன்)
|
இராயவர்த்தனன் (இராஜ குலத்தவரை வர்த்திக்கச் செய்தவன்)
|
சுவிருத்தி (நற்செலவன், சு=நன்மை, விருத்தி=செல்வம்)
|
கேவலன் (ஏகபுத்திரன், கேவலம்=தனிமை)
|
சுதிருதி (நற்றுணை, திருதி=துணை)
|
நரன் (மனிதன்)
|
சந்திரன் (பொன்னிறமானவன், சந்திரம்=பொன்)
|
கேவலன் (ஏகபுத்திரன்)
|
பந்துமான் (சுற்றத்தாருக்குள் மா[illegible]போன்ற மேனியன்)
|
வேகவான் (கோபி, வேகம்=கோபம்)
|
புதன் (அறிவுடையோன், சான்றோன்)
|
திரணபிந்து
|
இளிபிள்ளை (பெண்) (சிரிக்கும் குழந்தை)

விசாலன் (இவன் பெயரால் ராஜதானிக்கு வைசாலி, விசாலை என்று பெயர்களுண்டாயிற்று)
|
ஏமசந்திரன் (களிப்புற்ற பொன்மேனியன்)
|
சந்திரன்
|
தூமிராக்கன் (சர்வ சங்காரஞ்செய்பவன், அரக்கு=வெட்டு, தூமி=வெட்டு)
|
சிறுசயன் (சிறுவீரன், சயம்—வெற்றி)
|
சகதேவன் (பூமிக்கரசன், சகம்=பூமி, தேவன்=அரசன்)
|
கிரிசாகவதன் (மலைபோல் அசையாநிலை பெற்றவன், கிரி=மலை, சாகவதம்=அசையாநிலை)
|
சோமதத்தன்

சோமதத்தன் (சோமபானம் தத்தம்செய்தவன்.)
[N.B.—இவன் 10 அஸ்வமேதை யாகங்கள் செய்தான்]
|
ஜனமேஜயன் (மனிதர்களில் சிறந்த வீரன், சனம்=மனிதர், சயம்=வெற்றி)
|
சமதி (நல்ல அறிவுடையோன்)

இவர்களைப்பற்றிய ஓர் சுலோகம்:—

"வைசாலிநகரத்தை யாண்டராஜாக்கள் யாவரும் மூலபுருஷனை திரண பிந்து மகாராஜனுடைய அனுக்கிரகத்தினாலே தீர்க்காயுசு உள்ளவர்களாயும் மகாத்துமாக்களாயும் வீரத்தன்மையுடையவர்களாயும் மிகவும் தருமசீலராயுமிருந்தார்கள்."

5. சூரியகுலத்தில் தோன்றிய ஆனர்த்த தேசத்து அரசர்கள்:—

சூரிய மகாராஜன்
- இக்குவாகு
- நாபாகன்
- சருயாதி
  - சுகன்னியை (பெண்)
  - அனர்த்தன்
    - இரேயவதன்
      - குகுத்துமி
- கருசன் ‖ கருசதேசாதிபதிகள்
- செடிஷ்டன் ‖ வைசாலியரசர்கள்

இக்குவாகுவின் சகோதரனை சருயாதி (சரு-சோறு, யாது-தேவாமிர்தம்) என்பவனுக்கு சுகன்னியை யென்றொரு பெண்ணும், அனர்த்தன் என்றொரு ஆண்குழந்தையும் பிறந்தார்கள். அனர்த்தனென்பவன் தற்காலத்தில் குஜரத் (Guzaret) என்று பெயர் பெற்ற, மேல்கடற்கரையிலிருக்கும் தேசத்தைக் கைப்பற்றினபடியால், அத்தேசத்துக்கு ஆனர்த்தம் என்கிற பெயருண்டாயிற்று. அவனுடைய குமாரனாகிய இரேயவதன் (கொடிய அமிர்தநாதன், இரேயம்-தேவாமிர்தம், வதன்-கொலைசெய்வோன்) என்பவன் குசத்தாலி (தருப்பைப் புல்லும் பனைமரமும் நிறைந்த பட்டணம்) என்னும் பட்டணத்தைக் கட்டி, அதிலிருந்து ஆனர்த்த ராச்சியத்தை ஆண்டுவந்தான். அவனுக்குப்பின் அவன் குமாரனான குகுத்துமி (கு-பூமி, குத்து-கோப்பு) யாசனுனன். குகுத்துமி 'பிரமலோகம் சென்றபின், புண்ணிய ஜனர் என்கிற இராட்சதர் அப்பட்டணத்தை அழித்து அங்கிருந்த இராஜகுலத்தவரைத் துரத்தினார்கள். இவ்வாறு அநேக காலம் சென்றபின் அனாயுத்தின் அரசர்கள் சூரியகுலத்தில் தோன்றிய [illegible] அவர் [illegible] [illegible] என்னும் [illegible] [illegible]

டைக் கைப்பற்றி, அழிந்துபோன குசத்தாலிப் பட்டணத்தைத்திரும்ப வும் கட்டி, அதற்கு துவாரகை (Dhwaraka) எனப்பெயரிட்டு அரசாண்டு வருகிற நாளையில், சூரிய குலத்தவனை குகுத்துமி மரபிலுதித்த இரேயவதி என்கிற பெண்ணைக் கிருட்டிணமூர்த்தியின் தமையனுன் பலராமர் கலியாணஞ்செய்தார்.

6. சூரிய குலத்திலுதித்த அயோத்தி யரசர்கள்:—

(இராமமூர்த்திகுலம்.)

சூரிய மகாராஜன்

|

மனுச்சக்கரவர்த்தி

இக்குவாகு	நாபாகன்	செடிற்றன்	கருசன்	சருயாதி
		‖	‖	‖
		வைசாலியரசர்	கருசதேசாதிபதிகள்	ஆனர்த்ததேசத்தரசர்

சசாதன் (சசம்=முயல், அதம்=சங்காரம்) இவன் அநேக முயல்களைச் சங்கரித்ததாக விட்டுணு புராணம் கூறுகிறது. இவனுக்கு வீருகசியென்றும் பெயர்

புரஞ்சயான் (புரம்=இராஜதானி, சயம்=வெற்றி)

அன்னைநசு (தாய்க்குப் பிரியமானவன், அன்னை=தாய், நசு=ஆசை)

பிருகு (பனங்கிழங்கு, அமுதகுலத்தவன்)

விட்டராசுவன் (விட்டரம்=தவைபீடம், அசுவம்=குதிரை, குதிரைமேற் பற்றுள்ளவன்)

யுவனசுவன் (யுவனம்=இளமை. அசுவம்=குதிரை, இளஞானை குதிரை வீரன்)

சாபத்தி (வில்வீரன், சாபம்=வில்)

பிருகதசுவன் (அமுதகுல அதம்செய்யும் குதிரை வீரன், பிருகு—பனங்கிழங்கு; அதம்=சங்காரம், அசுவம்—குதிரை)

வலயாசுவன் (வலயம்—கேடகம்)

இரட்டாசுவன் (இரட்டம்—கட்டம்)

அரியசுவன் (அமுதகுல குதிரை வீரன், அரி—தேவாமிர்தம்)

சிகும்பர் (சிகும்பம்—நாகம்)

அமிதாசுவன் (அமிதம்—அளவின்மை)

கிரிசாசுவன் (கிரிசரம்—மலையரசனை, அசுவம்—குதிரை)

[illegible] (பிர[illegible] அறிவுடையோன், பிரசன்னம்—[illegible] தெளிவு)

யுவனாசுவன்
|
மாந்தாதா (தேவாமிர்தமுண்டு வளர்ந்தவன்)

இந்த மாந்தாதாச் சக்கரவர்த்திக்கு இந்துமதி என்பவளிடம் மூன்று குமாரர் பிறந்தார்கள் :—

(1) பூருகூர்ச்சன் (கருப்பைப் போன்ற புருவமுடையவன்)
(2) அம்பரீடன் (தேவர்களுக்கு ஈடான வலிமையுடையவன்)
(3) நாபாகன் (வாக்கு வல்லவன்) என்பவர்களே.

அவர்களில் பூருகூர்ச்சன்பரம்பரையில் இராமர் தோன்றினர்.

மாந்தாதா
பூருகூர்ச்சன் | அம்பரீடன் | நாபாகன்

பூருகூர்ச்சன்
|
திரசதசயன் (100 யுத்தத்தில் நிலைபெற்ற கீர்த்திபெற்றவன்)
|
அனறணியன் (நெருப்புபோன்ற அமுத குலத்தவன், அனல்—நெருப்பு, தணியல்=தேவாமிர்தம்)
|
பிரசதாசன் (அமிர்த நாதன், பிரசம்=தேவாமிர்தம்)
|
அரியசன் (அமுதகுல பிரமன், அரி—தேவாமிர்தம், அசன்—பிரமன்)
|
அத்தன் (உயர்ந்தோன், சான்றோன்)
|
வசுமனசு (தங்கமயமான மனசு, வசு—பொன்)
|
திரிதனவன் (மூவ்வகைச் செல்வன், [illegible]—மூன்று, தனம் - பொன்)
|
திரையருணி (திரு + ஐ + அருணி, இலக்குமியைப்போன்ற செந்நிறமேனியன், திரு-இலக்குமி, அருணம்-அதிகச்சிவப்பு)
|
சத்தியவிரதன் என்னும் திரிசங்கு (சத்தியமேதவமாகக்கொண்டவன்)
|
அரிச்சந்திர மகாராஜன் (அமுதகுலசந்திரன்)
|
உரோகிதாசன் (உலகமாதாவென்னும் சரகவதிக்கடிமை)
|
அரிதன் (பொன்னிறமேனியன், அரிதம்=பொன்)
|
சஞ்சு (சஞ்சிவன், ஆபத்துக்குதவுவோன்)
|
விசயன் (அமுதகுலத்தவன், விசயம்=[illegible])
|
உருக்கன் (உருக்குப்போன்ற உறுதியுடையவன்)
|
பிருகன் (பிருகு=புனக்கிழங்கு, அமுதகுலத்தவன்)
|
[illegible] ([illegible]கண்டு)

பாகுமகாராஜன் கேகயதால சங்காதிகளாலே வெல்லப்பட்டு, கர்ப்பிணியாயிருந்த தன் மனைவியோடே வனத்திற்குப்போய், ஒரு முனிவராச்சிரமத்திலே மரித்தான். அரசனின் மரணத்துக்குப்பின் இராஜாத்திதானுமவனோடு அனுமரணஞ் செய்வதாக எத்தனப்பட்டிருக்கையில் அந்த முனிவரவளைப்பார்த்து,

> "சகல பூமண்டலத்தையும் ஆளத்தக்கவனாய் மகாபலபராக்கிரமசாலியாய் சத்துரு பக்ஷத்தை நாசஞ்செய்ய வல்லவனாய் அநேக யாககர்த்தாவாய் கீர்த்தி பெறும்படியான சக்கரவர்த்தி உன் வயிற்றிலிருக்கிறான்"

ஆகையால் நீ மரணமடையக்கூடாதென்று தடுக்க அவள் அதற்கிணங்கி சிறிது காலத்துக்குள் ஒரு குமாரனைப்பெற்று அவனுக்குச் சகரன் (சக்கரன்) என்றுபெயரிட்டு வளர்த்துவந்தாள். அவன் பெரியவனான பின்பு கேகயதால சங்காதிகளையும், அவர்களுடன் சேர்ந்திருந்த சகர், யவனர், காம்போஜர், பாரதர், பல்லவர்களையும் செயித்து தன் தகப்பன் இழந்த ராச்சியத்தைக் கைப்பற்றி யரசாண்டுவந்தான். அவனுக்கு விதிர்ப்ப (Modern Berar) நாட்டரசன் மகளாகிய கேசினி (கூந்தலழகி, கொண்டையழகி) என்பவளிடத்தில் ஒரு குமாரன் பிறந்தான். அவன் சிறுவனாயிருக்குங் காலத்திலே அநேக தீங்குகளைச் செய்துவந்தபடியால் அவனுக்கு அசமஞ்சனன் (ஆட்டுக்கிடாய் இரத்தத்தில் முழுகினவன்) என்னும் பெயருண்டாயிற்று. பின்பு அவன் யவ்வன வயதடைந்து ஒரு குமாரனைப்பெற்றபின்பும் முன்போல கொடிய தீங்குகளைச் செய்துவந்தபடியால் தகப்பன் அவனைக் காட்டுக்குத் துரத்திவிட்டான். ஆகையால் சகரனுக்குப் பின்பு, அசமஞ்சனன் குமாரனாகிய அஞ்சுமான் (பழிக்கஞ்சுகிறவன்) பட்டத்துக்குவந்தான்.

சகரன்
|
அசமஞ்சனன் (இவன் அரசாளவில்லை)
|
அஞ்சுமான்
|
இல்லீவன் (ஆசையின்படி கொடுப்பவன்)
|
பகீரதன் (பகீரதி நதியுண்டுபண்ணினவன்)
|
சுகேத்திரன் (நற்குடிப் பிறந்தோன்)
|
[illegible] (நாக்கு வல்லவன்)
|
அம்பரீடன் (தேவர்களுக்கு [illegible]வன்)
|
[illegible] (இந்த தேசத்தைச்சேர்ந்த [illegible] பிறந்தவன்)
|
அயுதாயு ([illegible] [illegible] 10,000; ஆயு = ஆயர்தேவன், சான்றோன்)
|
[illegible]

உருத்துவருணன் (சினக்குறி கொண்டவன், உருத்தல் = சினம், வருணம் = நிறம்)

சருவகாமன் (எல்லா அழகும் பொருந்தியவன், சருவம் = எல்லாம், காமன் = மன்மதன்)

சுதாசன் (கடவுளுக்குப்பிரியமானவன், சு = நல்ல, தாசன் = அடிமை)

சவிதாசன் (அழகன் ; சவி = அழகு)

N. B. இவனுக்கு மித்திரசகன் என்றும் பெயர், இவன் மனைவி மத்தியந்தி (மத்தியம் = தேவாமிர்தம்)

அச்சுமகன் (பெற்றோருக்கு உயிர்போல் அருமையான புத்திரன், அச்சு = உயிர்)

மூலகன் (கிழங்கிற் பிரியங் கொண்டவன், மூலம் = கிழங்கு)

இவனுக்கு நாரி கவசன் என்றும் பெயர். அதற்குப்பன்னுடையைச் சட்டையாகக் கொண்டவன் என்று பொருள் ; நாரி = பன்னுடை, கவசம் = சட்டை.

தசரதன் (பத்துத்தேரை நடத்தவல்லவன்; தசம் = பத்து, ரதம் = தேர்)

இளபிழி (இளைய அமிர்தநாதன், பிழி = தேவாமிர்தம்)

விசுவசகாயன் (பூமியைப் பாதுகாப்பவன், விசுவம் = பூமி, சகாயம் = துணை)

கடகவாங்கன் (கங்கணம் தரித்தவன் ; கடகம் = கங்கணம், அங்கம் = மேனி)

தீர்க்கபாகு (பராக்கிரம அமிர்தநாதன், தீர்க்கம் = பராக்கிரமம், பாகு = பணங்கற்கண்டு)

இரகு மகாராஜன் (இரக்க சிந்தையுள்ளவன்)

அசன் மகாராஜன் (அசன் = பிரமன்)

தசரதன் (பத்துத்தேரை நடத்தவல்லவன்)

இராமர் | இலக்குமணர் | பரதர் | சத்துருக்கினர்

(இராமர்:)

குசன் (தருப்பைப்புல் நாதன்) | இலவன் (பக்தன், இலவம் = பூசை)

(குசன்:)

அதிதி (புதியவன்)

நிடதன் (நிடதேசத்தில் பிறந்தவன்)

அனலன் (அக்கினி [illegible])

நபசு (ஆவணி மாதம் பிறந்தவன், நபம் = ஆவணி)

புண்டரீகன் (இவன் தாமரை நிறமானவன்)

க்ஷேமதனுவன் (பாதுகாக்கும் வில்லினையுடையவன், க்ஷேமம் = காவல், தனு = வில்)

தேவாநீகன்

தேவாநீகன் (தேவர்களுடைய மேகம்போல் கொடுப்பவன்; நீகம்=மேகம்)
|
அஹிகு (இரும்பையுமிகழ்பவன்)
|
குரு (மேன்மகன்)
|
பாரியாத்திரன் (மனைவிவேண்டியாத்திரை செய்தவன்)
|
பலன் (வலியவன்; பலம்=வலிமை)
|
சலன் (கொடுங்கோபி, சலம்=தணியாக்கோபம்)
|
உறுக்கன் (கோபி, உறுக்கல்=கோபம்)
|
வச்சிரநபன் (ஆவணி மாதம் பிறந்த வஜ்ஜிரபாணி)
|
சங்கண்ணன் (ஆயுதவித்தையில் வல்லவன்; சங்கு=படைக்கலம், அண்ணல்=கீர்த்திபெற்றவன்)
|
வியூஹிதாசன் (மிருகங்களில் மீதியுற்றவன்; வியூகம்=விலங்கின் கூட்டம்)
|
விசவகன் (பூமியை தனக்குளடக்கியவன், சக்கரவர்த்தி; விசவம்=பூமி, அகம=மனம்)
|
இரணியநபன் (ஆவணி மாதம் பிறந்த பொன்னிறமானவன்; இரணியம்=பொன், நபம்=ஆவணி)
|
[illegible]சியான்
|
துருவசந்தி (அசையா அழகன்; துருவம்=அசையாமை, சந்தம்=அழகு)
|
சுதரிசனன் (நல்லதோற்ற முடையவன், தரிசனம்=காட்சி)
|
அக்கினிவருணன் (அக்கினி நிறமானவன்)
|
சிக்கிரகன் (அமிர்த குணத்தான்; சிக்கர்=தேவாமிர்தம், அகம்=மனம்)
|
மரு (மணம் பொருந்தியவன்)

இவன் யோகபலத்தைப்பற்றிக் கொண்டு இமய மலையின் பக்கத்திலுள்ள கலாபக்கிராமத்திலே இப்போதும் யாருக்குந்தெரியாமல்வாசஞ்செய்துகொண்டிருக்கிருன் என்றும், இனிவரும் கிருதயுகத்திலே சூரியகுல க்ஷத்திரியருக்கு இவன் முதல்வனுவான் என்றும் விஷ்ணுபுராணிகா கூறுகிறார்.

மரு
|
பிரசசுருக்கன் (மதுபானத்தைக் [illegible] ; பிரசம்=தேவாமிர்தம்)
|
சசந்தி (நல்லழகன்; சந்தம்=அழகு)
|
அமருஷன் ([illegible] உயர்ந்தோன்; அமர்=போர், உச்சம்=உயர்ச்சி)
|
[illegible]

சகசவான் (சத்தியமேபெருமையாகக்கொண்டவன்; சகசம்=சத்தியம், வான்=பெருமை)
|
விசவபவன் (பூமிக்குச்சிவன் போன்றவன்; விசவம்=பூமி, பவன்=சிவன்)
|
பிறைகதபாலன் (இளம்பிறைபோன்ற அழகனும், கோபியுமாகிய புத்திரன்; கதம்=கோபம்)

7. சூரிய குலத்திலுதித்த கபிலையரசர்: புத்தமதம் ஸ்தாபித்த கௌதமபுத்தர்.

கௌதமபுத்தர் சூரிய வம்சத்தைச் சேர்ந்த சத்திரியனாகிய இக்ஷுவாகு மகாராஜன் மரபில் தோன்றியவர். இவருடைய குலத்தை விளக்கிக்காட்டும் கதையானது ஜே. டால்பாய் உவீலர் அவரை (J. Talboys Wheeler) இயற்றிய இந்துதேச சரித்திரம் என்னும் புஸ்தகத்தின் 102முதல் 105-வரையுள்ள பக்கங்களில் பார்க்கலாம். அக்கதைவருமாறு:—

"பூர்வகாலங்களில் கோசலை நாட்டிலே இக்ஷுவாகு வென்னும் பெயர்கொண்ட கீர்த்திபெற்ற அரசனொருவரிருந்தார்; அவருக்கு நான்கு குமாரரும் ஐந்து குமாரத்திகளுமிருந்தார்கள். அவருடைய விருத்தாப்பிய காலத்தில் ஒரு இளங்கன்னிகையை மணந்தார்; அவள் வயிற்றிலும் ஒருபுத்திரன் பிறந்தான்; இராஜாவானவர் இளைய ராஜாத்தியை அதிகமாய் நேசித்தபடியால் அவளுடைய குமாரனை இளவரசனாக்கி, மூத்த சகோதரர் இராச்சியபாரம் செய்கிறதற்கு மார்க்கமில்லாதுசெய்தார். அதனால் இராஜ குமாரர் நால்வரும் தங்கள்சகோதரிகள் ஐவரோடும் இராஜஅரண்மனையை விட்டு நீங்கி, வடதேசம்சென்று, ரோகணி நதியையடைந்து; அங்கேயொரு இராட்சியத்தை ஸ்தாபித்தார்கள். அதற்குக் கபிலைராட்சியம் என்று பெயர். அந்தராட்சியத்துக்கு தங்கள் மூத்தசகோதரியாகிய பிரியை என்பவளை அரசியாக்கி, மற்றும் நான்கு சகோதரிகளையும் நான்கு சகோதரரும் தங்கள் மனையாட்டிகளாக்கினார்கள். அவர்களுக்கு அநேக குமாரரும் குமாரத்திகளும் பிறந்தார்கள். அவர்கள் குமாரருக்கு அதுமுதல் சாக்கியபிரபுக்கள் என்னும் பெயருண்டாயிற்று.

"இதன் பின்பு பிரியை என்னும் அரசி குஷ்டரோகியானபடியால் அவளுடைய சகோதரர்கள் அவளை ரோகிணி நதிக்கு அக்கரையிலுள்ள ஒரு கெபியிலிருக்கச் செய்தார்கள்; அவள் அங்கே குடியிருந்துவந்தாள்.

"இதற்கு மத்தியில் இராமர் என்னும் பெயர்கொண்ட காசிராஜன் ஒருவருக்கும் அதேபிரகாரம்குஷ்டரோகங்கண்டபடியால் அவர் தன்னுடைய ராட்சியத்தைத் துறந்து குமாரனுக்கு மகுடமிருத்தி, பிரியையிருந்த வனத்துக்குச்சென்று, அக்[illegible] கோளிமரத்தின் பொந்தில் வசித்துவந்தார்; அம்மரத்திலிலைகளாவது பட்டையாவது அவருடைய குஷ்டம் நீங்கினது. [illegible] ஒருபுலியின் ஆரவாரத்தையும், [illegible] கேட்டு, அவர் அவ்விடம் சென்று பார்த்து, [illegible] பிரியை பயத்தினால் அரை உயிரா[illegible]

தூக்கிக்கொண்டுபோய்க் கோளிமரத்தில் தாம் குடியிருக்குமிடம் கொண்டு சேர்த்தார். அவளுடைய குஷ்டரோகமும் நீங்கவே அவளை அவர் மணம் புரிந்தார். அவள் வயிற்றிலநேக பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு அது முதல் கோளிபிரபுக்கள் என்னும் பெயருண்டாயிற்று.

"கோளி பிரபுக்கள் பெரியவர்களானபோது சாக்கிய குல இராஜ கன்னிகைகளை மணம்புரிய விரும்பியும், சாக்கிய பிரபுக்கள் உடன்படவில்லை. அக்காலத்தில் கபிலையிலுள்ள இராஜகன்னிகைகள் ரோகிணி நதியில்போய் ஸ்நானஞ்செய்கிறது வழக்கமாயிருந்ததால், கோளிபிரபுக்கள் அக்கன்னிகைகளைக்கண்டு, அழைத்துக்கொண்டுபோய், மனையாட்டிகளாக்கிக்கொண்டார்கள். அதன்பின் கபிலைபிரபுக்களும் கோளிபிரபுக்களும் ஒப்புரவாகி, அது முதல் கபிலையிலுள்ள சாக்கிய குலமும் கோளி குலமும் சம்பந்தங்கலக்கிற வழக்கமுண்டாயிற்று."

இந்த சாக்கிய குலத்தில் சுத்தயோதனன் என்னும் பெயர்கொண்ட அரசனொருவன் தோன்றிக் கபிலையிலரசாண்டுவந்தான்; அவன் கோளி ராஜன் குமாரத்திகளிருவரைவிவாகம்செய்தான். அவர்களில் மூத்தவளாகிய மாயை என்பவளிடம் கௌதம சாக்கிய சித்தார்த்த புத்தன் என்பவர் பிறந்தார். இளையவளாகிய பிரசாபதி கௌதமையிடம் நந்தன் என்னும் குமாரன் பிறந்தான். புத்தன் கோளி ராஜன் மகளாகிய சுபத்திரை யென்னும் இயசோதரையை மணம்புரிந்து இரண்டொருவருஷம் இல்லறம் நடத்தியபின், இராட்சியத்தைத் துறந்து, சன்னியாசம் பூண்டு, புத்தமதத்தை ஸ்தாபித்து, கிறிஸ்துவுக்குமுன் 543-ம் வருஷம் இறந்தார். இவர் பிறந்தது கிறிஸ்துவுக்குமுன் 623-ம் வருஷம். ஆகையால் இவருடைய வயசு 80-வருஷம்.

இவர் விட்டுணுவின் ஒன்பதாவது அவதாரமென்றும் தேவர்களுடைய விரோதிகளுக்குப் பொய்யையுபதேசித்து முத்திவழி சேராதபடி கெடுக்கும்படியாக விட்டுணு இவ்வாறு அவதரித்தார் என்றும் பார்ப்பார் பாகவத புராணத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள்.

8. சூரிய குலத்தில் தோன்றிய விதேக தேசத்தரசர்களாகிய மிதிலாபுரி யரசர்கள்.

(சீதாதேவியார் குலம்.)

சூரியமகாராஜன் பௌத்திரனான இக்குவாகு மகாராஜன் புத்திரர் நூறுபேர்.

"அவர்களில் விகுக்ஷி நிமி தண்டன் என்பவர்கள் முக்கியமானவர்கள். சகுனி முதலிய ஐம்பது பிள்ளைகள் உத்தராபதம் என்கிற வடநாட்டின் அரசராஞர்கள். நாற்பத்தெட்டுப்பேர் தக்ஷிணபதம் என்கிற தென்னாட்டை யாண்டு வந்தார்கள்."

(விஷ்ணுபுராணம், நாலாமம்சம், இரண்டாமத்தியாயம்.)

நிமிச்சக்கரவர்த்திக்குவிதேகன் (அறிவுடையோன்) என்னும்பெயர். ஆகையாலவன் நாட்டுக்கு விதேக தேசம் என்னும்பெயருண்டாயிற்று. அ

வனுடைய குமாரனான சனகனுக்கு மிதியென்னும் ஓர் பேரானதால், அவனரசாண்ட நகருக்கு மிதிலை யென்னும் பெயருண்டாயிற்று. அத்தேசத்தரசர்கள் குலவிளக்க அட்டவணையாவது :—

இக்குவாகு
|
மிதி என்னும் வித்தகன்
|
சனகன் என்னும் மிதி
|
உதகவசு (பூமியிற்செல்வன் ; உதகம்=பூமி, வசு=செல்வம்)
|
நந்திவர்த்தனன் (சிவபூசையி[illegible]த்திசெய்பவன், நந்தி=சிவன்)
|
கேது (விருதுக்கொடி)
|
தேவரதன் (தேவர்களுக்கு இனிமையானவன், இரதம்=இனிமை)
|
பிருகுதுத்தன் (அமுதகுல பால்போன்றவன்; பிருகு=பனங்கிழங்கு, துத்தம்=பால்)
|
மகாவீரியன் (கொடியகாளி போன்றவன், வீரி=காளி)
|
சுதிறுதி (சங்கீதத்தில் வல்லவன் ; சுதி=சங்கீதசுருதி, உறுதி=வலிமை)
|
திரட்டகேது (அநேகவிருதுக்கொடிகளையுடையவன் ; திரட்டம்=கூட்டம்)
|
அரியசன் (அமுதகுல பிரமன்)
|
மரு (மணம்பொருந்தியவன்)
|
பிரத்தியக்கன் (மேனாட்டில் பிறந்தவன், பிரத்தியக்கம்=மேற்கு)
|
கிருதிரதன் (யாகத்தின் மேல்விருப்புற்றவன் ; கிருது=யாகம், இரதம்=ஆசைப்பெருக்கம்)
|
தேவமீட்டன் (தேவர்களை மீட்டவன்)
|
விபுதன் (அறிஞன், சான்றோன்)
|
மகாதிருதி (மகாலக்குமியை யிருப்பிடமாகக் கொண்டவன், திரு=இலக்குமி)
|
கிருதிரதன் (யாகத்தின் மேல் விருப்புற்றவன்)
|
மகா[illegible] ([illegible])
|
[illegible] ([illegible])
|
இ[illegible]ன்

இருகரோமன் (செவ்வையான கொண்டையன்; இருச=செவ்வை)

சநகன் என்ற சிரத்துவசன் (தகப்பன்) (சிரம்=அழகு)

குசத்துவசன் (குசம்=தருப்பைப்புல்)
N. B. இவன் சாங்காசியபட்டணத்துக்கரசன்.

சீதை என்னும் சாநகி.

பானுமான் (சந்திரனைப்போன்ற கீர்த்தியுடையவன்)

சத்தியமன்னன்

சுசி (வெண்மை).

ஊர்ச்சன் (கார்த்திகை மாதம் பிறந்தவன்; ஊர்ச்சம்=கார்த்திகை)

சதத்துவசன் (சதம்=பத்து, துவசம்=கொடி)

கிருதி (யாகஞ்செய்பவன்; கிருது=யாகம்)

இரஞ்சனன் (இரு=இரட்டிப்பு; அஞ்சனம்=கறுப்பு)

புரைசித்து (மேலான அறிவுடையவன்; புரை=உயர்வு, சித்து=அறிவு)

அரிட்டநேமி (தேவாமிர்தக்கடல்; அரிட்டம்=தேவாமிர்தம், நேமி=கடல்)

சுருதியாயு (வேதம் ஆராய்ந்தவன்; சுருதி=வேதம், ஆயு=ஆய்ந்தோன்)

சுபாரிடன் (நல்ல பூமிக்கரசன்; சு=நல்ல, பாரிடம்=பூமி)

சிருஞ்சையன் (அழகிய அவந்தி நகரில் பிறந்தோன்; சிர்=அழகு, உஞ்சை=அவந்தி)

சேமாவி (இன்பவாசனை; சேமம்=இன்பம், ஆவி=வாசனை)

அனேனசு (தாய்க்குப் பிரியமானவன்; [illegible]=விருப்பம்)

பௌமரதன் (செவ்வாயிற் பிறந்த தேர்வல்லோன்; பௌமன்=செவ்வாய், இரதம்=தேர்)

சத்தியரதன் (சத்தியவானுடைய தேர்வல்லோன்)

உவாகு (இளையவன்)

[illegible] (உவாகுவின் [illegible]; [illegible]=அழகு)

சுவாகதன் (கிள்ளைபோல் [illegible]; சுவாகதம்=கிள்ளை)

சுவர்க்கன் (சுவர்க்கமேனியான்; சுவர்=சுவர்க்கம், அங்கம்=மேனி)

[illegible] (சுவர்=சுவர்க்கம், [illegible]=வலிமை)

சுவர்ச்சசு (சுவர்க்க ஆராதனை செய்பவன்)

சுபட்டன் (சுபம்=மங்களம், அட்டம்=சஞ்சாரம்)

சுசுருதன் (சு=நன்மை, சுருதி=வேதம்)

சயன் (சயம்=வெற்றி)

விசயன் (அமுசகுலத்தவன், விசயம்=பகைவெல்லும்)

இருதன் (இருது=பருவம்)

சுநயன் (நல்ல நியாயாதிபதி, சு=நல்ல, நயம்=நீதி)

வீதிகவ்யன் (வீதியில் காட்டுப்பசு கட்டுகிறவன், கவ்யம்=காட்டுப்பசு)

திருதி (இக்குபூமியை இருப்பிடமாகக் கொண்டவன்)

பகடாசன் ([illegible], பகடு=மேன்மை)

கிருதி (யாகஞ்செய்வோன்)

என்பவர்களே. இவர்கள்தான் சூரியகுலத்திலுதித்த மிதிலையரசர்.

9. சூரிய மகாராஜனுற்பத்தியைப்பற்றிப் புராணங்களும் இதிகாசங்களும் கூறுகிற வண்ணம் சந்திரமகாராஜனுற்பத்தியைப்பற்றி மகாபாரதத்தில் அவர் அட்டவசுக்களில் ஒருவர் என்றும், விட்டுணு புராணத்தில்சோமன் என்னப்பட்ட சந்திரமகாராஜன் பிரமனின் குமாரனாகிய அத்திரி பிரசாபதியின் குமாரனென்றும் கூறியிருக்கிறது.

"And *Brahma* had another son named Manu. And *Manu* had a son of name Prajapati. And the sons of *Prajapati* were eight and were called the *Vasus* whom I shall name in detail. They are Dhara, Dhruva, *Shoma*, Aha, Anila, Anala, Pratyusa, and Prabhasa. These eight are known as the 'Vasus'. Of these, Dhara and the truth-knowing Dhruva were born of Dhumra; *Chandrama* (*Shoma*) and Shasana (Anila) were born of the amiable Shasa; Aha was the son of Rata; and Hutashana (Anala) of Shandilya; and Pratyusha and Prabhasa were the sons of Prabhata."

(*Vide* Protap Chundra Roy's Translation of the Mahabharata, Adi Parva, Section LXVI.)

"And by *Atri*, Anasuya gave birth to three sons untouched by sin named *Soma*, Durbasa and the Sage Dattatreyo."

(*Vide* Translation of Vishnupuranam by Manmatha Nath Dutt, M. A., Part I, Section X.)

இக்குலத்திலுதித்த முக்கியமான இராச [illegible]

10. சந்திரகுலத்தவரான காசி ராஜாக்கள்.

பிரமன்
|
அத்திரிபிரசாபதி
|
சந்திரமகாராஜன்
|
புதன்
|
புரூரவன்
|
ஆயு (ஆய்ந்தோன், அறிவுடையோன்) | அமாவசு | சருதாயு | சதாயு | அயுதாயு
|
(ஆயுவின் மக்கள்:) நகுசன் | சத்திரவிருத்தன் (ஆயுதவித்தையில் வல்லவன். சத்திரம்=சக்கிவேல், அம்பு; விருத்தம்=மூப்பு) | இரம்பன் | இஜி | அனேனசு
|
(சத்திரவிருத்தன் மகன்:) சுகோத்திரன் (நற்குடிப்பிறந்தோன்)
|
(சுகோத்திரன் மக்கள்:) காசன் (காசம்=பொன்) | கிருதசமிதை.
|
காசிராஜன் இவன் காசியை ஆண்ட முதலரசனென்று விட்டுணு புராணம் கூறுகிறது.
|
தீர்க்கதமசு (தீர்க்கம்=நீளம்; தமசு=இருட்டு)
|
தனுவந்தரி (வில்வித்தையின் முடிவுகண்டவன்; தனு=வில், அந்தரம்=முடிவு) இவன் வைத்திய சாஸ்திரங்களுண்டு பண்ணினான் என்று விட்டுணு புராணம் கூறுகிறது.
|
கேசிமதன் (கேசி=திருமால், மதன்=அழகன்)
|
வீமரதன் (வீமம்=பயங்கரம், இரதம்=தேர்)
|
தேவதாசன்
|
பிரதர்த்தனன் (சேனையாளன்; பிரதம்=சேனை) இவனுக்கு சத்ருசித்து என்றும், வத்சன் என்றும், சத்தியத்வசன் என்றும், குவலயாசுவன் என்றும் பெயர்
|
அழற்கண் (அழல்=நெருப்பு, கண்=நேத்திரம்)
|
சந்ததி (அழகன். சந்தம்=அழகு)
|
[illegible]

சுநீ[illegible] (நல்ல நீதிமான், சு=நல்ல, நீதம்=நீதி)

சுகேது (நல்ல விருதுக்கொடியுடையவன்)

தருமகேது (தருமமே விருதுக்கொடியாகவுடையவன்)

சத்தியகேது (சத்தியமே விருதுக்கொடியாக வுடையவன்)

விபு (கடவுள், கருத்தா)

சுவிபு (இனியகடவுள்)

[illegible]மாரன் (நல்லபுத்திரன்)

திரட்டகேது (திரட்டம்=[illegible]ம்)

வயானகோத்திரன் ([illegible]னன்=வலியவன்; சத்திரியகுலத்தவன்)

பார்க்கன் (பூமியைப் பாதுகாப்பவன்; பார்=பூமி)

பார்க்கபூமின் (பூமிக்கு இலக்குமிபோன்ற[illegible]ன்; பார்=பூமி, பூமின்=இலக்குமி).

11. சந்திர குலத்திலுதித்த அங்கிரி குலம்.

பிரமன்

அத்திரி

சந்திரன்

புதன்

புரூரவன்

ஆயு — [illegible] (அமானவசு) (அளவில்லாச்செல்வன்) — சுருதாயு — சதாயு (சதியாயு) — அயுதாயு

[illegible] (அமானவசு) (அளவில்லாச்செல்வன்)

வீமன் (பயங்கரமானவன், வீமம்=பயங்கரம்)

காஞ்சனன் (பொன்னிறமானவன்; காஞ்சனம்=பொன்)

சுகோத்திரன் (நற்குடிப்பிறந்தோன்)

[illegible] (தாய்க்கருமையானவன்; சங்கி=தாய்)

[illegible] (புகைபடைத்தன்; சுமம்=பூ).

[illegible]

அச்சகன் (பயங்கரமானவன் ; அச்சம்=பயம்)
│
பாலகாசன் (பொன்னிறமான சிறுவன் ; காசு=பொன்).
│
குசன் (தருப்பைப்புல் நாதன்)
│
குசாம்பன் (குசனுடைய அழகிய நக்ஷத்திரம் ; குசம் + அம் + பம்)
│
காதி அல்லது கௌசிகன் (அமிர்தநாதன் ; காதம், கௌசை=தேவாமிர்தம்)
│
(பெண்) சத்தியவதி — விசுவாமித்திரன் (விசுவம்=உலகம், மித்திரன்=சிநேகிதன்)
│
சமிதக்கினி
(யாகவிறகைத் எறிக்கும் அக்கினி; சமிதை=யாகவிறகு)

இந்த சமிதக்கினி யென்பவர் சூரியகுலத்தில் தோன்றிய இக்குவாகுவின் வம்சத்தானன இரேணு (அணு) வென்னும் அரசனுடைய மகளாகிய இரேணுகை யென்பவளை விவாகஞ்செய்து பரசுராமன் (மழுவாயுதமேந்திய அழகன் : பரசு=மழு, இராமம்=அழகு) என்பவரைப் பெற்றான். பரசுராமர் சேரநாட்டு முதலரசனானார் (First Travancore King). இவர் சமிதக்கினியின் குமாரனானபடியாலும், அநேக க்ஷத்திரிய குலங்களை அக்கினியைப்போல் பட்சித்தவரானபடியாலும் இவர் குலத்துக்கு அக்கினிகுலம் என்னும் பெயருண்டாயிற்று.

12. சந்திர குலத்து யதுக்களென்றும் விருட்ணிகள் என்றும் பெயர் பெற்ற யாதவர்கள்.

பிரமன்
│
அத்திரி
│
சந்திரன்
│
புதன்
│
புரூரவன்
│
ஆயு — அமாவசு — சுருதாயு — சதாயு — அயுதாயு

அமாவசு = அக்கினிகுலம்

ஆயு
│
நகுசன் — சத்திரவிருத்தன்

சத்திரவிருத்தன் = காசிராஜாக்கள்

நகுசன்

- யயாதி (சந்தேக அயிர்ககாதன்)
- சம்யாதி (அன்புள்ள அயிர்தகாதன்; சம்=அன்பு)
- வியாதி (வேறுபாடுள்ளவன், வியாதம்=வேறுபாடு)
- இருதி (யாகஞ்செய்வோன்)

யயாதி

- யாது (அமிர்தம்)
- துருவவசு (அசையாச் செல்வன்)
- துருக்கியு (துருக்கம்+ஆயு; மலைமேல் கட்டப்பட்ட கோட்டைக்குச்சமானமான ஆய்க்கோன்)
- அன்னு (தாய்க்கு அருமையானவன்; அன்னை=தாய்)
- புரு (புருவ அழகன்; புரு=புருவம்)

யாது

- சகசரசித்து (சகம்=பூமி, சரம்=மாலை, சித்து=அறிவு)
- குரோட்டு (கரித்தன்மையன், குரோட்டம்=நரி)
- நளன் (தாமரை மலர்போன்றவன்; நளம்=தாமரை)
- நகுசன் (இகழ்பவன்)

சகசரசித்து
|
சதசித்து (சதம்=நிலைமை)
|
கேகயன் (கேகயம்=மயில்)
|
தருமன் (நீதிமான்)
|
தருமநேத்திரன் (நேத்திரம்=கண்)
|
குந்தி (தேவாமிர்தம்)
|
சகாரசித்து
|
மகிழமன் (களிப்புற்ற மேன்மகன்) N. B. இவன் மாகிழமதி (Mahishmati) என்னும் பட்டணம் உண்டுபண்ணினான்.
|
பத்திரசிரேணியன் (பத்திரம்=அழகு, சிரேணி=ஒழுக்கம்)
|
துர்த்தமன் (விடம்போன்ற மேன்மகன்; துர்த்தம்=[illegible] மை)
|
தனகன் (செல்வன்; தனம்=பொன்)
|
கிருதவீரியன் (யாகஞ்செய்பவன், காளிக்கு [illegible]னவன்)
|
அர்ச்சுனன் (பொன் நிறமானவன், அரிச்சனம்=பொன்)
N. B. இவன் தான் கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன்.

அரிச்சுனன்

சூரன் (படைவீரன்) | சூரசேனன் (வீரசேனையுடையவன்) | விருட்சசேனன் (விருட்சக்கொடி பெற்றசேனையையுடையவன்) | மது | சயத்துவசன் (வெற்றிக்கொடி மன்னன்)

தாளசங்கன் (தாளம்=ஊக்கம், முயற்சி; சங்கு=படைக்கலம்)

பரதன் (மேலானவன்; பர=மேலான)

விருட்சன் (விருட்சம்=மரம்)

மது

இக்குலத்தவர்கள் தான் மதுக்கள் என்னும் யாதவர்.

13. சைத்தியர் என்னப்பட்ட யாதவ ராஜாக்கள்.

சைத்தியர் என்றால் குளிர்ச்சிபொருந்திய தேசத்தரசாகளென்று பொருள் (சைத்தியம்=சீதத்தன்மை). அவர்கள் சந்திரகுலத்தில்தோன்றிய யாதுமகாராஜன் குமாரனை குரோட்டுவினுடைய மரபினர். அவர்கள் குலவிளக்க அட்டவணையாவது:—

சந்திரமகாராஜன்

ஆயு

நகுசன்

யயாதி

யாது

சகசரசித்து = மதுக்கள் என்னும் யாதவர். | குரோட்டு | நளன் | நகுசன்

துவசநீவான் (துவசம்=விருதுக்கொடி, நீவான்=மானுமி)

சவாதி (இவிவவன், சுவாதி=இத்திப்பு)

உருஞ்சங்கு (உரும்=அச்சம், சங்கு=நெற்றி)

சித்திரரதன் (அழகிய தேர்வல்லோன், சித்ரம்=அழகு, இரதம்=தேர்)

சசிபிந்து (சந்திரகுலத்தவன், சசி=சந்திரன்)

பிரிதிசிரவந்தி

பிரிதிகீர்த்தி (புகழ்ச்சியில் விருப்புற்றவன்)
|
பிரிதிதமன் (உறவினருக்குப்பிரியமானவன்; தமர்=உறவினர்)
|
உசானன் (ஆராய்பவன், உசாவுதல்=ஆராய்தல்)
|
சிதம்பு (ஞானி; சிதம்=ஞானம்)
|
உருக்குமகவசன் (உருக்கும்=பொன், கவசம்=அங்கி)
|
பராவிருத்தி (வெறுப்புள்ளவன்)
|
சயமகன் (சயம்=வெற்றி)
|
விதர்ப்பன் (விதர்ப்பு=வெற்றி, போர், அச்சம்)

கிருதன் (கிருது=யாகம்) | உரோமபாதன் (காலில் மயிருள்ளவன்) | கேசிகன்

உரோமபாதன்
|
பப்புரு (கீர்த்திபெற்றவன், பப்பு=புகழ்ச்சி)
|
திருதி (திரு=இலக்குமி, செல்வம்)
|
கேசிகன் (நிறைமயிருள்ளோன்)
|
சேதி (செந்நிறமானவன், சேது=சிவப்பு)

இவனுடைய சந்ததியில் பிறந்தவர்களுக்குச் சைத்தியர் என்று பெயர். இந்தச் சேதி அரசன் மரபில் தோன்றிய தமகோசன் (அதிகக்கருப்பன்; தமம்=இருள், கோசம்= முட்டை; இருட்டைத்தன்னிலடக்கினவன்) என்பவன் பாண்டவர்கள் தாயாகிய குந்திதேவி (குந்தி=தேவாமிர்தம்) யின் சகோதரியாகிய சுருதிசிரவை (வேதத்தைச் சிரமேற்கொண்ட செல்வி) என்பவளை மணம்புரிந்து சிசுபாலனைப்பெற்றான். இவன் கிருட்டிணமூர்த்தியால் சங்கரிக்கப்பட்டான்.

11. சாத்துவதர் என்னப்பட்ட யாதவராசாக்கள்.

சாத்துவதர் என்னும் பெயருக்கு வலியவர்கள் என்று பொருள். சத்து-வலிமை; சாத்தியம் என்றனும் [illegible] வலியது என்றே பொருள். சத்துவதன் என்னும் சந்திர[illegible] மரபினனா[illegible]னால் இப்பெயர் அவர்களுக்குண்டாயிற்று. சைத்தியர் குலவிளக்க அட்டவணையில் காம[illegible]ட்டியவனானம் சந்திரகுலத்தவனான யாதுமகாராஜன் குமாரனாகிய குரோஷ்டு என்பவன் மரபில் தோன்றிய விதர்ப்பன் எனனும் அரசனுடைய குமாரர்களில் உரோமபாதன் மரபில் சைத்தியர் தோன்றினார்கள். உரோமபாதனுடைய உடன் பிறந்தவனாகிய கிருதன் பரம்பரையில் சாத்துவதர் தோன்றினார்கள். அவர்கள் குலவிளக்க அட்டவணை:—

சந்திரமகாராஜன்
||
யாது
|
சகஸ்ரசித்து || மதுக்கள் என்னும் யாதவர் — குரோஷ்டு || விதர்ப்பன்
|
கிருதன் (கிருது = யாகம்) — உரோமபாதன் || வைதர்ப்பியர் என்னும் யாதவர்
|
குந்தி (தேவாமிர்தம்)
|
திருட்டி (கண்ணைப்போல அருமையானவன்)
|
விதிருதி (விதி + உறுதி ; வேதாகமங்களில் விதிக்கப்பட்டவற்றில் உறுதியுள்ளவன்)
|
தசாருக்சன் (சிவிகையிற் செல்லும் அமிர்தநாதன்; தசம் அல்லது தசா = சிவிகை. அருக = தேவாமிர்தம்)
|
வியோமன் (வியோமம் = ஆகாயம்)
|
[illegible]தயன் (நிமம் + உதயன் ; நிமம் = ஒளி, உதயன் = சூரியன்)
|
விகிர்தி (வேறுபாடுள்ளவன் ; விகிர்தம் = வேறுபாடு)
|
வீமரதன் (வீமம் = பயங்கரம் ; பயங்கர ரதவீரன்)
|
நவரதன் (நவம் = ஒன்பது)
|
தசரதன் (தசம் = பத்து)
|
சகுனி (சகுனம் பார்ப்பவன்)
|
காம்பி (சஸ்திரம்)
|
தேவரதன் (இரதம் = இனிமை) தேவர்களுக்குப் பிரியமானவன்.
|
தேவக்ஷத்திரன் (க்ஷத்திரம் = யாகம், பாணம், கைவேல், வெண்குடை)
|
மது (தேவாமிர்தம்)
|
குருவம்சன் (மேன்மக்கள்குலத்தவன்)
|
அனு (நாய்க்கருமையானவன் ; அனு = நாய்)
|
புருஹோத்திரன் (குதிரைச்செல்வன் ; புருவம் = குதிரை, ஹோத்திரம் = செல்வம்)
|
அ[illegible]

அஞ்சனன் (கறுப்பன்னன்; அஞ்சனம்=கறுப்பு)
|
சத்துவதன் (வலியவன், சத்துவம்=வலிமை)

இவனாலே தான் இக்குலத்தவர்க்குச் சாத்துவதர் என்னும் பெயருண்டாயிற்று. இந்தச்சத்துவதன் மரபிலுதித்த மற்றும் யாதவக்குலங்களில் கீர்த்தி பெற்ற குலத்தவர்கள் மூவர்:—

1. போசர் என்னப்பட்ட யாதவராசாக்கள்.
2. சேய்நேயர் என்னப்பட்ட யாதவராசாக்கள்,
3. கிருட்டிணமூர்த்தியின் குலத்தவர்கள்.

15. போசர் என்னும் யாதவர்கள். போசர் என்னப்பட்டஇவர்கள் சத்துவதன் குமாரர் ஏழு பேரில் ஒருவனாகிய மகாபோசன் (போசன்=செல்வன்) என்பவன் வமிசத்தில் தோன்றியராசாக்கள். அவர்கள் இராஜதானிக்குப் பெயர் மிருதிகாவு (மிருதி=தரும நூல், காவு=காத்தல்).

16. சேய்நேயர் என்னும் யாதவர்கள். சேய்நேயர் என்றால் செந்நிறம் பொருந்திய நல்லவர்கள் என்று பொருள் (சேய்=சிவப்பு, நேயம்=நன்மை). அவர்கள் சத்துவதன் குமாரர்களிலொருவனாகிய விருட்சணி (மா அழகன்) என்பவன் குலத்தில தோன்றினார்கள். அக்குலத்தை விளக்கிக் காட்டும் அட்டவணை:—

சத்துவதன் (வலியவன்)
|
விருட்சணி (கட்டழகன்)
|
சுமித்திரன் (நல்ல சிநேகிதன்)
|
அன்னை பிரியன் (தாய்க்குப் பிரியமானவன்)
|
சின்னி (சிறியவன்; சின்னம்=சிறுமை)
|
சத்தியகன் (சத்தியாகிய பார்வதியைப் போன்ற அகம் அதாவது மனமுடையவன்)
|
சாத்தியகி (சாதிக்கத்தக்கவன்; சாத்தியம்=சாதிக்கத்தக்கது)
|
சஞ்சயன் (கிறைந்தவன்; சஞ்சயம்=கூட்டம்)
|
குணி (வில் வீரன்)
|
யுகந்தரன் (பூமியில் வலியவன்; யுகம்=பூமி, [illegible])

இவர்கள் தான் சேய்நேயர் என்னப்பட்ட யாதவர்கள்.

17. கிருட்டிணன் குல யாதவராசாக்கள். கிருட்டிணமூர்த்தியானவர் சத்துவதன் குமாரனாகிய அந்தகன் (அழிக்கிறவன்) மரபில் தோன்றினவர். அந்தகன் மக்களில் பசமானன் (வாஞ்சையுள்ள மேன்மகன், பசம் = ஆசை, மானம் = மேன்மை) மரபில் கிருட்டிணமூர்த்தியின் தகப்பனாகிய வசுதேவரும் (வசு = பொன்), அவருடைய சகோதரியாகிய பாண்[illegible]

டவர்களின் தாயுமாகிய குந்தி (தேவாமிர்தம்) தேவியும், தோன்றினார்கள். பசைமானன் சகோதரனாகிய குகுரன் (பூமிக்குப் பசுவைப்போல் பிரயோசனமானவன்; கு - பூமி, குரம் - பசு) மரபில் வசுதேவருடைய மனைவியும் கிருட்டிணமூர்த்தியின் தாயாருமாகிய தேவகி (தேவி) யும், கிருட்டிண மூர்த்தியின் மாமனாகிய கஞ்சனும் (கஞ்சா - தேவாமிர்தம) தோன்றினார்கள். அவர்கள் குலவிளக்க அட்டவணை :—

[..]த்துவதன் (வலியவன்)
|
அந்தகன் (அழிக்கிறவன்)

பசைமானன்
- விதூரதன் (சந்திரனைப் போலினியவன்; விது=சந்திரன், இரதம்=இனிமை)
- சூரன் (வீரன்)
- சமி (அன்புள்ளவன், சம்=அன்பு)
- பிரதக்கத்திரன் (பிரதம்=ஈகை, சத்திரம்=யாகம்; ஈகையிலும் யாகத்திலும் கீர்த்திபெற்றவன்)
- போசன் (செல்வன்)
- இருத்திகன் (சித்திபெற்றவன்; இருத்தி=சித்தி)
- தேவகருப்பன் (தேவர்களைப்போல் கறுத்தவன்)
- சூரன் (வீரன்)

குகுரன்
- இரட்டன் (நிறைந்தவன்)
- கபோதரோமன் (புறாவைப்போல் மயிருள்ளவன்; கபோதம்=புறா, உரோமம்=புறமயிர்)
- வில்லோமன் (வில்வித்தையில் வல்லவனான யாககாதன்; ஓமம்=யாகம்)
- அன்[..] (தாய்க்குப்பிரியமானவன்)
- ஆ[..]துந்துபி (பிறந்தவுடனே ஆனகம், துந்துபி என்னும் வாத்தியங்கள் முழுங்கப்பெற்றவன்)
- அபிசித்து (அதிக ஞானி; அபி=அதிகம், சித்து=அறிவு)
- புனல்வசு (வளம்பொருந்தியவன்)
- ஆக்கன் (செல்வன்)
  - தேவகன் — தேவகி
  - உக்கிரசேனன் — கஞ்சன்

குந்திதேவி   வசுதேவர்   தேவகி

கிருட்டிணமூர்த்தி

18. துருவவசுக்கள் என்னும் சந்திரகுல அரசர். துருவவசுக்கள் என்றால் அசையாச் செல்வர் என்று பொருள். அவர்கள் சந்திரகுலத்தவனான யயாதி மகா ராஜனுடைய இரண்டாவது குமாரனான துருவவசுவின் சந்ததியார். இவர்கள் தென்னாட்டிலரசாண்டார்கள் என்று கூர்மபுராணத்தில் கண்டிருக்கிறது.

"தென்னக்கிக்கின்றென்னனுகென துருவசுவா"

என்று கூறியிருப்பதாலறியலாம். தென்னன் என்பது பாண்டியகுலப் பெயர். ஆகையால துருவவசுக்கள் பாண்டிநாட்டி லரசாண்டார்கள் என்றறிகிறோம். வடநாட்டில் துருவவசுக்கள குலம் மருத்தனோடு முடிவாகிவிட்டது. அவர்கள் குலவிளக்க அட்டவணையாவது :—



19. காந்தாரகர் (The Princes of Candahar). காந்தாரகர் என்றால் காட்டை வெட்டித்திருத்தி நாட்டையுண்டு பண்ணினவர்கள் என்று பொருள் (காந்தாரம் - காடு). இவர்கள் யயாதி மகா ராஜனுடைய மூன்றாவது குமாரனான துருக்காயுவின் (துருக்கத்துக்குச் சமானமான ஆய்ந்தோன்) மரபினர். அவர்கள் குலவிளக்க அட்டவணை :—

சந்திர மகாராஜன்
||
யயாதி
|
யாது — துருவவசு — துருக்காயு — அன்னு — பூரு

யாது
||
யாதவர்கள்

துருவவசு
||
துருவவசுக்கள்

துருக்காயு
|
பப்புரு (கீர்த்திபெற்றவன், பப்பு=புகழ்ச்சி)
|
சேது (செந்நிறமானவன், சேது=சிவப்பு)
|
ஆர்ப்பதன் (போர்வீரன், ஆர்ப்பு=போர்)
|
காந்தாரகன் (இவனாலே காந்தார தேசமும், காந்தாரகரும் பெயர்பெற்றனர்)
|
சருமான் (க[illegible]ன்)
|
இருதன் (யாக[illegible]ன், இருது=யாகம்)
|
தார்த்தமன் (விளக்கம்போன்ற மேன்மகன், தார்த்தம்=விளக்கம், மன்=மேன்மை)
|
பிரசதன் (அமிர்த[illegible], பிரசம்=தேவாமிர்தம்)
|
சதத்தருமன் (நிலைபெற்ற நீதிமான், சதம்=நிலைமை, தருமம்=நீதி)

20. அங்க, வங்க, கலிங்க, சிம்ம, பௌண்டர தேசாதிபதிகள்.

இந்த ஐந்து நாட்டுக்கதிபதிகளான சந்திரகுலத்தரசர்களானவர்கள் யயாதி மகா ராஜனுடைய நான்காவது குமாரனான அன்னுவின் மரபினர். அவர்கள் குலவிளக்க அட்டவணை :—

சந்திரமகா ராஜன்
|
புதன்
|
புரூரவன்
|
ஆயு
|
நகுஷன்
|

யயாதி

- அனு (அன்னைக்குப்பிரியமானவன்)
- யாது = யாதவர்கள்.
- துருவவசு = துருவவசுக்கள்.
- துருக்காயு = காந்தாரகர்.
- பூரு

அனு

சபாநலன் (ஆலம் வீழைப்போன்ற உபகாரி; சபம்=ஆலம்வீழ், நலம்=நன்மை, உபகாரம்)

காலாநலன் (காலம் + நலன்; காலமறிந்து உபகாரஞ் செய்பவன், சமயோபகாரி)

சிறுசயன் (சிறியவீரன்; சயம்=வெற்றி)

புரஞ்சயன் (இராஜதானியில் வீரன்; புரம்=இராஜதானி)

சனமேசயன் (சனங்களுக்குள் வீரன்)

மகாசாலன் (சிறந்த அமிர்தாதன் அல்லது மேன்மகன், சாலி=தேவாமிர்தம், சால்=மேன்மை)

[illegible] (இரக்கமுள்ளவன்)

திதிக்ஷு (நிலைபெற்றவன்; திதி=நிலைபெறுதல்)

உருக்கத்திருதன் (இரக்கசெல்வன்; உருக்கம்=இரக்கம், திரு=இலக்குமி, செல்வம்)

ஏமன் (பொன்னிறமானவன்; ஏமம்=பொன்)

சுதவசு (நல்லபக்தன்)

பலி (தேவருணவு)

- அங்கன் (அக்கினிமயமானவன், அங்கி=நெருப்பு) = அங்கதேசாதிபதிகள்
- வங்கன் (வெள்ளிநிறமானவன், வங்கம்=வெள்ளி) = வங்கதேசாதிபதிகள்
- கலிங்கன் (போர்வீரன், வலியவன், கலி=போர், வலி) = கலிங்கதேசாதிபதிகள்
- சிம்மன் (சிங்கம்போன்றவன்) = சிம்மதேசாதிபதிகள்
- பாண்டரன் (வெண்ணிறமானவன், பாண்டரம்=வெண்மை) = [illegible] தேசாதிபதிகள்.

இந்த அங்க [illegible] வங்கிசத்தரசர குலமானது அதிரதனோடு முடிவு பெறவே [illegible] அங்கதேசத்தரசனு [illegible] மூன்பிறந்தானாகிய கன்னன் [illegible]

அங்கவமிசம்.

அங்கன்

அன்னபானன் (கவரிமாவைப்போன்ற அமிர்தநாதன்; அன்னம்=கவரிமா, பானம்=தேவாமிர்தம்)

திவிதரன் (புலிகட்டித்தேர் நடத்தவல்லவன்; திவி=புலி, இரதம்=தேர்)

தருமரதன் (நீதியில் பிரியமுற்றவன்; தர்மம்=நீதி, இரதம்=இனிமை)

சித்திரரதன் (அழகிய தேர்வல்லோன்) இவனுக்கு ரோமபாதனென்கிற பெயருமுண்டு.

சதுரங்கன் (காலாள், தேர், பரி, யானை முதலான சதுரங்கசேனையையுடையவன்)

பிருதுவிலக்கன் (பூமிக்கு ஒளிபோன்றவன்; பிருதுவி=பூமி, இலக்கம்=ஒளி)

சம்பன் (திரிமூர்த்திகளைப்போன்றவன்; சம்பு=பிரமன், சிவன், விட்டுணு) இவன் சம்பை நகரைக் கட்டினான்

அரியங்கன் (அமிர்தநாதன், அரி=தேவாமிர்தம், அங்கம்=மேனி)

பத்திரரதன் (அழகிய தேர் வல்லோன்; பத்திரம்=அழகு)

பிருகுத்திறதன் (அமிர்த குல வலியவன்; பிருகு=பனங்கிழங்கு, திறம்=வலி)

பிறக்கதகருமான் (அஞ்சத்தக்க கலைமான்போன்றவன்; பிறக்கம்=அச்சம்; கருமான்=கலைமான்)

பிறக்கதபானு (அஞ்சத்தக்க அமிர்தநாதன்)

பிருகன்மன் (அமுதகுல மேன்மகன்)

சயத்துரதன் (வெற்றிமாலையணிந்த தேர் வீரன்; சயம்=வெற்றி, மாலை)

விசயன் (அமுதகுலத்தவன்; விசயம்=கற்கண்டு)

திருதி (செல்வன்; இலக்குமியை இருப்பிடமாகக் கொண்டவன்; திரு=செல்வம், இலக்குமி)

திருதவிரதன் (செல்வனாகிய தேர்வீரன்)

சத்தியகருமன் (சத்தியமே மேன்மையாகக்கொண்டவன்; கருமை=மேன்மை)

அதிரதன் (அதிர்ச்சியுண்டுபண்ணத்தக்க தேர்வீரன்)

இந்த அதிரதனுக்குப் பின்பு பாண்டவர்களுடைய முன் பிறந்தானாகிய கன்னன் (கன்னல்—கற்கண்டு) அங்கதேசாதிபதியானான். அவன் குமாரன்தான் விருக்கசேனன் (விருட்சகுலசேனாதிபதி). இவர்கள் அங்கதேசாதிபதிகள்.

21. சந்திரகுலத்து பாஞ்சால தேசாதிபதிகள்.

இவர்கள் யயாதி மகாராஜனுடைய குமாரனாகிய பூரு வம்சத்திலுதித்தவர்கள். பூரு வம்[illegible]தவர்களான சந்திரகுலத்தரசர்களில் பாஞ்சாலரும், மகதராட்டரசரும் பஞ்சபாண்டவர்களும் முக்கியமானவர்கள். பாஞ்சாலர் குலவிளக்கமா[illegible]து.

[illegible]ந்திரமகாராஜன்
||
யயாதி
|

பூரு (புருவ அழகன்) | யாது || யாதவர்கள் | துருவச || துருவவசக்கள் | திருக்காயு || காந்தாரகர் | அனு || அங்க, வங்க, கலிங்க, சிம்ம, பவுண்டர தேசாதிபதிகள்.

|
சனமேசயன் (சனங்களுக்குள் [illegible]ரன்)
|
பிராசினவதன் (பழையவழக்கங்களை அழித்தவன்) பிராசினம்=பழமை, [illegible]தன்=[illegible]லைசெய்வோன்
|
பரவீரன் (பகைவர்முன் வீரன்; பர=பகைவர்)
|
மனசியு (பெருமையிற் சிறந்த வாள்வீரன்; மன்[illegible]=பெருமை, அசி=வாள்)
|
பயத்தன் (பால்போன்றவன், களங்கமற்றவன்; பயம்=பால்)
|
சுதியுன்னன் (சங்கீத சுருதியில் மனங்கொ[illegible]டவன்); சுதி=சங்கீதசுருதி, உன்னம்=மனம்
|
பாருகாவா (அமுதகுல மல்லிகை; பாரு=பனைக்கற்கண்டு, காவா=மல்லிகை)
|
சம்பாதி (அன்புள்ள அமுத[illegible]குலத்தவன்; சம்=அன்பு; பாதி=தேவாமிர்தம்)
|
அகம்பாதி (அகத்திலமிர்தம்போன்றவன்)
|
இராடாசவன் (இராட தேசக் குதிரைவீரன்)
|
இரிதியு (ஒழுக்கமுடையவன்; இரிதி=ஒழுக்கம்)
|
இரந்திநாரன். பாரதத்தில் இவன் [illegible]

அப்பரதிர்த்[illegible] | [illegible] (மேன்[illegible]; [illegible]=மேன்மை)
|
கா[illegible] | அவிலன் ([illegible] பெயர்)
|
[illegible]

தாசியந்தன் (குதிரை வீரனாகிய அழகன், தாசி=குதிரை, அந்தம்=அழகு)
|
பரதன் ([illegible]லானவன், பர=மேலான)
|
விதாதா ([illegible]பிரமன்)
|
பவனமணியன் (பூலோகத்தி லழகன், பவனம்=பூமி, மணி=அழகு)
|
விரிகதசேத்திரன் (மிகுந்த கோபியாகிய க்ஷத்திரியன், விரி=விலாசம், கத[illegible]=கோபம், சேத்திரன்=சத்திரியன்)
|
சுகோத்திரன் (நற்குடிப்பிறந்தோன்)
|
அத்தினன் (யானைவீரன், அத்தி=யானை) இவன் அத்தினாபுரியைக் கட்டினான்.
|
அச்சமிதன் (வண்டியை அச்சாகக் கொண்ட அளவாய்க் குடிகளைப் பாதுகாக்கிறவன், மிதம்=அளவு)

நீலன் (நீலம்=கறுப்பு) — இரிகசன்

நீலன்
|
சந்தி (அழகன், சந்தம்=அழகு)
|
சுசந்தி (நல்ல அழகன்)
|
புருடூ (புருடன்=தலைவன்)
|
சகச (உண்மையுள்ளவன், சகசம்=உண்மை)
|
அரியசுவன் (அமுத குலக்குதிரைவீரன் அரி=தேவாமிர்தம்)

இந்த அரியசுவனுடைய குமாரர் ஐவர். அவர்கள் பெயர்களாவன:—

1. முடக்காலன் (இவன் முடவனானபடியால் இப்பெயர் வந்தது)
2. சிரிஞ்சியன் (அழகிய கேடகமுடையவன், சிர்=அழகு; இஞ்சி=கேடகம்)
3. [illegible] ([illegible] அரசன்)
4. பரவீரன் (மேலான வீரன்)
5. கம்பலேயன் (யாவரையும் நடுங்கச் செய்கிறவன், கம்பலே—அச்சம், நடுக்கம்)

அரியசுவன் மக்களாகிய இந்த ஐவருக்கும் பாஞ்சாலர் என்று பெயர். பாஞ்சாலர் என்றால் ஐந்து மேன்மக்கள் என்று பொருள்; [illegible]ன்னார்.

22. சந்திரகுலத்து அத்திஞபுரி யரசர்களாகிய பஞ்சபாண்டவ துரியோதனுதிகள்.

சந்திரகுலத்து அத்திஞபுரி யரசர்களாகிய பஞ்சபாண்டவர்கள் துரியோதனுதிகளின் வம்சவரிசையட்டவணையாவது :—

சந்திரமகாராஜன்
||
யயாதி
|

பூரு	யாது	துருவவசு	துருஹ்யு	அனு
||	||	||	||	||
சுகோத்திரன்	யாதவர்கள்	துருவவசுக்கள்	காந்தாரர்	அங்க, வங்க, கலிங்க, சிம்ம, புவுண்டர தேசாதிபதிகள்

சுகோத்திரன்
|
அத்தினன் (அத்திஞபுரி முதலரசன்)
|
அச்சுமீதன்
|

நீலன்
||
பாஞ்சாலர்

இரிக்சன் (அஞ்சத்தக்க யானை வீரன்; இரிதல்=அச்சம், கசம்=யானை)
|
சம்பரானனன் (சம்பரத்தின்மீது பற்றுள்ளவன், சம்பரம் =எட்டுக்கால் பறவை, ஆனம்=அன்பு)
|
குரு (மேன்மகன்)
|

சுதனுசன்

சந்து (போர்வீரன், சங்கியம்=போர்)
|
சுரதன் (சுரதம்=தேவாமிர்தத்திலிருந்து வழியும் சாரம்)
|
விதுரன் (சந்திரனைப்போலினியவன். விது =சந்திரன், இரதம்=இனிமை)
|
சருவபாமன் (எல்லாக்கவிஞராலும் போற்றப்படும் அரசன், சருவம்=எல்லாம், பா=செய்யுள், மன்=அரசன்)
|
சயசேனை அரவன் (வெற்றிச் சேனையையும் பாம்புக்கொடியையுமுடையவன்)
|
அயுதாயு (10,000 [illegible] சமானவன்)
|
அக்குரோதனன் (சக்குமனி [illegible] பெற்றவன், அக்கு=சக்கு [illegible] உரோதனம்—அழுதல்)
|
இரிக்சன் (அஞ்சத்தக்க யானைவீரன்)
|

இல்லீவன் (ஆசையின்படிகொடுப்பவன், இல் = ஆசை)
|
பாதீபன் (மேலான விளக்கு, சிறந்த அறிவுடையோன்)
|
சந்தனு (சந்தனம்போல் வாசனையுள்ளவன், நற்கீர்த்திமான்)

சந்தனு மகாராஜனுக்குக் கங்காதேவியிடம் பிறந்த குமாரன் வீடு[illegible] அதன் பின்பு சந்தனுவே வதவியாசர் என்னும் ராஜரிஷியின் தாயாகிய ச[illegible]யவதியை மணம்புரிந்தார். அவ[illegible]டம் சந்தனுவுக்குச் சித்திராங்கத[illegible]ம் விசித்திரவீரியனும் பிறந்தா[illegible]கள். விசித்திர வீரியன காசிராஜன் [illegible]க்களாகிய அம்பிகை, அம்[illegible]லிகை என்னும் இருவரையும் மணம்புரிந்[illegible] ஜயரோயாலிறந்தான். [illegible]அப்போது க்ஷத்திரிய ரிஷியாகிய வியாசர் த[illegible] சகோதரனை விசித்[illegible]ரவீரியன் மனைவிகளைச் சேர்ந்து, தன் சகோத[illegible]ன் குலத்தில் சந்ததி வி[illegible]ருத்தியாகும்படி செய்தார். இவ்வாறு அம்பிகை[illegible]டமும், அம்பாலிகையிடமும் முறையே திருதாாட்டிரனும் பாண்டுவ[illegible] பிறந்தார்கள். திருதாாட்டிரனுக்கு துரியோதனன் முதலான 10[illegible] குமாரர் பிறந்தார்கள். அவர்களுக்குத் துரியோதனாதிகள் என்று பெய[illegible] பாண்டுவி[illegible] மனைவிகள் இருவர்—குந்திதேவி, மத்திரைதேவி என்பவர்[illegible]ள. குந்திதேவியிடம் யுதிட்டிரன், வீமன், அருச்சுனன் என்னும் குமாரரும், மத்திரை தேவியிடம் நகுலன், சகதேவன் என்னும் குமாரரும் பிறந்தார்கள். இந்த ஐவருக்கும் பஞ்சபாண்டவர்கள் என்று பெய[illegible]ர். குந்திதேவிக்கு விவாகமாகிறதற்குமுன் பிறந்த குமாரன் கன்னன். இவன் அங்கதேசத்திலரசாண்டான்.

23. சந்திரகுலத்து மத்தநாட்டரசர்.

[illegible]நாட்டரசர்கள் சந்திரகுலத்திலுதித்து அத்தினபுரியைக்கட்டியரசாண்ட அத்தினனுடைய மரபிலுதித்த குரு மகாராஜனுடைய குமார[illegible]லொருவனாகிய சுதனுசன் என்பவன் குலத்தில் தோன்றினவர்கள். அவர்கள் குலவரிசை அட்டவணையாவது:—

சந்திரமகாராஜன்
||
யயாதி
|
புரு || அத்தினன் (அத்தினபுரியாசன்) | அத்சமீடன் (அத்தினபுரி)
யாது || யாதவர்கள்
துருவவசு || துருவவசர்கள்
துருக்காயு || காந்தாரகர்
அனு || அங்க, வங்க, கலிங்க, இப்ம, பவுண்டர தேசாதிபதிகள்.

அத்சமீடன் (அத்தினபுரி)
|
நீலன் || பாஞ்சாலர்
இருக்கன் என்னும் அத்தினபுரியாசன்
|
[illegible]

சம்பராணன் (அத்திருபுரி)

குரு (அத்திருபுரி)

சுதனுசன் (நல்ல குமாரன்) — சந்து (அத்திருபுரி) = அத்திருபுரியரசர்

சுகோத்திரன் (நற்குடிப்பிறந்தோன்)

சியாவனன் (சிங்கக்கொடி வேந்தன், சியம்=சிங்கம், ஆவணம்=[illegible]கொடி)

கிரீடகன் (கிரீடாதிபதி)

உபரிசரன் (உப்பரிகையில் நாடகமுண்டுபண்ணினவன், உபரி=மேல், சாம்=நாடகம்)

விரிகதரதன் (கொடுங்கோபியாகிய இரதவீரன்)

சராசந்தன் (வில்வீரன், சராசனம்=வில்)

சகதேவன் (பூமிக்கரசன்; சகம்=பூமி, தேவன்=அரசன்)

சோமாபி (தேவாமிர்தச் செல்வன்)

சுருதனன் (வேதகாயகன்; சுருதி=வேதம்)

அயுதாயு (10,000 சான்றோருக்குச் சமமானவன்)

நிறைமித்திரன் (நிறை=மாட்சிமை, மித்திரன்=சிநேகிதன்)

சுசேத்திரன் (நல்ல சத்திரியன்)

விரிகதகருமான் (கொடுங்கோபியாகிய சீலமான்)

சேனசித்து (சேனாபதியாகிய அறிவுடையோன்)

சுருதஞ்ஞையன் (வேத அறிவில்லான்; சுருதி=வேதம், அஞ்ஞை=அறிவின்மை)

விப்பிரன் (விபுதன், அறிவுடையோன்)

சுசி (சுத்தம்)

சேமியன் (இனியவன்; சேமம்=இன்பம்)

சுபரதன் ([illegible]ரன்)

[illegible] ([illegible]யோன்)

[illegible] ([illegible] அறிகன்)

திரிசனன் (மூன்று பல் நிரையுடையவன்; திரி=மூன்று, இரசனம்=பல்)

சுமதி (நல்ல அறிவுடையான்)

சுபாலன் (நல்ல புத்தியான்)

சத்தியசித்து (சத்தியமாகிய அறிவுடையோன்)

இரிபுஞ்சயன் (அஞ்சத்தக்க திரண்ட தோளையுடையவன்; இரிதல்=அச்சம், புஞ்சம்=திரட்சி)

இவர்கள்தான் விட்டுணு புராணம் கூறும் மகத தேசத்தரசர்கள்.

இவ்வாறு இருக்குவேதத்தில் சொல்லப்பட்ட க்ஷத்திரியராகிய தேவர்களில் சூரிய மகாராஜன், சந்திர மகாராஜன் என்னும் இரண்டு பெருங்கிளைப் பிரிவு க்ஷத்திரிய குலங்களின் விபரம் விஷ்ணு புராண முதலான நூல்களில் கூறியவற்றை மேலே எடுத்துரைத்தோம். இப்பிரகாரம் மற்றும் தேவர்களுடைய கிளைகளும் இந்நாட்டில் ஒவ்வொரு இடங்களிலரசாண்டார்கள் என்று பூர்வ நூல்கள் கூறுகிறபடியால் இந்தியாவின் பூர்வ இந்திரராஜாக்களின் குலத்தவர்கள்தான் இந்நாட்டின் தேவர்கள் என்று பிரத்தியக்ஷமாய் விளக்குகிறோம்.

—:o:—

VI-வது அத்தியாயம்

—(o)—

பூர்வரிஷிகள் க்ஷத்திரியர்.

1. ரிஷிகளும் பார்ப்பாரும் ஒரே குலத்தவரல்ல; ரிஷிகள் வாக்கு, திரௌபதை சுயம்வரம், புத்தருடைய மனுதர்மசாஸ்திரம். 2. பார்ப்பார் தாழ்ந்த ஜாதியார்; சத்ஜாதியல்ல, சங்கரஜாதி; பார்ப்பான் அறிவுடையோனல்ல, க்ஷத்திரியனே பூர்வத்தில் அறிவுடையோன்; சாந்தோக்கியம், அஸ்வகோஷாபோதிசத்வர், அதர்வணவேதம், பூர[illegible]கனசயவாஸிவாக்கு, அசுவபதி கைகயன்வாக்கு. 3. வேதமேற்படுத்திய ரிஷிகள் க்ஷத்திரியர்; இ[illegible] காசிராஜ[illegible]த்தானான க்ஷத்திரியன்; விசுவாமித்திரர் காதிராஜன் மகனான க்ஷத்திரியன்; அத்திரி, ஆ[illegible] [illegible] குலங்களுக்கு முற்பிதாவா[illegible] [illegible] [illegible] க்ஷத்திரிய [illegible] [illegible] க்ஷத்திரியராகிய இராஜபுத்திரர் என்னும் ஜாதி[illegible] [illegible] முற்பிதா; அங்கிரசர், வசிஷ்டர், பாரத்துவசர் என்னும் [illegible] இக்குலத்து [illegible] [illegible] [illegible] [illegible] சந்திர குலத்தி[illegible] [illegible]

றிய க்ஷத்திரியன். 4. க்ஷத்திரியரின் மூன்று பிரிவு. 5. பார்ப்பார் பூர்வநூல்களிற் செய்திருக்கும் திருத்தப்பாடுகள்; வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், தருமசாஸ்திரங்கள் எல்லாம் பார்ப்பாரால் மாற்றப்பட்டிருக்கின்றன. 6. பார்ப்பான் உயர்ந்த ஜாதியென்று ரூபிக்கவே இத்தன்மையாகப் பூர்வநூல்களைத் திருத்தி எழுதினான். 7. பார்ப்பாரப்பித்தலாட்டங்களுக்குச் சில திருஷ்டாந்தம்; இருக்குவேதம், கூர்மபுராணம், விஷ்ணுபுராணம், நான்குஜாதிகளும் புருஷனிலிருந்து தோன்றின, பிரமனிலிருந்து தோன்றின, க்ஷத்திரியனாகிய சானகனிலிருந்து தோன்றின, க்ஷத்திரியனாகிய வாலியிலிருந்து தோன்றின, என்பதெல்லாம்பொய். 8. பார்ப்பார் ரிஷிகோத்திரத்தாரல்ல; டாலபாய் உவீலர், அஸ்வகோஷர்போதி சத்வர். 9. பார்ப்பார் க்ஷத்திரிய ரிஷிகளைப் பார்ப்பாராக்கிய சில கதைகள்; திருதசயிதையின்கதை, விசுவாமித்திரரைப்பற்றிய இரண்டு கதைகள். 10. க்ஷத்திரியபிராமணர் என்னும் பித்தலாட்டங்கள். 11. பார்ப்பாரைப்பற்றி உவீலர் துரை கூறிய அபிப்பிராயம்; பார்ப்பானல்லாதவன் சூத்திரன் என்பது மகமதிய அரசாட்சி காலத்தில் பார்ப்பானுண்டுபண்ணியபொய், ரோமஷ்சண்டர்டற்று. 12. பார்ப்பான் என்றால் அருத்தம், பார்ப்பான் யார்.

வேதமாதி நூலகள்கூறும் தேவர்கள் எல்லாம் க்ஷத்திரியரென்றும், அரச குலத்தவர்களாகிய ஆரியரென்றும் பார்த்தோம். பூர்வ நூல்களெல்லாவற்றிலும் ரிஷிகள், தேவர்களாகிய அரசர்களைப் பார்க்கிலும் அதிக மகிமையாக எண்ணப்பட்டார்கள் எனத் தெரிகிறது. முனிவர்கள் வரவை அரசர்கள் எதிர் பார்த்துச் சென்று தெண்டஞ் சமர்ப்பித்து, அர்க்கிய முதலிய உபசாரங்களால் பூசித்து, திவ்வியாசனங்களிலுட்கார்த்தினார்கள் என்பதாகப் பல நூல்களும் கூறுகின்றன. இவ்வளவு மகிமையாக[illegible]பட்டிருந்த இருடிகள் எல்லாரும் இராஜரிஷிகளென்னப்பட்ட க்ஷத்திரிய ரிஷிகளேயன்றிப் பார்ப்பாரல்ல. டாலபாய் உவீலர்துரை (Talboys Wheeler) எழுதிய இந்து தேச சரித்திரப் புஸ்தகம், 2-வது அத்தியாயத்தில் இவ்விஷயத்தைப்பற்றி எழுதியிருப்பதில், வேதங்கள் கூறும் இருடிகளும் பார்ப்பாரும் ஒரே குலத்தவரல்லவென்றும், இருடிகள் பார்ப்பாரை மிகவும் தாழ்வாக எண்ணி அவர்களை இகழ்ந்து பேசிய [illegible] அகப்படுகிறதென்றும், க்ஷத்திரியரும் பார்ப்பாரை மிகவும் இழிவாக எண்ணினார்களென்[illegible], பூர்வ மநுதர்மசாஸ்திரத்தில் க்ஷத்திரியரேமுதலாவது சாதி[illegible]க்கிறதென்றும், பார்ப்பார ஜாதியார வேதங்களைக் கூறும் இருடிகள் கோத்திரத்தவர் என்பது உண்மையல்லவென்றும் உவீலர் துரை தெளிவாய் எழுதியிருக்கிறார்.

But the Rishis composed satirical hymns against the Brahmans, which have been preserved to the present day. They com-

pared the penances of the Brahmans to the torpid condition of frogs during the dry season; and they likened the utterances at their sacrifices to the croaking of the same animals. They, moreover, ridiculed the vows of celibacy which were occasionally taken by Brahman sages, by humorous representations of the complaints of neglected wives. *The Kshatriyas,* also, who engaged the Brahmans to officiate as priests, *regarded them with a certain contempt* as mere mercenary sacrificers, who were guilty of an unpardonable assumption if they attempted to establish themselves on an equality of position with the military community.

* * *

This sentiment is fully expressed by the Kshatriyas who were present at the Swayamvara of Draupadi, when they saw that Arjuna wore the garb of a Brahman. * * * In the Buddhist code of Manu the Brahmans rank below the Kshatriyas" (Page 82).

2. இவ்விதமாய்ப் பார்ப்பாரை க்ஷத்திரியருக்குத் தாழ்வாக எண்ணினதற்குப் பலகாரணங்கள் பூர்வ நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

முதலாவது இழிகுலமக்களாகிய சூத்திரரோடு பார்ப்பார் தாராளமாய்ச் சம்பந்தங்கலந்ததாகத் தெரிகிறது. உதாரணமாக, சண்டோக்கிய உபநிடதம் IV-2-ல் ரெயிக்குவர் என்னும் பெயர் கொண்ட பார்ப்பானொருவன் ஜனசுருதி புத்திராயனென்னும் சூத்திரனுடைய மகளை மணம்புரிந்ததாகப் பார்க்கிறோம். மேலும், சங்கராச்சாரியார் காலத்துக்குமுன்னிருந்த அஸ்வகோஷாபோதி சத்வர் ஸமஸ்கிருத பாஷையிலெழுதிய வஜ்ரசூசி என்னும் புஸ்தகத்தில் பார்ப்பார் சுத்த ஜாதிப் பார்ப்பாரல்ல, சூத்திரசம்பந்தமான பார்ப்பார் என்னும் இருஜாதிக்கலப்பு என்று கூறியிருக்கிறார். அவ்வசனம் வருமாறு:—

"7. பிராமண தாய் தந்தையரிடம் பிறந்தவன் பிராமணனென்பீராகில் இதையும் மறுப்பதற்கு இடமுண்டு. எப்படியெனில், பிராமண தாய் தகப்பன் என்றால் கலப்பில்லா பிராமண தாய் தகப்பன்மார்களாக இருக்கவேண்டும். ஆனால் கலப்பில்லா பிராமணன் அரிது. எங்ஙனமெனில், அநேகம் பிராமண ஸ்திரீயை சூத்திரன் புணர்ந்து, பிராமண சந்ததியை விர்த்தி செய்ததாகத் தெரியவருகின்றது. சூத்திரனுக்குப்பிறந்தவன், தாயார் பிராமணத்தியா யிருந்தபோதிலும், ஒருக்காலும் பிராமணனாகான்."

இவ்வாறு இழிகுலமக்களோடு பிராமணர்கள் கலந்தது [illegible] பல புருஷர் வைத்திருக்கும் பெண்களையும் பிராமணர்கள் [illegible] மணம்புரிந்து கொண்டார்கள் என்று காட்டும்படிக்கான வாக்கியமொ [illegible]

று நான்காவது வேதமாகிய அதர்வணவேதம் ஐந்தாவது மண்டலம் 17-8-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—

"பிராமணரல்லாத பத்துப்பேரைப் புருஷர்களாக வைத்துக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீயை பிராமணனொருவன் மணம்புரிவானாகில், அந்த பிராமணனே அவளுக்குப் புருஷனாவான்"

என்று கூறியிருப்பதைக் கவனித்தால், பார்ப்பார் பூர்வத்தில் மிகவும் இழிவானவர்களோடு கலந்து கெட்ட ஜாதி என்னும் மேன்மையை இழந்து இருஜாதி மாயினரானார்களென்றறிகிறோம். முக்கியமாய் இக்காரணத்தினாலே பிராமணர்கள் க்ஷத்திரியரால் மிகவும் இழிவாய் எண்ணப்பட்டு வந்தார்கள்.

இரண்டாவது:—அறிவிலும் பிராமணர் க்ஷத்திரியருக்குத் தாழ்ந்தவர்களாயிருந்தார்கள் என்றே சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. சன்டோக்கிய உபநிடதம் (V-3)ல் சுவேதகேது அருணேயன் என்னும் பார்ப்பானொருவன் பாஞ்சால தேசாதிபதிகளாகிய க்ஷத்திரியர் கூடிய இராஜசபைக்குமுன் வந்தபோது, பரவாகன சயவாலி என்னும் க்ஷத்திரியனவனைப் பார்த்துச் சில கேள்விகளை கேட்டதாகவும் பார்ப்பான் அக்கேள்விகளில் லொன்றிற்காகிலும் விடையளிக்கச் சக்தியற்றவனாய்த் தன் பிதாவாகிய கௌதமனிடத்திற்சென்று ராஜனியன் கேட்ட கேள்விகளைச் சொல்ல, அவனும் அவற்றிற்கு விடையருள அசக்தனாய் க்ஷத்திரியனாகிய பரவாகன சயவாலியிடஞ் சென்று அக்கேள்விகளின் விடையென்னவென்று கேட்க க்ஷத்திரியனவனைப் பார்த்து:—

"கௌதமனே! இந்த ஞானம் இதற்குமுன் ஒரு பிராமணனுக்கும் அறிவிக்கப்படவில்லை. இந்த அறிவு எல்லா வுலகங்களிலும் க்ஷத்திரிய வகுப்பினருக்கேயுரியது."

என்று சொன்னான் என்றும் வாசிக்கிறோம். அதே உபநிடதத்தின் வேறோரிடத்தில் (1-8) க்ஷத்திரியனாகிய பிரவாகனன் பார்ப்பாரிருவருக்கு வாயடைப்பிட்டு அதன் பின்பு பரபிரமத்தைப் பற்றிய அறிவை அவர்களுக்கு உபதேசித்தான் என்று கண்டிருக்கிறது. சதபதபிராமணம் (X-6-1.1)லும் சண்டோக்கிய உபநிடதம் (V-11)லும் க்ஷத்திரியனாகிய அசுவபதிகைகேயன் என்னும் அரசன் பார்ப்பாருள் சாஸ்திரிகள் ஐவருக்கு 'தான்', 'பிரமம்' என்பவற்றைப்பற்றிய அறிவைப் போதித்தான் என்பதாகவும் விளம்பியிருக்கிறது. ஆகையால் பூர்வ காலங்களில் க்ஷத்திரியரே அறிவுடையோராயிருந்தார்கள் என்று தெரிகிறது.

3. மேலும் வே[illegible] க்ஷத்திரியர். இ[illegible] முதல்வேதமாகிய இருக்கு வே[illegible] க்ஷத்திரியரேயன்றி பார்ப்பாரல்ல. [illegible] அவற்றில் மு[illegible] மண்டலமும் பத்தாவது மண்டலமும் எழுதியவர்கள் பார்ப்பன[illegible]மில்லை. மீதியான எட்டு மண்டலங்களும் எழுதியவர்க[illegible] வன:—

2-வது	மண்டல ஆக்கியோன்	கிருதசமிதை
3-வது	,,	விசுவாமித்திரர்
4-வது	,,	வாமதேவர்
5-வது	,,	அத்திரிபிரசாபதி
6-வது	,,	பாரத்துவசர்
7-வது	,,	வசிட்டர்
8-வது	,,	கானவர்
9-வது	,,	ஆங்கீரர்

இந்த எண்மரும் க்ஷத்திரியரென்று விளக்கிக் காட்டுவோம்.

(1) **கிருதசமிதை.** இவர் க்ஷத்திரிய குலத்தவர். காசியிலரசாண்ட முதலரசனாகிய காசிராஜனுக்குச் சிற்றப்பன். காசனுக்குச் சகோதரன். சந்திரகுலத்தவர். முந்தின அத்தியாயத்தில் கூறப்பட்ட காசிராசாக்களட்டவணை பார்க்க (பக்கம் 66).

(2) **விசுவாமித்திரர்.** இவர் சந்திரகுலத்திலுதித்த காதி மகாராஜன் புத்திரன். புரூரவசக்கரவர்த்தியின் குமாரனாகிய அமாவசு பரம்பரையிலுதித்தவர். சந்திரகுலத்தில் தோன்றிய அக்கினிகுல விளக்க அட்டவணை பார்க்கவும் (பக்கம் 68.)

(3) **அத்திரி.** இவர் சந்திரகுலத்து முதலரசனாகிய சந்திரமகாராஜனுடைய பிதாவென்று விட்டுணு புராணம் கூறுகிறது (பக்கம் 65). அருணாசலபுராணத்தில் சூரிய மகாராஜனும் சந்திரமகாராஜனும் அத்திரியின் புத்திரர் என்று கண்டிருக்கிறது (பக்கம் 48). எப்படியாகிலும் அவர் க்ஷத்திரியகுல முற்பிதாவென்றேற்படுகிறபடியால் அவர் க்ஷத்திரியன். மேலும் இவர் பிரமதேவர் குமாரர்களிலொருவரென்று சகல நூல்களும் கூறுகின்றன. பிரமதேவரும் மற்றும் தேவர்களும் க்ஷத்திரியரெனப்பார்த்தோம். ஆகையால் பிரமனுடைய குமாரனாகிய அத்திரி ரிஷியும் க்ஷத்திரிய ரிஷியென்றறியலாம்.

(4) **வசிட்டர்.** இவரும் பிரமனுடைய குமாரன். அத்திரி ரிஷியின் சகோதரன். ஆகையால் க்ஷத்திரியன். இவரைப்பற்றி கம்பராமாயணத்தில் மும்மூர்த்திகளோடு சமமகிமையுடையவராய், தேவர்களும் துதிக்கும் நாலாவது மூர்த்தி என்று கூறியிருக்கிறது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்.

4-வது கவி.

மூவருமொருவனை யுற்றபொருளின் மன்னவன்
காவலிறுணையின் கடவுளாமெனத்
தேவரு முனிவரு முணர்ந்ததேவர்கள்
மூவரினல்வராமுனி வசிட்டனென.

ஆகையால் வசிட்டர் க்ஷத்திரியனாகிய பிரமனுடைய குமாரனானபடியாலும், க்ஷத்திரியனாகிய அத்திரியின் சகோதரனானபடியாலும், க்ஷத்திரியனாகிய தேவர்களிலொருவராகையாலும் க்ஷத்திரியன் என்றறிக

வசிட்ட ரிஷியின் மரபினருக்கு வெகு காலமாக வசிட்டர் என்னும் பட்டப் பெயர் வழங்கினதாகத் தெரிகிறது. எப்படியெனில் விட்டுணு புராணத்தில் சூரியகுலத்தைச் சேர்ந்த இக்ஷுவாகு மகாராஜனுடைய குமாரனாகிய நிமிசக்கரவர்த்திக்கு வசிட்டர் குருவாக இருந்தார் என்று கண்டிருக்கிறது. அந்த இக்ஷுவாகுவிலிருந்து 37-வது தலைமுறையில் தோன்றிய சகரனுக்கும் வசிட்டர் குருவாயிருந்தார் என்றும் அதே புராணம் கூறுகிறது. இராமாயணத்தில் இக்ஷுவாகு மகாராஜனிலிருந்து சுமார் 60-வது தலைமுறையில் தோன்றிய தசரதசக்கரவர்த்தி காலத்திலும் அவருடைய குமாரனாகிய இராமருடைய காலத்திலும் வசிட்டரே குருவாக இருந்தாரென்று கண்டிருப்பதால், அத்திரிரிஷியின் சகோதரனாகிய வசிட்டருடைய மரபினருக்கு வசிட்டர் என்னும் பட்டப்பெயர் வெகுகாலமாக வழங்கியிருக்கிறதென்று அறியலாம். இவர்களெல்லாரும் க்ஷத்திரிய ரிஷிகள். இம்மரபிலுதித்த வேதவியாசருக்கு முனிராசன் என்னும் பெயர் வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதத்தில் சொல்லியிருக்கிறது. அதற்கு ரிஷியாகிய க்ஷத்திரியன் என்று பொருள். அக்கவி வருமாறு:—

விநாயகர் துதி.

நீடாழியுலகத்து மறைநாலொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாகவடமேரு வெற்பாக வங்கூரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

தற்காலத்தில் இராஜபுத்திரர் என்னப்பட்ட க்ஷத்திரியர் தங்களுடைய 36 குலங்களும் வசிட்டருடைய யாகத்திலிருந்து தோன்றிய பரிகாரன், பரமாரன், சாளுக்கியன், சோகன் என்னும் நான்கு க்ஷத்திரியரிலிருந்துண்டான குலங்களென்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஐதிகத்தாலும் வசிட்டர் க்ஷத்திரிய ரிஷி என்றறியலாம்.*

* Thus the primitive Parihara, Pramara, Chalukya and Chohan races are fabled to have sprung from four warriors conjured into existence by the sage Vasishtha from a sacrificial fire he had kindled on Mount Abu. And the 36 Rajput tribes are said to have been derived from these four primitive races."

(Ancient India by Romesh [illegible] V. Chapter II)

வசிட்டருடைய [illegible] க்ஷத்திரிய [illegible] இவர்கள் [illegible] இராஜபுத்திரர், [illegible] க்ஷத்திரிய [illegible] எல்லாம் [illegible]

"*The Rajpoots* or sons of Rajas, are the *noblest and proudest race in India.* With the exception of the Jews there are, perhaps, *no living people of higher antiquity or purer descent.* They claim to be *representatives of the Kshatriyas;* the descendants of those *Aryan warriors* who conquered the Punjab and Hindustan in times primeval. To this day they display many of the characteristics of the heróes of the Maha Bharata and Ramayana. They form a military aristocracy of the feudal type. They are brave and chivalrous, keenly sensitive of an affront, and especially jealous of the honour of their women Their chiefs, when occasion serves, are prepared to lead the life of outlaws, like the Pandava brothers, or to go into exile with the silent haughtiness of Rama Indeed but for the paramount power of the British Government, they would still carry on bloody feuds, or engage in deadly wars which would end only in extirmination * * * * the Rajpoot kingdoms still remain as the relics of the old Aryan aristocracy. * * * * * *

"The following conclusions, however, may be inferred from the facts brought to light by Colonel Tod The Rajpoots were *race of warriors* who formed the ruling class wherever they settled. Proud of a common and *noble descent*, they honoured the women of their nation; and like the conquerors of Britain, kept themselves carefully apart from the people whose lands they had taken. As the Germans were in the time of Tacitus, the Rajpoots are to this day,—a distinct and *unmixed people, like none but themselves*, and easily distinguished by their physical characteristics from other natives of India. But the race deteriorated in consequence of its purity. The Rajpoots were not invigorated by the infusion of other blood, as the English were; but spent their own vigour without renewing it from other sources."

(*Chapter VII of the History of India by J. Talboys Wheeler*).

இவர்களுக்கு ராஜபுத்திரர் என்னும் அரசர் குலத்தவர்கள் இந்தியாவின் பெருமையிற் சிறந்த மேன்மக்கள் என்றும், அவர்களைப் பார்க்கிலும் மேலான பூர்வோத்திரமும் ஜாதிக்கலப்பில்லாமையுமுடையவர்கள் யூதர்கள் என்னும் ஒரே ஜாதியேயன்றி [illegible]ம், அவர்கள் பூர்வீக [illegible]

விக்கொள்ளுகிறார்கள் என்றும், மகாபாரதம் இராமாயணம் என்னும் இதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கும் வீரர்களின் நடவடிக்கையை ஒத்ததாகவே இராஜபுத்திரருடைய நடவடிக்கைகளுமிருக்கிறதென்றும், பூர்வீக இராஜவம்சத்தவர்களைப் போலவே இராஜபுத்திரரும் தைரிய வீரிய சம்பன்னராயும், ஒருவரும் தங்களை எதிர்த்து நிற்கச் சகியாதவர்களாயும், தங்கள் குலப்பெண்களின் மேன்மையைப்பற்றி அதிக வைராக்கியமுள்ளவர்களாயு மிருக்கிறார்களென்றும், சமயாசமயங்களில் அவர்களுடைய தலைவர்கள் பஞ்சபாண்டவர்களையும் இராமரையும்போல வெளிப்பெருமையோடு வனவாசஞ்செய்யச் சித்தமுள்ளவர்களாயிருக்கிறார்களென்றும், பூர்வத்தில் ஜெர்மன்ஜாதியாரிருந்ததுபோல நாளதுவரை இராஜபுத்திரர் ஒரு சாதியோடும் சம்பந்தங்கலவாமல், அவர்களைப்போன்றவர்கள் வேறொருவருமில்லையென்று சொல்லத்தக்கதாய் இருக்கிறார்களென்றும் பற்பல விதமாய் உவீலர் துரை இந்துதேச சரித்திரப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். இத்தன்மைய வீரர்களுக்கு முற்பிதாவாகிய வசிட்டர் க்ஷத்திரிய ரிஷியென்பதற்கையமில்லையென்றறியலாம்.

(5) ஆங்கீரர். இவருடைய உற்பத்தி விவரம் விட்டுணுபுராணம், நாலாமம்சம், 2-வது அத்தியாயத்தில் கண்டிருக்கிறது. இவர் சூரிய மகா ராஜன் குமாரனான மனுசக்கரவர்த்தியின் மக்களில் நாபாகன என்பவர் மரபிலுதித்தவர். இவருடைய குல விபரமாவது:—

சூரிய மகாராஜன்
|
மனுசக்கரவர்த்தி
|
இக்ஷுவாகு = அயோத்தி, மதிலாபுரி யரசராகிய க்ஷத்திரியர்
நாபாகன் — நாபாகன் — அம்பரீடன் — விரூபன் — பரிசதகவன் — இரதிராதன்
செடிற்றன் = வைசாலியரசர்களாகிய க்ஷத்திரியர்
கருசன் = கருசதேசாதிபதிகளாகிய க்ஷத்திரியர்
சருயாதி = ஆனர்த்ததேசாதிபதிகளாகிய க்ஷத்திரியர்

இந்த இரதிராதனுடைய வம்சத்திலிருந்து ஆங்கீரர் என்று [illegible] விட்டுணு புராணிகர் கூறுகிறார். ஆகையால் ஆங்கீரர் க்ஷத்திரியரென்றறிக.

(6) வாமதேவர்
(7) பாரத்துவசர்
} இவ்விருவரும் மேலே கூறிய ஆங்கீரர் மரபினரென்று மச்சபுராணம் 132-வது அத்தியாயம் கூறுவதால் இவர்களும் சூரியகுல க்ஷத்[illegible]

[illegible]ரியர்.

(8) கானவர். இவர் சந்திரகுலத்திலுதித்த க்ஷத்திரியன். விட்டுணு புராணம், நாலாமம்சம், 19-வது அத்தியாயத்தில் இவருடைய வம்சவரிசை விபரம் கண்டிருக்கிறது. பாஞ்சால தேசாதிபதிகளுடைய குலவிளக்க அட்டவணை பார்க்க (பக்கம் 79). யயாதி மகா ராஜனுடைய குமாரனாகிய பூருவம்சத்திலுதித்த இரந்திநாரனுடைய குமாரில் தஞ்சு என்பவர் பரம்பரையில் பாஞ்சாலர், பஞ்சபாண்டவர்கள், துரியோதனாதிகள், மகதநாட்டரசர்கள் முதலான க்ஷத்திரியர்கள் தோன்றினார்களென்னும் விபரம் மேலே கூறினோம். அந்தத்தஞ்சுவின் சகோதரனாகிய அப்பாதீர்த்தனுடைய குமாரன் கானவன். ஆகையால் கானவரும் க்ஷத்திரியரென்றறிக.

ஆகையால் வேதங்களுண்டு பண்ணிய இருடிகள் க்ஷத்திரிய இருடிகள் என்றறிகிறோம். மற்றும் சாஸ்திரங்களுண்டு பண்ணினவர்களும க்ஷத்திரியரே. அவர்களே பூர்வத்திலறிவுடையோரா யிருந்தவர்கள். அவர்களிலிருந்து பார்ப்பார் கற்றுக்கொண்டார்கள். ஆகையால் தேவர்களென்னப்பட்ட க்ஷத்திரிய ஜாதியார் தங்களுடைய புஜபல பராக்கிரமத்தினால் மாத்திரமல்ல, மேலான குல ஒழுக்கத்தாலும், கலப்பின்மையாலும், அறிவாலும் பார்ப்பாருக்கு மேலானவர்களாயிருந்தபடியால், பார்ப்பாரும் மற்றும் குலத்தவர்களும் அவர்களைத் தேவர்களாகமதித்து வந்தார்கள் என்றறிக.

4. இவ்வாறு வேதமாதி நூல்கள் கூறும் க்ஷத்திரியர் மூன்று பிரிவினராயிருந்ததாகத் தெரிகிறது.

(1) தேவர்களாக்கப்பட்ட க்ஷத்திரியர்.
(2) ரிஷிகளாயிருந்த க்ஷத்திரியர்.
(3) யுத்தசன்னத்தரான க்ஷத்திரியர்.

இம்மூன்று பிரிவினராகிய ஆரியரே க்ஷத்திரியர். வேதங்கள் கூறும் முனிவர்கள் க்ஷத்திரிய முனிவர்கள் எனப்பார்த்தோம். அவர்களே இந்து இராஜாக்களரசாட்சி காலத்தில் அரசர்களால் மிகவும் மரியாதையாய் எண்ணப்பட்டு வந்தவர்கள். அநாரிய ஜாதியாராகிய பார்ப்பாரோவெனில், இந்து ராஜாக்கள் செய்துவந்த யாகங்கள் முதலிய கருமங்களுக்குத் தங்கள் முட்டியோடுபோய் பிச்சையெடுத்துக் கொண்டு திரிந்தவர்களேயன்றி அரசர்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களல்ல. உவீலர் துரை எழுதிய பிரகாரம் அரசகுலத்தவரால் அவர்கள் மிகவும் இழிப்பாய் [illegible] வந்தார்கள்; சூத்திர குலத்தவர்களாலே மாத்திரம் அவர்கள் மிகவும் மேன்மையாய் எண்ணப்பட்டார்கள். இப்படியிருக்க இந்து இராச்சியம் அழிந்து மகம்மதிய அரசாட்சி வடநாட்டில் ஸ்தாபிக்கப்பட்டபோது, பார்ப்பாரும் அவர்களுடன் சம்பந்தங் கலந்தவர்களான சூத்திரரும் ஒன்று சேர்ந்து கொண்டு, தங்களிருவகுப்பினரையும் தாழ்த்திய க்ஷத்திரிய குலத்துக்கு விரோதமாய் எழுதி, வேதமாதி நூல்களையெல்லாம் பார்ப்பார் திருத்தி எழுதி, [illegible] ஜாதிகளும் பிரமன் குலத்தவர்களென்றும் க்ஷத்திரியர் மாத்திரம் பிரமன் குலத்தவர்களல்லவென்றும் [illegible] தார்கள்.

5. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலான சகல நூல்களும் திருத்தப்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று சகல வித்துவான்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். திருஷ்டாந்தமாக டாக்டர் உவீலர் துரையியற்றிய இந்துதேச சரித்திரப் புஸ்தகம், I-வது அத்தியாயம், 5-வது பக்கத்தில் வேதங்கள் கூறிய ஐதீகங்கள், வழக்கங்கள் எல்லாம் பார்ப்பாருடைய நோக்கத்துக்கிசையும்படியாக, வேதங்களைப் பார்ப்பார் திருத்தியெழுதி நூதனமான விஷயங்களை அவற்றில் நுழைத்து, அவைகள் வேறுவிதமாய்த் தோன்றும்படி செய்திருக்கிறார்கள் என்று வரைந்திருக்கிறார்.

"The Brahmans have not only modified the Vedic religion but have also garbled and interpolated Vedic literature for the purpose of bringing old Vedic traditions and usages into conformity with later Brahmanical ideas."

அதே அத்தியாயம் 6-வது பக்கத்தில் மகாபாரதம், இராமாயணம் என்னும் இதிகாசங்களைப் பற்றிச் சொல்லிய இடத்திலும், இதிகாசங்களிலுள்ள ஒவ்வொரு சரித்திரமும் ஐதீகமும் பிராமணத்தன்மையுள்ளதாய் வேறுமென்றுமாற்றி எழுதியிருக்கிறது என்று பார்க்கிறோம்.

"Every incident whether it originated in Vedic, Brahmanic, or Buddhist times, *has been reproduced in Brahmanical forms* by compilers who apparently flourished in the age of Brahmanical revival. In other words, *every legend and tradition has been systematically Brahmanized* for the purpose of bringing all the religions, laws and usages of the different races of India into conformity with Brahmanical ideas"

வங்காள தேச சிவிலியனாகிய ரோமேஷ் சந்தர் டத்து என்பவரும், இதிகாசங்களில் பூர்வ சம்பவங்கள் [illegible] இவைகள் [illegible] என்று பிரித்தெடுக்கக் கூடாத விதமாய் அநேக விஷயங்களிடைக்கிடையே நுழைக்கப்பட்டிருப்பதால், உண்மையானவை எவை என்று கண்டுபிடிப்பது எக்காலத்திலும் அசாத்தியமென்பதாகக் கூறுகிறார்.

"With regard to the Epics themselves, it will probably ever remain a hopeless task to separate the portions which are genuine and ancient, from those which are later elaborations." (Page XVIII of the Preface to Ancient India by Romesh Chunder Dutt.)

[illegible] நூல்கள் வேதங்க[illegible] [illegible] தருமசாஸ்திரங்களும் [illegible] இதிகாசங்களு[illegible] [illegible] பார்ப்பார [illegible] [illegible] இருக்கின்றன. [illegible] அவர்கள் [illegible]

"For it has been ascertained that the *Puranas* which exist now were composed in the Pauranik period and have *since been altered* and *considerably enlarged* during many centuries *after the Mahomedan conquest* of India."

(Chap. III, Book IV of "Ancient India" by Romesh Chunder Dutt.)

தரும சாஸ்திரங்களும் இத்தன்மையாகவே மாற்றப்பட்டிருக்கின்றன. பதுமபுராணம் 36 தரும சாஸ்திரங்களிருந்ததாகச் சொல்லுகிறது. மற்றும் நூல்களில் 20 தரும சாஸ்திரங்களிருந்ததாக வாசிக்கிறோம். இவைகளில் விஷ்ணு, அத்திரி, அரித, உசன, ஆங்கிர, இயம, சாம்வர்த்த, பராசர, சங்க, தக்ஷ, வியாச, பிரகஸ்பதி, சடாபத முதலான தரும சாஸ்திரங்களில் ஒவ்வொன்றும் சிறிது காலங்களுக்குமுன் புதிப்பிக்கப்பட்டவைகளேயன்றி, தற்காலத்திலகப்படும் நூல்கள் பூர்வ நூல்களல்லவென்று ரோமஷ் சந்தர் டற்று என்பவர் விபரமாய்க் கண்டெழுதிக் கடைசியாகப் பூர்வ நூல்களெல்லாம் இவ்வாறு திருத்தப்பட்டாகி மாற்றப்பட்டுச் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் கண்டு பிடிப்பதற்குக் கூடாத பிரகாரம் பாழாக்கப்பட்டிருக்கின்றன என்று முறையிடுகிறார்.

"It is thus that our ancient works have been *altered*, *recast*, and *tampered with*, to the delight of the supporters of every new creed and every modern custom, but to the despair of the historian."

இத்தன்மையாக இந்தியாவின் பூர்வ நூல்களையெல்லாம் பார்ப்பான் தொட்டு திட்டுப்படுத்திப் பாழாக்கிவிட்டபடியால், சுமார் 4000-வருஷ காலமாய் அரசாண்ட க்ஷத்திரிய ராஜாக்களுடைய சரித்திரமின்னதென்று தெளிவாய் இந்துமதச் சரித்திரப் புஸ்தகங்களில் எழுதுகிறதற்கு மார்க்கமில்லாமல், இப்[illegible]பாரப் பாதகர்களால் இந்தியாவின் சரித்திரமானது மகமதிய அரசாட்சியிலிருந்து கூறும்படியாக நேரிட்டதைக் கவனிக்கும்போது பூர்வ சரித்திரத்தை மகமதிய அரசாட்சிக்குப் பின்னிட்டுப் பாழாக்கின துரோகியனாகிய பார்ப்பான் ஒரு விசேஷித்த காரணத்தாலே இவ்வாறு செய்திருக்கவேண்டுமென்றனுமானிக்கலாம்.

6. [illegible] க்ஷத்திரியருக்கு தாழ்ந்தவனாக [illegible] அக்குப்பட்டிலும் மேலானவனாக [illegible] க்ஷத்திரியனுக்கு [illegible] பூர்வ நூல்களைத் திரு[illegible] [illegible]க்கும்படி [illegible] [illegible] க்ஷத்திரிய [illegible]

ய, சூத்திர ஜாதிகளுங் க்ஷத்திரியருக்குப் பிறந்தவர்கள்தாமென்றும், அவ்விதமாய் க்ஷத்திரியனிலிருந்துண்டான நான்கு ஜாதிகளில் பார்ப்பான்தான் எல்லாருக்கும் மேலானவன் என்றும், க்ஷத்திரியன் இரண்டாவது ஜாதியேயன்றி முதல் ஜாதியல்லவென்றும், வைசியரும் சூத்திரரும் மூன்றாவது நான்காவது ஜாதிகளென்றும், பார்ப்பான் ரிஷிகளாகிய க்ஷத்திரியர் கோத்திரத்திலுதித்தவனென்றும் பலவாறாக மகமதிய அரசாட்சி காலத்தில் தன் மனதுக்குத் தோன்றியபடியெல்லாம் வேதமாதி நூல்களைப் புரட்டித் திருத்தியெழுதி, சூத்திர ஒத்தாசையால் க்ஷத்திரிய அரசாட்சிக்குப் பின்னிட்டு பார்ப்பான் தலையெடுத்தான். இவ்வாறு பார்ப்பான் நுழைத்த புரட்டு வசனங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

7. நான்கு வேதங்களுக்கு முதல் வேதமாகிய இருக்குவேதத்திலேயே பார்ப்பான் முதலில் கைவைத்து அங்கே ஒரு சுலோகம் சேர்த்திருக்கிறான். அந்த சுலோகத்தில்,

> "புருஷனுற்பத்தியானபோது............பிராமணன் அவனுடைய வாயிலிருந்தும், ராஜானியன் அவனுடைய புயத்திலிருந்தும், வைசியனவனுடைய தொடையிலிருந்தும், சூத்திரனவனுடைய பாதங்களிலிருந்தும் ஜெனித்தார்கள்"

என்று கண்டிருக்கிறது.

> "When they produced Purusha .... the Brahman was his mouth; the Rajanya (prince) was his arms; the Vaisya was his thighs; and the Sudra sprang from his feet."

இந்த சுலோகமானது பிந்தலாட்டமென்று சமஸ்கிருத வித்துவான்களநேகர் கண்டெழுதி யிருக்கிறார்கள். உவீபர் (Weber), மாக்ஸ் முல்லர் (Max Muller), மூர் (Muir) முதலான சமஸ்கிருத வித்துவான்கள் எல்லாம் இது பிந்திய காலத்தில் சேர்க்கப்பட்ட சுலோகமேயன்றி பூர்வ நூலிலிருந்த சுலோகமல்லவென்றெழுதியிருக்கிறார்கள். ரோமேஷ் சந்தர் டற்று என்பவர் எழுதிய 'பூர்வ இந்தியா' என்னும் புஸ்தகத்தில்,

> "இந்த சுலோகத்தின் வசன நடையையும் கருத்தையும் கொண்டு, இது இருக்கு வேத சுலோகங்களுண்டான அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னிட்டு சேர்க்கப்பட்டதென்பது ரூபகாரமாகிறது"

எனவெழுதுகிறார்.

> "The hymn itself was composed *centuries after* the time when the Rig Veda Hymns were generally composed, as is proved by its language and its ideas." (Chapter V, Book I of Ancient India.)

இந்த [illegible] சேர்க்கப்பட்டதென்றே [illegible] டாக்டர் ஜி. சி. எம். பர்ட்உட் (Dr. G. C. M. Birdwood) [illegible] Industrial Arts of India என்னும் புஸ்தகத்தில் [illegible]றிருக்கிறார்.

புருஷனின் வாய், புயம், தொடை, பாதங்களிலிருந்து பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிகள் ஜெனித்ததென்று சொல்லிய பொய்யைப்போல், பிரமனின் முகம், தோள், தொடை, பாதங்களிலிருந்து இந்த நாலு ஜாதிகளுமுண்டாயிற்றென்றும் கண்டிருக்கிறது.

"வேதியர் முகத்தில் வேந்தர் விறல்கெழு துணைத்தோள் வெற்பிற்
றீதறுவணிகர் செம்பொற்குறங்கினிற்சதுர்த்தர்செய்ய
பாதபங்கயத்திலீன்றான்பதுமன்முன்படைத்தமூவ
ரோதியமக்களியாவுமாற்றுதற்குரியராவார்,

என்னும் கூர்மபுராணச் செய்யுளாலுமறியலாம். பிரமதேவரானவர் வாணி, சாவித்திரி, காயத்திரி என்னும் மூன்று மாதுக்களை மணப்புரிந்து அத்திரி, புலத்தியன், தக்கன், பரீசு, அங்கீரன், பிருகு முதலான குமாரரைப்பெற்றிருக்க அவருடைய வாயிலிருந்து பார்ப்பான் ஜெனித்தானென்று சொன்னால் மூளையிரளாதவர்கள் நம்புகிறதற்கிடமில்லை. எப்படியெனில் மனிதர் ஸ்திரிகளின் அபானவாய்வழியாய் ஜெனிக்கிறவர்களேயன்றி புருடருடைய மேல்வாயிலிருந் துற்பத்தியாகிறவர்களல்ல. இப்படியாக பார்ப்பான் பிரமதேவருடைய அபானவாயில் [illegible]ய்த்தோன்றக்கூடாதவனுயிருக்க அவருடைய முகத்திலிருந்து [illegible] தோன்றக்கூடிய தெப்படியென்று பார்ப்பார ஞானிகளே தெளிவிக்கவேண்டியது. பிரமனின் முகத்திலிருந்து பார்ப்பான் தோன்றினான் என்றெழுதிய பொய்யின் மக்கள் பிரமனின் வாயிலிருந்து வெள்ளாடும், மார்பிலிருந்து செம்மறியாடும், இடையிலிருந்து பசுக்களும், பாதங்களிலிருந்து குதிரை, யானை, மான், ஒட்டகம், கோவேறு கழுதைகள் முதலிய மிருகங்களும் ஜெனித்ததென்பதாக விட்டுணு [illegible], 5-வது அத்தியாயத்தில் கூறுவது என்னம்?

"And he created sheep from his breast, and goats from his mouth. And the lord of creatures created kine from his womb and flanks. And he created from his feet, horses, elephants, deer, camels, mules and other species." (Vide Section V, Part I of Vishnu Puranam.)

ஆகையால் பிரமதேவருடைய முகம், தோள், தொடை, பாதங்களிலிருந்து நான்கு ஜாதிகள்ஜெனித்தார்கள் என்பது பார்ப்பாரப் பொய்யென்றறிக.

க்ஷத்திரியனாகிய பிரமதேவரிலிருந்து நான்கு ஜாதிகளும் தோன்றினதென்று சொல்லியதுபோல், வேறே அநேக க்ஷத்திரியரிலிருந்தும் அந்த ஜாதிகளுற்பத்தியாயிற்றென்றும் புராணங்கள் கூறுகின்றன. எப்படியெனில் இருக்கு வேதத்தின் 2-வது மண்டலம் செய்த கிருதசமிதை என்னும் க்ஷத்திரிய ரிஷியின் மரபிலுதித்த சௌனகனிலிருந்து பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிகளாகிய நான்கும் தோன்றினதென்பதாக விட்டுணு புராணமும், வாயு புராணமும் கூறுகின்றன :—

"From Gritsamada was descended Saunaka who originated the four castes." (Vishnu Puranam.)

"The son of Gritsamada was Sunaka from whom sprang Saunaka. In his race were born Brahmans, Kshatriyas, Vaisyas and Sudras." (Vayu Puranam).

இதன்னியில் க்ஷத்திரியனாகிய பூரு மகா ராஜனுடைய சகோதரனாகிய அன்னு என்பவர் மரபிலுதித்த வாலி என்னும் க்ஷத்திரியனிலிருந்து நான்கு ஜாதிகளுமுதித்தார்கள் என்பதாக மச்ச புராணமும், வாயு புராணமுங் கூறுகின்றன.

8. இவ்விதமாகப்பார்ப்பான் தான் க்ஷத்திரியனுக்குப்பிறந்தவன் என்பதாக நூல்களில் மாறுபட்டஞ்செய்துகொண்டு அதன்பின்பு, க்ஷத்திரியருக்குள்ளே ரிஷிகோத்திரமென்னும் மேலான பிரிவைச்சேர்ந்தவனென்பதாகச் சொல்லும்படி இருக்குவேதமுண்டுபண்ணிய எட்டு ரிஷிகளையும் பிராமணராக்கி, அவர்களுடைய கோத்திரத்தில் பார்ப்பார் தோன்றினார்கள் என்று ஸ்தாபிக்கும்படியாய் அநேகதிருத்துப்பாடுகள் செய்திருக்கிறான். பார்ப்பாருற்பத்தியைப்பற்றி டால்பாய் வீலர் துரை, "பார்ப்பாரஜாலங்கள்" (Pretensions of the Brahmans) என்று [illegible] பார்ப்பார் தங்களை எட்டுக்கோத்திரங்களாக வகுத்து, வே[illegible]ய எட்டு ரிஷிகளின் கோத்திரத்திலுதித்தவர்களெ[illegible]லமாகத் தாங்கள் மேன்மையான குருக்களாக மதிக்கப்பட்[illegible]வர்கள்ளென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்களென்பதாய்த் தம்முடைய இந்துதேச சரித்திர புத்தகத்தின் 81-வது பக்கத்தில் வரைந்திருக்கிறார்.

"*Pretensions of the Brahmans.* The Brahmans, however, assert that they are representatives of the ancient Rishis who composed the Vedic hymns, and that they have formed a dominant spiritual hierarchy from time immemorial. They have divided themselves into eight Gotras, or families, corresponding to the eight famous Rishis from whom they claim to have descended."

(*Chapter II of the History of India by Talboys Wheeler*).

அஸ்வகோஷாபோதிசத்வர் சொல்லியபடி சூத்திரருக்குப் பிறந்தவர்களாகிய பார்ப்பார், தங்களை க்ஷத்திரியரிஷிகளுக்குப் பிறந்த பிள்ளைகள் என்றெழுதிவைத்துக்கொள்ளுவது மேன்மையென்றெண்ணியே இவ்விதமான பித்தலாட்டங்கள்செய்திருக்கிறார்கள். அஸ்வகோஷாபோதிசத்வர் சொல்லுகிறபடி பார்ப்பார் சூத்திரத்தன்மைக்கும் பார்ப்பாரத்தாய்க்கும்பிறந்தவர்கள் என்பது உண்மையென் [illegible]லும், அல்லது பார்ப்பார் தாமே புராணமுதலான நூல்களில் புரட்டி யெழுதியிருக்கிறபடி க்ஷத்திரிய ரிஷிகளுக்கும் பார்ப்பாரத்தாய்க்கும் பிறந்தவர்கள் என்றே வைத்துக்கொண்டாலும், இவற்றில் எது உண்மையென்றொப்புக்கொள்ளினும் [illegible] பார்ப்பார் கலப்பில்லாத ஜாதியாரல்ல, இருஜாதி அல்லது பல ஜாதியாருக்குப் பிறந்தவர்களென்றே யேற்படுகிறது. ஆகையால் போதிசத்வர் சொல்லுகிறபடி கலப்பில்லா பிராமணனரிது என்றே." அறிக.

9. ரிஷிகோத்திரமென்று சொல்லும் பார்ப்பார் க்ஷத்திரிய ரிஷிகளைப்பிராமணராக்கிய கதைகளில் சிலவற்றை வரைவோம். இருக்குவேதம், இரண்டாவது மண்டலமெழுதிய கிருதசமிதை என்னும் க்ஷத்திரியன பிராமணனானவிதம் மகாபாரதம், அநுசாசன பர்வத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. விதுகவ்வியன் என்னும் க்ஷத்திரிய ராஜன் சத்துருக்களால் ஜெயிக்கப்பட்டு பிருகு முனிவரின் ஆச்சிரமத்துக்குச்சென்று முனிவரிடம் அடைக்கலம் புகுந்தானென்றும், அப்போது அவ்வரசனுடைய சத்துருக்கள் அவனைப் பின்தொடர்ந்துவந்து பிருகுமுனிவரைக்கேட்க, அம்முனிவரரசனை இரட்சிக்கக்கருதி க்ஷத்திரியர் ஒருவரும் என்னாச்சிரமத்திலில்லை, இங்கிருக்கிறவர்கள் எல்லாரும் பிராமணர் என்று சொன்னார் என்றும், பிருகு முனிவரின்சொல் வீண்போகாதகாரணபடியால் க்ஷத்திரியனாகிய விதுகவ்வியன் உடனே பிராமணனாகி கிருதசமிதை என்னும்பெயர் பூண்டான் என்பது ஒருகதை. பொய்யின் மக்களாகிய பார்ப்பார் பிருகுமுனிவரின் பொய்யால் க்ஷத்திரியன் பிராமணனான் என்பது பொய்யேயன்றி மெய்யல்ல. பிருகுமுனிவரே க்ஷத்திரிய ரிஷி. அத்திரி, வசிஷ்ட, [illegible] முதலான க்ஷத்திரிய ரிஷிகளுக்குச் சகோதரன். ஆகையாலவரே க்ஷத்திரியனாயிருந்தபடியால் க்ஷ[illegible]கில்லையென்று சொல்லுகிறதற்கிடமில்லை; அவர் [illegible]ல்லியிருந்தாலும் அது பொய்வசனம், அத்தன்மைய [illegible] க்ஷத்திரியன் பிராமணனானான் என்பது பார்ப்பாரப் பொய் யென்றறியலாம்.

இதேபிரகாரம் காதிமகாராஜனுடைய குமாரனாகிய விசுவாமித்திரர் என்னும் க்ஷத்திரிய ரிஷி பிராமணரானார் என்பதாக இரண்டு கதைகளுண்டு. க்ஷத்திரியனாகிய விசுவாமித்திரன் வேட்டையாடச் சென்று, வசிட்டருடைய ஆச்சிரமம்வந்துசேர, வசிட்டர் அவரைமரியாதையாய் ஏற்றுக்கொண்டு அவருக்கு விருந்துசெய்து, வசிட்டருடைய பசுவானது கொடுத்த ஆகார, ஆபரணாதிகளை விசுவாமித்திரருக்குக்கொடுத்து அனுப்பும்போது, விசுவாமித்திரர் வசிட்டருடைய பசுவையும் கொண்டுபோகவேண்டுமென்றுகருதி வசிட்டரைக்கேட்க, அவர் மறுத்தபடியால் க்ஷத்திரியன் வெகுண்டு அவரோடுபோர்புரிந்து ஜெயிக்காமல், வசிட்டர் பிராமணரா (!!) யிருப்பதால் அவரை ஜெயிக்க முடியுதில்லையென்றறிந்து, அநேக ஆயிரம் வருஷங்களாகத் தவஞ்செய்து பிராமணரானாராம். இக்கதையினாலே பார்ப்பார் வசிட்டனையும் விசுவாமித்திரரையும் பிராமணராக்கியிருக்கிறார்கள். வசிட்டர் நாம்முன்னே பார்த்தபடி க்ஷத்திரியன், விசுவாமித்திரனும் க்ஷத்திரியன். ஆகையால் அவர்கள் பிராமணரென்பதும் பார்ப்பாரப்பொய்களிலொன்று.

விசுவாமித்திரர் பிராமணரான விதத்தைக்கூறும் வேறோர் கதை யென்னவென்றால் காதிமகாராஜனுடைய குமாரத்தியும் விசுவாமித்திரனுடைய சகோதரியுமாகிய சத்தியவதியென்னும் க்ஷத்திரியபெண்ணை பிருகு முனிவர் மரபிலுதித்த இரிசிகன் என்னும் [illegible] (!) மணம்புரிந்து, தன் மனைவிக்குப் பிராமணத்தன்மை[illegible] உற்பத்தியாகும்படிக்கும், தன்மாமியாருக்கு க்ஷத்திரியத்தன்மை[illegible]

ருந்திய ஒருகுமாரனுற்பத்தியாகும்படிக்கும், இரிசிகன் இரண்டு பாத்திரங்களில் மந்தரிக்கப்பட்ட உணவுகளைக்கொடுத்தாரென்றும், அப்பாத்திரங்களை சத்தியவதியும் அவளுடையதாயும் மாற்றிக்கொண்டபடியால, காதிமகாராஜனுக்கு பிராமணத்தன்மை பொருந்திய க்ஷத்திரியனாகிய விசுவாமித்திரர் பிறந்தாரென்றும், சத்தியவதிக்கு சமிதக்கினியென்பவர் பிறந்தாரென்றும், அந்த சமிதக்கினியென்பவர் இக்குவாகுமரபிலுதித்த க்ஷத்திரியப்பெண்ணாகிய இரேணுகையென்பவளை மணம்புரிய, அவள் வயிற்றில் க்ஷத்திரியத் தன்மை பொருந்திய பிராமணனாக (!!) பரசுராமர் பிறந்து, பிராமணனாயிருந்தும் க்ஷத்திரியத்தன்மையுடையவராய்த் திரிந்தாரென்றும் ஒருகதை. இத்தன்மையாகப் பாத்திரமாற்றால் க்ஷத்திரியனாகிய விசுவாமித்திரர் பிராமணனானாரென்னும் பார்ப்பாரப்பொய்யானது பிரத்தியக்ஷமாகத் தெரிவதால் நாம் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. காதிமகாராஜன் குமாரனாகிய விசுவாமித்திரர் க்ஷத்திரிய ரிஷியேயன்றி க்ஷத்திரியப் பார்ப்பானல்ல. அதுபோல பிருகு முனிவர் குலத்திலுதித்த இரிசிகன், சமிதக்கினி, பரசுராமர்முதலானவர்கள் ரிஷிகோத்திர க்ஷத்திரியரேயன்றி, பார்ப்பார் குலத்தவராகிய க்ஷத்திரியரல்லவென்றறிக. இவ்வித இழிவான பிரயத்தனங்களால் பார்ப்பார் தங்களை யுயர்த்திக்கொள்ளும்படி யெத்தனித்ததைக் கவனித்தாலே, அவர்கள் க்ஷத்திரிய அரசாட்சி காலத்தில் மிகவும் இழிவானவர்களாயிருந்தார்களென்று அறியலாம்.

10. இதேபிரகாரமாக அநேக இடங்களில் க்ஷத்திரிய குலத்தாராகிய ரிஷிகளை க்ஷத்திரிய குலத்திலுதித்த பிராமணர்கள் என்பதாகப் பார்ப்பார் திருத்தியெழுதியிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக, இரதிநாரனுடைய குலத்திலுதித்த க்ஷத்திரியராகிய ஆங்கீரரைப்பற்றி அவர்கள் பிறப்பின்படி க்ஷத்திரியராயிருந்தாலும் ஆங்கீரர் பிராமணரும் க்ஷத்திரியருமாயிருந்தார்கள், என்பதாக விட்டுணுபுராணத்தில் பார்ப்பான், பிராமணன் என்னும் பெயரை நுழைத்திருக்கிறான்.

"These princes of Rathinara family, *although Kshatriyas by birth*, were called Angerasas or sons of Angera *and were Brahmans and Kshatriyas.*"

பிறப்பிலே க்ஷத்திரியனானவன் க்ஷத்திரியரிஷியாயிருப்பது சாத்தியமேயல்லாமல் க்ஷத்திரியனும் பிராமணனுமாயிருப்பது சாத்தியமல்ல. பார்ப்பார் தாங்களும் ரிஷிகோத்திரத்திலுதித்தவர்களென்றேற்படுத்தும்படியாகச் சேர்த்தபொய்களேயன்றி [illegible]

விட்டுணுபுராணத்தில் [illegible] அத்தியாயம் பார்க்க.) ஆங்கிரர் [illegible] க்ஷத்திரிய [illegible] ஆகிய இ[illegible]குமரபிலுதித்த க்ஷத்திரியரென்பது [illegible] அவர்களைப்பற்றி இலிங்கபுராணத்திலும் வாயுபுரா[illegible] [illegible] அவர்கள்

"[illegible] க்ஷத்திரியருக்குப் பிறந்தவர்களானபோதிலும் பிராமணர்கள்."

[illegible] பார்ப்பார் சேர்த்தெழுதியிருக்கிறார்கள்.

விட்டுணுபுராணம், நாலாமம்சம், 19-வது அத்தியாயத்தில், இருக்கு வேதத்தில் எட்டாவது மண்டலமெழுதிய கானவரின் மரபுரைத்திருக்கிறது. அவர் க்ஷத்திரியனென்பதாகமேலேவிளக்கிக்காட்டினேம். அதே கானவரின் குமாரனாகிய மேதைதிதி என்னும் க்ஷத்திரியனிலிருந்து கானவாயனர் என்னும் பிராமணருதித்தார்களென்பதாக அதே அத்தியாயத்தில் பார்ப்பான் சேர்த்தெழுதியிருக்கிறான்.

"The son of Riteyu was Ratinara, whose sons were Tansu, Apratirtha and Dhruva. The son of the second of these was Kanwa, whose son was Medhathithi from whom the Kanwayana Brahmanas were sprung." (Vishnu Puraham IV–19.)

அதே அத்தியாயத்தில் பின்னும் சில க்ஷத்திரியர் பிராமணரும் க்ஷத்திரியருமாயிருந்தார்கள் என்று சேர்த்தெழுதியிருக்கிறது. கார்க்கர் என்றும் சைநியர் என்றும் சொல்லப்பட்ட க்ஷத்திரியர் பிறப்பிலே க்ஷத்திரியராயிருந்தாலும் பிராமணரானார்கள் என்றும்,

"The son of Garga was Sini and their progeny were respectively called Gargyas and Sainyas; *although Kshatriyas by birth they became Brahmans.*"

கார்க்கனுடைய சகோதரனாகிய மகாவீரியனுடைய குமாரனாகிய உருக்குசயனுக்குப்பிறந்த குமாரர் மூவரில் இருவர் க்ஷத்திரியராயிருக்க, மூன்றாவது குமாரனாகிய கபி என்பவர் மாத்திரம் பிராமணனானர் என்றும்,

"The son of Mahavirya was Urukshaya, who had three sons Trayyaruna, Pushkarin and Kapi, *the last of whom became a Brahman.*"

பாஞ்சாலர் என்னும் க்ஷத்திரியரில் முதல்வனான முடக்கலனிலிருந்து மாட்காகிய பிராமணர் தோன்றினார்கள்

"From Mudgala sprang the Maudgahya Brahmans."

என்றும் பார்ப்பார் பற்பலவிதமாய் தங்களுடைய தாயை மணம்புரிந்த பார்ப்பாருக்கே தாங்கள் பிறந்தவர்களல்ல, தங்கள் தாயானவள் க்ஷத்திரியருக்கே தங்களைப் பெற்றாள் என்று வெட்கம் மானம் என்னும் புருஷலக்ஷணங்கள் கிஞ்சித்தேனுமில்லாமல் தாங்களே ஒப்புக்கொண்டு பூர்வநூல்களைத் திருத்தி யெழுதிய விபரங்கள் மிச்சமாய்ப் பார்க்கலாம். இத்தன்மையான இழிவான செய்கைகளைச் செய்யக்கூடிய பார்ப்பார் பூர்வத்தில் மிகவும் இழிஞராக இருந்திருக்கவேண்டுமென்றும், உவீலர் துரை யெழுதியபிரகாரம் அவர்கள் க்ஷத்திரியரால் மிகவும் தாழ்ப்பாக எண்ணப்பட்டு வந்திருக்கத்தான் வேண்டுமென்றும் பிரத்தியக்ஷமாய் அறியலாம்.

11. பார்ப்பார் தாமே மகம்மதியர் அரசாக்ஷிகாலத்தில் திருத்தி யெழுதிய நூல்களைப்பார்த்தால் அவர்கள் பூர்வத்தில் மேன்மையாக எண்ணப்பட்டு வந்திருந்தனரென்றனுமானிக்க இடமுண்டாகிறதே பன

றி மேன்மக்களுக் கிருக்கவேண்டிய லக்ஷணங்களொன்றும் அவர்களுக் கில்லையென்றும், பிறரை முகஸ்துதிபேசி வயறு வளர்த்து, இராஜங்க துரோகிகளாக இருந்து, மேன்மக்களுக்குரிய யாதொரு அடையாளமு மில்லாதவர்களா யிப்போதிருக்கிறார்களென்றும் உவீலர்துரை யெழுதி யிருக்கிறார்.

> "They are generally pharisaically strict in the practice of all outward observances, through pride of caste, and fear of incurring disrespect; but otherwise they *degenerate into mercenaries.* In the social life of the Hindu Drama, which belongs to a later period, they appear as *parasites*, jesters, men of the world, and *political intriguers*; and beyond their claims on the score of birth, they possess *none of the virtues* or attributes which are fondly ascribed to the ideal Brahman of old." (Chapter ii of the History of India by Talboys Wheeler.)

அவர்கள் எக்காலத்திலும் மேன்மக்களா யிருந்ததில்லை; ஆகையால் தான் மேன்மக்களுக்குரிய குறிகளொன்றும் அவர்களிடமில்லை. அவர்கள் எக்காலத்திலும் வேஷக்காரர். க்ஷத்திரிய அரசாக்ஷிகாலத்தில் க்ஷத்திரியரைத் தேவர்களாக்கி வணங்கி வயறு வளர்த்துவந்தார்கள். அவர்கள் அரசாட்சி அழிந்தபின்பு தாங்களே அந்த க்ஷத்திரிய குலத்தினுதித்தவர்களென்று பொய்யைப்பிணைத்தும் பூர்வநூல்களில் நுழைத்ததுமல்லாமல், அத்தன்மைய பித்தலாட்டங்களை ஒருவரும் கண்டறிந்து வெளியிடாதபடி, பார்ப்பானல்லாதவன் சூத்திரன், ஆகையால் வேதங்களை ஆராய அருகனல்ல, க்ஷத்திரியனும் வைசியனும் இந்தியாவிலேயே இல்லாமல் அந்த இரண்டு குலங்களும் அருவாகிவிட்டதென்று சாதித்துப்போர்த்து அங்கிலேயரை வஞ்சித்து வருகிறான். க்ஷத்திரிய அரசாட்சியொழிந்ததோடு க்ஷத்திரியரும் வைசியரும் ஜீரணமானார்கள் என்னும் பார்ப்பாரப் பொய்யானது க்ஷத்திரியருடைய வல்லமை குன்றி, மகமதிய அரசாட்சி ஸ்தாபிக்கப்பட்ட 10-வது, 11-வது (கி. பி.) நூற்றாண்டுக்குப்பின்னால் தான், பார்ப்பார் சொல்லுகிறதற்கு ஆரம்பித்தார்களென்பதாக ரோமஷ் சண்டர்டற்று என்னும் பெங்கால் சிவிலியன் தம்முடைய பூர்வ இந்தியா என்னும் புத்தகத்தில் விளம்பியிருக்கிறார்.

> "Darker days then followed on the loss of independence. *Kshatriyas* and *Vaisyas* were equally prostrated. The *bold myth* was *then* proclaimed that all who were not Brahmans were Sudras." (Chapter XV. Book V of 'Ancient India' by Romesh Chunder Dutt.)

12. பார்ப்பானுடைய இச் நீசச்செய்கையால் அவனுக்கு வழங்கிய பார்ப்பான் என்னும் பெயர் காரணப்பெயரென்றறியலாம். பார்ப்பான் என்றால் தன் காரியம் பார்ப்பான், சமயம் பார்ப்பான், என்று

பொருள். க்ஷத்திரியன் அரசனாயிருந்தால் அவனை தேவனுக்கித் துத்தியம்பண்ணி அவன் பொருளை யபகரித்துத் தன் காரியம் பார்ப்பான். அவன் அரசாட்சி யொழிந்துபோனால் அந்த ஜாதியே உலகத்திலில்லை என்பான். பார்ப்பாரக் கிருத்தியங்கள் லோகபிரசித்த மானவையானபடியால் அவைகளை அதிகமாய் விஸ்தரிக்க வேண்டியதில்லை.

ஆகையால் அஸ்வகோஷாபோதிசத்வர் சொல்லுகிறபடியும், பார்ப்பார் புரட்டியெழுதிய நூல்களில் பார்ப்பாரே ஒத்துக்கொள்ளுகிறபடியும், சுத்த ஜாதிப்பார்ப்பானைக்காண்பதரிது என்றும், ஆரியராகிய க்ஷத்திரியருக்குறிய குலமேன்மை லக்ஷணங்கள் உவீலர் துரை சொல்லுகிறபடி அவர்களிடத்தில் கிஞ்சித்தேனுமில்லையென்றும், பர்ட் உட் துரையெழுதியபிரகாரம் அவர்கள் ஆரிய ஜாதியல்ல துரேனிய மந்திரவாதிகளென்றும், இந்து இராஜாக்களாகிய க்ஷத்திரிய அரசாட்சி காலத்தில் அவர்கள் மிகவும் நிழ்ப்பாய் எண்ணப்பட்டுவந்தார்களென்றும், அவர்கள் தங்களை வேத ரிஷிகளின் கோத்திரமென்றுகூறுவது பார்ப்பாரப்பொய்யென்றும், பூர்வநூல்களை அவர்கள் திருத்துப்பாடுசெய்தது க்ஷத்திரியவல்லமை குன்றினபின்புதான்என்றும், க்ஷத்திரியரும் வைசியரும் இந்தியாவிலில்லையென்பதும் பார்ப்பானல்லாதவன் சூத்திரன் என்று சொல்லுவதும் பார்ப்பான் தான்செய்த பித்தலாட்டங்கள் வெளியாகாதபடி செய்த உபாயமென்றும், பார்ப்பார் பூர்வநூல்களில் செய்திருக்கும் திருத்துப்பாடு முதலானவைகளால் 4000-ளு இந்நாட்டிலரசாண்ட க்ஷத்திரியருடைய சரித்திரம் இந்துதேச சரித்திரப்புஸ்தகத்துக்கு வரக்கூடாத ஸ்திதியிலிருக்கிறதென்றும், இத்தன்மைய பாதகர்கள் இராஜ துரோகிகளேயன்றி இராஜ்ஜிய நன்மையைக் கருதுகிறவர்களல்லவென்றும் பிரத்தியக்ஷமாயறியலாம்.

———:0:———

VII-வது அத்தியாயம்

தேவர்களின் பூர்வஸ்தலம் தென்தேசம்.

1. ஆதி மனிதரின் பூர்வ ஸ்தலத்தைப் பத்திய அபிப்பிராயங்கள்; பால்டிக் சமுத்திரக்கரை, ஆக்ஸஸ் நதிப்பக்கம், இக்கு சமுத்திரத்திலுள்ள ஓர் கண்டம். 2. சப்த திவுகளென்னும் ருதிகள், [illegible] அபிப்பிராயம். 3. தக்கண தேவர்களின் முற்பிதா, தக்கணம் என்பதின் [illegible]ர்த்தம். 4. இருக்குவேதம் கூறும் கடல் யாத்திரைகள். 5. இயமலோகமே ஆரியர் [illegible] முதல் பூமி. [illegible] மூலப்பொருள். 6. பரதகண்டம் என்பது தென்[illegible]. 7. அட்டதிக்கு பாலர் அரசு புரிந்த திசைகள். 8. வாயுவின் பூமி [illegible]. 9. வருணன் பூமி மராட்டிய நாடு. 10. சூரியன்

பூமி மலையாளம், கொச்சி. 11. இயமலோகம் தென்பாண்டி நாடு. 12. அக்கினிபகவான் பூமி சேலம். 13. இந்திரலோகம் கோதாவரி, கிருஷ்ணா, கடப்பை, கர்நூல் முதலிய ஜில்லாக்கள். 14. சந்திரன் நாடு விஜாகபட்டணம் ஜில்லா. 15. குபேரன் நாடு முதலில் இலங்கை, அதன்பின் சென்னபட்டணத்துக்கு வடக்கேயுள்ள பூமி. 16. தென்னிந்தியாவிலே மிச்சமான புண்ணிய தீர்த்தங்களுண்டு. 17. பஞ்சபாண்டவ இராம லக்ஷ்மண வனவாசம். 18. சிவனுடைய மனைவிகள் மூவரும் தென் தேசத்தார். 19. சிவலோகம் மதுரை, சிவன் தென் பாண்டிநாட்டான். 20. மும்மூர்த்திகளின் பூர்வ ஸ்தலமும் இந்துமார்க்க முற்பத்தியான ஸ்தலமும் தென்பாண்டிநாடு, திருநெல்வேலிப் புராணம், போப்பு, உவில்சன், நெல்சன் முதலான அங்கிலேய வித்துவான்களி னபிப்பிராயம், திருவிளையாடற் புராணம். 21. தேவகுருமதுரைக்குத் தெற்கிலிருந்தார். 22. வடக்கிலுள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் தீராத பழி மதுரையில் தீரும். 23. சுப்பிரமணியருடைய பூர்வ ஸ்தலம் திருநெல்வேலி ஜில்லா, விட்டுணுவின் ஊர் திருப்பரங்குன்றம்.

அசுரர் முதலான பதினென் தேவகணங்க ளென்னப்பட்டவர்கள் இந்தியாவின் அதிபூர்வகுடிகளென்றும், அவர்கள் ஆரியரென்னப்பட்ட க்ஷத்திரிய ஜாதியாரென்றும், அவர்கள் இந்தியாவென்னும் இத்தேசத்தை 56 பிரிவுகளாக வகுத்து ஓர்காலத்திலரசாண்டார்களென்றும், அவர்களுடைய அரசாக்ஷியையும் கீர்த்தியையுமே வேதமாதிநூல்கள் கூறுகிறதென்றும், இந்தியாவின் பூர்வநூல்கள்கூறும் ரிஷிகளும் அக்குலத்தி லுதித்தவர்கள்தானென்றும், அவர்கள் அரசாக்ஷி காலத்தில் பார்ப்பார் மிகவும் தாழ்வாக என்னப்பட்டு வந்தார்களென்றும், அவர்கள் அரசாக்ஷி முடிந்து மகம்மதிய அரசாக்ஷி ஆரம்பிக்க முன்பு, அதாவது, கிறிஸ்துவுக்குப்பின் 10-வது 11-வது நூற்றாண்டுக்குப் பின்னிட்டு பார்ப்பார் வேதமாதி பூர்வநூல்களையெல்லாம் திருத்தியெழுதியிருக்கிறார்கள் என்றும் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில தேவர்களென்னப்பட்ட க்ஷத்திரியரின் பூர்வஸ்தல மெதுவென்று பார்ப்போம்.

மனுஷ ஜாதியின் பூர்வீக உற்பத்தி ஸ்தலமெது வென்பதைப்பற்றி, சாஸ்திரிகள் வெகுகாலமாய் நுழைந்து [illegible] ஐரோப்பாவிலுள்ள சாஸ்திரிகள் [illegible] பூர்வ ஸ்தலம் ஐரோப்பாவுக்கு வடக்கிலுள்ள [illegible] யோரம் என்கிறார்கள். [illegible] பண்டிதராகிய மாக்ஸ் [illegible] முதலானவர்கள் ஆரியர்களின் பூர்வ [illegible] ஐரோப்பா [illegible] லுள்ளதல்ல, ஆசியாக்கண்டத்திலேயே இருந்திருக்கவேண்டு [illegible] தெரிவித்து, ஆக்ஸஸ்நதி முகத்துவாரத்தில் போக்காரா பட்ட [illegible] மத்திய ஆசியாவின் மலைப்பிரதேசமாகிய [illegible]

கலமென்றும், அங்கிருந்து ஆரியர்கள் பஞ்சாப்தேசத்தின் வழியாய் இந்தியாவுக்குள் பிரவேசித்திருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயங் கண்டெழுதியிருக்கிறார்கள். இதற்குப் பின்பு ஹேய்க்கல் என்னும் சாஸ்திரியார் (Professor Haeckel) இந்தியாவுக்குத் தெற்கில் இந்துசமுத்திரத்தில் முழுகிப்போயிருக்கும் லேமூரியா என்னப்பட்ட ஒரு கண்டத்தில் மனிதர் பூர்வத்திலிருந்து, அதன் பின்பு நாலாதிசைகளிலும் பரவினார்களென்று தெரிவிக்கிறார். இவ்விபரம் சென்னை இராஜதானி அரசாக்ஷிப் புஸ்தகம், I-வது வாலியூம், 33-வது பக்கத்தில் கண்டிருக்கிறது.

"(2) *Hypothesis of the genealogy and general migrations of the races of man.*—There are a number of circumstances (especially chorological facts), which suggest that the primæval home of man was a continent now sunk below the surface of the Indian Ocean, which extended along the south of Asia, as it is at present (and probably in direct connection at some points with it), towards the east as far as Further India and the Sunda Islands, towards the west as far as Madagascar and the south-eastern shores of Africa. Many facts in animal and vegetable geography render the former existence of such a *South Indian continent* very probable. To this continent has been given the name of *Lemuria*, from the primitive mammals of that name which were characteristic of it. *By assuming Lemuria to have been man's primæval home, the explanation of the geographical distribution of the human species by migration is much facilitated.*" (Page 33, Vol. I of the 'Manual of the Administration of the Madras Presidency')

இப்படியாக இந்தியாவின் ஆதிபூர்வ குடிகளான தேவர்கள் என்னும் ஆரியருடைய பூர்வ வுற்பத்திஸ்தலம் மாக்ஸ் மல்லர் துரையினபிப்பிராயப்படி இந்தியாவுக்கு வடக்கிலும், ஹேய்க்கல்துரையினபிப்பிராயப்படி இந்தியாவுக்குத் தெற்கிலுமிருந்ததாக இரண்டு அபிப்பிராயங்களுண்டாகின்றன. இவ்விரு அபிப்பிராயங்களிலும் பூர்வநூலுக்கு ஒத்திருக்கும் அபிப்பிராயமென்னவென்று பார்ப்போம்.

2. பூர்வ இ[illegible] இவ்வுலகமானது உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், சா[illegible] என்னும் [illegible]களால் சூழப்பட்ட நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, [illegible] என்னும் 7 தீவுகளையுடையதென்பதாக எண்ணியிருந்தார்கள் என்று பூர்வநூல்[illegible] கூறுகின்றன.

சம்புப்லக்கஞ்சான் மலிசால்குசஞ்சிர் தனைவா[illegible]
மம்பொற்சாகம்புட்கரமென்றன்றையு[illegible]
நம்புமுவரிகன்னல் சுரைநெய்வெண்டயிர் [illegible]
பம்புதிரையகடலேழு முறையிற் பரந்துசூழ் [illegible]

இவ்விதமாக பூர்வ இந்துக்கள் உலகமானது ஏழு கடல்களால் சூழப்பட்ட ஏழுதீவுகளையுடையதாயிருந்ததென்றெண்ணிய அபிப்பிராயமானது தப்பாயிருந்தபோதிலும், அவர்கள் அதிபூர்வ காலத்தில் கடலால் சூழப்பட்ட ஒரு தீவிலிருந்திருக்கவேண்டுமென்றும், அந்தத் தீவிலிருந்து அவர்கள் இந்தியாவுக்கு வந்த பின்னிட்டு, இத்தேசமும் தாங்கள் விட்டு வந்த தீவைப்போல கடலால் சூழப்பெற்ற ஒரு தீவாய்த்தானிருக்கவேண்டுமென்றும், இதே பிரகாரம் இன்னும் அநேக தீவுகள் கடலால் சூழப்பட்டிருக்குமென்றும் அனுமானித்தே இவ்வுலகத்தைப்பற்றி 7 கடல்கள் சூழ்ந்த 7 தீவுகள் என்றபிப்பிராயங் கொண்டிருக்கவேண்டுமென்றே யனுமானிக்கலாம். ஆகையால் பூர்வ இந்துக்களாகிய தேவர்கள் ஒரு தீவிலிருந்து இந்நாட்டிற்கு வந்திருக்கவேண்டுமென்றேற்படுகிறபடியாலும், அத்தன்மைய தீவானது மத்திய ஆசியாவிலுள்ள மலைப் பிரதேசங்களிலில்லாமையாலும், மாக்ஸ் மல்லர் துரைசொல்லுகிறபடி அவர்கள் வடநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்திராமல், ஹேய்க்கல் துரை சொல்லுகிற பிரகாரம் தென்றிசையிலிருந்தே பரவி வடநாட்டிற்குச் சென்றிருக்க வேண்டுமென்றறியலாம். நாம் மேலே எடுத்துரைத்த சென்னை அரசாட்சிப் புஸ்தகம் 110, 111-வது பக்கங்களில் டாக்டர் மக்லீன் துரை, அதிபூர்வ காலங்களில் பூர்வ மனிதர் தென்னிந்தியா வழியாய்ச் சென்று, ஐரோப்பாவிலுள்ள மெடிற்றெரேனிய ஜாதிகளின் முற்பிதாக்களாகி, அந்நாடுகளைக் கைப்பற்றினார்கள் என்பதாகப் பல ஜாதிகளைப் பற்றிய விசாரணையில் துலக்குகிறதென்றும், தென்னிந்தியாவின் கீழ்ப்பாகத்திலகப்பட்ட மனுஷ எலும்புகள் முதலியவற்றைக் கொண்டு கணக்கிட்டுப்பார்த்ததில், அவ்வெலும்புகள் சாதாரண சரித்திரக் கணிதத்துக்கு எட்டாத கணக்கிடக்கூடாத ஆதிகாலத்தில் புதைக்கப்பட்ட எலும்புகளாகத் தெரிகிறதென்றும், தென்னிந்தியாவில் அதிபூர்வ காலங்களில் மகா பராக்கிரமசாலிகளான ஒரு ஜாதியாரிருந்தார்களென்றும் எழுதிவைத்திருக்கிறார்:—

> "Investigations in relation to race show it to be by no means impossible that *Southern India was once the passage-ground* by which the ancient progenitors of northern and Mediterranean races proceeded to the parts of the globe which they now inhabit. Human remains and traces have been found on the East Coast of an age which is indeterminate but quite beyond the ordinary calculations of history." (Page 111.)

> "Antiquarian research is only now beginning to find means of supplementing the deficiency caused by the absence of materials [illegible] or collected by usual historic methods. These results are specially to be regretted, as *without doubt the population, who have for many ages occupied this portion of the peninsula are a great people,* influencing the world not much perhaps by moral and intellectual attributes, but to a great extent by superior physical qualities." (Page 110).

ஆகையால் இந்தியாவின் அதிபூர்வ குடிகளாகிய தேவர்கள் தென்றிசையிலிருந்து வடநாட்டிற்குப் பரவியிருக்கவேண்டுமென்றறியலாம்.

3. பதினொன் கணத்தேவர்களில் தக்கனின் மகளாகிய அதிதியிடம் சுரரும், திதியிடம் அசுரரும், அரிட்டை, இலங்கிளை என்பவர்களிடம் காந்தருவரும், குரோதவசை என்பவளிடம் இராட்சதரும், கதை, இரீடையென்பவர்களிடம் இயக்கரும், சுரசை என்பவளிடம் பூதர், சற்பர் என்பவர்களும், கத்துரு என்பவளிடம் உரகரும், முனி என்பவளிடம் முனிவரும் தோன்றினார்களெனப் பார்த்தோமாகையால் தேவர்களின் முக்கியமான கணங்கள் தக்கனுடைய மக்களின் மரபினராயிருந்தார்களென் றேற்படுகிறது. புராணங்கள் கூறும் மனுவந்தரத்திலும் பிரமனுடைய குமாரனாகிய சயம்புமனு என்னும் அரசனுக்கு இரண்டு பெண்களிருந்தார்களென்றும், அவர்களில் பரசூதை யென்பவளை தக்கன் மணம்புரிந்து 24 பெண்களைப் பெற்றார் என்றும், அவர்களில் 13 பேரை பிரமனின் குமாரனாகிய தருமனும் மற்றும் 11 பெண்களை பிரமனின் மற்றும் குமாரராகிய பிருகு, மரீசி, ஆங்கிரர், புலத்தியர், புலகர், அத்திரி, வசிட்டர் முதலான பிரசாபதிகள் மணம்புரிந்து தேவர்களின் சந்ததியை விருத்தி செய்தார்களென்றும் கூறியிருப்பதாலும், தேவர்களின் முக்கியமான பிரிவார் தக்கனுடைய மக்கள் மரபிலுதித்தவர்களென்றே ருசுவாகிறது. ஆகையால் தக்கன் தேவர்களின் அனேக பிரிவாருக்கு முற்பிதாவென்றறிகிறோம். இவருடைய மரபினராகிய தேவர்கள் குடியேறின பூமிக்குத் தக்கணம் என்று பெயர்; அதாவது, தக்கன் மரபினர் நாடு என்று பொருள். தக்கணம் என்னும் பெயரானது விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பாகமாகிய தென்னிந்தியாவையும், தென்னிந்தியாவின் தென்கோடி பாகமாகிய திருநெல்வேலி நாட்டையுமே குறிக்கிறதேயல்லாமல் வட இந்தியாவிலுள்ள எந்த பாகத்தையும் குறிக்கிறதில்லை. ஆகையால் தக்கன் மரபினராகிய தேவர்கள் பூர்வத்தில் தக்கணம் (சமஸ்கிரதத்தில் தக்ஷணம) என்னும் தென்னாட்டிலிருந்ததாக ஏற்படுகிறது. இக்காரணத்தாலும் ஆரியர் வடதேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கலாம் என்று மாக்ஸ் மல்லர் துரை கூறுகிற அபிப்பிராயம் தப்பென்றும், தென்னாட்டிலிருந்து வடநாட்டுக்கு அவர்கள் சென்றிருக்கவேண்டுமென்பதாக [illegible]ய்க்கல் துரை கூறும் அபிப்பிராயமே சரியானதென்றுமறியலாம்.

4. தேவர்களென்னப்பட்ட ஆரியர் கப்பல் யாத்திரை செய்தார்களென்று காட்டும்படிக்கான குறிப்புகளனேகம் இருக்குவேதத்தில் முதலாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன:—

(1) [illegible] கடலில் பிரயாணம் செய்யும்போது கப்பல் சேதமாக, அசுவினிதேவர்கள் அவனைக் [illegible] எடுத்துக் கரைசேர்த்தார்களென்பதை 1-வது மண்டலம் (116-3)-ல் பார்க்கிறோம்.

(2) தேவர்கள் கூறும் அட்டதிக்கு பாலர்கள் என்னும் தேவர்களிலொருவராகிய வருணனுக்குக் கப்பலானது கடலில் செல்லும் [illegible] செல்லாம் தெரியுமென்பதாக 1-வது மண்டலம் (25-7)-ல் [illegible]குகிறது.

(3) நாலாவது மண்டலம் (55-6)-ல் ஆரியர் கப்பல் யாத்திரை செய்தார்கள் என்று காட்டுகிற வசனம் ஒன்று வருகிறது. அதாவது:—

"பொருள் தேடவேண்டுமென்றபேட்சிப்பவர்கள் கடலைத் தொழுது கப்பல் யாத்திரை செய்கிறார்கள்" என்பதே.

(4) ஏழாவது மண்டலம் (88-3)-ல் வசிஷ்டர் கூறியதாகக் கண்டிருக்கும் ஓர் வாக்கியத்தாலும் பூர்வ இந்துக்கள் கடல் பிரயாணம் செய்தார்களென்றறியலாம். அவ்வாக்கியமாவது:—

"வருணனும் நானும் படகேறிக் கடலில் சென்றபோது, நீரின்மேல் மனோகரமாய் அசைவாடிக்கொண்டிருந்த படகில் வசிப்பது எனக்குப் பிரியமாயிருந்தது" என்பதாம்.

இவ்வசனங்களிலிருந்தே தேவர்கள் என்னப்பட்ட இந்தியாவின் பூர்வ குடிகள் கடலில் பிரயாணம் செய்தார்களென்று விசிதமாகிறது. அத்தன்மைய கடலானது மத்திய ஆசியாவிலுள்ள மலைப் பிரதேசங்களில்லாதபடியால், மாக்ஸ் மல்லர் துரை சொல்லுகிறபடி ஆரியர் மத்தியாசியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கவேண்டுமென்கிற அபிப்பிராயமானது தப்பென்றும், ஹேய்க்கல் துரை சொல்லுகிறபடி இந்து சமுத்திரத்திலுள்ள ஒரு தீவிலிருந்து இந்தியாவுக்கு வந்து, வடதிசை நோக்கிச் சென்று இந்தியா முழுவதும் பரவினார்கள் என்பதே சரியென்றுமறியலாம்.

5. சூரிய மகாராஜனுடைய குமாரனும் அட்டதிக்கு பாலர்களிலொருவருமாகிய இயமதர்மராஜனவர் தான், ஆரியர் இந்தியாவுக்கு வந்தவழியை முதலில் கண்டுபிடித்தவரென்றும், அவர் இந்தியாவில் முதலில் கைப்பற்றியரசாண்ட தேசமே மோக்ஷலோகத்தின் வாசல் என்றும், அதாவது, மோக்ஷத்திற்குச் சமானமான இந்தியாவுக்குள் பிரவேசிக்க இயமனுடைய ராச்சியத்தின் வழியாய்த்தான் செல்லவேண்டுமென்றும் காட்டும்படிக்கான சில குறிப்புகள் இருக்கு வேதத்திலுள்ள சில வசனங்களால் தெரிகிறது. அவ்வசனங்களாவன:—

(1) 10-வது மண்டலம் 14-2.

"*Yama first discovered the path for us.* That path will not be destroyed again. All living beings will follow by the path by which our fore-fathers have gone."

இதன் மொழிபெயர்ப்பு.

"இயமனே முதலில் நமக்கு வழி [illegible] அந்த வழியானது ஒரு படியும் அழிக்கப்படாது. [illegible] முன்னோர்கள் சென்ற வழியே செல்லுகிறார்கள்" என்பதாம்.

(2) 9-வது மண்டலம், 113-8.

"Take me where Yama is king, where there are the *gates of heaven*, and where mighty rivers flow. Take me there and make me immortal. Flow Soma for Indra."

இதன் மொழிபெயர்ப்பு.

> "இயமன் அரசாட்சி செய்யும் ஸ்தலத்துக்கு என்னைக் கூட்டிக்கொண்டு போ. அதுவே மோக்ஷத்தின் வாசல். அங்கே பெரிய நதிகளிருக்கின்றன. என்னை அவ்விடம் கொண்டு சேர்த்து அமரனுக்கக் கடவாய். சோமபானமே! இந்திரனுக்காக வழிந்தோடக்கடவாய்" என்பதாம்.

இவ்விரண்டு வசனங்களிலும் இயமனே முதலில் வழியைக்காண்பித்தார் என்றும், இயமன் அரசனாயிருக்கும் நாடே மோக்ஷத்தின் வாசல் என்றும் சொல்லியிருப்பதாலும் இயமதருமராஜனுடைய கூட்டத்தார் தான் முதலில் இந்தியாவைக் கைப்பற்றினார்களென்றும், அவர்கள் கைப்பற்றிய பூமியே மற்றும் ஆரிய கூட்டத்தார் இந்தியாவுக்குள் பிரவேசிக்கும் வழியாயிருந்ததென்றும் அறிகிறோம். இயமனுடைய பூமியிலே ஆரியர் முதலில் வந்து தங்கினபடியால் அப்பூமிக்குப் பூர்வத்தில் நரகம் என்னும் பெயருண்டாயிற்று.

நரகம் = நரர் + அகம்
= மனிதர் + பூமி
= மனிதர் முதலில் வந்திறங்கின பூமி

என்று பொருள். பூர்வ பொருள் புதை பொருளான பின்பு, புராணங்கள் புரட்டி எழுதப்பட்ட மகமதிய அரசாட்சி காலத்தில், நரகம் என்னும் பெயருக்கு அயோக்கியர் மரணத்துக்குப்பின் போயிருக்கும் ஸ்தலமென்று பொருள் மாறியிருக்கிறது. இருக்கு வேதத்தில் இயமன் மகாபரிசுத்தன் என்பதாகவும், பரிசுத்தமுள்ளவர்கள்தான் அவனிடம் செல்ல அருகர்கள் என்றும், ஆரியருக்கு மிகவும் அருமையான கடவுள் இயமன் என்றும் கூறியிருப்பதால், நரகம் என்னும் பெயருக்கு இருக்கு வேதமுண்டான காலத்தில் அயோக்கியர் குடியிருப்பு என்னும் பொருளிருக்கவில்லை என்று துலங்குகிறது. இயமலோகம் யோக்கியர்கள் குடியிருப்பென்று இருக்குவேதம் கூறும் வசனங்களாவன:—

> "Worship Yama the son of Vivasvat with offerings. All men go to him. He takes *men of virtuous deeds* to the realm of happiness. He clears the way for many." (X-14-1.)

> "O thou mortal! Proceed to the same place where our fore-fathers have gone, by the same path which they followed. The two kings, Yama and Varuna, are pleased with thy offerings; go and see them. (X-14-7.)

> "Go to that *happy heaven* and mix with the early fore-fathers. Mix with Yama and with the fruits of thy virtuous deeds. Leave sin behind, enter thy home." (X-14-8.)

இவ்வாறு பரிசுத்தவான்களே இயமனிடம் செல்ல அருகரென்று கூறியிருப்பதாலும், இயமனுடைய பூமிக்கு "மஹோன்னதமான மோக்ஷம்" (Happy heaven) என்று இருக்குவேதத்தில் பெயரிட்டிருப்பதாலும், இயமபூமி

க்குவழங்கிய நாகம் என்னும் பெயருக்கு அயோக்கியர் மாணத்துக்குப் பின்பு தண்டனை யடையும் இடம் என்றல்ல, நரர் முதலில் தங்கிய அகம் என்பதே யதார்த்தமான மூல பொருள் என்றறிக. இயமதரும ராஜன் மகா பரிசுத்தன் என்று காட்டும்படிக்கான ஒரு திருஷ்டாந்தம் இருக்குவேதம் 10-வது மண்டலத்தில் (10-வது அத்தியாயம் பார்க்கவும்) கூறியிருக்கிறது. அதாவது இயமனுடைய சகோதரியாகிய இயமுனை என்பவள் விரகங்கொண்டு தன் சகோதரனைக் கிட்டிச் சேர, அவன் அவளைத்தடுத்து, அது அசுத்தமான செய்கையென்று விலக்கினன் எனப்பார்க்கிறோம். இந்த இயமுனையென்பவளைத்தான் இலங்கையிலரசாண்ட இராவணாதி ராட்சதர்களுக்கு முன்னோனாகிய எதியென்னும் இராட்சதன் மணம்புரிந்தான் என்று உத்தர ராமாயணத்தில் வாசிக்கிறோம். இயமனுடன்கூட இருந்த இயமுனை என்பவளை இலங்கை யரசன் மணந்ததால் இயமனுடைய நாடு இலங்கைக்குப் பக்கத்திலிருந்திருக்கவேண்டும். ஆகையால் இயமன் கூட்டத்தாராகிய ஆரியர் இந்தியாவில் முதலில் கைப்பற்றியதும், மற்றும் ஆரியர் மற்றும் பாகங்களைக் கைப்பற்றும்படி செல்ல வழியாயிருந்ததுமான இயம பூமி வடநாட்டிலிருக்கவில்லை. இயமனுக்குத் 'தென்றிசைக்கோன்' என்று பெயர் (சதுரகராதி பார்க்க). அதற்குத் தென்றிசையிலுள்ள அரசன் என்று பொருள். ஆகையால் ஆரியர் முதலில் தென்றிசையில் வந்திறங்கினார்கள் என்றேற்படுகிறபடியால் மாக்ஸ் மல்லர் துரை சொல்லுகிறபடி அவர்கள் வடநாட்டிலிருந்து வந்தவர்களல்ல, தென்திசையிலிருந்தே வடநாட்டிற்குப் போனவர்கள் என்று ரூபகாரமாகிறது.

6. பூர்வ விஷயங்களையுணர்த்தும் நூல்கள் என்று பொருள்படும் புராணங்களுக் கிருக்கவேண்டிய பஞ்ச லக்ஷணங்களில் மனுவந்தரம் என்பதோர் லக்ஷணம். பஞ்ச லக்ஷணங்களாவை யெனில்:—

(1) உலகத்தின் தோற்றம், Creation of the world, Cosmogony.
(2) உலகத்தின் ஒடுக்கம், Destruction of the world.
(3) மனுவந்தரம், The reigns of Manus.
(4) ரிஷிகளரசரின் மரபு, The genealogy of Rishis and Kings.
(5) அவர்கள் சரித்திரம், Their history.

"தோற்றமுலகமீண்டொடுங்க றாகஉர்மன்வந்தரமுனிவ
ராற்றலரசர் மரபவர்தஞ்சரிதமென்னு மோரைந்துஞ்
சாற்றுபுராணவிலக்கண மென்றறிஞருரைப் பர்தவறின்றிப்
போற்று புராணம் பதினெட்டின் [illegible]"

என்னும் கூர்ம புராணச் செய்யுளால் புராண[illegible] பஞ்ச லக்ஷணங்களிவையென்றறியலாம். தோற்றம் என்பது ஆதி[illegible] உலகம் ஆதியந்தமில்லா [illegible] சிருஷ்டிக்கப்பட்ட [illegible], ஒடுக்கம் என்பது [illegible]ப்பிரளயம் என்னும் நோவாவின் காலஜலப்பிரளயத்தை [illegible], மனுவந்தரம் என்பது ஜலப்பிரளயத்துக்குப் பின்பு பரத கண்ட[illegible] [illegible]களின் சரித்திரங்களையும், முனிவரரசர் மரபு என்

பது வேத ரிஷிகள், சூரிய சந்திர குலத்தரசர்கள் தலைவிளக்கமென்பதையும், சரிதம் என்பது முனிவரரசரின் சரித்திரம் என்பதையும் குறிக்கின்றது.

இவற்றில் மனுவந்தரம் என்பது ஜலப்பிரளயத்துக்குப் பின்னிட்டு அதிபூர்வ காலங்களி லரசாண்ட மனுசக்கரவர்த்திகளின் சரிதம். சம்புத்திவு என்னப்பட்ட இந்தியாவிலரசாண்ட முதலரசன் சயம்புமனு. அவர் பிரமனுடைய குமாரன். அவருக்குப் பின் அவருடைய குமாரனாகிய பிரியவரதன் பட்டத்துக்கு வந்தார். அவருடைய குமாரன் அக்கினிதாரன். அக்கினிதாரனுடைய குமாரன் நாபி. நாபியின் குமாரன் பரதன். இந்த பரதனாண்ட பூமியானதால் சம்புத்திவுக்குப் பரதகண்டம், அதாவது, பரதனுடைய நாடு (கண்டம்=நாடு) என்று பெயர். பரத கண்டத்தைப்பற்றிய விபரம் விட்டுணுபுராணம், இரண்டாமம்சம், 3-வது அத்தியாயத்தில் கண்டிருக்கிறது. அந்த அத்தியாயத்தில் பரத நாட்டிலுள்ள ஏழு மலைகளின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த மலைகளின் பெயர்களினாலே பரத கண்டம் இந்தியாவின் எந்த பாகத்திலுள்ளதென்றறியலாம். அப்பெயர்களாவன :—

"The seven principal mountain ranges in Bhara[illegible] are Mahendra, Malaya, Sahya, Suktimat, Riksha, Vindh[illegible] and Paripatra." (Vishnu Puranam II-3.)

(1) மகேந்திரமலை	(5) இருசிக மலை
(2) மலையமலை	(6) விந்திய மலை
(3) சாகிய மலை	(7) பாரிபத்திர மலை
(4) சுத்திமத மலை	

என்பவைகளே. இந்த ஏழு மலைகளும் பரதகண்டத்தின் முக்கியமான மலைகளென்று விட்டுணு புராணம் கூறுகிறது. இவற்றில் மகேந்திர மலை என்பதாக சமஸ்கிரத புராணங்கள் சொல்லும் மலையானது சென்னை ராஜதானியை யூடுருவிச் செல்லும் கீழ்காற்று மலையைக்குறிக்கிறதென்றும், மலையமலை என்பது மேல் காற்று மலைத்தொடர்ச்சியின் தென் பாகத்திலுள்ள மலையைக் குறிக்கிறதென்றும், சாகியமலை என்பது மேல காற்றுமலைத்தொடர்ச்சியின் வடபாகத்தைக் குறிக்கிறதென்றும், இருசிக மலையென்பது கஞ்சம் ஜில்லாவுக்கு வடமேற்கிலுள்ள மலைகளைக் குறிக்கிறதெனவும், சென்னை இராஜதானி யரசாட்சிப்புஸ்தகம், 1-வது வாலியூம், 4-வது, 5-வது பக்கங்களில் பார்க்கிறோம். சுத்திமதமலை எதுவென்றறியப்[illegible] குறிப்பொன்று விட்டுணு புராணத்திலிருக்கிறது. அந்த மலையில் [illegible] உற்பத்தியாகிறதென்று சொல்லியிருப்பதால், சுத்திமதமலையானது [illegible] மலைக் கருகிலிருக்கும் மலையென்றறி[illegible]. விந்தியமலை என்னும் பெயர் [illegible]திக்கு வடக்கிலுள்ள மலைகளைக்குறிக்கிறது. பாரிபத்திர மலையின் [illegible] மாளவ ஜாதியார் குடியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறபடியால் [illegible] மலையானது மாளவ தேசத்துக்கருகிலுள்ள மலையென்றறிய[illegible]. ஏழு மலைகள்தான் பரத நாட்டிலுள்ள முக்கியமான மலை[illegible]

விட்டுணு புராணம் கூறுகிறபடியால், பரத கண்டம் என்பது தக்ஷண பூமியைக் குறிக்கிறதே யன்றி வடநாட்டிலுள்ள தல்லவென்றறிக. ஆகையால் பிரமனுடைய குமாரனாகிய சயம்புமனுவின் மரபினர் அரசாண்ட தேசமானது தென்தேசமே யன்றி வடதேசமல்ல. பரதநாட்டைப்பற்றிய இந்த விபரத்தாலும் தேவர்கள் முதலில் கைப்பற்றிய தேசம் தென்தேசமென்றும், ஹேய்க்கல் துரை சொல்லுகிறபடி ஆரியர் தென்திசையிலிருந்து பரவினவர்களென்றுமறியலாம்.

7. தேவர்கள் பூர்வத்தில் பரவியதேசம் தக்ஷணம் என்னும் தென் இந்தியாவெனப்பார்த்தோம். இனிமேல் இருக்குவேதத்தில் சொல்லப்பட்ட முக்கியமான எட்டுத்தேவர்களாகிய அட்டதிக்கு பாலர்களரசாண்ட நாடுகள் எவை என்று பார்க்கலாம். இவர்களுக்கு வழங்குகிற அட்டதிக்கு பாலர்கள் என்னும் பெயருக்கு எட்டுத்திசைத் தேவர்கள் என்றுபொருள். பாலர் என்பதற்கு பாலி மூல பதம்; பாலி என்றால் தேவாமிர்தம்; ஆகையால் பாலர் என்றால் தேவாமிர்தபானஞ் செய்கிறவர்கள், அமரர், தேவர் என்று பொருள் என்றறிக. இந்த எண்திசைத்தேவர்களுமரசா[illegible] திசைகளாவன :—

1. வா[illegible] ... ... வடமேற்கு
2. [illegible]ணன் ... ... மேற்கு
3. ஆ[illegible]யன் ... ... தென்மேற்கு
4. இ[illegible]மன் ... ... தெற்கு
5. அக்கினி ... ... தென்கிழக்கு
6. [illegible]திரன் ... ... கிழக்கு
7. ச[illegible]திரன் ... ... வடகிழக்கு
8. குபேரன் ... ... வடக்கு.

8. வாயுவின் பூமி எங்கேயென்று இராமாயணத்தில் கூறிய விபரத்தால் ஒருவாறு அறியலாம். அந்த இதிகாசத்தில் கேசரி என்னும் வானரனுக்கு அஞ்சனாதேவியிடம்பிறந்த குமாரனாகிய அனுமானை வாயு புத்திரன் என்று கூறியிருக்கிறது. வாயுபுத்திரன் என்றால் இருக்குவேதத்தில் சொல்லப்பட்ட வாயுவின் குமாரனென்றருத்தமல்ல. வாயு இருந்த காலத்துக்குச் சுமார் 70-தலைமுறைக்குப்பின் பிறந்தவராகிய அனுமானை வாயு புத்திரனென்று சொன்னால் வாயுவின் மரபிலுதித்தவரென்றே பொருள். அனுமாரானவர் கிஷ்கிந்தாபுரி யரசனாகிய சூரியகுல சுக்கிரீவ மகாராஜனுக்கு மந்திரியும் தளகர்த்தனுமாக இருந்தார். கிஷ்கிந்தாபுரிப்பட்டணம் மைசூர் [illegible] சென்னை அரசாட்சிப்புஸ்தகம் 1-வது வாலியும், 1-வது பக்கம் பார்க்க). சுக்கிரீவனுடைய இராஜகொடி குரங்குக்கொடி யானபடியால், குரங்குக்கொடி வேந்தரை [illegible]ள் என்பதாக வித்துவான்கள் பேசி வாலும் [illegible] கொடு[illegible]ர்கள். மனிதர்களைத் தேவர்களாக்குகிறவர்களுக்கு [illegible] குரங்குகளாக்குகிறது பெரியகாரியமல்ல. சுக்கிரீவனுடை[illegible] [illegible] அரசர்கள் கடம்ப ராஜாக்கள் என்னும் பெயர்தரித்து கிறிஸ்[illegible] [illegible] பின்னிட்ட ஆறு நூற்றாண்டுகள் வரைக்கும் குரங்குக்கொடியை

யே விருதுக்கொடியாக வைத்தரசாண்டிருக்கிறார்கள் (சென்னையராசாட்சிப்புஸ்தகம் 1-வது வாலியூம், 137-வது பக்கம் பார்க்க). ஆகையால் அனுமாருக்கு முற்பிதாவாகிய வாயுவானவர் கறுப்புத்தேவர்கள் பூமி என்னப்பட்ட மைசூர் (மை=கறுப்பு, சூர்=தெய்வம்) நாட்டில் அதிபூர்வ காலங்களிலரசாண்ட க்ஷத்திரியனென்றறியலாம். வாயுவுக்குவழங்கிய சமீரன் (போர்வீரன், க்ஷத்திரியன்; சமீரம்=போர்) என்னும் பெயரானது, சமோரின் எனத்திரிந்து, மைசூருக்கு மேற்கிலுள்ள கள்ளிக்கோட்டையிலரசாண்டுவரும் மகாராஜாவின் இராஜபட்டப்பெயராக (The Zamorin of Calicut) தற்காலத்திலும் வழங்கிவருகிறது. ஆகையால் வாயுபகவான் மைசூர் பக்கங்களில் பூர்வத்திலிருந்தாரென்றனுமானிக்கலாம்.

9. மேற்றிசைப்பாலனாகிய வருணனுடைய பூமியானது மேற்குக் கடற்கரையைச் சேர்ந்திருக்கும் மகாராட்டிய நாடு (Maharashtra) என்பதாக மகாபாரதம், ஆதிபர்வத்தில் கூறிய விபரத்தாலறியலாம். இராட்சதரில் ஒரு பிரிவார் வருணனுடைய புத்திரனாகிய அதருமனுக்கு நிரிதியென்பவளிடம் பிறந்தபிள்ளைகளின் மரபினர் என்று மகாபாரதம் கூறுகிறது.

> "And the daughter born of Sukra, named Divi, became the eldest wife of *Varuna*. In her were born a son named Vala, and a daughter named Sura giving joy unto the gods. And *Adharma* was born when creatures began to devour each other. And Adharma always destroys every creature. And Adharma had Niriti for his wife, whence the *Rakshasas* who are called Niritas." (*Vide* Section LXVI, Adi Parva of the Maha Bharata translated by Protap Chundra Roy).

வருணதேவருடைய மரபினராகிய ராட்சதர்களுக்கு மகாராட்சதர் என்று பெயர். மகாராட்சதர் என்னும் பெயரானது மகாராட்டிரர் எனத்திரிந்து தற்காலத்தில மாரட்டியர் என்று வழங்குகிறது. வருணனுடைய மரபினராகிய மகாராட்சதருடைய பூமியின் எல்லைகள் சமஸ்கிரத புராணங்களில் பின்வருமாறு கூறியிருக்கின்றன:—

வடக்கு—தப்தி நதியும் (Tapti), கேகயராட்சியமும்,

கிழக்கு—விதர்ப்ப தேசமும் (பீரார் நாடு), ஆந்திர திருலிங்க தேசங்களும் (ஹைதராபாத் ராட்சியம்),

தெற்கு—அபீரதேசமும் (பல்லாரி ஜில்லா), குந்தளதேசமும் (அதோனி நாடு),

மேற்கே—சமுத்திரம்.

இதன் விபரம் சென்னையராட்சிப்புஸ்தகம், 5-வது பக்கத்திலுள்ள படத்தாலறிக. இதுவே வருணபகவானுடைய தேசம். அவர் சமுத்திரக்கரைப்பிரதேசத்துக்கதிபதியாயிருந்தபடியால் அவருக்குப் புனல் வேந்தன் என்னும் பெயர் உண்டாயிற்று.

சினதேசத்திலிருந்து ஹியோன் துசாங் (Hwen Thsang) என்பவர் கிறிஸ்துவுக்குப்பின் 7-வது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தபோது மகாராஷ்டிரருடைய நாடானது வடக்கே மாளவதேசத்துவரைக்கும், கிழக்கே பீரார் நாட்டுக்கு வடமேற்கிலுள்ள தக்ஷண கோசலை, நைஜாம் ராஜ்ஜியம் என்னப்பட்ட ஆந்திர தேசம் என்பவற்றின் எல்லைவரைக்கும், தெற்கே மைசூர்நாட்டுக்கு வடக்கிலுள்ள கொங்கணதேசம்வரைக்கும், மேற்கேசமுத்திரக்கரை எல்லையாகப்பரவியிருந்ததெனக் கண்டெழுதியிருக்கிறார் (சென்னை அரசாட்சிப்புஸ்தகம், 1-வது வாலியூம், 10-வது பக்கம் பார்க்க).

ஹியோன்துசாங் இந்தியாவுக்கு வந்த சமயத்தில், அதாவது, 1200-வருஷங்களுக்கு முன்னிருந்த மகாராஷ்டிரரின் குணாதிசயங்களைப் பற்றி அவர் பின்வருமாறு எழுதிவைத்திருக்கிறார் :—

"They were simple and honest, tall in stature, and haughty in character. They are hot-headed, but grateful; ever ready to revenge an affront, or to help an ally. Their sense of honour was such that they warned an enemy before resenting an injury. They pursued those who fled, but they spared those who surrendered. If a commander lost a battle, he was compelled to wear a woman's dress, and generally committed suicide. Before commencing a battle these warriors got drunk themselves, and made their elephants drunk likewise. In this condition they hastened to the conflict, ready to encounter any odds; whilst the maddened elephants rushed forward in a mass, and trampled down all before them. *

* * * *

Pulakesi, the king of Maharashtra was a true *Kshatriya*. His views were large and profound. His liberality was unbounded."

(*Chapter V, History of India by Talboys Wheeler.*)

மகாராஷ்டிரர் கபடற்றவர்கள், உண்மையுள்ளவர்கள், பெருந்தன்மையிற் சிறந்தோர், முற்கோபிகள், நன்றியுள்ளவர்கள், தங்களை யாராகிலும் நிந்திப்பார்களாகில் பழிவாங்கத் தவறாதவர்கள், தங்களை அடைக்கலம் புகுந்தவர்களை எக்காலத்திலும் காப்பாற்றுகிறவர்கள், தாங்கள் பழிவாங்கப் போகும்போது முன்னமே சத்துருவுக்குத் தெரியப்படுத்திப் பழிவாங்குகிறவர்கள், தங்களுக்குத் தோல்வியடைந்தோடுகிறவர்களைத் துரத்திச் சங்காரம் செய்தாலும் தங்களைச் சரணமடைகிறவர்களுக்குத் தீங்கு செய்யாதவர்கள் என்றும், தங்களுடைய தளகர்த்தன் யாராகிலும் யுத்தத்தில் தோல்வியடைந்தால், அவனுக்கு ஸ்திரீயின் ஆடையை அணிவித்து, அவன் தற்கொலை செய்துகொள்ளும்படி விதிக்கிறது அவர்கள் வழக்கமென்றும், யுத்தம் ஆரம்பிக்கிறதற்குமுன் அவர்களும் அவர்களுடைய யானைகளும் அமிர்தபானம் பூராவாய்ச்செய்துகொண்டு, யுத்தத்துக்கு

விரைந்தேகி, யாவரெதிர்த்தாலும் தங்கள் யானைகளை அவர்களுக்கு நேராக ஒரே கூட்டமாக நடத்திச் சத்துருக்களை யானைகளின் காலால் மிதித்துக் கொண்டு போகிறவர்களென்றும், அக்காலத்திலிருந்த மகாராக்ஷத ராஜனாகிய புலகேசன் சரியான க்ஷத்திரிய வீரன் என்றும் பலவாறாக எழுதிவைத்திருக்கிறது. ஆகையால் அத்திரி ரிஷியின் மரபினராகிய இராஜபுத்திரரைப்போல, வருணபகவானுடைய மரபினராகிய மகாராக்ஷதரும் மகாவீரர்களாயிருந்தார்களென்று தெரிகிறது.

டால்பாய் உவீலர் துரை, சிவாஜி, ஒல்கார், சிந்தியா முதலிய மகாராக்ஷத ராஜாக்கள் கிறிஸ்துவுக்குப்பின் 12-வது நூற்றாண்டில் மகாராக்ஷத நாட்டுக்கு வந்த யாதவர்களாயிருக்கலாமென்றபிப்பிராயம் கொள்ளுகிறார். ஆனால் சந்திரகுலத்திலுதித்த கிருட்டிணமூர்த்தியின் மரபினராகிய யாதவர் என்னும் க்ஷத்திரியர் வேறென்றும், வருணபகவானுடைய மரபினராகிய மகாராக்ஷதர் என்னும் க்ஷத்திரியர் வேறென்றும் பூர்வநூல்கள் பகருகிறபடியாலும், மகாபாரதத்திலே மகாராக்ஷதருடைய உற்பத்திவிபரம் கூறியிருப்பதாலும், யாதவர்கள் 700-வருஷங்களுக்கு முன்வந்து மகாராக்ஷத நாட்டைக் கைப்பற்றினார்கள் என்று சொல்வதற்குப் பூர்வநூல் ஆதாரம் யாதொன்றுமில்லை.

வருணபகவான் க்ஷத்திரியனென்று இருக்கு வேதம் கூறுகிறபடி, அவர் மரபிலுதித்த மகாராக்ஷதர் க்ஷத்திரியரென்று வில்சோன் [illegible] எழுதியிருக்கிறார். வருணனுக்கு 'ஆரியகுலதெய்வம்' என்னும் பெயர் இருக்கு வேதத்தில் வழங்கியதுபோல், கோவாவுக்கும் சூரத்துப்பட்டணத்துக்கும் மத்தியிலும் சாகியாதிரிமலைக்கு மேற்கிலுமுள்ள கொங்கணதேசத்திய கொங்கணிமராட்டியருக்கு ஆரியர் என்னும் பெயர் தற்காலத்திலும் வழங்கி வருகிறதென்பதாக சென்னைபரசாட்சிப்புஸ்தகம், 1-வது வாலியூம், 30-வது பக்கத்தில் கூறியிருக்கிறது. இவர்கள் மகமதிய அரசாட்சி காலத்தில், உவேல்ஸ் தேசத்து மலையரசர்களைப்போல, தங்கள் சுயாதீனத்தை நிலைநிறுத்தினார்கள் என்பதாக டால்பாய் உவீலர் இந்துதேச சரித்திரக் கதைகள் என்னும் புஸ்தகத்தின் 117-வது பக்கத்தில் வரைந்திருக்கிறார்.

"But the Mahrattas of the Konkan maintained their independence in their natural fortresses, like the mountaineers of Wales before they were conquered by Edward the First." (*Tales from Indian History by Talboys Wheeler*)

மகாராக்ஷதராகிய க்ஷத்திரிய அரசர்களில் சிலர் தற்காலத்தில் அங்கிலேயருக்குக் கப்பங்கட்டிக்கொண்டு இராச்சியபாரஞ்செய்து வருகிறார்கள். பரோடா தேசத்திலிருக்கும் கெய்க்குவார் (Gaikwar of Baroda) என்னும் அரசனும், குவாலியர் நாட்டிலுள்ள சிந்தியா (Scindia of Gwalior) என்னும் அரசனும், இந்தூரிலுள்ள ஒல்கார் (Holkar of Indore) என்னும் அரசனும், நாகபுரியிலுள்ள போன்சிலா (Bhonsla of Nagpur) என்னும் க்ஷத்திரிய ராஜனும் வருணபகவானுடைய மரபினரென்றேற்படுகிறது.

10. வடமேற்றிசைப் பாலனுகிய வாயுவின் பூமியும், மேற்றிசைப்பாலனுகிய வருணனின் பூமியும் எவை என்று பார்த்தோம். இனி தென்மேற்றிசைப் பாலனுகிய சூரியனுடைய பூமி எதுவென்று பார்க்கலாம். வாயுவின் பூமியாகிய மைசூர் நாட்டுக்குத் தென்மேற்கில் மலேயாளம், கொச்சிராஜ்ஜியம் என்னும் நாடுகளிருக்கின்றன. இப்பிரதேசங்களில் க்ஷத்திரிய சூரிய குலத்தரசர்கள் பூர்வத்திலரசாண்டதாக பதினெண் புராணங்களிலொன்றுகிய பிரம புராணம் கூறுகிறது. அந்நாட்டிலே பிரதாபருத்திரன், இரதபலாசூரன் முதலான அசுரர் அரசாண்டுவந்ததாகவும், அவர்களைச்சுராபாண்டியனும் அவனுடையதம்பிமாரும் ஜெயித்து, அந்நாட்டைக்கட்டிக்கொண்டதாகவும், அந்தப்பாண்டியர்கள் சூரியகுல க்ஷத்திரியரென்றும் ஷை புராணம், பிரமோத்திர காண்டம் கூறுகிறது. இதன் சம்பந்தமாய் அக்காண்டத்தில்வரும் ஒரு இராஜ விளம்பரத்தையும் இராஜ கட்டியத்தையும் இவ்விடம் பெயர்த்தெழுதுவோம்.

விளம்பரம்.

"சிம்மாலகோட மன்னியவர்த்தனப்ரி சுராபாண்டீசுர ராசமன்னிய சத்தியதுரீவசம் மதுகேசரர் உக்கிரகேத்திரத்திற் பிறந்து, ரேணுகாபரஞ்சோதி புத்திரனுகிய சுராபாண்டீசுரர் தம்பியான மதுவீரபாண்டியருக்கு ஓரிக்கல நகரமும், பிரதாபருத்திரனுடைய நாடுகர்கள் சமஸ்தமுமளித்திருப்பதால், மதுவீரபாண்டியரே நாடாள்வார்."

கட்டியம்.

"சிம்மாலகோட மன்னியவர்த்தன சக்கரபுரிக்கு அரசனுகிய அமிர்தபாண்டிய விக்கிரமபாண்டிய மகாராசா பராக்கு, எச்சரிக்கை, சூரியகுல மன்னிய சத்திரிய சவுரிய பராக்கிரம கவுண்டலீக கோத்திர அசுரசம்மாரதேவசகாய ரேணுகா வரபுத்திர பராக்கு, எச்சரிக்கை."

பிரமோத்திர காண்டம் கூறும் இந்த விளம்பரத்தாலும் கட்டியத்தாலும் சூரியகுல க்ஷத்திரியர் வாயுவின் நாட்டுக்குத்தென்மேற்கிலரசாண்டார்கள் என்று தெரிகிறபடியால், தென்மேற்றிசைப் பாலனுகிய சூரியமகாராஜன் எனனும் க்ஷத்திரியன் சுராபாண்டியகுல முன்னோன் என்றறியலாம். அந்த நாட்டில் பூர்வீக ராஜவம்சமொன்று தற்காலத்தில் அங்கிலேயருக்குத் திறைகட்டிக்கொண்டரசாண்டு வருகிறது. அது அதிபூர்வ ராஜவம்சமொன்று சொல்லப்படுகிறபடியால் ஒருவேளை கொச்சிராஜாவானவர் இருக்குவேதத்தில் சொல்லப்பட்ட சூரியமகாராஜனின் மரபினராயிருக்கலாமென்று அனுமானிக்கலாம்.

11. தென்திசைப் பாலனுகிய இயமன் சூரியமகாராஜனுடைய குமாரன். [illegible] தென்திசைபாலனுனபடியால் அவருடைய பூமி [illegible]ப்பாகத்திலுள்ள தென்பாண்டியதேசமென்றறியலாம். அதுதான் [illegible] முதலில் கைப்பற்றியதேசம் என்பதாக முன்னே விவரித்தோம். [illegible] அந்நாட்டை முதலில் கைப்பற்றினபடியால் அதுவே அவர்களுக்கு மிகவும் அருமையான தேசம். ஆகையால் இயமன் பூமிக்கு

(1) நாகம், அதாவது நாக ர் முதலில் [illegible]கைப்பற்றிய தேசம் ;
(2) ஊழல், ,, பழமையானதேசம் (ஊழ்=பழமை), பூர்வத்தில் கைப்பற்றிய[illegible]சம், the land of antiquity ;
(3) விழ்கதி, ,, ஆசைப்பெருக்குற்ற பரகதி, the land of longed for bliss ;
(4) துரீவம், ,, அருமையானதே[illegible]

என்பதாகப் பற்பல பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. தென்றிசைப் பாலனாகிய இயமனுடைய பூமிக்குப் புலவு என்றும் பெயர். அதற்கு இரண்டு தாற்பரியம் கூறலாம். (1) புலம் என்றால் அறிவு (சதுரகராதி). ஆகையால் புலவு என்றால் அறிவன்தேசம் என்று பொருள். அறிவன் தேசம் என்பது தென்பாண்டி நாட்டுக்குப் பெயர். இதற்கு மேற்கோள் :—

தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல்,
20-வது சூத்திரம்.

அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்
ஐவகைமரபின் அரசர்பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர்பக்கமும்
மறுவில்செய்தி மூவகைக்காலமும்
நெறியினாற்றிய அறிவன்றேயமும்
நாலிருவழக்கிற்றாபதப்பக்கமும்
பாலறிமரபிற் பொருநர்க்கண்ணும்
அனைநிலைவகையோடாங்கெழுவகையிற்
றொகைநிலைபெற்றதென்மனார் புலவர்.

(2) புலவு என்னும் பெயரானது புல்லவு என்பதின் திரிபு என்று வைத்துக்கொண்டால் (புல் + அவு), அதற்கு அமுதநாடு என்றுபொருள் ; புல்=அமுதவிருட்சம், அவு=கூட்டமாகவுடையது. பாண்டிநாடென்னும் பெயருக்கும் அமுதநாடு என்றேபொருள் என்பதாக மக்ளீன் துரை சென்னை ராசாட்சிப் புஸ்தகம், 1-வது வாலியூம், 1-வது பக்கத்தில் வரைந்திருக்கிறார்.

"A conjecture may be hazarded that *Pandya* means the toddy-country ; from the Tamul பாணி toddy."

ஆகையால் தென்றிசைப் பாலனாகிய இயமனுடைய பூமி தென்பாண்டி நாடென்றறிக.

12. அக்கினிபகவான் தென்கிழக்குத்திசைப் பாலனெனப் பார்த்தோம். அவனுடைய பூமி எதுவென்று பார்ப்போம். வடமேற்றிசைப் பாலனாகிய வாயு மைசூர் நாட்டிலிருந்தபடியால், அதற்கு எதிர்த்த தென்கீழ்த்திசையில் அக்கினிபகவானிருந்திருக்கவேண்டும். மைசூருக்குத்தென் கீழ்த்திசையில் சேலம் ஜில்லா இருக்கிறது. இந்த ஜில்லாவானது ஒருகாலத்தில் சேரராசாட்சிக்குட்பட்டிருந்த தென் [illegible],

சேலம் சேரனுடைய பிரதான பட்டணங்களில் ஒன்றென்றும், சேலம் ஜில்லாவைச்சேர்ந்த கொல்லிமலையானது சேரனுடைய அரசாட்சிக்குட்பட்ட தானபடியால் சேரனுக்குக் கொல்லிவெற்பன், அதாவது, கொல்லிமலைக்கரசன் எனப்பெயருண்டாயிற்றென்றும் மக்ளீன் துரை சென்னையரசாட்சிப்புஸ்தகம், 1-வது வாலியூம், 126, 127-வது பக்கங்களில் வரைந்திருக்கிறார்.

"There are grounds for supposing that the Cheramandalam included once the present Mysore, Coimbatore, and *Salem*, the old Tondeinaud, and the present South Malabar and Cochin" *

* * * * *

"Various principal towns assigned to Chera are Caroor, Avanashy, *Salem*, Tiroonagary in Tinnevelly, with places on the west Coast. Among the titles given in poetical works to the Chera kings are Malayamaun or ruler of the Western hills, and Colliverpan or ruler of the Collamullays now in Salem."

சேரன் சேலம் ஜில்லாவிலரசாண்டரன் என்று காட்டும்படியாகச் சேரனுடைய பெயர் சேலம் பட்டணத்துக்கு வடக்கிலுள்ள சேர்வராயன் என்னும் மலையின் பெயரிலும் நிலைபெற்றுநிற்கிறது. சேரராயன்மலை என்னும்பெயர் சேர்வராயன்மலை எனத்திரிந்து வழங்குகிறது. ஆகையால் சேரன் குலத்தரசர் ஒர்காலத்திலின்னாட்டில் ராஜ்ஜியபாரம் செய்தார்களென்று ருசுவாகிறது. சேரனுடையகுலம் அக்கினிகுலமென்று வாசிக்கிறோம்.—

"Native authorities regarding the Chera Kingdom-Introduction—The following are maxims from Tamul poetry. The metropolis of the Chera country is Tiroovaunausicalam; the name of the king's horse is Paudalam. The king's distinctive garland is the flower of the pinnay tree. The chief rivers are the Tambravanny and the Porny. The device on the king's banner is a bow. He is of the *agnicoolam or fire-race.*" (Page 126, Volume I, of the Manual of the Administration of the Madras Presidency).

ஆகையால் அக்கினிபகவான் அக்கினிகுலத்தவர்களாகிய சேரராஜாக்கள் குலத்திலுதித்த ஒரு முற்பிதாவென்றும், அவர் மைசூருக்குத் தென்கீழ்த்திசையிலிருக்கும் சேலத்துக்கு அரசனாயிருந்தபடியால் அவருக்குத் தென்கீழ்த்திசைப்பாலன் என்னும்பெயருண்டாயிற்றென்றும் அறியலாம். கேரளர் என்னப்பட்டவர்கள் சேரனுடைய மரபினர்.

"Kerala was plainly an off-shoot from Chera" (Page 127 of the authority quoted above).

சேரராஜன் இக்காலத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருக்கிறார். அவர் இருக்குவேதம் கூறும் அக்கினிபகவானுடைய மரபினரென்றறியலாம்.

13. இந்திரன் கீழ்த்திசைப் பாலனெனப் பார்த்தோம். மேற்றிசைப் பாலனாகிய வருணனுடைய பூமியாகிய மகாராக்ஷத நாட்டுக்கு நேரே கீழ்த்திசையில் கிருஷ்ணா, கோதாவரி என்னும் ஜில்லாக்களிருக்கின்றதெனச் சென்னையரசாட்சிப் புஸ்தகம் 5-வது பக்கத்தில் வரைந்திருக்கும் படத்தாலறியலாம். வடமேற்றிசைப் பாலனாகிய வாயுபகவானின் பூமியாகிய மைசூர் நாட்டுக்குக் கிழக்கில் மகேந்திர மலைகள் என்னும் கீழ்காற்று மலைகளிருக்கின்றனவென்பதாயும் அதே படத்தில் பார்க்கிறோம். அந்தப்படத்தின் தலைப்பில் சமஸ்கிரத புராணங்கள் கூறும் ஸ்தல விபரப் படம் என்று கண்டிருப்பதால், அதே ஆதாரத்தைக்கொண்டு இந்திரனுடைய நாடு எதுவென்றறியலாம். வருணனுடைய பூமிக்கு நேர் கீழ்த்திசையிலிருக்கிற கிருஷ்ணா ஜில்லாவில் அமராபதி (அமரர்பதி)ப்பட்டணம் இருக்கிறது. இந்திரனுக்கு அமராவதியோன் என்று பெயரானபடியால் அதுவே இந்திரனுடைய பூர்வ ராஜதானியென்றறியலாம். அதற்குக் கிழக்கிலுள்ள கோதாவரி ஜில்லாவில் இராஜமகேந்திரி என்னும் பட்டணமிருக்கிறது. அப்பெயருக்கு இராஜனாகிய மகா இந்திரனுடைய பட்டணம் என்று பொருள். அது இந்திரனுடைய முக்கியமான துறைமுகப் பட்டணம். வாயுவின் பூமிக்குக் கிழக்கிலிருக்கும் மகேந்திர மலை என்னும் பெயருக்கும் மகா இந்திரனுடைய மலை என்றே பொருள். அந்த மலையானது கடப்பை, கர்நூல் முதலிய ஜில்லாக்களிலிருக்கிறது. ஆகையால் கீழ்த்திசைப் பாலனாகிய இந்திரனுடைய நாடானது வாயுவின் பூமிக்குக் கிழக்கிலுள்ள கடப்பை, கர்நூல் என்னும் ஜில்லாக்களையும்; வருணனுடைய பூமிக்கு நேர் கிழக்கிலுள்ள கிருஷ்ணா, கோதாவரி என்னும் ஜில்லாக்களையும் அடக்கியிருந்ததென்றறியலாம்.

14. சந்திரன் வடகீழ்த்திசைப்பாலன் என்று பார்த்தோம். நாம் மேலே கூறிய படத்தில் அமராவதிக்கு வடகிழக்கில் கலிங்கதேசமிருந்ததெனப்பார்க்கிறோம். அதற்குத் தற்காலத்தில் விஜாகபட்டணம் ஜில்லா என்று பெயர். கலிங்க தேசமென்றால் கலிங்கன் அரசுபுரிந்த பூமி என்று பொருள். கலிங்கன் என்பவர் யயாதி மகா ராஜனுடைய குமாரனாகிய அனுவென்பவரிலிருந்து 15-வது தலைமுறையில் தோன்றிய சந்திரகுலத்தரசன் (அங்க, வங்க, கலிங்க, சிம்ம, புவண்டர தேசாதிபதிகள் குலவிபர அட்டவணை பார்க்கவும், பக்கம் 7[illegible]). ஆகையால் கலிங்க நாட்டில் சந்திரகுலத்தரசர்கள் ராஜ்ஜிய பாரம்பண்ணினார்களென்றேற்படுகிறபடியால் இருக்குவேதம் கூறும் சந்திரன் கலிங்க நாட்டிலரசாண்டு கீர்த்திபெற்ற ஓர் பூர்வ அரசனென்றறியலாம்.

15. வடதிசைப் பாலனாகிய குபேரனிருந்த [illegible] தென்று தெரியும் குறிப்புகளிருக்கின்றன. இவர் முதலில் இலங்கை[illegible]யிலிருந்தார். இவர் பெரியவரானபோது தன் பிதாவாகிய விசிரவசு[illegible]யைப் பார்த்து எனக்குச் செவ்விதாகிய நாருறைவிடங்காட்ட வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர் குபேரனைப் பார்த்து,

“பிள்ளாய்! தென்கடனடுவில் திருகூடமலையின் சிகரத்தில், இலங்கை
யென்றொரு பட்டணமிருக்கின்றது; அது முன்பு அரக்கர்க்காக
விசுவகர்மா நிருமித்தது; அதில் பரந்து நீண்ட தெருக்களும் உயர்
தோங்கிய திவ்விய மாளிகைகளும் விசித்திரமான மண்டபப் பிரா
காரகோபுராதிகளும் ரமணீயமான பல சாலைகளுஞ் சோலைகளு மாலை
மாலையாய் விளங்குகின்றன. அது வாசத்துக்குத் தக்கவிடம்; முன்
பு அதிலிருந்த நிசாசரர்கள் ஸ்ரீமகா விஷ்ணுவுக்குப் பயந்து அத
னைத் துறந்து பாதாளத்திற்சென்றனர்; ஆதலின் தற்காலம் அது
குடியற்றதாயிருக்கின்றது; நீ அதிற் குடி புகுந்தினிமையொடு இரு
க்கக் கடவை என்றனர்,”

என்பதாக உத்தர ராமாயணம் கூறுகிறபடியால் குபேரன் முதலில் இல
ங்கைத் தீவிலிருந்தார் என்றறியலாம். அதன் பின்பு இராவணன்
விசிரவசு என்பவருக்குப்பிறந்து பெரியவனானபோது, இராவணன் பிர
கஸ்தனைக் குபேரனிடமனுப்பி இலங்கையைத் தனக்குக் கொடுத்துவிட்
டு வேறிடம் செல்லும்படி சொன்னபோது, குபேரன் அச்செய்தியைத்
தன் பிதாவிடம் சொல்ல, அவர் குபேரனைப் பார்த்து,

“அப்பா! மகனே! அவன் பிறப்பிலேயே கொடுந்தன்மையுள்ளவன்;
இப்பொழுது வரப்பிரசாதத்தால் கர்வங்கொண்டிறுமாந்திருக்கி
றான், மேலும் புத்தியீனனாய்ப் பெரியோர் சிறியோரென்று மரியா
தையற்று நடக்கிறான்; அவனோடுனக்குப் பிணக்குவேண்டாம்; அந்
நகரத்தை அவனுக்கே விட்டு நீ கைலாசத்தில் வசிக்கக்கடவை;
அது திவ்யமான ஸ்தானம்; மந்தாகினி என்னும் நதி யங்கே ஓடுகின்
றது; அதில் சூரியன்போன்ற பொற்றாமரைகளிருக்கின்றன. கந்த
ருவ கின்னராதிகள் எந்நேரமும் அங்கே மனோஹர கீத வாத்தியாதி
விநோதங்களால் விளையாடிக்கொண்டிருக்கின்றனர்;”

என்றார் என்பதாகவும் அங்கே இராமாயணம் கூறுகின்றது. இப்படியாக
குபேரன் இலங்கையை இராவணனிடம் ஒப்புவித்து வடதேசஞ்சென்று,
கைலாசகிரி போய்ச் சேர்ந்தபடியால் அவருக்கு வடதிசைப்பாலன்
என்னும் பெயருண்டாயிற்று. கைலாசகிரியில் சிவபெருமானுடைய
கூட்டத்தார் முன்னமே குடியேறியபடியால் குபேரன் அதன் பக்கத்
தில் போய்க் குடியேறினார். ஆனபோது குபேரனுக்கு அரன்றோழன்
என்னும் பெயருண்டாயிற்று; அதாவது, சிவபெருமான் கணத்தவர்
கைப்பற்றிய நாட்டுக்குப் பக்கத்திலுள்ள பூமியைக் கைப்பற்றினவர்
என்று பொருள்.

திவாகரம், தெய்வப் பெயர்த் தொகுதி, 10-வது சூத்திரம்.

வைச்சிரவணன் பெயர்.

மந்திரி குபேரன் நிதிக்கோனியக்கன்
[illegible]ப்புட்பியாத்தோழன்
வடதிசைக்காவ லியக்கர் வேந்தன்
அளகையாளி [illegible]
புட்பகவூர்தி தனதனமாக
னென வைப்ப நாமம் வைச்சிரவணற்கே.

சிவபெருமானின் கணத்தவர் கைப்பற்றிய நாடுதான் தொண்டமண்டலம் என்று திருக்கழுக்குன்ற புராணம் கூறுகிறது.

> "முக்கணன்கணநாதர்க் குண்முதுமைத்தொண்டரனுண்டு
> மிக்கதொண்டர் நன்னாடாய்த் தண்டகவேந்தன் றாங்கி
> தக்கதண்டக நன்னாடாய்த்தபனன் மாகுலத்துச் சோழன்
> றெக்கதாரத் தொண்டைமான் காத்ததுதொண்டை நாடே"

என்னும் செய்யுளாலறியலாம். ஆகையால் சிவபெருமான் எழுந்தருளிய கைலாச கிரியானது தொண்டமண்டலம் (சென்னபட்டணத்தைச் சுற்றிய பிரதேசம்) என்றும், குபேரன் அதற்கருகாமையிலிருந்தார் என்றும், அவர் இலங்கையிலிருந்து வடதேசம் வந்து குடியேறின காரணத்தாலவருக்கு வடதிசைப்பாலன் என்னும் பெயருண்டாயிற்றென்றும் அறிக.

இப்படியாக வேதங்கள் கூறும் தேவர்களில் முக்கியமானவர்களாகிய அட்டதிக்கு பாலர்களில்,—

வாயுபகவான்	... ...	மைசூர் நாட்டிலும்
வருணபகவான்	... ...	மகாராஷ்டிர நாட்டிலும்
சூரியன்	... ...	மலையாளம், கொச்சி என்னும் தேசங்களிலும்
இயமதரும ராஜன்	... ...	தென்பாண்டி நாட்டிலும்
அக்கினிபகவான்	... ...	சேலம் ஜில்லாவிலும்
தேவேந்திரன்	... ...	கடப்பை, கர்நூல், கிருஷ்ணா, கோதாவரி என்னும் ஜில்லாக்களிலும்
சந்திரமகா ராஜன்	... ...	விஜாகபட்டணம் ஜில்லாவிலும்
குபேரன்	... ...	சென்னபட்டணத்துக் கருகிலுள்ள பிரதேசத்திலும்,

அதிபூர்வ காலங்களிலரசாட்சி செய்தார்களென்றேற்படுகிறபடியாலும், சுராசுரர் முதலான தேவர்களெல்லாம் முதலில் குடியேறின தேசம் தென்னிந்தியாவேயன்றி வட இந்தியா அல்லவென்றும், ஆரியருடைய பூர்வ ஸ்தலத்தைப்பற்றி மாக்ஸ் மல்லர் துரை கூறும் அபிப்பிராயமானது பூர்வ நூல்களுக் கொத்துவராதென்றும், ஹேய்க்கல் துரை கூறும் அபிப்பிராயமே நூல்களுக்கொத்திருக்கிறதென்றும் நினைக்கிறோம்.

16. ஆரியராகிய தேவர்கள் முதலில் தக்ஷண பூமியிலேயே வியாபித்திருந்தபடியால் புண்ணிய தீர்த்தங்கள் எல்லாம் அல்லது மிச்சமானவை தக்ஷணத்திலிருக்கின்றன. அத்தீர்த்தங்களாவன :—

1. கங்கை	2. இயமுனை	3. சரசுவதி
4. நருமதை	5. காவேரி	6. குமரி
7. கோதாவரி	8. [illegible]கிரி	9. தாம்பிரபொருணி.

இந்த நவதீர்த்தங்களில் முதல் மூன்று தவிர ஏனைய அறுதீர்த்தங்களும் தக்ஷணபூமியிலுள்ளவை. முதலில் சொல்லப்பட்ட கங்கை யென்னும் தீர்த்தமானது வடநாட்டிலிருக்கும் கங்கா நதியையே குறிக்குமென்று திட்டமாய்ச் சொல்லுகிறதற்கு மார்க்கமில்லை. ஏனெனில் இந்தியாவில் கங்கை என்று சொல்லப்படும் நதிகளனேக மிருக்கின்றன. இலங்கையிலுள்ள நாலு நதிகளுக்கும் கங்கையென்றேபெயர்:—மகாவிலிகங்கை, காலனிகங்கை, காலுகங்கை, வாலவைகங்கை என்பவைகளே. இவையன்றியில் திருநெல்வேலி ஜில்லாவிலோடுகிற தாம்பிரபொருணி நதிக்கும், சேலம் கோயம்புத்தூர் திருச்சிறுப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்களில் ஓடும் காவேரி நதிக்கும் தேன்கங்கை என்று பெயரென்பதாகவும், மைசூர் நாட்டில் செல்லும் துங்கபத்திரைக்கும், கிருஷ்ணா ஜில்லாவிலோடும் கிருட்டிணவேணி நதிக்கும், கோதாவிரி ஜில்லாவிலோடும் கோதாவிரி நதிக்கும் நடுநிலைக்கங்கை யென்று பெயரென்பதாகவும், வடநாட்டிலோடும் பகீரதி, யமுனை என்னும் நதிகளுக்கு உத்தரகங்கையென்று பெயரென்பதாகவும் திருநெல்வேலித்தலபுராணம், தாம்பிரபன்னிச்சருக்கம், 16-வது கவியாலறியலாம்.

> "கன்னியாந் தமிழ்ப்பொருனை நதியுடனே காவேரி நதியுஞானந்
> தன்னையரு டேன்கங்கை தானுநடு நிலையதானகங்கை
> மின்னுதுங்கபத்திரையுங் கிருட்டிணவேணியுங் கோதாவிரியுமாகு
> முன்னுபகீரதி யமுனை யுத்தர கங்காநதி யென்றுரைப்பர்மேலோர்."

இப்படியாகப் பதினொரு நதிகளுக்குக் கங்கையென்னும் பெயர் வழங்கியிருப்பதால், புண்ணிய தீர்த்தங்களிலொன்றாகிய கங்கையென்னும் நதியானது வடநாட்டிலுள்ள பகீரதி நதியையே குறிக்கிறது என்று நிஷ்கரிஷையாய்ச்சொல்லுகிறதற்கு இடமில்லை. திருநெல்வேலி ஜில்லாவில் கன்னியாகுமரிக்கருகிலிருக்கும் குமரி என்னும் சிற்றாறுமுதலியவை புண்ணிய தீர்த்தங்களிலொன்றென்று கூறியிருக்கிறபடியால், கங்கை யென்னும் பெயரானது அப்பெயர் வழங்கும் பதினொரு நதிகளில் எதையும் குறிக்கலாம். அதேபிரகாரம் இயமுனை என்னும் பெயரும் வடநாட்டிலுள்ள இயமுனை நதியையட்டிலும் குறிக்குமென்று சொல்லுகிறதற்கு இடமில்லை. இயமன் பூமியாகிய தென்பாண்டி நாட்டிலுள்ள எந்த நதிக்கும் இயமுனை என்னும் பெயரானது காரணப்பெயராகச் சொல்லலாம். சரசுவதி நதியானது தற்காலத்தில் எங்கிருக்கிறதென்று சொல்ல முடியாது. ஆகையால் நவதீர்த்தங்களெல்லாம் அல்லது மிச்சமானவை தக்ஷண பூமியிலிருக்கின்றபடியாலும், தேவர்கள் முதலில் வசித்த பிரதேசமானது தக்ஷண பாகமேயன்றி உத்தர பாகமல்ல. இதே பிரகாரம் புண்ணிய தீர்த்தங்கள் ஏழு என்றும், [illegible] கூறுகிறவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குமரி என்னும் [illegible] றும் அவைகளிலொன்றென்று கூறுகிறபடியால், தேவர்கள் [illegible] யிலிருந்து இந்தியாவுக்குள் பிரவேசித்தவர்கள் என்றும், அவர்கள் முதலில் கண்ட [illegible] குமரி அக்காரணத்தால் புண்ணிய தீர்த்தங்களிலொன்றாயிற்றென்றும் தெரிகிறது.

ஏழு தீர்த்தங்களாவன

1. கங்கை 2. இயமுனை 3. சரசுவதி 4. நருமதை
5. காவேரி 6. குமரி 7. கோதாவரி

பதினொரு தீர்த்தங்களாவன

1. கங்கை 2. இயமுனை 3. சரசுவதி
4. சிந்து 5. நருமதை 6. கோதாவரி
7. கிருட்டிணவேணி 8. துங்கபத்திரி 9. காவேரி
10. குமரி 11. தாம்பிரபொருணி

என்பதாகச் சதுரகாதியின் தொகை யகராதியாலறியலாம். இவைகளிலெல்லாம் தக்ஷண பாகத்திலே மிக்கமான தீர்த்தங்களிருக்கின்றன. ஆகையால் தேவர்களின் பூர்வ ஸ்தலம் தென்தேசமானபடியால் புண்ணிய தீர்த்தங்களில் மிச்சமானவை தென்னிந்தியாவிலிருக்கின்றதென்றறிக.

17. ஆரியருடைய பூர்வ ஸ்தலம் தென்தேசமானபடியால், மகாபாரதம், இராமயணம் என்னும் இதிகாச வீரராகிய பஞ்சபாண்டவர்களும் இராம இலக்குமணர்களும் வனவாசஞ்செய்ய நேரிட்டபோது, அத்தினபுரி, அயோத்தியென்னும் பட்டணங்களுக்குக் கிழக்கிலும், வடக்கிலும், மேற்கிலுமுள்ள வனங்களை நாடாமல், தங்கள் குல பூர்வ உற்பத்தி திசையாகிய தென்தேசத்தையே அருமையாகவெண்ணி தென்றிசை நோக்கிச்சென்றனர். இவர்கள் சென்னை ராஜதானியில் வனவாசஞ்செய்தார்களென்பதாக மேற்படி இதிகாசங்கள் கூறுவதோடு, அவர்களுடைய சிலைகளையும் அநேக.யிடங்களில் இந்நாட்டில் பார்க்கிறோம். செங்கற்பட்டு ஜில்லா, செங்கற்பட்டு தாலூகாவிலுள்ள பல்லாவரம் என்னும் ஊருக்கருகிலுள்ள மலைகளில் பஞ்சபாண்டவர்கள் சிறிதுகாலம் தங்கியிருந்தபடியால், அந்த மலைகளுக்குப் பஞ்சபாண்டவமலை என்னும் பெயர் உண்டாகி, அதே பெயர் தறகாலத்திலும் வழங்கிவருகிறது. அதேபிரகாரம் வட ஆற்காட்டு ஜில்லாவில், ஆற்காட்டுதாலூகாவில், ஆற்காட்டு பட்டணத்துக்கு தென்மேற்கில் 4-மைல் தூரத்திலிருக்கும் மலைக்கும் அதேகாரணத்தால் பஞ்சபாண்டவ மலையென்னும் பெயர் நாளதுவரை வழங்கிவருகிறது. தென்னாற்காட்டு ஜில்லா, திண்டிவனம் தாலூகாவில் திண்டிவனத்துக்கு வடமேற்கே 18-மைல் தூரத்திலிருக்கும் தொண்டூர் என்னும் கிராமத்திலுள்ள மலைகளில் பாண்டவர்கள் சிறிதுகாலம் தங்கியிருந்தபடியால், அதுமுதல் அம்மலைக்குப் பஞ்சபாண்டவமலையென்னும் பெயர் வழங்கிவருகிறது. மதுரை ஜில்லா, மதுரை தாலூகாவிலுள்ள மேலூர் என்னும் கிராமத்திற்கு மேற்கே 3-மைல் தூரத்தில் கழுகு மலையென்னும் மலையொன்றிருக்கிறது: அம்மலையிலுள்ள ஒரு பாறையில் பஞ்சபாண்டவர்கள் இராத்தங்கியகாரணத்தால், அப்பாறைக்குப் பஞ்சபாண்டவர் படுக்கையென்னும் பெயர் அது முதல் வழங்கிவருகிறது. அதே ஜில்லா, பழனி தாலூகா, [illegible] என்னும் கிராமத்துக் கருகிலுள்ள மன்னவனூர் கிராமத்திலிருக்கும்

பாண்டப்பாறை என்னும் பாண்டவர்கள் மலையில் பூர்வத்தில் வெட்டப்பட்ட எழுத்துக்கள் இன்னும் இருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவில் சங்கரநயினார் கோவிலுக்குத்தென்மேற்கில் 8-மைல்தூரத்திலுள்ள வீரசிகாமணி என்னும் கிராமத்திலேயிருக்கும் குகைகளிலொன்றில் கைலாசநாதர் கோவிலும் பஞ்சபாண்டவர்களுடைய சிலைகளும் வெட்டப்பட்டிருக்கின்றன. இதேபிரகாரம் மதுரைஜில்லா, பழனி தாலூகா, ரெட்டயம்பாடி மிட்டாவிலுள்ள இவரை மலையினுச்சியில் ஒருகெபியையும், அந்தக்கெபியில் பஞ்சபாண்டவர்கள், இராமலக்குமணர்களுடைய சிலைகள்வெட்டப்பட்டிருக்கிறதையும் பார்க்கலாம். தென்னாற்காட்டுஜில்லா, வில்லுபுரம்தாலூகா, வளுதவூரின் கோட்டைக்குமேற்கில், இராமர், இலக்குமணர், சீதாதேவியார் என்னும் மூவரின் சிலைகளும் ஒரு ஆள் உயரத்துக்கு மேலாக வெட்டப்பட்டிருக்கின்றன. சேலம் ஜில்லா, தர்மபுரியிலுள்ள ஏரிக்கரையிலும் இராம லக்குமணர்களுடைய சிலைகள்வெட்டப்பட்டிருக்கின்றது. இப்படியாகப் பஞ்சபாண்டவர்களும் இராமலக்குமணரும் வனவாசஞ் செய்யும்படி தென்னாடுநோக்கிச்சென்றதானது, மற்றும் திசைகளில் வனவாசஞ்செய்யத்தக்க காடுகளில்லையென்றல்ல, தென்றிசையே சூரிய சந்திரகுலத் தரசர்களின் பூர்வ திசையென்னும் பிரியத்தால் இந்நாட்டுக்குவந்து வனவாசஞ் செய்தார்களென்றறிக.

18. முக்கண்ணன் என்னும் சிவபெருமானுடைய மனைவிகள் மூவரில், இரண்டாவது தாரமாகிய பார்வதிதேவியார் இமையமலை யரசன் மகளென்று புராணங்கள் கூறுவதால், அங்கிலேயரில் சிலர் இமையமலை என்பது இந்தியாவின் வடகோடியிலிருக்கும் இமையமலையைக் குறிக்கிறதென்றபிப்பிராயங்கொண்டு ஆரியர் வடநாட்டிலே முதலில் வியாபித்திருக்கவேண்டுமென்றெண்ணி வருகிறார்கள். இமையமலையினிருப்பிடத்தைப் பற்றிப்புராணங்கள் கூறும்விபரங்களைக் கவனியாமல் இந்துக்கள் முதலாய் இவ்வாறபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். இது தப்பான அபிப்பிராயமென்று புராணங்களாலறியலாம்.

அருணாசலபுராணம், திருவவதாரச்சருக்கம்,

63-வது கவி.

இமையவேற் பிறைவனேலை முகத்திலேழ் கிரிக்குமேருச்
சிமையமால் வரைக்குஞ் செம்பொற்றிகிரிமால்வரைக்கு மேழு
தமரவான் கடற்குஞ்சித்த சாரணர் முனிவோருக்கும்
அமரரானவர்க்கும் வஞ்சிமனைத்தினை யறிவித்தார்கள்.

இக்கவியில்பார்வதிதேவியாரின்பிதாவை 'இமையவேற்பிறைவன்', அதாவது', இமையமலை யரசன் என்று கூறியிருக்கிறது. இந்த இமையமலையானது எங்கேயிருக்கிறதென்றால்—மேருமலைக்குத்தெற்கே நிடதமலையிருக்கிறதென்றும், நிடதத்துக்குத்தெற்கே ஏமகூடமிருக்கிறதென்றும், ஏமகூடத்துக்குத் தெற்கே இமயமலையிருக்கிறதென்றும், ஆகையால் இமயமலையானது மேருமலைக்குத் தெற்கிலுள்ள நான்காவது மலையென்று புராணங்கள் தெரிவிக்கின்றன. இதற்கோர் மேற்கோள்:—

கூர்மபுராணம், சம்புத்தீவின் சிறப்புரைத்த வத்தியாயம்,

5-வது கவி.

பூமியென்னுங் கமலத்தின் பொகுட்டைப்போலும் பொலங்கிரிசூழ்
நாமவருட வரையனைத்து நவிலின்மேல் சிழ் கடலளவுந்
தாமம்போலு நிடதவரை தென்பாற் சாறுமதன் றென்பால்
ஏமகூடங் கிடக்குமதன் றென்பாலிமயங் கிடக்குமால்.

இக்கவியில் பொலங்கிரி என்னும் மேருமலைக்குத் தெற்கில்நிடதமலையும், அதற்குத் தெற்கில் ஏமகூடமும், அதற்குத்தெற்கில் இமயமுமிருக்கின்றதெனக் கூறியிருப்பதால், மேருமலையெங்கிருக்கிறதெனப்பார்ப்போம். இலிங்கபுராணத்தில் மேருமலைக்குக் கிழக்கில் தேவேந்திரனுடைய அமராவதிப்பட்டணமிருக்கிறதென்று கண்டிருக்கிறது.

இலிங்கபுராணம், மேருவின் சிறப்புரைத்த வத்தியாயம்,

5-வது கவி.

ஆயவரையிற் குணபுலத்திலமரர்பதி யென்றமரர்கோன்
மேயநகரமொன்றுளதாம் வெய்ய கனலித்திசையதனிற்
காயுஞ்செந்திக்கடவுளுக்குக்கடல் வாய்மணியின் கதிர்க்கற்றை
பாயுமதில் சூழ்தேசுவதிநகரம் பழுதின்றுறையுமால்.

இக்கவியில் மேருவின் குணபுலத்தில், அதாவது, கிழக்கே, தேவேந்திரனுடைய அமராவதிப் பட்டணமிருக்கிறதென்று கூறியிருப்பதால், அமராவதிக்கு மேற்கேமேருமலை யிருக்கவேண்டும். தேவேந்திரனுடைய அமராவதிப் பட்டணமோவெனில் கிருட்டிணா ஜில்லாவிலிருக்கிறதென்றுமுன்னமே பார்த்தோம் (118-வது பக்கம்). ஆகையால் மேருமலையென்பது கிருஷ்ணா ஜில்லாவுக்கு மேற்கிலுள்ள மலை என்றறியலாம். அதற்குத்தெற்கேநிடதமும், அதற்குத்தெற்கே ஏமகூடமும், அதற்குத் தெற்கே இமயமுமிருந்ததென்று நூல்கள் கூறுகிறபடியால், புராணங்கள் கூறும் இமயமானது வடநாட்டிலுள்ளதல்லவென்றறிக. இந்த இமயமலைக்குத்தற்காலத்தில் வழங்கும் பெயரென்னவென்று பார்ப்போம்.

அருணாசலபுராணம், தீர்த்தச்சருக்கம்,

1-வது கவி.

செருமலையுங்களிற்று முகப்பிள்ளையிரு பதம்போற்றித் திரையான் முத்தக்
தருமலைபொருமலையுந் தொலைத்தமலைக் கிழவனிருசரணம்போற்றிப்
பொருதலையு மிரங்கலையு மடியாருக் கொழிக்கவழற் பொருப்பாய்நின்றென்
கருமலையுஞ் செம்மலையும் பசிரைமலை யடநீதையையுங் கருத்தட்டேர்ப்பாம்.

இதன்கருத்து.

யுத்தஞ்செய்யத்தக்க யானைபோன்ற முகத்தையுடைய விநாயகக் கடவுளுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கி: அலைகளாலே முத்துக்களைக் கொழிக்கும் சமுத்திரத்தையும், கிரவுஞ்சமலையையும் கல்லுருகைக் குட்டப்படுத்திய முருகக் கடவுளின் இரண்டு பாதங்களையும் வணங்கி; துன்பத்தையும் நோயையும் அடியாரைவிட்டு ஒழிக்கும்படியாக அக்கினி மலையைப்போல் [illegible] என்னுடைய ஜீவித நா[illegible]

பத்தை நீக்கிய சிவபெருமானையும், பச்சைமலையிற்றோன்றிய பார்வதி தேவியாரையும் மனதால் தியானிப்போம் என்றுபொருள்.

பார்வதிதேவியாரின் பிதாவை "இமயவெற்பிறைவன்" என்றுகூறிய அதேபுராணத்தில் தேவியாரை "பச்சைமலைமடந்தை" என்று கூறியிருப்பதால் இமயமலை யென்பது பச்சைமலையைக்குறிக்கிறதென்று அறியலாம். இந்தப்பச்சைமலையானது சேலம் ஜில்லாவுக்குந் திருச்சிறுப்பள்ளி ஜில்லாவுக்கு மத்தியிலிருக்கிறது. இதுதான் கூர்மபுராணம் கூறும் விபரப்படி மேருமலைக்குந் தெற்கிலுள்ளது. இதுவே புராணங்கள் கூறும் இமயமலை.

பச்சைமலைக்கு இமயமலையென்னும் பெயருண்டானதற்குக் காரணம் கூறுவோம். பார்வதிதேவியாரின் பிதாவுக்குமயன் என்றும், இமவான் என்றும் பெயர். இதற்கு மேற்கோள் வருமாறு:—

அருணாசலபுராணம், திருவவதாரச்சருக்கம்,

35-வது கவி.

என்னுதன்றனை யிகழ்ந்தோன் புதல்வியென வுலகுரைக்கு மிசைகண்டொரீஇத்
தன்னுகந்தன் யோகசாதனத்தால் விடுத்தி மயன் றவத்தினாலும்
முன்னாக மைநாகன் றனைப்பயந்த மேனையது முயற்சியாலு
மின்னாக வவதரித்தாளமரரெலாங் கற்பகப்பூ [illegible]னரே.

இக்கவியில் பார்வதிதேவியின தகப்பன்பெயர் மயன் என்றும், தமையன் பெயர் மைநாகன் என்றும், தாயின் பெயர் மேனை யென்றும் கூறியிருக்கிறது.

இலிங்கபுராணம், தேவியிமவானுக்கவதரித்த வத்தியாயம்,

5-வது கவி.

கருமணி விட்டகதி ரெனவார்த்து கடைகுழன் மெழுகுமென் கூந்தல்
வருமலை யிறைவி மழுப்படையேந்து மவர்தனை யிகழ்ந்து முன்றக்க
னொருமகமாற்றல் கண்டுழங்கொதியா வவ்வுட லொழித்துயர் கோட்டுப்
பொருவருமிமவான் புதல்வியாய் வந்து பொருக்கெனவுதித்தனள்மன்னோ.

இக்கவியில் பார்வதியின் பிதாவுக்கு இமவான் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

ஆகையால் பார்வதியின் பிதாவுக்கு மயன் என்றும், இமவான் என்றும் பெயரென்றறிக. அவர் பச்சைமலைப் பிரதேசத்துக்கதிபதியாயிருந்தபடியால், மயன்மலை என்னும் பெயரானது மயமலை என்றுதிரிந்து, அதன்பின் இமயமலை யென்றாகியிருக்கலாம். அல்லது இமவான்மலை என்னும்பெயரானது இமயமலை என்றுதிரிந்திருக்கலாம். அருமருந்தன்னபிள்ளை யென்பது அருமந்தப்பிள்ளை யென வழங்கிவருவதுபோல், இமவான்மலை யென்பது இமயமலை என்று வழங்கிவருவது ஆச்சரியமன்று.

ஆகையால் பார்வதிதேவியாருக்கு வழங்கிய இமயமலையரசன் புத்திரி என்னும் பெயரை ஆதாரமாகக்கொண்டு தேவர்கள் வடநாட்டிலிருந்தார்களென்று சொல்லுகிறது பிசகென்றும், புராணங்களில் [illegible]

குறித்த இமயமலையானது திருச்சினாப்பள்ளி ஜில்லாவுக்கு வடக்கி லுள்ள பச்சைமலையேயன்றி இந்தியாவின் வடகோடியிலுள்ளமலையல் லவென்றும் அறியலாம். மேலும் சிவபெருமானுடைய மூத்த மனை வியாகிய சத்திதேவியார் தக்ஷண பூமியிலுள்ள தக்ஷன் (தக்கன்) என் பவருடைய மகளானபடியாலும், மூன்றாவதுமனைவியாகிய தடாதகைப் பிராட்டியார் மலயத்துவச பாண்டியனுடைய மகளானதாலும், இவ் விருவரும் தக்ஷணத்திலுள்ளவர்களென்றேற்படுகிறபடியால், முக்கண் ணனாகிய சிவனுடைய மூன்று மனைவிகளும் தென்தேச ஸ்திரீகளென் றறியலாம். இதனாலும் தேவர்களுற்பத்தி ஸ்தலம் தென்தேசமென்றே ரூபகாரமாகிறது.

19. தேவர்கள் ஆதியில் வியாபித்திருந்த பாகம் தென்லிங்கியா வென்று பார்த்தோம். அவர்கள் இந்தியாவில் முதலில் கைப்பற்றியபா கம் பாண்டி நாடென்னப்பட்ட இயமலோகம். அந்நாட்டில் இயமன் கூட்டத்தார் முதலில் வந்து சேர்ந்தபடியால் அதற்கு இயமலோகம் என்னும் பெயருண்டாயிற்று. அதன்பின்பு சந்திரகுல பாண்டியரா ஜாக்களந்நாட்டில் அரசாண்டபடியால் அதற்கு பாண்டி நாடென்னும் பெயருமுண்டாயிற்று. பாண்டிநாட்டிலரசாண்ட குலசேகரபாண்டி யனுடைய குமாரனான மலயத்துவச பாண்டியனுக்கு ஆண் சந்ததி யில்லாதபடியால், அவனுடைய மகளாகிய தடாதகைப்பிராட்டியார் கன்னிகையாயிருந்துகொண்டு சிறிதுகாலம் அரசாட்சி செய்தபடியால் அந்நாட்டிற்குக் கன்னிநாடென்னும் பெயருண்டாயிற்று. அந்தப்பி ராட்டியாரைச் சிவபெருமான் மூன்றாவது தாரமாக மணம்புரிந்து, சுந் தரபாண்டியன் என்னும் பெயர்தரித்து, அவரே அந்நாட்டிலரசாண்ட படியால் அந்நாட்டுக்குச் சிவலோகம் என்றும் பெயர்.

திருவிளையாடற் புராணம், திருநாட்டுப்படலம்,
52-வது கவி.

சிறந்த தண்டமி ழாலவாய் சிவனுல காளுற்
புறந்தயங்கிய நகரெலாம் புரந்தரன் பிரமன்
மறந்தயங்கிய நேமியோனாதிய வானோ
[illegible]றந்தயங்கிய வுலகுரு வானதேயாகும்.

இக்கவியில், ஆலவாய் என்னப்பட்ட மதுரைக்குச்சிவனுலகு என்றபெய ரெனக்கண்டிருக்கிறது.

ஷை புராணம், ஷை படலம்.
69-வது கவி.

இக்கெலாம் புகழ் மதுரையைச் சிவபுரமாக்கி
முக்கணையசனாகவிசய முறைமையினுக் [illegible]
தக்கதோழமேனுடனைகை மாநகருறை [illegible]
மொகுமாங் நகர்வாணிகருறையுள் குழ்ந்[illegible]

இக்கவியிலும் மதுரைக்குச்சிவபுரம் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

ஷை புராணம், புராணவரலாறு,

24 வது கவி.

பெறற்கருந்தவஞ்செய் தகந்தெளிந்தரிதிற் பெருங்கதி கேட்பவர்க்கெளிதா
யுறப்படுந்தல நீர்விளுயமுச்சிறப்பு முள்ளதெந் தலத்தினுங்கழிந்த
சிறப்பினுங்கென்னெண் டிருவிளையாடல் செய்தருள்வடி வெடுத்தென்று
மறைப்பொருள் விளங்கு மாலவாயதனை மண்ணின்மேற்சிவனுலகென்னும்.

இக்கவியில் மதுரையானது மண்ணின்மேல், அ[illegible], பூலோகத்தில் சிவனுலகேன்னப்படும் என்று கூறியிருக்கிறது.

ஷை புராணம், தலவி[illegible]டம்,

21-வது கவி.

[illegible] திருமா [illegible]ரின்பேர் சிவ நகரங் கடம் [illegible]வனமமர்ந்தோர் சிவன்
முத்திபுரங் கன்ன[illegible] திருவாலவாய் [illegible]துரை [illegible] முடியாஞானம்
பத்திதரும் பூவுலகிற்சிவலோ[illegible] [illegible]ட்டி விச்சாபுரந்தென்கூடல்
பத்திதருதுவாத சாந்தத்தல மென்றேதுவிளுற் [illegible]கர்வர்கல்லோர்.

இக்கவியில் மதுரைக்குச் சிவநகரமேன்றும் பூவுலகிற் சிவலோகமேன்றும் பெயரெனக் கூறியிருக்கிறது.

ஆகையால் மும்மூர்த்திகளில் முதல்வராகிய சிவபெருமானுடைய பூர்வ ஸ்தலம் பாண்டிநாடென்றறியலாம். அவருக்குப் பாண்டிநாட்டான், தென்பாண்டிநாட்டான் என்னும் பெயர்களும் வழங்கியிருக்கின்றன:—

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவம்மானை.

* * *

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளுமன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண் பாண்டிநாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார்கழல் காட்டி நாயேனையாட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங் காணம்மானாய்.

* * *

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப்பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக்காவானைத் தென்பாண்டிநாட்டானை
யென்னானை யென்ன[illegible] [illegible]
யன்[illegible] பாடுதுங் காணம்மானாய்.

ஆகையால் மும்மூர்த்திகளில் முதல்வராகிய சிவபெருமான் [illegible]
[illegible] பாண்டிநாட்டாரால்லவென்றறிக.

30. இப்பாண்டிநாடே மும்மூர்த்திகளுக்கும் பூர்வ ஸ்தலம் எனப
[illegible] திருநெல்வேலிப்புராணம், சிறப்புப்பாயிரம், 2-வதுகவிகூறியிருக்கிறது.

வேதனு நெடியமாலும் விளம்புதற்கரியநான
நாதனு முலகமீன்ற நங்கையு நயந்துமேவுட்
டுதவமொழித்து மேலாஞ்சீர் கெழுமனுவிற்காக்க
மாதவமியற்று நாடிவண்டமிழ்க்கன்னிநாடு.

வேதனாகிய பிரமனும், நெடியமாலாகிய விட்டுணுவும், விளம்புதற்கரிய நாதனாகிய சிவனும், உலகமீன்ற நங்கை என்னும் சத்திதேவியாரும், கன்னிநாடென்னப்பட்ட தென்பாண்டி நாட்டில் மாதவமியற்றினார்களென்று இக்கவி கூறுகிறது.

இந்நாட்டிலேயே இந்துமார்க்கம் முதலாவது ஆரம்பித்து அதன் பின்பு வடதேசம் பரவின[illegible]

"Mr. *Pope* in his edition of the Abbe Dubois' work (see the note page 307, 2nd Edition) says that in South India numberless legends relating to devout worshippers of the linga are current: that some of them are curious, and they are exclusively of *southern origin.* And *Wilson* states in his introduction to the catalogue that *tradition uniformly points to an extension of Hinduism and civilization from the extreme south of the Peninsula.*" (Page 48, Chapter II, Part III of the District Manual of Madura by *J. H. Nelson*, M. A.)

மதுரை ஜில்லாவைப்பற்றி நெல்சன் துரை யெழுதியபுஸ்தகத்தில் நாம் மேலே பார்த்தபடி போப்பு துரையும் உவில்சன் துரையும், சிவலிங்கபூசையின் ஆரம்பத்தைக்குறிக்கும் ஐதீகங்கள் எல்லாவற்றிலும் தென்தேசமே இந்துமார்க்கம் ஆரம்பமான பூமியென்றும், அங்கிருந்து அம்மார்க்கமானது வடதேசம் பரவினதென்றும் எழுதியிருக்கிறார்களெனச் சொல்லியிருப்பதாலும் தேவர்களென்னப்பட்டவர்களெல்லாரும் அதிபூர்வகாலங்களில்தென்தேசத்திலிருந்தக்ஷத்திரியவீரர்களென்றறியலாம்.

உவில்சன் துரை தென்பாண்டி நாட்டிலே இந்துமார்க்கம் உற்பத்தியாகி, அதன்பின்பு அம்மார்க்கமானது வடதேசத்துக்குச்சென்று பரவினதென்று மேலே கூறியிருக்கிறபடி, திருவிளையாடற் புராணத்திலும் சிவலிங்கமானது மகாமேரு, கைலாசம், மந்தரம், கேதாரம், காசி முதலிய ஸ்தலங்களில் தோன்றுகிறதற்குமுன்னே மதுரையைச்சுற்றிய கடம்பவனத்தில் முதல் முதல் தோன்றி, அதன்பின்பு அதன் கிளைகள் வடநாட்டிலுள்ள ஸ்தலங்களிலுதித்ததென்றும், ஆகையால் மதுரையில் தோன்றிய சிவலிங்கத்துக்கு மூலலிங்கம் என்று பெயரென்பதாகவும் வாசிக்கிறோம்.

திருவிளையாடற்புராணம், மூர்த்தி விசேடம்,
உ-வது கவி.

பொன்னெடு மேருவெள்ளிப் பொருப்பு மந்தரங்கேதாரம்
வன்னெடும் புரிசை சூழ்ந்த வாரணவாசியாதிப்
பன்னருந்தலங்கடம்மிற் பராபர லிங்கந்தோன்று
முன்னரிக்கடம்பின் மாடே முளைத்ததிச் சிவலிங்கம்.

௰-வது கவி.

அப்பதியிலிங்கமெல்லா மருட்குறிநிகழ்ந்தனிற்பின்பு
சப்புவிட்டெழுந்த விந்தக்காரண மிரண்டினுலு
மொப்பரிதான ஞானவொளி திரண்டதான விந்தத்
திப்பியவிலிங்க மூலவிலிங்கமாய்ச் சிறக்குமன்றே.

இவ்வாறு சிவலிங்கமானது முதலில் திருவாலவாய் என்னப்பட்ட மதுரையிலுண்டான காரணத்தால், அதை சிவ ஸ்தலங்களுக்கெல்லாம் சிரேஷ்டமான ஸ்தலம் என்பதாகப்புராணிகள் கூறுவர்.

"எப்படியென்றால் எல்லா வுலகங்களிலும் புண்ணியக்ஷேத்திரங்களேயதிகம், அந்தப்புண்ணிய க்ஷேத்திரங்களிலும் சிவக்ஷேத்திரமதிகம், அந்தச்சிவக்ஷேத்திரங்களிலும் அறுபத்தெட்டு சிவஸ்தலங்கள் அதிகம், அந்த அறுபத்தெட்டிலும் பதினாறு தலங்கள் அதிகம், அந்தப்பதினாறிலும் நான்கு தலம் அதிகம். அவையாவன:—சிதம்பரம், காசி, காளத்தி, திருவாலவாய் ஆகிய இந்த நான்கிலும் திருவாலவாய் அதிகம். எப்படியென்றால்—சிதம்பரம் தரிசிக்கமுத்தி, காசி அங்கு நின்றிறக்கமுத்தி, காளத்தி பூசிக்க முத்திகொடுக்கும், திருவாலவாய் கேட்டவுடனே இகபரமோக்ஷங்களைக்கொடுக்கும். இதையல்லாமல் பரிபூரணமாய் எங்கு நிறைகின்ற பரமசிவம் சிவஸ்தலங்களையெல்லாம் உண்டாக்குதற்காக முன்னே இந்தத் திருவாலவாயையுண்டாக்கி இதில் வாசஞ் செய்தருளியது. ஆதலால் திருவாலவாயென்னக் கேட்டவர்களே அறத்தைப்பெறுவார்கள், திருவாலவாயென்று [illegible] பொருளைப் பெறுவார்கள், திருவாலவாயில் சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்தவர்களே இன்ப நலத்தைப் பெறுவார்கள், திருவாலவாயில் எப்பொழுதும் வசிப்பவர்களே வீட்டைப்பெறுவார்கள்."

(திருவிளையாடற் புராணம், தல விசேஷம் பார்க்க).

ஆகையால் சகல சிவஸ்தலங்களுமுண்டாவதற்கு முன்னுண்டான மதுரையில் பரமசிவம் வாசஞ் செய்தாரென்றும், மதுரையில் தோன்றிய சிவலிங்கமே மூலலிங்கமென்றும் கண்டிருப்பதால் இந்தியாவில் தென் பாண்டி நாடே சிவபெருமானுடைய பூர்வ ஸ்தலமென்றும், அவருடைய இனத்தார்களாகிய சுராசுரர் முதலிய தேவகணங்களெல்லாம் அந் நாட்டிலிருந்தே வடதேசம் சென்று பரவினார்களென்றுமறியலாம்.

21. தேவகுருவாகிய வியாழனிருந்து தவஞ் செய்த இடம் மதுரைக்குத் தெற்கிலுள்ள குருவிருந்ததுறை என்னும் பெயர்கொண்டவூர் என்பதாகப் புராணம் கூறுகிறது.

திருவிளையாடற் புராணம், பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்த படலம்,

௨-வது கவி.

முறைநெறி [illegible] சான்ற
[illegible] வைத்தவுமை பாகன் [illegible]
இறைபெறவிறீர் வையைத்தென்கரை குருவிருந்த
துறையெனவுளதோர் செல்வத்தொன்னகர் மாடமாதோ.

3-[illegible]து கவி.

கருநாதனுதிவானோர் த[illegible]குருவிருந்துநோற்பக்
குருநாதனெனப்பேர்[illegible]ற்றுக் கோதிலாவரந்தந்தேற்றில்
வருநாதன்சித்திரத்தே[illegible]வலவ னருடனேகஞ்சத்
திருநாதன்மரவவைகி யிருக்குமச்சிறந்தவூரில்.

இவற்றின் பொருள்.

ஆதியில் அமுதவுற்பத்தி[illegible] காலத்தில் தேவர்களுக்கு விஷம் நீங்கிய மதுவையருந்தும்படி கடாட்சித்த சிவபெருமான் எழுந்தருளிய மதுரைக்குத்தெற்கே குருவிருந்தத்துறை என்றொரு வூருண்டு. அதில் தேவர்கள் குருவாகிய வியாழபகவானிருந்து தவஞ் செய்ய, அவருக்காகவேண்டிய வரங்களைக் கொடுத்து, சித்திரத்தேர்வலனும் இலக்[illegible]நாதனும் வணங்க, குருநாதனென்னும் பெயரினுலே விளங்க[illegible]து குருவிருந்ததுறை என்ப[illegible]

[illegible]தேவர்களின் குருவானவர் மதுரைக்குத்தெற்கிலுள்ள குருவிருந்ததுறை என்னும் கிராமத்தில் தவஞ்செய்துகொண்டிருந்தார் என்றிருப்பதால், தேவர்களும் ஆதியில் அத்தென்பாண்டிநாட்டிலேயேயிருந்தார்கள[illegible]றியலாம்.

22. தென்பாண்டி நாடு சுராசுரர்களென்னும் தேவர்களுற்பத்தி ஸ்தலமானதால் புண்ணிய ஸ்தலங்களெல்லாவற்றினும் தென்பாண்டி நாட்டிலுள்ள மதுரையே சிறந்த புண்ணிய ஸ்தலமாக [illegible]க்கள் மதித்து வருகிறார்கள்.

தேவர்களுக்கிறைவனாகிய தேவேந்திரன் நான்கு யுகங்களுக்கு முதல் யுகமாகிய கிரேதாயுகத்தில் தனக்குக் குருவாக இருந்த விச்சுவருவனென்னும் அசுரனைக்கொன்றபடியால் விருத்திராசுரனென்பவன் தேவேந்திரனோடு போர் புரிந்தானென்றும், தேவேந்திரன் வச்சிராயுதத்தால் விருத்திரனுடைய தலையைத் துணித்தானென்றும், அப்போது விருத்திரனைக் கொன்ற பழியானது தேவேந்திரனைத் தொடர்ந்து பிடிக்க, தேவேந்திரன் அப்பழியை நீக்கும்பொருட்டாகக் கங்கை முதலிய அளவிறந்த தீர்த்தங்களிலெல்லாம் மூழ்கி, காசி, காஞ்சிவரம், கேதாரம் முதலிய சிவஸ்தலங்கள் பலவும் வணங்கியும் விருத்திரனைக் கொன்ற பாவம் விடாததாய்த் தென்திசை நோக்கிச் சென்றான் என்றும், அவ்வாறு அவன் தென்பாண்டி நாட்டிலுள்ள கடம்பவனத்தின் எல்லையைச் சமீபித்தவுடனே தொட்டபழி விட்டுப்போக, இந்திரன் அளவிறந்த சந்தோஷத்தையடைந்தானென்றும், திருவிளையாடற் புராணம், [illegible] பார்க்கலாம்.

70-வது கவி.

[illegible] தீர்த்த[illegible]
[illegible] கேதார முதற்பதிகள் பலபணிந்து [illegible]
[illegible] பழிவிடா தழுங்கி [illegible]
[illegible] கடம்ப வனத்தில் [illegible]

71-வது கவி.

தொடுத்தபழி வேருகி விடுத்தகன்ற இந்திரனுன் சுகந்த பா[illegible]
விடுத்தவனைத் தளவிறந்த மகிழ்வெய்தித் தேசிகன்பால் விளம்ப[illegible]பாசக்
கெடுத்தவன்மா தலம்புனித தீர்த்தமுள திவணமக்குக் கிடைத்தல[illegible]
மடுத்தறிக வெனச்சிலைர விடுத்தவ்வே ருகிலேன் றப்பாற்செல்வான்.

இவ்வாறு வடநாட்டிலுள்ள புண்ணிய ஸ்தலங்கள் யாவற்றிலும் தீராத பழி தென்பாண்டி நாட்டிலுள்ள கடம்பவனத்தைக் கிட்டின வுடனே தீர்ந்ததென்று புராணிகர் சொல்வதால், தென்பாண்டி நாடே தேவர்களின் பூர்வ ஸ்தலமென்றறிக.

23. சிவபெருமானுடைய குமாரனாகிய சுப்பிரமணியக் கடவுளுடையபூர்வஸ்தலம் திருநெல்வேலிஜில்லாவிலுள்ளசிவகிரியென்னுமலை; அவருடைய மனைவியாகிய தெய்வயானை சுப்பிரமணியரை விட்டுப்பிரிந்தபின்புதங்கிய இடம்மதுரைக்கடுத்த திருப்பரங்குன்றம்; சுப்பிரமணியா சேர்த்துக்கொண்ட பெண்ணாகிய வள்ளியம்மாள் திருநெல்வேலிஜில்லாவிலுள்ள திருச்செந்தூரிலிருந்தவள். இவ்வாறு சுப்பிரமணியரும், அவருடைய மனைவியும், போகஸ்திரியும் தென்பாண்டி நாட்டிலே இருந்தார்களென்று சொல்லியிருப்பதாலும், தேவர்களுடைய பூர்வ ஸ்தலம் தென்பாண்டிநாடென்றறியலாம்.

முருகர் ஒயிற் கொம்மிப்பாடல்.

64-வது கவி.

நல்ல சுபதின வேளையிலே யுனை
நாதன் சிவகிரி வேலனுமே
காலைக்-கலியாணஞ்செய
மேளத்-தொகுதாளத்தொனி
நாரதன் வேடிக்கை பார்ப்போமென்றார்.

216-வது கவி.

அந்த மொழியை யறிந்து சிவகிரி
கந்தனுஞ் சிந்தை மதிமயங்கி
அருமைக்குற-மவளைத்தன
முரிமைப்பல—மனமுற்றவ
ராளை முகனைத் தியானஞ் செய்தார்.

இவ்விரண்டு கவிகளிலும் சுப்பிரமணியக்கடவுளைச் சிவகிரி வேலன், சிவகிரி கந்தன் என்று சொல்லியிருப்பதால், சுப்பிரமணியருடைய பூர்வ ஸ்தலம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிவகிரியென்றறியலாம்.

வள்ளியம்மையைத்தேடி சுப்பிரமணியரும் தெய்வமுனியாகிய நா[illegible] [illegible] சென்ற மார்க்கத்தைப் பார்த்தாலும், அவர்கள் திருநெல்வேலி [illegible]டாரென்றறியலாம். அவர்கள் சிவகிரியிலிருந்து

பொன்மலை
யானைமலை
குற்றாலமலை
பொதிகாசலம்

என்பவற்றைத் தாண்டி, வள்ளியம்மையினுடைய தினைத்தோட்டமிருந்த மந்திரவேள்வி மலைக்குன்றுக்கருகாமையில் வந்தாரென்று கூறப்பட்டிருக்கிறது.

முருகர் ஒயிற் கொம்மிப் பாடல்.

117-வது கவி.

பொன்மலை யானைமலை கடந்தார் தவம்
பொங்குங் குற்றாலமலை கடந்தார்
பொதிகாசல-மதிலேசிவ
கதியாகிய-ரதிசூழ்தவம்
புரியுங் கௌசிக மாமுனிவன்

118-வது கவி.

வேள்[illegible]கு மலையிதுவாமிங்கே
மெத்தவுஞ் சித்தரனேகமுண்டாம்
வெகுவாகிய-தவமேவிய
[illegible]கயாரென-விரைவாகவே
விண்ணாட்டு [illegible] தன் சொன்னதிலே.

122-வது கவி.

மந்திரவேள்வி மலைக் கருகேயுந்த
வள்ளி தினைவனந் தோற்றுது பார்
மலையாதே நீ-மெலியாதுவந்
துலையேதினி-நிலைபாரிது
மான்மருகா திகள் வேன்முருகா.

இங்கே சொல்லப்பட்ட மந்திரவேள்வி மலையானது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருச்செந்தூருக்கருகாமையிலிருக்குமோர் குன்று. வள்ளியம்மை வளர்ந்தது திருச்செந்தூரில்; காடுகாத்தது திருச்செந்தூருக்கருகிலுள்ள மந்திரவேள்வி மலையின் பக்கமான தினைப்புலம்.

வள்ளியம்மன் கும்மி.

32-வது கவி.

தினைப்புலங் காக்குஞ் சேயிழையே திருச்
செந்தூர்க்கு மந்திரி மாயிழையே
வனக்குறப் பெண்ணே மாதரசே பெண்
ணிங்கிருஞ் செல்வமிப் போதரசே.

இவ்வாறு சுப்பிரமணியர் சிவகிரியிலிருந்து குற்றாலத்தின் (Courtallam) வழியாய்ச் சென்று, திருச்செந்தூருக்கருகிலுள்ள மந்திரவேள்வி மலைப் பக்கத்தில் தினைப்புலங் காத்துக்கொண்டிருந்த வள்ளியென்னும் குறத்

தியை வைப்பாய்ப் பெண்ணாகச் சேர்த்துக்கொண்டாரென்று கூறியிருப்ப தாலும், சிவபெருமானைப்போல சுப்பிரமணியக்கடவுளும் தென்பாண்டி நாட்டாரென்றறியலாம்.

விட்டுணுவின் குமாரத்தியும், தன் பெரிய தகப்பனாகிய தேவேந்தி ரனுடைய சுவர்க்கத்தில் வளர்ந்தவளும் சுப்பிரமணியக்கடவுளின் மனை வியுமாகிய தெய்வயானை என்பவள் தன்னுடைய பர்த்தாவாகிய சுப்பிர மணியக்கடவுள் அந்நிய பெண்ணைச் சேர்த்துக்கொண்டதினால் மிகவும் மனம் வருந்திச் சுப்பிரமணியருடைய வீட்டை விட்டுப் புறப்பட்டு, மது ரைக்கருகிலுள்ள திருப்பரங்குன்றத்தில் போய் தங்கியிருந்தாளென்றும் வாசிக்கிறோம்.

முருகர் ஒயிற் கொம்மிப் பாடல்.

109-வது கவி.

கந்தரே நீயொரு கம்பத்திரண்டானை
[illegible]ட்டவென்றோ யிந்தக்கோலங் கொண்டீர்
கருணாகர-மதுபோலவே
குறமானையு-மறவாமலே
காதல் கொண்டீரென்ல பேதகமோ.

110-வது கவி.

எண்ணிலும் பார்க்க வதிசயமோ வந்த
வேணத் குறத்திமே வி[illegible] கொண்டீர்
எங்கும்பு[illegible]மா[illegible]தோ வில
வெங்குங்கிடை-யா[illegible]தோ சொலு
மென்ன சொல்லி யினி யா[illegible]தென்ன.

வள்ளியம்மன் கும்மி.

240-வது கவி.

இப்போ வந்தவள் கைக்கொள்ளட்டும் பவு
செல்லாங்கண்டு பணந் தள்ளட்டும்
செப்பமுடனன்று சேர்ந்தாளே மங்கை
திருப்பரங்குன்றம் போய்ச் சேர்ந்தாளே.

புருஷரால் கைவிடப்பட்ட பெண்கள் தங்களுடைய தகப்பனுடைய வீட்டுக்குப்போய்க் காலந் தள்ளுகிறதே வழக்கம். அதே பிரகாரம் தெய்வயானையும் தன் பர்த்தாவானவர் அந்நிய சாதிப்பெண்ணைச் சேர் த்துக்கொண்டதால் மனம் வருந்தித் திருப்பரங்குன்றம் போய்ச் சேர்ந் தாளென்று கண்டிருப்பதால், அவளுடைய தகப்பன் வீடு திருப்பரங் குன்றத்திலிருக்கவேண்டுமென்றனுமானிக்கலாம். [illegible] ய்வயானையின் [illegible] விட்டுணுவானவர் திருப்பரங்குன்[illegible] தாரென்[illegible] [illegible]படியால் விட்டுணுவும், திரு[illegible] புராணத் தில் [illegible]ருக்கிறபடி, தென்பாண்டி நாட்டாரென்றறியலாம்.

தெய்வயானையம்மன் தன்னுடைய தகப்பன் வீட்டை நோக்கித் திருப்பரங்குன்றம் போன பின்பு சுப்பிரமணியக்கடவுள் வள்ளியம்ம

னுடைய தலமாகிய திருச்செந்தூரையே தம்முடைய வாசஸ்தலமாகக் கொண்டிருந்தார். இக்காரணத்தால் திருநெல்வேலி நாட்டிலுள்ள திருச்செந்தூருக்கு சுப்பிரமணியருடைய ஸ்தலமென்னும் பெயருண்டாயிற்று.

திருநெல்வேலிப்புராணம், நகரச்சருக்கம்.

98-வது கவி.

கூறுநான்கெல்லை யவைதெரிந்துரைக்கிற் குணதிசைகுமரன்வாழ் சேந்தூர்
மீறுதென்றிசை தான்குமரி வாழ்பதியா மேற்றிசைசித்தி ராநதிப்பொன்
னூறுசேரருவி யமுதெனப்பொழியு மழகியதிரிகு டாலயமாந்
தேறுமுத்தரமாந் திசைவரராசை சிறந்திடத்திகழு நெல்வேலி.

இக்கவியில் தென்பாண்டி நாட்டின் கீழ் எல்லை குமரன் என்னும் முருகக்கடவுளாகிய சுப்பிரமணியர் வசித்த செந்தூரென்று கண்டிருப்பதாலறிக. ராபர்ட்சீவெல்துரை (Robert Sewell) எழுதிய (Lists of the Antiquarian Remains in the Presidency of Madras என்னும்) புஸ்தகம், 1-வது வாலியூம், 31[illegible]-வது பக்கத்தில், திருச்செந்தூரிலிருக்கும் ஆலயமானது மிகவும்பெரிதும் முக்கியமுமான ஆலயமென்றும், அதற்கு அநேகர் அடிக்கடி யாத்திரை போகிறார்களென்றும், அவ்வூருக்கு ஸ்தலப்புராணமொன்றுண்டென்றும், சுப்பிரமணியர் கோவிலில் பூர்வ நாட்களில் கல்லுகளில் வெட்டப்பட்ட சில விளம்பரங்களிருக்கின்றதென்றும் வரைந்திருக்கிறார்.

"*Tiruchendur*; 18 Miles east—south—east of Srivaikuntam, on the sea. (Tritchindoor.) A very large and important temple much frequented and containing some excellent sculpture. It has a *Sthala Purana* and a number of inscriptions. There is a long one on a pillar at the temple of *Subramanya* on the shore, another in the second prakara, and a third on the eastern wall. The trustees of the temple are in possession of two copper plates."

"On the shore, a few miles South of Tiruchendur, is a group of sixteen pillars, each bearing an inscription."

ஆகையால் இந்தியாவின் அதிபூர்வ குடிகளாகிய தேவர்கள் என்னப்பட்ட க்ஷத்திரியர் அதிபூர்வயுகங்களில் பாண்டிநாட்டில்வந்துகுடியேறி, அதன்பின்பு தக்ஷண பூமியில் வெகுகாலமாக பிரஸ்தாப இராஜவம்சங்களாக அரசாட்சிசெய்து, அதன்பின்பு இந்தியாவின் வடபாகத்திலும் விளங்கித், அதிபூர்வ காலமுதல் கிறிஸ்துவுக்குப் பின் 10-வது 11-வது நூற்றாண்டுவரை இந்தியாவிலே பிரபல வம்சத்தாராயிருந்து, தேவர்களாக்கப்பட்டு, போற்றப்பட்டு, வணங்கப்பட்டு வந்தார்களென்றும், அக்குலத்தரசர்களில் சிலர் தற்காலத்திலும் அங்கிலேயருடைய ஆளுகைக்குட்பட்டு அரசு புரிந்து வருகிறார்களென்றுமறிக.

——:0:——

VIII-வது அத்தியாயம்

தேவர்களின் பூர்வபாஷை தமிழ்.

1. இந்தியாவின் பூர்வபாஷைகள் இரண்டு; சமஸ்கிருதம், தமிழ் என்பவைகளாம்; இவற்றிலிருந்துண்டாகிய கிளைப்பாஷைகள், 2 தேவர்கள் பாஷை தென்கலை, 3 செந்தமிழ்நாடே தேவர்களின் பூர்வஸ்தலம், 4. தமிழே அதிபூர்வபாஷை, ஒருகாலத்தில் இந்தியாமுழுமையும் பேசப்பட்ட பாஷை, டாக்டர் மக்லீன் அபிப்பிராயம், க[illegible] ராமாயணம், 5. இராமர் என்னும்பெயரும் சூரியசந்திரகுல[illegible] ராசர்களின் பெயர்களும் தமிழ்ப்பெயர்களானபடியாலும் அக்குலத்தவர்களாகிய தேவரும் தமிழர், 6. தமிழ் தேவர் பாஷை, திருவிளையாடற் புராணம், மதுரைக்கலம்பகம், 7. சிவபெருமான் தமிழ்ச்சொக்கநாதர், தமிழறியும் பெருமான், முத்தமிழ்க்கோர்பயன், 8. சிவன் திருமிக்கெழுதிக்கொடுத்த தமிழ்ச்செய்யுள், 9. சிவன், பார்வதி, சுப்பிரமணியராகிய மூவரும் தமிழர் என்று காட்டும் மதுரைக்கலம்பக ஆதாரம், 10. பிரமனும் அவருடைய மனைவிமக்களும் தமிழர், 11. விட்டுணு முதலான தேவர்களும் தமிழர்.

இருக்கு வேதமுதலான நூல்கள் கூறும் தேவர்கள் முதலில் கைப்பற்றிய பாகம் தென்பாண்டி நாடென்றும், சுராசுரர் முதலான தேவர்களும் அவர்களுடைய குருவும் அந்நாட்டிலேயிருந்தார்களென்றும், மும்மூர்த்திகளும் அந்நாட்டில் மாதவமியற்றினார்களென்றும், இப்படியாக இந்தியாவில் தேவர்களின் பூர்வஸ்தலம் தென்பாண்டி நாடென்பதாகவும், இந்துமார்க்கம் ஆ[illegible] அந்நாட்டில் தான் என்பதாகவும் முந்தின அத்தியாயத்தில் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் தேவர்களின் சுயபாஷை (Mother-tongue) என்னவென்று பார்ப்போம்.

இந்தியாவில் பூர்வத்தில் வழங்கிய பாஷைகளிரண்டு வடகலை, தென்கலை என்பவைகளே. இவற்றிற்கு வடமொழியென்றும் தென்மொழியென்றும் பெயர். வடகலை என்றால் இந்தியாவுக்கு வடக்கிலிருந்து வந்தவர்கள் கொண்டுவந்து இந்தியாவின் வடபாகத்தில் பேசப்பட்டுவந்த [illegible]. தென்கலை என்றால் இந்தியாவின் தென்பாகத்தில் [illegible] ருந்து பரவிய [illegible] பேசியதும், இந்தியாவின் தென்பாகத்தில் [illegible] வரை பேசப்பட்டு [illegible] பாஷை. அதாவது வடகலை என்பது [illegible] [illegible] தென்கலையென்பது தமிழையும் குறிக்கின்றது. [illegible] வடகலையாகிய சமஸ்கிருதத்திலிருந்து உரியா, மராட்டி, [illegible] [illegible], உர்டு, ஹிந்தி, குஜராட்டி, சிந்தி, பஞ்சாபி முதலிய கிளைப்

பாஷைகள் பிற்காலத்திலுண்டாயிற்று. அதன்பின்பு சமஸ்கிருதபாஷை பேச்சுப்பழக்கமில்லாமல் மறைந்தது. தென்கலையாகிய தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், சிங்களம் முதலிய கிளைகளுண்டாகிப் பல விடங்களில் பேசப்பட்டுவந்தபோதிலும், அப்பாஷைகளுக்கெல்லாம் தாயாகிய தமிழானது, தன்னுண்மை மாறாமல் இதுவரை பாலியத்திலே யிருக்கிறதென்றுபார்க்கிறோம். தமிழ்பாஷைக்கும் அப்பாஷையிலிருந்து தோன்றிய கிளைகளாகிய பிள்ளைகளுக்கும் திராவிட பாஷைகள் என்று பெயர். திராவிடம், திராமிடம், திரவிடம், திரமிடம், தமிழ் என்னும் பெயர்களெல்லாம் ஒருபொருட்கொண்ட மொழிகளெனச் சதுரகராதி யாசிரியர் பொருளகராதியில் வரைந்திருக்கிறார்.

2. மூலபாஷைகளாகிய வடகலை, தென்கலை யென்னுமிரண்டிலும், தேவர்கள் பேசிய பாஷை யென்ன? தேவர்கள் தென்தேசத்திலிருந்து போனவர்களானதால் தென்கலையாகிய தமிழே அவர்களுடைய சுயபாஷை.

3. செந்தமிழ் நாடு, அதாவது, கலப்பில்லாத் தமிழ் வழங்கியநாடென்னப்படும் பாண்டி நாட்டில் தேவர்கள் முதலில் குடியேறினவர்களானபடியாலும் செந்தமிழே தேவர்கள் சுயபாஷை யென்றறியலாம். ஏனெனில் தேவர்கள் தான் அந்நாட்டை முதலில் கட்டிக்கொண்டவர்களே யன்றி, அவர்களுக்குமுன் ஒரு ஜாதியாராகிலும் அந்நாட்டிலிருந்ததாக எந்த சாஸ்திரமுங்கூறாதபடியால், தேவர்களே தங்களுடைய சுயபாஷையை அந்நாட்டில் ஸ்தாபித்தார்கள் என்றறிக.

4. தேவர்களுக்குமுன் இந்நாட்டில் வேறெந்தஜாதியுமிருந்ததில்லை எனப்பார்த்தோம். அதேபிரகாரம் தமிழ்பாஷைக்குமுந்தி யாதொரு பாஷையும் இந்நாட்டிலிருந்ததில்லை யென்றும், அது சமஸ்கிருதபாஷைக்கு அநேக யுகங்களுக்குமுன் உற்பத்தியான பாஷை யென்றும், அது ஒருகாலத்தில் இந்தியாமுழுவதிலும், அதாவது, வடதேசத்தில்முதலாய்ப் பேசப்பட்டு வந்ததென்றும் கலெக்டர் மக்லீன் துரை சென்னை அரசாட்சிப்புஸ்தகம், 42, 112, 113 வது பக்கங்களில் வரைந்திருக்கிறார்.

* Tamil "* It stands *alone without any immediate predecessor.* In origin it must be *long anterior* to the Sanskrit." (Page 112 & 113).

"There is little doubt that the Dravidian languages are *incomparably older* in point of time than the Sanskrit. It is not an unreasonable supposition that they *once occupied the whole of Hindustan* and have been driven to their present position to the South and along the coast by the encroachment of other languages coming from the North-West." (Page 42 of the Manual of the Administration of the Madras Presidency, Volume I).

பக்ஷின் தமிழ்ப் பாஷையானது வடஇந்தியாவிலும் பேசப்பட்டு வந்ததென்றெழுதியிருக்கிற பிரகாரம், கம்பராமாயணத்தில், இராமர் அயோத்தியைவிட்டு வனவாசஞ் செய்யும்படி தென்னிந்தியாவுக்கு வருகிறதற்கு முன்னமே தமிழ்ப்பாஷையிலும் சமஸ்கிருதத்திலும் தேர்ந்தவராயிருந்தார் என்று கூறியிருக்கிறது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,

140-வது கவி.

நன்சொற் கடந்தெனை நாளுங்வளர்த்ததாதை
தன் சொற் கடந்தெற்கரசாள் வதுதக்கதன்றால்
என்சொற் கடந்தாலுனக்கியாதுள தீனமென்றான்
தென்சொற் கடந்தான் வடசொற் கடற்கெல்லை தேர்ந்தான்.

இக்கவியில் இராமருக்கு 'தென்சொற் கடந்தான் வடசொற்கடற்கெல்லைதேர்ந்தான்' என்னும்பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு தென்சொல் ஆகிய தமிழ்ப்பாஷையின் வரம்பு கண்டவரும், வடசொல்லாகிய சமஸ்கிருதபாஷையென்னும் கடலின் கரைகண்டவருமாகிய இராமமூர்த்தி என்றுபொருள். ஆகையால் இராமருடைய காலத்தில் தமிழ்ப்பாஷையானது வடநாட்டிலும் பேசப்பட்டு வந்ததென்றும், இராமர் தென்னாடுநோக்கி வனவாசஞ்செய்ய வருவதற்கு முன்னதாகவே தமிழ்ப்பாஷையிலும் தேர்ந்தவராயிருந்தாரென்றும் தெரிகிறது.

5. இராமன் என்னும் பெயரே சமஸ்கிருதபெயரல்ல தமிழ்ப்பெயர். அதற்கு அழகன், சுந்தரன் என்றுபொருள். இராமம்=அழகு (சதுரகராதி). கல்வியிற் பெரியவர் கம்பர் என்று சொல்லப்படும் ஆக்கியோனே இராமன் என்னும் பெயருக்கு அழகன் என்றேபொருள் படுமென்பதாகத் தம்முடைய நூலின் பற்பல இடங்களில் அ[illegible]ருக்குப் பதிலாக அழகன் என்னும் பெயரையே வழங்கிவந்திருப்பதற்கு இரண்டொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப்படலம்,

58-வது கவி,

ஆவிவேயுணர்வழிந் தழகன்றேவியும்
நியணையவர் முகநோக்கித் தேம்பினுன்
நாயகன் [illegible]
ஒவ்வொ[illegible]

இக்கவியில் இராமன் தேவி என்று சொல்ல வேண்டியதற்குப் பதிலாகக் கம்பநாடர் அழகன் தேவியென்று சொல்லியிருப்பதாலும், சதுரகராதி முதலியவற்றில் இராமம் என்றால் அழகு என்றுபொருள் கூறுவதாலும் இராமன் என்னும் பெயருக்கு அழகன் என்றே பொருள் என்பதாகக் கம்பராமாயண ஆக்கியோனெழுதினர் என்க.

[illegible] காண்டம், சூடாமணிப்படலம்,
6-வது கவி.

அருந்ததியுமொத்தி யழகற் கருந் [illegible]
[illegible] செவியத்தசர் [illegible]
[illegible] வீடுபேறிலீலீ
இருந்தனென்னைப் பகர்ந்தென் [illegible]யென்றான்.

இலங்கையிற் சிறையாயிருந்த சீதையைப் பார்த்து அனுமாராலவர் அருந்ததிபோன்ற கற்பினையுடைய சீதையே! நான் இராமரிடஞ்சென்று உன் தேவியை ராட்சதர்களுடைய சிறைக்களத்தில் கண்டும் அவள் சிறையை மீட்காமல் வந்துவிட்டேனென்று சொல்வேனாகில் அவர் என்னைத் தூதுவனாயனுப்பியதின் பயனென்ன என்று வினவினர் என்று பொருள். இக்கவியிலும் இராமருக்கு அழகன் என்னும் பெயர் கூறியிருக்கிறது.

இவ்வாறு அழகன், சுந்தரன் என்பதே இராமன் என்பதின் மூல பொருளானபடியால், சீதைக்குச் சுந்தரியென்றும் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குச் சுந்தரன் மனைவி, இராமன் தேவியென்றே பொருள்.

[illegible] காண்டம், [illegible]ப்படலம்,
[illegible]-வது கவி.

[illegible]ன் மேனிநோக்கி [illegible] தூயரின்மைக்கி
எல்லைதீயுற்றதன்மை இயம்பென விலங்கைக்[illegible] தன்
சுந்தரி யின்னைச்செய்த வஞ்சனை சொல்லச் சொல்ல
[illegible] உலகமென்ன சிரித்தது செற்றவெந்தீ

இக்கவியில் அனுமார் சீதையைப் பார்த்துச் [illegible]கரி என்றழைக்கிறார். இதற்குச் சுந்தரன் தேவி[illegible] இராமன் தேவியே! என்று பொருள்.

ஆகையால் இராமன் என்னும் பெயரே தமிழ்ப்பெயர். அதே பிரகாரம் சூரியசந்திர நக்ஷத்திரங்கள் பெயர்களெல்லாம் தமிழ்ப்பெயர்கள் என்பதாக அப்பெயர்களின் மூல தாற்பரியங்களை முந்தாவது அத்தியாயத்தில் 53-வது பக்க முதல் 84-வது பக்கம் வரை [illegible] காட்டியிருக்கிறோம். ஆகையால் டாக்டர் மக்ளீன் [illegible] சொல்லுகிறபடி தமிழ்ப் பாஷையானது இந்தியா முழுவதிலும் பூர்வ காலங்களில் வழ[illegible]. அப்பாஷையே அதிபூர்வயுகங்களி[illegible] [illegible] ஸம்ஸ்கிருதமான [illegible] தமிழ்ப்பா[illegible] [illegible]ந்தியான பாஷை [illegible] முறை [illegible] [illegible]ர்கள் அதி[illegible] [illegible] ஜாதியார் [illegible].

6. [illegible] தமிழானது [illegible] பாஷை [illegible]
[illegible].

திருவிளையாடற் புராணம், சங்கப்பலகை தந்தபடலம்,
38-வது கவி.

நதியணிந்தவர் தம்மொடு நாற்பத்தொன்
பதின்மரென்னப் படும்புலவோரெலா
முதியவான்றமிழ் பின்னுமுறை முறை
மதிவிளங்கத் தொடுத்தவண் வாழுநாள்.

இக்கவியில் சிவபெருமானைச் சேர்த்து நாற்பத்தொன்பது புலவர்கள் தமிழில் பாடல்கள் பாடிக்கொண்டு தங்கள் நுண்ணறிவு தோன்ற வாழ்ந்திருந்தார்கள் என்று கண்டிருக்கிறது. இங்கே தமிழ்ப் பாஷையை 'முதியவான்றமிழ்' எனச்சிறப்பித்துப் பேசியிருக்கிறது. அதற்கு முதியவானவர் தமிழ், அதாவது, அதிபூர்வ குடிகளாகிய (முதிய) தேவர் (வானவர்) குலபாஷையாகிய தமிழ் என்று பொருள்.

மதுரைக் கலம்பகம்,
48-வது கவி.

தேத்தந்தகொன்றையான் றெய்வத்தமிழ்க்கூடன்
மத்தந்தவேள மதமடங்க—மீத்தந்த
மாகவிமானம் வணங்கினமா[illegible]ற்றெமைவிட்
டேகவிமான முனக்கேன்.

இதன் கருத்து.

தேனொழுகும் கொன்றைமலர் மாலையையணிந்த சிவபெருமான் எழுந்தருளிய ஸ்தலமும், தேவர்கள் பாஷையாகிய தமிழ் வழங்கும் ஸ்தலமுமாகிய மதுரையில் பெரிய கொம்புகளையுடைய திக்கசங்களின் மதமடங்கும்படியாக மேலே சுமத்திய இந்திர விமானத்தை நாம் வணங்கினோம்: இயமனே! நீ எம்மை விட்டுப் போகக்கடவாய். (யாவருயிரையும் கவர்ந்தோம், இனி இவ்வுயிரைக் கவரும் வன்மை நமக்கில்லையேயென்று நாணின) இந்த மானத்[illegible]கொண்டொழுகுதலால் உனக்கு யாது பயன் என்பதாம்.

இக்கவியில் தெய்வத்தமிழ் என்று கண்டிருக்கிறது. அதாவது தேவர்கள் பாஷையாகிய தமிழ் என்று பொருள். ஆகையால் தேவர்கள் பாஷை [illegible]என்றறியலாம்.

7. மும்மூர்த்திகளில் முதல்வராகிய சிவபெருமான் தமிழன் என்று காட்டும்படியான வேறு ஆதாரங்களும் பார்க்கலாம்.

மதுரைக் கலம்பகம்.
79-வது கவி.

[illegible]தமிழ்ச்சொக்கநாதர் பணை[illegible]
[illegible]க்குருகுமெய் நாணும் விட்டாள் வல்[illegible]
பேட்டைக்குருகும் விட்டாளென் செய்வாளனல்பெய்யுமிரு
கோட்டைக்குருகு மதிக்கொழுந்தைக் கொன்குலக்கொழுந்தே.

இதன் கருத்து.

என் குலதிலகமாகிய பத்தினியானவள், அடியவர் பாடும் பாசுரங் களுக்குருகியருளும் தமிழராகிய சிவபெருமானது திரண்ட புயத்தை யே தழுவ விரும்பி, தன் கைவளையலையும் உடம்போடு வளரும் நாண த்தையும் கட்டறவிட்டாள்; வண்டினையும், மெல்லிய அன்னத்தையும், பெண்ணாரையையும் தூதாக விட்டாள்; அனல் பெய்யும் இரு நுதி யையுடைய இளஞ்சந்திரனாகிய கொழுந்தை, அதாவது, சந்திரகுலத்தி லே சுந்தரபாண்டியனாக அவதரித்து மதுரையில் அரசாண்ட சிவபெரு மானை, அடையும்படி வேறே என்ன தான் செய்வாள் என்பதாம்.

இக்கவியில் சிவபெருமானைத் தமிழ்ச் சொக்கநாதர் என்று சொல்லி யிருப்பதால் அவர் தமிழன் என்றறிக.

'சொக்கநாதன், The handsome lord, Siva as worshipped at Madura.'

(Winslow).

சொக்கம்—சுந்தரம், Beauty; நாதன்—அரசன், King. சுந்தரராசன், சுந்தரபாண்டியன் என்பது மூலார்த்தம்.

குலேசபாண்டியர் இலக்கண இலக்கிய முதலான சகல நூல்களி ன் முடிவு கண்டு மதுரையில் அரசாட்சி செய்து வருங் காலத்தில் இடைக் காட்டுப் புலவர் பாண்டியனைக் கண்டு தமிழ்ச் சொல்லவேணுமென்று நினைத்துத் தாம் பாடின பாடல்களைப் பாண்டியன் முன்னே வந்து சொல்ல, பாண்டியன் அப்பாடல்களின் சொற்சுவை பொருட்சுவைக ளெல்லாந் தெரிந்தும் தன் மனத்திற் பொறாமையாலே தலையசைத்தல், மனமகிழ்தல், முகமலர்தல்களிலொன்றுஞ் செய்யாமல் பேசாதிருந்த படியால், இடைக்காடர் மிகவும் நாணி சிவபெருமான் கோயிலுக்குப் போய் சன்னிதியிலே விழுந்து கும்பிட்டு

தமிழறியும் பெருமானே! தன்னைச் சேர்ந்தார் சன்னிதியே! திருவாலவா யென்னும் மதுரைக்கதிபனே!

இந்தப் பாண்டியன் கல்வியிற் சிறந்தவனென்று சொல்லக்கேட்டு வந்து பாடல்கள் பாடினேன், அதற்கு அவன் எவ்வளவுந் தலையசையாமல் அவமதித்தான் என்று முறையிட்டதாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

திருவிளையாடற் புராணம், இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம், 8-வது கவி.

சன்னிதியில் வீழ்ந்தெழுந்த தமிழறியும் பெருமானே தன்னைச்சேர்ந்தார்
இன்னிதியே திருவாலவாயுடைய நாயகனே இகழ்தார் வேம்பன்
பொன்னிதிபோ லளவிறந்த கல்வியுமிக் குளனென்று புகலக்கேட்டுச
சொன்னிறையுங் கவிதொடுத்தே னவமதித்தான் சிறிது முடி துளக்கானே.

இக்கவியிலும் சிவபெருமானுக்குத் 'தமிழறியும்பெருமான்' என்று கூறி யிருப்பதால் அவர் தமிழரென்றறிக.

N.B.—பெருமான் என்றால் அரசன் என்று பொருள்.
'பெருமான். A prince, A king'
(Winslow).

சிவபெருமான் இயல், இசை, நாடகம் என்னும் முவ்வகைப்பட்ட தமிழையும் (Prose, Poetic and Dramatic Tamil) சிறப்பிக்க வந்தவர் என்றும் பார்க்கிறோம்.

மதுரைக் கலம்பகம்.

45-வது கவி.

கண்முத் தரும்பின கொங்கை பொன் பூத்த கனி பவளத்
தொண்முத் தரும்புமென் பெண்முத் துக்கே முத்த முண்டிமயத்
தன்முத் தமைந்த தபனிய மேதலைச் சங்கம் பொங்கும்
பண்முத்தமிழ்க் கோர்பயனே சவுந்திரபாண்டியனே.

இதன் கருத்து.

இமயமலையிற்றோன்றிய தன்னிடம் முத்தமைந்த பொன்மலையே! அதாவது இமயமலை யரசன் மகளாகிய பார்வதி தேவியாரை மணம் புரிந்தவராகிய மேருமலைக்கரசனே! மதுரையில் கூடிய தமிழ்ச் சங்கங்கள் மூன்றில் முதலாவது சங்கத்தில் தமிழ்ப் புலவர்களிலொருவராக எழுந்தருளி முத்தமிழையும் சிறப்பித்தவரே! சவுந்திரபாண்டியனென்னும் திருநாமத்தையுடையவரே! கனிந்த, பவளம் போன்ற வாயில் ஒளியிய முத்துப்போன்ற புன்முறுவலரும்பும் என்பெண் முத்தாகிய தலைவிக்குப் பிரிவால் கண்கள் நீர் சொரிந்தன, அவளது தனங்கள் பசலை பூத்தன, அவளிடத்திலுள்ள முத்தமுண்டுவென்பதாம்.

இக்கவியில் சிவபெருமான் 'முத்தமிழுக்கோர்பயன்' என்று கூறியிருப்பதால் அவர் தமிழனென்றறிக.

8. மேலும் சிவபெருமானென்ற தருமியென்னும் ஆதி சைவகுல பிரமசாரி என்பவனிடத்தில் தமிழ்ச்செய்யுளொன்றெழுதிக் கொடுத்து அதை வங்கிய சூடாமணியென்னும் சண்பக பாண்டியனிடம் கொண்டு போகச் சொன்னதாக ஒரு கதை திருவிளையாடற் புராணத்தில் கூறியிருக்கிறது. அக்கதையின் விபரமாவது:—

மதுரையில் தமிழ்ச்சங்கம் ஸ்தாபித்த வங்கிய சேகரபாண்டியனுடைய குமாரனாகிய வங்கிய சூடாமணியென்னும் சண்பக பாண்டியன் வையையாற்றங்கரையிலே சிவபெருமானை ஆராதிப்பதற்கான பலவகை மலர்களும் தரும்படியான நந்தனவனமொன்றுண்டு பண்ணித் தன் மனைவியோடும் மற்றும் அரசகுல ஆடவரோடும் பெண்களோடும் அவ்வனத்துக்குச் சென்று, அங்குள்ள [illegible] சண்பக [illegible] பா[illegible] [illegible] வாசனைகளணிந்து, அவர்களெல்லாரும் தேவாரம் பாடி [illegible] கொண்டு வந்து வைத்திருந்[illegible] சூடிக் [illegible] சொல்லப்பட்ட தேவாரம் [illegible] புது மதுவென்னும் [illegible] செய்த [illegible]

வில் வார்த்து கிரீடம் சூடித்த பின்பு, சண்பக பாண்டியன் சந்திரகாந்
தச்சலவை மண்டபத்தில் தன்மனைவியோடு வீற்றிருக்கும்போது தென்
றற் காற்றானது நல்ல திவ்விய பரிமளகந்த வாசந் தோன்[illegible]க்குக்
முன்னே வீச, அப்படி வீசின வாசத்தை நன்றாய் மோந்து பார்த்து
பாண்டியன் இதேது புதிதான நல்லதிவ்விய பரிமள கந்தமாயிருக்கிறது,
பூஞ்சோலைக் காற்று வீசினவாசமுமன்று, காற்றுக்கோ வாசமே கிடை
யாது, இது எதினுடைய சுயவாசமோவென்று ஆராய்ந்து ஆலோசித்
துத்திரும்பித்தன் தேவியைப்பார்த்தான். [illegible] அந்த வாசம்
அவள் கூந்தலிலிருந்து வீசக்கண்டு, ஓ! ஓ! இந்த வாசம் வண்டுங் கண்
டிராத இதென்ன புதுமையென்று கொண்டாடி இவள் கூந்தலில் இந்
த வாசம் செயற்கையால் வந்ததோ இயற்கையால் வந்ததோவென்று
சந்தேகித்து, இப்போது நான் சந்தேகித்த கருத்தைத்தெரிந்து பாட
வல்லவருண்டானால் அவருக்கு ஆயிரம் பொன் கொடுத்தேனென்று
முடிப்புக்கட்டிக்கொடுக்க, சங்கப்புலவர்களெல்லாம் பாண்டியன் கருத்
தை ஒவ்வொருவரும் தனித்தனி[illegible]து சொல்லிச் சொல்லி மெய்
விளங்காமல் அவமானப்பட்டுக் கிலேசிக்கலானார்கள். அப்போது தரு
மியென்னும் ஆதி சைவனொருவன் சிவபெருமான் கோயிலுக்குச்செ
ன்று பணிந்து, ஆயிரம் பொன்னும் பெறும்படியான ஒரு கவி பாடிய
ருளவேணுமென்று பிரார்த்தித்தான். அப்பொழுது சிவபெருமான்

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவுமுளவோ அறியும் பூவே"

என்னும் தமிழ்ச்செய்யுளொன்றெழுதித் தருமியிடம் கொடுத்தாரென்
னும் கதையாலும் சிவபெருமான் ஆதிகாலத்திலிருந்த தமிழனென்றறி
யலாம்.

9. சிவபெருமானும், பார்வதி தேவியாரும், சுப்பிரமணியக்கட
வுளும் தமிழர் என்பதற்கு வேறோர் ஆதாரம் கூறுவோம்.

மதுரைக் கலம்பகம்.

92-வது கவி.

தமரநீர்ப்புவன முழுதொருங்கீன்ற தடாதகாதேவியென்றொருபேர்
தரிக்கவந்ததுவுந் [illegible]வொருசவுந்தர மாறனானதுவும்
[illegible] கொண்டது தண்டமிழ் மதுரங்
[illegible] பெருமையாறறிவார்

இதன் கருத்து.

[illegible] கடல் சூழ்ந்த உலகத்தினை ஒரு [illegible]
பார்வதி தேவியார் மலயத்துவச பாண்டியன் மகளாகிய தடாதகைப்
பிராட்டி என்னும் திருநாமங் கொண்டவதரித்ததும், ஒப்பற்ற [illegible]

ளுகிய நீ (சிவபெருமான்) சவுந்தரபாண்டியன் என்னும் பெயராலவதரித்ததும், முருகக்கடவுள் உக்கிரபாண்டியனாக வந்தருளியதும், தண்ணிய தமிழின் சுவையை யருந்தவெழுந்த விருப்பத்தாலானல, இவ்வினிமை யமைந்த தமிழ்ப் பாஷையின் பெருமையை அறிய வல்லவர் யார் என்பதாம்.

இக்கவியில் உமையவளாகிய பார்வதியும், சிவபெருமானும், முருகக்கடவுளும் முறையே தடாதகை, சுந்தரபாண்டியன், உக்கிரபாண்டியனென்னும் தமிழராக அவதரித்தார்கள் என்று கூறியிருப்பதாலும், அவர்களெல்லாரும் தமிழரென்றறியலாம்.

[illegible]ரைக் கலம்பகம்,

11-வது கவி.

* * *

தருசுவையமுதெழு மதுரமதொழுகு பசுந்தமிழ்மாலை நிரம்பப்புனைந்தன
தளரியன்மலைமகள் வரிவளையழுகு தழும்பழகாக வழைத்தக்குழைந்தன
தளர்நடையிடுமிள மதலையின்மழலை ததும்பியவூற லசும்புக்கசிந்தன
தமிழ்மதுரையிலொரு குமரியைமருவு சவுந்தரமாறர் தடம்பொற்புயங்களே.

இதன் கருத்து.

தமிழ் வழங்கும் மதுரையிலரசாண்ட ஒப்பற்ற கன்னியாகிய தடாதகைப் பிராட்டியாரை மணம் புரிந்த சவுந்தரபாண்டியனாகிய சிவபெருமானின் சிறந்த அழகிய புயங்கள், கற்பகத் தருவின் இனிய மது பிரவாகிக்கின்ற வண்ணமாய் இனிமையொழுகும் அழகிய தமிழ் மாலைகளை நிறையச் சூடின; தளிர் போன்ற பார்வதியின் வரியமைந்த வளையல்கள் அழுந்துதலாலுண்டான தழும்புகள் அழகாகத் தைக்கக்குழைந்தன; தளர்ந்த நடையிட்டுச் செல்லும் இளமதலையாகிய முருகக்கடவுளின் சொல்லிற்ததும்பிய திருவாயூறலால் வழுக்கெடுக்கப் பொசிந்தன என்பதாம்.

இக்கவியில் சிவபெருமான் தமிழன் என்று சொல்வதற்காக, அவருடைய திருப்புயங்களெல்லாம் தமிழ் மாலைகளே சூடினவென்று கண்டிருக்கிறது.

10. சிவபெருமான் தமிழன் என்று பார்த்தோம். பிரமன் முதலான மற்றுமுள்ள தேவர்களும் அதே குலத்தவர்களானபடியால் அவர்களும் தமிழர். பிரமனுமவர் தமிழனென்று குறிப்பித்துக்காட்டும் கதையொன்று திருவிளையாடற் புராணம், சங்கப்பலகை தந்த படலத்தில் பார்க்கலாம். அப்புராணத்தில், வங்கிய சேகரபாண்டியன் காலத்திலே மதுரையில் தமிழ்ச் சங்கமுண்டான விபரம் பின் வருமாறு கூறியிருக்கிறது :—

[illegible]த்தில் பத்து அசுவமேத [illegible]
[illegible] பத்தினிகளான வாணி, சாவித்திரி, காயத்திரி என்
[illegible] மூவருடனே கங்கையில் ஸ்நானஞ் செய்யப்போகும் வழியில்
[illegible]ணி என்பவள் ஒர் விஞ்சையர் கன்னியாகின்ற காலத்திலே தன்

மனதைச்செலுத்திக் கூடப்போகாமலங்கே தானே நிற்க, பிரமன் மற்றிருவரோடும் கங்கைக்குப் போய் ஸ்நானஞ்செய்து கரையேறுந் தருணத்தில், வாணி யவ்விடம் சென்று, என்னையல்லாமல் நீர் எப்படி ஸ்நானஞ் செய்யலாமென்று கோபிக்க, அதைக்கேட்ட பிரமன் குற்றம் உன்மேலேயிருக்க நீ என்னை வீணே கோபித்த குற்றத்திற்கு மானிட ஜென்மமெடுக்கக்கடவை என்று சபிக்க, அதன்பின் வாணியானவள் நக்கீரர், கபிலர், பரணர் முதலிய நாற்பத்தெட்டு தமிழ்ப் புலவராக அவதரித்து, சிவபெருமானோடு நாற்பத்தொன்பதின்மராகி, மதுரையில் தமிழ்ச் சங்கம் ஸ்தாபித்தார்கள்,

என்னும் கதையால் மதுரையின் தமிழ்ச்சங்கத்திலிருந்த புலவர்கள் வாணியின் மரபினரென்றும், அப்புலவர்களைப்போல வாணியும் தமிழ்ப் பெண் என்றும், அவள் பர்த்தாவாகிய பிரமனும் தமிழனென்றும் அறியலாம். கலைமகளாகிய வாணியின் சுயபாஷை தமிழானபடியால் தமிழுக்கே வாணி தமிழ் என்றும், தமிழ்ப்புலவர்க்குத் தமிழ் வாணர் என்றும் பெயர்:—

முருகர் ஒயிற் கொம்மிப் பாடல்.

7-வது கவி.

வாணிதமிழ்ச் சித்தார்த்திவருட
மகதினங்கவேழ தேதியினின்
மறையோன்-குருவிடையோன் தரு
முறைதங்கிய-நிறையன்பதி
மாநாகில் நன்னகர் வாசன்.

வள்ளியம்மன் கும்மி.

11-வது கவி.

மானியக்காரன் மயிற்காரன் செய
மண்டலம் போற்றுஞ் செயற்காரன்
சீனிபோற் கிருஷ்ணன் கருத்தருளுங் கும்மிச்
செந்தமிழ்வாணர் பொறுத்தருளும்.

மனோன்மணீயம் ஆசிரியரும், திருவனந்தபுரம் காலேஜ் பண்டிதருமாகிய சுந்தரம் பிள்ளை

"கலைமகடன் பூர்வதிசை காணுங்காலவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியரோ மதியுடையாய்"

என்கிறார். ஆகையால் தேவர்களின் சுயபாஷை தமிழென்றறிக.

11. திருவாதவூரர் புராணத்திலே, மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் புத்தரை வாதில் வென்று ஈழநாடன் மகள் ஊமையைப்பேசாக்கிய பின்பு, சிவன் தபோதனர் வேடம்பூண்டு மாணிக்கவாசகரிடஞ் சென்று அகவல் நான்கும், திருச்சதகம் முதலான தமிழ்ப்பாடல் அறுநூறும், அகப்பொருட் கோவை நானூறு பாட்டும் மாணிக்கவாசகர் சொல்ல

சிவபெருமான் ஏட்டிலெழுதி, உயர்ந்த தமிழினிடத்தில் அன்பு மிகுந்த சிவபெருமான் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு தமது சபைக்கு எழுந்தருளி தேவர்களையும் மகாவிஷ்ணுவையும் பிரமதேவனையும் பார்த்து நமக்கடிமை செய்து நயப்பினைப்பெற்ற மாணிக்கவாசகன் சொன்ன இந்த நல்ல பாடல்களைக் கேளுங்களென்று அவர்களுக்கு அனுக்கிரகம் செய்தார் என்று வாசிக்கிறோம். இச்சரித்திரத்தைக்கவனித்தால் மும்மூர்த்திகளும் பூர்வகாலத்திலிருந்த தமிழர் என்னும் ஐதிகத்தைக் கொண்டே, சிவன் தமிழ்ப்பாடல்களை ஏட்டில் எழுதினாரென்றும் பிரமனும் விட்டுணுவும் அப்பாடல்களைக் கேட்டார்களென்றும் புராணிகர் வரைந்திருக்கிறார் என்றறியலாம்.

இதைப்பற்றிய பாடல்கள் சிலவற்றை இவ்விடம் வரைவோம்.

திருவாதவூரர் புராணம், திருவடிபெற்ற சருக்கம்,

5-வது கவி.

முன்புறநின்றவேத முதல்வரை முகத்தினோக்கி
யின்புறவாதவூர ரிருமென விருந்தபின்னர்க்
கொன்புனை மறையின்மிக்கீ ரெங்குளீர் கூறுமென்ன
மன்பெரு வளஞ்சேர்பாண்டி மண்டலத்திருப்பேனென்றார்.

தபோதனர் வேடம் பூண்டு வந்து தம் முன்னின்ற சிவபெருமானை மாணிக்கவாசகர் பார்த்து உட்காரச் சொல்லி நீர் எவ்விடமிருந்து வந்தீர் என்று கேட்கச் சிவபெருமானவரைப் பார்த்து நாமிருக்கிறது தென்பாண்டி நாடென்றார் என்று பொருள்.

6-வது கவி.

பாண்டிநாடென்றபின்னர்ப் பரிவுடன்செறிவுகூறி
யீண்டுநீர் வருதல்வேண்டுங் காரியமியம்புமென்ன
வாண்டநாயகன்றனை யாகியகரும நம்மைக்
காண்டலே யென்றுபின்னுங் கருத்துநவிதனைச்சொன்னார்.

பாண்டி நாட்டிலிருந்து நீர் இவ்வளவு தூரம் வந்த காரணமென்னவென்று கேட்கச் சிவபெருமானவரைப் பார்த்து உம்மைக் காணுவதற்கே வந்தேனென்று சொல்லிப் பின்னுமிவ்வாறு கூறுகிறார்.

9-வது கவி.

ஆதியை மன்றுளாடு மையனை யன்பிற்றுதே
யோதிய தமிழ்ப்பாடல் [illegible] போதவென்னனி
[illegible] வந்தனனெழுதல் வேண்டும்
வேதியர் பெருமானின்று விரும்பியே விளக்கினன்றே.

ஆதியாகிய சிவபெருமானைப் பற்றி நீர் சொல்லிய பாடல்களையெல்லாம் எழுதும்படியாக வந்தேனென்றார்.

10-வது கவி.

விண்ணகம் பரவுநாத னிவ்வகை விளம்பச்சிந்தை
கண்ணுமலை புடையராகி நற்சடை முடியார்தம்மை
யெண்ணருந் தமிழின்பாட்டா லியம்பியவையரப்போ
துண்ணெகிழ்ந் துளமெய்ஞ்ஞான வாசகமுவந்துசொன்னார்.

அப்போது மாணிக்கவாசகர் திருவாசகத்தை மகிழ்ச்சியுடன் சொன்னார்.

11-வது கவி.

அங்கவருரைத்தவெல்லா மம்பலத்தாடுமையர்
செங்கையிலேடுவாங்கித் தெளிவற வரைந்தபின்னர்ப்
பொங்கியவருளினாரும் புகன்றிட ரகலத் தையல்
பங்கினர்தம்மைக்கோவை பாடுதல்வேண்டுமென்றார்.

மாணிக்கவாசகர் சொன்ன திருவாசகத்தைச் சிவபெருமான் தம்முடைய கரத்தில் எட்டைப் பிடித்துக்கொண்டு எழுதிய பின்பு ஒரு கோவை பாடல்வேண்டுமென மாணிக்கவாசகரைக் கேட்டார்.

12-வது கவி.

மன்னியதவத்தின்மிக்கா ரதற்குளமகிழ்ந்துகூற
முன்னுறவிருந்துகோவை யெழுதினர்முடித்தபின்னர்ப்
பொன்னவிர் வேணியார்தாம் புத்தகஞ்சேமித் தங்கண்
மின்னெனமறைந்தார்சொன்ன வித்தகரயர்ச்சிகொண்டார்.

மாணிக்கவாசகர் சொன்ன திருக்கோவை யெழுதிமுடிந்த பின்பு புத்தகத்தைக்கட்டிக்கொண்டு சிவபெருமான் மின்னலைப்போல்மறைந்தார்.

14-வது கவி.

செந்தமிழ்க்கன்புமிக்கார் சென்றுதம் மன்றிலெய்தி
யந்தரத்தவரைமாலை யயனைநன் முகத்துநாடி
நந்தமக்கடிமைபூண்டு நயந்தவனொருவன்சொன்ன
விந்நற் பாடல்கேண்மி னென்றவர்க்கருளிச்செய்தார்.

செந்தமிழிடத்து அன்பு மிகுந்த சிவபெருமான் தம்முடைய சபைக்கு எழுந்தருளி தேவர்களையும் விட்டுணுவையும் பிரமாவையும் பார்த்து நமக்கடிமை செய்து நயப்பினைப்பெற்ற மாணிக்கவாசகன் சொன்ன இந்த நல்ல பாடல்களைக் கேளுங்களென்று அனுக்கிரகஞ் செய்தார் என்று பொருள்.

ஆகையால் தேவர்களென்னப்பட்ட க்ஷத்திரிய வீரர்களெல்லாம் அதிபூர்வகாலங்களில் தென்தேசத்தில் வாழ்ந்திருந்த தமிழரேயன்றி சமஸ்கிருதரல்லவென்று தெளிவாயறிகிறோம்.

—(o:)—

IX-வது அத்தியாயம்

தேவர்கள் அமுதகுலத்தவர்.

1. தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த விபரம், 2. திருப்பாற்கடல், கௌவை நீர்க்கடல், சொற்பரவை, பதிநீர், வாருணிநறவம், ஆலம், திருநீறு, சுரர், அசுரர் என்பவற்றின் மூலபொருள், 3. தேவர்பாஷையாகிய தமிழ் என்னும் பெயரின் மூலதாற்பரியம், 4. தேவபாஷையாகிய தமிழில் அமுதைக் குறிக்கும் ஏராளமான பதங்கள், 5. பனை சிருஷ்டிக்கப்பட்ட விபரம்; கற்பகம், சொர்க்கலோகஜீவ விருட்சம், சிம்மண்ஸ் துரை, டெனன்று துரை, விவேக சிந்தாமணி கூறும் அபிப்பிராயங்கள்; பனைக்கு வழங்கிய மற்றும் பெயர்கள் சுரதரு, காமதேனு, சுரபி, சுரநதி, ஆகாயகங்கை, 6. 'பனையே ரிஷிகளின் தபசுஸ்தானம், டெயிலர் துரை எழுதியிருப்பது, 7. இராமாயணம் கூறும் இயக்க ராட்சதருற்பத்திக்கதை, 8. இராட்சதர் சாணார் என்று மக்ளீன் துரை கூறும் அபிப்பிராயம், 9. தென்பாண்டி நாட்டின் பூர்வகுடிகள் சாணார் என்று டக்கர் துரைசானி கூறுமபிப்பிராயம், 10. மும்மூர்த்திகளும் தென்பாண்டி நாட்டிலமுதிறக்கினதாகக் கூறும் ஆதாரம், 11. திருமால் அமுதகுலத்தவர், 12. சிவன், பார்வதி யென்பவர்களினுடை அமுதால் நனைந்திருந்ததென்று காசிக்கலம்பகம் கூறுகிறது, 13. யாகவிபரத்தாலும் தேவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம், 14. இருவகைபானம், மேன்மக்கள்பானம், கீழ்மக்கள் பானம்.

பதினெண்கண தேவர்களென்னப்பட்டவர்களே இந்தியாவின் அதிபூர்வ குடிகளென்றும், அவர்கள் சுரர், அசுரர், இராட்சதர், கந்தருவர் முதலான பதப்பல பிரிவினராயிருந்த போதிலும் ஒரேகுலத்தவரென்றும், அவர்களுடைய பொதுவான நிறம் கறுப்பென்றும், அவர்களுக்கு ஆரியர், க்ஷத்திரியர் என்னும் பெயர்களுண்டென்றும், வேதமாதி நூல்கள் கூறும் ரிஷிகளும் சோமசூரியாக்கினி குல இராஜாக்களும் அதேகுலத்தவர்கள்தான் என்றும், அவர்களரசாட்சிபுரிந்தகாலத்தில் அவர்கள்தான் முதல்ஜாதியாக எண்ணப்பட்டிருந்தார்களென்றும், துரோணிய ஜாதியாராகிய பார்ப்பார க்ஷத்திரியரால மிகவும் இழிவாக எண்ணப்பட்டிருந்தார்களென்றும், இந்தியாவில் க்ஷத்திரிய அரசாட்சி ஒழிந்தபின்பு பார்ப்பார் பூர்வ நூல்களையெல்லாம் திருத்தி யெழுதி தாங்களே உயர்ந்த ஜாதியென்றும் க்ஷத்திரியரும் வைசியரும் இந்நாட்டிலில்லையென்றும் சொல்லி ஜனங்களை வஞ்சித்துவந்தார்களென்றும்,

தேவர்களென்னப்பட்ட க்ஷத்திரியரின் பூர்வ ஸ்தலம் இந்தியாவின் தென்பாகமேயன்றி வடநாடல்லவென்றும், அவர்களுடைய சுயபாஷை சமஸ்கிருதமல்ல தமிழென்றும் இதுவரை பார்த்தோம். க்ஷத்திரியராகிய தேவர்களின் குலத்தொழி லென்னவென்று இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

க்ஷத்திரியர் பொதுவாக யுத்தசன்னத்தராகவும் கிராமங்களுக்கும் நாடுகளுக்கும் அதிபதிகளாகவுமிருந்தபோதிலும், அக்குலத்தவர்களெல்லாம் இராஜாங்க வேலையிலேயிருந்தார்கள் என்று சொல்லக்கூடாது. ஆகையால், அக்குலத்தவர்களில் மிச்சமானவர்களின் பூர்வ தொழில் என்னவென்று பார்ப்போம்.

சுராசுரர்களைப்பற்றிப் பூர்வ நூல்கள் கூறும் முக்கியமான விஷயம் அமுதவுற்பத்தியே. சுரரும் அசுரரும் அடிக்கடி திருப்பாற்கடலைக் கடைந்து அமுதவுற்பத்தி செய்துவந்தார்கள். இதைப்பற்றிய விபரமானது பூர்வநூல்களைத்திருத்தி யெழுதிய பொய்யின் மக்களால் மிகவும் நம்பத்தகாத விதமாய் வர்ணிக்கப்பட்டிருந்தபோதிலும், அப்புராண விபரத்திலும் முதலாய்த் தேவர்கள் அமுதவுற்பத்தி செய்தவர்களின் குலத்தவரென்றறியும்படியான அம்சங்கள் மிச்சமாயிருக்கின்றன. புராணக்கதை வருமாறு:—சுரர், அசுரர் முதலான தேவர்களெல்லாம் கடலைக்கடைந்து அமுதெடுக்கும்படியாகக் கூடி, மந்தரமலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகப்பூட்டி, ஆயிரம் வருஷகாலம் கடலைக்கடைய, அதிலிருந்து விஷந்தோன்றினதென்றும், அப்போது விஷ்ணு முதலான தேவர்களெல்லாம் அதை யருந்தாமல் மலைத்து, சிவபெருமானிடம் அறிவிக்க, அவர் அவர்களுடைய துன்பத்தை நீக்கும்படியாகச் சென்று அமுதில் தோன்றிய விஷத்தையுண்டு, திரும்பவும் கடையும்படி உத்தரவளித்தாரென்றும், அப்படியே தேவர்கள் பற்பல நாட்களாகக் கடைந்து கொண்டிருக்கையில், மத்தாக உபயோகிக்கப்பட்ட மந்தாகிரி ஒருபக்கம் சாயவும் அத்துடன் கடலும் சாய்ந்து அமுதுவழிந்து சிந்தாதபடி விட்டுணுவானவர் ஆமைவடிவமாகி அதைத் தாங்கிக்கொண்டு நின்றாரென்றும், அப்போது அந்த அமுதக்கடலிலிருந்து தன்மந்திரி யென்பவர் ஒருகையில் அமுதகமண்டலமும், ஒருகையில் தண்டாயுதமும் பிடித்தவராயெழுந்து வந்தார் என்றும், அதன்பின்பு அறுபதுகோடி அரம்பை ஸ்திரீகள் அமுதக்கலசங்களுடன் எழும்பி வந்தார்களென்றும், அதன்பின் அவர்களுக்கு ஏவல் செய்யும் தோழியர் அனந்தம்பேர் தோன்றினார்களென்றும், அதன்பின் கடிவாளம் பூண்ட போர்க்குதிரைதோன்றினதென்றும், அதன்பின்பு கவுத்துவமணியும், தெய்வலோகபஞ்சதருக்களும், தேனும், சந்திரவெண்குடையும், [illegible] அம் [illegible] தம் என்னும் யானையும், மூத்தவளாகிய மூதேவியாரும், சந்திரனும், இளையவளாகிய இலக்குமியும் ஒன்றின் பின் ஒன்றாய்த் தோன்றினார்களென்றும், கடைசியாக வாருணி நறவம் என்னும் அமுது தோன்றினதென்றும், அந்த அமுதைப் பருகின தேவர்களுக்குச் சுரர் என்றும் பருகாதவர்களுக்கு அசுரர் என்றும்பெயருண்டாயிற்றென்றும், இலக்குமியையும் கவுத்துவமணியையும் விட்டுணு

எடுத்துக் கொண்டாரென்றும், அமுதை யருந்தும்போது தேவர்கள் எமக்குமக்கென்று சண்டைசெய்ய, விட்டுணு மோகினிவடிவமாகி அசுரரைவஞ்சித்து சுரர் அமுதருந்தும்படிசெய்து, அசுரரைச் சங்கரித்து மூவுலகத்தரசாட்சியையும் சுரருக்குக் கொடுத்தாரென்றும் கதை.

கூர்மபுராணம், இராமனவதரித்தவத்தியாயம்,

57-வது கவி.

மாயிருஞாலக் தாழியாய் மத்து மந்தரமாமதிதறியாய்க்
காயும் வெவ்விடத்து வாசுகி நாணுக்கடற்புனல் வெண்டயிராக
வாயிரம் பருவங் கடைதலுமாலம் புறப்படமால் முதலிய அமரர்
பாய்விடையுயர்த்த பனிமதிக்கண்ணிப்பண்ணவன் பதம்பழிச்சினரால்.

58-வது கவி.

வெயிலுடன் முளைத்துக்கிளைத்த செம்மேனி விமலனுங் கெய்திமால் முதலாஞ்
செயிரறு தேவர் பருவரறுடைத்துத்திகழ் விடமருந்தினனகவ
மயிலியல் பாகனருளினை வியந்து மான் முதலாகிய தேவர்
பயில்தருகடலை மீளவும் வியந்து பற்பல நாட்கடைந்தனரால.

59-வது கவி.

மந்தரந்தாழ மாயவனுமை யுருக்கொடு வலியினாற் றாங்கி
யுந்துநீர்க்கடலைக் கடைதலுமோர்கை கமண்டல மோர்கை தண்டேந்தி
நந்தலில் தன்மந்திரி முதற் பிறந்தார் நாடகக் கூத்தியராகு
மந்தயிலரம்பை மகளிர் தெள்ள முதோடறுபது கோடி வந்துதித்தார்.

60-வது கவி.

நிலவுகொப்புளிக்கும் வெண்ணகைத்துவர்வாய் சிகரெறியரம்பையர்தமருச்
சிலதியராஞ்த மகளிர் வந்துதித்தார் திகழ்வளிமனத்திறந்தடிய
கலினவாம்பரவி பிறந்தது பின்னர்க்கருங்கடல் முழுவதுஞ்சிவப்பப்
புலரியிலெழுந்த சேட்டிளக்கதிர்ற் கவுத்துவம் பிறந்தது பொலிவின்.

61-வது கவி.

வியன்சினைத்தருக்களைந்து மாற்குதித்த விண்ணவர் முதலினோர் யாரும்
பயன்படுதேனுப் பிறந்தது மற்றோர் பான்மதிக்குடையவனுதித்த
தியங்குநாற்கோட்டுவரை நிரையிராவணப்பகடெழுந்தது பின்னர்த்
தயங்கொளிமுகத்துக்காக்கைமீதுயர்ந்த தெள்ளவையாங்குதித்தனளன்றே.

62-வது கவி.

பூக்கதிர் பரப்பி யுலகெலாம் விளக்கும் புண்ணியத்திங்களாங்குதித்த [ெ
தோங்குபைங்கலைக்காற் செய்தழ்க்கயலத்தொழுகொளிபரப்புபொற்பொகுட்
வாக்கு தண்ணுசப்பிற்றிதலு பூத்தலர்ந்தவனமுலைச்சேயரி நெடுங்கட்
டைக்குயிற்குதலைப்பொன்னுறழ [illegible]

63-வது கவி.

வா நுனி நடவம் பிறந்தது பின்னர் மற்றது [illegible]
[illegible]
மாரமுதிறந்த தலங்கொளி மணியுந் திருவையுமாயனுக்களித்தா
[illegible]

64-வது கவி.

எற்றவர்தம்மை மாயவன் விலக்கி மோகினியுருவொடு மெய்தத்
தோற்றியவமுத முதலிய வெவையுஞ் சுரர் தமக்களித்தலு மாற்ற
மூற்றிருந் தொழுகும் வச்சிரப்படையாலடல் கெழுமவுணரையொறுத்தாங்
காற்றலின் மகவான் பொன்னுலகனைத்துந் தனதடிப்படுத்தினனளித்தான்.

இப்படியாக விட்டுணுவானவர் அசுரரை வஞ்சித்து சுரருக்கு அமுதளித்த காரணத்தால் வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதம், உத்தியோகபருவம், கிருட்டிணன்றூதுசருக்கம், 77-வது, 80-வது கவிகளில் விட்டுணுவுக்கு, தேவர்களுக்கமுதளித்த மாயோன், அமுதக்கடல் என்னும் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன.

77-வது கவி.

இருந்து வந்தருளிறைவனை யிறைஞ்சினனிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப்பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக்கருளிய மாயோன்
விருந்து வந்தனனென்றுள முருகி விதுரன்.

குறிப்பு:—மருந்து—தேவாமிர்தம், வந்தனை யமரருக்கு—வணங்கிய தேவர்களுக்கு, அருளிய—கொடுத்த, மாயோன்—திருமால் என்றுபொருள்.

80-வது கவி.

முன்னமே துயின்றருளியமுது **பயோததியோ**
பன்னகாதிபப் பாயலோ பச்சை யாலிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதியெய்தற்
கென்னமாதவஞ் செய்த திச்சிறுகுடிலென்றான்.

குறிப்பு:—பயோததி=பயம்+உததி; பயம்—தேவாமிர்தம், உததி—நீர் தங்குமிடம், கடல். அமுதக்கடல் என்றுபொருள்.

இப்படியாக சுராசுரர் முதலான தேவர்களும் சிவன், விட்டுணு முதலான மூர்த்திகளும் அமுத வுற்பத்தி செய்வதில் முயன்றார்களென்றேற்படுகிறபடியால் அவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம்.

2. சுராசுரர் முதலான தேவர்கள் தென்பாண்டி நாட்டாரென்று பார்த்தோம். ஆகையால் தேவர்கள் அதிபூர்வகாலங்களில் கடைந்து அமுதெடுத்ததாகச் சொல்லப்படும் திருப்பாற் கடலும் அந்நாட்டிலுள்ளதே. திருப்பாற்கடல் என்னும் பெயர் கொண்ட சமுத்திரம் இவ்வுலகின்கண் எங்குமில்லையென்றறிவாளிகளுக்குச் சொல்லவேண்டியதில்லை. ஆகையால் புராணிகர் கூறும் திருப்பாற் கடல் சமுத்திரமல்ல. கடல் என்னும் சொல் சமுத்திரத்தை மாத்திரமல்ல, மிகுதியையும் குறிக்கும் என்பதற்கு திருஷ்டாந்தங்களனேகமுண்டு. குணசீலனான ஒருவனைக் குணப்பெருங்கடல் என்றும், கருணையுள்ளவனொருவனைக் கருணைக் கடல் என்றும் சொல்லுகிறோம். குணப்பெருங்கடல் என்றால் மேன்மையான குணம் மிகுதியாகவுடையவனென்றும், கருணைக்கடல் என்றால் கருணை மிகுதியாகவுடையவனென்றுமே பொருள். திருப்பாற

கடல் என்னும் வாசகத்தில் வழங்கும் கடல் என்னும் பதமும் மிகுதியையே குறிக்கிறது. எந்த வஸ்துவின் மிகுதியைக் குறிக்கிறதென்று திருப்பாற் கடலுக்கு வழங்கும் மற்றும் பெயர்களாலறியலாம். திருப்பாற் கடலுக்குச் சோற்பரவை, கௌவைநீர்க்கடல் என்னும் பெயர்கள் ஒருபொருட் கொண்ட மொழிகளாக வழங்கியிருக்கின்றன. அவற்றிற்கு மேற்கோள் வருமாறு:—

அருணசல புராணம், பாவந் தீர்த்தசருக்கம்,
20-வது கவி.

கற்பமுடிவாயிருள் பெயர்ந்து புலர்காலத்
தற்பவிருணின்றது டன்றுணிறையினலே
சோற்பரவைமாய னுணராது துயில்கொள்ளச்
சிற்பரமயோகியர்கள் செம்மலை நினைந்தார்.

இதன்கருத்து.

பூர்வத்தில் கற்பகாலம் முடிந்து மகத்தாகிய அந்தகாரம் நீங்கி வெளிச்சமுண்டாகிற காலத்தில் கொஞ்சம் அந்தகாரம் நின்றதையறியாமல் விட்டுணுவானவர் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டார், அப்போது மேன்மையான யோகிகள் சிவபெருமானை நினைத்தார்கள் என்றுபொருள். இக்கவியில் திருப்பாற் கடலுக்குச் சோற்பரவை என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

இலிங்கபுராணம், துருவன் துருவபதமடைந்தவத்தியாயம்,
17-வது கவி.

இவ்வகைய விடர்கோடி கடந்துதவ மியற்றுதல் கண்டிரங்கி யார்க்குங்
கௌவைநீர்க்கடற் றுயிலுங்கார்மேக வண்ணனெழிற்கலுழன்மேலாய்த்
தெவ்வகற்றுங் குலிசன்முதற்றேவரொல்லா மிருபுடையுந் திரண்டுசெல்ல
வெவ்வழல்காலட்டற்றிகிரி வலனேந்தி யாங்கவன்முன் விரைந்துற்றனே.

கூர்மபுராணம், கண்ணனவதரித்த வத்தியாயம்,
66-வது கவி.

கவ்வைநெடுநீர் வாவிக் கடவுட்கமலமுகத்தின்
செவ்விவழிதல்போலக் கண்ணீரொழுகச்சிறுவன்
பவ்வத்திரையின் பிறவாப்பவள மலர்வாயன்னே
யெவ்வெத்திசையு முலகுமிறைவன் வாயுட்கண்டாள்.

இவ்விரண்டு கவிகளிலும் திருப்பாற் கடலுக்கு முறையே

கௌவை நீர்க்கடல், கவ்வை நெடுநீர் வாவி

என்னும் பெயர்கள் வழங்கியிருப்பதால் திருப்பாற் கடலுக்கு சோற்பரவை, கௌவை நீர்க்கடல் என்னும் [illegible] வழங்கி [illegible] ன்றனவென்றறியலாம். சோறு, கௌவை என்னுமிரண்டு [illegible] [illegible] (சதுரகராதி பார்க்க). பரவை [illegible] கடல், மிகுதி என்று பொருள். ஆகையால் சொற்பரவை, கௌவைநீர்க்கடல் என்னும் பெயர்களுக்கு [illegible] மிகுதியாக [illegible]

மரம், அதாவது, பனைமரம் என்று பொருள். பனையமுதருந்தி வருகிறவனைப் பால் பருகி வந்தான் என்று தற்கால உலக வழக்கத்தில் வழங்கும் வசனத்தாலும் பால் என்னும் பதம் பனையமுதைக் குறிக்கிறதென்றறியலாம். அதுவே தேவர்களுடைய திருப்பால். பனையமுதுக்குத் தற்காலத்திலும் வழங்கும் பதிநீர் என்னும் பெயர் தேவர் பானம் என்பதையே குறிக்கிறது. பதி-அரசன், எப்பொருட்கு மிறைவன்; நீர்-பானம். ஆகையால் பதிநீர் என்றால் அரசர் பானம், அதாவது, க்ஷத்திரியர் பானம், அல்லது தேவர் பானம் என்றே பொருள். இப்படியாக திருப்பாற் கடல் என்னும் பனைமரத்திலுண்டான தேவாமிர்தம் என்னும் பதிநீரைப் பருகினபடியால் தான் தேவர்களுக்குச் சுரர் என்னும் பெயருண்டாயிற்றென்றும், அதைப் பருகாதவர்களுக்கு அசுரர் என்னும் பெயருண்டாயிற்றென்றும் மேலே நாம் எடுத்துரைத்த கவிகளொன்றில் கண்டிருக்கிறது.

“வாருணிநறவம் பிறந்தது பின்னர் மற்றது நுகர்தலாற்றேவர்
சீர்கெழுசுரரா யினரஃதுண்ணா தசுரராயினர்......”

இங்கே கூறிய வாருணிநறவம் என்னவென்று சதுரகராதி தெரிவிக்கும். வாருணி, நறவம் என்னும் இரண்டு பெயர்களுக்கும் பனையமுதென்று பொருள்; ஆகையால் வாருணிநறவம் என்றால் அமுதில் தோன்றிய அமுதம் என்று பொருள். அமுதில் தோன்றிய அமுதமென்று கூறுவதற்குக் காரணமென்னவெனில் திருப்பாற்கடலை ஆயிரம் பருவம் கடைந்தபோது, அதாவது, பனையில் அமுதவுற்பத்தி செய்யும்படியாக வெகு காலம் முயற்சி செய்து வந்தபோது, முதலில் ஆலம் தோன்றினது. ஆலம் என்றால் ஆலியென்னும் பனையமுதிலிருக்கும் விஷம். அந்த விஷம் என்னவெனில் கள்ளிலிருக்கும் மயக்ககுணமாகிய லாகிரிக்குணம். விஷமானது அதை யருந்துகிறவர்களின் உயிரைப் பிரிக்கிறதுபோல, லாகிரிக்குணமுள்ள கள்ளானது அதையருந்துகிறவர்களின் மேன்மையை அவர்களைவிட்டுப் பிரிக்கிறது. மயக்கமுண்டுபண்ணுகிற கள்ளை யாவரருந்தினாலும் அவர்கள் நீசராகவே எண்ணப்படுகிறார்கள். ஆகையால் அந்த விஷம்போன்ற மது தான் தேவர்கள் முயற்சியால் முதலிலுண்டாயிற்று. அதைப்பார்த்து தேவர்களஞ்சி சிவபெருமானிடஞ்சென்று வேண்ட, அவர் வந்து தேவர்களுடைய துன்பத்தை நீக்கி மறுபடியும் திருப்பாற்கடலைக் கடையும்படியாகச் சொன்னார் என்றும் அதன் பின்பு வாருணிநறவமுண்டாயிற்றென்றும் கூர்மபுராணம் கூறுகிறது. மற்றும் நூல்களில் சிவபெருமான் அந்த விஷத்தை யுண்டாரென்றும், ஆகையாலவருக்கு ஆலமுண்டகண்டன் எனும் பெயர் வழங்கியதென்றும் சொல்லியிருக்கிறது. சிவபெருமான் பனையமுதில் தோன்றிய விஷமாகிய லாகிரிக்குணத்தை யுண்டாரென்று சொன்னால் அந்த லாகிரிக்குணத்தை நீக்கும்படிக்கான ஓர் வஸ்துவைக் கண்டு பிடித்தாரென்றே பொருள். அந்த வஸ்து என்னவென்று திருவாலவாய்த்தேவாரம், நீற்றுப்பதிகம், 1-வது கவியில் கண்டிருக்கிறது:—

“மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு”

அதாவது நீற்றப்பட்ட சுண்ணாம்பாகிய நீறே அந்த வஸ்து. அதுவே

கள்ளென்னும் இழிவான பானத்தைப்பதிநீர் என்னும் தேவர் பானமாக்குகிறது. ஆகையால் சிவன் விஷத்தை யுண்டாரென்றால் விஷத்தை நீக்கும்படிக்கான சுண்ணாம்பைக் கண்டு பிடித்தார் என்று பொருள். இப்படியாக ஆதியில் அமுதமுற்பத்தி செய்யுங் காலத்தில் முதலில் ஆலம் என்னும் கள்ளுற்பத்தியாக, தேவர்களதை யருந்தாது சிவபெருமானிடஞ்சென்று வணங்க, அவர் சுண்ணாம்புப் பிரயோகத்தைச்சொல்லிக் கொடுத்ததினால், தேவர்கள் மறுபடியும் திருப்பாற்கடலைக்கடைந்தபோதுண்டாகிய அமுதத்துக்கு வாருணிநறவம் என்று பெயர். அதாவது, அமுதில் தோன்றிய அமுதம், வெறிநீரில் தோன்றிய பதிநீர் என்று பொருள். பதிநீர் என்னும் வாருணிநறவத்தைப்பருகின தேவர்களுக்குச் சுரர் என்னும் பெயருண்டாயிற்று (சுரம்-பனையமுது); சுரர் என்றால் பனையமுதருந்தியவர்களென்றும், அசுரர் என்றால் அதை அருந்தாதவர்களென்னும் பொருள் என்பதாகக் கூர்ம புராணத்தாலறியலாம். ஆகையால் தென்பாண்டி நாட்டில் திருப்பாற்கடலைக் கடைந்த தமிழராகிய தேவர்கள் அமுதகுலத்தவரென்றறிக.

3. தேவர்களென்னப்பட்டவர்கள் தென்பாண்டி நாட்டில் அதிபூர்வ காலங்களில் குடியேறினவர்களென்றும், அவர்களே தமிழ்பாஷையை இந்நாட்டுக்குக் கொண்டு வந்தவர்களென்றும் பார்த்தோம். தேவர்கள் பாஷைக்கு வழங்கும் தமிழ் என்னும் பெயராலும் தேவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம். தமிழ் என்னும் பதத்துக்கே அமுதகுலத்தவர்கள் பாஷையென்று பொருள். அது தமியம் என்னும் மூலபதத்தினின்றுற்பத்தியானது. தமியம் என்றால் பனையமுது. ஆகையால் தமிழ் என்றால் தமியர் குலபாஷை, பனையமுது உற்பத்தி செய்பவர்கள் பாஷை யென்பது மூலார்த்தம்.

தமிழ் என்னும் பதமே அமுதம் என்னும் பொருளில் வழங்கி வந்திருக்கிறதாகவும் பார்க்கிறோம்.

அருணாசலபுராணம், திருவவதாரச்சருக்கம்,

53-வது கவி.

சந்தனமணமுந்தெய்வத் தமிழ்ப்பொதியமுனிமலையின்
வந்ததமலேயத்தென்றல் வசந்தமுந்திரியுஞ்சேர்ந்த
இந்துவுஞ்சீதவாமமெல்லிள வலேயினையெதிர்ந்தெங்குங்
கொந்தவிளமாவெல்லாங் கோகிலமுழங்கிற்றன்றே.

இதன் கருத்து

மன்மதனானவன் சிவனை ஜெயிக்கும்படி புறப்பட்டபோது, பொதியமலையிலிருந்து சந்தன வாசனையும் தேவாமிர்தத்தின் புது மணமும் கலந்த தென்றற் காற்று வீசினது, வசந்த காலமானது மன்மதனுக்கு பிரகாசியாக வந்தது, சந்திரன் தன்னுடைய வெண்மையான கிரணங்களை நான்கு பக்கமும் வீசிற்று, புஷ்பம் நிறைந்த இளமையான மாமரங்களிலெல்லாம் குயில்கள் கூவிற்று என்பதாம்.

இக்கவியில் தேவாமிர்தத்தை தேய்வத்தமிழ் என்று கூறியிருப்பதால் தமிழ் என்பதற்கு அமுதம் என்று பொருளாகிறதென்றறிக. 'தேய்வத்தமிழ்ப் புதுமணம் என்றால் தேவாமிர்தத்தின் புது மணம், தேவாமிர்தம் இறக்கினவுடனே யுண்டாகிற வாசனை. ஆகையால் தமிழ் என்னும் பெயர் பதிநீர் என்னும் பொருளில் வழங்கியிருக்கிறதென்றறிக.

அருணாசலபுராணம், வச்சிராங்கதபாண்டியன் சருக்கம்,

1-வது கவி

தோடுகமழ்சந்தன வனத்திடை திரிந்தே
நீடுதமிழின் சுவையளித்து நெடுநாளா
யாடுமயிலன்னவர்க ளன்னநடைபோல
வாடையிசை தென்றல்புகும் வையைவளநாடு.

இதன் கருத்து.

பூவிதழ்மணக்கும் சந்தன வனத்தின் மத்தியில் சஞ்சரித்து, நெடுங்காலமாக நிலைபெற்ற தேவாமிர்தத்தின் இனிமையை யருந்துகிறவர்களும், அநேக நாளாகத் தோகையை விரித்தாடுகின்ற மயில் போன்ற மேனியை யுடையவர்களுமான பெண்கள் நடக்கும் அன்னப்பட்சியின் நடைபோல, வாடைக் காற்றோடு தென்றற் காற்று வருகின்ற வையையாறு பொருந்திய தென்பாண்டி நாடு என்பதாம்.

இக்கவியில் தென்பாண்டி நாட்டின் சிறப்பைப் புராணிகர் கூறுகிறார். அது

1. வையையாறு பொருந்திய நாடு,
2. வாடைக்காற்றோடு தென்றற் காற்றுலாவப் பெற்ற நாடு.

அக்காற்றுகளுலாவுகிறதெப்படியென்றால் அந்நாட்டிலுள்ளபெண்களின் அன்னநடை போல. அப்பெண்கள் யாரென்றால்

1. சந்தனாசலம் என்னும் பொதியமலைப் பக்கங்களிலுள்ளவர்கள்,
2. அதிபூர்வ [illegible] லுற்பத்தி செய்து வரும் தேவாமிர்தத்தைப் பருகுகிறவர்கள்,
3. தோகையை விரித்தாடும் மயில் போன்ற மேனியையுடையவர்கள்.

என்பதாம். இக்கவியிலும் தமிழ் என்னும் பதமானது தேவாமிர்தமாகிய பதிநீரைக் குறிக்கிறதென்றறிக.

ஆகையால் தமிழ் என்னும் பெயருக்கே அமுதமென்று தாற்பரியமாகிறபடியால் அது அமுதகுலத்தவர்கள் பாஷையென்றறிகிறோம். தேவர்களே அப்பாஷையைத் தென்பாண்டி நாட்டில் ஸ்தாபித்தவர்களாகையால் தேவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம்.

4. மேலும் தேவர்கள் அமுதகுலத்தவர்களானது பற்றியே, அவர்களுடைய பாஷையாகிய தமிழில் அமுதைக்குறிக்கும் பதங்கள் ஏராளமாயிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இதனடியில் கூறுவாம்:

அமுதைக் குறிக்கும் பெயர்கள்.

Words denoting palm-wine.

1. அமரி,	2. அமிர்தம்,	3. அமிழ்தம்,	4. அமிழ்து,
5. அமுதம்,	6. அமுது,	7. அம்மியம்,	8. அரி,
9. அரிட்டம்,	10. அரிஷை.	11. அரியல்,	12. அருகு,
13. அருப்பம்,	14. அருமருந்து	15. அளி,	16. அறிவழி,
17. ஆசவம்,	18. ஆதுவம்,	19. ஆம்பல்,	20. ஆம்பிலம்,
21. ஆலி,	22. ஆலை,	23. இக்கு,	24. இரேயம்,
25. ஈழம்,	26. எலி,	27. ஏலி,	28. களறம்,
29. கஞ்சா,	30. கல்லியம்,	31. களி,	32. கள்,
33. காடி,	34. காதம்,	35. காவி,	36. குடு,
37. குந்தி,	38. கொங்கு,	39. கௌவை,	40. [illegible]
41. சாடனம்,	42. சாலி,	43. சாறு,	44. சிக்கர்,
45. சீது,	46. சுண்டம்,	47. சுண்டி,	48. சுண்ணை,
49. சுவைத,	50. சுமாலி,	51. சுரம்,	52. சுரா,
53. சுரை,	54. சுலோகி,	55. சுழிகை,	56. சுவிகை,
57. சேரா,	58. சேறு,	59. சொல்,	60. ஞாளி,
61. தணியல்,	62. தமியம்,	63. தமிழ்,	64. தும்பி,
65. தேம்,	66. தேறல்,	67. தேன்,	68. தொண்டி,
69. தொப்பி,	70. நறவு,	71. நறா,	72. நறை,
73. நனை,	74. நாளி,	75. நாற்றம்,	76. படு,
77. பதனீ,	78. பயம,	79. பாடலி,	80. பாணி,
81. பாண்,	82. பாலி,	83. பால்,	84. பானம்,
85. பிரசம்,	86. பிரேயம்,	87. பிழி,	88. பிழிறு;
89. பேதை,	90. பொருணி,	91. மது,	92. மதுகரம்,
93. மதுரை,	94 மதுவம்,	95. மகரந்தம்,	96. மட்டு,
97. மத்தியம்,	98. மந்திரம்,	99. [illegible]	100. மருந்து,
101. மறலி,	102. மாதவம்,	103. மாதுவம்,	104. மாரி,
105. மாலி,	106. முண்டகம்,	107. முருகு,	108. மேதை.
109. மௌலி,	110. யாது,	111. யாமம்,	112. வடி,
113. வாணிதம்,	114. வாருணி,	115. விருணி,	116. விசவி.
117. வெறி,	118. வெழ.	119. வெள்ளி,	120. [illegible]

இவ்வளவு ஏராளமான பெயர்கள் தமிழில் அமுதைக் குறிக்கும் பதங்களாயிருப்பதால் அப்பாஷையானது ஆதியில் அமுத உற்பத்தி செய்யும் குலத்தவர்கள் பாஷையென்றும், அப்பாஷையை இந்தியாவுக்குக் கொண்டுவந்த தேவர்கள் அமுதகுலத்தவரென்றும் அறியலாம்.

5. தேவர்கள் அமுதருலத்தவர்களானபடியால் பனைமரமென்னும் தாலவிருட்சமானது விசேஷித்த பிரகாரம் மும்மூர்த்திகளாலோ சனியின்பேரில் சிருஷ்டிக்கப்பட்டதாக ஒருகதையுண்டு. தாலவிருட்ச உற்பத்தியைப் பற்றிய அக்கதையானது, சென்னை கிருஷிகபிராக்கு ரெவினியூபோர்டார், கவர்ன்மெண்டாரனுமதியின்பேரில் 1892-ம் வருஷம் பிரசுரம் செய்த 25-ம் நெ. புல்லட்டின் என்னும் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. (Bulletin No. 25, The Palmyra Palm and its Uses, by W. A. Symonds, Uncovenanted Assistant, Revenue Settlement, Board of Revenue, Agricultural Branch, Madras). அது வருமாறு:—

"*Tala Velasam or Palm poem.*—A Sanskrit poem entitled *Tala Velasam*, the burden of which is the vast and varied utility of the palmyra, after describing the supernatural origin of this tree, professes to enumerate no less than eight hundred and one uses to which it is applied. This poem represents *men in remote ages* as discontented with creation as it came from the hand of Brahma, and supplicating Siva to supply them with the one thing needed, which should at once feed the hungry, heal the sick, and enrich the peoples, who, for want of it, were trembling like water on the leaf of the lotus. Siva heard. He interrogated Vishnu, the preserver, who laid the blame on Brahma. Brahma, with his finger under his underlip, pleaded that he had done his best, and was ultimately directed to create the palmyra. Since then the palmyra has been dedicated to Ganesa, and enrolled as *one of the five trees of the Hindu Paradise.* A Tamil proverb poetically says that it lives a thousand years and lasts another thousand when it dies."

இதன் மொழிபெயர்ப்பு.

" தாலவிலாசம் அல்லது பனைமரக்காவியம்.—தாலவிலாசமென்னும் சமஸ்கிருத காவியமானது பனையின் அபூருவ உற்பத்தியை விவரிப்பதோடு, அதில் எண்ணூற்றொரு பிரயோசனங்களுக்குக் குறையாமலிருக்கிறதாக எடுத்துக்காட்டிப் பனையின் பற்பலவித ஏராளமான உபயோகங்களைக் கூறுகிறது. அதிபூர்வ யுகங்களிலிருந்த மனிதர் பிரமாவால் சிருஷ்டிக்கப்பட்ட வற்றைப்பார்த்து திருப்தியில்லாதவர்களாய்ச் சிவனிடம்சென்று, பசியுற்றவர்களுக்குப் போஜனமும், பிணியாளிகளுக்கு அவுஷதமும், யாவருக்கும் ஐசுவரியமும் கொடுக்கும்படிக்கான ஒன்றே தங்களுக்குத் தேவையென்றும், அது சிருஷ்டிக்கப்படாத படியால் தாமரையிலையின்மேல் நிற்கும் தண்ணீரைப்போல தாங்கள் தளம்பிக் கொண்டிருக்கிறதாகவும் முறையிட்டதின்பேரில், சிவன் பாதுகாப்பவராகிய விட்டுணுவைக்கேட்க, விட்டுணு பிரமாவின்பேரில் குற்றத்தைச் சொல்ல, பிரமாவானவர் தம்முடைய கீழுதட்டில் விரலை வைத்துக்கொண்டு

தம்மால் சாத்தியப்பட்டமட்டும் நன்றாய்ச்செய்து முடித்ததாகக் காரணஞ்சொல்ல, கடைசியாக பனையைச் சிருஷ்டிக்க உத்தரவுபெற்றாரென்றும், அதன்பின் அது கணேசருக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டு தெய்வலோக பஞ்சதருக்களி லொன்றாயிற்றென்றும், ஷை சமஸ்கிருத காவியம் கூறுகிறது. 'பனையிருந்தாலுமாயிரம் வருஷம் இறந்தாலுமாயிரம் வருஷம் என்னுமோர் தமிழ்ப்பழமொழியுண்டு" என்பதாம்.

தெய்வலோகபஞ்சதருக்களில் ஒன்றாகிய பனை கடைசியாகவுண்டான பிரமசிருஷ்டிப்பு என்று இக்கதை கூறுகிறது. தெய்வலோகபஞ்சதருக்களாவன (The five trees in Swerga) :—

1. சந்தனம்.
2. அரிசந்தனம்.
3. மந்தாரம்.
4. பாரிசாதம்.
5. கற்பகம்.

ஆகையால் பனைதான் சுவர்க்கத்தின் ஐந்தாவது தருவாகிய கற்பகம். பனையைக் கற்பகவிருட்சம் என்று சொல்வது காரணப்பெயர். பனை நீடித்தகாலம் நிலைபெற்றிருக்கும் விருட்சம் என்றுகாட்டும்படிக்கான ஒரு பழமொழி சிம்மன்ஸ் துரை எழுதி யிருப்பதைப் பார்த்தோம். பனை ஆயிரம் வருஷம் உயிரோடிருக்கிறதென்றும், அதை வெட்டின பின்பும் ஆயிரம் வருஷம் அதன் உத்தரங்கள் நிலைபெற்றிருக்குமென்பதும் அந்தப் பழமொழியின் பொருள். ஆகையால் பனை நீடித்தகாலம் இருக்கும் மரம் என்னும் காரணத்தால் அதற்குக் கற்பகம் என்னும் பெயருண்டாயிற்று. கற்பம் என்பது பிரமனுடைய வாழ்நாளுக்குப் பெயர்.

'கற்பமே பிரமன் வாழ்நாள் கற்பகத்தருசுவர்க்கம்.' (நிகண்டு).

ஆகையால் பனைக்கு வழங்கும் கற்பகம் என்னும் பெயருக்கு பிரமன் வாழ்நாள் போல நீண்ட காலமிருக்கும் விருட்சம் என்று பொருள். டெனண்டு துரை, பனைமரத்திலிருந்துண்டாகும் ஏராளமான பலன்களைக்கருதி, இந்துக்கள் அதைக் கணேசருக்குப் பிரதிஷ்டை செய்து, அதைக் கற்பவிருட்சம், அதாவது, சொர்க்கலோகத்தின் ஜீவவிருட்சம் என்று கொண்டாடுகிறார்கள் என்றெழுதிவைத்திருக்கிறார்.

"From the multifarious uses of the palmyra and its products, the Hindus have dedicated it to Ganesa, and celebrate it as the '*Kalpa*' *tree or* '*tree of life*' *of their paradise.*" (Tennant's Ceylon quoted by Dr. Bradshaw).

இந்துக்களுடைய சுவர்க்கலோக மென்னும் தேவேந்திரலோகமானது சென்னைராஜதானியிலுள்ள கீழ்காற்றுமலைப் பிரதேசங்கள் தானென்று காட்டும் ஆதாரங்கள் முன்னமே எடுத்துரைத்தோம் (118-வது பக்கம் பார்க்க). பனைமரமானது எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் பின்னுண்டான பிரமசிருஷ்டிப்பு என்று கூறிய காரணத்தால் அது தெய்வலோக

பஞ்சதருக்களில் ஐந்தாவது விருட்சமாயிற்று. திருவிளையாடற் புராணத்தில் விருட்சங்களில் சிறந்தது கற்பக விருட்சம் என்று கூறுகிறார். ஆகையால் இந்துக்கள், தெய்வலோகத்திலுள்ள சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம் என்னும் ஏனைய நான்கு விருட்சங்களைப் பார்க்கிலும் ஐந்தாவது விருட்சமாகிய கற்பகமே சிறந்ததென்று கொண்டாடினார்கள் என்றறிகிறோம். பனைவெல்லத்துக்குக் கற்பகக்கட்டி என்று வழங்கும் பெயரானது பூர்வத்தில் பனைக்குக் கற்பகம் என்னும் பெயர் வழங்கினதென்பதைக் காட்டும் ஓர் ஆதாரம்.

விவேக சிந்தாமணியிலும் பனைக்குக் கற்பகத்தரு வென்னும் பெயர் வழங்கியிருக்கிறதைப்பார்க்கிறோம்.

11-வது கவி.

கற்பகத்தருவைச் சார்ந்த காகமுமமிர்தமுண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சார்ந்தோர் வாழ்வர்
இப்புவிதன்னிலென்று மிலவுகாத்திடுங் கிளிபோல்
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வதரிதரிதாகு மம்மா.

இவை போன்ற மற்றும்அநேகம் காரணப்பெயர்களும் பனைக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. திருஷ்டாந்தமாக பனைக்குச் சுரதரு என்று ஓர் பெயர் புராதன நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

சுரம் — பனையமுது, Palm—wine
தரு — மரம், Tree.

ஆகையால் சுரதருவென்பதற்குப் பனையமுதைக் கொடுக்கும் மரம், பனைமரம் என்றுபொருள். கற்பக விருட்சத்தின் பிரயோசனங்கள் மிகவும் ஏராளமானதாலும், அது பசியுற்றவர்களுக்குப் போஜனமும், பிணியாளிகளுக்கு அவுஷதமும், யாவருக்கும் ஐசுவரியமும் கொடுக்கும் படிக்கான விருட்சமானதாலும் அதைப் புராணிகர், சகலமும்கொடுக்கும்படியானதும், காமதேனுவென்றும் சுரபியென்றும் பெயர்கொண்டதுமான தெய்வலோக பசுவென்றும் அதைப்பற்பல விதமாகப் புராணங்களில் அலங்கரித்து கூறியிருக்கிறார்கள்.

காமதேனு = The fabled cow in the world of the gods which supplies every want.
சுரபி = The cow of the celestials

(Winslow).

பனையின் மதுவானது காமத்தை மூட்டுகின்றதினால் பனைக்குக் காமதேனு வென்னும் பெயருண்டாயிற்று.

காமம் = ஸ்திரீ, புருஷர்களுக்குண்டாகும் மோகம், Lust, Lasciviousness.
தேனு = தேனையுடையது
தேன் = பனையமுது, Palm-juice.

(சதுரகராதி)

ஆகையால் பனைக்கு வழங்குகிற காமதேனு வென்னும் பெயருக்கு, காமத்தை விளைவிக்கும் பனையமுதைக்கொடுக்கும் விருட்சம் என்று

பொருள் பனைபமுதை யருந்துகிறதினுலே காமம் அதிகரிக்கிறதென்பது லோகப[illegible]த்த சத்தியம். மன்மதனுக்கு (The Indian Cupid) வழங்குகிற மது[illegible]கன், அதாவது, மதுவின் தோழன் என்னும் பெயராலுமறியலாம்.

ப[illegible]க்கு வழங்குகிற சுரபி யென்னும் பெயரும் காரணப்பெயர்.

சுரபி = சரம் + அபி.

சுரம் = பனையமுது, Palm-wine.

அபி = மிகுதி.

c. f. அபிதாபம் = *Great heat*

(Winslow)

ஆகையால் சுரபி என்ருல் சுரத்தை மிகுதியாகவுடைய மரம், பனையமுதைமிகுதியாகவுடைய மரம், பனைமரம் என்றுபொருள்.

மேலும் புராணிகர் இக்கற்பக விருட்சத்தைச் சுரநதி யென்றும் ஆகாயகங்கை யென்றும், பேசுகிருர்கள்.

சுரநதி = The celestial Ganges. ஆகாயகங்கை

(Winslow).

இப்பெயர்களும் காரணப்பெயர்களே. சுரம் என்ருல்பனையமுதென்று பார்த்தோம். நதியென்ருல்நீர்ஒடும்வழி (the course of water-flow). ஆகையால் சுரநதி யென்ருல் பனையமுதாகிய நீர் ஒடுகிற வழியென்று பொருள். பனையமுதானது பனைவிருட்சத்தின் வழியாய் பட்டுட்டும் சென்று வடிகிறபடியால், பனைக்குச் சுரநதியென்றுபெயர், அதாவது, சுரமாகிய பனையமுது செல்லும் வழியென்பது மூலார்த்தம். ஆகையால் பனைக்கு வழங்குகிற சுரநதியென்னும் பெயரும் காரணப்பெயரென்றறிக.

பனைக்கு வழங்கும் ஆகாயகங்கை யென்னும் பெயரும் காரணப்பெயர். அதற்கு உன்னதவிருட்சம் என்று பொருள்.

ஆகாயம் = Air, வானம்.

கங்கை = கங்கு + ஐ = கங்குவையுடையது.

கங்கு = பனைமட்டையினடிப்புறம், The bottom of a palmyra stem which parts and embraces the tree.

(Winslow)

c. f. கங்கு மட்டை = The bottom of a palmyra leaf stalk encircling the tree. (Winslow).

" கங்குவடலி = The young palmyra tree with the dried leaves still adhering to its stem.

(Winslow)

ஆகையால் ஆகாயகங்கை யென்னும் பெயருக்கு ஆகாயத்தில் [illegible] உன்னதவிருட்சம் என்று [illegible]. கீழ்த்தேசங்களிலே (In the Eastern countries) பனைதான் அதிக உயர்ந்த விருட்சமாக ஒப்புமை கூறுவது பூர்வகால முதல் வழக்

கம். அதிகமாய் வளர்ந்த ஒருவனைப் பனைமரம்போல் வளர்ந்தவன், பனையிற் பாதியிருப்பான் என்று சொல்லுகிறது வழக்கம். சத்தியவேதத்தில் (Holy Bible),

"நீதிமான் பனையைப்போற் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான்"

என்று கூறியிருப்பதால் பனைபூர்வகாலமுதல் மேன்மையான விருட்சமாக எண்ணப்பட்டு வந்திருக்கிறதென்றறியலாம். ஆகையால் பனைக்கு வழங்குகிற ஆகாயகங்கையென்னும் பெயருக்கு ஆகாயத்தில் பனைமட்டைகளையுடைய உன்னத விருட்சம் என்றுபொருள். பனைக்கு வழங்கிய ஆகாயகங்கை யென்னும் பெயரால் பனையமுதுக்கு ஆகாசப்பால் என்னும் பெயர் வழக்கத்தில் சொல்லப்பட்டு வருகிறது.

இப்படியாகப் பனைமரமானது தேவர்களுடைய குலவிருட்சமான காரணத்தால், அது திருப்பாற்கடல் என்றும், கற்பகம் என்றும், சுரதருவென்றும், காமதேனுவென்றும், சுரபி என்றும், சுரநதி யென்றும், ஆகாயகங்கையென்றும் பற்பல பெயர்களால் போற்றப்பட்டு வந்திருக்கிறதை இந்த நூல்கள் யாவற்றிலும் பார்க்கலாம்.

தாலவிலாசத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களைச் சற்று கவனித்துப் பார்ப்போம். அதிபூர்வயுகங்களிலிருந்த மனிதர் பிரமசிருஷ்டிப்புகள் யாவற்றையும் பார்த்து திருப்தியடையவில்லையென்றும், அதற்குக் காரணமாக அவர்கள் விரும்பிய வஸ்து ஒன்றுதான், அதைப்பிரமன் சிருஷ்டிக்கவில்லையென்றும், அந்த வஸ்து எத்தன்மையதென்றால் பசியுற்றவர்களுக்குப் போஜனமும், பிணியாளிகளுக்கு அவுஷதமும், யாவருக்கும் ஐசுவரியமும் கொடுக்கும்படிக்கான ஒரே வஸ்துவென்றும், அத்தன்மைய வஸ்து எதுவென்று கண்டுபிடிக்கும்படியாகச் சிவன், பிரமன், விட்டுணு என்னும் மும்மூர்த்திகளும் ஆலோசனை பண்ணினார்களென்றும், கடைசியாகப் பனைதான் அத்தன்மைய வஸ்துவென்றறிந்து பிரமன் அதைச் சிருஷ்டித்து தெய்வலோக பஞ்சதருக்களில் ஒன்றாக வைத்தாரென்றும், அதன் பின்பு இந்தியாவின் அதிபூர்வகுடிகள் திருப்தியடைந்தார்களென்றும் தாலவிலாசம் கூறுகிறபடியால், பனையே தங்களுக்குவேண்டிய சகல சம்பத்துகளையும் கொடுக்கும்படிக்கான வஸ்துவென்றெண்ணிய இந்தியாவினதிபூர்வ குடிகளாகிய தேவர்கள் அமுதகுலத்தவரேயன்றி வேறெக்குலத்தவருமல்லவென்று பரிஷ்காரமாயறியலாம். இந்நாட்டிலுள்ளவர்களுக்குப் பனையினும் சிறந்த விருட்சம் வேறொன்றுமில்லாதபடியால் நாலடியாரில் சிநேகத்திலுத்தமர்களானவர்கள் நினைத்தற்கரிதாகிய சிறந்த பனைமரத்துக்குச்சமமானவர்களென்று சொல்லியிருக்கிறது:—

நாலடியார், பொருட்பால், நட்பாராய்தல்;

6-வது கவி.

கடையாயார் நட்பிற் கமுகனையரேனை
யிடையாயார் தெங்கினனையர்—தலையாயா 1
ரெண்ணரும்பெண்ணை போன்றிட்ட ஞான்றிட்டதே
தொன்மையுடையார் தொடர்பு.

இக்கவியில் சிலேடையில் அதமர் கமுகுவிருட்சத்துக்கும், மத்திமர் தெங்குவிருட்சத்துக்கும், உத்தமர் பனைமரத்துக்கும் ஒப்பிடப்பட்டிருக்கின்றமையாலும், பனைமரத்துக்குச் சேர்த்திருக்கும் எண்ணரும் பெண்ணை என்னும் விசேஷத்தாலும் பனையினும் சிறந்த விருட்சம் இந்நாட்டிலில்லை என்றறியலாம். பெண்ணை என்பது பனையின் பெயர்களிலொன்று:—

"பெண்ணை தாலம் புல் தாளி போந்தையென்
றெண்ணிய நாமம் பனை பெண் விசைப்பி"

என்னும் சூத்திரத்தாலறிக.

திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் என்னும் நூலானது வித்வான்களால் தேவாமிர்தத்தைப்போலும், தமிழ் நாட்டால் சிறந்த தர்மசாஸ்திரமாகவும் மதிக்கப்பட்டு வருகிறது. அந்நூலின் சிறப்பைக் கூறும் ஓர் கவியை எடுத்துக்காட்டுவோம்.

திருவள்ளுவ மாலை,
6-வது கவி.

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றி நீர்மையதாய்க் குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்.

இதன் கருத்து.

தன்னுருக் எக்காலத்திலும் குன்றுதல் காட்டப்பட்டாலும் நிலைபெற்று, பக்குவ காலங்களில் வெளிப்படுகின்ற பூங்கொம்பினின்று மதுரம்பொருந்திய பனிநீரைச் சொரிகின்ற தன்மையுடையதாய், செங்குத்தாக வளர்கின்ற அழகிய குருத்தோலைகளையுடையதாய், விளங்கும் கற்பகமென்னும் பனையின் தெய்வத்தன்மை பொருந்திய அழகிய மலரானது, மனுமக்களுக்குப் பதநீர் என்னும் தேவாமிர்தத்தைக் கொடுத்து இன்பந்தருகின்ற பிரகாரம், இராசபுலவனாகிய திருவள்ளுவர் வாயிற் பிறந்த திருக்குறளும் மானிடர்களுக்குத் தருமசாஸ்திர விதிகளைப்புகட்டி, மோக்ஷானந்தத்தைக் கொடுக்கிறதென்று கூறப்பட்டிருக்கிறது. பனையானது தேவர்கள் என்னப்பட்ட சான்றோரின் குலவிருட்சமானபடியால், அதன் மலருக்குத் தேய்வத்திருமலர் என்னும் நாமம் இக்கவியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கம்பராமாயணம், தனியன்.

5-வது கவி.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லா மெய்தியரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்கு நிழலிருந் தாலும்
செம்பொன் மேரு வனையபுயத் திறல்சேர் ராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதைபோற் கற்றோர்க்கிதயங் களியாதே.

இதன் கருத்து

ஒருவன் இப்பூலோக முழுவதையும் ஒரு குடைக்குள்ளடக்கியாண்டு சகல பாக்கியங்களும் பெற்றனுபவித்தாலும், சுரர் என்னப்பட்ட தேவர்கள் நாட்டிலுள்ள பனைமரச்சோலைகளுக்குள்ளே குடியிருந்து பதநீர் என்னும் தேவாமிர்தத்தை உண்டு மகிழ்ந்து வாழ்ந்திருந்தபோதிலும் அவைகள் கம்பநாடனியற்றிய இராமாயணத்தைப்போல மனதுக்கு மதுரந் தரத்தக்கவையல்லவென்று சொல்லியிருப்பதாலும் பனையானது முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் குலவிருக்ஷம் என்றறியலாம்.

6. தேவர்கள் அமுதகுலத்தவர்களானபடியால் ஆதிகாலத்திலிருந்த ரிஷிகளெல்லாரும் பனைமரத்தின் பக்கமாயிருந்து தபசு செய்தார்கள் என்று நூல்கள் கூறுகின்றன. கைலாசகிரியைக் குறித்து டெயிலர் துரை எழுதிய ஒரு நூலில் பூர்வ முனிவர்களின் தபசுஸ்தானங்கள் பின் வருமாறு வரையப்பட்டிருக்கிறது (Vide Taylor's Oriental Manuscripts, Appendix B, page 17):—

"கைலாசகிரிக்கு வலது புறத்தில் மூன்று கற்பக விருட்சங்களுக்கு நடுவிலே ஆதிசேடன் தபசு செய்கிறான். அதற்குக் கீழ்புறம் யமதருமராஜன் ஒரு அக்கினிக்குண்டத்தின் மத்தியில் ஒரு கற்பகவிருட்சத்தின் கீழ்த்தபசு பண்ணுகிறான். அதற்குக்கீழ்புறம் மூன்று இருடிகள் இரண்டு கற்பக விருட்சங்களின் கீழிருந்து தபசு செய்கிறார்கள். கைலாச பருவதத்தடிக்குச் சமீபத்தில் ஒருவன் கற்பக விருட்சசொரூபமாய்ச் சுவாமியைத் தியானம் பண்ணுகிறான். அதற்குத் தென்புறம் ஒரு கற்பக விருட்சத்திற்கு அப்புறம் பதுமபாத ரிஷியும் அவருடைய மூன்று சீஷர்களும் தபசு செய்கிறார்கள். அதற்குத் தென்புறம் இரண்டு கற்பக விருட்சங்களிருக்கின்றன. அதற்கு மேற்புறம் இரண்டு கற்பக விருட்சத்தின் கீழே இருட்டிணைவர்ம தபசு செய்துகொண்டிருக்கிறார். அதற்கு மேற்புறம் ஒரு கற்பக விருட்சத்தின் கீழாக ஓமகுண்டத்தருகில் சயனேத்தரனபாதர் தபசு பண்ணுகிறார். அதற்கு மேற்கே ஒரு கற்பக விருட்சத்தின் மேல் சுமேவதபாங்க ரிஷி தபசு பண்ணுகிறார். அதற்கு வடக்கே புஷ்கரணி நதிக்கரையில் இரண்டு கற்பக விருட்சத்தின் நடுவில் இருட்டிணைவர்ம ரிஷியும் சனகருபி ரிஷியும் தவஞ் செய்கிறார்கள்" என்பதாம்.

கைலாசகிரியென்னும் வெள்ளிமலையானது மேருவுக்குத் தென்பாரிசத்திலுள்ளது; சிவபெருமானுடைய இருப்பிடங்களிலொன்று.

"[illegible] வெற்பென்று கைலாயமலையென்று [illegible]லையாசலத்தென்று முறை

(உ[illegible]சக்கலைப்பகம்).

இக்கைலாசகிரியில் அனேகமாக கற்பக விருட்ச [illegible] இருக்கிறதென்று [illegible]ராணம், கைலாயச்சருக்கம், 14-வது கவி [illegible]
[illegible]:—

பொன்றழைப்பன கீத்திலமுழைப்பன புனைபூண்
சென்றழைப்பன பைந்துகிற் காய்ப்பன செழும்பொற்
கொன்றைமைந்தமு மிலைந்தவனுணையிற் குழும்
மன்றலிற் பலகோடி கற்பாடவி வயக்கும்.

கற்பாடவி என்றால் கற்பகச்சோலை (கற்பகம் + அடவி) என்றுபொருள். பலகோடி கற்பாடவி வயங்கும் என்று கண்டிருப்பதால் அளவிறந்த கற்பக விருட்சங்கள் என்னும் பனைமரங்கள் கைலாயகிரியின் சாரலிலிருந்தனவென்றறிக.

நாம் மேலே கூறிய ஆதாரத்தில் சிவபெருமான் எழுந்தருளிய கைலாயகிரியில அளவிறந்த கற்பகம் என்னும் பனைமரங்களிருந்ததாகவும், பூர்வகாலத்து ரிஷிகளெல்லாம் அப்பனைமரங்களின் மேலும், அவற்றின் கீழும் அவற்றிற்கு மத்தியிலும் நின்று தபசு செய்தார்கள் என்னும் கூறியிருப்பதால் அம்மலைக்கிறைவனாகிய சிவபெருமான் அமுதகுலத்தவரென்னும் காரணத்தினால் தான் ரிஷிகள் பனைமரத்தையே தபசு ஸ்தானமாக்கினார்களென்றறியலாம்.

7. சுராசுரர் அமுதமுற்பத்திசெய்ததைக் கூர்மபுராணிகர் கூறிய வண்ணம், வான்மீகி இ[illegible]ணத்தில் பூர்விக ராக்ஷசருற்பத்தியைப் பற்றிச்சொல்லிய க[illegible]யாலும் [illegible]தவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம். அக்கதை வான்மீகியின் உத்தர ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

"சகல லோக நிர்மாண நிபுணரான பிரமதேவ[illegible]ல் பாணியைப் படைத்து, அதனைக் காக்கும் பொருட்டுச் சில பூதங்களைச் சிருஷ்டித்து, நீங்கள் இதனைக் காக்கக்கடவீர் என்றபோது, அவர்களில் பசியுற்ற சிலர் உண்ணக்கடவேமென்றனர்; பசியுறாத சிலர் காக்கக்கடவேமென்றனர். இங்ஙனமுரைத்த அவர்களை நோக்கிக் கமலாசனர் நகைத்துக்கொண்டு உண்ணக்கடவோம் என்றவர் இயக்கராகக்கடவரென்றும், காக்கக்கடவோம் என்றவர் இராட்சதராகக்கடவரென்றருளிச்செய்தனர்; அதனால் இயக்கர் என்று ஒரு குலத்தாரும் இராட்சதரென்று மற்றொரு குலத்தாருமாயினர்"

என்பதாம். இந்த இராமாயண வசனத்தில் தேவகணங்களில் இயக்கர், இராட்சதர் என்னும் இரு பிரிவாரின் பூர்வோத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பிரமதேவர் ஆதியில் பாணியைப் படைத்தார் என்று கண்டிருக்கிறது. பாணி யென்னும் [illegible] பனையமுதென்று பொருள். ஆகையால் [illegible]னில் இயக்கர், இராட்சதர் என்னும் இருவகை தேவகணத்தவரும் அமுதகுலத்தவர்கள் [illegible] புராண அமுத முற்பத்திக் கதையில் சுரர் என்னும் அமுதகுலப்பெயர் வழங்கிய பிரகாரம், இக்கதையில் [illegible] என்னும் பெயர் வழங்கி வந்திருக்கிறது. இயக்கர் என்பதற்கு இக்கு மூலபதம். இக்கு என்றால் பனையமுது. ஆகையால் இயக்கர்

என்றால் இக்கு வென்னும் பனையமுதை யருந்துகிறவர்கள் என்று பொருள். இவர்களமுதை யருந்தினார்களென்றும் இக்கதை கூறுகிறபடியால், இக்கதையில் வரும் பாணி என்னும் பெயரானது தமிழ்ப்பெயரென்றும், அதற்குப் பனையமுதென்றே பொருளென்றுமறியலாம். ஆனால் சிலர் இக்கதையில் வரும் பாணியென்னும் பெயர் சமஸ்கிருதப் பெயரென்று வைத்துக்கொண்டு அதற்கு நீர் என்னும் தாற்பரியங் கூறுகிறார்கள். நீரைப்பருகுகிறவர்களுக்கு இயக்கர் என்னும் காரணப்பெயருண்டாக இடமில்லை. ஆகையால் பாணி யென்பது சமஸ்கிருதப் பெயரல்ல தமிழ்ப்பெயரென்றும், அதற்கு நீர் என்றல்ல பதநீர் என்றே பொருளென்றும், இக்கதையாலும் தேவர்கள் அமுதகுலத்தவர்களென்று ருசுவாகிறதென்றுமறிக.

8. இராவணாதி இராட்சதர்கள் புலத்திய ரிஷி மரபினர் என்று காட்டும்படியாக இலிங்கபுராணத்தில், புலத்தியன் குமாரனாகிய விச்சிரவாவென்பவருக்கு நான்கு மனைவிகளிருந்ததாகவும் அவர்களில்,

தேவவன்னினியென்பவளுக்கு குபேரனும்;

கைகசி „ இராவணன், கும்பகருணன், விபீடணன் என்னும் குமாரரும் சூர்ப்பணகியென்னும் பெண்ணும்;

புட்போற்கடை „ [illegible] மகோதரன், பிரகத்தன் என்னும் குமாரரும் கும்பீனசியென்னும் பெண்ணும்,

பகை „ திரிசிரா, தூடணன், சிகிவன் என்னும் குமாரரும் இரம்மியை என்னும் பெண்ணும்

பிறந்தார்கள் என்று கண்டிருப்பதால் இராவணாதி இராட்சதர்கள் புலத்திய ரிஷி மரபினரென்றறியலாம்.

இலிங்கபுராணம், தேவாசுரர் தோற்றமுரைத்தவத்தியாயம்,

20-வது கவி.

திரணவிந்து மகிழ்ந்தளித்த தேவர்கூத்த லிளிபினையென்
றுரைசெய்மடவாள் புலத்தியனைமணந்தாங் குயிர்த்தாளுலகெல்லாம்
பரவுகீர்த்தி விச்சிரவாவென்பான்றன்னைப் பகரவனுக்
[illegible] நால்வருண்டாங் கதைற்றக்கால்,

21-வது கவி.

[illegible] குபேரன் [illegible]
[illegible] கைகசி [illegible] இராவணனை [illegible]
[illegible] கும்பகருணனைச் சூர்ப்பணகை [illegible]
[illegible] விபீடணனை [illegible]

22-வது கவி.

மற்றைப்புட்போற்சடை யென்பாண்மகாபாரிசனை மகோதரனை
வெற்றிவடிவாட் பிரகதத்தன்றன்னைத் தீயின்விழுதன்ன
கற்றைக்குழறாம் வெய்யமுலைக் கும்பினைசியாங் கன்னியைவா
னுற்றதேவ ராணுளமுள்ள நடுங்கவுயிர்த் தனளால்.

23-வது கவி.

பகைவென்றுரைப்பா டிரிசிராவென்பான் றனையும்பருதிவாட்
டிகழுந்தடக்கைத் துட்டணனென்றுரைப்பான் றனையுந்திறல்வீதிச்
சிகிவன்றனையும் வரைவெருவத்திரண்ட முலைரம்பிகைதனையும்
புகையும்விடத்தை வாளரவுமொழிந்தா லென்னவுயிர்த்தனளால்.

இப்படியாகக் குபேரன், இராவணன், மகோதரன், விபீடணன் முதலான இராட்சதர்களெல்லாம் ஏக சகோதரரென்றறிகிறோம். இவர்களில் மகோதரன் இராவணனுக்கு மந்திரியாக இருந்தார். இந்த மகோதரனைப் பற்றி மக்ளீன் துரை சென்னை யரசாட்சிப் புஸ்தகத்தில் பின் வருமாறு வரைந்திருக்கிறார் :—

"*Ravana's prime-minister, Mahodara, was a Shaunaun.*"

(Page 71, Volume I of the Manual of the Administration of the Madras Presidency).

இதன் மொழிபெயர்ப்பு

"இராவணனுடைய மந்திரியாகிய மகோதரன் சாணன்" என்பதாம்.

மகோதரனானவன் இராவணனுக்கு சகோதரனானபடியால் இராவணாதி இராட்சதர்கள் சாணரென்றறிகிறோம். இராட்சதரோ பதினெண்கண தேவர்களில் ஒரு கணத்தவர். அக்கணங்களெல்லாம் ஒரே குலத்தவரென்று முதலாவது அத்தியாயத்தில் விளக்கிக் காட்டினோம். ஆகையால் பதினெண்கண தேவர்களென்னப்பட்டவர்கள் எல்லாரும் சாணர் மரபினுதித்த பற்பல கிளைகளேயன்றி வேறல்ல. சாணருடைய குலத்தொழில் அமுத முற்பத்தியென்று அறியாதவர்களில்லை. 1891-வது எடுத்த ஜனசங்கை (Census ரிப்போர்ட்டிலேயும் தக்ஷணத்தின் தென்பாகத்தில் சாணர் தான் மிச்சமாக அமுத முற்பத்தி செய்யும் ஜாதியாரென்று ஸ்டூவர்ட் துரை எழுதியிருக்கிறார்.

"The Shanans are the great toddy-drawing caste of the south of the Peninsula" (Page 297, Vol. XIII of the Madras Census Report).

ஆகையால் தேவர்களென்னப்பட்டவர்களெல்லாம் சாணர் என்று ரூபகாரமாகிறபடியாலும், அமுத முற்பத்தியே சாணருடைய குலத்தொழிலானபடியாலும் தேவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம்.

9. தேவர்கள் தென்பாண்டி நாட்டில் அதிபூர்வ காலங்களில் [illegible] அந்நாட்டை முதலில் கைப்பற்றினவர்களென்று பார்த்தோம். அந்நாட்டிலிருக்கும் பல ஜாதிகளிலும், பூர்வ ஜாதியென்று [illegible]

காலத்தில் எண்ணப்படுகிறவர்களும் அமுதகுலத்தவர்களாகவே இருப்பதால், தேவர்களென்னப்பட்டவர்கள் தற்காலத்தில் பூர்வ குடியென்றெண்ணப்படும் ஜாதியாரின் முற்பிதாக்களென்றறிக. திருநெல்வேலி நாட்டின் பூர்வ குடிகள் யாரென்று டக்கர் துரைசானி எழுதியிருக்கும் தென்னிந்தியாவின் சரித்திர சாரம் என்னும் புஸ்தகத்தாலறியலாம்.

The South India Sketches
by
Miss. S. Tucker.
Part I, Letter 4, Page 35.

"The villages in these palmyra groves are inhabited chiefly by *Shanars*, an industrious hard-working race, reckoned among the lower sub-divisions of the Sudras.'

"From all that I can find about them I am much inclined to agree with those who consider them to have been the *original possessors of the country*, and that when the conquering army of Rama took possession of the richer northern districts, the Shanars were suffered to retain their palmyras unmolested.'

"One strong argument in favor of this conjecture, is that in the southern part of Tinnevelly, the highest class of Shanars, called 'Nadans,' *are the acknowledged proprietors of the soil*; in even when a Nadan has sold a piece of land, he retains the right to a sort of quit-rent.'

"Indeed the system is very like that of our *lords of manor*, with the addition of the remarkable privilege, that in any dispute that is brought into a court of law, with regard to landed property, though all other classes are obliged to establish their claims by written documents, it is only necessary for a Nadan to be identified as the Nadan of such a particular spot; and the disputed property is adjusted to him, unless the opponent can prove his purchase of it."

இதன் மொழி பெயர்ப்பு

"இங்குள்ள கற்பக விருட்ச சோலைகளடர்ந்த கிராமங்களில் முக்கியமாய் [illegible] அவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களும் [illegible] ஜாதியார், [illegible] வர்களெனத் [illegible] மதிக்கப்படுகிறார்கள்.'

"நான் அவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்த [illegible] இத்தேசத்தை முதலில் கைப்பற்றினவர்களென்றும், [illegible]

வீரசேனையானது மிகவும் செழிப்பான வடகாடுகளைப் பிடித்துக்கொண்டகாலத்தில், சாணூர் தங்களுடைய கற்பக விருட்சங்களைத் தொந்தரவிலலாமல் அனுபவித்து வர இடம் பெற்றூர்களென்றும் எண்ணுகிறேன் ; இதே அபிப்பிராயங்கொண்ட மற்றவர்களுமிருக்கிறுர்கள்.'

"இவ்வாறு அபிப்பிராயப்படுகிறதற்குப் போதந் நியாயமொன்றுண்டு. அதாவது, திருநெல்வேலிச் சீமையின் தென்னுட்டில் வசிக்கின்ற சாணூர் குலப் பெரியோருககு நாடான் என்பப் [illegible] பெயர் வந்து வழங்குகின்றது. இப்ப [illegible] ப்பெயர் பெற்றிருக்கும் நாடாக்கள் நிலத்துக்குரிமையுடையவர்களாகிய நிலமைக்காரர் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறுர்கள். நாடான் ஒருவர் தன் காணியாட்சி நிலத்தின் ஓர்பாகத்தை விக்கிரயஞ் செய்து கொடுத்திருந்தபோதிலும், தன்னுடைய அதிபூர்வ பாத்திய வுரிமைக்காக பனை வரிப்பணம் வசூல் செய்யும் சுதந்திரம் அ[illegible]க்குண்டு,'

"இந்த வழக்கமானது இங்கிலாந்திலுள்ள மேன்மக்களாகிய பிரபுக்களுக்குள்ளிருக்கின்ற வழக்கத்தை [illegible] இருக்கிறதென்பது மெய். இங்கிலாந்திலுள்ள பிரபுக்களுக்கிருக்கும் பாத்தியதையைவிட நாடாக்களுக்கு அதிகமாக இருக்கும் சலாக்கியமென்னவெனில் நியாயஸ்தலங்களில் நில வியாச்சியம் நடக்கும் காலத்தில் மற்றும் ஜாதிகளெல்லாரும் எழுத்து மூலியமான தஸ்தா வேஜுகளைக்கொண்டு தங்களுக்கிருக்கும் நிலப்பாத்தியதையை ருஜுப்படுத்தவேண்டுவதாயிருந்தபோதிலும், நாடாக்கள் குலத்தவர்கள் விஷயத்திலோ, இன்ன நாடான் இன்ன நிலத்துக்குரியவரென்று சாட்சியங்களால் ருஜுப்படுத்தினுலே போதுமானது ; எதிர்க்கட்சிக்காரன் வியாஜ்ஜிய நிலத்தை நான் கிரயத்துக்கு வாங்கினதாக ருபிக்காவிட்டால், அந்நிலமானது நாடானுக்கே உரியதென்று தீர்ப்பாகின்றது." என்பதாம்.

தென்னிந்தியாவின் சரித்திரசாரப் புஸ்தகத்திலிருந்து நாம் மேலே பெயர்த்தெழுதிய விஷயங்களினுலே நாடாக்கள் தான் அதிபூர்வயுகங்களில் தென்பாண்டி நாட்டைக் கைப்பற்றின நிலமைக்காரர் என்று ஏற்படுகிறபடியால், இந்தியாவின் அதிபூர்வ குடிகளும் தென்பாண்டி நாட்டாரும் தமிழரும் கறுத்தமேனியை யுடையவர்களுமான தேவர்களென்னப்பட்டவர்கள் நாடாக்கள் குலத்தவர்களேயன்றி வேறெக்குலத்தையும் சேர்ந்தவர்களல்லவென்று அறியலாம். அந்நாடாக்களாகிய சான்ருேர் கற்பக விருட்ச சோலைகளடர்ந்த கிராமங்களிலே முக்கியமாய் வசிக்கின்றபடியாலும், அமுதமுற்பத்தியையே குலத்தொழிலாகச்செய்து வருகின்றபடியாலும் அவர்களுடைய [illegible] [illegible] ளும அமுதகுலத்தவரென்றனர்.

10. [illegible] தவியாலும் நாடாக்களாகிய [illegible] [illegible] திருநெல்வேலி நாட்டில் அமுத[illegible] [illegible] திருக்[illegible] [illegible]

திருநெல்வேலிப்புராணம், சிறப்புப்பாயிரம்,
2-வது கவி.

வேதனு நெடியமாலும் விளம்புதற்கரியதான
நாதனு முலகமீன்ற நங்கையு நயந்துமேனாட்
டுதவ மொழிந்துமேலோர் தொழுமனுவிற்காக்க
மாதவ மியற்றுநாடு வண்டமிழ்க் கன்னிநாடு.

இதன் தாற்பரியம்.

பிரமனும், விட்டுணுவும், நாவாலெடுத்துரைக்க வொண்ணாத கீர்த்தி பெற்ற சிவனும், சான்றோர் குலமாதாகிய சத்திதேவியும், சந்தோஷமாய்ப் பூர்வத்தில் இனிய தவம்புரிய எழுந்து, மேலோர் என்று புகழ் பெற்ற சான்றோரைக் காக்கும்பொருட்டு பனையமுதற்பத்தி செய்த நாடாக்கும் அழகிய அருதொழுகும் கன்னி நாடென்னப்பட்ட இதனை பாண்டிநாடு என்று பொருள்.

இக்கவியில் சத்திதேவியாருக்கு வழங்கிய 'உலகமீன்ற நங்கை' என்னும் பெயருக்கு [illegible] குலமாது என்று தாற்பரியங்கூறினோம். எப்படியெனில் உலகு, உலகம் என்னும் பெயர்கள் சான்றோர் குலப் பெயரெனத் திவாகரமும் நிகண்டும் கூறுகின்றன.

சேந்தன் திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி,
11-வது சூத்திரம்.

"சான்றோர் மிக்கோர் நல்லவர் மேலவ
ராய்ந்தோ ருயர்ந்தோ ராரிய ருலகே
வாய்ந்த வான்றோ ரறிவுடை யோரே."

இச்சூத்திரத்தின்

1. சான்றோர்	2. மிக்கோர்	3. நல்லவர்	4. மேலவர்
5. ஆய்ந்தோர்	6. உயர்ந்தோர்	7. ஆரியர்	8. உலகு
9. ஆன்றோர்	10. அறிவுடையோர்		

என்னும் பத்துப்பெயர்களும் ஒரு பொருட்கொண்ட மொழிகளென்று கண்டிருக்கிறது.

ஷை திவாகரம், ஷை தொகுதி.
17-வது சூத்திரம்.

"உலக மென்பதுயர்ந்தோர் மாட்டே" என்றும்,

சூடாமணி நிகண்டு, மக்கட் பெயர்த்தொகுதி,
[illegible]-வது செய்யுள்.

"ஓத நீருலகமென்ப துயர்ந்தவர்க் கியம்பு நாமம்"

என்னும் விளம்பியிருப்பதால் உலகம் என்பதும் உயர்ந்தோர் என்பதும் ஒருபொருட்கொண்ட மொழிகள் என்றறியப்படுகிறது. உலகு என்பதும், உயர்ந்தோர் என்பதும், சான்றோர் என்பதும், ஒரு பொருட்கொண்ட மொழிகளென முந்தின சூத்திரம் கூறியதைப் பார்த்தோம். [illegible]

யால் உலகம், உலகு என்னும் பதங்கள் சான்றோரைக்குறிக்கும் பதங்களென்றறிக. உலகமீன்ற நங்கை என்றால் உலகம்—சான்றோரை, ஈன்ற—பெற்றெடுத்த, நங்கை—பெண்ணிற்சிறந்தாள், அதாவது, சான்றோர் குல பூர்வமாது, பூர்வகாலத்திலிருந்த சிறந்த சான்றாள் என்று பொருள்.

"மேலாஞ்சீர்கெழுமனு" என்பதற்கு மேலோர் என்று புகழ்பெற்ற சான்றோர் எனப்பொருள் கூறினோம். மேலாம் என்றால் மேலவராகளாகிய என்றுபொருள். மேலவர், மேலோர் என்பது ஒருபொருட்கொண்டமொழிகளென்பதை விஸ்தரிக்க வேண்டியதில்லை; மேலவர் என்பது சான்றோர் குலப்பத்துப்பெயர்களிலொன்றென முன்னமே எடுத்துரைத்தோம். சீர்கெழு என்றால்சிறப்புற்றோங்கிய என்றுபொருள்; சீர்—புகழ், கெழுவல்—நிறைதல் (சதுரகராதி). மனு என்பதற்குச் சான்றோர் என்றுபொருள் கூறினோம். மன்+உ சேர்ந்து மனு என்றாகிறது. மன் என்றால் பெருமை (Greatness): ஆகையால் மனு என்றால் பெருமையிற் சிறந்தோர் (Great men) என்று பொருள்— உவின்சுலோ அகராதியாசிரியர் சான்றார் என்பதற்கும் அதே தாற்பரியம் கூறுகிறார்.

"சான்றார்—The great, the learned, Toddy-drawers as a caste"
(Winslow).

சான்றார் என்பதற்கு பெருமையிற் சிறந்தோர், அறிவுடையோர், அமுதமுற்பத்தி செய்யும் குலத்தவர் என்று உவின்சுலோதுரை எழுதியிருப்பதால் மனு என்னும் பெயரும் சான்றார் என்னும் பெயரும் ஒருபொருட் கொண்ட மொழிகளென்றறிக. ஆகையால் மேலாஞ்சீர்கெழுமனுவென்பதற்கு மேலோர் என்றுபுகழ் பெற்ற சான்றோர் என்பது சரியான தாற்பரியம்.

தேவர்கள் "மாதவமியற்றுநாடு" என்பதற்குப் பனையமுதுற்பத்தி செய்த நாடு என்று பொருள் கூறினோம். மாதவம—பனையமுது, இயற்றுதல்—செய்தல், அதாவது, அமுதம் செய்தல், அமுதமுற்பத்திசெய்தல், என்றே பொருள். தேவர்கள் திருப்பாற்கடலைக்கடந்து அமுதெடுத்தவர்களென்று நாம் முன்னமே பார்த்தபடியால் அவர்கள் மாதவமியற்றினோர்களென்று சொன்னாலும் அதேபொருள்தான் என்றறிக.

இப்படியாகத் தேவர்கள் திருநெல்வேலி நாட்டில் சான்றாரைக் காக்கும்படி அமுதமுற்பத்தி செய்தார்களென்று கண்டிருப்பதாலும் அவர்கள் அமுதகுலத்தவர்களென்றறியலாம்.

11. நாராயணமூர்த்தியும் அமுதகுலத்தவரென்று காட்டும்குறிப்புகளிருக்கின்றன. இவர்மயன் என்றும் இமயனென்றும் [illegible] ற இமயமலையரசனுக்கு மனோரமை என்னும் மேனகை என்பவளிடம் பிறந்த குமாரன். பார்வதிதேவியாருக்கு அண்ணன். இவர் [illegible] வியாரின் [illegible] காரணனாயிருந்தால், தேவியாருக்கு மாலுக்கிளையாள், அதாவது, திருமாலுடைய தங்கையென்றும், நாராயணி; அதாவது நாராயணன் தங்கையென்றும் பெயர்களுண்டாயிற்று.

திவாகரம், தெய்வப்பெயர்த்தொகுதி,
23-வது சூத்திரம்.

பகவதியின் பெயர்.

கொற்றவை யையை கார்த்திகை கௌரி
துர்க்கை சூலி மகுடற் காய்ந்தாள்
நீலி யெண்டோளி விந்தை சயமகள்
இருங்கலை யூர்தி யெழிலி யேதி
மேதித்தலை யிசைவிசயை யங்கரி
மாலுக்கிளையாள் சக்கரா யுதியே
பாலைக்கிழத்தி பண்ணம் பணத்தி
நாரயணியே கன்னி குமரி
சீர்சால் பகவதி சிறந்ததோல் பெயரே.

நாராயணனுக்கு **மைநாகன்** என்றும் பெயர்—மை நாகம் என்றால் கரும்பாம்பு (மை—கறுப்பு, நாகம்—பாம்பு) என்றுபொருள். மைநாகம் என்பது திருநெல்வேலிக்கும் இலங்கைக்கும் மத்தியிலுள்ள ஒருசிறியதீவின் பெயர். நாராயணமூர்த்தியானவர் மைநாகம் என்னும் தீவையே தம்முடைய முக்கிய இருப்பிடமாகக்கொண்ட காரணத்தால் அவருக்கு மைநாகன் என்னும் பெயருண்டாயிற்று.

நாராயணன் என்னும் பெயர் நரு+அயநன் எனப்பிரிக்கக்கூடிய பதம்.

பிரம + அஸ்திரம் = பிரமாஸ்திரம் என்றும்
பசுபதி + அஸ்திரம் = பாசுபதாஸ்திரம் என்றும்
இராம + அயநம் = இராமாயணம் என்றும்

இலக்கண விதிக்கிணங்க உண்டாகிற வண்ணம்

நரு + அயநன் = நாராயணன்

என்றாகிறது. நரு என்றால் பனையமுது, அயநம் என்றால் பிறப்பு (சதுரகராதி பார்க்க). ஆகையால் நாராயணன் என்றால் அமுதகுலத்திற்பிறந்தவன் என்று பொருளாம்.

இத்தாற்பரியமே சரியான தாற்பரியமென்று காட்டும்படிக்கான கவியொன்று கம்பராமாயணத்திலும்வருகிறது. மயன் என்னும் அசுரனுக்கு ஏமை யென்னும் அச்சரசையிடம் பிறந்த புத்திரியும், இலங்கைக்கரசனாகிய இராவணனுடைய மனைவியும், பேர்சொன்ன மாத்திரத்தில் பெரும்பாவங்களை யொழிக்க வல்லபஞ்சகன்னிகைகளி லொருவளென்று பார்ப்பார் மதித்து அதிகாலையில் ஸ்நானம்பண்ணினவுடனே ஜெபிக்கப்படுகிற தேவதைகளில் ஒருவளுமாகிய மண்டோதரியானவள் இராமருடைய அம்புக்கிரையான தன் பர்த்தாவாகிய இலங்கேசுரனென்னும் இராவணனுடைய உடலின்மேல் விழுந்து அழுது புலம்பிய கவிகள் கம்பராமாயணம், யுத்தகாண்டம், இராவணன் வதைப்படலம், மண்டோதரிபுலம்பலில் பார்க்கலாம். அக்கவிகளிலொன்றில்

"ஆராவமுதாயலை கடலிற் கண்வளரும்
நாறுயண னென்றிருப்பே னிராமனை நான்
ஓராதே கொண்டகன்ருயுத்தமனுர் தேவிதனைப்
பாராய் நீ நின்னுடைய மார்பகலம் பட்டவெல்லாம்"

அருந்துகிறவர்கள் போதுமென்று திருப்தியடையாமல் இன்னும்வேணும்வேணுமென்று விரும்பிக்கேட்கும் அமுதக்கடலில் நித்திரைசெய்யும் நாருயணனென்றே இந்த இராமரை நினைத்திருப்பேன் என்றுகூறுகிருள். இக்கவியில் நாருயணமூர்த்தியைப்பற்றிச் சொல்லிய விபரத்தால் அவர் அபரிமிதமாயமுதருந்தி மயக்கங்கொண்டு நித்திரைசெய்தவர் என்று தெரிகிறது. இதனுலும் அவர் அமுதகுலத்தி லுதித்தவரென்று அவர் பெயரே தெரிவிக்கிறதினுலும் அவர் அமுதகுலத்தவரென்பதற்கையமில்லை.

அமுதகுலத்தவராகிய சான்றேருக்குத் திவாகரசூத்திரமொன்றில் பத்துப் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றதென்றும், அவற்றுள் மிக்கோர் என்பதொரு பெயரென்றும் 162-வது பக்கத்தில் பார்த்தோம். மைகாகனுகிய நாருயணமூர்த்திக்கு மிக்கோன் என்னும் குலவிளக்கப் பெயர் வழங்கியதற்கு ஒருமேற்கோள் கூறுவாம்.

அருணைசலபுராணம், திருமலைச்சருக்கம்,
44-வது கவி.

கண்ணிலள விடவரியகடரிணைக்கண் டிருவருமாய்க் கவலையானு
ரெண்ணிலி தனடிமுடியை யறிபவரே பெரியவரென்றிசைத்தாரிந்த
மண்ணினடி யறிவனெனப் பணியிடையிற் றூக்கமிக்கோன்வராகமானுன்
விண்ணின்முடி யறிவனென வெகினவடிவெடுத்தயனும் விரைந்துபோனுன்.

பிரமனும் திருமாலும் ஒருவருக்கொருவர் பெரியவரென்று வாதிட்டசமயத்தில், சிவனுடைய அடியையாவது முடியையாவது காண்பவரேபெரியவரென்று திருமால் பன்றி வடிவமாகிப்பூமியைத் துளைத்துச்சென்றாரென்றும், பிரமன் அன்னப்பக்ஷியாகி ஆகாயத்திற் பறந்தாரென்றும் பொருள்.

இங்கே திருமாலாகிய நாருயணமூர்த்திக்கு வழங்கியிருக்கிற பெயர்
'பணியிடையிற் றூக்கமிக்கோன்'

என்பதே. இதற்குநாகத்தின்மேல்நித்திரைசெய்கிறவர் என்றுசொல்வது மூடார்த்தம். நாகத்தின்மேல் மனுஷர்நித்திரைசெய்கிறதில்லை. நாகத்தின்மேல் நித்திரைசெய்கிறவர் பிருகுவின் மகளாகிய இலக்குமியையேன்மணம்புரியவேண்டும்? அப்படித்தாற்பரியம் கூறுகிறவர்கள் ஸ்ரீ தேவியை இலக்குமியே அந்தநாகமென்று சொல்லுவார்கள் [illegible]. திருமாலுக்கு வழங்கிய இப்பெயருக்குச் சரியான தாற்பரியம் [illegible]

பணி என்பது நாகம் என்னும் பாம்பல்ல; [illegible]
இணையில் [illegible] திலில
தூக்கம் என்பது நித்திரை
மிக்கோன் [illegible]

அதாவது, மைநாகத்தீவின் மத்தியில் மதுபானத்தால் மயங்கித் திரைசெய்யும் சான்றோன் என்றுபொருள்.

இப்படியாக நாராயணமூர்த்தி அமுதகுலத்தவரென்று அவருடைய பெயர் தெரிவிக்கிறதினாலும், அவர் அபரிமிதமாய் அமுதருந்திமயக்கங் கொண்டு நித்திரைசெய்கிறவரென்று இராமாயணம் கூறுகிறபடியாலும், அவர் சான்றானென்று அருணாசலபுராணம் தெரிவிப்பதாலும் நாராயண மூர்த்தியும் அவர் குலத்தவர்களாகிய மற்றும் தேவரும் அமுத குலத்தவரென்றறியலாம்.

12. அமுதமுற்பத்தி செய்யுங் குலத்தவர்கள் ஆடையில் அமுதம் தெரித்து, அல்லது சிந்தி, அவர்கள் ஆடை நனைந்திருப்பது சகஜம். பார்வதி தேவியாருடைய ஆடையும் சிவபெருமானுடைய ஆடையும் பனையமுதால் நனைந்திருந்ததென்றும், அப்படி நனைந்திருந்த ஆடையையே உடுத்திக்கொண்டு, தங்கள் மடியிலே தம் அருமைக்குமாரனாகிய முருகக்கடவுளை இருக்கச்செய்து, அவரழகினைப் பார்த்து மகிழ்ந்து, அவருடைய மழலைச் சொல்லைத் திருச்செவியில் நுகர்ந்தார்கள் என்றும் காசிக்கலம்பகம் கூறுகிறபடியாலும் தேவர்கள் அமுதகுலத்தவரென் றறியலாம்.

காசிக்கலம்பகம்,

1-வது கவி.

நிலைக்குருந்கொண்ட தலைவியுநீயும்
மலைபகவெறிந்த மழவிளங்குழவியை
அமிர்தூற்றிருக்குங் குமுதவாய்த்தேறல்
வண்டுகினனைப்ப மடித்தலத்திருத்திக்
கண்களிற்பருகிக் காமருகுழவி
எழுதாக்கிளவி யின்சுவை பழுத்த
மழலைநறமிர்தம் வாய்மடுத்துண்ணச்
செஞ்சொனிறைத்தநும் மஞ்செவிக்கடிகளென்
புன்மொழிக்கடுக் கொளப்புகட்டினன்
இன்னருள் விழைகுவா யிறும்பூதுடைத்தே.

இதன்கருத்து.

சான்றோர் எல்லாருக்கும் தாயாகிய பார்வதிதேவியாரும் சிவபெருமானாகிய நீரும் கிரவுஞ்சகிரி பிளவுபட வேலினை யெறிந்த இளங்குழவியாகிய முருகக்கடவுளை, அமுதுக்கு ஊற்றாகிய ஆம்பல் (water-lily) போன்ற பாளையினின்று வடியும் பனையமுதால் (தேறல்) நனைந்த அழகிய ஆடையை யுடுத்திய மடியிலிருக்கச் செய்து, அவர் அழகைத் தமது கண்களால் பருகி, அந்த சுந்தரக்குமாரன் சொல்லும் எழுதக் கூடாத வார்த்தைகளாகிய இனிய சுவையுள்ள மழலைச்சொல் என்னும் நறுமணங் கமழும் அமுதைத் திருச்செவிகளாகிய வாயால் தேக்கியுண்ண, அவ்வமிர்தம் (சொல்-பனையமுது) பாய்ந்து நிறைந்த நுமது அழகிய திருச்செவிகளுக்கு, கடவுளே! எனது புன்சொல்லாகிய விஷமோ

புகட்டினேன், இது பெரும் வியப்புண்டாக்கும்; ஆயினும் இனிய அருள் செய்வாயாக என்பதாம்.

இக்கவியில் சிவனுடைய ஆடையும் பார்வதி தேவியாருடைய ஆடையும் பனையமுதால் நனைந்திருந்ததென்று கண்டிருப்பதால் அவர்கள் அமுதகுலத்தவர்களென்றறிக.

13. தேவர்கள் அமுதகுலத்தவரென்று கூறும் வேறோர் ஆதாரம் பார்ப்போம். இந்து மார்க்கத்தின் பூர்வநூல்களிலெல்லாம் யாகஞ்செய்வதே சகல தருமங்களிலும் சிறந்ததென்று பார்க்கிறோம். சுவர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரன் நூறு அஸ்வமேதையாகஞ்செய்தான் என்றும், அதனால் அவனுக்கு வேள்விநாயகன் என்னும் பெயருண்டாயிற்றென்றும், நூறு அஸ்வமேதை யாகங்கள் செய்பவர்களுக்கு மூவுலகங்களையும் ஆளும்படியான பதவி கிடைக்குமென்றும் வாசிக்கிறோம். தென்பாண்டி நாட்டிலரசாண்ட மலயத்துவசபாண்டியன் தொண்ணூற்றொன்பது அஸ்வமேதை யாகங்கள் செய்து முடித்தானென்றும், பிரமாவும் பத்து அஸ்வமேதை யாகங்கள் செய்தாரென்றும் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. விஷ்ணு புராணத்திலே சூரிய குலத்திலுதித்த மருத்தனென்னும் அரசனைப் பற்றிய ஓர் சுலோகத்தில்,

> "இவ்வுலகத்தில் மருத்தனுடைய யாகத்தைப்போல யாதொன்றும் யாகமிருந்தது. ஏனெனில் அந்த யாகத்துக்கு வேண்டிய கருவிகளெல்லாம் செம்பொன்னால் செய்யப்பட்டு விழங்கின. அந்த யாகத்திலே சோமபானத்தினாலே இந்திரனும் தக்ஷிணைகளினாலே அந்தணரும் உடம்பு தெரியாதிருக்கும்படி களித்தார்கள்,"

என்று விளம்பியிருக்கிறது. இவ்வாறு சோமசூரியாக்கினி குலங்களிலுதித்த அநேக இந்து ராஜாக்கள் அஸ்வமேதை யாகங்கள் செய்தாகவென்றும் வாசிக்கிறோம். தமிழ் நூல்களிலும் பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களாகிய உயர்குல மக்கள் மூவரும் செய்யவேண்டிய கடமைகளில் யாகஞ் செய்தல் ஒன்றென்று சொல்லியிருக்கின்றது. ஆகையால் யாகம் என்றால் என்னவென்றும் அதனுற்பத்தி விபரம் என்னவென்றும் பார்க்கலாம்.

யாகம் என்றால் பலி (Sacrifice, Oblation) என்று பொருள். பலியிடுதல் பூர்வகாலமுதல் இந்துக்களுடைய வழக்கம். இதற்கென்று ஓமாக்கினி வளர்த்து ஓமகுண்டங்களில் போட்ட விறகுகளிலே ஒரு மண்டலமென்னப்படும் நாற்பது நாட்களாக இரவும் பகலும் கட்டையும் நெய்யும் வார்த்து அக்கினியைப் பெருக்கி, [illegible] குதிரை, பசு, ஆடு முதலான மிருகங்களில் யாதாமொன்றைப் பலியிட்டு, அதன் இறைச்சியை நெய் வார்த்துப் பொரித்து, அவ்வாறு பொரிக்கப்பட்ட இறைச்சிக்கு அவிப்பாகம் என்று பெயரிட்டு, தேவாதிதேவர் [illegible] யாக கும்பங்கள் என்னும் [illegible] [illegible], அம்மதுவுக்கு ஆகாசப்பால் என்று பெயரிட்டுக்கொண்டு,

அவிப்பாகத்தை மதுவுடன் சேர்த்துப் புசித்து வருவதற்குத் தான் யாகம் என்று பெயர். இவ்வாறு அவிப்பாகத்துடனருந்தும் மதுவை முதற்கொடுக்கிறதற்கு ஸ்தூலபாத்திரமென்றும், இரண்டாவது [illegible]டுக்கிறதற்கு சூட்சபாத்திரமென்றும், மூன்றாவது கொடுக்கிறதற்கு காரணபாத்திரமென்றும், இவ்வாறு கொடுத்துக் குடித்து மீந்துபோனதை ஒரு பாத்திரத்தில் வார்த்து முதலில் குருக்களும் பின்பு மற்றவர்களும் பருகுகிறதற்கு வைரவபாத்திரமென்றும் பெயர். இந்த யாகங்களிலுண்டான அவிப்பாகங்களை உற்றார் உறவினர் முதலானவர்களுக்குப் பங்கிட்டனுப்பவேண்டியது மரியாதை; அவிப்பாகம் கொடாதுபோயின், அது பெருங்குறைவாக எண்ணப்படும். பிரமனின் குமாரனாகிய தக்க பிரசாபதியானவர் தன் மகளாகிய சத்தி தேவியாரைச் சிவபெருமானுக்குக் கலியாணம் செய்து கொடுத்த பின்பு, தக்கன் ஒரு நாள் சிவபெருமானுடைய சபைக்குப் போனவிடத்தில் சிவன் எழுந்து தனக்கு மரியாதை செய்யவில்லை என்கிற கோபத்தால், சிவபெருமானை அவமானப்படுத்தும்படியாய்த் தக்கன் ஒரு வேள்வியியற்றி, அதற்குச் சிவனைத் தவிர மற்றும் தேவர்களாகிய பிரமன், விட்டுணு, இந்திரன் முதலானவர்களை அழைத்தானென்றும், சிவபெருமானுக்கு அவிப்பாகம் கொடுக்கவில்லையென்றும், அதனால் சிவபெருமான் கோபங்கொண்டு தம்முடைய குமாரனாகிய வீரபத்திரரை யனுப்பி அந்த யாகத்தை அழித்தாரென்றும் நூலோர் கூறுகிறபடியால் உற்றார் உறவினருக்கு அவிப்பாகம் அனுப்பாதது [illegible]வும் பெரிய அவமானமாக எண்ணப்பட்டதென்றறியலாம்.

இவைகள் இந்து இராஜாக்கள் இராஜ்யபாரம் நடத்தின காலங்களிலேமட்டும் நடந்து, அவ்விராஜ்யங்கள் மகமதியரரசாட்சிக்குட்பட்ட பின்பு ஓமகுண்டங்கள் பூமிக்குள் மூடப்பட்டு யாகங்கள் நிறுத்தப்பட்டன. தற்காலத்தில் சோழநாட்டில், திருவையாற்றிலும் அதைச்சூழ்ந்த ஸ்தலங்களிலுமிருக்கிற பிராமணர்கள் அங்குள்ள சிவாலயங்களிலே நெடுநாளாக மூடப்பட்டிருந்த ஓமகுண்டங்களைத் திறந்து, யாகத்துக்குரிய விறகுகளடுக்கி, ஒழுக ஒழுக நெய்வார்த்து, ஆட்டு இறைச்சியைப்போட்டுப் பாகஞ்செய்து, சர்க்கரைகலந்து, இறைச்சியையுருட்டி உண்டைகளாக்கி, அந்த வுண்டைகளைப்பாகஞ்செய்து உடந்தைக்காரர்களுக்கு அவிப்பாகம் பங்கிட்டுக்கொடுத்து மதுவுடன் அருந்திவருகிறார்கள். இதற்கு அசயாகம் என்னப்படும் ஆட்டு யாகம் என்று பெயர். அசுவமேதை யாகத்தில் ஆட்டிறைச்சிக்குப் பதிலாகக் குதிரையினிறைச்சி உபயோகிக்கப்பட்டது. அசுவமேதையாகம் (அசுவம்—குதிரை, மேதை—பலியிடல்) என்றும் [illegible] மாமிசத்தைப்பனியமூடேதாடு [illegible] என்றும் [illegible].

சகல உயிர்ப்பிராணிகளிடத்திலும் கருணையுள்ள இந்துக்கள், இவ்வாறு ஒரு உயிரைக்கொன்று யாகம் செய்வதின் மூலகாரணம் [illegible] சரித்திரபாகத்தில் கண்டிருக்கிறது.

காசிக்கலம்பகம்.

38-வது கவி.

[illegible]ாதியொன் றிலொருபாதி சத்தியொருபாதியும் பரமசிவமெனத்
தொகுத்துவைத்தவவி முத்த நாயகர் துணைப்பதம் பரவுகளியரேம்
ஓதியோதி யிளைப்பர்வேதமுணர்த்து தத்துவ முணர்கிலார்
உணருவண்ண மநுபவத்தில் வந்திடுமோ ருண்மைவாசக முணர்த்துகேம்
எதிலு லறமனைத்திலும்பசுவினைப் படுத்தனல் வளர்த்திடும்
யாகமேயதிகமென்பதன்பர்த மிறைச்சி மிச்சிலதிச்சையார்
ஆதியாறிவரத் [illegible] மதுவருந்தி லப்பொழுதிலே பெறற்
கரியதோர் பரமசுகம் விளைத்திடுவ ததுமறுத்த வேவையில்லையே.

இதன் கருத்து

தமது திருமேனியாகிய ஒளியொன்றில் ஒருகூறு சத்தியாகிய பார்வதி, ஒருகூறு தாமென்றுதொகுத்து வைத்தருளி, அவிமுத்தம் என்னும் காசியில் விசுவேவசுரர் என்னும் நாமத்தால் வணங்கப்படும் சிவபெருமானின் இரண்டு திருவடிகளையும் வணங்கும் களியரேயாம். வேதங்களை யோதியோதி யிளைப்படைவோர்கள், அவ்வேதங்களுணர்த்தும் உண்மைப் பொருளை யறியார்கள். யாவரும் அறியும்படியாய் எம் அநுபவத்தில் வந்த ஓர் உண்மை மொழியைக் கூறுகின்றோம். எல்லாத் தருமங்களிலும், ஓர் உயிரினைக்கொன்று அக்கினி வளர்த்திடும் வேள்வியே அதிகமென்றுகூறுவது என்னகாரணத்தால்? முதற்கடவுள் (ஆதியார்) ஆகிய பரமசிவன் தம்மிடத்திலன்பு பூண்டுயாகஞ்செய்பவர்களருந்திய இறைச்சியில் மீந்ததைத்தின்னும் ஆசையுடையவர், அறிவுடையோர் குலத்தவர் (அறிவர்), அதுநிற்க. பனையமுதைப்பருகினால் அப்பொழுதே அடைதற்கரிய பரமசுகம் விளையும், அதைப்பருகுதலை மறுத்தவர்களுக்கு எவ்வகையான சுகமுமில்லை என்பதாம்.

இக்கவியிலே யாக விஷயமாய் வேதங்களுணர்த்தும் உண்மைப் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. யாகத்திலருந்துவது பனையமுதும் இறைச்சியும். இதற்குக்காரணமென்னவென்றால் முதற் கடவுளாகிய சிவபெருமான் அறிவுடையோர் குலத்தவர் என்று கண்டிருக்கிறது. அறிவுடையோர் குலமென்பது சான்றோர்குலத்தைக் குறிக்கிறதென்று நாம்மேமலே கூறிய திவாகர சூத்திரத்தாலறியலாம். அவர் சான்றோர் குலத்தவரானபடியாலும், சான்றோர் அமுத குலத்தவர்களானபடியாலும் அக்குலத்தவர்கள் மதுவாகிய பனையமுதே அவருடைய பானம். அதுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய பானமானபடியால், சிவபக்தர்கள் சிவனருந்திய பானமாகிய பனையமுதையருந்தல் [illegible] அப்போதுதான் அடை[illegible] [illegible] ந்தாதவர்களுக்கு எவ்விதமான சுகமுமில்லையென்றும் [illegible]. இதைக்குறித்து ஔவையாரும் “ பாரியல்லதுகாரியமில்லை ” என்றார். அதாவது பனையமுதின்றி யாதொரு சுகமுமில்லையென்று பொருள். [illegible]—பனையமுது. அமுது அருந்துகிறதற்குக் கூட்டாக இறைச்சி தேவை. ஆகையால் யாகம் செய்கிறவர்கள் அறிவுடையோர் குலத்த

வராகிய சிவபெருமான் அருந்தியபடி பனையமுதையும் இறைச்சியையும் சேர்த்துண்ண வேண்டும். வேதங்களுணர்த்திய உண்மை மொழி யிதுவே. இந்த உண்மை மொழியினாலே சிவபெருமான் சான்றோர் குலமென்னும் அமுத குலத்தில் தோன்றினவரென்றறியலாம்.

தற்காலத்தில் சைவர்கள் என்னப்பட்டவர்கள் இறைச்சியைப் புசிக்கக்கூடாதென்று அதை விலக்கி வருகிறார்கள். யாகத்தைப்பற்றி நாம் மேலே எடுத்துக்காட்டிய உண்மை மொழியினால் சைவர்கள் இப்போது கொண்டிருக்கும் கொள்கை முற்றிலும் தப்பானதென்றறியலாம். சிவபெருமானே இறைச்சி மீது இச்சையுடையவர் என்று கண்டிருப்பதால் சிவபக்தர்கள் இறைச்சியை வெறுத்துத்தள்ளுவது சிவபெருமானை வெறுத்துத் தள்ளுவதற்குச் சமானம். சிவபக்தர்கள் இறைச்சியைப் புசியாததினாலே, யாகம் செய்கிறதற்கிடமில்லை. யாகஞ்செய்யாவிட்டால் சிவபெருமானுக்கு இறைச்சி மீது இன்னுமிருக்கும் ஆசை தணிகிறதற்கு மார்க்கமில்லை. சிவபெருமானே பூர்வ நாட்களில் திருச்செங்காட்டங்குடியிலிருந்த சிறுத்தொண்ட நாயனாருக்கு வெண்காட்டு நங்கையிடம் பிறந்த ஐந்துவயதுள்ள புத்திரனாகிய சீராளனைத்தாயார் பிடித்துத் தகப்பனரிந்து அவ்விறைச்சியைச்சமைத்துக்கொடுக்கப் புசித்தாரென்றும், தொண்டைநாட்டில் உடுப்பூரில் அரசனாயிருந்த நாகனுடைய குமாரனாகிய திண்ணனார் பன்றியிறைச்சியைத்தீயில் வாட்டிக்கொடுக்கச் சிவபெருமான் அவ்விறைச்சியையும் தின்றாரென்றும் பெரிய புராணங்கூறுகிறபடியால் சிவபெருமானுக்கு இறைச்சி மீதிருந்த இச்சை எவ்வளவென்றறியலாம். ஆகையால் சிவபக்தர்களாகிய சைவர்கள் இறைச்சியைவெறுக்கிறதினாலே சிவபெருமானை வெறுக்கிறார்கள் என்பதுண்மை. இது நிற்க. மேலேகூறிய ஆதாரங்களால் தேவர்கள் அமுதகுலத்தவர்களென்று உள்ளங்கைநெல்லிக் கனிபோலறியலாம்.

14. சுரதருவென்றும், தேவதருவென்றும், கற்பக விருட்சமென்றும் பெயர் பெற்ற பனைமரமானது தேவர் குல விருட்சமென்று பார்த்தோம். இவ்வுலகத்தில் காணப்படும் பொருள்கள் ஒவ்வொன்றிலும் நன்மையும் தீமையுமிருக்கின்றன. இங்கிலீஷ்காரரால செய்யப்படும் துப்பாக்கியானது துஷ்ட மிருகங்களைச் சங்கரிக்கிறதற்கும் வேட்டை முதலான நற்காரியங்களுக்கும் சுயசம்ரட்சணைக்கும் மிகவும் உபயோகமான பொருளாயிருப்பதோடு கூடத் தற்கொலை புரிவதற்கும் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. தட்டாரால் செய்யப்படும் ஆபரணங்களும், பட்டுநூல்காரரால் செய்யப்படும் பட்டாடைகளும் குலஸ்திரீகளுக்கு அலங்காரமாயிருக்கிறதோடு விலைமாதர் பேதைகளைக் கெடுக்கும்படிக் காரணமாயிருக்கிறது. நாங்கிலிலிருந்தெடுக்கப்படும் பச்சநாவியானது அநேக வியாதிகளைத்தீர்க்கும் மருந்தாக இருப்பதோடு, பகைவரை வஞ்சனையாய்க் கொல்லும் வஸ்துவாகவுமிருக்கிறது. கம்மாளனால் செய்யப்படும் கத்தியானது ஒரு குழந்தை பிறந்தவுடனே தொப்புள் அறுக்கவும் மீதியான ஜீவகாலமெல்லாம் அநேகமான வீட்டுக்காரியங்களுக்குப் பிரயோசனமான வஸ்துவாயுமிருப்பதோடு, அஜாக்கிர

கையாய் உபயோகிக்கிறவர்களுக்குத் தீமையை விளைவிக்கும்படி கூர்மையுள்ளதாயுமிருக்கிறது. இதே பிரகாரம் தேவர்களாலும் இருடிகளாலும் அரசர்களாலும் போற்றப்பட்ட சொர்க்கலோக விருக்ஷமாகிய பனைமரத்திலிருந்தும் நன்மையும் தீமையும் விளைகிறதாயிருக்கிறது. அவ்விருட்சத்திலிருந்து இறக்கப்படும் மதுவானது, இறக்கியவுடனே அருந்துகிறவர்களுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுக்கிறதாகவும் அதையுடனே காய்ச்சினால் பனைவெல்லம், பனங்கற்கண்டு, சருக்கரை முதலான அருமைப் பண்டங்களைக்கொடுக்கிறதாகவுமிருப்பதோடு, உடனே உபயோகிக்காமல், நெடுநேரம் புளிக்க வைக்கிறதினால் லாகிரிக் குணமாகி, விஷம் உண்டாகியதை அருந்துகிறவர்களை மிகவும் ஈனஸ்தராக்குகிறதுமாயிருக்கிறது. அங்கிலேயரால் செய்யப்படும் அநேகவிதமான மதுவும் நன்மையும் தீமையும் விளைவிக்கிறதாகவேயிருக்கிறது. இதெல்லாம் உபயோகிக்கிறவர்கள் பிசகேயன்றிச் செய்கிறவர்கள் பிசகல்ல. செய்கிறவர்கள் பிசகென்றால் ஒருவன் தற்கொலை செய்யும்போது அவனுபயோகித்த துப்பாக்கியைச் செய்த இங்கிலிஷ்காரனையும், ஒருவன் விலைமாதர் வீட்டுக்குப் போகும்போது அவர்களுக்கு நகையும் பட்டாடையும் செய்துகொடுத்த தட்டானையும் பட்டுநூல்காரனையும், ஒருவனுக்குக் கையில் காயமுண்டாகும்போது அவனுபயோகித்த கத்தியை யுண்டுபண்ணின கம்மாளனையும், ஒருவன் குடித்துவெறித்தலையும்போது அவனுண்ட மதுவை உற்பத்திசெய்தவனையும் குறைகூறினால், ஈயன் சுவரில் கன்னம் வைத்த கள்ளன் சுவர் விழுந்துசாக, அவன் சாவுக்கு ஏதுமறியாத கொறட்டியைக் கழுவேற்றின சூடாமணியென்னும் இராசாவின் கதையாகும். உபயோகிக்கிறவன் பிசகுக்கு, செய்தவன் ஜவாபுதாரியல்ல.

நாம் மேலே சொல்லியபடி பனையின் மதுவாகிய கள் இரண்டு வகைப்படும். மதுவுக்கு இயற்கையாயிருக்கும் லாகிரிக்குணத்தைச் சுண்ணப்பிரயோகத்தால் தடுத்து, அதை யிறக்கின பின்பு அதிகநேரம் வைக்காது உபயோகிக்கப்படும் கள்ளுக்குப் பதநீர் என்று பெயர். இதிலிருந்துதான் பனைவெல்லமும் பனங்கற்கண்டும் சருக்கரையுமுண்டாகிறது. இக்கள்ளுக்குத்தான் சுரம் என்றும், அமிர்தம் என்றும், புதுமதுவென்றும், தெள்ளமுதென்றும், பசுநீரு வென்றும், தூய அமுதென்றும் பெயர். இதுதான் தேவர்கள்பானம் என்னும் பதநீர். இரண்டாவதுவகையான கள் என்பதுதான் தற்காலத்திலுமப்பேர் கொண்டவஸ்து. அது பிறக்கும்போது சுண்ணம் உபயோகிக்கப்படாமலும், உடனே யருந்தப்படாமலும், புளித்துச் சளித்து லாகிரிக்குணமுண்டாகிற கள்; இதற்குப் பூர்வநூல்களில் பழநறை யென்றும் பழிக்கப்படுகிற மது வென்றும், முறைமது வென்றும் பெயர். பழிக்கப்படுகிற [illegible] தற்காலத்தில [illegible] அருந்துகிறதாயிருக்கப்போகிலும், பூர்வகாலங்களில் [illegible] மதுவை யருந்தினவர்கள் யார் என்றுபார்ப்போம். லாகிரிக்குணமுள்ள பழநறை யென்னும் புளித்தகள்ளை, [illegible] [illegible] சாதியார் அருந்தி வந்தார்கள்.

"பழையர் தமனையன பழநறைநுகரு
முழவர் தமனையன"

என்பதாக உண்டாட்டுப்படலமெழுதிய கம்பரும் எழுதிவைத்திருக்கிற தால் பழநறை உழவர்முதலான ஈனஜாதிகளால் அருந்தப்பட்டுவந்தது. இதுவே தேவர்களால் அருவருத்துத் தள்ளப்பட்ட கள். அமுது உற்பத்திசெய்யும்போது விஷம் தோன்றியதென்றும், ஆகையினால் தேவர்கள் அதைப்பருகாமல் நிகைத்து நின்றார்கள் என்றும் கூறப்பட்டிருக்கும் கள்ளும் இதுவே. இலிங்கபுராணம் இயற்றிய சூடசேகரபாண்டியர் இக்கள்ளைக்கொடிய பாழ் நரகத்திலமிழ்த்துங் கள்ளென்று கூறியிருக்கிறார்.

இலிங்கபுராணம், 15-வது அகோரமந்திர முரைத்த வத்தியாயம்.

2-வது கவி.

வெந்நரகமிக்குங் கள்ளி னையயின்றோர் வேறெருவர்க்குரித்தாய
மன்னலங்குதலை மடவரல் வெய்ய கதிர்முலைக்களிவுறக்கலந்தோர்
மின்னொளி விரிக்கு மாழையைக் கவர்ந்தோர்விடத்தினை யொருவருக்களித்தோ
ரின்னருள்புரியென் றடைந்தவர்தம்பா லீறிலாத்தீவினையிழைத்தோர்

காசிகாண்டம் எழுதிய அதிவீரராமபாண்டியர் மயக்கத்தைக் கொடுக்கின்ற [illegible] இக்கள்ளை உண்ணுகின்றவர்களை உதிரமயமாக விளங்கும் அக்கினிக்கடலாகிய நரகத்தில தள்ளிவிடுங்கள் என்றும், இக்கள்ளைவாணிகஞ்செய்யும் (விற்பனைசெய்யும்) வணிகனாகிய வைசியனைச் சதையும் எலும்பும் நொறுங்கும்படி உரலிலே போட்டு பெரும் உலக்கைகொண்டு குத்தி யிடித்து ஒருகாலத்திலும் ஒழியாத எரி நரகத்திலிருந்து நித்தியகாலமும் பதைபதைத்து வேகும்படியாக அந்நரகத்தில் தள்ளிவிடுங்கள் என்பதாகவும் கூறியிருக்கிறார்.

காசிகாண்டம், சிவசன்மாவை யமன் எதிர்கொண்ட வத்தியாயம்.

33-வது கவி.

மதுவ்செய்கின்ற நறவுண்டவரை மண்டுகடல்போல்
குருதிவாய் நரகினுய்த்திடுதீ கொதியினெறிசெர்
அருணமக் கொழுவராருயிர் செகுத்தவிவரை
இருள்செறிந்த நரகத்திடை யெடுத்தெறிதியால்.

43-வது கவி.

மதுள்கொடுத்து நறைவிற்றும் வணிகக் கயவனை
விரிவரத் தசைகளென்பு பொடியாக விரலின்
உரலிலிட்டு முருலக்கை யினிடித் தொழிகலா
எரிகிடைப் பதைபதைக்க நனி நண்ணிவிடுவாய்.

N. B.—வணிகன் என்பவன் வாணிகம் செய்பவன்; வாணிகம் என்பது [illegible] தொழிலென்றுமுரைப்பர்.

[illegible]

73-வது சூத்திரம்.

"வைசிகன்பெறுமே வாணிகவாழ்க்கை."

திருவிளையாடற் புராணம், பாண்டித்திருநாட்டுப்படலம் பார்த்தாலும் உழவர்களாகிய சூத்திரரே பழிக்கப்படுகிற மதுவை யருந்தினர்களென்றறியலாம். அது வருமாறு:—

"அப்படிப் பொருநையாற்று வெள்ளம் பெருகினபோது, மருதநிலத்திலுள்ள உழவர்கள் எருத்துமாடுகளையும் ஆனெருமைகளையும்பொன்னேரிலே பூட்டி * * * * உழுதல் பரம்படித்தல் முதலான ஆள்வேலைகளிலே மூண்டு, * * * பலநிறங்களையுடைய மாடுகளைக்கட்டிக் கலப்பைகளின் கொழுமுகத்திரும்புகள் வெளுக்கப் பூமிதேவியின் உடம்பைக்கிழித்த படைச்சாலின் வழியே அந்த வுடம்பிலிருந்து ரத்தஜலம் வந்தாற்போல நெருப்பு மயமாக மாணிக்கங்கள் விழக்க பூமிதேவியின் உடம்பைக் கிழிக்கிற கொழுமுனைதேய உழுகிறவர்களும் தண்ணீரை வாய்க்கால் வழியே பாயச்செய்து சேறுபண்ணுகிறவர்களும்தெய்வத்தை வணங்கி நல்லசெந்நெல்களை விதைத்து நாற்றாகச்செய்கிறவர்களும் பிடுங்கி அந்த நாற்றை நடுகிறவர்களும் * * * * களையைக்களைந்து வளரச்செய்து விளைவுதோன்றச்செய்கிறவர்களுமாக உழத்திகள் பழிக்கப்படுகிற மதுவைக்குடித்துச் சிவந்தவாயில் வார்த்தைகள் தமோற, பார்வைகள் முகத்திலுள்ளவாக, நகையுந்தோன்றக் கண்கள் சிவந்து பிறழ, கூந்தலும் மெல்லிய இடையிலுடுத்தின ஆடைகளும் அவிழ, மனத்திலே மிகப்பெரிய களிப்பைத் தருதலால் அவர்கள் குடித்தமதுவானது நாயகரோடு கூடின பெண்களாகச்செய்தது"

என்று சொல்லியிருப்பதாலும் உழவர்களாகிய சூத்திரர் சாப்பிட்டமதுவானது லாகிரிக்குணமுள்ள பழங்கறையென்னும் பழிக்கப்படுகிற மதுவென்றும், தேவர்கள் அருந்திய மதுவோ தேவர்பானமென்னும் பதநீர் என்றும் அறியலாம்.

சாதி [illegible] தசாதியுற்பவம்,
5-வது க[illegible]. வேளாளர் தொழில்.

உழுவொடு பசுக்கள் காத்தலுற்ற வாணிபங்கள் செய்தல்
மொழிதரு மறையோராதி மூவர்க்குமனுகூலஞ் செய்
தொழிலினராத லென்குஞ் சூத்திரர் தொழிலதாகும்
வழிமுறை மதுவை நீப்பில் வணிகர்தம் பான்மையாவர்.

இக்கவியில் சூத்திராகிய வேளாளருக்கு [illegible] பசுக்காத்தல், வாணிபஞ்செய்தல், [illegible] தலானவை [illegible] என்று சொல்லியிருப்பதோடு, அவர்கள் 'வழிமுறை மதுவை நீப்பில் வணிகர்தம் பான்மையராவர்' என்றும் சொல்லப்படுகிறது. அதாவது சூத்திரர் வழக்கமாயருந்துகிற முறை மதுவை, அதாவது பழமையான கள்ளை விட்டுவிடுவார்களாகில் மூன்றாவது சாதியைப் போன்றவர்களாவார்கள் என்று சொல்லியிருப்பதை

னும் சூத்திரர் ஆதிமுதலருந்தி வந்தபானம், முறைபடுவாகிய லாகிரிக் குணமுள்ள கள் என்றறியலாம்.

அத்தன்மைய கள்ளை மேன்மக்களாகிய சான்றோர் அருந்தமாட்டாரகளென்று § சூத்திர வேதமாகிய நாலடியாரிலும் கண்டிருக்கிறது.

நாலடியார், 16-வது அதிகாரம், மேன்மக்கள்.

7-வது கவி.

கள்ளார் கள்ளுண்ணார் கடிவகடிந்தொரீஇ
யெள்ளிப்பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய்கூறார் வடுவறு காட்சியார்
சாயிற்பரிவதிலர்.

இக்கவியில் சான்றோர் கள்ளுண்ணார் என்று சொல்லியிருப்பது மயக்கத்தைத் தருகிற கள்ளைக் குறிக்கிறது. அவர்களருந்திய மதுவோவெனில் பதநீர் என்னும் கள் (Sweet toddy). இந்த மதுவையே பாண்டியன் குலத்தவர்களருந்தினார்களென்று திருவிளையாடற்புராணம், தருமிக்குப்பொற்கிழியளித்த படலத்திலும்: இராமருடைய இனத்தாருண்டாரென்று கம்பராமாயணம், பாலகாண்டம், உண்டாட்டுப்படலத்திலும் கண்டிருக்கிறது. ஆகையால் அரசர் பானம் பதநீராகிய கள் என்றும், உழவர்பானம் பழநறையாகிய கள்ளென்றும் பார்க்கிறோம்.

ரிஷிகள் கற்பகம் என்னும் பனைவிருட்சங்களிலிருந்து கொண்[illegible] தேனமுது கள் என்று பார்த்தோம். அவர்களும் தெள்ளமுதாகிய பதநீரை யருந்தினார்களென்றும் வாசிக்கிறோம்.

அருணசலபுராணம், திருக்கண்புதைத்த சருக்கம்.

52-வது கவி.

வசியிலோர்கால் விலையுந்தி பொருளான் மடித்து
[illegible]மிசை விழிசனிய மாட்டியழன் மூட்டித்
தேசினமுதருந்தித் தேன்மழுதை யுண்டு தவக்
கோசிகனைப்போன் முயல்வார் கோடாத கோடியே.

---

§ நாலடியாருக்குச் சூத்திரவேதமென்னும் பெயருண்டாகிறதற்குக் காரணமென்னவெனில் இந்து ராஜாக்கள் ஆட்சிசெய்துவந்தகாலத்தில் மனுதர்மசாஸ்திரத்தின்படி சூத்திரர் வேதமோதக் கூடாதபடியால், தமிழ்நாட்டில் பயிரிட்டு ஜீவனஞ்செய்துவந்த வெள்ளாளர் நாளடைவில் அதிகமதிகமாக அறிவினராய்ப்போய்விடுகிறார்களென்று பார்த்த அவர்கள் எஜமான்களாகிய சான்றோர் அனுதாபங்கொண்டு, அவர்களுக்குமறிவை வேறெவிதமாய்ப்புகட்டவேண்டுமென்று, சான்றோரெல்லாருங்கூடி, நாலடியார் என்னும் நாலடிப்பாடி, பாண்டியன் சமுகத்திலதை யரங்கேற்றி, அதற்குச் சூத்திரவேதமெனப் பெயரிட்டனர். இதைச்சுட்டிக்காட்டும் கவி வருமாறு.—

“வெள்ளாளை மாபுத்த வேதமெனச் சான்றோ
ரெல்லாருங்கூடி யெடுத்துரைத்த—சொல்லார்ந்த
நாலடி நானூறு [illegible]
[illegible]”

அதுமுதல் [illegible]
[illegible]

இதன் தாற்பரியம்.

ஊசியிலே ஒருகாலின் விரலை யூன்றிக்கொண்டு, ஒரு காலையடித்து, மூக்கு நுனியிலே கண்களைச் சேர்த்து, பஞ்சாக்கினியை வளர்த்து, தெள்ளமுதாகிய பதிநீரை யருந்தி விசுவாமித்திரர்போல் தவஞ்செய்வார் அநேகங்கோடிபேர் என்று பொருள். இக்கவியில் ரிஷிகள்பதிநீரையுண்டார்களென்று பார்க்கிறோம்.

புதுமதுவென்றும் பசுநறுவென்றும் பெயர்பெற்ற பதிநீரைப்பூர்வ அரசர் குலத்தவர்களும் சாப்பிட்டார்கள் என்றும் வாசிக்கிறோம். கம்பநாடனியற்றிய இராமாயணத்தின் உண்டாட்டுப்படலத்தில் சூரியவம்சத்தில் தோன்றிய வரும் மகா விஷ்ணுவின் அவதாரமாக மதிக்கப்படுகிறவருமாகிய இராமருடைய விவாகத்துக்கென்று மிதுலாபுரிக்குச்சென்ற அரசகுல ஆடவர்களும் ஸ்திரீகளும், கற்பகவிருட்ச சோலைகளிலிறங்கி, அந்திப்பொழுதில் புஷ்பங்களைக்கொய்து, நதிகள், பொய்கைகள், வாவிகளில் நீராடி பூரணசந்திரோதயமானதால் விளையாடிக்கொண்டு, பசுநறுவென்னும் பதிநீரை இலைத்தொன்னைகளிலும், பொற்கிண்ணங்கள் வெள்ளிக்கிண்ணங்களிலும், வெண்கலவட்டில்களிலும் வார்த்து உண்டு மகிழ்ந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அதைச் சுட்டிய கவியொன்று இவ்விடம் வரைகிறோம்.

கம்பராமாயணம், பாலகாண்டம், உண்டாட்டுப்படலம்,

6-வது கவி.

பூக்கமழ்மோதிபர்போத போத்திய [illegible]
சேக்கையின் பச்செருக்குஞ் சிந்தையர்
ஆக்கிய வமிர்தெனவம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறு மாந்தன்மேயினா.

பசுநறுவென்றால் புதுமதுவென்னும் பதிநீர். இவ்வமுதைப்பூர்வ அரசகுலத்தவரிறக்கினதாகவும் தெரிகிறது; வாந்தவீர பாண்டியன், குலசேகரபாண்டியனைப் பார்த்து நீ போய் அமுதமிறக்கிக்கொண்டுவாவென்று சொன்னதாகச் சான்றோர்கும்மி கூறுகிறது.

சான்றோர் கும்மி,

97-வது கவி.

நீதரு நற்கு[illegible]சேக[illegible]னைப் பார்த்தவர்
சென்று வணங்கிற் பனையமிர்தவ
கோ தநீ யிறக்கிக்கொடுவா வென்று
கூறியனுப்பினன் மன்னரசே.

மேலும் மேற்படி இந்து ராசாக்கள்காலத்தில்கொடுக்கப்பட்ட தாமிரசாசனப்பட்டயங்களிலே, தேவாமிர்தமிறக்குவதற்கா [illegible] அநேகங்களைவரைந்துமிருக்கிறார்கள். இப்பட்டயத்தை [illegible] ஆதிசைவராகிய [illegible] தக்குருக்கள் [illegible] பசுபதிகுருக்களிடமிருக்கிறது. இதில் சாப்தம் 1338-[illegible] [illegible] வென்னப்பட்ட [illegible] பாண்டிய ராசனுக் [illegible] கார்த்தியாரிஷி மடத்தின் மடாதிபராகிய பசுபதி குருக்கள்

டமிருக்கும் தாமிரசாசனப்படப்பட்டயத்தில் இரட்டைப்பனை, தெங்கு, ஈந்துவென்னும் அமுதவிருக்ஷப்படங்களோடு, அமுதமூற்பத்திக்குவேண்டிய ஆயுதங்களின் படங்கள் எட்டும் வரையப்பட்டிருக்கின்றன. அவையாவன :—

1. இளம்பிறை வடிவமாய், பாளைமுதலானது சீவுகிறகருவியாகிய அரிவாளைக்காட்டும் சந்திராயுதம். அரிவாள் என்றுலே அரி என்னும் பதினீருக்குப் பக்குவப்படுத்துகிற வாள் என்னும் ஆயுதம் என்பது மூலார்த்தம். சந்திராயுதம் என்பது பாளையைச் சீவிப் பதினீர் கொடுக்கும்படி பக்குவப்படுத்துகிற ஆயுதமாகிய அரிவாளுக்குப் பூர்வத்தில் வழங்கிய பெயர்.
2. பதினீர் சுரந்து வடியும் பாளைகளை உருவிப்பக்குவப் படுத்துகிற ஆயுதமாகிய இடுக்கிப்படம்.
3. பனையின் இளம் பாளைகளிலும் இளங் குருத்துகளிலும்வந்துவிழுகின்ற வண்டுகளைக் குத்திக்கொல்லும் கருவியாகிய வண்டுகுத்திப்படம்.
4. பதினீர் ஊறும் பாளைகளைத்தட்டிப் பக்குவப்படுத்தும் கருவியாகிய பாளைதட்டிப்படம்.
5. சந்திராயுதத்தைத் தீட்டிக்கூர்மைசெய்துகொள்ளும் தீட்டாம்பலகைப்படம்.
6. கற்பகவிருக்ஷத்திலேறும்போது இருபாதங்களிலும் பூட்டிக்கொள்ளும் தளைநாறு என்னும் இரட்டைச்சிலம்புப்படம்.
7. கற்பக அமுதில் தோன்றும் விஷமாகிய லாகிரிக்குணத்தை முறிக்கும்படி பிரயோகிக்கிற சுண்ணபஸ்பம்வைத்திருக்கும் சுண்ணப்பொடிச் செப்பென்னும் நீற்றுப்பட்டைப்படம்.
8. பதினீர் இறக்கி வைக்கும் குடுவை என்னும் அமுதகமண்டலப்படம்.

கிறிஸ்தாப்தம் 1591-ல் எழுதப்பட்டு சிதம்பர [illegible] தருக்களிடமிருக்கும் தாமிரசாசனப்பட்டயத்தில் மேலேசொல்லியபடங்களோடு ஆயுதப்பெட்டிப்படம், பனையேறும் சான்றுன்படம், [illegible]ப்படம், பனைவிருட்சப்படம் என்னும் படங்களும் கண்டிருக்கிறது. இராஜமுகருள்ள பட்டயங்களில் காணப்படும் இச்சின்னங்களினுலே அந்த அரசகுலவம்சமும், தொழிலும், தொழிற் கருவிகளும், உற்பத்திப் பானமும், அருந்துவோரும் தெரிகிறதாயிருக்கிறது. பூர்வ க்ஷத்திரிய ராச குலத்தவர்களே யிவ்வமுதை யிறக்கிச் சத்திரங்களில் வைத்துத் தானம் செய்தார்கள் என்றும் பார்க்கிறும்.

சான்றோர் கும்மி.

124-வது கவி.

[illegible] வீர [illegible] சினப்பல
நாட்டினைப் பார்த்து நயதுநல
விற்பத்தி யாம்பனை யீந்ததென் [illegible]
விருட்சத் தேநந்தெளிர் மின்னரசே.

125-வது கவி.

அமிர்த பான மிறக்கிச்சகலர்
களுமருந்தும்படி சத்திரத்தில்
கமழவைத்தறஞ் செய்யெனப்பற்பல
கட்டளையிட்டனன் மின்னரசே.

முப்பத்துமுக்கோடி தேவர்களென்னப்பட்ட சுரரும் இருடிகளும் அரசர்களும் பானம் பண்ணுகிற தேவாமிர்தத்தை இறக்குகிறதாகிய அரிய தொழிலை அரசகுலத்தவர்கள் செய்து வந்தார்களென்று மேலேகண்ட சாசனங்களில் காணப்படும் ஆயுதப் படங்களாலறியலாம். பனையிலிருந்து அமுதமிறக்கும் தொழிலானது எல்லாத் தொழில்களிலும் அரிய தொழிலென்பதற்கையமில்லை. நூறடி உன்னதத்தில் திரண்டுருண்டு செங்குத்தாக நிற்கின்ற அமுதக்கலைகள் பொருந்திய கற்பகம் என்னும் பனைமரத்தின் உச்சியில் கமகமவென்று திகட்டாது வாசங்கமழுகின்ற புஷ்பங்களிலங்க, வெண்ணிறம் பொருந்திய இனிய ருசியையுடைய குருத்து மடல்கள் உன்னதத்தை நோக்கி நிற்க, அவ்வித உன்னததேவதருவின்மேல் எவரும் அதிசயிக்கும் வண்ணமாய் ஏறி அதன் மணலையில் சிம்மாசனபதிபோ லிருந்துகொண்டு சிலநாள் பரியந்தம் அதின் இனியபாளைகளைச் சிக்கு நீக்கி வெளிப்படுத்தி, அவற்றிலிருந்து அபரிமிதமாய் வடிகின்ற மதுவின், லாகிரிக்குணத்தை ஷடி சுண்ணப்பிரயோகத்தால் தடுத்து, புதிய அமுத கலசங்களில் வடிந்திருக்கும் தெள்ளமுதாகிய தேவாமிர்தத்தைக் கும்பத்தில் வடித்துக்கொண்டு இறங்குகிறவனாகிய சுரனை (சுரம—பதினீர்), அக்காலத்து மனிதர் அதிசயத்தோடு கண்ணுற்று, இத்தொழில் தேவர்களே செய்யக்கூடியதன்றி மனுஷர் செய்யக்கூடியதில்லையென்றுப் பிரமித்து, தேவர்கள் என்று பெயரிட்டு மதித்து வந்தார்களென்று புராணங்களாலறிகிறோம். ஆகையால் இந்த அரிய தொழிலை அரச குலத்தவர்களேசெய்து வந்தார்கள். இத்தொழில் மிகவும் அருமையான தொழிலாக அக்காலத்தில் மதிக்கப்பட்டு வந்ததென்றும் பார்க்கிறோம்.

கம்பராமாயணப் தனியன்கள்,

6-வது கவி.

அம்பிலே சிலையைநாட்டி யமரர்க் கன்றமுதமீந்த
தம்பிரா னென்னத்தானுந் தமிழிலே தாலைநாட்டிக்
கம்ப நாடுடையவள்ளற் கவிச்சக்ரவர்த்தி பார்மேல்
நம்புபா மாலையாலே நருக்கின்றமுத மீய்ந்தான்.

அரும்பிரயாசத்தோடு பூர்வத்தில் தேவர்களுக்கு அமுதபானம் அளித்த பிரகாரம், கம்பநாடன் வெகுபிரயாசத்தோடு தமிழ்பாஷையென்னும் தாலை (பனை) மரத்தினினிய அமுதமாகிய பாமாலையாலே மனுஷ[illegible]தவர்களுக்கு அமுதமீந்தான் என்[illegible] இறக்குந்தொழில் மிகவும் அரியதொழிலாக எண்ணப்பட்ட[illegible]தமாகும். ஆகையால் அத்தொழிலை அரசகுலத்தவர்களே செய்துவந்தார்கள்.

——(:o:)——

X-வது அத்தியாயம்

நான்கு ஜாதிகள்.

1. சாதிபேதம் உலகமெங்குமிருக்கின்றது. அங்கிலேயருக்குள்ளுமுண்டு, கிறிஸ்தவ குருக்களுபதேசம் பிசகு, 2. சாதிபேதம் தேசமேன்மைக்கவசியம், அப்பிபோய்போதகரபிப்பிராயம், மதிராஸ்,மெயில் பத்திராதிபாபிப்பிராயம், 3. சாதியேற்பாடு தமிழராகிய க்ஷத்திரியராலுண்டாயிற்று, 4. சாதியிருவகைத்தாம், சுத்தஜாதி, சங்கரஜாதி. 5. சுத்தஜாதிகளுக்கு வழங்கிய பெயர்கள், சாதிநூல், கூர்மபுராணம், வெற்றிவேற்கை, காசிகாண்டம், கம்பராமாயணம், 6. திவாகரம் என்னும் தமிழகராதியில் வழங்கியபெயர்கள், 7. சுத்தஜாதிகள் நான்குக்கும் விதிக்கப்பட்ட தொழில்கள், 8. க்ஷத்திரியரின் கௌரவப்பட்டப்பெயர்கள், சான்றோர், 9. மிக்கோர், 10. நல்லவர், 11. மேலவர், 12. ஆயந்தோர், 13. உயர்ந்தோர், 14. ஆரியர், 15. உலகு, 16. ஆன்றோர், 17. அறிவுடையோர் என்பவையுளாம்.

எத்தேசத்திலும் ஜாதிவித்தியாசங்களுண்டு. சிலவிடங்களில் இவ்வித்தியாசத்தினால் ஒருஜாதியார் மற்றொருஜாதியாரோடு கொள்வனை கொடுப்பனை என்று சொல்லப்படும் கலியாண சம்பந்தமாத்திரமற்றிருக்கிறார்கள். மற்றும் சில தேசங்களில் இவ்வித்தியாசங்களினாலே கலியாண சம்பந்தமற்றவர்களாயிருப்பதோடு உண்டி தின்டி என்றுசொல்லப்படும் அன்னம் ஆகாரங்கள் ஒருவருடன் ஒருவர் அருந்தாமலுமிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக தேவனால் விசேஷித்த பிரகாரமாய் அதிபூர்வகாலமுதல் தெரிந்துகொள்ளப்பட்ட ஆபிரகாமின் சந்ததியில் பிறந்த யூதர்களானவர்கள் அந்நிய ஜாதியாரோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளவில்லையென்று சத்தியவேதத்தாலும், மற்றும் சரித்திரங்களாலும், அறிவதோடு அவர்கள் தற்காலத்திலும் அதே ஸ்திதியிலிருப்பதை நாம்பார்க்கிறோம். இந்தயூதர்களைப்போல முற்றிலும் சுத்தமான, கலப்பில்லாத ஜாதி இராஜபுத்திரர் என்னும் க்ஷத்திரிய ஜாதியேயன்றி வேறொரு ஜாதியும் இவற்றிற்குச் சமமாகாதென்று டாக்டர் டாட் உவீலர் துரை எழுதியிருக்கும் விஷயங்களை முன்னே இரண்டாவது அத்தியாயத்தில் (90-வது பக்கம் பார்க்க) எடுத்துரைத்தோம். சகல மதஸ்தர்களும்

ஜாதி யிரண்டொழிய வேறில்லை

என்று ஒப்புக்கொள்ளுகிறவர்களாயிருந்தாலும் உலகமுழுவதிலும் இவ்வித்தியாசங்களிருக்கிறபடியால், அத்தன்மைய வித்தியாசங்களியற்கையின்படியிருக்கின்றதாகவே வைத்துக்கொள்ளவேண்டும். சாதிவித்தி

யாசமில்லையென்று சொல்லிக்கொள்ளுகிற இங்கிலீஷ்காரர் முதலாய்த் தங்கள் குலத்துப்பெண்ணை இந்துக்களில் ஒருவன் கலியாணஞ்செய்துகொண்டால் அப்பெண்ணை இகழ்ச்சியாகவே எண்ணிவருகிறார்கள். அதே இங்கிலீஷ்காரருக்கு இந்தியாவிலுற்பத்தியான யூரோஷியரென்னும் ஜாதியாரோடு இங்கிலீஷ்காரர் சம்பந்தம் வைத்துக்கொள்ளுகிறதில்லை. இந்துக்கள் கிறிஸ்தவர்களானபின்பு தங்களுக்குள் யாதொருவித்தியாசமில்லாமல் கலந்துபோகவேண்டுமென்று போதிக்கிற அங்கிலேய குருக்கள் முதலாய் அப்போதனையின்படி தாங்களே நடக்கிறதில்லை. இந்தத் துர்ப்போதனையினாலேயே இந்தியாமுழுவதும் இதற்குள் கிறிஸ்தவர்களாகவில்லை. சத்தியவேதமோ அங்கிலேய குருக்கள் போதிக்கிறபடி சொல்லுகிறதில்லை. அவ்வேதத்திலுள்ள சிலவசனங்களை இவ்விடம் பெயர்த்தெழுதுவோம்.

I கொரிந்தியர், 7-வது அதிகாரம்,
17-வது வசனம்.

"தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன், எல்லாச்சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்."

18-வது வசனம்.

"ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்தசேதனமில்லாதவனாயிருக்க வகைதேடானாக; ஒருவன் விருத்தசேதனமில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால் விருத்தசேதனம் பெறாதிருப்பானாக."

20-வது வசனம்.

"அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்."

சத்தியவேதத்திலுள்ள இத்தன்மைய தெளிவான உபதேசத்தைப்புரட்டித் தற்காலத்தில் குருக்கள் போதித்து வருகிறபடியினாலே, இந்தியாவிலுள்ள அநேகர் குணப்படாதிருப்பதற்குக் குருக்களே கணக்குக்கொடுக்கவேண்டியவர்களாயிருப்பார்கள். கிறிஸ்தவர்களானால் ஜாதிகெட்டுப்போயிற்று என்பதே தற்காலத்தில் இந்துக்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்கிற அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தினாலே அநேக இந்துக்கள் கிறிஸ்தவர்களாகாதிருக்கிறார்கள். இந்த அபிப்பிராயமுண்டுபண்ணினவர்கள் குருக்களே யன்றி சத்திய வேதமல்ல. குருக்கள் வீட்டில் பறையர் வேலைசெய்கிறபடியாலும், பறையர் மிகவும் ஈனஜாதியாக எண்ணப்படுகிறதாலும், பறையரைப் பற்றிய தாழ்வான எண்ணம் அவர்களிடம் வேலை வாங்கும் குருக்களைப் பற்றவுமுண்டாகிறபடியால், குருக்களானவர்கள் தாங்கள் வைத்திருக்கும் வேலைக்காரர் மூலமாய்த் தங்களுக்குண்டாகும் ஈனம் நீங்கும்படியாகக் கிறிஸ்தவர்களாகிறவர்கள் உடனே ஜாதி வித்தியாசம் பார்க்கக்கூடாதென்று போதித்து, தங்கள் சுயமேன்மையைக் கருதிப் பறையரை முன்னுக்குக்கொண்டு

வரும்படியான பலமுயற்சிகளும் செய்து வருகிறார்கள். பறையரை முன்னுக்குக்கொண்டுவருகிறது நல்லகாரியமாயிருந்த போதிலும், அப்படிக்கொண்டுவருகிற நோக்கமானது சுயமேன்மையைக் கருதியேயன்றிப் பறையர் மேன்மையைக் கருதியன்று. இதைப்பற்றி விஸ்தரிக்க இப்போது அவசியமில்லை.

2. இந்தியாவிலிருக்கும் ஜாதி வித்தியாசத்தினால்தான் இத்தேசமானது பூர்வநாட்களில் மற்றுந் தேசங்களைப்பார்க்கிலும் மேன்மை பெற்றிருந்தது என்பதாக பிரெஞ்சு குருவொருவர் எழுதிய அபிப்பிராயமானது சென்னையராசாட்சிப் புஸ்தகம், I-வது வாலியூம், 64-வது பக்கத்தில் பார்க்கிறோம்.

> " *Opinion of the Abbe Dubois as to caste.*—The French missionary of Mysore, the Abbe J. A. Dubois, *than whom no European was ever better acquainted with this country*, expresses himself as follows on th *value of caste*. The words are from the English translation, the original French manuscript not having been published.—'I have heard many individuals, 'otherwise of great judgment, so full of the prejudices they 'had brought with them from Europe, as to decide most 'erroneously (according to my opinion) on the subject of the 'division of the Hindus into castes. This distinction appear- 'ed to them, not only as not promoting the good of society, 'but also as ridiculous and calculated merely to oppress the 'members of the state and to disunite them. For my part, 'having been in a situation to observe the character of the 'Hindus, and having lived amongst them for many years as a 'brother and a friend, I have formed an opinion upon this 'subject altogether opposite. I consider the institution of 'castes amongst the Hindu nations as the *happiest effort of 'their legislation;* and I am well convinced that if the people 'of India never sunk into a state of barbarism, and if, when al- 'most all Europe was plunged in that dreary gulf, India kept 'up her head, preserved and extended the sciences, the arts 'and civilization; *it is wholly to the distinction of castes that 'she is indebted for that high celebrity.*" (Page 64 of the Manual of the Administration of the Madras Presidency, Volume I).

அங்கிலேய குருக்களானவர்கள் இஜ்ஜாதிபேத விஷயத்தைத் தங்களுடைய போதனையும் சாதனையும் ஒத்திருக்கிறதாவென்றும், தங்களுடைய போதனையானது சத்தியபோதகத்துக் கொத்திருக்கிறதாவென்றும், சுய தன்மையைக் கருதியதா பிறர் நன்மையைக் கருதியதா வென்றும் ஆரா

யிச்சி செய்வதுடன், 1873-௵ ஜூலை-௴ 9-உயில் மதிராஸ் மெயில் பத்திராதிபரவர்கள் இவ்விஷயமாய் எழுதியிருக்கும் அபிப்பிராயத்தை வாசித்துக் கவனித்துக் கற்றறிந்து உட்கொள்வாரகளாகில் இம்மையி லும் மறுமையிலும் பயனடைவார்கள் என்பது திண்ணம். அப்பத்தி ராதிபர் சொல்லுகிறதாவது :—

"On the very important question of caste, Mr. Collins holds opinions that are diametrically opposite to those which have been expressed for many years past by the Nestors of Missionary Societies. Starting on the assumption that caste in India is but an exaggerated form of what is found in all countries where one race has brought another into subjection, he shows that the peculiar characteristic of class distinction in India is that it involves the idea of moral defilement. *Class distinctions will remain 'as long as the Sun and Moon endureth' in India as they will in other parts of the world*, and nothing but evil can result from the *frantic endeavours* of European Missionaries to compel their converts to do violence to their own, and the world's innate convictions of the imperative necessity for such a distinction as social difference, in an essentially aristocratic country like India, cannot be ignored without incurring great danger and responsibility, and it is *preposterous* that European clergymen who in their native land recognize the impropriety of thrusting a lot of Street Arabs into Eton or West-minster should deliberately attempt in India to force low caste boys into high caste schools. Human nature being what it is, and the laws that bind Society together what they are, *the energy that is directed to persuading converts to break caste is a most mischievous one* that should be countenanced no longer by the inhabitants of a land whose chief boast it is that it is the home *par excellence* of freedom. The intelligent Missionary, who has advanced with the times in which he lives, will follow Mr. Collin's advice, by directing his efforts solely against the religious elements of caste, the idea of moral defilement. Socialism, such as is fostered by the well-meaning fanatics who require converts to break caste as 'an outward and visible sign of inward and spiritual grace,' would be *as dangerous in the East as it threatens to be in the West*; but that great curse of India, the idea of moral pollution in connection with caste may in the long run be under-mined by Christianity, and the country be thereby emancipated from

the most terrible form of slavery that the world has ever produced. * * * * *
There is a prospect of Christianity and education eventually undermining the moral feature of caste, and dissipating the notion that social distinctions involve moral pollution."

(Madras Mail, 9th July 1873).

ஐரோப்பிய குருவானவர் ஒருவர் யூரேஷிய சாதிப்பெண்ணைக் கலியாணம்செய்துகொள்வாராகில், அக்குருவானவர்மற்றும் ஐரோப்பியகுருக்களால் எவ்வளவு இழிப்பாய் எண்ணப்படுவாரோ, அதேபிரகாரம் சுதேசகிறிஸ்தவர்களில் உயர் குலத்தவர்களும் எண்ணிவருகிறார்களேயன்றி மற்றப்படியல்லவென்று ஐரோப்பிய குருக்களறியக்கடவர்கள்.

3. இந்த இராஜாக்களாகிய க்ஷத்திரியாரசாட்சி புரிந்துவந்தகாலத்தில் ஒவ்வொரு ஜாதியும் தம்தம்வரம்பு கடந்து செல்லாமலிருப்பது யுக்தமென்றெண்ணி சாஸ்திரங்களேற்படுத்தி சாதிவரம்பு கடவாதபடி பார்த்துவந்தார்கள். இப்படிப்பார்த்துவருவது இராஜாக்களுடைய முக்கியமான கடமைகளிலொன்றென்று திவாகரத்தாலுமறியலாம்.

திவாகரம், 10-வது தொகுதி,
95-வது சூத்திரம்.
அறநிலையறத்தின் வகை.

"வருணக்காப்பிற் பிறழா நெறிநிலை
பெருவற் பொருளாற் பேணும் பேற்றி
அறநிலை யறமென்றறைந்தனர் புலவர்."

இச்சூத்திரத்தில் அறநிலை யறமென்பது அரசனானவன் தன்னாட்டில் வாழுகின்ற குடிகள் தத்தமக்கு விதிக்கப்பட்ட குலவரம்பு கடந்து நடவாது பாது காத்து வருதல் என்று கூறியிருக்கிறது.

"அறநிலையறம் is one of the six அரசியல்—the duty of a king to preserve his subjects from breaking the rules of the respective castes."

(Winslow)

இதற்கென்றே மனுதர்மசாஸ்திரம் ஏற்படுத்தப்பட்டது. அந்த சாஸ்திரமுண்டுபண்ணிய மனுச்சக்கரவர்த்தி பிரமனிலிருந்து ஐந்தாவது தலைமுறையில் தோன்றிய தமிழன். சூரியமகாராஜனுடைய குமாரன் (ஐந்தாவது அத்தியாயம், 52-வது பக்கம் பார்க்க). அவர் ஏற்படுத்திய பூர்வநூல் தமிழில் செய்யப்பட்ட நூல். எப்படியெனில் அக்காலத்தில் தமிழ்பாஷையே இக்கண்டத்தில் வழங்கினதேயல்லாமல் வேறெந்தபாஷையும் இக்கண்டத்தில் வழங்கவில்லை. அந்தசாஸ்திரமுண்டுபண்ணி வெகுகாலத்துக்குப்பின்பு சமஸ்கிருதபாஷை தோன்றியது (136-வது பக்கம் பார்க்க.) தமிழரசர்கள் சரித்திரங்களெல்லாவற்றையும் பார்க்கிலும் மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்திவந்தார்களெனப் பார்க்கிறோம். "மனுவென்பவர்ஏற்படுத்திய தமிழ்ச்சாஸ்திரமானது பிற்காலத்தில

சமஸ்கிருத பாஷையில்மொழிபெயர்க்கப்பட்டு, நாம்முன்னே ஆறுவது அத்தியாயம் 93 முதல் 102-வதுபக்கம்வரைவிளக்கிக்காட்டியபடி மகமதிய அரசாட்சி காலத்தில் வேதமாதி சகல நூல்களும் பார்ப்பாரால் புரட்டி யெழுதப்பட்ட காலத்தில் இந்தமனுதரும சாஸ்திரமும்மற்றும் நூல்களில் செய்யப்பட்ட திருத்துப்பாடுகளுக்கிணங்கமாற்றப்பட்டது. மனுமகாராஜனெனவர் தமிழிலியற்றியசாஸ்திரமானது சமஸ்கிருதபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதினாலும், அந்த சமஸ்கிருதமொழி பெயர்ப்புதான் தற்காலத்தில் கிடைக்கிறதாயிருப்பதாலும், அங்கிலேயர் மனுதர்மசாஸ்திரம் கூறும் நான்கு ஜாதிகளும் சமஸ்கிருதசாதிகளென்று தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்கள். மனுதர்மசாஸ்திரம் தற்காலத்தில் இங்கிலீஷ்பாஷையில்மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால், இங்கிலீஷ் பாஷையிலிருக்கும் மனுதர்மசாஸ்திரத்தை ஆதாரமாகக்கொண்டு, அந்தசாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நான்கு ஜாதிகளும் அங்கிலேய சாதிப் பிரிவுகள் என்று சொல்லுவது எவ்வளவு மதியீனமோ, அதேபிரகாரம் தமிழனாகிய மனுச்சக்கரவர்த்தி யேற்படுத்திய தமிழ்ச்சாஸ்திரமானது சமஸ்கிருதபாஷையில் தற்காலம் அகப்படுகிற காரணத்தால் அந்தசாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நான்கு ஜாதிகளும் சமஸ்கிருத சாதிகள் என்றுசொல்லுவதும் மதியீனம்.

4\. பூர்வநூல்கள் கூறும் ஜாதிகள் இருவகைத்தாம்:—

(1) சுத்த ஜாதிகள் (Pure castes).

(2) சங்கர ஜாதிகள் (Impure castes).

இவற்றில் சுத்தசாதிகளென்னப்பட்டவைகள் நான்கு. புத்தர்களிடமிருக்கும் பூர்வ மனுதர்ம சாஸ்திரத்தின்படியும், டால்பாய் உவீலர் துரை சொல்லுகிறபடியும், அந்த நான்கு சுத்த ஜாதிகளாவையென்றால்,

1\. க்ஷத்திரியர், 2. பிராமணர், 3. வைசியர், 4. சூத்திரர்

(ஆறுவது அத்தியாயம், 85, 86-வது பக்கங்கள் பார்க்க).

பார்ப்பாரால் திருத்தப்பாடான நூல்கள் கூறுகிறபடி, அந்த நான்கு ஜாதிகளின் வரிசை பின் வருமாறு:—

1\. பிராமணர், 2. க்ஷத்திரியர், 3. வைசியர், 4. சூத்திரர்.

இந்த நான்கும் பூர்வ நூல்கள் கூறுகிறபடி கலப்பில்லாத பிரத்தியேகமான ஜாதிகள். சுத்தமான இந்த நான்கு ஜாதிகளில் ஒரு குல ஆண்மகன் வேறோர் குலப்பெண்ணைச் சேர்வதாலும், ஒரே குலத்தவர்களின் களவுச் சேர்க்கையாலுமுண்டாகும் சந்ததிகளுக்குச் சங்கரஜாதி என்பது பொதுப்பெயர். அப்படியுண்டாகும் சங்கர ஜாதிகளின் முக்கியமான பிரிவுகள் நான்கு. அவையாவன:—

1\. அநுலோமர், இவர்கள் உயர்குலப் பிதாவுக்கும் இழிகுலத்தாய்க்குமுண்டான பிள்ளைகள் (Mixed race of high caste men and low caste women).

2. பிரதிலோமர், இவர்கள் இழிகுலத் தகப்பனுக்கும் உயர்குலத் தாய்க்கும் பிறந்த பிள்ளைகள் (Mixed race of low caste men and high caste women).

3. அந்தராளர், இவர்கள் நான்கு சுத்த ஜாதி ஆண்களும் பெண்களும் ஜாதி விட்டுப்போகாமல் தன் தன் ஜாதியில் சோரசம்பந்தம் செய்வதாலுண்டாகும் பிள்ளைகள் (Race of illegitimate origin).

4. விராத்தியர், இவர்கள் மேலே கூறப்பட்ட மூன்று வகைச் சங்கரசாதிப் பொதுப்பிரிவுகளுக்குள் அடங்காத சங்கர சாதியார் (Mixed race of miscellaneous breed).

இதற்கு மேற்கோள் :—

“உயர்ந்தவா ணிழிந்தபெண்ணோ டநிலனுலோமமாகும்
பெயர்ந்தயா ணிழிந்ததாகிற் பிரதிலோமங்கடோன்றும்
அயர்ந்திடா இவர்சோரத்தி லந்தராளங்கடோன்றும்
வியர்த்திவர் சங்கரத்தில் விராத்தியம் பலவுண்டாமே.”

(சாதிநூல் §)

இப்படியாகப் பூர்வ நூல்கள் கூறும் நான்கு சுத்த ஜாதிகளின் சம்பந்தபேதத்தால் அளவிறந்த ஜாதிகளின்னுட்டிலுண்டாயிற்று. இவற்றிற்குச்சில திருஷ்டாந்தங்கள் மேலே சொன்ன சாதி நூலிலிருந்து கூறுவோம்.—

I. (a) அநுலோமர்

தெலுங்கவேதியர்

பதுமைசேர் மறையோர்வேந்தர் பாவையை வேட்கவந்தோர்
விதமுட னுயர்தெலுங்க வேதியராகிமிக்க
வதர்வணத் தனுர்வேதத்தோ டாயுதமறைபயின்று
மதகரி பரிதேருர்ந்து மன்னவர்சேனை காப்போர்.

கோர்தகவேளாளர்

குலங்கிளரரசர் வேளாளன் கோதையைவேட்க வந்தோர்
இலங்கு கொர்தகவேளாள ரெனுங்குலந் தன்னிலெய்தித்
துலங்கிய மனுநூல்மார்க்கஞ் சோர்வறச் சேரச்சேர
கலங்கிள ராசராணை நடத்திவித் திடுவர் தாமே.

§ சாதிநூல் என்னும் புஸ்தகமானது திருவாரூர் ஞானப்பிரகாச சுவாமிகளால் [illegible] இந்நூலுக்கு [illegible]

“வேதமான் வகைப்படுத்த வியாதன் [illegible]
மாதவனைத் தூடன்னை [illegible]
கீதையு ரெங்கோன்சுப்ர பேதமு மாகுமென்றே
யோது மாகமமுங்கண்டே புரைப்புன் [illegible]”

என்னும் செய்யுளாலறியலாம்.

சவளவேளாளர்

கவளப்போர் வேழவேந்தன் காதல்வேளாளர் தங்கள்
பவளச்செவ் வாய்மடந்தை பணைமுலையிணைய வந்தோர்
துவளப்போர் புரிந்துவேந்தன் சொற்படிநடவாதாரை
சவளத்தால் வாட்டுகின்ற சவளவேளாளராவார்.

(b) களவிற்பிறந்த அநுலோமர்

காணியாளர்

ஆரணன் தருகுலத்தோ ரரசர்தங்கன்னி செம்பொற்
பூரண கொங்கைபுல்கப் பொருந்திடுங் காணியாளர்
காரணை மருந்துநூல்மெய்க் கணிதநூற் கற்றுரைப்பர்
சிரணி யபிடேகந்தான் செயப்பெறில் வேந்துமாவார்.

II. (a) பிரதிலோமர்

யாழ்ப்பாணர்

வசையுற வணிகன்வேட்ட மறைக்குலமாதர் காதல்
நசையுறப் பெற்றமைந்தர் நரம்புறு கருவிதன்னி
லிசையுறு காதுக்கேற்ற விரலினால் விரவுமோசை
யிசையினை யெழுப்பவல்ல யாழ்ப்பாண ராவரன்றே.

(b) களவிற்பிறந்த பிரதிலோமர்

அம்பட்டர்

வழுவுற மன்னர்மாதை வணிகன்றான் மையலாகித்
தழுவுற வந்தமைந்தர் சாதிநூல் வகையுள்ளோர்க்கும்
தொழில்தரு கத்திதீட்டித் துடைதனிற் றுடைத்துமுற்றும்
பழுதற நாபியின்கீழ் பணிசெய் யம்பட்டராவார்.

III. அந்தாளர்

கவரைகள்

இடைந்திடுங் காதல்கூர் விளமுலை வணிகர்மாதை
யடைந்திடும் வணிகன்சேரு மருங்களவதனில் வந்தோர்
மிடைந்திடுஞ் சங்கராசி மிளிர்நவ மணிகளெல்லாம்
கடைந்திடுந் தொழிலும்பூண்டு கவரைகளாவரன்றே.

IV. விராத்தியர்

(a) அநுலோமரிற் பிறந்த விராத்தியர்

மறவர்

இரந்தரு மறையோர்மாதைச் சேர்ந்த கொற்கைவேந்தன்
சுரந்தழுவிய மெய்க்காதற் களவிலே வந்தமைந்தர்
குரந்தரு மாலவகாதி புழக்கொழி மரக்காலெல்லா
மரந்தனிற் கடையவல்ல மறவராய் வனத்துள்வாழ்வார்.

(b). பிரதிலோமரிற் பிறந்த விராத்தியர்

குறவர்

மன்றுடை வணிகர்மாதை மருவிட வந்தமைந்தர்
குன்றாத குன்றில்வாழுங் குன்றவ ராகிக் குன்றில்
பொன்றாத பொருளனைத்தும் புவிதனிற் கொணர்ந்துவிற்றே
மன்றுடை மரைமானேன மடர்த்திடும் வேட்டைசெய்வார்

இத்திருஷ்டாந்தங்கள் போதுமானவை. ஆகையால் சுத்த ஜாதி நான்கென்றும், அவற்றிலிருந்துண்டான சங்கர சாதிகளின் பொதுப்பிரிவுகள் நான்கென்றும், அந்த நான்கு சங்கரசாதிப் பொதுப்பிரிவுகளில் இந்துக்களுக்குள்ளிருக்கும் அளவிறந்த ஜாதிகளடங்கியிருக்கின்றதென்றும் அறியலாம்.

5. சுத்தசாதிகளாகிய பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரருக்குத் தமிழ் நூல்களில் வழங்கிவரும் பெயர்களில் சிலவற்றைவரைவோம்.

A. சாதிநூல்.

ஆளுநான் முகன்முகத்தி லந்தணர்குலமுண்டாகத்
தோளினி லரசர்வர்க்கந் தோன்றிடத் தொடைகடம்மின்
மீளவும் வணிகர்தங்கள் மெய்க்குல முதிப்பதுாய
தாளிணை தனில்வேளாளர் சாதியுஞ்சனித்ததன்றே.

இச்செய்யுளில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

B. கூர்மபுராணம்,

வருணச்சிரம தன்மமுறைநத்தவத்தியாயம்,

11-வது கவி

வேதியர் முகத்தில்வேந்தர் விறல்கெழு துணைத்தோள்வெற்பின்
நீதரு வணிகர்செம்பொற் குறங்கினிற் சதுர்த்தர்செய்ய
பாதபங்கயத்தி லின்முன் பதுமன்முன் படைத்த மூவ
ரோதிய மகங்களியாவு மாற்றுதற் குரியராவார்.

இக்கவியில் வேதியர், வேந்தர், வணிகர், சதுர்த்தர் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

C. வெற்றிவேற்கை.

வேதியர்க்கழகு வேதமு மொழுக்கமும்
மன்னவர்க்கழகு செங்கோன் முறைமை
வைசியர்க்கழகு வளர்பொரு ளீட்டல்
உழவர்க்கழகே யுழுதூண் விரும்பல்.

இப்பாடலில் வேதியர், மன்னவர், வைசியர், உழவர் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

D. காசிகாண்டம்,

சிவசன்மரவை யமன் எதிர்கொண்டவத்தியாயம்,
44-வது கவி.

நெடியகத்தர மறைக்கிழவர் வேமியரசர்
படியில்வாழ் வணிகர்முன்னம் வெருவாது பழிகூர்ச்
தடிகணீட்டிய சதுர்த்தனையதோ முகமொனுங்
கொடியபாழ் நரகினிட்டுடல் குறைத்திடுதியால்.

இதன் கருத்து.

வேதியர், வேந்தர், வணிகர் என்னும் முக்குலத்தவர் சமுகத்தில், சதுர்த்தனுகிய சூத்திரன் அச்சமற்றவனுய் நீட்டிய காலை முடக்காதிருப்பானேயாகில், அப்படிப்பட்ட சூத்திரனைக்கொடிய பாழ்நரகில் தள்ளி அவனுடலைத் துண்டு துண்டாக நறுக்கிக் குறுக்குங்களென்பதாம். இதுவே சூத்திருடைய பூர்வ ஸ்திதி.

இக்கவியில் மறைக்கிழவர், அரசர், வணிகர், சதுர்த்தர் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

E. கம்பராமாயணம்,

உயுத்தகாண்டம், திருவபிஷேகப்படலம்,
35-வது கவி §

அந்தணர் வணிகர் வேளாண்மரபினராவிநாட்டிச்
சந்தணி புயத்துவள்ளற் சடையனேயனைய சான்றே
ருய்ந்தன மடியோமென்னு மூவகைபருவரிகாண
வந்தன ரிராமன்கோயில் மங்கலத்துரிமை மாக்கள்.

இக்கவியில் அந்தணர், சான்றோர், வணிகர், வேளாண் மரபினர் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

இவைகளையெல்லாம் ஒருங்கே திரட்டிப்பார்க்கில் நான்கு ஜாதிகளுக்கும் பின்வரும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன :—

---

§ இக்கவி ஏட்டுப்பிரதியிலிருந்தெடுக்கப்பட்டது. அச்சுப்பிரதியிலிதற்குப்பதிலாக வேறே கவி பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இக்கவியைப்பற்றி Bishop Caldwell and the Tinnevelly Shanars (1883) என்னும் புஸ்தக அனுபந்தத்தின் 5-வது பக்கத்தில் பின்வருமாறு கண்டிருக்கிறது :—

"This stanza is not found in the printed copy, for the process of expurgation is now rather too freely practised by different sects on their own sectarian principles. In the old cadjan manuscript kept at present in Bishop Sargent's C. M. S. Library, the second line reads சக்கரனனைய instead of சடையனேயனைய. In some other manuscripts the line runs சந்தணி யிவரும் வள்ளத் சக்கரனனைய சான்றோர்."

பார்ப்பார்,	அரசர்.	செட்டிகள்.	வேளாளர்.
1. அந்தணர்	1. அரசர்	1. வணிகர்	1. வேளாளர்
2. வேதியர்	2. வேந்தர்	2. வைசியர்	2. சதுர்த்தர்
3. மறைக்கிழவர்	3. மன்னவர்		3. உழவர்
	4. சான்றோர்		

இவர்களுக்குப் பூர்வ தமிழகராதியில் வழங்கிய பெயர்களையும் கூறுவாம்.

6. பூர்வதமிழகராதியாகிய திவாகரம் என்னும் அரியநூலானது காவேரி நதி தீரத்திலிருந்த சிறு நாடுகளிலொன்றாகிய அம்பன் நாட்டுக்கரசனுன சேந்தன் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூலில், மக்கட்பெயர்த்தொகுதி என்னும் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கும் முதல் முப்பத்துமூன்று சூத்திரங்கள் நான்கு பிரிவாகப்பிரிக்கக்கூடியவைகள்:

1. குருக்களைப்பற்றிய சூத்திரங்கள் 8 (1 முதல் 8 வரை).
2. அரசரைப்பற்றிய „ 23 (9 முதல் 31 வரை).
3. செட்டிகளைப்பற்றிய சூத்திரம் 1 (32-வது).
4. வேளாளரைப்பற்றிய „ 1 (33-வது).

குருக்களைப்பற்றிய சூத்திரங்கள் எட்டில் முதலாவது சூத்திரத்தில் அருந்தவர் என்னப்பட்ட க்ஷத்திரிய ரிஷிகளின் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன :—

அருந்தவர் பெயர்.

"துறவோ ரையர் மாதவர் முனிவர்
அறவோர் தீர்த்தோ ரறிஞ ருயர்ந்தோர்
தாபதர் மெய்யர் தவத்தர் தபோதனர்
முனிவ ரிருடிகள் படிவர் பண்ணவர்
யோகிகள் கடிந்தோர் பெரியோ ருறுவரென்
றாகிய வந்தண ரருந்தவர் பெயர்."

க்ஷத்திரிய ரிஷிகளாகிய குருக்களுக்கு வழங்கிய இப்பெயர்களில் மிச்சமானவற்றைப் பார்ப்பார் பிற்காலத்தில் தங்களுடைய பெயர்களாகச் சேர்த்துக்கொண்டார்கள்.

2-வது சூத்திரம் சைவத்தவப்பாலோரின் பெயர்களைக்கூறுகின்றது :—
(உ-ம்) மாவிரதியர், காளாமுகர், பாசுபதர்.

3-வது சூத்திரத்தில் வைணவசமயத்தோரின் பெயர் வருகிறது :—
(உ-ம்) பாகவதர்.

4-வது சூத்திரத்தில் சமணரின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன;
(உ-ம்) அருகர், ஆசீவகர், சாவகர்.

5-வது சூத்திரம் புத்தரின் பெயர்களைக் கூறுகின்றது :—
(உ-ம்) சாக்கியர், தேரர், பௌத்தர்.

6-வது சூத்திரம் சமண முனிவரின் பெயர் கூறுகிறது :—
(உ-ம்) சாரணர்.

7-வது சூத்திரத்தில் சடைமுடியோரின் பெயர் வருகிறது :—
(உ-ம்) தாபதர்.

8-வது சூத்திரத்தில் பார்ப்பாரின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது :

பார்ப்பார் பெயர்.

"ஐயர் வேதிய ரிரு பிறப்பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசரர்
அந்தணர் நூலோ ரறு தொழிலாளர்
செந்தீ வளர்ப்போ ருயர்ந்தோ ராய்ந்தோர்
ஆதி வருணர் வேத பாரகர்
விப்பிரர் தொழு குலத்தோர் கேள்வி யாளர்
தப்பில் பார்ப்பார் தம் பெயராகும்."

இந்த எட்டாவது சூத்திரம் கூறும் பெயர்கள் தப்பில் பார்ப்பார் தம் பெயராகும் என்று கூறிய காரணத்தால் கலப்பில்லாத, சுத்த ஜாதி பார்ப்பாருக்கு மாத்திரம் பொருந்திய பெயர்கள். அத்தன்மைய பிராமணர்கள் அரிது என்பதாக அஸ்வகோஷா போதிசத்வா எழுதியிருப்பதை 66-வது பக்கத்தில் வரைந்திருக்கிறோம் :—

"ஆனால் கலப்பில்லா பிராமணன் அரிது. ஏனெனில் ஆதிகாலப் பிராமணஸ்திரியை சூத்திரன் புணர்ந்து, பிராமண சந்ததியை விருத்தி செய்ததாகத் தெரியவருகின்றது"

போதிசத்வர் சொல்லும் இவ்விஷயத்தால் மேலே நாம் கூறிய பார்ப்பார் பெயர்கள், இக்காலத்திலுள்ள பிராமணர்களுக்குப் பொருந்திய வையல்ல. ஏனெனில் அவர்கள் சூத்திரர் சம்பந்தமானவர்களேயன்றிக் கலப்பில்லா பிராமணர்களல்ல. கலப்பில்லா பிராமணர்களுடைய பெயர்கள் தான் திவாகரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. சூத்திரர் சம்பந்தமான பார்ப்பாருக்குப்பொருந்திய பெயரொன்றுமில்லையென்று திருவாரூரிலெழுந்தருளிய ஞானப் பிரகாச சுவாமிகளருளிச்செய்திருக்கும் சாதி நூலாலறியலாம் :—

சாதிநூல், பிரதிலோமருற்பத்தி,
7-வது கவி.

மறையவர் மங்கை தன்னை மணந்த சூத்திரன் பால் வந்தோர்
குறைவினன் னதாலூறு கோலமறைக் கப்புறத்தி
லுறைபவராகி யூர்க்குளுச்சியின் முன் புக்காராய்
பறைதனைத் தோளிற்றூக்கும் பறைத்தலமாவரன்றே.

இக்கவியில் மறையவர் மங்கையாகிய பிராமண ஸ்திரீயிடம் சூத்திரனால் பிறந்தவர்களுக்குப் பறையர் என்று பெயரென்பதாக ஞானப்பிரகாச சுவாமிகள் எழுதிவைத்திருப்பதால், அஸ்வகோஷா போதிசத்வா சொல்லியபடி கலப்பில்லா பிராமணனில்லை யென்பது உண்மையானால் ஞானப்பிரகாச சுவாமிகள் கூறியபடி அவர்கள் பறையர் என்பதும் உண்மையென்றேற்படுகிறது. தமிழ் நாட்டில் வழங்கும்

"பார்ப்பானுக்கு மூத்தவன் பறையன்"

என்னும் பழமொழியின் புதைபொருளும் இவ்வாதாரங்களால் வெளியாகின்றது. இது நிற்க.

குருக்கள் சம்பந்தமான எட்டுச் சூத்திரங்களையும் விவரித்தோம். இனிமேல் அரசர்களைப்பற்றிக் கூறும் 23 சூத்திரங்களையும் விவரித்துக் காட்டுவோம். அரசர்களாகிய க்ஷத்திரியரே பூர்வத்தில் அறிவுடையோர்களாயிருந்தார்கள் என்று சாண்டோக்கிய உபநிடதம், சதாபத பிராமணம் முதலிய நூல்கள் கூறியதை 87-வது பக்கத்தில் எடுத்துரைத்தோம். மேலும் வேதங்களை யுண்டுபண்ணின எட்டு ரிஷிகளும் க்ஷத்திரியரென்பதாக 88 முதல் 92-வது பக்கம் வரை விவரித்தோம். சமஸ்கிருத பாஷை [illegible]த்துக்கு வருகிறதற்கு அநேக யுகங்களுக்கு முன்னிருந்த தமிழராகிய வேதரிஷிகள் வேதங்களை யுண்டுபண்ணினது தமிழ்ப்பாஷையிலேயன்றி சமஸ்கிருத பாஷையிலன்று. தமிழராகிய க்ஷத்திரிய ரிஷிகள் தமிழில் செய்த வேதமாதி நூல்களைப்பிற்காலத்தில் பார்ப்பார் சமஸ்கிருத பாஷையில் மொழி பெயர்த்தார்கள். வேதமானது பூர்வத்தில் தமிழிலுண்டாயிருந்த காரணத்தால் தமிழ் நூல்களில் அதைப்பற்றி முத்தமிழ் வேதம் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் இயற்றப்பட்ட வேதம் என்று பொருள். அல்லது மூன்று தமிழ் வேதம் என்றும் பொருள் கூறலாம்; எப்படியெனில் ஆதியில் மூன்று வேதங்கள் மாத்திரமிருந்ததென்றும், அதர்வண வேதமென்னும் நான்காவது வேதமானது வெகு காலமாக வேதமாக ஒப்புக்கொள்ளப்படவில்லையென்றும் வித்வான்கள் எழுதியிருக்கிறார்கள்§. தமிழ் நூல்களில் முத்தமிழ் வேதம் என்று வழங்கியதற்கு ஓர் திருஷ்டாந்தம் கூறுவோம்:

---

§ "Of the Atharva Veda, we need only state that it was not generally recognized as a Veda till long after the period of which we are speaking, though a class of literature known as the Atharvangiras was growing up during the Epic period, and is alluded to in the later portions of some of the Brahmanas. Throughout the first three periods of Hindu history, and even in Manu and other metrical codes, *three Vedas are generally recognised.* And although the claims of the Atharvan were sometimes put forward, still the work was not generally recognised as a fourth Veda till long after the Christian era. Hundreds of passages recognising three Vedas only could be cited from the literature of the period of which we are now speaking; but we are unable to make room for such passages. We will only refer our readers to a few passages, *viz.*, Aitareya Brahmana V. 32; Satapatha Brahmana IV. 6, 7; Aitareya Aranyaka III. 2, 3; Brihadaranyaka Upanishad I. 5; and Chhandogya Upanishad III and VIII."

(Ancient India, Book II, Chapter I.)

திருவிளையாடற் புராணம், திருநாட்டுப்படலம்,

50-வது கவி.

மாயவன் வடிவாயது வையமாலுந்திச்
சேயபங்கயமாயது தென்னனுடலர்மேற்
போயமென் பொகுட்டாயது பொதியமப்பொகுட்டின்
மேயநான் முகனத்தியன் முத்தமிழ்வேதம்.

58-வது கவி.

தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்தது முதலை
யுண்டபாலனை யழைத்தது மெலும்பு பெண்ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச சொற்களோ சாற்றீர்.

இதன் கருத்து.

"உலகத்திலே பாண்டிநாடு திருமாலின் உந்தியிற் பூத்த செந்தாமரை மலர்போலிருக்கின்றது. அந்நாட்டிலே பொதிய மலை அந்தத் தாமரை மலர்மேனின்ற பொகுட்டுப்போன்றிருக்கின்றது. அம்மலையின் மேலிருக்கின்ற அகத்தியர் அந்தப்பொகுட்டிலே மேவியிருக்கிறபிரமன் போலிருக்கிறார். அந்த அகத்தியர் உண்டுபண்ணிய இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலே வேதங்களுண்டாயிற்று. தொண்டர்களுக்கு நாதனென் கடவுளை தூதுபோகச் செய்ததும், முதலை விழுங்கின பிள்ளையை மீள அழைத்ததும், எலும்பைப் பெண்வடிவாகச் செய்ததும், வேதங்களை விரித்துரைத்ததும் அழியாத தன்மையயுடைய தமிழ்ப்பாஷையோ மற்றும் பாஷைகளோ சொல்லுங்கள்" என்பதாம்.

ஆகையால் தமிழராகிய க்ஷத்திரிய ரிஷிகள் தமிழில் வேதங்களை யெழுதினார்களென்றறிக.

தமிழ் நாட்டில் தற்காலத்தில் வழங்கும் முக்கியமான தமிழ்நூல்களைச் செய்தவர்களும் க்ஷத்திரியர் என்பதாகக் கனம் ச. வின்பிரிட் ஐயரவர்களியற்றிய சான்றோர் மரபுகாத்தல் என்னும் புஸ்தகத்தின் எட்டாவது பிரகரணத்திலும் கண்டிருக்கிறது. அதாவது:—

"பூர்வத்தில் பெருநூல்கள் பல எழுதியவர்கள் சத்திரிய குலச்சான்றோர்களென்பது எவருக்குத் தெரிந்தகாரியமல்லவா? திருட்டாந்தமாக நைடதம், காசிகாண்டம், வெற்றிவேற்கை எழுதியவன் அதிவீரராமபாண்டி நாடன், சாதக சிந்தாமணி எழுதியவன் தில்லைநாயக பாண்டி நாடன், திவாகரநூல் எழுதியவன் அம்பர் நாட்டிக்கு அதிபதியாகிய சேந்தன், பிரபோத சந்திரோதயம் எழுதினவன் [illegible] நாட்டரசனான திருவேங்கடத் [illegible] சோழநாடன், தமிழ இராமாயணக் காப்பியம் எழுதியவன் கம்பநாடன், பாரத வெண்பா எழுதியவர் பெருந்தேவனார், ஆதியுலாச்செய்தவன் சேரமான் பெருமான், தண்டியலங்காரஞ்செய்தவன் கம்பநாடன்பேரனும் அம்பிகாபதியின் புத்திரனுமான தண்டி என்பவன். பிறவுமன்ன"

இப்படியாகப் பூர்வத்தில் க்ஷத்திரியரே நூலுரைப்போரும் கவிஞருமாயிருந்தார்கள் எனப்பார்க்கிறோம். இச்சத்திரியரைப்பற்றித் திவாகர நூலாசிரியர் கூறும் 23 (9—31) சூத்திரங்களின் விபரமாவது:—

9-வது சூத்திரம் அரசர்குல நூலுரைப்போர்பெயர்களையும் (உ-ம் கணக்காயர்); 10-வது சூத்திரம் அரசர்குலக் கலைவல்லோரின்பெயர்களையும் (உ-ம். கவிஞர்); 11-வது சூத்திரம் அரசர்குலக் கௌரவப்பட்டப்பெயர்களையும் (உ-ம். சான்றோர்); 12-வது சூத்திரம் அரசர்குலப்புலவர் பெயர்களையும் (அறிஞர், மேதையர்); 13-வது சூத்திரம் அரசர்குல நிகவல்லோர் பெயர்களையும் (உ-ம். நிபுணர், விபுதர்); 14-வது சூத்திரம் அரசரில் மூத்தோர் பெயர்களையும் (உ-ம். நாதன், பெருமான்); 15-வது சூத்திரம் அரசரில் பெருமையிற் சிறந்தோர் பெயர்களையும் (உ-ம். அண்ணல், தோன்றல்); 16-வது சூத்திரம் அரசரில் எப்பொருட்கும் இறைவன் பெயர்களையும் (உ-ம். கோன், ஈசன்); 17-வது சூத்திரம் அரசரில் உயர்ந்தோர் பெயரையும் (உ-ம். உலகம்); 18-வது சூத்திரம் இராஜசபையின் பெயர்களையும் (உ-ம். சங்கம், குழு); 19-வது சூத்திரம் அரசரின் பொதுப்பெயர்களைம் (உ-ம். வேந்தன், பூபாலன்); 20-வது சூத்திரம் குருகுலத்தரசர் பெயர்களைம் (உ-ம். கௌரவர், பாரதர்); 21-வது சூத்திரம் சேரன் பெயர்களைம் (உ-ம். கேரளன், சேரலன்); 22-வது சூத்திரம் சோழன் பெயர்களையும் (உ-ம். வளவன், செம்பியன்); 23-வது சூத்திரம் பாண்டியன் பெயர்களையும் (உ-ம். தென்னவன், பஞ்சவன்); 24-வது சூத்திரம் சாளுவநாட்டரசர் பெயரையும் (உ-ம். வேள்புலவரசர்); 25-வது சூத்திரம் குறுநிலவேந்தர் பெயர்களையும் (உ-ம். அரட்டர், குறும்பர்); 26-வது சூத்திரம் அரசர்குல மந்திரிச் கிழவர் பெயர்களையும் (உ-ம். அமைச்சர்); 27-வது சூத்திரம் அரசர் நட்பாளர் பெயரையும் (இனப்பெயர்); 28-வது சூத்திரம் அரசர்குல மந்திரி தந்திரிப் பெயர்களையும் (உ-ம். அமாத்தியர், எனுசி); 29-வது சூத்திரம் அரசர்குலப்புரோகிதராகியகருமத்தலைவர்பெயரையும்(உ-ம்.சாக்கை);30-வது சூத்திரம் அரசசேனாதிபதியாகிய போர்த்தலைவர் பெயரையும் (உ-ம். பொருநர்); 31-வது சூத்திரம் அரச பரிவாரமாகிய படையின் பெயரையும் (உ-ம். பரியாளம்) கூறுகின்றன. இவைகள்தான் க்ஷத்திரிய குலத்தவரைப்பற்றி திவாகர நூலாசிரியர் கூறும் 23 சூத்திரங்கள். இவற்றில் இராஜகுல கௌரவப்பட்டப்பெயர்கள் சொல்லப்பட்டிருக்கும் 11-வது சூத்திரத்தை இவ்விடம் வரைவோம்:—

திவாகரம், மக்கட் பெயர்த் தொகுதி,

11-வது சூத்திரம்.

"சான்றோர் மிக்கோர் செல்வர் பெரியோ
ராய்ந்தோ ருயர்ந்தோ ராரியருமென
வாய்ந்தவான்றோ ரறிவுடையோரே.

இச்சூத்திரத்தில் க்ஷத்திரியகுல கௌரவப் பெயர்கள் பத்து சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

1. சான்றோர்	2. மிக்கோர்
3. நல்லவர்	4. மேலவர்
5. ஆய்ந்தோர்	6. உயர்ந்தோர்
7. ஆரியர்	8. நடுவு
9. ஆன்றோர்	10. அறிவுடையோர்.

இப்பத்துப் பெயர்களும் க்ஷத்திரிய குலத்தவர்களாகிய தேவர்களுக்கு வழங்கியிருக்கிறதென்பதற்கு மேற்கோள்கூறுவதற்குமுன், மூன்றாவது ஜாதியாராகிய வைசியருக்கும் நான்காவது ஜாதியாகிய வேளாளருக்கும் வழங்கிய பெயர்கள் திவாகரத்தில் சொல்லப்பட்டவைகளை இவ்விடம் வரைவோம்:—

திவாகரம், மக்கட் பெயர்த்தொகுதி,

32-வது சூத்திரம்.

செட்டிகள் பெயர்.

இப்பர் பரதர் வைசியர் கவிப்பர்
எட்டியரிளங் கோக்களோர் தொழிலர் பசுக்காவலர்
ஒப்பினுய்கர் வினைஞர் வணிகரென்
றத்தகு சிரேட்டிகள் செட்டிகள் பெயரே.

33-வது சூத்திரம்.

காராளர் பெயர்.

வினைஞர் சூத்திரர் பின்னவர் சதுர்த்தர்
வளமையர் வேளாளர் மண்மகள் புதல்வர்
வார்த்தைத் தொழிலோர் வண்களம ருழவர்
சீர்த்தவேரின் வாழ்நர் காராளர்.

இப்படியாகச் சுத்தஜாதிகள் நான்குக்கும் வழங்கிய பெயர்களை திவாகர நூலாசிரியர் முதல் முப்பத்து மூன்று சூத்திரங்களிலும் அமைத்து, 34-வது சூத்திரத்திலிருந்து சங்கரஜாதிகளுக்கு வழங்கிய பெயர்களை முறையே கூறுகிறார்.

7. பூர்வ க்ஷத்திரிய ராஜாக்களின் காலத்தில் ஒவ்வொருஜாதியும் தந்தமக்கு விதிக்கப்பட்ட தொழில் வரம்பு கடக்கக்கூடாதென்பது இராஜசட்டம். இப்படியாக சுத்தஜாதிகள் நான்குக்கும் அவ்வாறு தொழில்கள் விதிக்கப்பட்டிருந்தன. திவாகரம், பல பொருட்கூட்டத்தொருபெயர்த்தொகுதியின் 78, 79, 80, 81-வது சூத்திரங்களில்பார்ப்பார், சான்றோர், செட்டிகள், வேளாளரென்னும் நான்கு சுத்த ஜாதிகளின் குலத்தொழில்கள் முறையே சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

அந்தணரறுதொழில்.

'ஓதலோ டுவித்தல் வேட்டல் வேட்பித்த
லீதலேற்ற லென்றிரு மூவகை
யாதிகாலத் தந்தண ரறுதொழில்.'

1. வேதம் ஓதுதல்
2. வேதம் ஓதுவித்தல்
3. யாகம் செய்தல்
4. யாகம் செய்வித்தல்
5. பிச்சையிடுதல்
6. பிச்சையெடுத்தல்

என்னும் ஆறுதொழில்களும் ஆதிகாலத்து அந்தணரறுதொழில். இவைகள் பூர்வகாலத்திலிருந்த சுத்தசாதி அந்தணர் தொழில்களேயன்றி, தற்காலத்திலிருக்கும் சூத்திரர் சம்பந்தமான பார்ப்பார் தொழிலல்ல.

அரசரறு தொழில்.

'அரசரறு தொழிலோதல் வேட்டல்
புரைதீரப் பெரும்பார் புரத்தலீதல்
கரையறு படைக்கலங் கற்றல் விசயம்.'

1. வேதமோதுதல்
2. யாகஞ்செய்தல்
3. நாடாளுதல்
4. பிச்சையிடுதல்
5. வில்வித்தை முதலான ஆயுதப்பயிற்சி
6. கற்பகக்கட்டி என்றும் பனைவெல்லமென்றும் சொல்லப்படும் விசயமுற்பத்திசெய்தல்,

என்னும் அறுதொழிலும் சான்றோருக்கு விதிக்கப்பட்டவைகள்.

வணிகரறுதொழில்.

'வணிகரறு தொழிலோதல் வேட்ட
லீதலுழவு பசுக்காவல் வாணிகம்.'

1. வேதமோதுதல்
2. யாகஞ்செய்தல்
3. பிச்சையிடுதல்
4. ஏருழல்
5. பசுக்காவல்
6. வர்த்தகம்

என்னும் அறுதொழிலும் செட்டிகளுக்கு விதிக்கப்பட்டவை.

வேளாளரறு தொழில்.

'வேளாளரறு தொழிலுழவு பசுக்காவ
னெள்ளிதின் வாணிபங் குயிலுவங் காருகவினை
யொள்ளிய விருபிறப்பாளர்க் கேவல் செயல்.'

1. ஏருழல்
2. பசுக்காவல்
3. வர்த்தகம்
4. வாத்தியங்கொட்டுதல்
5. நெசவுத்தொழில்
6. முதல்மூன்று குலத்துக்கும் அடிமைத்தொழில்பூண் டொழுகுதல்

என்னும் அறுதொழிலும் வேளாளருக்கு விதிக்கப்பட்டவைகள்.

மேலே எடுத்துக்காட்டிய அட்டவணையின்படி அந்தணர், அரசர், வணிகர் என்னும் உயர்குலமாக்கள் மூவருக்கும் பொதுவான தொழில்கள் மூன்று:—

1. வேதம் ஓதுதல்
2. யாகஞ்செய்தல்
3. தருமஞ்செய்தல்.

வணிகருக்கும் வேளாளருக்கும் பொதுவான தொழில் மூன்று :—

1. ஏருழல்
2. பசுக்காத்தல்
3. வர்த்தகத்தால் பொருள் சேர்த்தல்.

N.B.—மனுதர்ம சாஸ்திரத்தில் பிராமணனும் க்ஷத்திரியனும் விவசாயத் தொழில் செய்யக்கூடாதென்று சொல்லியிருக்கிறது.

அந்தணருக்கே உரிய தொழில் மூன்று :—

1. வேதம் ஓதுவித்தல்
2. யாகஞ்செய்வித்தல்
3. தருமம் வாங்குதல்.

N.B.—அந்தணர் தருமஞ் செய்தாலும் அந்தணர்க்கே செய்யவேண்டும்; ஏனைய குலத்தார் தருமம் வாங்கக்கூடாது; இம்மூன்று குலத்தாருக்கும் ஏற்ப[illegible]கழ்ச்சி.

அரசருக்கே உரிய தொழில் மூன்று :—

1. நாடாளுதல்
2. ஆயுத வித்தைப்பயிற்சி
3. விசயர் என்னும் பிள்ளைவெல்லம் உற்பத்திசெய்தல்.

வேளாளருக்கே உரிய தொழில் மூன்று :—

1. குயிலுவத் தொழில்களாகிய மேளதாள வாத்தியங்கள் கொட்டுதல்
   "குயிலுவம் வாத்தியங் கொட்டலாகும்"
   (திவாகரம்)
2. காருக வினைகளாகிய நெசவுத்தொழில் செய்தல்
   "பருத்திநூல் பட்டுநூல் மைத்தாமடியாக்கலுஞ்
   சமைத்தலும் பிறவுங்காருகவினைத்தொழில்"
   (திவாகரம்)
3. அந்தணர், அரசர், வணிகரென்னும் உயர் குலமாக்கள் மூவருக்கும் அடிமைத் தொழில் பூண்டொழுகுதல்.

க்ஷத்திரிய அரசாட்சி ஒழிந்தபின் புதூத்திரர் அடிமைத்தொழிலிலிருந்து விடுதலைபெற்றார்கள். க்ஷத்திரிய ராஜாக்கள் காலத்திலோ பார்ப்பார், சான்றோர், செட்டிகள் என்னும் உயர் குலமாக்கள் மூவர் [illegible] வேளாளன், அருசாது, [illegible] டிப்பட்ட[illegible], இதொககியாகிய கொடிய பாழ்நரகத்தில் [illegible] அல்லாமல், அவனுடைய [illegible] குருக்குள்ளே என்பது [illegible]. இந்த [illegible] முன்னமே [illegible].

8. இப்படியாக சுத்தஜாதிகள் நான்குக்கும் வழங்கிய பற்பல பெயர்களேயும், அவரவருக்கு விதிக்கப்பட்ட தொழில்களிவைகளென்னும் பார்த்தோம். தேவர்கள் க்ஷத்திரிய குலத்தவர்களானபடியால், திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 11-வது சூத்திரத்தில் க்ஷத்திரியருக்குச் சொல்லப்பட்டிருக்கும் கௌரவப்பட்டப் பெயர்கள் பத்தையும் விளக்கிக் காட்டுவோம். அப்பெயர்களாவன :—

1. சான்றோர் 2. மிக்கோர்
3. நல்லவர் 4. மேலவர்
5. ஆய்ந்தோர் 6. உயர்ந்தோர்
7. ஆரியர் 8. உலகு
9. ஆன்றோர் 10. அறிவுடையோர்.

சான்றோர். இது க்ஷத்திரியரைக் குறிக்கும் பெயரென்று திவாகர நூலாசிரியர் கூறுகிறதானது மற்றும் நூல்களுக்கு ஒத்திருக்கின்றது.

(a) 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பது தமிழ் நாட்டுப்பழமொழி. இதை ஆக்ஷேபிக்கும் சொல்த புத்திசாலர் எங்கும் இல்லை. இக்கம்பர் எழுதிய இராமாயணத்தில் சான்றோர் என்பது க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயராக வழங்கப்பட்டதற்கு ஒருதிருஷ்டாந்தம் (193-வது பக்கம் பார்க்க) கூறினோம். வேறோர் திருஷ்டாந்தமும் கூறுவோம்.

கம்பராமாயணம், உயுத்தகாண்டம், பிரமாஸ்திரப்படலம்,
211-வது கவி

சான்றோர் மாதைத் தசவரக்கன் சிறைதட்ட
வான்றோர் சொல்லு நல்லற மன்னன் வசமானால்
மூன்றாய் நின்ற பேருலகொன்றும் முடியாவேல்
றோன்றும்பேர் வெவ்வல்வினின் வீரத்தொழிலம்மா.

இக்கவியில், சூரியகுலத்திலுதித்த சநகன் என்னும் ராஜரிஷியுடைய மகளும், தசரத மகாராஜனுடைய மருகியும், இராமருடைய மனைவியுமாகிய சீதாதேவியாரைச் சான்றோர்மாது என்று சொல்லியிருக்கிறது. சீதாதேவியார் க்ஷத்திரியப்பெண்ணல்லவென்று எவன் சொல்லத் துணிவான்? ஆகையால்

சான்றோர் மாது என்றால் க்ஷத்திரியப்பெண் என்றும்
சான்றோர் " க்ஷத்திரியர் "
பொருளென்றறிக.

(b) சந்திரகுலத்தில் தோன்றியவரும், வசுதேவருக்குத் தேவகியிடம் பிறந்த குமாரனும், துவாரகைக்கு அரசனும், பஞ்சபாண்டவர்களுக்கு மைத்துனருமாகிய கிருஷ்ணமூர்த்தியை க்ஷத்திரியனல்லனென்று எவன் சொல்லத் துணிவான்?

மகாபாரதம், சாந்திபர்வம், தருமசாஸ்திர விடையுரைத்த சருக்கம்,
கண்ணன் துதி விருத்தம்.

கலைகற்றவர்க்குமது கல்லாதவர்க்கும்
நிலைபெற்றவர்க்கு நிலை நில்லாதவர்க்கும்
கொலைமுற்றுவோர்க்கு முயிர் கொல்லாதவர்க்கும்
துலையுற்ற சான்றனவன் முன் துதிப்பாம்.

இக்கவியில க்ஷத்திரியனுகிய கிருட்டிணமூர்த்தியைச் சான்றன் என்று சொல்லியிருப்பதால்

சான்றர் க்ஷத்திரியர்

என்றறியக்கடவீர்.

(c) இமயமலை யரசனும், மனோரமை என்னும் மேனகையின் கணவனும், நாராயணமூர்த்திக்கும் பார்வதி தேவியாருக்கும் பிதாவுமாகிய இமவான் என்னும் அரசன் க்ஷத்திரியனல்லவென்று யார்சொல்லத்துணிவார்?

பத்தரகாளி பஞ்சரத்தினம்,
விருத்த கலி.

எத்தனையோ கோடியாயிரமுகங் நாவெடுத்
செத்தேனை யிப்புவிதன்னிலே
இனியாகிலுஞ் செல்வவளமை தருகுன்றமா
திருந்தினது கழறுதிக்க
சித்தம்வைத்தாளவே [illegible] றன் கழல்கள்
சிந்தித்தனன் கருணைபார்
சிவிதாருக வயிரி மாரிகக்காளியுயர்
தேசோன்மயாக்கியே
உத்தமியறுமி சிவசக்தி குண்டலி நீலி
யோங்காரி யாளிமூர்த்தி
ஊளாடி யடிதேடி கனதோடி யிசைபாடி
யுத்தமர்கள் பணிசெய்மோடி
சத்தமிகு சாமுண்டி சான்றோரின் குலதெய்வ
சகுணி பிட்டாபுரத்தாய்
சோதிணைக் கெடவாளி பூதவெற்படையாளி
சோதிபத்திர காளியே.

இக்கவியில் க்ஷத்திரியகுலத்தவளாகிய பார்வதிதேவியாரை சான்றோரின் குலத்தவள் என்று சொல்லியிருப்பதால்

சான்றோர்குலம் க்ஷத்திரியகுலம் என்றும்
சான்றோர் க்ஷத்திரியர் என்றும்

அறிவீராக.

(d) அதிவீர ராமபாண்டிய ரருளிச்செய்த வெற்றிவேற்கை, 60-வது செய்யுள்.

"சான்றோரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேயநன்றே."

இதன் கருத்து.

அரசரில்லாப்புராதன நகரில் குடியிருப்பதினும் தேனுண்டுவாழும் வேடருடன் குடியிருப்பது நன்று.

இதற்கு ஆங்கிலேய மொழிபெயர்ப்பு.

"Rather than dwell in an ancient country without *rulers*, it is better to live in the woods among wild people who feed on honey."

(W. Taylor's Oriental Manuscripts, Volume II Appendix).

இச்செய்யுளில் வழங்கிய சான்றோர் என்னும் பெயரை அரசர் (Rulers) என்று டெயிலர் துரை மொழிபெயர்த்திருப்பதால் சான்றோர் என்னும் பெயர் அரசராகிய க்ஷத்திரியரைக்குறிக்கிற தென்றறியக்கடவீர்.

(e) தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 20-வது சூத்திரம்:—

'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகைமரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்'

இச்சூத்திரத்தில் பார்ப்பார், அரசர், ஏனோர் எனக்குல விபாகங்கண்டிருக்கிறது.

தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், 5-வது சூத்திரம்:—

'அந்தணர் திறத்துஞ் சான்றோர்தே எத்து
மந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும்'

இச்சூத்திரத்தில் அந்தணர், சான்றோர், பிறர் எனக்குல விபாங் கண்டிருக்கிறது.

இவ்விரு சூத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற குலப்பிரிவுப் பெயர்களில்

பார்ப்பார்	என்பது	அந்தணரையும்
அரசர்	,,	சான்றோரையும்
ஏனோர்	,,	பிறரையும்

குறிக்கும் பெயர்களென்பதாக விவேகிகளுக்கு விளக்கிக்காட்ட வேண்டியதில்லை.

ஆகையால் சான்றோர், அரசராகிய க்ஷத்திரிய குலத்தவரென்றறி

(f) மகாபாரதம், பீஷ்மபருவம், முதற்போர்ச் சருக்கம், 30-வது செய்யுள்.

மறிந்து தாழ்வன வாசிகள் மாமதவேழந்
தறிந்து வீழ்வன தேர்நிறைந்தகர்வன சான்றோர்
எறிந்த வேலினும் வாளினுங் கணையினு மிளைஞர்
துறந்த வாக்கை யெத்தனை பலகோடியார் சொல்வோர்.

இக்கவியில் மகா பாரத யுத்த வீரர்களாகிய க்ஷத்திரியர் விடுத்த வேல், வாள், அஸ்திரங்களைச் சான்றோர் எறிந்த வேல், வாள், கணையென்று சொல்லியிருப்பதால், சான்றோர் க்ஷத்திரியரென்றொப்புக்கொள்ளாதவர்கள் அறிவிலிகளன்றோ?

(ரு) திருக்குறள், 99-வது அதிகாரம், சான்றாண்மை 10-வது கவி:

சான்றவர் சான்றாண்மை குன்றினிரு நிலந்தான்
தாங்காது மன்னோபொறை.

இதன் கருத்து.

அரசருக்கு சான்றாண்மை யென்னும் இலட்சணங்குறைந்தால, பூமியானது தன் சுமையைத் தாங்கமாட்டாது.

அதாவது

மேன்மக்களுக்குரிய லட்சணம் அரசரிடத்தில் குன்றுமாயின், குடிகள் மிகுந்த கஸ்தியை அடைவார்கள் என்பதாம்.

சிறுபஞ்சமூலம்.

தான்பிறந்த வில்நினைந்து தன்னைக்கடைபிடித்து
தான்பிறராற் கருதப்பா[illegible]ந்து—தான்பிறரால்
சாகவென வேண்டாதான் சான்றாளென் றெல்லாரும்
மாகவென வாழ்த்த நன்று.

இதன் கருத்து.

ஒருவன் ஆக்கினை பெருமையிலிருந்து சுகமாக வாழவிரும்பினால், அரசரொப்புக்கேற்க விதமாய் நடந்துகொள்ளக்கடவன்.

அதாவது

இராஜ குலத்தவர்கள் தயவு பெற்றிருப்பவனுக்கு இவ்வுலகில் சகல சம்பத்துகளுமுண்டென்பதாம்.

இவ்விரண்டு கவிகளிலும அரசருக்கு சான்றவர், சான்றார் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன. இந்நூல்களுண்டு பண்ணப்பட்ட காலங்களில் க்ஷத்திரியர் இந்நாட்டைக் கட்டியாண்டார்களேயன்றி யேனோரல்ல. ஆகையால் சான்றவர், சான்றார் என்று இக்கவிகளில் வரும் பெயர்கள், இந்நூல்களுண்டான காலத்திலிருந்த க்ஷத்திரியனாக்குரிய பெயர்களாம். ஆகையால் சான்றோர் க்ஷத்திரியரென்றறியக் கடவீர்.

9. [illegible]க்கோர் என்னும் பெயர் க்ஷத்திரிய குலத்தவர்களாகிய தேவர்களுக்கும் ராஜாக்களுக்கும் வழங்கியிருக்கின்றனப்பார்க்கலாம்:—

(a) பதினெண் கணங்களில் ஒன்ருகிய சுரர் என்னப்பட்ட தேவர்களுக்கரசனுகிய தேவேந்திரனுடைய மனைவியான இந்திராணிக்கு மிக்காள் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம்,
61-வது கவி.

அரசிலாவறுமைநோக்கி யவனை வானுடர் யாரும்
விரைசெய்தார் மருடஞ்சூட்டி வேந்தனுக் கொண்டார்வேந்தாய்
வருபவன்சசியையீண்டுத் தருகென மருங்குளார்போய்த்
திரைசெய்நீரமுதனாட்குச் செப்பவக் கற்பின்மிக்காள்.

இக்கவியில் சசியென்னப்பட்ட இந்திராணிக்கு கற்பின் மிக்காள், அதாவது, கற்பினையுடைய சான்ருள் என்னும் பெயர் வழங்கியிருப்பதாலும், சுரர் முதலான தேவர்களெல்லாம் க்ஷத்திரியரானபடியாலும், மிக்கோர் என்பது க்ஷத்திரியப்பெயர்களிலொன்றென்றறிக.

(b) தேவகணங்களில் இராட்சதரும் ஒரு கணத்தவரன்றோ? அக்குலத்தில் தோன்றிய இராவணனுடைய சகோதரனை விபீடணர் என்னும் இராக்ஷதகுல க்ஷத்திரியனுக்கும் மிக்கோன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், யுத்தகாண்டம், மந்திரப்படலம்,
99-வது கவி.

இசையுஞ்செய்கையு முயர்குலத் தியற்கையுமஞ்ச
வசையுந்தீண்மையும் மீக்கொளக் கிளையொடுமடியா
தசைவில்சம்பி னவ்வணங்கைவிட் டருளுதியிதன்மேல்
விசையமில்லெனச் சொல்லினனறிஞரின் மிக்கோன்.

இக்கவியில் இராவணனுடைய சகோதரனுகிய விபீடணன் என்னும் க்ஷத்திரியனுக்கு அறிஞரின் மிக்கோன், அதாவது, அறிவுடையோர் குலத்தவனுகிய சான்ருன் என்னும் பெயர் வழங்கியிருப்பதாலும், இராவணாதி இராட்சதராகிய க்ஷத்திரியர் சாணர் என்று நாம் 165-வது பக்கத்தில் விளக்கிக்காட்டியிருப்பதாலும், மிக்கோர் என்பது க்ஷத்திரியப்பெயர்களிலொன்றும், சாணர் என்று மரூஉமொழியாகச் சொல்லப்படும் சான்ருர் க்ஷத்திரியரென்றுமறிவீராக.

(c) சுரர் குல க்ஷத்திரியருக்கும், இராக்ஷதகுல க்ஷத்திரியருக்கும் மிக்கோர் என்னும் பெயர் வழங்கியிருக்கிறதெனப்பார்த்தோம். வானரக்குலத்தேவர்களுக்கும் இப்பெயர் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவாம் :—

கம்பராமாயணம், யுத்தகாண்டம், ஒற்றுக்கேள்விப்படலம்.
30-வது கவி.

கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமமிருந்[illegible]
வல்வித்தைக் கிரமத்தில் வானரர் [illegible]
[illegible] வித்தையிதென்றெண்ணி [illegible]
சொல்லிக்க [illegible]

இக்கவியில் தேவகணங்களிலொன்ருகிய வானரர் குலத்தைச்சேர்ந்த அனுமாருக்குக் கல்விக்கண் மிக்கோன், அதாவது, கல்விபதிவினையுடைய சான்றோன என்னும் பெயர் வழங்கியிருப்பதாலும், மிக்கோர் என்பது க்ஷத்திரியகுலப்பெயர்களிலொன்றென்றறியலாம்.

(*d*) பாண்டி நாட்டிலரசாண்ட பாண்டியர்கள் க்ஷத்திரியரென்று உயர்குல மக்கள் யாவரும் அறிவார்கள். மகாபாரதம், ஆதிபாவம், அர்ச்சுனன் [illegible] அர்ச்சுனன் தென்பாண்டி நாட்டுக்கு வந்தபோது சித்திரவாகன பாண்டியனுடைய மகளாகிய சித்திராங்கதையை மணம்புரிய அபேட்சித்து, பாண்டியனிடம் சென்று, தான் கீர்த்திபெற்ற க்ஷத்திரியனுகிய பாண்டுமகாராஜாவுக்கு குந்திதேவியிடம் பிறந்த குமாரன், சித்திராங்கதையை மணம்புரிய அபேட்சிக்கிறேனென்று சொல்லப் பாண்டியன் தான் சந்திர குலத்தவனுனபடியாலும், பாண்டுமகாராஜாவும் அதே குலத்திலுதித்தவரானபடியாலும், தன் மகளை அர்ச்சுனனுக்கு மணம்புரிந்து கொடுத்தான் என்று பார்க்கிறோம். இப்பாண்டியர்கள் க்ஷத்திரியரேயன்றி வெள்ளாளருமல்ல விவசாயத்தொழில் செய்பவரும் வேறெக் குலத்தவருமல்லவென்பதாக நெல்சன் துரை தாம் இயற்றிய மதுரை நாடு என்னும் புஸ்தகத்திலும் வரைந்திருக்கிறார்.

> "And the Pandya Kings of the lunar race are commonly believed to be of the Kshatriya, not of the Vellala or any other agricultural caste."
>
> (Chap: II, Part III of the Madura Country by J. H. Nelson M.A.)

சந்திரகுல க்ஷத்திரியராகிய பாண்டியராஜாக்கள் குலத்தில் சுந்தரபாண்டியன் என்னும் பெயர் பூண்டரசாட்சி புரிந்து வந்த சிவபெருமானைப் பற்றிச் சொல்லிய கவிகளிலொன்றை வரைவோம்.

திருவிளையாடற் புராணம், மண்சுமந்தபடலம்,
75-வது கவி.

ஒப்பவர்மிக்கோர் வேறற்றொருவனு மெங்குந்தங்கு
மப்பரஞ்சுடரேயிந்த வாலவாயுறையுஞ்சோதி
கைப்படிகனிபோன்மேனுட் கண்ணுவனுதியோர்க்கு
மெய்ப்பொருள் விளங்கித்தோன்று வேதத்தைவிருத்திசெய்தான்,

இக்கவியில் சிவபெருமானைக்குறித்து ஒப்பவர் மிக்கோர், அதாவது, தமக்கு ஒப்பாரும் சான்றோர் வேறொருவருமில்லாமல் தமக்குத்தாமே மிகோராக விளங்கியவர் என்று சொல்லியிருப்பதால், க்ஷத்திரியகுலமான சிவபெருமான சான்றோன் என்றும், சந்திரகுல க்ஷத்திரியருக்குள் மிக்கோர் என்னும் பட்டப்பெயர் வழங்கியிருக்கிறதென்றுணர்க.

(*e*) மிக்கோர் என்பது க்ஷத்திரியகுலப்பெயர் என்பதற்கு வேறொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

அரிச்சந்திரபுராணம், விவாககாண்டம்,
246-வது கவி.

வஞ்சிவழங்கிய மாலையணிந்தோன்
செஞ்சுடரின்முக நின்றொளிசெய்ய
வெஞ்சுடர்முஞ்ச லியாமென மிக்கோர்
கஞ்சமுகங்கள் கரிந்தனவன்றே.

இதன் கருத்து.

சந்திரமதியானவளிட்ட பூமாலையணிந்த அரிச்சந்திர மகாராஜனுடைய முகமானது சூரியகாந்தியைப்போல் பிரகாசிக்க, சுயம்வரத்துக்கு வந்திருந்த மற்றும் க்ஷத்திரியருடைய தாமரைக்கமலம் போல் முகமானது சூரியன் முன் தோன்றிய சந்திரனைப்போல் ஒளிமங்கியிருந்தது என்பதாம்.

இக்கவியிலும் க்ஷத்திரியருக்கு மிக்கோர் என்னும் பெயர் வழங்கியிருக்கிறதென்றறியலாம்.

10. நல்லவர் என்னும் பெயரும் க்ஷத்திரிய குல தேவர்களுக்கும் இராஜாக்களுக்கும் வழங்கிய பெயரெனப்பார்ப்போம் ;—

(அ) க்ஷத்திரியனாகிய சிவபெருமான் தமக்கு இரண்டாவது தாரமாகப் பார்வதி தேவியாரை மணஞ்செய்யவேண்டுமென்று கருதி, சப்த இருடிகளாகிய அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பவர்களைப் பச்சைமலையரசனாகிய இமவானிடஞ்சென்று பெண்பேசிவரும்படி யனுப்பிய தருணத்தில், மலையரசன் ரிஷிகள் வந்த செய்தியை யறிந்து மகிழ்ந்தானென்றும், அப்போது பார்வதி தேவியாரின் சகோதரனும் மைநாகன் என்னும் காரணமூர்த்தியானவர் அவ்விருடிகளைப் பார்த்து சிவனுடைய குலமென்ன?, அவருடைய தாய் தகப்பன் பெயரென்ன?, அவருடைய குடிப்பெயரென்ன?, அவரிருக்கும் ஊரெது? என்று கேட்க, சப்தரிஷிகளும் நகைத்துப் பனம்பூவாகிய அலங்கையிருப்பிடமாகக்கொண்ட சிவபெருமான் நல்லவர் குலத்தவன் என்று தெரிவித்தார்களென்றும் வாசிக்கிறோம்.

அருணாசலபுராணம், திருமணகாரச் சருக்கம்.
61-வது கவி.

மலையிறை மகிழ்ந்தானந்த மலையிறை புதல்வன் வள்ளல்
குலமது பயந்தோர் நாமங்குடிப் பெயரேது வாழூர்
சொல்லுதியென்றான் நகைத்தனர் நகைத்துச் சொல்வார்
அலகிலான் பிறப்பு நல்லவர் குலமென்றறிவித்தார்கள்.

இக்கவியில் அரசகுலத்தவனாகிய சிவபெருமானை (பெருமான் = அரசன்) அலகிலான் என்றும், அவர் பிறந்த குலம் நல்லவர் குலமென்றும் காணப்படுகிறது.

அலகிலான் = அலகு + இல் + ஆன்

= பணப்பூவாகிய அலவரை + இருப்பிடம் + ஆண்பால்வி குதி

= பணப்பூவாகிய அலவரையை இருப்பிடமாகக்கொண்ட வன்

= பின்பழுதம்பத்தி செய்வதில் விடாமுயற்சியுடையவன்

என்று பொருளாகிறபடியால் நாம் முந்தின அத்தியாயத்தில் விரித்து ரைத்தபடி சிவபெருமான் அமுதகுலத்தவரென்று இக்கவி வற்புறுத்து கிறது.

நல்லகின் = நல்லகுலம்

= நல்லவர்குலம்

= நன்மிகுர் என்னும் க்ஷத்திரியர் குலம்

என்றுபொருள்.

c. f. இனவழி = Lineage, Pedigree

இனமுறை [illegible] = Kindred

இனமை = Relationship

(Winslow)

க்ஷத்திரியனாகிய சிவன் நல்லவர் குலத்தவனென்று அருணாசலபுராணிகர் கூறியபடி, அவருடைய இரண்டாந் தாரமாகிய பார்வதி தேவியாரும் நல்லவர் குலத்தவள் என்று வாசிக்கிறோம்.

திருவருணைக்கலம்பகம்.

94-வது கவி.

அள்ளற் கடலவிடங் கக்கதகண்ட ஈருகவெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையு மொப்பாநுதற் பேதை நல்லாள்
வள்ளக் குழைபொரு கண்ணுக்குத்தோற்றம் புவ்வாரியும்
கள்ளக்கயலு மிராசியின் மீனுங்கடைப்பட்டதே.

இக்கவியில் பார்வதி தேவியாருக்கு நல்லாள் என்னும் பெயர் வழங்கியி ருப்பதால், நல்லவர் என்பது க்ஷத்திரிய குலப்பெயரென்றறிக.

(b) பார்வதிதேவியாருக்கு நல்லாள் என்னும் பெயர் வழங்கியது போல அதே குலத்திலுதித்த க்ஷத்திரியப் பெண்ணாகிய சீதாதேவியா ருக்கும் அப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது:—

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், [illegible]

4? -வது கவி.

நல்லோர் [illegible]
கொல்லை மெய்முயிர் கொண்டதே
நல்லோருஞ் சொறிக்கப்பேரும்
[illegible]

இக்கவியில் அநுமார் [illegible] பார்த்து நல்லோய் என் றழைக்கிறார். அதற்கு சான்றோனே! க்ஷத்திரியப் பெண்ணே! என்று பொருள்.

(3) வானரக்குலதேவதைகளுக்கும் க்ஷத்திரியரானபடியால் அவர்களுக்கும் நல்லோர் என்னும் க்ஷத்திரியப்பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், நாடவிட்டபடலம்.

64-வது கவி.

[illegible]
[illegible]
பாவரும் கிழமைத்தொன்மை [illegible]
[illegible] நல்லோரே.

இக்கவியில் வானரவீரர்களாகிய அநுமார் நல்லோரே என்றழைக்கிறார். அதற்குச் சான்றோரே! க்ஷத்திரியரே! என்று பொருள்.

(4) [illegible] தம்பியாகிய பரதருக்கு [illegible] என்னும் க்ஷத்திரியப்பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், [illegible]படலம்.

22-வது கவி.

நல்லவ[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இராமர் வனவாசஞ் [illegible] பரதன் [illegible] இராமரை [illegible] என்று கூறிய இக்கவியில் பரதனுக்கு நல்லவன் என்னும்பெயர் வழங்கியிருப்பதாலும், [illegible] என்பது க்ஷத்திரியரைக்குறிக்கும்பெயரென்றறிக.

(5) இராமர் சீதையை [illegible] போது, [illegible] இராமர் எடுத்து [illegible] அங்கிருந்த க்ஷத்திரியரெல்லாரும் [illegible] என்றுசொல்லிய விடத்திலும் [illegible] என்னும்பெயர் க்ஷத்திரியருக்கு வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், பாலகாண்டம், கார்முகப்படலம்.

33-வது கவி

[illegible]
[illegible]
[illegible]
[illegible] நடந்தான்.

இக்கவியிலும் க்ஷத்திரியருக்கு [illegible] என்னும்பெயர் வழங்கியிருக்கிறது [illegible]

11. மேலவர் என்னும்பெயர் க்ஷத்திரியகுலதேவர்களுக்கும் அரசர்களுக்கும் வழங்கிய பெயராம்.

(a) பதினெண் தேவகணங்களில் சிறந்ததாகிய சூரர் என்னப்பட்ட முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் இப்பெயர் வழங்கியிருக்கிறது.

திருவாலவாய்த்தேவாரம், திருத்தாண்டகம்,
2-ம் கவி.

விண்ணுலகின் மேலோர்கள் மேலோன்றன்னை
மேலாடு புரமூன்றும் பொடிசெய்தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் [illegible]த்தானைப்
பசும்பொன்னின் நிறத்தானைப் பானீற்றானைக்
கண்ணிலவு சடைக்கற்றைக் கங்கையாளைக்
கரந்தானைக் [illegible] விருந்தான்றன்னைத்
தென்னிலவு தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப்பெற்றேனானே.

இக்கவியில் தேவலோக மென்னப்பட்ட இந்திர நாட்டிலுள்ள முப்பத்து முக்கோடி [illegible] ர் என்னும் க்ஷத்திரியருக்கு

விண்ணுலகின் மேலோர்,

அதாவது, தேவலோக சான்றோர், தேவலோக க்ஷத்திரியர் என்னும் பெயர் வழங்கியிருப்பதால், மேலவர், மேலார், மேலோர் என்னும் ஒரு பொருட்கொண்ட மொழிகள் க்ஷத்திரியரைக் குறிக்கும் பெயர்களென்றறிக.

(b) சூரகுலதேவர்களுக்கு வழங்கிய இப்பெயர் வானரக்குலதேவர்களுக்கும் இப்பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், [illegible]ப்படலம்,
76-ம் கவி.

[illegible]
[illegible] மேலோய்
[illegible]
[illegible]

இக்கவியில் வானரனாகிய அநுமானைப் பார்த்து சீதாதேவியார் மேலோய், அதாவது, மேலவனே!, சான்றோனே!, க்ஷத்திரியனே! என்று விளிப்பதனாலும், மேலோர் என்பது க்ஷத்திரியரைக் குறிக்கும் [illegible].

(c) க்ஷத்திரியனாகிய சிவபெருமானுக்கும் இப்பெயர் வழங்கியதற்கு ஓர் திருஷ்டாந்தம் கூறுவாம்.

திருவிளையாடற் புராணம், [illegible]
78-ம் கவி.

[illegible]
[illegible]
[illegible] மேலவர் [illegible]
[illegible]

இக்கவியில் மும்மூர்த்திகளில் முதல்வராகிய சிவபெருமானுக்கு மேலவன் என்னும் பெயர் வழங்கியிருப்பதால், மேலவர் என்பது தேவர்களாகிய க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்றறிக.

(*d*) சூரிய சந்திர குலத்தரசர்களாகிய க்ஷத்திரியருக்கும் இப்பெயர் வழங்கியதற்கு இரண்டொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,

13-வது கவி.

வெய்யவன் குலமுதல்வேந்தர் மேலவர்
செய்கையி னொருமுறை திறம்ப லின்றியே
வையம்பாலுண்ட வாண்டுகள் மாட்சியால்
ஐயிரு பதினாயிரம் மரோ

ஷ காண்டம், மந்தரை சூழ்ச்சிப்படலம்,

64-வது கவி.

வெயின்முறைக் குலக்கதிரவன் முதலிய மேலோர்
உயிர்முதற்பொருள் திறம்பினு முரை திறம்பாதோர்
மயின்முறைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிருறப்புலச் சிந்தையாலென்சொன்றுய தீயோய்.

இவ்விரண்டு கவிகளிலும் சூரியகுலத்திலுதித்த க்ஷத்திரிய ராஜாக்களுக்கு மேலவர், மேலோர் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

ஷ காண்டம், மந்திரப்படலம்,

8-வது கவி.

கல்லுமிடனு மேற்ற கருவியுந் தெரியக்கற்ற
நல்லறிவோர்கள் தெய்வ நூல்கணித் தறக்கணித்த மேலோர்
எல்லாம் புகுக்குவென்றுஞ் செய்கையுந் தெரிந்துகொண்டு
பால்வருமுதியோரவுந் தலைவருக்குப் பயக்குநேரார்.

இக்கவியில் தசரதமகா ராஜனுடைய மந்திர சபா மண்டபத்தில் கூடிய க்ஷத்திரியருக்கு மேலோர் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

(*e*) தமிழகராதியாகிய திவாகரத்திலிருந்தும் வேறொரு திருஷ்டாந்தம் கூறுவாம்:—

திவாகரம், 12-வது பலபொருட் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி,

87-வது சூத்திரம்.

அறுவகைத்தானையின் பெயர்.

வேற்றானை வாட்டானை விற்றானை மேலோர்
தேர்த்தானை பரித்தானை களிற்றுத்தானையென
வாற்றலரசர் அறுவகைத்தானை.

அரசர்களுடைய அறுவகைச் சேனையென்பவை, வேல், வாள், வில், தேர், குதிரை, யானை என்பவைகளாம். இச்சூத்திரத்தில் அரசருக்கு மேலோர் என்னும் பெயர் வழங்கியிருப்பதாலும், மேலோர் என்பது க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்றறிக.

12. ஆய்ந்தோர் என்பதும் க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்பதாகத் திவாகரர் நூலாசிரியர் கூறிய பிரகாரம், திருவிளையாடற் புராணத்தில் க்ஷத்திரியனாகிய சிவபெருமானுக்கு ஆய்ந்தோர் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்றபடலம்,
47-வது கவி.

பார்த்திவர் மதிக்குமுத்தம் பளிங்கன்றிப் பச்சைதானுஞ்
சாத்திகந் துகிர்மாணிக்கங் கோமேதந் தாமேயன்றி
மாத்திகழ் புருடராகம் வயிடூரியம் வயிரந்தாமு
மேத்திராசதமா நீலந்தாமதமென்பராய்ந்தோர்.

இதன் கருத்து.

முத்தையும் வயிரத்தையும் பச்சையையும் சாத்திகக்குணமென்றும், பவளத்தையும் மாணிக்கத்தையும் கோமேதகத்தையும் இராஜதக்குணமென்றும், நீலத்தைத் தாமதக்குணமென்றுஞ் சொன்னார் சிவபெருமான் என்பதாம்.

இக்கவியில் ஆய்ந்தோரென்னும் பெயர் க்ஷத்திரியனாகிய சிவபெருமானுக்கு வழங்கியிருப்பதால், அப்பெயரும் க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்றறியலாம்.

13. உயர்ந்தோர் என்பதும் க்ஷத்திரியருக்கு வழங்கி வர்திருக்கின்ற பெயரெனப்பார்ப்போம்.

(a) பிரமதேவருடைய குமாரனும், சிவனுடைய முதல் தாரமாகிய சத்தி தேவியாருக்குப் பிதாவுமாகிய தக்கபிரசாபதிக்கு இப்பெயர் வழங்கியிருக்கிறது.

இலிங்கபுராணம், தேவாசுரர் தோற்றமுரைத்தவத்தியாயம்,
2-வது கவி.

புரிவாய விழுந்துங் கமலப்புத்தே டனதுமனத்தின்
னுரைசால்பிரமா பதின்மர்தமைப் படைத்தானவ்வாறுயர்தக்கன்
பரிவாற்படைப்பப் படைத்தவெலாம் பாழ்பட்டொழிந்ததிறநோக்கி
மருவார்க்கூர்தத் ருதிவயிரிணியா மிவரைமணந்தனனால்.

இக்கவியில் பிரமனுடைய பதின்மூன்று குமாரரிலொருவனாகிய தக்கனுக்கு உயர்தக்கன் எனும்பெயர் வழங்கியிருக்கிறது.

உயர்தக்கன் = உயர்குலத்தக்கன்
= உயர்ந்தோர்குலத்தக்கன்
= சான்றோர் குலத்தக்கன்
= க்ஷத்திரிய குலத்தக்கன்
என்ற பொருளைக்குறிக்கும்.

(b) சந்திரகுலத்தரசனும் [illegible] பாண்டவர்களின்பிதாவாகிய பாண்டுமகாராஜனுக்கு [illegible] வழங்கியிருக்கிறது.

மகாபாரதம், ஆரணியபருவம், [illegible]சருக்கம்.

16-வது கவி.

[illegible] முழுதுமிசை [illegible] பாண்டுவென்னு
[illegible] யுயர்ந்தோனளித்த [illegible]
[illegible] வணங்கிப் [illegible]
[illegible] பெரிய [illegible].

இக்கவியிலே பாண்டுவென்னும் உயர்ந்தோன் என்று சொல்லியிருப்பதற்கு பாண்டுவென்னும் சான்றோன், பாண்டுவென்னும் க்ஷத்திரியன் என்று பொருளானபடியால், உயர்ந்தோர் என்பது க்ஷத்திரியரைக் குறிக்கும் பெயரென்றறிக.

(c) க்ஷத்திரியகுலப் பிறப்புடைய கிருட்டிணமூர்த்திக்கும் உயர்ந்தோன் என்னும் பெயர் வழங்கியதற்கு ஓர் மேற்கோள் கூறுவாம்:—

கூர்மபுராணம், கண்ணன் சிவபூசை பண்ணின அத்தியாயம்.

2-வது கவி.

[illegible] செய்யத் [illegible] சொல்லிப்
[illegible]
[illegible] நின்னினுமுயர்ந்தோர் யாவ
[illegible] பூசைசெய்ய [illegible] கென்றான்.

இக்கவியிலே மார்க்கண்டேயர் கிருட்டிணமூர்த்தியைப்பார்த்து 'நின்னினு முயர்ந்தோர் யாவர்,' அதாவது, உன்னிலும் சிறந்த சான்றோர் யார் என்று கேட்டதனால், கிருட்டிணமூர்த்தி தாமே உயர்ந்தோன் என்னும், உயர்ந்தோன் என்பது திவாகரத்தில் சொல்லியபடி க்ஷத்திரியரைக் குறிக்கும் பெயரென்றும் அறியலாம்.

(d) சூரியகுலத்தில் தோன்றிய தசரதமகாராஜனுக்கும் உயர்ந்தோன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம். அயோத்தியாகாண்டம், நகர் நீங்குபடலம்.

55-வது கவி.

[illegible] உயர்ந்த [illegible] குமரன்
[illegible] வனமே போ [illegible]
[illegible]
[illegible] தோன்றுமென்றான்.

தசரத[illegible] இக்கவியில் உயர்ந்தோனுரைசால் [illegible] உயர்ந்தோன் என்பது க்ஷத்திரியரைக் குறிக்கும் பெயரென்றறிக.

(e) [illegible]
[illegible]

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
54-வது கவி.

போவாதொழியா னென்றான் புதல்வன் றனையீன்றவன்
சாவாதொழியா னென்றே தன்னுள்ளத் தளர்வுற்றவள்
காவாயென்றுன் மனைக்கணவன் புகழுக்கழிவாள்
ஆவாவுயர் கோசலையா மன்னம் மென்னுற்றனளே.

இக்கவியில் இராமருடைய தாய்க்கு வழங்கிய உயர்கோசலையெனும் பெயருக்கு உயர்குலக்கோசலை, உயர்க்கோ குலக்கோசலை, சான்றோர் குலக்கோசலை, க்ஷத்திரிய குலக்கோசலை எனப்பொருளென்றறிக.

14. ஆரியர் என்பதும் க்ஷத்திரிய குலப்பெயர்களிலொன்றென்பதாக திவாகர நூலாசிரியர் கூறுகிறார். இப்பெயர் க்ஷத்திரியராகிய இந்திரனுக்கும், வருணபகவானுக்கும், சிவபெருமானுக்கும், பார்வதிதேவியாருக்கும், இராமருக்கும், கிருட்டிணமூர்த்திக்கும் வழங்கியதற்கு மேற்கோள் நான்காவது அத்தியாயம், 42, 43-வது பக்கங்களில் வரைந்திருக்கிறோம். வேறோர் திருஷ்டாந்தம் கூறுவோம்.

திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி.
தலைசிறக்கவி.

கற்ற காவலன் கேட்ட செவியினன்
முற்ற வுணர்ந்த முதறிவாளன்
குகிசநாட்டுத் தாரியன குலத்தை
தெருக்காட்சிச் சேந்தன் திவாகரத்
திரண்டாவது மக்கட் பெயர்த்தொகுதி.

இக்கவியில் காவேரி தீரத்திலுள்ள அம்பன் நாட்டுக்கரசனும், திவாகர நூலாசிரியருமாகிய சேந்தன் என்னும் க்ஷத்திரியனை ஆரியன் என்று சொல்லியிருப்பதால் ஆரியன் என்பது க்ஷத்திரியகுலப்பெயரென்றறிய லாம்.

15. உலகு என்பதும சான்றோர் என்பதும ஒருபொருட்கொண்ட மொழிகளென்பதாக மூன்றாவது அத்தியாயத்தில் 168-வது பக்கத்தில் விளக்கிக்காண்பித்தோம். அவ்விடத்தில் பார்வதிதேவியாருக்கு வழங்கிய உலகமீன்ற நங்கை என்னும் பெயருக்கு சான்றோர் குல பூர்வமாது என்று பொருளென்பதாகத் தெரிவித்தோம். பார்வதிதேவியாருக்கு உலகமீன்ற நங்கையென்னும் பெயர் சொல்லப்பட்ட பிரகாரம் சிவபெருமானுக்கும் அனைத்துலகுமீன்றான் என்னும் பெயர் வழங்கியதை இரண்டாவது அத்தியாயத்தில கூறனேும்.

திருவிளையாடற் புராணம், [illegible]
13-வது கவி.

[illegible] யனைத்துலகுமீன்றபெருந் தேவர்க்குத்
தாரம் செழுங்குவளைத் தாரரம் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவாலவாயுடையன் [illegible]
[illegible]

இக்கவியில் சிவனுக்கு வழங்கும் அனைத்துலகுமீன்றான் என்னும் பெய ருக்கு சகல லோகங்களையும் சிருஷ்டித்தவர் என்று சொன்னால் அது உண்மையல்ல. எப்படியெனில் சுந்தரபாண்டியனாகிய சிவபெருமான் மதுரையிலரசாண்ட 3-வது அரசன்; இவருக்கு முந்தின இருவர் காலத்திலும் உலகங்களும் மதுரையுமிருக்கையால் இவரால் அவை சிருஷ்டிக்கப்படவில்லை. ஆகையால் சிவனுக்கு வழங்கிய அனைத்துலகுமீன்றான் என்னும் பெயருக்கு சான்றோர் அனைவரினும் சிறந்த சான்றான், சிறந்த க்ஷத்திரியன் என்றே பொருள். சிவனைப்போலவே திருமூர்த்திக்கும் கூர்மபுராணத்தில்,

1. உலகீன்ற செல்வன்,
2. எவ்வுலகீன்ற அழகி,
3. உலகம் பூத்த விறைவன்,

என்னும் பெயர்கள் வழங்கிய பாடல்களை 22, 23-வது பக்கங்களில் எடுத்துரைத்திருக்கிறோம். அவற்றிற்கும் சிறந்த சான்றான், சிறந்த க்ஷத்திரியனென்பதே யதார்த்தமான தாற்பரியம். இரண்டாவது அத்தியாயத்தில் இத்தன்மைய பெயர்கள் மற்றவர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறதற்கு இதே பிரகாரம் தாத்பரியம் செய்துகொள்ளவும்.

உலகு என்பது க்ஷத்திரியராகிய சான்றோரைக் குறிக்கிறதென்பதற்கு வேறோர் மேற்கோள் கூறுவோம்:—

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
67-வது கவி.

என்றுவொன்றொன் றொவ்வா விசைதந்த நென்னுயிரும்
சென்றுனின்றே டென்னுத்தன்மை செய்திட்டேய்ந்தான்
மென்றோன் மார்பின் முனிவன்வேந்தே யடேலவனை
இன்றேநாத வண்ணந்தன்கவெ னுலகோடென்றான்.

இராமர் வனவாசஞ் செய்யப்போகிறார் என்று விசனமுற்றிருந்த தசரதமகாராஜனைப்பார்த்து வசிட்டரானவர் அரசனே! நீ வருந்தாதே, நான் உலகொடு சென்று இராமர் இன்று காட்டுக்குச் செல்லாதபடி தடுப்பேன் என்றான். இக்கவியில் வழங்கும் உலகு என்னும் பெயருக்கும் சான்றோர், க்ஷத்திரியர் என்றே பொருள். ஆகையால் உலகு என்பது க்ஷத்திரிய பதம் என்றறிகிறோம்.

16. ஆன்றோர் என்னும் பெயரும் க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் 202-வது பக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் கம்பராமாயணக்கவியிலிருக்கிறது. அக்கவியில க்ஷத்திரியரால் போற்றப்படும் தருமதேவதைக்கு 'ஆன்றோர் சொல்லு நல்லறமன்னவன்' என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அக்கவி வருமாறு:—

"சான்றோர் மாடத் தக்கவர்க்கவ [illegible]
வான்றோர் சொல்லு நல்லறமன்னவன் [illegible]
[illegible] முடியாவேத்
[illegible]."

ஆகையால் ஆன்றோர் என்பது க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்றறி கிறோம்.

மேலும் க்ஷத்திரியனாகிய தசரதமகாராஜனுக்கும், அவருடைய குமாரனாகிய இராமருக்கும் ஆன்றவன், ஆன்றோன் என்னும் பெயர்கள் வழங்கியதற்கும் மேற்கோள் கூறுவோம்:—

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், கைகேசி சூழ்வினைப்படலம்,

8-வது கவி.

ஆன்றவனவ்வுரை கூறவையமில்லாள்
தோன்றியபேரவலர் துடைத்தனள்மேல்
சான்றினியோர் குலமாக மன்னரியன்
ஈன்றனைமைந்த விரண்டுமீதியென்றான்.

இக்கவியில் தசரதனுக்கு ஆன்றவன் என்னும்பெயர் வழங்கியிருக்கிறது.

ஷை காண்டம், நகர்நீங்குபடலம்,

138-வது கவி.

ஆன்றன் பகர்வான்பினுமைய விவணவயமையல்
தோன்றுநெறிவாழ் துணைத்தம்பியைப்போர்தொலைத்தோ
சான்றோர்புகழுந் தவத்தாதையை வாய்மைகொண்டோ
ஈன்றாளைவென்றோ விளியக்கதந் தீர்வதென்றான்.

இக்கவியில் இராமருக்கு ஆன்றோன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

ஆகையால் ஆன்றோர் என்பது க்ஷத்திரியரைக்குறிக்கும் பெயரென்றறிக.

17. அறிவுடையோர் க்ஷத்திரியருக்கு வழங்கிய அறிவுடையோர் என்னும் பெயரானது பூர்வத்தில் க்ஷத்திரியரே அறிவுடையோராயிருந்து அறிவை விர்த்தி பண்ணின காரணத்தாலுண்டான பெயர். அவர்களே பூர்வத்தில் அறிவுடையோராயிருந்தார்கள் என்னும் விபரமானது ஆறாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

> "கௌதமனே! இந்த ஞானம் இதற்கு முன் ஒரு பிராமணனுக்கும் அறிவிக்கப்படவில்லை. இந்த அறிவு எல்லா வுலகங்களிலும் க்ஷத்திரிய வகுப்பினருக்கேயுரியது."
>
> (சண்டோக்கிய உபநிடதம்).

இப்பெயர் க்ஷத்திரியருக்கு வழங்கியதற்கு இரண்டொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

(a) க்ஷத்திரியராகிய தேவர்கள் [illegible] வர்களென்றும், அவர்கள் [illegible] நாடென்றும் [illegible] அத்தியாயத்தில் விளக்கிக்காட்டினோம். [illegible], 115-வது பக்கத்தில் தென்புலத்து நாட்டுக்கு அறிவன்தேசம் என்னும் பெயர் [illegible]

அறிவுடையோராகிய க்ஷத்திரியர் முதல் முதல் இந்தியாவில் அந்நாட்டைக் கைப்பற்றிய காரணத்தால் அந்நாட்டுக்கு அறிவன்தேசம், அதாவது, அறிவுடையோர்தேசம், சான்றோர்தேசம், க்ஷத்திரியர் தேசம் என்று பெயரிட்டனர்.

(b) க்ஷத்திரியனாகிய கிருட்டினமூர்த்திக்கு அறிவன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதம், உத்தியோகபருவம்,
கிருட்டினன் தூது சருக்கம்,
181-வது கவி.

மல்லர் பப்பரவர்தம்மை மற்றினிரட்டி லாவத்தானை
வில்லுடை வீரர்தம்மை வேறினிரட்டி லாவத்தானைப்
பல்படை வல்லோர்தம்மைப் பதின்மடங்கதனில் வைத்தா
னல்லிலோர் கூறு கைதன்னி லறிவனே யறைக்கவென்றே.

இக்கவியில் அறிவனே என்பது சந்திரகுல க்ஷத்திரியனாகிய கிருட்டினமூர்த்தியைக் குறிக்கிறது.

‘கோவலர்சூழ் பெண்ணைநாடன் கோங்கர்கோன் பாகைவேந்தன்
பாவலர்மானத்தாத்தான் பங்கயச்செங்கையென்ன
மேவலரேமனெண்ணுமல் வெங்கணைத்தன்னில்நின்ற
காவலன்கன்னன்கையும் பொழிந்ததுகணைமாரி’

என்கிற செய்யுளில், கன்னன் யுத்தத்திற்குச் செல்கின்றபொழுது பகைவர் கண்புதைக்கிறது பேதமில்லாமல் யாவர்க்குந் தானஞ்செய்து வருவதற்கு, வரபதியாட்கொண்டான் தானஞ்செய்தலை ஒப்பிட்டார்.

"நாகையம்பதாகையான்பெண்ணை நதிவளஞ்சுரக்குநாடன்
வாகையாற்பொலிகின்றபோர் மகதக்கொங்கர்கோமான்
பாகையூர்கொண்டான்செங்கைப் பரிசுபெற்றவர்களென்ன
ஓகையாற்செருக்கிமீண்டா ருதிட்டிரன்சேனையுள்ளார்"

என்ற கவியில், தருமபுத்திரனது சேனையிலுள்ள வீரர்கள் வெற்றிகொண்டு மகிழ்ச்சியோடு படைவீட்டுக்கு மீளுதற்கு, வாணதிராட்கொண்டானிடம் வெகுமானம் பெற்றவர்கள் திருப்தியோடு திரும்பிவருவதை உவமை கூறினார்."

வில்லிபுத்தூராழ்வார் பாரதத்திலிருந்தெடுக்கப்பட்ட இம்மூன்று கவிகளிலும் வரபதி சேரனுக்கு வழங்கிய மூன்று பெயர்களைமாத்திரம் சற்று கவனிக்கலாம்:—

1. கொங்கர்கோன்.
2. பெண்ணைநாடன்.
3. பாகைவேந்தன்.

கொங்கர்கோன் என்னும் பெயர் சேரனுடைய குல விளக்கப்பெயர். கொங்கு என்னும் பெயருக்குப் பனையமுதென்ற அநாகராதி யாசிரியர் கூறியிருப்பதைப்பார்த்தோம். மேலே நாம் ஆதாரமாக எடுத்த சென்னை இராஜதானி அரசாட்சிப்புஸ்தகம், 129-வது பக்கத்திலும் கொங்கு என்னும் பதம் பனையமுதையே குறிக்கிறதெனக்கண்டெழுதியிருக்கிறது.

"Congoo means again in Tamil toddy."

ஆகையால் வரபதிசேரனுக்கு வழங்கிய இப்பெயருக்கு அமுதகுலத்திலுதித்த அரசன் என்று பொருள். மகாபாரதத்தில் கொங்கர்கோன் என்று கூறியதுபோலத் திருவிளையாடற் புராணம், இருமுகங்கொடுத்த படலம், 23-வது கவியில் சேரனைச் சேரர்பிரான் என்று கூறியதைப் பார்க்கிறோம்.

மின்னவிருஞ் செம்பொன்மணி மாடக்கூடன்
மேயவன் மாலெழுதி விடுக்குமாற்ற
நன்னர்புகழ் வெண்புலவர்க் குதவுஞ்சேர
ராபாலன் காண்கதன்போ லெம்பாலன்ப
னின்னிசையாழ்ப் பத்திரன்றன் மாட்டேபோக்தா
லிருநிதியங் கொடுத்தவர விடுப்பதென்னத்
தென்னர்பிரான் திருமுகத்தின் செய்திநோக்கிச்
சேரர்பிரான் களிப்பெய்தி தெரியானாகி.

இப்படியாகச் சேரனுக்கு வழங்குகிற கொங்கர்கோன், சேரர்பிரான் என்னும் பெயர்களுக்கு அமுதகுல அரசன் என்று பொருளானபடியால் சேரன் சான்றோன் என்றறிக.

பெரியோர்கள் தமிழர்கள் தங்களுடைய அரசர்களின் பெயர்களைச் சொல்லுகிறதில்லை; பட்டப்பெயர்களையே [illegible] வழங்குவர்;

"It is the Dravidian custom to call rulers by their title and not by any personal name,"

என்று மக்லீன் துரையெழுதியதற்கு ஒரு திருஷ்டாந்தம் பெண்ணை நாடன் என்னும் இப்பெயரில் பார்க்கிறோம். இப்பெயரில் வாபதி நாடன் என்று இயற்பெயருடன் குலப்பட்டப்பெயர் சேர்க்காமல் இயற்பெயரை மறைத்துக் குலப்பட்டப்பெயர் மாத்திரம் சொல்லியிருக்கிறது. சேரனுக்கு வழங்கிய பெண்ணைநாடன் என்னும் இப்பெயருக்கு இரண்டருத்தம் கூறலாம்:—

"பெண்ணை தாலம்புல் தாளிபோந்தையென்
றெண்ணியநாமம் பனையெனவிசைப்பர்."

ஆகையால் சேரனுக்கு வழங்கிய பெண்ணைநாடன் என்னும் பெயருக்கு அழகுகுலத்தவனுடைய நாடன் என்பதொருபொருள். வேறொரு தாற்பரியமோவெனில் பெண்ணையாற்றையுடைய நாடன் என்பதே. இவ்வாறு ஈரருத்தமுள்ள பதங்களை உபயோகிக்கிறதே சாமர்த்தியமென்று தமிழ் கவிஞர்கள் அதிகாலமுதலெண்ணி வந்திருக்கிறார்கள். ஆனால் அவ்வருத்தங்கள் இரண்டும் அப்பெயரால் குறிக்கப்படுகிறவர்களுக்குப் பொருந்தியதாகவே அவர்கள் கூறிவந்தார்கள். பெண்ணைநாடன் என்னும் இப்பெயரின் இரண்டு தாற்பரியமும் சேரனுக்குப்பொருந்தியவைதான். அவன் அழகுகுலத்திலுதித்த நாடான்; அந்நாடு பெண்ணையாறும் அவன் தேசத்திலோடிய நதிகளில் ஒன்று. இதே பிரகாரம் சேரனுக்கு வழங்குகிற குடநாடன் என்னும் பெயருக்கும் நாம் மேலே கூறியபடி அழகுகுலநாடானென்றும், தற்காலத்தில் குடகு (Coorg) என்று சொல்லப்படும் தேசத்தையுடைய நாடான் என்றும் பொருள் கூறலாம். இவ்விருத்தங்களும் சேரனுக்குப் பொருந்தியவைகளே. இது தமிழ் வித்வான்களின் சாமர்த்திய வசனம்.

இதே பிரகாரம் சேரனுடைய பெயர்கள்கண்ட திவாகர சூத்திரத்தில் பொருனைத்துறைவன் என்னும் பெயரும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பெயருக்கும் இரண்டு தாற்பரியம் கூறலாம். பொருனை, பொருனி என்னும் பெயர்கள் திருநெல்வேலியிலிருக்கும் தாம்பிரபொருனி நதிக்குப்பூர்வ நூல்களில் வழங்கிய பெயர்கள். ஆகையால் பொருனைத் துறைவன் என்னும் பெயருக்குத் தாம்பிரபொருனி நதியை நீர்த்துறையாகவுடையவன், [illegible] தாம்பிரபொருனி [illegible] தேசத்து [illegible] ஒரு தாற்பரியம். இந்த [illegible] தமிழ் நூல்களிலே [illegible] ருப்பதாகத் [illegible] இல்லை. [illegible] சேரநாட்டெல்லையைப் பற்றித் தற்காலத்தில் [illegible] கவிகள் ஒன்றிலும் தாம்பிரபொருனியை சேரநாட்டெல்லையாகக் கூறவில்லை. அந்நாட்டெல்லையைக் குறிக்கும் பழைய இரண்டு கவிகள் மாத்திரம் பார்க்கிறோம். அவையாவன:—

வடக்குத்தலம் பழனி வாழ்கிழக்குச் செங்கோடு
குடதிசைக்குக் கோழிக்கூடாகும்—கடற்கரையி
னோரமது தெற்காகு மோரெண்பதின்காதஞ்
சேரநாட் டெல்லையெனச் செப்பு.

2-வது செய்யுள்.

வடக்குத்தலம் பழனி வான்கிழக்குத் தென்காசி
குடதிசை கோளிக்கூடாகும்—கடற்கரையி
னோரமது தெற்காகு மோரெண்பதின்காதஞ்
சேரநாட் டெல்லையெனச் செப்பு.

இவ்விரண்டு கவிகளிலும் சேரநாட்டின் வடக்கெல்லை மதுரை ஜில்லாவில் பெரியகுளத்துக்கு நேர்வடக்கும் திண்டுக்கல்லுக்கு வடமேற்காயுமிருக்கும் பழனி; கிழக்கெல்லை திருநெல்வேலி ஜில்லாவின் மேற்றிசையிலுள்ள செங்கோட்டையும், தென்காசியும்; மேற்கெல்லை கோழிக்கூடென்னும் கள்ளிக்கோட்டை; தெற்கெல்லை கடல் என்று கண்டிருக்கிறது. இங்கே தாம்பிரபொருணி நதி சேரநாட்டெல்லையாகச் சொல்லப்படவில்லை. ஆயினும் டாக்டர் மக்ளின் துரை கரூர், அவஞ்சி, சேலம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருநகரி என்னும் பட்டணங்கள் ஒவ்வொரு காலத்தில் சேரனுடைய பிரதான பட்டணங்களாக இருந்ததென்று சொல்வதால் பொருநைத்துறைவனென்னும் பெயருக்கு மேலே கூறிய தாற்பரியம் ஒருவாறு பொருந்துமெனச்சொல்லலாம். வேறொரு தாற்பரியம் என்னவென்றால் சென்னை அரசாட்சிப்புஸ்தகம், 1-வது பக்கத்திலும் சதுராகராதியிலும் பொருணி என்னும் பெயருக்குப்பனையமுதென்று பொருள் கூறியிருப்பதாலும், பொருணி, பொருநை என்னும் இருபெயர்களும் ஒரே பொருளைக்குறிக்கும் பெயர்களாயிருப்பதாலும் பொருநைத்துறைவனென்பதை

பொருணி = பனையமுது
துறைவன் = நெய்தனிலத்தலைவன் } சதுராகராதி

என்று பிரித்து, குடநாடன், பெண்ணைநாடன், கொங்கர்கோன், சேரர்பிரான் என்னும் பெயர்களைப்போல அமுதகுலத்திலுதித்த அரசனென்று பொருள் கூறலாம். இவ்விரண்டு தாற்பரியமும் சேரனுக்குப் பொருந்திய தாற்பரியங்களே.

பாளைவேந்தன். இப்பெயரும் வரபதிசேரனுக்கு வழங்கிய பெயரெனப்பார்த்தோம். இதுவும் குலவிளக்கப்பெயரே. பாளையென்றால் [illegible]செய்யுங்குலம். பாகு என்றால் பனஞ்சருக்கரை, பனைவெல்லம். ஆகையால் பாளைவேந்தனென்றால் பனைவெல்லமுற்பத்திசெய்யுங் குலத்தரசன், அதாவது, அமுதகுலத்தரசன், சாணரென்று பொருள்.

6. சேரனுக்கு நாடனென்னும் அமுதகுலத்தவர் பட்டப்பெயர் வழங்கியதெனப்பார்த்தோம். நாடானென்னும் பெயரும் வழங்கியிருப்பதாகப்பார்க்கலாம். சேரன் பெயர்களைக்காட்டும் திவாகர சூத்திரத்

தில் கொல்லிச்சிலம்பனென்னும் பெயரும் கண்டிருக்கிறது. கொல்லிச்சிலம்பனென்றால் கொல்லிமலையையுடையவனென்று பொருள், சிலப்பு—மலை. டாக்டர் மக்ளீன் துரையும் இப்பெயரைக்குறித்துப்பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"Among the titles given in poetical works to the Chera kings are Malayamaun or ruler of the western hills, and Colliverpan or ruler of the Collamullays now in Salem."

இதன் தாற்பரியம்.

"சேர ராஜாக்களுக்குக் காவியங்களில் கூறிய பெயர்களில் மலையமான், கொல்லிவெற்பன் என்னும் பெயர்களுமுண்டு; மலையமான் என்றால் குடதிசை மலையரசன் என்றும், கொல்லிவெற்பன் என்றால் தற்காலத்தில் சேலத்திலிருக்கும் கொல்லமலைகளுக்கரசன் என்றும் பொருள்" என்பதாம்.

கல்வியிற் பெரியவர் கம்பர் என்னும் சூரியகுல சிற்றரச கவிஞரும் பின்வருமாறு சேரனை விளித்திருக்கிறார்:—

காதமிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக்கடல்கொண் டொளித்ததோ—மேதினியிற்
கொல்லிமலைத் தேன்சொரியுங் கொற்றவார்ந்நழுனைத்தால்
இல்லையோ வெங்கட் கிடம்.

தேரையார்செவ்விளநீ ருண்ணுப்பழிசுமப்பர்
காரியார்தாமறிவார் நாமவரைநத்தாமை
சேரரைவாய்ப்பொன்சொரியுங் கொல்லிமலைநன்றடா
ஊரைவாய்மூட வுலைமூடி தானிலையே.

இக்கவியில் சேரனுக்குக் கொல்லிமலை நன்னாடான் என்று கண்டிருக்கிறது.

கொல்லிமலை நன்னாடான் = கொல்லிமலை + நல் + நாடான்
= கொல்லிமலையையுடைய + நல்ல + நாடான்
= கொல்லிமலையையுடைய + நல்லவர் குல + நாடான்
= கொல்லிமலையையுடையவனும் நல்லவர்கள் என்னும் சான்றோர் குலத்திலுதித்தவனுமான நாடான்

என்று பொருள். நல்லவர் என்பது சான்றோர்க்குரிய பெயர்களிலொன்றென முன் கூறியிருக்கும் திவாகர சூத்திரத்தாலறிக.

7. ஆகவே சிவபெருமானுக்கு அமுதகுல சம்பந்தமாய் அநேக பெயர்கள் வழங்கியதுபோல சேரனுக்கும் அமுதகுலசம்பந்தமான பெயர்களநேகமிருக்கிறதென்றும் இவனுக்கு வானநாடன் முதலான பட

டப்பெயர்கள் வழங்கினதுபோல சேரனுக்கும் குடநாடன், பெண்ணை நாடன், கொல்லிமலை நாடான் என்னும் பெயர்கள் வழங்கினதென்றும் பார்த்தோம். இனி சிவனுக்கு, மற்றும் சான்றோர் குலப்பெயர்கள் வழங்கினதுபோல சேரனுக்கும் வழங்கியிருப்பதற்கு இரண்டு திருஷ்டாந்தம் கூறி முடிப்போம்.

முதலாவது திவாகர சூத்திரத்தில் சேரனுக்கு வானவன் என்னும பெயர் வழங்கியதாகப் பார்த்தோம். வான் என்றால் மேன்மை, பெருமை என்று பொருள். ஆகையால் வானவன் என்னும் பெயருக்கு மேன்மகன், பெருமையிற் சிறந்தோன், சான்றோனென்று பொருளென்றறிக.

இரண்டாவது சிவபெருமான் குலத்தில் தோன்றிய பாண்டிய ராஜாக்களில் சிலருக்கு வருமனென்னும் பட்டப்பெயர் வழங்கினதாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. உதாரணமாக

1. உக்கிரவருமபாண்டியன்
2. சித்திரவருமபாண்டியன்
3. இந்திரவருமபாண்டியன்
4. வீரவருமபாண்டியன்
5. இராஜவருமபாண்டியன்
6. இராமவருமபாண்டியன்

என்பவைகளே. வருமன் என்னும் இப்பட்டப்பெயரைச் சமஸ்கிருதத்தில் வர்மா என்று சொல்லுகிறார்கள். அப்பாஷையில் சர்மாவென்பது பிராமணகுலப் பட்டப்பெயரென்றும், வர்மாவென்பது க்ஷத்திரியகுலப் பட்டப்பெயரென்றும், குப்தாவென்பது வைசியகுலப்பட்டப்பெயரென்றும், தாசா என்பது சூத்திரகுலப்பட்டப்பெயரென்றும் கண்டிருக்கிறது. வருமன், வர்மா என்னும் பெயருக்கு மூலார்த்தம் என்னவென்று பார்ப்போம். பூர்வ பாஷையாகிய தமிழில்

வரம் என்றால் மேன்மை }
மன் ,, அரசன் } சதுரகராதி

என்றிருக்கிறது. ஆகவே வருமன் என்னும் பெயருக்கு மேன்மக்கள் குலத்தரசன், சான்றோர் குலத்தரசன் என்பது மூலபொருள். இந்த மூலபொருளாலும் சிவபெருமான் குலமாகிய பாண்டியர்கள் குலம் சான்றோர் குலமென்றறியலாம். இப்பெயர் சேரராஜாக்களுக்கும் பட்டப் பெயராக இருந்திருக்கிறது. திருஷ்டாந்தமாக சென்னை இராஜதானி அரசாட்சிப்புத்தகம் 127-வது பக்கத்திலுள்ள வரும் 15 சேரகுல ராஜாக்கள் பெயர்கள் மாத்திரம் கண்டிருக்கிறது.

1.	வீரகேரளவர்மன்	311 கி. பி.
2.	வீரமார்த்தாண்டவர்மன்	731 ,,
3.	உதயமார்த்தாண்டவர்மன்	824 ,,
4.	ஆதித்தியவர்மன்	1330 ,,
5.	வீரராமமார்த்தாண்டவர்மன்	1335 ,,
6.	இரவிவர்மன்	1375 ,,
7.	கேரளவர்மன்	1382 ,,
8.	சேரஉதயமார்த்தாண்டவர்மன் ...	1439 ,,
9.	வாணவராடமூத்தராஜா...	1458 ,,
10.	ஆதித்தியவர்மன்	1677 ,,
11.	இரவிவர்மன்	1684 ,,
12.	உன்னிகேரளவர்மன்	1718 ,,
13.	இராமவர்மன்	1726 ,,
14.	மார்த்தாண்டவர்மன்	1729 ,,
15.	வஞ்சிபலராமவர்மன்	1758 ,,

இப்பதினைந்து பெயர்களில், ஒரு பெயர் தவிர, மற்றும் 14 பெயர்களும் வர்மனென்னும் பெயர்கொண்டு முடிகின்றன. ஆகையால் சேரராஜாக்கள் அமுத சம்பந்தமாயும், காடன், காடானென்னும் பட்டப்பெயர்கள் சம்பந்தமாயும், வர்மனென்னும் பட்டப்பெயர் சம்பந்தமாயும் மூன்றுபெயர்களினால் ஏகமாயினரென்றறியலாம். அந்த மரபுக்கு அமுதகுல மான்றோர் மரபென்று பெயர். அம்மரபில் பாண்டியர்களும் சேரரும் கிளைகள் என்றறிக.

8. இலங்கைத்தீவுக்குச் சேரன் தீவு என்னும் பெயர் ஒருகாலத்தில் வழங்கினதாக சிந்துபதனென்னும் அரேபிய கடற் பிரயாணியும் அவனுக்குப்பின் சூலிமானென்னும் அரேபிய பூகோள சாஸ்திரியும் எழுதிவைத்திருக்கிறார்கள்.

"*Sketch Account of the Ancient Geography of Southern India according to Arabian Authors* ... ... (2) *Sindbad the Sailor.* The voyages of Sindbad the Sailor (ninth century A.D.) contain a few references to Southern India ... ... In his last voyage he reaches *Serendib (Ceylon)*. (3) *Soolimān.* The earliest Arab geographer who gives any account of India is a merchant named Soolimān, who made several voyages to that country and to China. His narrative bears the date 851 A.D. (237 Hijrah) ... ... Ceylon is mentioned as the [illegible] and cape Comorin as Coomaree."

கிறிஸ்து பிறக்கிறதற்கு முன்னிட்டுள்ள மூன்றாவது நூற்றாண்டில் சூரிய குலத்திலுதித்த சோழன் வம்சத்தவனான ஈழராஜன் மைசூரிலிருந்து படையெடுத்துச்சென்று இலங்கையைக் கைப்பற்றினனென்று முன்னே எடுத்துரைத்தோம். அவனுடைய குலத்தவர்க்குச் "சூழுவம்சம்" (Sooloowanse) அதாவது சோழவம்சம் என்னும் பெயர் இலங்கை தேசசரித்திரத்தில் கூறியிருக்கிறது. அதற்கு முன்னிட்ட இராட்சத வம்சத்துக்கு 'மகாவம்சம்' (Mahawanse) என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. சேரன் தீவு என்னும் பெயரானது கிறிஸ்துவுக்குப்பின்னிட்ட 9-வது நூற்றாண்டில் வழங்கியிருப்பதால், ஈழராஜாக்களுக்குப் பின்னிட்டுச் சேரன் குலத்தரசர்கள் இலங்கையிலரசாண்டிருக்கவேண்டுமென்றனுமானிக்கலாம். மற்றப்படி சேரன் தீவு என்று இலங்கைக்குப்பெயருண்டாகிறதற்குக் காரணமில்லை. சேரன் ஆதியில் இலங்கையிலிருந்து வந்தவனானதுபற்றி அப்பெயருண்டாயிருக்குமென்றெண்ணினாலோ, சேரசோழ பாண்டியர்களாகிய மூவரும் ஏககுலத்தவரானபடியால் சேரனை மாத்திரம் விசேடித்து அப்பெயர் கொடுக்கக் காரணமில்லை. ஆகையால் சேரன் ஓர் காலத்தில் அந்நாட்டைச் செயித்தரசாண்டிருக்கவேண்டுமென்றே அனுமானிக்க இடமுண்டாகிறது. சேரநாட்டில் தற்காலத்தில் காணப்படும் ஈழவர்கள் என்னும் ஈழராஜன் மரபினர் சேரன் இலங்கையைக் கைப்பற்றின பின்பு ஈழநாடென்னும் இலங்கையிலிருந்து சேரநாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட கைதிகளாக இருக்கவேண்டும். அவர்கள் இலங்கையிலிருந்து வந்தவர்கள் என்று அங்கிலேய வித்துவான்கள் கண்டெழுதியிருக்கிறார்கள். ஈழராஜன் கிறிஸ்துவுக்கு முன்னிட்ட மூன்றாவது நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றினவனானபடியாலும், ஈழநாட்டுக்குச் சேரன் தீவு என்னும் பெயர் அதற்குச் சுமார் 11 நூற்றாண்டுக்குப் பின்னிட்டு சொல்லப்பட்டிருப்பதாலும், ஈழராஜாக்களுடைய வல்லமை குன்றியகாலத்தில் சேரன் அவர்களைச்செயித்துக் கைதிகளாக்கியிருக்கலாம். ஈழவர்கள் சூரியகுலத்துச்சோழன் பரம்பரையில் தோன்றிய ஈழராஜன் மரபினரானபடியால், அவர்கள் திருநெல்வேலி, மலையாளம் முதலான சீமைகளுக்குக் கைதிகளாகக் கொண்டுவரப்பட்டிருந்தாலும், அல்லது அவர்களாகவே குடியேறியிருந்தாலும், அவர்கள் சேரன் குலத்தவர்களல்ல. ஆகையால் சேரன் குலத்தவர்கள் தற்காலத்தில் யாரென்று பார்ப்போம்.

சேரசோழபாண்டியர்கள் முறையே அக்கினி, சூரிய, சந்திரகுலத்தவர்கள். இதற்குறிய ஆதாரமானது சென்னை இராஜதானி அரசாட்சிப்புஸ்தகம், 1-வது வாலியூம் 119- 125, 126-வது பக்கங்களில் பார்க்கலாம். அவை வருமாறு:—

"Native Authorities regarding the Paundy kingdom:—Introduction: The following are maxims from Tamul poetry. The principal town or metropolis of the Paundy country is Madura. The principal mountain is the great hill called Pothiya. The name of the king's horse is Kanavattam. The

chief rivers are the Tambravanny and Vaigavaty. The king's distinctive garland is made from flowers of the Veppa tree. The device of his banner is a fish. *His descent is from the lunar pedigree.*" (P. 119).

"Native Authorities regarding the *Chola kingdom.*—Introduction.—The following are maxims from Tamul poetry. The metropolis of the Chola country is Warriore. Its principal mountains are Colly and Nery. Its chief river is the Cauvery. The name of the king's horse is Coram ... ... His distinctive garland is the flower of the Antty tree. The device on his banner is a tiger. He is of the *solar pedigree.*" (P. 125).

"Native Authorities regarding the *Chera kingdom.*—Introduction.—The following are maxims from Tamul poetry. The metropolis of the Chera country is Tiroovaunausicalam; the name of the king's horse is Pandalam. The king's distinctive garland is the flower of the pinnay tree. The chief rivers are the Tamravanny and the Perny. The device on the king's banner is a bow. *He is of the Agnicoolam or fire-race.*" (Page 126).

இவ்வாதாரங்களில் பாண்டியன் சந்திரகுலமென்றும், சோழன் சூரிய குலமென்றும், சேரன் அக்கினிகுலமென்னும் தீக்குலம் என்றும் காணப்படுகிறது. சேரன் குலத்தவர்களாகிய தீக்குலத்தவர் யாரென்று பார்க்கவேண்டும். சேரனுக்கு வழங்கிய சேரன், கொங்கன், குட்டுவன், கோளன், பாளைவேந்தன், கொங்கர்கோன், குடநாடன், பெண்ணைநாடன் என்னும் பெயர்களால் அவன் அமுதகுலத்தவன் என்று தெரிவித்தோம். ஆகையால் சேரன் குலத்தாராகிய தீக்குலத்தவரும் அமுதகுலத்தவராகவேயிருக்கவேண்டும். சேரநாட்டில் தற்காலத்தில் காணப்படும் அமுதகுலத்தவரிருவர்:—1. ஈழவர், 2. தியர். ஈழவர் ஈழராஜன் மரபினர். ஆகையால் தியரே சேரன் குலத்தவர்களாகிய அமுதகுலத்தினர். எப்படியெனில் சேரன்

(1) அக்கினிகுலத்தவன் (Fire-race)

(2) அமுதகுலத்தவன் (Toddy-wallah)

(3) சான்றான் (The lea[illegible] caste; Sanan)

என்பதைக் கண்டோம். தியர் என்னும் [illegible] தெரிவிக்கும்படியாயிருக்கின்றது:—

1. தீ என்றால் நெருப்பு Fire, (அக்கினி); ஆகையால் தீயர் என்றால் தீக்குலத்தார், நெருப்புக்குலத்தவர், அக்கினிகுலத்தவர், Fire-race என்று பொருள்.

2. தீ என்றால் இனிமை, Sweetress, (சதுரகராதி); ஆகையால் தீயர் என்றால் இனியகுலத்தவர், Distillers of sweet juice அதாவது அமுதகுலத்தவர், Toddy-wallahs, என்று பொருள். இவர்கள் நாளது வரை அந்த தொழில் புரிந்துவருகிறார்கள்.

3. தீ என்றால் அறிவு, Learning. (சதுரகராதி); ஆகையால் தீயர் என்றால் அறிவுடையோர் (The learned caste) என்று பொருள். அறிவுடையோர் என்பது சான்றோர்குலப் பெயர்களிலொன்றென திவாகரம் கூறுகிறது. ஆகையால் தீயர் என்றால் சான்றார், Saurar என்றும் பொருள்.

தீயரை மலையாளநாட்டுச் சானார் என்று இன்னும் சொல்லி வருகிறதையும் அறிவோம். சென்னை அரசாட்சிப் புஸ்தகத்தின், 128-வது பக்கத்திலும் தீயருக்குச்சாணார் (சான்றார்) என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

> "Then an occupation of palm-cultivators
> called *Teeyar* or *Shaunaur* ensued."

ஆகையால் மலையாளம் ஜில்லாக்களிலிருக்கும் அமுதகுலத்தவர்களுக்குள் தீயர் என்னப்பட்ட ஜாதியாரே அக்கினிகுல சேரனுடைய மரபினர் என்றறிக. 1891 ஹு-ம் எடுத்த ஜனக்கணக்கில் 5,37,032 தீயர்களுண்டென்று கணக்கேற்பட்டிருக்கிறது.

B. க்ஷத்ரியகுலசோழராஜாக்கள்.

9. சிவபெருமானுக்கு வழங்கிய நாடனென்னும் பட்டப்பெயர் அக்கினிகுல சேரராஜாக்களுக்கும் வழங்கியிருக்கிறதென்று பார்த்தோம். ஆதித்தகுல சோழராஜாக்களும், சேர, பாண்டியர்களோடு கூடிய ஒரே சான்றோர் ஜாதியாதலால் அவர்களுக்கும் நாடன், நாடாளென்னும் பட்டப்பெயர்கள் வழங்கியதற்கு ஆதாரம் கூறுவோம்.

சேந்தன் திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 22-வது சூத்திரத்தில் சோழன் பட்டப்பெயர்கள் கூறியிருக்கின்றன:—

கோச்சோழன் பெயர்.

சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
பொன்னித் துறைவன் புலிக்கொடிப்புரவலன்
ஆத்தார்க்கோ னேரிறையபயன்
சேரிவெற்பன் கோழிவேந்தன்
குலியன் புனனாடன் கோச்சோழன்பெயரே.

இக்கவியில் புனனாடன் என்னும் பெயர் சோழனுக்குக் கூறப்பட்டிருக்கிறது.

புனனாடன் = புனல் + நாடன்
= நீர் + நாடான்
= நீர்வளம் பொருந்திய நாட்டையுடையவன்
என்று பொருள்படுகிறது.

திருக்கோவலூர் தெய்வீகராஜன் கலியாணத்துக்கு ஔவையார் சேரசோழ பாண்டியராஜாக்களுக்கு ஓலையனுப்பிய கவிகளை முன்னே எடுத்துரைத்தோம். அவற்றிலொன்றைத் திரும்பவும் பெயர்த்தெழுதுவோம்.

புகார்மன்னன் பொன்னிப்புனலுடன் சோழன்
தகாதென்று தானங்கிருந்து—மகாதே
கடிதின்வருகக் கடிக்கோவலூர்க்கு
விடியப்பதினெட்டா நாள்.

இக்கவியில் சோழனுக்குப் பொன்னிப்புனலுடன் என்னும்பெயர் கூறப்பட்டிருக்கிறது. பொன் என்றால் அழகு, இலக்ஷுமி என்று பொருள்.

"பொன் பொருள் வனப்பிரும்பு பூமகள் வியாழனாம்பேர்"
(நிகண்டு).

ஆகையால் பொன்னி என்றால் பொன்னிறமானவன், அழகனென்றும், இலக்ஷுமி கடாட்சம் பெற்றவன், அதிர்ஷ்டசாலி என்றும் பொருள். பொன்னி என்றால் காவிரி நதிக்கும் பெயர். ஆகையால் சோழனுக்கு ஔவையார் கூறிய பொன்னிப்புனலுடன் என்னும் பெயருக்கு மூன்று தாற்பரியம் கூறலாம்:—

a. பொன்னிறமேனியனும் சீர்வளம் பொருந்திய நாட்டையுடையவனுமான நாடான்
b. இலக்ஷுமி கடாட்சம் பெற்றவனும் சீர்வளம் பொருந்திய நாட்டையுடையவனுமான நாடான்
c. காவிரி நதியின் ஜலத்துக்கதிபதியாகிய நாடான்

என்பவைகளே. இவற்றில் கடைசித் தாற்பரியமானது தற்காலத்தில் சான்றோர் குலத்தவர்களின் நிலங்களைப் பயிரிடும் கீழ்மக்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும்போது தங்கள் எஜமானர்களுடைய பெயர்களைச் சொல்வது மரியாதைக்குறைவென்றெண்ணித் தோப்புக்குச்சை நாடான், மேப்படிகுளச்சை நாடானென்று சொல்லும் வழக்கத்தையும், பெண்கொடுத்த மாமனும் மாமியும் தங்கள் மருமகனுடைய பெயரைச் சொல்வது மரியாதைக்குறைவென்றெண்ணி காயாம்புனல் நாடான், பனையப்பட்டி நாடானென்று அம்மருமக்களுடைய ஊர்ப்பெயரோடு பட்டப்பெயரையும் சேர்த்துச் சொல்வதையும், சிலசமயங்களில் தங்கள் மகனுடைய பெயரோடு நாடானென்னும் பெயரையும் சேர்த்துப் பொன்னம்மாள் நாடான், காமாக்ஷி நாடானென்று கூறுவதையும் ஒத்திருக்கிறது.

ஔவையார் வாக்கு.

கா[illegible]வழிநடக்கிறேன்
யான்வந்த தாரமெனிதன் று—கூனின்
கருத்தேனுக்கண்ணுறைந்த காவிரிநாடா
இருந்தேனுக்கெங்கேயிடம்.

இக்கவியில் சோழனுக்கு வழங்கியிருக்கிற பெயர் காவிரிசூழ்நாடான். நாடா என்பது நாடானென்பதின் விளிவேற்றுமை. சோழனுக்கு நாடனென்பது தான் பட்டப்பெயர் என்று கூறும் யாழ்ப்பாணத்தகராதியாசிரியர், ஔவையார் இக்கவியில் நாடானென்னும் பெயரைச்சோழனுக்கு வழங்கியிருக்கிறார் என்பதைக்கவனிக்கக்கடவர். சோழநாடானென்னும் பெயரும் வழங்கியதற்கு ஓர் திருஷ்டாந்தம் கூறுவோம்.

ஒட்டக்கூத்தன் கவி.

வெள்ளத்தடங்காச்சினவாளை வேலிக்கமுகின்மீதேறித்
துள்ளிமுகிலைக்கிழித்து மழைத்துளியோடிறங்குஞ்சோணாடா
கள்ளக்குறும்பர்குலமறுத்தகண்டா வண்டர்கோபாலா
பிள்ளைமதிகண்டெப்பேதை பெரியமதியுமிழந்தாளே.

இவ்விரண்டு கவிகளிலும் சோழனுக்கு

(a) காவிரிசூழ்நாடான்

(b) சோணாடான்

என்னும் பெயர்கள் விளிவேற்றுமையில் வழங்கியிருக்கிறது. ஒன்றுக்குக் காவேரியாற்றுப்பாய்ச்சல் பூமியையுடைய நாடான் என்று பொருள். மற்றதற்கு இரண்டருத்தம் கூறலாம்.

சோணாடான் = சோழம் + நாடான்
= சோழதேசம் + நாடான்
= சோழதேசத்து நாடான் என்றும்,

சோணாடான் = சோணம் + நாடான்
= சிவப்பு + நாடான்
= செந்நிறமேனியனான நாடான்

என்னும் பொருள் கூறலாம். இவ்விரண்டும் சோழனுக்குப்பொருந்திய பெயர்கள் தான். சோணாடானென்பதின் இரண்டாவது தாற்பரியம் பொன்னிப்புனனாடனென்பதின் முதலாவது தாற்பரியத்தை ஒத்திருக்கிறது.

சோணாடானென்னும் பெயருக்கு ஆதாரமாக நாம் கூறிய ஒட்டக்கூத்தன் கவியில் சோழனுக்கு நாடானென்னும் குலவிளக்கப்பெயரோடு வண்டர்கோபாலன் என்னும் பெயரும் வழங்கியதாகப்பார்க்கிறோம். வண்டர் என்பது சான்றோர்க்கு ஒருபெயரென விளக்கிக்காட்டினோம் [illegible] பக்கம் பார்க்க. ஆகையால் சோழனுக்கு வழங்கிய வண்டர்கோபாலனென்னும் பெயருக்கு

வண்டர்கோபாலன் = வண்டர் + கோபாலன்
= சான்றோர் + கிருஷ்ணமூர்த்தி
= சான்றோர்குலக்கிருஷ்ணமூர்த்தி போன்றவன் என்றும்,

அண்டர்கோபாலன் = அண்டர் + கோ + பாலன்
= சான்றோர் + ராஜன் + புத்திரன்
= சான்றோர்குல ராஜபுத்திரன் என்றும்,

அண்டர்கோபாலன் = அண்டர் + கோ + பாலன்
= சான்றோர் + ராஜன் + அமிர்தநாதன்
(பாலி—ப.நி.[illegible])
= சான்றோர்குல ராஜனாகிய அமிர்தகுலத்தவன்

என்றும் பொருள் கொள்ளக்கூடியதாயிருக்கிறது.

காவிரிநாடான் என்னும் பெயர் சோழனுக்கு வழங்கியதைப்பார்த்தோம். காவிரிநாடன் என்னும் பெயரும் வழங்கினதைப்பார்க்கலாம்.

திருவாதவூரர் புராணம், புத்தரைவாதில்வென்ற சருக்கம்,
92-வது கவி.

பொய்யிலாவருளையரும்புவி யூருளார்களுமுன்புசேர்
மையலாகியவேடமின்றிவ யங்குநீறணிவார்களும்
துய்யகாவிரிநாடனுந்துக டருமீழர்தமன்னனுந்
செய்யமாமணிமன்றுளார்திரு முன்புசென்றுவணங்கினர்.

திருவிளையாடற் புராணம், சோழனை மடுவில் வீட்டியபடலம்,
10-வது கவி.

காவிரிநாடன் சேனைக்கடலினை வெரிபோன்மூண்டு
மேவினனென்றுகூறி மீனவன்வேண்டவாவிற்
பூவிரிவாகையீயே புனைகநாம்பொருதுமென்று
காவிரியாதம்பற்ற நாயகன்கூறக்கேட்டான்

இக்கவிகளில் சோழனுக்குக் காவிரிநாடனென்னும் பெயர் வழங்கியதைப்பார்க்கிறோம். அதற்கு காவிரி நதியையுடைய நாடனென்று பொருள்.

ஔவையார் ‘காவிரிசூழ்நாடான்’ என்றதுபோல் ‘பொன்னிசூழ்வளநாடன்’ என்றும் சோழனைக்குறித்துச்சொல்லியிருக்கிறது.

திருவாதவூரர் புராணம், புத்தரைவாதில்வென்ற சருக்கம்,
89-வது கவி.

இன்னவாறருள்செய்து வாயின் [illegible]
பொன்னிசூழ்வளநாடனும் புவியூருளார் [illegible]
மன்னுசீர்புனை வாதவூரர் மகிழ்ந்து பரிசனைவணங்கியே
முன்னதாகவணங்கியேயவர் மூலைநீக்கி [illegible] கூடினார்.

இக்கவியில் சோழனுக்கு உபயோகப்படுத்திய “பொன்னிசூழ்வளநாடன்” என்னும் பெயருக்கு இரண்டு தாற்பரியம் கூறலாம்.

1. இலக்ஷ்மி கடாட்சம் சூழப்பெற்ற அழகிய நாடான், (பொன்னி-இலக்ஷ்மி; வளம்-அழகு) என்றும்

2 காவிரிநதி சூழ்ந்த பூமியையுடைய மாட்சிமை பொருந்திய நாடான் (பொன்னி-காவிரி; வளம்-மாட்சிமை)

என்றும் பொருள் கூறலாம். இவ்விரண்டும் சோழனுக்குப்பொருந்திய தாற்பரியங்களே.

திருவாதவூரர் புராணத்திலும் திருவிளையாடற் புராணத்திலும் சோழனுக்கு காவிரிநாடனென்னும் பெயர் வழங்கினதுபோல அதே புராணங்களில் அவனுக்குப் பொன்னிநாடன் என்னும் பெயரும் பற்பல இடங்களில் சொல்லியிருக்கிறது. அதற்கு

1. இலக்ஷ்மி கடாட்சம் பெற்றநாடான் என்றும்,
2. அழகிய நாடான் என்றும்,
3. காவிரிநதியையுடைய நாடான் என்றும் பொருள்.

அவற்றிற்கு திருஷ்டாந்தம் கூறுவோம்.

திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில்வென்ற சருக்கம்,

51-வது கவி.

வாதவூரண்ணலாரும் வண்புனற்பொன்னிநாடன்
நீதிலாமுகத்திலோடு நெற்றருட்பார்வைநல்கிப்
பேதையாமற்வில்லாமல் பித்தனைக்கடைப்புத்தற்
கேதியாமின்றுசொல்லு மென்றுபிரிதுடன்றர்.

95-வது கவி.

பொன்னிநாடனும் மூகைபுத்தமன்னனுமுன்புசேர்
மன்றிலினையில் வணங்கிநனிவார்களும்
முன்னநாகவிரைத்திஞான முதிர்ந்தகோவையைகன்றுபோய்
மின்னுமாமணிமாடமாளிகை தன்னிலன்புடன்மேவினார்.

திருவிளையாடற் புராணம், விடையிலச்சினையிட்டபடலம்,

18-வது கவி.

மண்ணின்வளர்க்குமைவயை வடகரையளவுதண்ணிப்
புண்ணியமீற்றுக்காப்புப் புண்டாறுதலிற்சாத்தி
யுண்ணிறைகருத்தக்கேற்ப வறுதினைபுலக்குண்டாகி
கண்ணுதவென்றுபொன்னி நாடனைவிடுத்துமீண்டு;

[illegible] புராணம், தண்ணீர்ப்பந்தல் வைத்தபடலம்,

[illegible]-வது கவி.

பொன்னிநாட [illegible] பொலம்புனை [illegible]
[illegible] தானுங்கல் [illegible]
[illegible] செய்வு [illegible]
[illegible]

இக்கவியில் பொன்னி நாடனென்பது காஞ்சிபுரத்திலரசாண்ட காடுவெட்டின சோழனைக்குறிக்கிறது; கன்னிநாடனென்பது மதுரையிலரசாட்சிசெய்த இராஜேந்திரபாண்டியனைக்குறிக்கிறது.

ஷை புராணம், வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியபடலம்;

15-வது கவி.

பொன்றேனுமுத்தங்கொழிக்குந் துறை | பொன்னிநாட
னின்றேனுடைமாற்ற வினைக்கெதிரூன்றியசேர்வா
யன்றேனுனக்குப்புறகிட் டகன்றேயொளியப்
பின்றேடிபெட்டிப் பிடிப்பாரிற்றுரத்துமெல்லை.

சோழராஜன் மரபில்தோன்றி ஆதியில் பைகுர் நாட்டிலரசாண்டு அதன்பின்பு இலங்கைத்தீவைக் கைப்பற்றின ஈழராஜனுக்கும் நாடனென்னும் சான்றோர்குலப்பட்டப்பெயர் வழங்கினதற்கு மேற்கோள் திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில்வென்ற சருக்கத்திலிருந்து கூறுவோம் :—

2-வது கவி.

நன்னுமாதிமாதவனடிக்கொளீழநாடனு
மன்னனாயிருந்தரசுடைந்து செய்திடத்தெழு
மென்னளிலாதகாலம்வாழி திருவம்மன்றமென்றுகூ
றுன்னளிலாவுமன்பினு ளுரைக்கவேதொடங்கினன்.

42-வது கவி.

ஈழவளநாடனுமெழுந்தடிபணிந்துதிறை யிட்டதுநறுங்கனியிருந்தவா
வாழிகவாழியெனநின்றபொழுதக்கவினை மன்னர்பெருமானுமகிழா
வேழமிசைவைகலவிவையில் லிவிட்டனிக்கென வியந்தருளிருத்தியவருள்
சூழிவைதங்குழுமியங்கயமிருந்தனர்கள் சூழ்ந்துகரிசொல்லுமயவோர்.

83-வது கவி.

அஞ்சிவஞ்சகர்நாவின்று மென்றபின்பவர்தாமெலாம்
நஞ்சருந்தினர்போலொடுங்கி மௌனமுற்றனைவருள்
செஞ்சகொன்றுமிழ்நாட னிறைத்திடுஞ்சிவஞானநா
லெஞ்சலின்றியசெல்வர்பாத மிறைஞ்சிநின்றிதுகூறினன்.

இக்கவிகளில் ஈழராஜனுக்கு வழங்கிய "ஈழநாடன்" என்னும்பெயருக்கு ஈழமென்னும் நாடாளென்றும், "ஈழவளநாடன்" என்னும்பெயருக்கு ஈழமென்னும் அழகிய நாடாளென்றும் பொருள் என்க. வளம்—அழகு (சதுரகராதி).

ஈழநாடனென்பதற்கு மேலே கூறிய மூன்று கவிகளிலுங்குறிப்பிடப்பட்ட [illegible] :—

இலவேட்டமூரான் [illegible] ஒருவன், காவேரிக்கரையின் சென்று வளர்ந்[illegible] ஈழநாடாகிய இலங்கையைப்பண்டு [illegible] லம் இருக்கிக்கேதாலும் சிதம்பரமென்னும் பொன்னம்பலம் வாழ்கவெ

எக்கூறியுலாவ, அதைக்கேள்வியுற்ற புத்தா சிலர் தமதரசனிடத்தில் கூற, ஈழநாடன் அத்தபசியைய வருவித்து நீர் கூறும் பொன்னம்பலமென்பது யாது அது தெரியக்கூறுமென, அத்தவசியானவர் சிதம்பரத்தின் மான்மியங்களை எடுத்துக்கூறும்போது, அங்கிருந்த புத்தகுரு கேட்டுச்சினங்கூர்ந்து அக்கோயிலைப்புத்தன் பள்ளியென வாதில்வென்று செய்வேனென்ன பௌத்த கூட்டங்களோடு கடல் தாண்டி சிதம்பரம் போனான். அதன்பின்பு ஈழநாடனும் ஊமையாயிருந்த தன் புத்திரியோடு சேனைகள் சூழச் சென்றுகூட்டியுள்ள சிதம்பரம் வந்துசேர்ந்து, சோழநாடனுக்குத் தான் கீழ்ப்பட்டவனானபடியால் முன் கட்டிய திறைபோகமீயானதை இப்போது கட்டி சோழனோடு ஆசனத்திலுட்கார்ந்திருந்தான். அப்போது புத்தருக்கும் தில்லைமூவாயிரர் பக்கத்தில் மாணிக்கவாசகருக்கும் தர்க்கமுண்டாகி புத்தர்கள் கூறிய வினாக்களுக்கு மாணிக்கவாசகர் விடைகூறி, சைவமதத்தை நிறுத்திய போது புத்தர்கள் எதிர் வசனங்கூறச்சக்தியற்றவர்களாய் ஊமையர்கள் போலிருந்தனர். அப்போது ஈழநாடன் மாணிக்கவாசகரை வணங்கி சுவாமி பேசத்தக்கவர்கள் ஊமையானார்கள், பேச்சில்லாத ஊமையாகிய என் புத்திரிக்கு ஊமை நீங்கி சில வார்த்தை பேசவைத்தால் நானும் சிவபக்தனாவேனென்று கூற, மாணிக்கவாசகர் அதற்கிசைந்து ஈழநாடன் மகளைப்பார்த்து

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ

என்று வினாவாகப்பாடி வினவ, ஈழநாடன் மகள் அதற்கு விடையாக

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ

என்றுசெய்யுள் தொடுத்துக்கூறினாள். அதன் பின்பு மாணிக்கவாசகர் அவளைப்பார்த்து

அருந்தவருக்காலின்கீழ் அறமுதலாநான்கினையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ

என்று கூற, ஈழநாடன் மகள்

அருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கை தெரியாகாண் சாழலோ

என்று இவ்வாறு விடையருளினபடியால் ஈழநாடன் மகிழ்ந்து விபூதிதரித்துச் சிவபக்தனானானென்பது திருவாதவூரர் புராண வரலாறு. இதைப்பற்றிய பின்வரும் கவிகள் திருவிளையாடற் புராணம், மண்சுமந்த படலத்திலிருந்தெடுக்கப்பட்டவை :—

109-வது கவி.

[illegible]
[illegible]
[illegible] தமிழ்வேந்தன் [illegible]
[illegible] புத்தரன்.

110-வது கவி.

யாவரேயாகவின்றிக் கென்மகண்மூங்கைதீர்த்தோ
ராவரேயென்மேருரென்று னுற்றவுமானம்பூண்டு
சாவதேயுறுதியென்பார் மணிமுதன்மூன்றுந்தங்க
டேவரேயென்றென்றுள்ளிச் செய்யவுந்தீராதாக.

111-வது கவி.

அந்தணர்பெருமான்முன்போ யரசன்றன்மகளைப்போகட்
டிக்கநோய்தீரே தீர்க்க வேண்டுமென்றிரந்தானையன்
சுந்தரநாதன்மன்று ளாடியதுணைத்தாட்ன்னைச்
சிந்தைசெய்தருட்கண்ணோக்காற் றிருந்திழையவளை நோக்கா.

112-வது கவி.

வேறுவேறிறைவன்சீர்த்தி விளவுரையாகப்பாடி
யீறிலானன்பர்கேட்ப விறைமொழிகொடுத்தமூங்கை
மாதிறன்வளவன்கன்னி மடவரல்வளவன்கண்டு
தேறினன்சிவனையெல்லாத் தேவர்க்குந்தேவனென்று.

இக்கவிகளில் ஈழநாடனுக்கு "ஆத்திக்கொங்கிவர் தாரான்" என்றும் "வளவன்" என்றும் சோழநாடனுடைய பெயர்கள் கூறியிருக்கிறது ஈழன் சோழராஜன் குலத்தவனான காரணத்தாலென்றறிக. சோழராஜன் பெயர்களைக்குறித்த திவாகர சூத்திரத்தில் "ஆர்த்தார்க்கோன்," "வளவன்" என்பவைகள் சோழன் பெயரெனக்கண்டிருக்கிறது. "ஆர்த்தார்" என்பது ஆத்திமாலையைக் குறிக்கிறது. ஈழன் சோழன் வம்சத்தில் தோன்றிய சூரியகுல அரசன். ஆகையால் சூரியகுல அரசர்களுக்கு நாடன், நாடானென்னும் சான்றோர்குலப் பட்டப்பெயர்கள் வழங்கிவந்திருக்கிறதென்றறிக.

சோழராஜாக்களுக்கு நாடவன என்னும் சான்றோர்குலப்பெயரும் வழங்கியதற்கு இரண்டொரு ஆதாரம் கூறி முடிப்போம்.

திருவிளையாடற் புராணம், கான்மாறியாடினபடலம்,

5-வது கவி.

பொன்னிநாடவன்வாயிலுள்ளாரொரு புலவன்வந்தலர்வேம்பின்
கன்னிநாடனைக்கண்டுமுன்பரவு வான்கனைகழற் சரிதாலெம்
மன்னவற்கறுபத்துநாற்கலைகளும் வருவ[illegible]
தென்னவ[illegible]

இக்கவியில் [illegible] பொன்னிநாடவனென்னும் பெயர் கூறியிருக்கிறது. அதற்குப் பொன்னிறமான நாடானென்றும், இல [illegible] நாடானென்றும், காவேரியாறுடைய நா [illegible] பொருள் கூறலாம்.

௸ புராணம், சோழனை மதிவிலிட்டிய படலம்,
12-வது கவி.

பண்ணுதலிசைவண்டார்க்கும் பசுந்தொடைச்செழியன்றனை
யெண்ணுதலிலவாஞ்சென்னி யிரும்பலடைக்கடனேராருய்
நண்ணுதலெனப்போய்ப்பொன்னி நாடவன்றமர்கட்கெல்லாங்
கண்ணுதலருளாலங்கோர் கடலெனத்தோன்றிற்றம்மா.

இக்கவியில் சுந்தரேசபாதசேகர பாண்டியன் காலத்திலிருந்த சோழனுக்குப் பொன்னிநாடவனெனும் பெயர் வழங்கியிருக்கிறது.

ஆகையால் சோழராஜாக்களுக்கு நாடவனென்னும் சான்றார்குலப் பட்டப்பெயரும் வழங்கியதாக அறிகிறோம்.

10. சூரியகுலத்தரசர்களாகிய சோழராஜாக்களுக்கு நாடன், நாடான் என்னும் சான்றார்குலப் பட்டப்பெயர்கள் வழங்கியதைப்பார்த்தோம். மேலும் சோழனுக்கு வழங்கிய அண்டர்கோபாலன் என்னும் பெயரையும் விளக்கிக்காட்டிச்சோழன் சான்றோர் குலத்தவனென்றுரைத்தோம். சோழன் சான்றோர் மரபினனென்று காட்டும்படிக்கான வேறுசில ஆதாரங்களையும் கூறுவோம்.

a. சதுரகராதியாசிரியரே சூரியகுலம் சான்றோர் குலமென்று தெரிவிக்கிறார். எப்படியெனில் அவ்வகராதியில்

"சான்றோன்—சூரியன்"
"சூரியன் —சோழன்"

என்று கண்டிருக்கிறது. அதாவது சோழன், சூரியன், சான்றோன், என்னும் மூன்று பெயர்களும் ஒருபொருட்கொண்ட மொழிகள். ஆகவே சோழன் குலமென்றாலும், சூரியகுலமென்றாலும், சான்றோர்குலமென்றாலும் ஒன்றே. ஆகையால் சோழ ராஜாக்கள் சான்றோரென்றறிக.

b. திவாகரமும் சான்றோனென்பது சூரியனைக் குறிக்கிறதென்றே விளம்புகிறது.

"தரணி செங்கதிரோன் சண்டன்
தபனனே ஒளியே சான்றோன்."

இச்சூத்திரத்தில் கண்டபெயர்களெல்லாம் சூரியனைக்குறிக்கிறதென்று [illegible]திகளெல்லாம் கூறுகின்றன. ஆகையால் சூரியகுலராஜாக்கள் [illegible]

c. [illegible]யாகிய [illegible] [illegible]யாசிரியரும் சூரியகுல அரச[illegible] சான்றோர் என்றெழுதியிருக்கிறார்:—

"[illegible]—The great, the learned, toddy-drawers as a caste."
"[illegible]—A learned man."
"சூரிய[illegible]—Literati."

சான்றார் என்றால் அறிஞர் என்றும், சூரியென்றால் அறிஞன் என்றும், சூரியர் என்றால் அறிஞர் என்றும் உவின்சுலோ ஆசிரியர் கூறுகிறபடியாலும் சூரியகுலத்தரசர் சான்றார் என்றறியலாம்.

ம். சூரியனுக்குச் சமஸ்கிரதத்தில் சாக்ஷியென்று சொல்லுவார்கள். சமஸ்கிரத நிகண்டாகிய அமரகோசத்தில்

"கர்மசாக்ஷி ஜெகச்சட்சுரம் ஸஹமாலீந்திரையூதனு:

என்றும், அலாயுத நிகண்டில்

"கர்மசாக்ஷீத் சாக்ஷிணக: துவாதஸாத்மா: திவாகர:"

என்றும், சூரியனுடைய பெயர்கள் கண்டிருப்பதாலறிக. உபமன்னியுரிஷி அருளிய பக்தவிலாசமாகிய பக்த மகாத்மியம், ஏனாதிநாதர் சரிதம், 3-வது சுலோகத்தில்,

"தஸ்மின்னேனாதி நாதாக்கிய ஆஸீத் சாக்ஷி குலோத்பவ:"

என்று கண்டிருக்கிறது. அதாவது ஏனாதிநாதர் சாக்ஷி குலத்திலுதித்தவர் என்று பொருள். ஆகையால் பக்தவிலாசத்தில் கூறிய ஏனாதிநாதர் சூரியகுலத்தைச்சேர்ந்தவர் என்றறிகிறோம். இந்த ஏனாதிநாதர் சரித்திரத்தை சமஸ்கிரதத்தில் உபமன்னியுரிஷி எழுதிய பிரகாரம், தமிழில் உமாபதி சிவாச்சாரியாரும் சேக்கிழாரும் எழுதிவைத்திருக்கிறார்கள். சிவாச்சாரியார் எழுதிய நூலுக்கு திருத்தொண்டர்புராணசாரம் என்றும், சேக்கிழார் செய்த நூலுக்கு பெரியபுராணம் என்றும் பெயர். உபமன்னியுரிஷி சமஸ்கிரதத்தில் சாக்ஷிகுலோத்பவ, அதாவது, சூரியகுலத்தவன் என்று சொன்ன இந்த ஏனாதிநாதனை உமாபதி சிவாச்சாரியாரும் சேக்கிழாரும் சான்றார் குலத்தவர் என்கிறார்கள். அவற்றிற்கு மேற்கோள் வருமாறு:—

திருத்தொண்டர் புராணசாரம், ஏனாதிநாதநாயனார்புராணம்,

12-வது கவி.

ஈழக்குலச்சான்றோரெயினனூர்வா
ழேனாதிநாதனா ரிறைவனீற்றைத்
தாழத்தொழுமரபார்படைகளாற்றுந்
தன்மைபெறுவதிகூரன்சமரிற்றோற்று
வாழத்திருநீறுசாத்தக்கண்டுமருண்டார்
தெருண்டார்கைவாள்விடார்நேர்
வீழக்களிப்பார்போனின்றேயாக்கைக
விடுவித்துச்சிவனருள்[illegible]

ஈழக்குலச்சான்[illegible] எயினனூரில் வாழ்ந்தவருமாகிய ஏனாதிநாதநாயனார் சிவபெருமானுடைய விபூதியை தாழ்ந்து வணங்கும் [illegible] தியவரானதால் வாள் வித்தையில் அவருக்குச் சமமாகாத [illegible] ஏயவன் ஏனாதிநாதரோடு வாள்யுத்தம் செய்யும்போது தான் [illegible] உடம்பு முழுதும் [illegible]

டைய விபூதியணிந்து ஏனாதிநாதரோடு யுத்தத்துக்கு வரவே, ஏனாதி நாதரானவர் மருண்டு தெருண்டு தம்முடைய வாளைப்பிரயோகிக்காமல் ஆனந்தக்களிப்புற்றிருக்கும் நாயனாரை அதிசூரன் கொன்றானென்று பொருள்.

பெரியபுராணம், ஏனாதிநாதநாயனார் புராணம்,

2-வது கவி.

வேழக்கரும்பினொடு மென்கரும்புதண் வயலிற்
சூழக்கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக்குடிதழைத்து மன்னியவப்பொற்பதியில்
ஈழக்குலச்சான்றார் ஏனாதிநாதனார்.

ஆகையால் அறுபத்துமூன்று சிவபக்தர்களிலொருவராகிய ஏனாதி நாதநாயனார்

1. சூரியகுலத்தவர் என்றும்
2. சான்றார் குலத்தவரென்றும்
3. சோழநாட்டிலுள்ள எயினனூரில் வாழ்ந்தவரென்றும்
4. வாள் யுத்தத்தில் வல்லவரென்றும்

கண்டிருப்பதால், அவர் சூரியகுலமாகிய சோழராஜாக்கள் குலத்திலுதித்து வாள் வித்தையில் வல்லவரானவர் என்றறிகிறோம். இவ்வாறு சோழ நாட்டிலுள்ள சூரியகுலத்தரசர் மரபினருக்குச்சான்றாரென்னும் பெயர் வழங்கி வந்திருப்பதால் சூரிய வம்சத்தவராகிய சோழ ராஜாக்கள் சான்றார் குலத்தவா என்று பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. சோழராஜாக்கள் குலத்துக்கு ஈழக்குலம் என்னும் பெயர் மேலே சொல்லியிருப்பதைப் பின்னால் எடுத்துரைப்போம்.

௳. சோழராஜாக்கள் குலம் அண்டர்குலமென்றும், சான்றோர்குலமென்றும் பார்த்தோம். அவர்கள் குலத்துக்கு உயர்ந்தோர் குலமென்னும் பெயரும் வழங்கியிருக்கிறது.

திருத்தொண்டர்புராணசாரம், கோச்செங்கட்சோழநாயனார் புராணம்,

73-வது கவி.

வெண்ணாவலின் தக்கொளி நூற்பந்தர்செய்த
வியன்சிலம்பியது வழிர்தவெள்ளானைக்கை
புண்ணூடிக்கட்த்த வடவொழியச்சோழ
னுயர்குலத்தச்சுபி தவன் கமலைத்தோங்கும்
[illegible] வயிற்றில் வைகிச்செங்கட்
பெருமான் [illegible] பெருங்கோயில்பலவுங்
கண்ணூர்வித்துயர் தில்லை மறையவர்க்குமனையுள்
விளக்கமாக்கிப்பருள் வைக்கொண்டாரே.

இக்கவியில் சோழன்குலம் உயர்குலம் என்கிறார். உயர்குலம் என்றால் உயர்ந்தோர் குலம். உயர்ந்தோர் என்றால் சான்றோர்.

"சான்றோர் மிக்கோர் நல்லவர் மேலவர்
ஆய்ந்தோர் உயர்ந்தோர் ஆரியர் உலகு"

(திவாகரம்)

ஆகையால் சோழராஜாக்களுடைய குலம் சான்றோர் குலமென்றறிக.

11. சூரியகுலத்தரசர்களாகிய சோழராஜாக்கள் நாடாக்களென்றும், சான்றோர் என்றும் பார்த்தோம். இனிமேல் அவர்கள் அமுதகுலத்தவர்களென்று விளக்கிக்காட்டுவோம். சேரசோழ பாண்டியர்கள் என்னும் மூவேந்தரும் ஒரே குலத்தவரெனப்பார்த்தோம். அவர்களில் பாண்டியர்கள் குலத்தில் தோன்றிய சிவபெருமான் அமுதகுலத்தவரெனப்பார்த்தோம். சேர ராஜாக்களும் அமுதகுலத்தவரெனப் பார்த்தோம். ஆகையால் சோழராஜாக்களும் அமுதகுலத்தவரென்றனுமானிக்கலாம். ஆகிலும் அனுமானம் ஆதாரமாகாதபடியால், அனுமானத்துக்கனுசரணையாக ஆதாரம் கூறுவோம்.

சிவபெருமான் சான்றான் என்று கூறிய இடத்திலே தொண்டைமண்டலத்தின் அரசர்கள் விபரங் கூறிய சந்தர்ப்பத்தில் மைசூருக்குப் பூர்வத்தில் சோழம் என்னும் பெயர் வழங்கினதெனக் காட்டினோம், அதாவது ஒரு காலத்திலது சூரியகுலத்தரசர்களாகிய சோழராஜாக்கள் வசத்திலிருந்தது என்று இலங்கைத்தீவின் சரித்திரமெழுதிய டென்னன்று துரை எழுதியிருக்கிறார். சோழ வம்சத்தரசனாகிய ஏழன் அந்நாட்டிலிருந்து படையெடுத்துச்சென்று இலங்கைத்தீவைக்கைப்பற்றினன் என்று அந்த துரை சொல்லுகிறார். ஆகையால் சூரியகுலம் ஓர் காலத்தில் மைசூர் ராட்சியத்திலிருந்ததெனத் தெரிகிறது. இராமாயணத்திலும் சூரியகுலத்தரசர்கள் மைசூர நாட்டிலுள்ள கிஷ்கிந்தாபுரிக்கரசராயிருந்தார்கள் எனப்பார்க்கிறோம்.

அயோத்திமாநகரிலரசாட்சி செய்துவந்த சூரியகுல திலகனாகிய இராமருடைய சரித்திரம் வரையப்பட்டிருக்கும் இந்த இதிகாசத்தில் மைசூர் நாட்டிலுள்ள கிட்கிந்தாபுரிக்கரசனும், இராமருக்கனுசரணையாகத் தன் சேனைகளைக்கொடுத்துத் தானும் சென்று இராவணனைச் செயித்துச் சீதையை சிறை மீட்டு இராமருடன் அயோத்திவரை சென்று அவர் பட்டாபிஷேகம் செய்யப்பட்டதைப் பார்த்துத் திரும்பினவனுமாகிய சுக்கிரீவ மகாராஜனே, இராமரைப்போலவே சூரியமரபினன் என்று விளம்பியிருக்கிறது. இதற்கு இராமாயணத்திலிருந்து சில திருஷ்டாந்தம் கூறுவோம்:—

கம்பராமாயணம், உத்தரகாண்டம், [illegible]

86-வது கவி.

ஆண்டையினருக்கன் மைந்தனைப்கேள்விகைவகம்பால்
காண்டலுக்கெளியளாகு மென்றலுங்காலவற்றாழ
ஈண்டிணுமிருத்திபோவா யென்றனனென்றலோடும்
தூண்டிரண்டனையதோளான் பொருக்கெனவெழுந்துசொன்னான்.

இதன் கருத்து

சூரியபுத்திரனாகிய சுக்கிரீவன் இராமரைப்பார்த்து சிதையிருக்கு மிடமின்னதென்று இப்போது நாம் அறிந்திருப்பதால் காலதாமதம் செய்யக்கூடாது என்றான் என்பது பொருள். இங்கே சுக்கிரீவனை அருக்கன் மைந்தன் என்று சொல்லியிருப்பதால் சுக்கிரீவன் சூரியகுலத் தவன் என்றறியலாம்.

அருக்கன் = சூரியன், The Sun.
(Winslow)

ஷை காண்டம், ஷை படலம்,
52-வது கவி.

இப்புறத்திராமனு மிரவிசேயினை
ஒப்புறநோக்கிவக் துற்றதானையர்
தப்பறக்கண்டன மென்பரோதகா
தப்புறத்தென்பரோ வறைதியாலென்றான்.

இதன் கருத்து.

இங்கே கிட்கிந்தாபுரியிலிருந்த இராமர், சூரியபுத்திரனாகிய சுக்கிரீ வனைப்பார்த்து, இங்கே வந்திறங்கிய சேனாவீரர் சிதையைத் தாங்கள் வாஸ்தவத்தில் கண்டோமென்பார்களோ, அல்லது தாங்கள் பார்க்க வில்லை, அவள் அப்பாலிருக்கிறாள் என்பார்களோ சொல் என்றானென்று பொருள்.

இக்கவியில் சுக்கிரீவனுக்கு வழங்குகிறபெயர் இரவிசேய்.

இரவி = ஆதித்தன் ; The Sun
சேய் = மகன் ; Son } (Winslow)

ஷை காண்டம், ஷை படலம்,
44-வது கவி.

என்றவனுரைத்தபோ திரவிகாதலன்
வன்திறற்றிருமகன் வதனநோக்கியே
ஒன்றுனக்குணர்த்துவ துளதுவாலிசேய்
புன்றொழிற்செய்கைசேர் புணர்ப்பனல்லனால்.

இதன் கருத்து.

திருமகன் இவ்வார்த்தைகளைக் கூறிய காலையில் சூரிய புத்தி ரனாகிய சுக்கிரீவனை [illegible]னைப் பார்த்து உனக்குச்சொல்லவேண்டிய காரியமொன்றுண்டு, வாலி புத்திரனாகிய அங்கதன் அயோக்கியச் செய் கையுடையவனல்ல என்றான் என்பதாம்.

இங்கே சுக்கிரீவனை இரவிகாதலன் என்கிறது.

இரவி = ஆதித்தன் ; The Sun
காதலன் = மகன் ; Son } (Winslow)

ஷை காண்டம், திருவடி தொழுத படலம்,
29-வது கவி.

கார்வரையிருந்தனன் கதிரின்காதலன்
சீரியசொற்களிற் றெருட்டச்செங்கணான்
ஆருயிராயிர முடையனுமெனச்
சோர்தொறுஞ்சோர்தொறு முயிர்த்துத்தோன்றினான்.

இதன் கருத்து.

ரிஷியமுகபர்வதத்திலிருந்த சூரிய புத்திரனான சுக்கிரீவன் சிறந்த சொற்களால் ஆறுதல்படுத்த, இராமர் அரிய உயிர் ஆயிரமுடையவர் போல சோர்வடைவதும் உயிர் தேறுகிறதுமாகயிருந்தார் என்பதாம். சுக்கிரீவனுக்கு இங்கே சொல்லிய கதிரின்காதலன் என்னும்பெயருக்குச் சூரிய புத்திரன் (கதிர்-சூரியன் ; காதலன்—புத்திரன்) என்றேபொருள்.

ஷை காண்டம், ஷை படலம்,
28-வது கவி.

சேற்றிளமரைமலர்த் திருவைத்தேர்கெனக்
காற்றின்மாமகன்முதற் கவியின்சேனையை
நாற்றிசையருங்கினு மேவிநாயகற்
போற்றினனிருந்தனன் கதிரின்செம்மலே.

இதன் கருத்து.

திருமகளைப்போன்ற சீதையை ஆராய்ந்து தேடிக்கொண்டு வாருங்களென வாயுவின் புத்திரனாகிய அனுமார் முதலிய வானரக்கொடிச்சேனையைநான்கு திசைகளிலும் அனுப்பிவிட்டு சூரியபுத்திரனான சுக்கிரீவன் இராமரைத்தேற்றிக்கொண்டிருந்தான் என்பதாம்.

இங்கே சுக்கிரீவனைக் கதிரின்செம்மல் என்று சொல்லியிருக்கிறது.

கதிர் =சூரியன் ; The Sun } (Winslow)
செம்மல்=அரசன் ; King }

சூரியகுலத்தரசன் என்று பொருள்.

ஷை காண்டம், ஷை படலம்,
40-வது கவி.

எம்பலோடெழுந்துகின் றிரவிகான்முளை
பாம்பணையமலனை வணங்கி[illegible]
மேம்படகேற்பின வென்னு[illegible]
[illegible]

இதன் கருத்து.

[illegible] மகிழ்ச்சியோடெழுந்து இராமரை [illegible] மேம்பட்டவனென்னும் உண்மைக்கு [illegible] என்பதாம்.

இங்கே சுக்கிரீவனை இரவிகான்முனை என்று சொல்லியிருக்கிறது. இரவி—சூரியன் ; கான்முளை—புதல்வன் என்று பொருள்.

ஷை காண்டம், உருக்காட்டுப்படலம்,
28-வது கவி.

ஆயசொற்றலைமேற்கொண்ட வங்கையனன்னை நின்னைத்
தூயவன்பிரிந்தபின்புதேடிய துணைவன்முன்லைக்
காய்கதிர்ச்செல்வன்மைந்தன் கவிக்குலமனைத்துக்கெல்லாம்
நாடகன்சுக்கிரீவனென் றுளன்வையிற்றீர்ந்தான்.

இதன் கருத்து.

சீதை சொன்ன வசனங்களைக் கேட்ட அனுமார் தன் கைகளைக் கூப்பித்தாயே! உன்னை விட்டு இராமர் பிரிந்தபின்பு சம்பாதித்த சிநேகிதன் யாரென்றால் தொன்று தொட்டு கீர்த்தி பெற்றுள்ள சூரிய மரபினன், வானரக்கொடி வேந்தர்களுக்கு நாயகன், சுக்கிரீவன் என்பது அவன் பெயர், மகா யோக்கியன் என்றான்.

இங்கே சுக்கிரீவனைக் கதிர்ச்செல்வன் மைந்தன் என்கிறார்.

கதிர் =சூரியன் ; The Sun
செல்வன்=இராசகுமாரன், A prince } (Winslow)

ஆகையால் சுக்கிரீவமகாராஜன் சூரியகுலத்தரசன என்பதற்கைய மில்லை. இவன் மதுவனம் ஒன்று வைத்துப்பாதுகாத்து வந்தானென் றும், இவனுடைய சகோதரனாகிய வாலி அமுதமுற்பத்தி செய்தான் என்றும் இராமாயணம் கூறுகிறது. கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுத படலத்திலே, அனுமாரென்வர் இலங்கையில் சீதை சிறை வைக்கப்பட்டிருப்பதை யறிந்து மைசூர் நாட்டிலுள்ள கிஷ்கிந்தா நகருக்குத்திரும்பிவந்தபோது, அவரும் அவரைச்சேர்ந்த வீரர்களும்

“இந்திரன்வாலிக்கீந்த வின்சுவைமதுவின்கானம்”

என்னும் மதுவனத்தைபடைந்து அமுதுண்டு அவ்வனத்தை அழித் தார்களென்றும், அதனால் அவ்வனத்தைக்காத்துக்கொண்டிருந்த ததி முகனுக்கும் அனுமார் முதலானவர்களுக்கும் கலகம் நேரிட்டதென்றும் பார்க்கிறோம். ஷை மதுவனமானது சுரர்குல அரசனாகிய இந்திரனால் சுக்கிரீவன் தமையனான வாலிக்குக் கொடுக்கப்பட்டதென்று கண்டிருப்பதால் அது சுரர் தருவாகிய கற்பகமென்னும் பனைமரச்சோலை யென்றே அறியலாம். அதின் அமுதத்தைக்கம்பராமாயணத்தில்

“தேனமிர்தபிரசம்”

என்கிறார். தேன்கூட்டிலிருந்தொழுகும் தேனைப்போல் மதுரமான பிரசம் (பனையமுது) [illegible] பொருள். தேன் என்றாலும் தமிழில் பனையமுதைக் [illegible] ஆகையால் இந்திரனால் கொடுக்கப்பட்ட கற்பக விரு[illegible] சுக்கிரீவ[illegible] மதுவனமென்றும், அக்கற்பக மதுவான [illegible] பெருமாளுக்கு [illegible] வனத்தி அருமையான பான

மாயிருந்ததோ அதே பிரகாரம் சுக்கிரீவமகாராஜனுக்குமிருந்திருக்க வேண்டுமென்றுமனுமானிக்கலாம். இவ்வித அனுமானத்துக்கனுசரணை யாக சுக்கிரீவனுடைய தமையனான வாலி அழுதழுற்பத்தி செய்தான் என்று பார்க்கிறோம். அதன் விபரமெனது சுராசுரர்கள் சேர்ந்து அழுதழுற்பத்தி செய்ததைப் புராணிகர் எத்தன்மையாய் வர்ணித்திருக் கிறார்களோ அதே பிரகாரம் புராணங்களிலும் இராமாயணமென்னும் இதிகாசத்திலும் வர்ணிக்கப்பட்டிருப்பதால், வாலியிறக்கிய மதுவும் சுராசுரரிறக்கிய மதுவும் ஒன்றுதான் என்றறியலாம். தேவர்களோடு போர்செய்யச்சென்ற இராவணன் அவர்கள் ஏவலாலே வாலியோடு போர்செய்யக்கிட்கிந்தாபுரியை யடைந்து, வாலி எங்கேயென்று வினவ, அங்குள்ளவர் சிவபூசை செய்யக்கடலடைந்தான் என்று கூற, அதனைக் கேட்டு மேற்றிசைக்கடலில் வாலி சிவபூசை செய்வதைக்கண்டு அவன் பூசனைக்கிடையூறு செய்ய, அதனை நோக்கிய வாலியென்பவன் அவன் தேகத்தினின்றும் உதிரஞ்சிந்த வாலாலிறுகக்கட்டி எட்டுத்திக்கிலும் பாய்ந்தனனென்பதும், பல இடங்களிலும் வாலி யுலாவிவருங்கால் அமு தெழக்கடல் கடையும் தேவர்களும் அசுரர்களும் இளைத்து நின்றபோது அங்குவந்த வாலியை நோக்கி, நீ கடைந்து அமுது உதவவேண்டுமெ ன்று சொல்ல, வாலி கடைந்தமுதெடுத்தானென்பதும் புராண வர லாறுகள். இது விஷயமாய் இராமாயணத்தில வரும்செய்யுளாவது:—

இராமாயணம், சுந்தரகாண்டம், ஊர்க்காட்டுப்படலம்,

30-வது கவி.

மற்றவன் முன்னோனைக்கா ளிராவணன்வலிதன் வாலின்
இற்றுகக்கட்டிமெட்டுத் திசையினுமெழுந்துபாய்ந்த
வெற்றியன்றேவர்வேண்ட வேலையைவிலங்கன்மத்தில்
சுற்றியநாகந்தேய வமுதெழக்கடைந்ததோளான்

இவ்வாறு அழுதழுற்பத்தி செய்த வாலியின் குமாரனாகிய அங்கதனைச் சான்றோன் என்று இராமாயணம் கூறுகிறபடியால், சான்றோர்குலத்த வர்கள் தற்காலத்தில் செய்துவரும் அழுதழுற்பத்தியையே வாலியும் செய்தான் என்றறிக.

ஷை காண்டம், திருவடிதொழுத படலம்,

19-வது கவி.

கோட்டமைப்பவரேயம் மதவெங்கேசரிகுழத்தார்
காட்டியெரன்னெழுந்தான[illegible] வாலிசேய்புதலைகர[illegible]
[illegible] வக்கதேயவுள்ளல்
[illegible]

[illegible] சொல்லாற் கண்டிருக்கிறது. வாலி [illegible] அங்கதன். கற்றோர் [illegible] (The learned) [illegible] பொருள், அறிவுடை யோர் என்பது [illegible] றெனத்திவாகரம் கூறு

கிறது. ஆகையால் வாலிசேய் முதலகற்றோர் என்றால் அங்கதன் முதலான சான்றோர் என்று பொருள்.

கூர்மபுராணத்திலும் வானரர் சான்றோர் என்று விளம்பியிருக்கிறது.

கூர்மபுராணம், இராவணவதையத்தியாயம்,

22-வது கவி.

மான்றேரழிந்ததிற லிந்திரசித்துவானின்
மீண்றேய்படலத்தின் மறைந்துவெகுண்டுநோக்கிச
சான்றோர்புகழுந்தனி விற்கைத்தலைவர்தம்மே
லான்றோய்பகுவாயரவக் கணையுந்தியார்த்தான்.

இக்கவியில் இராவணனுடைய குமாரனாகிய இந்திரசித்து என்னும் மேகநாதனுடன் போர்புரிந்த அங்கதன் முதலிய வானர வீரர்களைச்

சான்றோர்புகழந்தனிவிற்கைத்தலைவர்

அதாவது, சான்றோருள் புகழ்ச்சிபெற்ற ஒப்பற்ற வில் வீரர் என்று கண்டிருப்பதாலும் வானரர் சான்றோர் குலத்தவர்களென்றறியலாம். ஆகவே வாலியின் குமாரனாகிய அங்கதன் சான்றோன் என்று இராமாயணமும் கூர்மபுராணமும் கூறுகிறபடியால், அவனுடைய தகப்பனாகிய வாலியென்பவன் செய்த அமுதமுற்பத்தியானது நாளதுவரை சான்றோர் குலத்தவர்கள் செய்துவரும் அமுதமுற்பத்தியேயன்றி வேறல்ல. இந்த சுக்கிரீவன் அரசாண்டு வந்த அதே மைசூர் ராட்சியத்தில், கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் கடம்பராஜாக்களிருந்தார்களெனச் சரித்திரங்கள் கூறுகின்றன. அந்தக்கடம்பராஜாக்களுடைய கொடியும் வானரக்கொடியென்று பார்க்கிறோம். (Page 137 of the Manual of the Administration of the Madras Presidency). அவர்களுக்குச்சான்றார் என்னும் பெயர் வழங்கினதாகவும் ரைஸ் துரை மைசூர் சாசனங்கள் என்னும் புஸ்தகத்தில் வரைந்திருக்கிறார். இவர்கள் அமுதமுற்பத்திசெய்யும் குலத்தவர்கள் என்றும் ஸ்டூவர்டுதுரை சனசங்கை ரிப்போர்ட்டில் கூறியதை 233-வது பக்கத்தில் எடுத்துரைத்தோம். ஆகையால் சுக்கிரீவமகாராஜன் அரசாண்ட அதேயிடத்தில் கடம்பராஜாக்களரசாட்சிபிற்காலத்திற்செய்தார்களென்றும், சுக்கிரீவனுக்கிருந்த குரங்குக்கொடியேஅவர்களுக்கும் இராஜவிருதுக்கொடியாயிருந்ததென்றும், சுக்கிரீவன் குலத்தவர்கள் சான்றோர் என்று கம்பராமாயணம் கூறுகிறதினால் கடம்பராஜாக்களைச் சான்றோர் [illegible] துரை எழுதியிருக்கிறார் என்றும், சுக்கிரீவன் குலத்தவர்கள் அமுதமுற்பத்திசெய்யும் குலத்தவர்களென்றனுமானிக்கப்படுகிறதல்லால் கடம்பராஜாக்கள் குலத்தவர்களும் அமுதமுற்பத்தி[illegible] என்று [illegible] லப்படுகிறதென்றும் கண்டிருக்கிறோம் [illegible] லில் இராமாயணத்தில் சொல்லப்பட்ட [illegible] யின்னிட்டுக் கடம்பராஜாக்கள் என்னும் [illegible] றியலாம். எப்படியாயினும் [illegible] [illegible]

முற்பத்திசெய்யும் சான்றோர் குலத்தவன் என்பதற்கையமில்லை. ஆகையால் சூரியகுலத்தரசர்கள் அமுதமுற்பத்திசெய்யும் குலத்தவர்களெனப்பார்க்கிறோம்.

12. இரண்டாவது, சூரியகுலத்தவராகிய ஏனாதிநாதரைப்பற்றி,

"ஈழக்குலச்சான்ற ரெயினனூர்வா
  ழேனாதிநாதரிறைவனீற்றைத்
தாழத்தொழுமரபார் ... ..."

என்று திருத்தொண்டர்புராணசாரத்தில் சொல்லியிருப்பதை 331-வது பக்கத்தில் எடுத்துரைத்தோம். அதில் ஏனாதிநாதருடைய குலம்

ஈழக்குலம் என்றும்

இறைவனீற்றைத்தாழத்தொழு மரபு என்றும்

கண்டிருக்கிறது. ஈழக்குலமென்றால் அமுதமுற்பத்திசெய்யும் குலம் (ஈழம்—பனையமுது) என்று பொருள். சிவபெருமானுடைய திருவிய சுண்ணமும் ஆதியில் அமுதமுற்பத்திக்காகவே கண்டு பிடிக்கப்பட்டதென்று விளக்கிக்காட்டியிருக்கிறோம். ஆகையால் சூரியகுலத்தவராகிய ஏனாதிநாதர் என்னும் சான்றாருடைய குலம் அமுதமுற்பத்திசெய்யும் குலமென்றறிக. ஈழக்குலம் என்பதற்கு ஈழராஜன் குலம் என்றும் சொல்லலாம். ஈழன் என்றாலே அமுதகுலத்தவன் என்று பொருள்படுகிறபடியால் அவ்விதமாய் வைத்துக்கொண்டாலும் சரிதான். ஷெ ஈழராஜன் குலத்தவர்களுக்குத் தற்காலத்திலும் ஈழவர்கள் என்று பெயர். அவர்கள் நாளது வரை அமுதமுற்பத்தியே செய்து வருகிறார்கள். அவர்கள் மலையாளத்திலும் திருநெல்வேலி ஜில்லாவிலுமிருக்கிறார்கள். 1891 வருஷத்து ஜனசங்கை ரிப்போர்ட்டில் ஈழவன் என்றால் இலங்கைத் தீவான் என்று பொருள் என்று ஸ்டுவர்ட் துரை எழுதுகிறார். இலங்கைக்கு ஈழநாடு என்று பெயரானதால் இத்தாற்பரியமுண்டாயிற்று. ஈழவர் என்பதற்கு ஈழராஜன் மரபினர், அமுதகுலத்தவர்கள் என்றே பொருள். ஏனாதிநாதர் குலத்தை ஈழக்குலம் என்று சொல்லியிருப்பது போல ஈழராஜன் குலத்தை ஈழர்குலம் என்று கண்டிருக்கிறது.

திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில்வென்ற சருக்கம்,
92-வது கவி.

பொய்யிலாவருளையரும்புவி பூநளார்களுமுன்புசேர்
மையல [illegible] வென்றி வைத்த [illegible] ர்களும்
[illegible]
[illegible] திருவாளர் [illegible] னர்.

இவ்விதமிருக்க [illegible] "[illegible]" என்று விளம்பியிருப்பதால் [illegible] ஒரு [illegible] இலங்கையிலிருந்து திருநெல் [illegible] அக்குலத்தவர்களாகிய ஈழவர்

கள் தற்காலத்திலும் அமுதஉற்பத்தி செய்துகொண்டிருப்பதாலும், ஈழர் என்னும் பெயருக்கே அமுதகுலத்தவர் என்று மூலபொருளானபடியாலும், சூரியகுலத்தவர்களான எறுதிராதரும் ஈழநாடனும் அமுதகுலத்தவர்களென்றறியலாம். அமுதகுலத்தவர்களாகிய பாண்டியர்களுக்குத் தென்னர் என்றும், சேரன் குலத்தவர்களுக்குச் சேரர், கொங்கர் என்றும் குலவிளக்கப்பெயருண்டானதுபோல, சூரியகுலத்து ஈழராஜன் மரபினருக்கும் ஈழர் என்னும் அதே பொருட் கொண்ட குலவிளக்கப் பெயர் வழங்கி வந்திருக்கிறது.

ஆகையால் சூரியகுலத்திலுதித்த வானரர் என்னும் கடம்பராஜாக்களும், ஈழர் என்னும் இலங்கைமன்னரும் அமுதஉற்பத்திசெய்யும் குலத்தவர்கள் என்றறிக.

13. மூன்றாவது, பதினெண் புராணங்களில் முதல் புராணமாகிய பிரமபுராணத்தில், சூரியகுலபாண்டிய வம்சம் ஒன்றிருந்ததாகத் தெரிய வருகிறது. அப்புராணத்தின் பிரமோத்திர காண்டத்தில் சுராபாண்டியன் என்னும் சூரியகுலத்தரசன் மரபினர் சரித்திரம் வருகிறது. சுராபாண்டியனும் அவன் தம்பிமார் அறுபத்தாறு பாண்டியர்களும் தற்காலத்தில் வடகன்னடம் என்று சொல்லப்படும் ஜில்லாவிலுள்ள வட்டுக்கல் (Batculla) என்னும் சக்கரபுரிப்பட்டணத்தில் வாசஞ்செய்து, அதன் பக்கத்திலுள்ள ஒரிக்கல் பட்டணத்தில் செங்கோல் செலுத்திய அசுரனாகிய பிரதாபருத்திரனை ஜெயித்து, அவன் நாட்டைக் கைப்பற்றி, சுராபாண்டியன் தம்பிமாரில் முதல்வனாகிய மதுவீரபாண்டியனுக்கு மகுடஞ்சூட்டியபோது

> "சிம்மாசலகோடமன்னிய வர்த்தனபுரி சுராபாண்டீசுர ராசமன்னிய சத்திரியதுரீயவம்ச மதுகேச உக்கிரசேத்திரத்திற் பிறந்து, ரேணுகா பரஞ்சோதி புத்திரனாகிய சுராபாண்டீசுரர் தம்பியான மதுவீர பாண்டியருக்கு ஒரிக்கலு நகரமும் பிரதாபருத்திரனுடைய நாடு நகர்கள் சமஸ்தமுமளித்திருப்பதால், மதுவீரபாண்டியரே நாடாள்வார்"

என்று பறைசாற்றி விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட சுராபாண்டியனென்னும் அமிர்தபாண்டியன் ஒரிக்கல் பட்டணத்தில் மதுவீரபாண்டியனுக்குப் பட்டங்கட்டியபின் ரதபலாசூரனையும் அவனோடு சேர்ந்த அறுபத்தாறு [illegible] பட்டணங்களிலுள்ள அசுரர்களையும் ஜெயித்து, அவர்கள் நாடு நகரங்களைக் கைப்பற்றி, தன் தம்பிமாருக்குப் பட்டங்கட்டி அனுப்பிக்கொண்டுபோகும்போது கூறியகட்டியம்:

> "சிம்மாசலகோடமன்னியவர்த்தன சக்கரபுரிக்கு அரசனாகிய அமிர்தபாண்டிய விக்கிரம [illegible] சூரியகுல மன்னிய சத்திரிய [illegible] அரசசம் [illegible] தேவ [illegible] ரேணுகாபரபுத்திர [illegible] க்கரிக்கை"

என்பதாம். இங்கே எடுத்துரைத்த விளம்பரத்தையும் கட்டியத்தையும் கவனித்தால் சுராபாண்டியன் மரபினர்,

a. சூரியகுலத்தவர்கள் என்றும்
b. சத்திரியர் என்றும்
c. அமுதகுலத்தவர்கள் என்றும்

விளங்கும். அவர்கள் சூரியகுலத்தவர், சத்திரியர் என்னும் விவரம் ஷை புராணத்திலே கண்டிருப்பதால் அவற்றை நீக்கி அவர்கள் அமுதகுலத்தவர்கள் என்னும் விஷயம் மாத்திரம் பார்க்கலாம்.

அவர்களுக்கு வழங்கிய பொதுப்பெயர் பாண்டியர்கள் என்பதே. பாண்டியனென்னும் பெயருக்கு டாக்டர் மக்ளீன் துரை கூறிய அருத்தத்தை முன்னே சொல்லியிருக்கிறோம்:—

"பாண்டியனைப்போல, சேரன் என்னும் பதத்துக்கும், பூர்வதமிழில் பதிர் என்னும் பனையமுதென்று பொருள்,"

என்று கூறுகிறார். பாண்டியன் என்பது சரியான மூலபதம். பாண் + தீ + அன் = பனையமுது + இனிமை + அன் = பனையமுதுற்பத்தி செய்யும் இனியகுலத்தவனென்று பொருள். அவர்கள் அமுதகுலத்தவர்களான படியால் அவர்கள் பெயர்கள் அமுதசம்பந்தமாயிருக்கின்றன. திருஷ்டாந்தமாக சுரா பாண்டியன், அமிர்த பாண்டியன், மதுவீரபாண்டியன் என்பவைகளே. ஆகையால் மேற்றிசையிலரசாண்ட சூரியகுலபாண்டியர்களும் அமுதகுலத்தவர்களென்றறிக.

14. நான்காவது, சூரியகுலத்தரசர்கள் சான்றோர் என்று பார்த்தோம், சூரியகுலத்துமுதலரசனான சூரியமகாராஜனுக்கே சான்றானென்னும் பெயர் உண்டென்றும் பார்த்தோம், சான்றோனாகிய சூரியமகாராஜனுக்குப் பானு என்றும், அருக்கன் என்றும் பெயருண்டாகிறதற்குக் காரணமென்ன? சூரியனுக்கு இப்பெயர்களுண்டென்பதற்கு மேற்கோள்.

அருணாசலபுராணம், ஆதித்தசருக்கம்,

8-வது கவி.

குதிரையுங்கரிகளாகிக் கொடியதேரலகைத்தேராய்த்
கதிரையுத்தனதுபாகன் காலொனைவிழுந்தபானு
மதியழிந்திருக்கலாகத் [illegible]
கதிபெற [illegible]

10-வது கவி.

[illegible] பொன்மலைவல்லமாம்முன்னரு
[illegible] கத்திலைவலமாய்வந்தார்
வாதிக்குமொழி [illegible]
[illegible]

சூரியமகாராஜன் கெருவங்கொண்டு அருணாசலம் என்னும் திருவண்ணாமலையிலுள்ள சிவபெருமானை மதியாமல் தன் தேரை அம்மலைக்கு நேராக நடத்த, அம்மலையினின்றுண்டான வெப்பத்தால் சூரியமகாராஜனுடைய தேரும் அதில் பூட்டியிருந்த எழு குதிரைகளும் கரியாகி உருவழிய, சூரியமகாராஜனும் மதிகெட்டு என்னசெய்கிறதென்றறியாமல் திகைத்து நின்றபோது, பிரமன் அவனைப்பார்த்து அம்மலையை வலஞ்செய்து தொழும்படி சொன்னான், அப்படியேபிரமன் அனுக்கிரகப்படி சூரியன் அருணாசலத்தை வலமாக வந்து சிவபெருமானைத் தொழுது சிவபெருமானுடைய அருளைப்பெற்றுத் திரும்பினான் என்பது புராண வரலாறு. சூரியகுலத்தரசர்களிலொருவன் சிவமார்க்கத்தையிகழ்ந்ததைக்குறித்துக்கட்டிய புராணக்கதை. இதில் சூரியமகாராஜனுக்குப்பானு, அருக்கன் என்னும் பெயர்கள் வழங்கியதைப்பார்க்கிறோம். சதுரகராதியாசிரியரும்,

பானு = சூரியன்

அருக்கன் = சூரியன்

என்றே கூறுகிறார். இப்பெயர்கள் சூரியமகாராஜனுக்குண்டானதற்குக் காரணம் என்னவென்று, அப்பெயர்களின் மூலபொருளாலறியலாம். பானு என்னும் பதமானது பானம் என்னும் மூலபதத்திலிருந்தும், அருக்கன் என்பது அருகி என்னும் மூலபதத்திலிருந்தும் தோன்றிய பதங்கள். இம்மூலபதங்கள் இரண்டிற்கும் பொருள் ஒன்றே.

பானம் = பனையமுது,

அருகி = பனையமுது.

ஆதலால் சூரியமகாராஜனுக்கு வழங்கிய பானு, அருக்கனென்னும் பெயர்களுக்கு அமுதகுலத்தவன் என்று பொருள் என்றும், சூரியமகாராஜனாகிய சான்றோன் அமுதகுலத்தவனென்னுமறிக. அவன் அமுதகுலத்தவனாயிருந்ததால்தான் அவனுக்குச்சான்றோனென்னும் பெயருண்டாயிற்று. சூரியன் அமுதகுலத்தவனானபடியால் தான் அவன் குலத்தவர்களாகிய வானரர்கள் என்னும் மைசூரரசர்கள் கடம்பராஜாக்கள் (அதாவது மதுவிருட்சகுல அரசர்கள்) என்றும், இலங்கையரசர்கள் ஈழவர்களென்றும், மேற்றிசைப்பாலர் பாண்டியர்களென்றும், அமுதகுலசம்மந்தமான பெயர்கள் வைத்துக்கொண்டார்களென்றுமறிக.

15. ஐந்தாவது, தொண்டைமண்டலமென்னும் அமுதகுலத்தவர்கள் ஆதியில் ஆதியில குடியேறினவர்கள் சிவபெருமான் கூட்டத்தைச் சேர்ந்த அமிர்தகுலத்தை என்னும் பொருள்படும் தொண்டையர் மரபினராகிய முதுகுடிப்பிறந்தசான்றோர் என்று பார்த்தோம். அதற்குப் பின்பு சூரியகுலத்தில் தோன்றிய இக்ஷ்வாகுமகாராஜனுடைய [illegible] [illegible] ஒருவனாகிய [illegible] [illegible] என்பதும் பார்த்தோம். அவனும் அமுதகுலத்தவனே. எப்படியெனில் சூரியமகாராஜனே அமுதகுலத்தவன் [illegible] [illegible] [illegible] [illegible] அவன் [illegible] [illegible] [illegible] அமுதகுலத்தவன் [illegible]

தண்டனுடைய பிதாவுக்கு இக்ஷுவாகு என்று பெயரெனப்பார்த்தோம்; இக்ஷுவாகு என்னும் பெயருக்கே அழுதகுல அழகன் என்று பொருள் (இக்கு—பனையமுது. வாகு—அழகு). ஆகையால் சூரியகுலத்தரசனாகிய தண்டனும் அழுதகுலத்தவன் என்றறியலாம். தற்காலத்தில் தண்டன் என்னும் பட்டப்பெயரைத் தரித்திருப்பவர்களும் அழுதகுலத்தவர்களே. 1891-ம் வருஷத்தில் ஜனத்தொகை எடுத்தபோது 10,825 பெயர்கள் தண்டன் என்னும் பட்டப்பெயர் தரித்திருந்ததாகக்கண்டெழுதியிருக்கிறது. இவர்களைப்பற்றி ஸ்டூவாட் துரை பின்வருமாறு கூறுகிறார்.

> "526. In Calicut and Ernad *Tandan* is the title of the headman of the Tiyyan caste, but in Walluvanad and Palghat it is a distinct caste. The ceremonies observed by Tandans are, in general outline, the same as those of the southern Tiyyans, but the two do not intermarry, each claiming superiority over the other. There is a custom that prohibits the Tandan females of Walluvanad from crossing a channel which separates the Taluk from Mankara on the Palghat side."

கள்ளிக்கோட்டையிலும் ஏர்நாட்டிலும் தண்டன் என்பது தீயர் என்னும் ஜாதியாரின் தலைவர்களுடைய பட்டப்பெயரென்றும், வள்ளுவநாட்டிலே தண்டர்கள் பிரத்தியேகமான ஜாதியென்றும், தெற்கிலுள்ள தீயர் என்னும் ஜாதியாருடைய சடங்காசாரங்களும் வடக்கிலுள்ள தண்டர்களுடைய சடங்காசாரங்களும் பொதுவாய் ஒன்றுக்கொன்று ஒத்திருந்தபோதிலும் இருகுலத்தவரும் சம்பந்தங்கள் வைத்துக்கொள்ளுகிறதில்லையென்றும், ஒருவரைவிட ஒருவர் உயர்ந்தவர்களென்று இருதிறத்தாரும் சொல்லிக்கொள்ளுகிறார்களென்றும் ஸ்டூவாட்துரை எழுதியிருக்கிறார். இருதிறத்தாரும் அழுதகுலத்தவர்களாயிருந்தபோதிலும் தீயர் சேரன் குலமென்னும் அக்கினிகுலத்தவரானபடியாலும், தண்டர் தண்டன் என்னும் சூரியகுலத்தரசன் மரபினரானபடியாலும் பிரத்தியேக கோத்திரங்களாக நாளது வரையிலிருந்து வருகிறதைப்பார்க்கிறோம். ஆகையால் தொண்டைநாட்டிலரசாண்டு மாறியென்னும் அசுரனால் கொல்லப்பட்ட தண்டன் என்னும் சூரியகுலத்தரசன், இக்ஷுவாகுவின் குமாரனானபடியாலும், பானு அருக்கன் என்று பெயர்கொண்ட சூரியமகாராஜன் மரபினனானபடியாலும், அந்தத்தண்டன் என்னும் பட்டப்பெயரைத் தற்காலத்தில் அழுதகுலத்தவர்களே தரித்திருப்பதாலும், அவனும் அழுதகுலத்தவனென்று விளங்கும். [illegible] சேரனுடைய [illegible] [illegible] பற்றி முன்னெழுதினோம். [illegible] சூரியகுலசேரராஜன் [illegible] அழுதகுலத்தவன் [illegible] தண்டனும், சேரனும் [illegible]

கின்றது. இரணியவன்மனுடைய சகோதரன் இக்குவாகு. இக்குவாகு வின் நூறு புத்திரரில் தண்டன், குத்தன், நிமி என்பவர்கள் மூவர். நிமி பாம்பரையில் சீதாதேவியின் குலமாகிய மிதுலாபுரியரசர்கள் உதித்தார் கள். குத்தனென்னும் விகுச்சி பரம்பரையில் மாந்தாதா தோன்றினன். மாந்தாதாவின் மூத்த குமாரனாகிய பூருகூர்ச்சன் பரம்பரையில் இராமர் தோன்றினர் என்று அதே புராணம் கூறுகிறது; இளையகுமா ரனாகிய முசுகுந்தன் பரம்பரையில் சோழனுதித்தானென்று திருவாரூர் புராணம் கூறுகிறது. இவர்கள் குலவிளக்கத்தைப் பின் வருமாறு காட்டலாம்;—



தண்டன் அமுதகுலத்தவனென்று விவரித்தோம். ஆகையால் அவ னுடைய சகோதரனாகிய குத்தன் பரம்பரையிலுதித்த சோழனும் தொண்டைமானும் அமுதகுலத்தவர்கள் தான். தொண்டைமானென் னும் பெயருக்கே அமுதகுலமான் என்று பொருள். தொண்டையென் றால் தொண்டியைக்கொடுப்பது, தொண்டி—பனையமுது, ஆகையால் தொண்டையென்றால் பனை என்று பொருள். தொண்டைமானென்றால பனைமாக்குலமானென்று பொருள். ஆகையால் அவன் அமுதகுலத் தவனென்றறியலாம். அத்தொண்டைமண்டலத்தில் தற்காலத்திலும் கிராமணிகள் என்னும் சான்றோர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் பனைமரமே குலவிருட்சம்.

ஆகையால் சூரியகுலத்தில் உதித்த அரசர்களெல்லாம் அமுதகுலத் தவர்கள் என்றறிக. இராமரையும் சீதையையும் பற்றி பின்னால் பிரத்தி யேக அத்தியாயத்தில் பேசுவோம்.

16. ஆறாவது, சூரியகுலத்தரசர்கள் அழகுகுலத்தவர்கள் என்பதற்கு வேறோர் ஆதாரம் கூறுவோம். சூரியனுக்குச்சண்டன் என்றும் ஒரு பெயருண்டெனத்திவாகரம் கூறுகிறது.

"தரணி செங்கதிரோன் சண்டன்
தபனனே யொளியே சான்றோன்."

சூரியகுலத்திலுதித்த ரகுவின் மரபினருக்கு ராகவர் என்றும், ஜனகன் புத்திரியாகிய சிதைக்கு ஜானகி என்றும், சகரன் புத்திரருக்குச்சாகரர் என்றும் தத்திதாந்த நாமதங்களுண்டாகிறதுபோல, சண்டன் மரபினருக்குச் சாண்டிகள் என்று பெயர். சாண்டிகள் என்னும் சூரியகுலத்தவர்கள் தற்காலத்தில் கஞ்சம் ஜில்லாவிலிருக்கிறார்கள். டாக்டர்மக்ளின் துரை எழுதிய சென்னையமசூர் கைப்புஸ்தகம், 5-வது பக்கத்திலுள்ள சென்னைராஜதானிப்படத்தில் சமஸ்கிருத ஆதாரங்களில் சாகரர் எனப்பட்டவர்கள் கஞ்சம் ஜில்லாவிலிருந்ததாகக்கண்டிருக்கிறது. விஷ்ணு புராணத்தில் சாகரர் சூரியகுலத்தரசனாகிய சகரனுடைய புத்திரரென்று வாசிக்கிறோம். ஆகையால் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் சாகரர் ஒருவேளை தற்காலத்தில் காணப்படும் சாண்டிகளாயிருக்கலாம். அவர்கள் சகரன் புத்திரானபடியால் சாகரர் என்றும், சண்டனென்னும் சூரியன்மரபினரானபடியால் சாண்டிகளென்றுமழைக்கப்பட்டிருக்கலாம். எப்படியெனில் புராணத்தில் கூறிய சாகரரிருந்ததாகச்சொல்லப்படும் கஞ்சம் ஜில்லாவிலேயே சாண்டிகளை இப்போது பார்க்கிறோம்; இருவர் குலமும் சூரியகுலமென்று தெரிகிறது. ஆகையால் இருப்பிடமும் குலமும் ஒத்திருக்கிறபடியால் இவ்வாறு அனுமானிக்க இடமுண்டாகிறது. மேலும் புராணங்களில் சமுத்திரமானது சாகரரால் தோண்டப்பட்டதென்றும், அதனால் சமுத்திரத்துக்குச்சாகரம் என்று பெயருண்டாயிற்றென்றும் கூறியிருக்கிறது. இவ்விதமாய்ப்புராணிகர் கூறுகிறதற்கு மூலாதாரமான சத்தியம் யாதாவதொன்றிருந்திருக்கவேண்டும். இந்தியா ஒரு பெரிய தேசமாயிருந்தாலும் அதில் பெரிய ஏரிகள் மிச்சமாயில்லையென்று பார்க்கிறோம். ஆகையால் ஒருவேளை சமுத்திரக் கரையையடுத்ததாக ஒரு பெரியஏரியை இந்தச்சாகரர்கள் தோண்டிச் சமுத்திரத்தின் தண்ணீரையதில் விட்டிருக்கலாம். இது சாத்தியமேயன்றி அசாத்தியமன்று. சாகரர் பூமியாகிய கஞ்சம் ஜில்லாவுக்கருகில் அத்தன்மையான ஏரியொன்றிருக்கிறது. அந்த ஏரிக்குச் சிலுக்க ஏரியென்று பெயர் (Chilka lake). சிலுக்க ஏரியென்றால் துன்பம் விளைவித்த ஏரியென்று பொருள் (சிலுகு-துன்பம்). புராணத்திலும் [illegible] டிய சமுத்திரமானது அவர்களுக்குத் துன்பம் விளைவித்ததென்று [illegible] டிருக்கிறது. சாகரர் அதைத்தோண்டும் [illegible] கபிலரிஷியின் சாபத்தால் 60,000 சாகரர் [illegible] வாசிக்கிறோம். ஆகையால் கஞ்சம் ஜில்லாவிலிருக்கின்ற [illegible] சாகரர் [illegible] சூரியகுலத்து [illegible] சகரன் [illegible] சூரியகுலத்தவர்கள் [illegible], அவர்களிருந்த கஞ்சம் ஜில்லாவில் [illegible] சூரியகுலத்தோர்கள் என்றும் பெயருண்டாயிருக்கும் சாண்டி [illegible] புராணங்கள் கூறும்

சாகரர்கள் தற்காலத்திலிருக்கும் சாண்டிகளின் முற்பிதாக்களென்று மேசொல்லவேண்டும். சூரியகுல அரசர்களாகிய இந்த சாண்டிகள் தற்காலத்திலும் அமுதமுற்பத்தி செய்துகொண்டே வருகிறார்கள். அவர்களிருக்கும் நாட்டுக்கு அமுதநாடு (கஞ்சம்-பனையமுது) என்னும் பெயர் இன்னும் நிலைபெற்றிருக்கிறது. இதனாலும் சூரியகுலத்தரசர்கள் அமுதகுலத்தவர்களென்றறியலாம்.

சூரியகுலத்தவர்களாகிய சாண்டிகளைப் பற்றி 1891-ம் வருஷத்து ஜனசங்கை ரிப்போர்ட்டில் பின் வருமாறு ஸ்டூவர்ட் துரை வரைந்திருக்கிறார்.

"*The Sondis are toddy-drawers* and distillers of the *Ganjam* District. The tradition concerning their origin is interesting. In ancient times there was a Brahman famous for his magical attainments. The king of the country sent for him one day and asked him to cause the water in a tank to burn. The Brahman, being unable to do it, returned home uneasy in mind, and on the way met a distiller, who asked him to explain what troubled him. The Brahman having told his story, the distiller promised to cause the water to burn on condition that the Brahman would give him his daughter in marriage. To this the Brahman consented. The distiller then poured large quantities of liquor into the tank and set fire to it in the presence of the king. *The distiller accordingly married the Brahman's daughter* and their descendants are the Sondis of the present day. ... ...
They may eat flesh, but *the consumption of liquor is forbidden*, Their *usual title* is *Behara*. In the Sondi caste there is a curious custom which is usually held to confirm the story given above, that the wife will not eat fowls, or the remains of her husband's meal."

இதன் மொழி பெயர்ப்பு.

"கஞ்சம் ஜில்லாவில் அமுதமுற்பத்தி செய்கிறவர்களுக்குச் சாண்டிகள் என்று பெயர். அவர்களுற்பத்தியைப்பற்றிய ஐதிகம் மனோகரமானது. பூர்வத்தில் மாந்திரிகத் தொழிலில் வல்ல பிராமணன் ஒருவனிருந்தான். அந்த நாட்டரசனொரு தினத்தில் அவனை வரவழைத்து ஒரு குளத்திலுள்ள நீரை நெருப்புப்பற்றியெரியச் செய்விக்கக் கட்டளையிட்டான். பிராமணன் அதைச் செய்யத் தனக்குச் சக்தியில்லாமையால் மனவருத்தத்துடன் திரும்பி வருகிற வழியில், [illegible] ஒருவன் அவனைச் சந்தித்து, அவனை வருத்தப்படுத்தும் விஷயம் யாதென்று வினவ, பிராமணனும் [illegible] அறிவிக்க, அமுதகுலத்தவன் உன்மகளை

எனக்குக்கலியாணம் செய்து கொடுப்பாயாகில் நீரில் நெருப்புப்பற்றி பெரியச்செய்கிறேன் என்று வாக்களித்தான். பார்ப்பான் இதற்கு உடன்படவும், அமுதகுலத்தவன் அபரிமிதமான மதுவைக்குளத்தில் வார்த்து அரசனின் முன்னிலையில் நெருப்பைப்பற்றவைத்துப்பார்ப்பான் மகளைப்பாணிக்கிரகணஞ் செய்துகொண்டான். அவர்கள் குலத்தவர்களுக்குத்தற்காலத்தில் சாண்டிகளென்ற பெயர். ... ... அவர்கள் மாம்சமருந்துகிறதுண்டு, மதுவருந்துவதுகூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சாதாரணப் பட்டப்பெயர் பேகர். மேலே சொல்லிய விருத்தாந்தத்தை உறுதிப்படுத்தும் வழக்கமொன்று அவர்களுக்குள்ளிருந்து வருகிறது : சாண்டிப்பெண்கள் கோழிக்கறி முதலிய மாம்சத்தையாவது, தங்கள் பர்த்தாக்கள் சாப்பிட்டது போக மீந்ததையாவது அருந்துகிறதில்லை" என்பதாம்.

சாண்டிகளுக்கு வழங்குகிற பேகர் என்னும் பட்டப்பெயரும்அவர்கள் இராஜகுலத்தவரென்று காட்டுகிறது.

பேகன்—கடையெழு வள்ளலிலொருவன்

(சதுரகராதி)

வரையாது கொடுத்த அரசர்களிலொருவன் பேகன், என்று சதுரகராதியாசிரியர் கூறுவதால், பேகர் என்பது அரசகுலப்பெயரென்று விளங்குகிறது. சாண்டிகளென்னும் பெயரும் அவர்களைச் சூரியகுலத்தவர்களென்று காட்டுகிறது. சூரியகுலத்தரசர்களாகிய இவர்கள் பூர்வத்தில் பார்ப்பாத்திகளைச்சாதாரணமாய்ப்பாணிக்கிரகணஞ் செய்துவந்த காரணத்தால் மேலே கூறிய ஐதீகம் தற்காலம் வரை நிலைபெற்றிருக்கிறது. ஒருவன் பார்ப்பாத்தியைக் கலியாணம் செய்த காரணத்தால் ஒரு ஜாதியாரில் தலைமுறை தத்துவமாய்ப்பெண்கள் மாம்சமருந்தாது வருவதசாத்தியம். ஆகையால் சாண்டிகளென்னும் சூரியகுலத்தரசர்கள் சாதா[illegible]மாய்ப்பார்ப்பாத்திகளைப் பெண்டுகளாகச் சேர்த்துக்கொண்டு வந்[illegible]ளென்றே ஷை விருத்தாந்தம் ரூசுப்படுத்துகிறது.

[illegible]ண்டிகள் அமுதமுற்பத்திசெய்யும் குலத்தவர்களாயிருந்தும் மது[illegible]ருந்துகிறதி[illegible]லையென்று கூறிய விஷயமானது பாண்டியகுலத்தவர்களாகிய திருநெல்[illegible]வேலிஜில்லாவிலுள்ள சான்றோரைப்பற்றிக்கால்வேல் அத்தியக்ஷர் எழுதி[illegible]ருப்ப[illegible]ற்கு ஒத்திருக்கிறது :—

"அமுதமூற்பத்தி செய்யும் சான்றோர் [illegible] மதுபான [illegible] [illegible] இந்துக்களில் [illegible]களுக்குச் சாதாரணமான [illegible] இருந்தபோதிலும், ஒழுக்கத்தி[illegible] பிராமணர்களைப்போலவே சான்றோரும் அவ்வித பானத்தை [illegible] விலக்கியிருக்கிறார்கள்"

என்பதாகக் கால்வேல் அத்தியக்ஷர் விளம்புகிறார்.

இப்படிப்பட்ட சூரியகுலத்தவர்களாகிய சான[illegible] [illegible]

அமுதமுற்பத்தி செய்துவருவதால், சூரியகுலத்தரசர்கள் அமுதகுலத்தவர்கள் என்றறியலாம்.

17. ஏழாவது, சிவபெருமானுடைய குமாரனாகிய உக்கிரவருமபாண்டியன், மணவூரிலரசாண்ட சூரியகுல சோமசேகரன் மகளாகிய காந்திமதியை மணம் புரிந்தார் என்று பார்த்தோம். திருவிளையாடற்புராணம், வெள்ளை செண்டுகொடுத்தபடலம், 2-வது, 3-வது கவிகளாலுமறிக.

2-வது கவி.

வைகைக்கிழவன் றன்னருமைக்குமரன் றனக்குமணமபுலர்ச்சி
செய்யக்கருதுத் திறனேனுக்கி யற்குரோடும் இரண்டமைச்சு
மையற்றறிவாளலத்திருவு மரபுக்குடியும் புகழ்மையுமசம்
மையற்றிசையத்தக்கருலத் தரசர்யாரென்றளக்கின்றார்.

3-வது கவி.

நித்தமபுனல்சூழ் வடபுலத்துமணவூரென்னுந் திருநகர்க்கு
வேந்தன்பருதித்திருமரபின் விளங்குஞ் சோமசேகரனென்
றுயர்ந்தகேள்வி மன்னிடத்துத் திருமாதென்ன வவதரித்த
காந்திமதியையணங்கேச விருந்தாரத்தக்கனையிருள்வாய்.

சிவபெருமானுக்குச் சம்பந்தக்குடியாரான சூரியகுல சோமசேகரனுக்கு ஷை படலம், 12-வது கவியில் கூறியிருக்குமொரு பெயராலும் சூரியகுலத்தவர்கள் குலத்தொழில் விளங்கும்; அக்கவி வருமாறு:—

தென்றலன்றிருமகளைத் தேவர்பெருமான்மணம்புரிய
மன்றலமுகாலொரு நகரொப்பதிகயின்றி மதுரைநக
ரன்றுதானேதனக்கொப்ப தாகும்வண்ணமணியலங்க
ரின்றுதானேதனக்கதிக மென்னும்வண்ணமெழிலமைத்தார்.

தென்றல் நாடனாகிய சோமசேகரனுடைய மகளைத்தேவர் பெரு[illegible]கிய உக்கிரவருமபாண்டியன் மணம்செய்ய, மதுரை மாநகருக்கு [illegible] அதிகமும் வேறொரு நகருமில்லையென்று சொல்லும் மணம் [illegible] மைக்கலியாண அழகு செய்தார்கள், அத்தினத்தில் மதுரைதான் மு[illegible]னிருந்ததற்கு அதிகமான சிறப்பாய் விளங்கினதல்லாமல், அதற்கு மிஞ்சின அழகிய நகர் வேறொன்றுமில்லையென்று சொல்லும்படியாக அலங்கரித்தார்கள் என்று பொருள்.

இக்கவியில் சூரியகுல சோமசேகரனுக்கு தென்றல் நாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இதன் தாற்பரியம் என்னவென்று பார்ப்போம். தென்றல் என்னும் [illegible] இரண்டர்த்தம் கூறலாம். [illegible]

தென்றற்குடிக்கிறைவ [illegible]

[illegible] கீர்கள், [illegible] [illegible] 12-58.

இந்தத்தாற்பரியம் வைத்துக்கொண்டால் தென்றல் நாடனென்னும் பெயருக்கு நீர்வளமற்ற வறண்ட பூமியையுடைய நாடனென்று பொருள்படும். ஆனால் சூரியகுல சோமசேகரனுடைய பூமி அத்தன்மையதல்ல. எப்படியெனில் நாம் மேலே கூறிய கவிகளொன்றில் சோமசேகரன் பூமியாகிய மணலூரை

" நீர்தண்புனல்சூழ் வடபுலத்து மணலூர் "

என்று கண்டிருக்கிறது. அதற்கு இனிய, குளிர்ச்சிபொருந்திய, நீர் சூழப்பெற்ற, வடதிசையிலுள்ள மணலூர் என்று பொருள். ஆகையால் 3-வது கவியில் நீர் வளம் பொருந்திய பூமி என்று சொன்ன புராணிகர் 12-வது கவியில் அதே பூமியை நீர்வளமற்ற பூமி என்று தாம் சொன்னதையே மறுத்துச்சொல்லமாட்டார். ஆகையால் தென்றல் என்பது இவ்விடத்தில் காற்றைக்குறிக்காதென்றறியலாம்.

தென்றல் என்பது தென் + தல் என்று பிரிக்கக்கூடிய பதம்:—

தென் = தென்னைமரம்

தல் = பிதா

c. f. தல்லி—தாய் "

ஆகையால் தென்றல என்றால் அமுதகுல ஆண்டவனென்றும், தென்றல் நாடன் என்றால் அமுதகுல ஆண்டவனாகிய நாடனென்றும் பொருள் என்றறியலாம். இதனால் சூரியகுல சோமசேகரனும் அமுதகுலத்தவனென்று பார்க்கிறோம். மேலே நாம் எடுத்துக்கூறிய கவிகளொன்றில் சிவபெருமான் அறிஞர் என்னும் சான்றோரோடும் மந்திரிகளோடுங்கூடி தமது குலத்துக்கிசைந்த குலத்தரசர் யாவரென்று ஆராய்ச்சி செய்து மணலூர் சோமசேகரன் மகளை தம்முடைய புத்திரனுக்கு மணம்பேசலாமென்று தீர்மானித்தார் என்று கண்டிருப்பதால், சோமசேகரன் குலமும் சிவபெருமான் குலமும் ஒரே குலம், அதாவது, அமுதகுலமென்றறியலாம்.

ஆகவே சூரியகுலத்தரசர்களாகிய சுக்கிரீவன் முதலான கடம்ப ராஜாக்களும், ஈழன் முதலான ஈழவராஜாக்களும், சூரியகுல சாராயாண்டியன் வம்சத்தரசர்களும், சூரியகுல முதல்வனாகிய சூரியமகாராஜனும், சூரியகுல இக்ஷுவாகு வம்சத்துத் தண்டனும், தொண்டைமண்டலத் தொண்டைமான் சக்கரவர்த்தியும், சூரியகுலச்சகரன் மரபினராகிய சாண்டிகளும், சூரியகுலசோமசேகரனும் அமுதமுற்பத்தி செய்யும் குலத்தவர்களெனப்பார்த்தோம். ஆகையால் நாடன், நாடானென்னும் பட்டப்பெயர்களும், சான்றோர் என்னும் குலப்பெயருங்கொண்ட சூரிய குலத்தரசர்கள் அமுதகுலத்தவர்களென்றறிக.

[illegible]

13. [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] நாடர்கள் [illegible]

பார்த்தோம். சந்திரகுலத்தரசர்களும் அதே மரபினரானபடியால் அவர்களும் அக்குலத்தவர்களே. சந்திரகுலத்தரசனாகிய சிவபெருமானும் மலையத்துவசபாண்டியன் மகளாகிய தடாதகைப்பிராட்டியாரும் அமுதமுற்பத்தி செய்யும் சான்றோர் குலத்தவரென்று விஸ்தாரமாய் காம முன்னமே கூறியிருப்பதால், சந்திரகுலத்தரசர்களாகிய பாண்டியர்கள் குலத்தை விளக்கிக்காட்டும் இரண்டொரு குறிப்புகளை மாத்திரம் இவ்விடம் சுருக்கமாய் வரைவோம்.

சிவபெருமானும் அவருடைய மாமனாகிய மலையத்துவசபாண்டியனும், மலையத்துவசன் பிதாவாகிய குலசேகரபாண்டியனும் தென்னர் என்னும் அமுதகுலத்தவர்களென்னும் விபரம் 234-வது பக்கமுதல் 237-வது பக்கம் வரை கூறினோம். மற்றும் பாண்டியர்களும் தென்னர் குலத்தவர் தானென்பதற்குச்சில ஆதாரம் கூறுவோம். திருவிளையாடற் புராணத்தில் சொல்லப்பட்ட 73 பாண்டிய ராஜாக்களின் பெயர்களாவன :—

1. குலசேகர பாண்டியன்		2. மலையத்துவச பாண்டியன்	
3. தடாதகையும் அவள் பர்த்தாவான சோமசுந்தரபாண்டியனென்னும் சிவபெருமானும்		4. உக்கிரவரும	பாண்டியன்
5. வீர	பாண்டியன்	6. அபிடேக	,,
7. விக்கிரம	,,	8. இராஜசேகர	,,
9. குலோத்துங்க	,,	10. அனந்தகுண	,,
11. குலபூடண	,,	12. இராஜேந்திர	,,
13. இராஜேச	,,	14. இராஜகெம்பீர	,,
15. வம்மியதீப	,,	16. புரந்தரசித்து	,,
17. வம்மியபதாக	,,	18. சுந்தரேசபாதசேகர	,,
19. வரகுண	,,	20. இராஜராஜ	,,
21. சுகுண	,,	22. சித்திரவிரத	,,
23. சித்திரபூடண	,,	24. சித்திரத்துவச	,,
25. சித்திரவரும	,,	26. சித்திரசேன	,,
27. சித்திரவிக்கிரம	,,	28. இராஜமார்த்தாண்ட	,,
29. இராஜசூடாமணி	,,	30. இராஜசார்த்தூல	,,
31. துவிசராஜகுலோத்தம	,,	32. ஆயோதனப்பிரவீண	,,
33. இராஜகுஞ்சர	,,	34. இராஜப்பயங்கர	,,
35. [illegible]சேன	,,	36. மகாசேன	,,
37. சத்ருஞ்சய	,,	38. வீமரதர்மன்ன	,,
39. வீமபராக்கிரம	,,	40. பிரதாபமார்த்தாண்ட	,,
41. விக்கிரமகஞ்சுக	,,	42. சமரகோலாகல	,,
43. அதுலவிக்கிரம	,,	44. அதுலகீர்த்தி	,,
45. கீர்த்திபூடண	,,	46. [illegible]சேகர	,,
47. [illegible]சிந்தாமணித்தன்பக	,,	48. [illegible]தாபத்ர்சேன	,,

49. வங்கிபதுவச	பாண்டியன்	50. இரிபுமருத்தன	பாண்டியன்
51. சோழவங்கிசாந்தக	,,	52. சேரவங்கிசாந்தக	,,
53. பாண்டிவங்கிசேகர	,,	54. வங்கியச்சிரோமணி	,,
55. பாண்டீசுர	,,	56. குலத்துவச	,,
57. வங்கியவிபூடண	,,	58. சோமசூடாமணி	,,
59. குலசூடாமணி	,,	60. இராஜசூடாமணி	,,
61. பூபசூடாமணி	,,	62. குலேச	,,
63. அரிமர்த்தன	,,	64. ஜகநாத	,,
65. வீரவாகு	,,	66. விக்கிரம	,,
67. சுரபி	,,	68. குங்கும	,,
69. கர்ப்பூர	,,	70. காருணிய	,,
71. புருடோத்தம	,,	72. சத்துருசாதன	,,

73. கூன் பாண்டியன் என்னும் சுந்தரபாண்டியன்.

இவர்களுக்குப்பின்னிட்டராசாண்ட 41 பாண்டியர்களுடைய பெயர்கள் நெல்சன் துரையியற்றிய மதுரை ஜில்லா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அப்பெயர்களாவன:—

1. சோமசுந்தர	பாண்டியன்	2. கர்ப்பூரசுந்தர	பாண்டியன்
3. குமாரசேகர	,,	4. குமாரசுந்தர	,,
5. சுந்தரராஜ	,,	6. சண்முகராஜ	,,
7. மேருசுந்தர	,,	8. இந்திரவரும	,,
9. சந்திரகுலதீப	,,	10. மீனகேதன	,,
11. மீனத்துவச	,,	12. மகரத்துவச	,,
13. மார்த்தாண்ட	,,	14. குவலயானந்த	,,
15. குண்டல	,,	16. சத்துருபீக்கர	,,
17. சத்துருசங்கார	,,	18. வீரவரும	,,
19. வீரவாகு	,,	20. மகுடவர்த்தன	,,
21. வஜ்ஜிரசிங்க	,,	22. வருணகுலோத்துங்க	,,
23. அதிவீரராம	,,	24. குலவர்த்தன	,,
25. சோமசேகர	,,	26. சோமசுந்தர	,,
27. இராஜராஜ	,,	28. இராஜகுஞ்சர	,,
29. இராஜசேகர	,,	30. இராஜவரும	,,
31. இராமவரும	,,	32. வரதராஜ	,,
33. குமாரசிங்க	,,	34. வீரசேன	,,
35. [illegible]	,,	36. வீரகுஞ்ச	,,
37. குமாரசந்திர	,,	38. வரதுங்க	,,
39. சந்திரசேகர	,,	40. சோமசேகர	,,

41. பராக்கிரம பாண்டியன்.

இந்த பராக்கிரமபாண்டியனைச் சாலிவாகன சகாப்தம் 1246-ம் வருஷத் துக்குமேல் கொல்லமிழந்து 227 ஆண்டுக்கு மேல் ருதிரோத்காரி வருஷ ஆனிமீ டில்லியிலிருந்து வந்த [illegible]தான்மலுக்குசேபி என்னும் மகமதியன் ஜெயித்து, பராக்கிரம[illegible]யனை டில்லிக்குச் சிறையாக அனுப்பிவிட்டான். அதன்பின்[illegible]கோட்டை 48 வரு துலுக்கா ளாண்டு வந்தார்கள். அதன்பின்[illegible]ப்தம் 1293-க்கு மேல் செல் லாநின்ற விரோதிகிருதி வரு மைசூர் ராஜா வாசல் தளகர்த்தம் கம்பண உடையவர் கன்னடியர் வந்து துலுக்கரை வெட்டித் துரத்திப்போட்டு, பாண்டியராஜ்ய வம்சத்திலிருக்கிற பேரை விசாரித்து, சோமசேகர பாண்டியனுக்குப் பட்டங்கட்டிவைத்தார். சோமசேகரனிலிருந்து 15 தலைமுறைகளாகபாண்டியர்கள் மறுபடியும் அரசாட்சி செய்தார்கள். அவர்கள் பெயர்களாவன :—

1.	சோமசேகரபாண்டியன்	... ...	17—வரு
2.	சோமசுந்தரபாண்டியன்	... ...	35 „
3.	இராஜராஜபாண்டியன்	... ...	22 „
4.	இராஜகுஞ்சரபாண்டியன்	... ...	16 „
5.	இராஜசேகரபாண்டியன்	... ...	18 „
6.	இராமவருமபாண்டியன்	... ...	36 „
7.	வரதராஜபாண்டியன்	... ...	19 „
8.	குமாரசிங்கபாண்டியன்	... ...	16 „
9.	வீமசேனபாண்டியன்	... ...	40 „
10.	பிரதாபராஜபாண்டியன்	... ...	15 „
11.	வரகுணபாண்டியன்	... ...	27 „
12.	குமாரசந்திரபாண்டியன்	... ...	22 „
13.	வரதுங்கபாண்டியன்	... ...	8 „
14.	குலோத்துங்கபாண்டியன்	... ...	19 „
15.	சந்திரசேகரபாண்டியன்	... ...	35 „
			345 „

(Page 123 of the Manual of the Administration of the Madras Presidency.)

[illegible]ப்பட்ட சந்திரசேகரபாண்டியனை வீரசேகர சோழன் ஜெயித்து பாண்டிநாட்டைக் கைக்கொண்டபடியால், சந்திரசேகரன் தன் குமாரனோடு சென்று, விஜயநகரம் இராஜாவிடம் உதவிகோரி, [illegible] னையைக் கொண்டுவந்து, [illegible] ஜயித்து, [illegible] அரசாட்சிசெய்துகொண்டிருக்கும் [illegible] ஞானசம்பந்தனுடைய [illegible] [illegible] சாபமிக்குள்ளாயிற்று.

ஆகவே சிவபெருமானுடைய குலத்தவர்களாகிய 129 (73+41+15) பாண்டியராஜாக்களுடையபெயர்களைப்பார்த்தோம். முதலாவது அட்டவணையில் கூறிய கூன்பாண்டியனுக்குப்பின்பும், இரண்டாவது அட்டவணையில் கூறிய சோமசுந்தரபாண்டியனுக்கு முன்னும் அரசாண்ட அநேக பாண்டியராஜாக்களின் பெயர்கள் முதலாய் அகப்படவில்லை. ஆகிலும் இவர்களெல்லாரும் தென்னராகிய குலசேகரன், மலையத்துவசன், தடாதகை, சிவபெருமான் என்பவர்களின் மரபினராகையால், அவர்களும் அமுதகுலத்தவர்கள் தான். சிவபெருமானுக்குப்பின்னிட்டரசாண்ட பாண்டியராஜாக்களுக்குத்தென்னர் என்னும் பெயர் வழங்கியதற்குத் திருவிளையாடற் புராணத்திலிருந்துதிருஷ்டாந்தம் கூறுவாம்.

நான்காவது பாண்டியனாகிய உக்கிரவருமனுக்குத் தென்னர்கோமகன், அதாவது, தென்னர்குல இராஜபுத்திரன் என்னும் பெயர் வேல்வளை செண்டுகொடுத்தபடலம், 66-வது கவியில் வழங்கியிருக்கிறது.

> பின்னருக்கிரப் பெயர்தரித்தவத்
> தென்னர்கோமகன் றெய்வநான்மறை
> மன்னுநல்லறம் வளரவையகந்
> தன்னதாணையாற் றுங்கவைகினான்.

ஐந்தாவது பாண்டியனாகிய வீரபாண்டியனுக்கும் இதே பெயர் கொடுத்திருக்கிறது. அவன் புலியால் கொல்லப்பட்டிறந்த பின்பு அவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளை அவன் குமாரனாகிய அபிடேகபாண்டியனைக்கொண்டு செய்து முடித்தார்கள் என்று கூறிய இடத்தில், வீரபாண்டியனுக்குத் தென்னர்கோமகன் என்னும் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. மாணிக்கம் விற்றபடலம், 8-வது கவி.

> மன்னனுணையா ரொருழுகியமந்திரக்கிழவர்
> மின்னுவேலினங் குமரனைக்கொண்டு விண்ணடைந்த
> தென்னர்கோமகற்கிறுதியிற் செய்வினைதிரப்பி
> யன்னகாதலற் கணிமுடிசூட்டுவானமைந்தார்.

ஆறாவது பாண்டியனாகிய அபிடேகபாண்டியனுக்குந் தென்னனென்னும் பெயர் வந்திருக்கிறது, மாணிக்கம் விற்றபடலம், 92-வது கவி.

> போர்மகட்குறையுளான புயத்தபிடேகத்தென்னன்
> றேர்முதற்கருவித்தர்லைத் தெவ்வர்நின்முடியெலாந்தன்
> வார்கழற்கமலஞ்சூட நனுமுறைப்ப பங்கழ்க்கருந்
> காரெனக்கருணைபெய்து வையகங்காக்குநாளில்.

ஒன்பதாவது பாண்டியனாகிய குலோத்துங்கனுக்குந் தென்னனென்னும் பெயர் பழியஞ்சினபடலம், 1-வது கவியில் கூறியிருக்கிறது.

> சீரிலான்செத்தியனைப் புக்களிப்பவுளுமிவன் றண்
> காரியா டகத்தி லன்றிச் சீர்வரம்பினதாமேகங்கை
> [illegible] நேரகும்பழியஞ்சித்தென்னன்
> [illegible] திருவிளையாடல்சொல்வாம்.

பதினோராவது பாண்டியனாகிய குலபூடணபாண்டியனைத் தென்னர் பிரான், தென்னவர்கோன் என்பதாக மெய்க்காட்டிட்டபடலம், 4-வது, 6-வது கவிகளில் கண்டிருக்கிறது.

4-வது கவி.

வல்வேடர்க்கதிபதியாய் வருசேதிராயனெனும்
வில்வேடனொருவனவன் விறல்வலியான்மேவிட்டுப்
பல்வேறுபரிமான்றேர்ப் பஞ்சவன்மேற்படையெடுத்துச்
செல்வெனென்றுறவலித்தான் றென்னர்பிரானஃதறிந்தான்.

6-வது கவி.

தென்னவர்கோன்பணித்தபணி பின்றள்ளச்சிந்தையிலன்
புன்னவரானருள்வந்து முன்னீர்ப்பவொல்லேபோய்ப்
பொன்னறைதாழ்திறந்தறத்தா றீட்டியபெம்பொற்குவையுட்
டனவுதளத்தவாவமையத் தக்கநிதிகைக்கவரா.

பனிரண்டாவது பாண்டியனாகிய இராஜேந்திர பாண்டியனைத் தண்ணீர்ப்பந்தல் வைத்தபடலம், 1-வது கவியில் தென்னனென்று கண்டிருக்கிறது.

சம்புமதுரைப்பரனிரவு தனியேவந்துதனைப்பணிந்த
வெம்புகதிரோன்மருமானை விடுத்துமீண்டுதாழிறுக்கி
யம்பொற்கதவின்விடைபொறித்த தறைந்துந்தென்னனடுபடைக்கு
வம்புமலர்த்தோய்புனற்பந்தர் வைத்துக்காத்தவகைசொல்வாம்.

பதினெட்டாவது பாண்டியனாகிய சுந்தரேசபாதசேகர பாண்டியனுக்குச்சேனை மடுவில் விட்டிய படலம், 1-வது கவியில், தென்னனென னும் பெயர் வழங்கியிருக்கிறது.

மின்னனையார்பூங்கொன்றை வேணியரிதவாதம்
பொன்னனையாண்முன்செய்து போந்ததுபுகன்றேமார்த்தார்
மன்னனைமடுவில்விட்டி மலரடிக்கன்பனை
தென்னனையமரிற்காத்த திருவிளையாடல்சொல்வாம்.

பத்தொன்பதாவது பாண்டியனாகிய வரகுணபாண்டியன் தென்னரே றெனத்தோன்றினனென்பதாக வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம், 63-வது கவியில் கண்டிருக்கிறது.

என்னவேற்றினியின்னருள் புகன் றிறிலாவன்பாற்
பின்னர்வேறுபல்பூசையும் பிறக்குவித்திருந்தான்
மன்னரேறனையார்க்கொரு மடங்கலேறடல்வேற்
றென்னரேறெனத் தோன்றினான் வரகுணதேவன்.

இருபதாவது பாண்டியனாகிய இராஜராஜபாண்டியனுக்குத் தென்னருக் கரசனெனும் பெயர், இசைவாதுவென்றபடலம், [illegible]-வது கவியில் சொல்லி யிருக்கிறது.

பந்தயாழ்முதலுரைதவரவிட்டுப் பாடலாயவிருபக்குமொட்ப
வந்தபாடினி மடந்தையுமன்னர் மன்னனைத்தொழுதொர் கின்னரமாகிற்
சந்தவேழிசை யிழற்றினளின்றுடல்லவனோக்கியொருமின்னிடையாண்மேற்
சிந்தைபோக்கிவரு கிப்பழிநோக்காத் தென்னவற்கரசன்னதுசெப்பும்

மேலும் அதே படலம் 25-வது கவியில் பத்திரன் மனைவி இதே பாண்டியனைப்பார்த்துக்கூறிய கவி.

தென்னனேறனையாயிஞால மனுவழிச்செங்கோலோச்ச
மன்னரேறனையாய்வார வழக்கினைபாதலானே
சொன்னவாறவையுஞ்சொல்லத் துணிந்ததுதிலகாவன்ன
பன்னகாபரணன்முன்போய்ப் பாடுகேம்பாடுமெல்லை.

நாற்பத்தாறுவது பாண்டியனாகிய வங்கியசேகரபாண்டியனுக்கும் தென்னவன் என்னும் பெயர் சுந்தரப்பேரம்பெய்த படலம், 19-வது கவியில் சொல்லியிருக்கிறது.

மின்னிலங்கிலைவாளொடுஞ் சிலைவில்லிழந்தனர்வீரரே
பன்னலம்புனைதேரொடுங் கரிபரியிழந்தனர்பாகரே
தென்னவன்பொருவலியிழந்தனனென்று செம்பியன்வாகையுந்
தன்னதென்றுதருக்குமேல்கொடு சங்கெடுத்துமுழக்கினான்

அறுபத்துமூன்றாவது பாண்டியனாகிய அரிமருத்தனபாண்டியனுக்குந் தென்னர்தம்பிரான், தென்னர் புங்கவன், தென்னர் பெருமான், தென்னனென்னும் பெயர்கள் வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம், 18, 61, 74, 75-வது கவிகளில் சொல்லியிருக்கிறது.

18-வது கவி.

இன்னசெய்கையிலொருவரு வாசிரியருபொழுதேகி
தென்னர்தம்பிரானவை யடைச்சென்றெதிர்நின்று
ரன்னபோதடுபரி நிரைகாப்பவராசன்
முன்னர்வந்துதாழ்ந்தொரு சிறைநின்றிதுமொழிவார்.

61-வது கவி.

துங்கவாரியிற்கடும்பரித் தொகையெலாமடுத்
திங்களின்றலைவருமென முன்புபோய்த்தென்னர்
புங்கவன்றனக்குணர்த்தி மீண்டோமெனவிடுத்தங்
[illegible]ங்கனுமையகன் பெருந்துறை நாயகனமர்ந்தான்.

74-வது கவி.

[illegible]பெருமான்வழிபடு[illegible]
[illegible]
தென்னர்பெரு[illegible]
[illegible].

75-வது கவி.

பொன்னுமளவேலாவிலைகொண்ட புறவித்தொகையுமனைத்சவைதாம்
பின்னர்வரக்கண்டருளுதியெம் பெருமானிதனுற்றுரங்கபதி
யென்னுநாமம்பெறுதிமதி யென்றுரொன்றமர்த்திரர்க்குத்
தென்னன்சிறந்தவரிசைவளஞ் செய்துவிடுப்பச்செல்கின்றூர்.

இவ்வாறு பாண்டியகுல ராஜாக்களுக்குத் தென்னர் என்னும் குலப்பெயர் வழங்கி வருவதால் அவர்களும் சிவபெருமானைப்போல அமுதகுலத்தவரென்றறிக.

19. திருவிளையாடற் புராணத்தின் பலவிடங்களிலும் பாண்டியர்கள் குலம் மதிக்குலம் என்று கண்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக மதுரையிலரசாண்ட 2-வது பாண்டியனாகிய மலையத்துவசன் மகள் தடாதகையைத்திருமணப்படலம், 117-வது கவியில்

'மதிக்குலவிளக்கன்னாள்'

என்றும், அவளுடைய பர்த்தாவாகிய சிவபெருமானை, அன்னக்குழியும் வையையுமழைத்தபடலம், 4-வது கவியில்

'மதிக்குல மன்னவன் மருகன்'

என்றும், அவர்கள் புத்திரனாகிய உக்கிரவருமபாண்டியனை, இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம், 46-வது கவியில்

'மதிக்குலவீரன்'

என்றும், 7-வது பாண்டியனாகிய விக்கிரமனை, யானையெய்த படலம், 5-வது கவியில்

'மதிமாறன்'

என்றும், 11-வது பாண்டியனாகிய குலபூடணனை, மெய்க்காட்டிட்டபடலம், 41-வது கவியில்

'மதிவழிவந்த மைந்தன்'

என்றும், அவன் குமாரனாகிய இராஜேந்திரபாண்டியனை, தண்ணீர்ப்பந்தல் வைத்தபடலம், 4-வது கவியில்

'மதிவழி வந்தவன்'

என்றும், 20-வது பாண்டியனாகிய இராஜாராஜனை, பன்றிக்குட்டிக்கு [illegible]கொடுத்தபடலம், 40-வது கவியில்

'[illegible]யின்வழி வந்தவேந்தன்'

என்றும், 46-வது பாண்டியனாகிய [illegible]சேகரனை, சுந்தரப்பேரம் பெய்த படலம், 3-வது கவியில்

'[illegible]'

என்று விளம்பியிருப்பதால் பாண்டியர்களுடைய குலம் மதிக்[illegible] மென்றறிகிறது.

மதிக்குலம் என்று கூறப்படும் பாண்டிய குலத்துக்கு மூன்று தாற்பரியம் கூறலாம்; அம்மூன்றும் அக்குலத்துக்குப்பொருந்தியனவே.

முதலாவது, மதிக்குலம் என்றால் சந்திரகுலம். மதி—சந்திரன் (சதுரகராதி).

"மதியெழுமன்னிலையசைச்சொன்மாதமம்புலி புத்திப்பேர்"

(நிகண்டு).

பாண்டியர்கள் குலம் சந்திரகுலமென்று முன்னே எடுத்துரைத்தோம்.

இரண்டாவது, மதியென்றால் அறிவு (சதுரகராதி); நிகண்டாசிரியர் புத்தி என்கிறார். புத்தி என்றாலும் அறிவையே குறிக்கிறது.

புத்தி = அறிவு (சதுரகராதி)

ஆகையால் மதிக்குலமென்றால் அறிவுடையோர் குலம், அதாவது, சான்றோர்குலமென்று பொருள்.

மூன்றாவது, மதி என்றால் மதுவைக்கொடுப்பது, பனைமாமென்று பொருள். இதற்குச்சில திருஷ்டாந்தம் கூறுவோம். திருவிளையாடற் புராணம், யானையெய்தபடலம், 32-வது கவியில், விக்கிரமபாண்டியனை

'சுதைபடுமதிக்கோவேந்தன்'

என்று சொல்லியிருக்கிறது. சுதை—பனையமுது, படும்—ஒழுகும், மதி—பனை; அதாவது அமுதொழுகும் பனையைக்குலவிருட்சமாகக் கொண்ட அரசர்குல அரசன் என்று பொருள். இக்கவியில் மதியென்பது சந்திரனைக்குறிக்கிறதென்று யெவரும் பகரத்துணியார். சந்திரனிலிருந்து பனையமுதொழுகுவதில்லை. பனையமுதொழுகுவது பனம் பாளையிலிருந்தேயன்றிச் சந்திரனிலிருந்தன்று. ஆகையால் மதியென்பதற்கு இவ்விடத்தில் பனையெனப்பொருளென்றறிக. மேற்படி புராணம், தண்ணீர்ப்பந்தல் வைத்தபடலம், 13-வது கவியில் இராஜேந்திரபாண்டியனைப்பற்றி

'மதிநிறைந்த கன்னிநாடு காவலான்'

என்று கூறியிருக்கிறது. இதற்குச்சந்திரன் நிறைந்துள்ள கன்னிநாட்டரசன் என்றல்ல, கற்பகவிருட்சம் நிறைந்துள்ள பாண்டிநாட்டரசன் என்றே பொருள். மேலும் மேற்படி புராணம், வரகுணனுக்குச்சிவலோகங் காட்டியபடலம், 42-வது கவியில்,

'மதியின் விளைந்த [illegible]'

என்று [illegible]. இதற்குச் சந்திர[illegible] [illegible] சந்திரனில் [illegible] [illegible]. [illegible] சந்திரனில் விளைந்த [illegible]

[illegible] கற்பகம் என் [illegible] குலமாகிய [illegible]

1. சந்திரகுலம் என்றும்
2. சான்றோர்குலம் என்றும்
3. அமுதகுலமென்றும்

பொருளென்றறிக.

20. சிவபெருமான் தமிழனென்று நாம் ரூபித்த இடத்தில் அவர் தமிழில் செய்த செய்யுளொன்றெடுத்துரைத்தோம். வங்கியசூடாமணி என்னும் பாண்டியன் தன் நந்தனவனத்தில் தேவாமிர்தபானஞ்செய்து அங்கிருந்த ஓர் மண்டபத்தில் தன் மனைவியோடு வீற்றிருக்கும்போது, அவள் கூந்தலிலிருந்துண்டான வாசனையானது இயற்கைவாசனையோ செயற்கைவாசனையோவென்று சந்தேகித்துத் தன் கருத்தையறிந்து பாடவல்லவருக்கு 1,000 பொன் கொடுப்பேனென்று சொன்னபோது தருமியென்னும் ஆதிசைவனுக்குச் சிவபெருமானே ஒரு தமிழ்ச்செய்யுள் எழுதிக்கொடுத்ததாகவும் பார்த்தோம். சிவபெருமான் எழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்படும் அந்தச்செய்யுளாலேயே பாண்டியன் அமுதகுலத்தவர்களாகிய சான்றோர் மரபினன் என்றறியலாம். அச்செய்யுளாவது :—

"கொங்குதேர் வாழ்க்கையஞ்சிறைத் தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவைகூந்தலின்
நறியவுமுளவோ அறியும்பூவே."

இதன் கருத்தென்னவென்று பார்ப்போம்.

அறியும்பூவே.—அறியும்-அறிவுள்ள, பூவே-அழகே; அறிவுள்ள அழகே, அறிவுடையோர் குல அழகனே, சான்றோர்குல அழகனே.

கொங்குதேர்வாழ்க்கை.—கொங்கு—பனையமுது, தேர்—ஆராய்கின்ற; வாழ்க்கை-மனைவி; பனையமுதாராயும குலத்தவன் உன் மனைவி; உன் மனைவி அமுதகுலத்தவளாகிய சான்றாள்.

அஞ்சிறைத்தும்பிகாமஞ் செப்பாது கண்டது மொழிமோ.—அழகிய இறகுடைய வண்டு காமத்தை அதிகரிக்கச்செய்யாமல் கண்டதெல்லாம் உளறுமோ.

(N. B.—பெண்கள் கூந்தலிலணிந்திருக்கும் மலர்களின் தேனையுண்ணும் [illegible] வண்டானது ரீங்காரஞ்செய்து உட்கா[illegible] [illegible]

* உன் மனைவி [illegible]த்தில் [illegible] [illegible]
தே[illegible] [illegible]

பயிலிய து கெழீஇய.—(உன் குலத்தவர்கள்) பயிலிய-பேசுவதும், பேச்சும்; து--அனுபவிக்கிறதும்; கெழீஇய-சம்பூரணமும் (அதுவே). உன் குலத்தவர்கள் பேச்சும் தேவாமிர்தத்தைப்பற்றியே; அவர்கள் அநுபவிக்கிறதும் தேவாமிர்தமே; அவர்கள் சம்பூரணமும் அதுவே.

நட்பின்மயிலியற் செறியெயிற்றரிவைகூந்தலின் நறியவுமுளவோ.—உன் பேரில் பாசமும், மயிலின் ஒழுக்கமும், நெருங்கிய தந்தங்களுமுள்ள, (அரிவை) அமுதகுலமாதின் கூந்தலில் வேறு வாசமுமுண்டோ? அமுதகுலத்தவர்களுடைய கூந்தலுக்கு இயற்கையாயிருக்கும் வாசனைக்கு மிஞ்சின செயற்கை வாசனை யாதொன்றுமில்லை என்பதாம்.

சிவபெருமான் எழுதிக்கொடுத்ததாகச்சொல்லப்படும் இச்செய்யுளாலே பாண்டியர்கள் குலம் அமுதகுலமென்றும், சான்றோர்குலமென்றுமறியலாம்.

11. பாண்டியர்களுக்கு நாடான் என்னும் சான்றோர்குலப் பட்டப்பெயர் வழங்கியதற்குச்சில திருஷ்டாந்தம் கூறுவாம்:—

புகழேந்தி.

பங்கப்பழனத்துழுமுழவர் பலவின்கனியைப்பறித்ததென்று
சங்கிட்டெறியக்குரங்கிளநீர் தனைக்கொண்டெறியுந்தமிழ்நாடா
கொங்கைக்கமராபதியளித்த கோவேராஜகுலதிலகா
வெங்கட்பிறைக்குங்கரும்பிறைக்கும் மெலிந்தம்பிறைக்கும்விழிவேலே.

கம்பர் வீட்டுப்பெண்களிலொருத்தி.

தென்னவா மீனவா சீவிலிமாறமதுரை
மன்னவா பாண்டிவளநாடா—முன்னாத்
கரும்புக்குத்தாரளித்த தூயதமிழ்நாடா
கரும்புக்கு வேம்பிலே கண.

இவ்விரண்டு கவிகளிலும் பாண்டியனுக்கு நாடானென்னும் பட்டப்பெயர் விளிவேற்றுமையில் வழங்கியிருக்கிறது.

தமிழ்நாடான் = தமிழ் + நாடான்
= பனிமுது + நாடான்
= அமுதகுலத்தவனாகிய நாடான்.

தமிழ் என்னும் பதத்துக்குத்தமிழ்ப்பாஷையென்று பொருள்கொண்டால், தமிழ் நாடானென்பதற்குத் தமிழ்ப்பாஷை வழங்கும் தேசத்தையுடைய நாடானென்று பொருள்.

பாண்டிவளநாடான் = பாண்டி + வள + நாடான்
= பாண்டிநாடு + அமுது + நாடான்
= பாண்டிநாட்டின் அமுதிய நாடான்

என்று பொருள்கொள்ளத்தக.

இதே பிரகாரம் பாண்டியர்களுக்கு நாடன் என்னும் பட்டப்பெயர் அநேகவிடங்களில் வழங்கியிருக்கிறது. திருஷ்டாந்தமாக

(1) தென்றல்நாடன்
(2) கன்னிநாடன்
(3) பொருநை நாடன்
(4) வையை நாடன்
(5) வைகை நாடன்
(6) தமிழ் நாடன்
(7) [illegible]
(8) வைகை நாடவன்
(9) தொண்டை நாடன்
(10) காட்டையுடைய நாடான்
(11) அருவிமலையுடைய நாடான்
(12) மலைகளையுடைய நாடான்

என்னும் பெயர்களில், மரியாதைக்காக இயற்பெயர் நீக்கி இப்பெயர்களோடும் குலவிளக்கப்பெயர்களோடும், நாடனென்னும் பட்டப்பெயர் சேர்த்து வழங்கியிருக்கிறது.

(1) இவற்றில் தென்றல்நாடன் என்னும் பெயருக்கு அமுதகுல ஆண்டவனாகிய நாடானென்று பொருள் என்பதாக, 349-வது பக்கத்தில் சோமசேகரனுக்கு இப்பெயர் வழங்கியதை விவரித்துக்காட்டினோம். இதேபெயர் 20-வது பாண்டியனாகிய இராஜராஜனுக்கு வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், இசைவாதுவென்ற படலம்,
27-வது கவி.

தென்றனாடனு மந்திரச்செல்வரு
கன்றுதீதுணர் நாலவகைக் கேள்வியோ
ரொண்டுவேதி யொளிவிடு வெள்ளிமா
மன்றவாணர் மாமண்டபத் தெய்தினார்.

(2) கன்னிநாடன் என்றால் கன்னிகுலத்திலுதித்த நாடான் என்று பொருள். கன்னியென்பது தடாதகைப்பிராட்டியார் பெயர். சிவபெருமானைக் கலியாணம் செய்கிறதற்கு முன்னதாகப் பிராட்டியார் கன்னியாயிருந்து அரசாண்டபடியால், கன்னி அரசி என்னும் பெயர் பிராட்டியாருக்கு வழங்கினது. அக்குலத்திலுதித்த பாண்டியர்களுக்கு கன்னிநாடார்கள் என்று பெயர். இப்பெயர் வழங்கியதற்கு மேற்கோள் [illegible]

திருவிளையாடற் புராணம், இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்,
36-வது கவி.

[illegible] கன்னிநாடன்
[illegible]
[illegible] பெருமிதவீறுநோக்கி
[illegible] தோர்வினைமுன்னு.

ஷை புராணம், மேருவைச் செண்டாலடித்த படலம்,
1-வது கவி.

அண்டாஞ்சவமருழந்த வமரர்கோனையரசர்கோன
வண்டலம்புமெனலிசிந்த வளையெறிந்துவெம்புறங்
கண்டவன்னையின்னதன்ன கன்னிநாடன்மேருவிற்
செண்டெடுத்துவைப்பெடுத்த செயலுரன்குசெப்புவாம்.

இவ்விரண்டு கவிகளிலும் சிவபெருமானுக்குத் தடாதகைப்பிராட்டியாசிடம் பிறந்த குமாரனாகிய உக்கிரவருமபாண்டியனுக்குக் கன்னிநாடன் என்னும் பெயர் கூறியிருக்கிறது. அதற்குக்கன்னி[illegible] குமாரனாகிய நாடான் என்று தாற்பரியம் கூறலாம்.

ஷை புராணம், கான்மாறியாடின படலம்.
5-வது கவி.

பொன்னிநாடவன்வாயிலுள்ளாரொருபுலவன்வந்தலர்வேம்பின்
கன்னிநாடனைக்கண்டுமுன்பரவுவான் கனைகழற்கரிகாலெம்
மன்னவற்கறுபத்துநாற்கலைகளும் வரும்வராதனக்கொன்று
தென்னனேரறியாயதுபரதநூலெறிந்திலே யெனச்சொன்னான்.

21-வது கவி.

நாட்டினான்குறித்துப்பாய தன்னுமுன்னிட்டதானன்றி
நீட்டினான்வலத்தாள்வீசி திருமலன்மாறியாடிக்
காட்டினான்கன்னிநாடன் கவலையம்பாசமூன்றும்
வீட்டினான்பரமானந்த வேலையுள்வீட்டினானே.

இக்கவிகளில் 8-வது பாண்டியனாகிய இராஜசேகரனுக்குக்கன்னிநாடன் என்னும் பெயர் கூறியிருக்கிறது. அதற்குக்கன்னியாகிய தடாதகை குலத்தில் தோன்றிய நாடானென்று பொருள்.

ஷை புராணம், உலவாக்கிழியருளிய படலம்,
1-வது கவி.

அடியார்பொருட்டுப்பரிவயவராகிச் செழியன்காண[illegible]டக்
கொடியார்வந்துமெய்க்காட்டுக் கொடுத்தவண்ண[illegible]த்துரைத்துங்
கடியார்கொன்றைமுடியார்க் கன்னிநாடன்றனக்[illegible]த்த
படியாவுலவாக்கிழிகொடுத்த படியையறிந்தபடி[illegible]ர்வாம்.

இக்கவியில் 11-வது பாண்டியனாகிய குலபூடணனுக்குக்கன்னிநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

ஷை புராணம், தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்.
2-வது கவி.

தென்னவரசபுரந்தான்கோல் செலுத்துநாளிற்[illegible]டெறிந்த
மன்னன்பின்னர் வெள்ளிப்புடையாம் போர்[illegible]யார்[illegible]றமந்தரேசன்
[illegible]பொருள்பொருளைக்
கன்னிநாடன்[illegible]விடுத்து[illegible]யுறையே.

3-வது கவி.

பொன்னிநாடன்வரவிடுத்த பொலம்பூணுடைமுதல்பிறவுங்
கன்னிநாடன்கைகவர்ந்து தானுங்கலக்குற்றொடர்பிறு
ழன்னிவேறுகையுறையுய்த்துறவு செய்யவுவப்பெய்திச்
சென்னிகாதன்மகட்கொடுப்பா னிசைந்தானந்தசெழியர்கு.

இவ்விருகவிகளிலும் 12-வது பாண்டியனாகிய இராஜேந்திரனுக்குக்கன்னி நாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவாதவூரர் புராணம், குதிரையிட்ட சருக்கம்,
30-வது கவி.

வெளிப்படவரியமேனி விண்ணவன்கண்ணுநெஞ்சங்
களிப்புறவருதல்கண்டுங் கண்டிலன்கன்னிநாட
னொளித்துலகெங்குநிற்போ னுழுபவமொழித்தருளோ
னளித்திடினன்றியாவ ரவன்றிறந்தெரியவல்லார்.

இக்கவியில் 63-வது பாண்டியனாகிய அரிமர்த்தனனுக்குக்கன்னிநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், சமணரைக்கழுவேற்றிய படலம்,
42-வது கவி.

அன்னவேடுமுறையினேடு நடக்கியர்க்குணர்வோரம்
மன்னனோக்கவினையிறேறி யாயுமீத்தமாசர்தங்
சொன்னதுள்ளவப்படத் துணிந்துவாய்மைகாளுணரிக
கன்னிநாடனைவிதிப்ப வாற்றலாது கதறுவார்.

இக்கவியில் [illegible]ன்னிநாடனென்பது 73-வது பாண்டியனாகிய கூன்பாண்டியனைக்குறி[illegible]றது.

பாண்டியர்[illegible] குலத்தவர்கள் தான் தென்பாண்டி நாட்டிலிருக்கும் நாடார்கள். [illegible]தகைப்பிராட்டியாரும் அக்குலத்தவளே. ஆகையால் தென்பாண்டி[illegible]ட்டிலுள்ள நாடார்களுக்குக் கன்னிநாடர் எனும்பெயரும் வழங்கிய[illegible]த் திருவிளையாடற்புராணம், தண்ணீர்ப்பந்தல்வைத்த படலம், 34-வ[illegible] கவியில் பார்க்கிறோம்.

கா[illegible]டைத்தென்னப்பொன்னி காவலன்றனைசாய
[illegible]டவாகைவேய்ந்து வளவனைமருகனோடு
[illegible]டைக்கறகட்சேனை வீரர்வெங்கையாற்பற்றி
[illegible] கன்னிநாடர்க் காசன்முன்கொண்டுபோந்தார்.

இக்கவியில் 12-வது [illegible]ண்டியனாகிய இராஜேந்திரனைக்கன்னிநாடர்க்கரசன் என்கிறது புராண[illegible] அதாவது, கன்னியாகிய தடாதகைப்பிரா ட்டியார் குலத்தவ[illegible] நாடார்களுக்கரசன் என்று பொருள்.

(3) பொருநைநா[illegible] என்னும் பெயரில் பொருநை என்னும் [illegible] [illegible]

யமுது என்று தாற்பரியம் கொடுத்தால், பொருநைநாடனென்னும் பெயருக்கு அமுதகுலத்திலுதித்த நாடானென்று பொருளாகிறது. அல்லது பொருநை என்னும் பெயரானது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தாம்பிரபொருணி நதியைக்குறிக்கிறதென்று வைத்துக்கொண்டால், பொருநைநாடனென்னும் பெயருக்குத் தாம்பிரபொருணிப்பிரதேசத்தையுடைய நாடானென்று பொருள். இப்பெயர் பாண்டியர்களுக்கு வழங்கியதற்கு மேற்கோள் கூறுவோம்.

திருவிளையாடற் புராணம், மெய்க்காட்டிட்ட படலம்,

40-வது கவி.

கண்டனன்பொருநைநாடன் வியந்தனன்கருத்தாசங்கை
கொண்டனன்குறித்துநோக்கி யீதுநங்கூடன்மேய
வண்டர்தம்பெருமான்செய்த வாடலென்றெண்ணிக்கண்ணீ
விண்டனன்புளகம்போர்ப்ப மெய்யன்புவடிவமாறன்.

இக்கவியில் 11-வது பாண்டியனாகிய குலபூடணனுக்குப்பொருநைநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவாதவூரர் புராணம், மந்திரிச்சருக்கம்,

15-வது கவி.

தென்னவன்பிரமராய னென்றருள்சிறந்தநாம
மன்னவர்மதிக்கநல்கி வையகமுய்வதாக
மின்னவமணிப்பூணுடை வெண்மதிச்சவிகைதண்டு
பொன்னவிர்கவரிவேழ மளித்தனன்பொருநைநாடன்.

ஷை புராணம், திருப்பெருந்துறைச்சருக்கம்,

112-வது கவி.

போற்றியெம்பொருநைநாட போற்றியென் றிறைஞ்சிக்கூறு
மாற்றமுன்றோன்றுகின்பேர் புனைந்துளவரிசைபெற்றோர்
சாற்றருந்தாகங்கொள்ள நேரியன்றலத்திற்சார்ந்து
நீற்றினனடியார்கையினின் பொருளியாவுமீந்தார்.

இவ்விரண்டு கவிகளிலும் பொருநைநாடன் என்னும் பெயர் 63-வது பாண்டியனாகிய அரிமர்த்தனனுக்கு வழங்கியிருக்கிறது.

(4) வையைநாடான் என்னும் பெயருக்கு இரண்டு தாற்பரியம் கூறலாம்.

வையம் = 1. தேர் } [illegible]
2. [illegible]

இவைகளால் வையைநாடான் என்னும் [illegible] நாடானென்றும் [illegible]

திருவிளையாடற் புராணம், விடையிலச்சினையிட்டபடலம்,

23-வது கவி.

வையைநாடனும்வந்தது நோக்குறீஇ
ஐயவின்னதோரற்புத மாயையைச்
செய்யவல்லவர் யாரெனத் தேர்கிலா
னையமெய்திய கன் மனை நண்ணினான்.

இக்கவியில் 11-வது பாண்டியனாகிய குலபூடணனுக்கு வையைநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவாதவூரர் புராணம், திருப்பெருந்துறைச்சருக்கம்,

84-வது கவி.

சென்றவர்வையைநாடன் றிகழ்சபைமுன்னரெய்தி
வென்றிறன்மன்னபோற்றி மாமதுரேசபோற்றி
யென்றுபின்வாதவூர னெய்தியசெய்தியெல்லா
மொன்றியகவத்திகூழ முளத்துடனின்றுசொல்வார்.

114-வது கவி.

மற்றவர்மொழிந்தவெல்லாம் பொய்யுரைமன்னவென்னச்
சொற்றமிழ்வையைநாடன் றூதரைவெருவநோக்கி
யற்றமில்லருளின்வல்லா ரருட்பெருந்துறையிலெய்தி
யுற்றவெம்பரிகளுண்டே லொல்லைவந்துரையென்றான்.

இவ்விரண்டு கவிகளிலும் 53-வது பாண்டியனாகிய அரிமர்த்தனனுக்கு வையை நாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இரண்டாவது கவியில் வழங்கிய பெயருக்குத் தாற்பரியமாவது:—

சொற்றமிழ்வையைநாடன் = சொல் + தமிழ் + வையை + நாடன்
= புகழ் + பனையமுது + தேர் + நாடான்
= புகழ்ச்சி பொருந்திய அமுதகுலத்தில் தோன்றிய தேர்வீரனாகிய நாடான்

என்று பொருள்.

திருவிளையாடற் புராணம், பாண்டியன் சுரந்தீர்த்தபடலம்,

55-வது கவி.

கையர்மாளைத்திடுந் கவுரியன்றேய
மெய்வதாகவின்று நம் மருளாலே [illegible]
வையைநாடன்மேல்வெப்புநோய்வந்ததாலதனை
யையதீர்த்திட [illegible] திருத்தினார்.

இக்கவியில் 73-வது பாண்டியனாகிய [illegible] வையைநா டன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

அருணசலபுராணம், வச்சிராங்கதபாண்டியன் சருக்கம்,
40-வது கவி.

வேழமும்பரியுந்தேரும் வீரருஞ்சுவடுகாடிச்
சூழமந்திரிகளோடுஞ் சூழ்ந்தனர்துயரந்தீர்ந்தான்
தாழையின்கமுகின்காடுந் தவளவான்கழைத்தீண்டும்
வாழையுங்கரும்பின்சாற்றின் வளர்த்திடும்வையைநாடன்.

இக்கவியில் வச்சிராங்கதபாண்டியனுக்கு வையைநாடனென்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இப்பாண்டியன் பெயர் நாம் முன்கொடுத்த அட்டவணையிலில்லை. கூன்பாண்டியனுக்குப்பின்னும் சோமசுந்தரபாண்டியனுக்கு முன்னும் அரசாண்ட பாண்டியர்களிலொருவனயிருக்கலாம்.

(5) வைகை [illegible]நாடன் என்ருல் வையையாற்றுப்பிரதேசத்தையுடைய நாடான் என்று பொருள். வைகை என்ருல் மதுரையாறு. வைகைநாடன் என்னும் பெயர் 62-வது பாண்டியனகிய குலேசபாண்டியனுக்கு வழங்கியதற்கு ஓர் ஆதாரம் கூறுவோம்.

திருவிளையாடற் புராணம், இடைக்காடன் பிணக்குத்தீர்த்தபடலம்,
24-வது கவி.

தென்னவனன்னவனை மேத்திருன்செம்பொற்கூடன்
மன்னவன்கேட்டாளாய வாணியாவ்வையைநாட
வன்னதுசோத்தநாக்கேட் டெத்தனையிலியதாமிற்
றின்னமொன்றுளதுகேட்டி யென்றனனருளிச்செய்வான்.

(6) தமிழ்நாடன் என்ருல் அமுதகுலத்திலுதித்த நாடான் என்றும், தமிழ்ப்பாஷை வழங்கும் தேசத்தையுடைய நாடான் என்றும்பொருள். இப்பெயர் பாண்டியர்களின் பெயர்களிலொன்றெனத் திவாகரம் கூறுகிறது.

திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி,
28-வது சூத்திரம்.
கோப்பாண்டியன் பெயர்.

செழியன்றமிழ்நாடன் கூடற்கோதென்னவன்
வழுதிமீனவன் பஞ்சவன் மாறன்
கௌரியன்வேம்பின் கண்ணிக்கோ[illegible]வன்
பொருநைப்பொருப்பன்புனல் வையைத்துறைவன்
குமரிச்சேர்ப்பன் [illegible].

(7) [illegible] என்றும் [illegible]
[illegible] இனிமேல்
[illegible] கூறு

திருவிளையாடற் புராணம், இசைவாதுவென்றபடலம்,
19-வது கவி.

பொன்றளிரனையாண்மையற் புதுமதுநுகர்ந்துதீது
நன்றறியாதகன்னி நாடவனவையைநோக்கி
யின்றொருநாளிற்நேரத்தக்கதோ விதுவென்றந்த
வென்றடுவேற்கணரைப் பேரமெனவிடுத்தான்மன்னே.

இக்கவியில் 20-வது பாண்டியனாகிய இராஜராஜபாண்டியனுக்குக்கன்னி நாடவன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்குக்கன்னியாகிய தடாதகைப்பிராட்டியார் மரபிலுதித்த நாடான் என்று பொருள்.

(8) வையைநாடவன் என்னும் பெயரும் வழங்கியதற்குத்திருஷ்டாந்தம் கூறுவோம்.

ஷை புராணம், தருமிக்குப்பொற்கிழியளித்த படலம்,
67-வது கவி.

ஐயபாவையு மதியேகொம்லை
வையைநாடவன் மனக்கருத்துணர்ந்
தய்யவோர்கவி யுரைத்தெனக்கருள்
செய்யவேண்டுமென்றிரந்து செப்பினன்.

இக்கவியில் 47-வது பாண்டியனாகிய வங்கியசூடாமணி பாண்டியனுக்கு வையைநாடவன் எனும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்குத்தோர்வீரனாகிய நாடான், அல்லது, வைகையாற்றுப்பிரதேசத்தையுடைய நாடான என்று பொருள்.

ஷை புராணம், பாண்டியன் சுரந்தீர்த்த படலம்,
66-வது கவி.

ஐயவிச்சுரமாற்றரி தாற்றரிதென்ன
வையைநாடவன்வல்லமண் மாசுநீர்ந்தடியே
ஐய்யவேண்டுமேலதனையு மடிகளேயொழித்தல்
செய்யவேண்டுமென் றிரந்தனன்சிரபுரக்கோனை.

இக்கவியில 73-வது பாண்டியனாகிய கூன்பாண்டியனுக்கு வையைநாடவன் எனும் பெயர் வழங்கியிருக்கிறது.

(9) பாண்டியனுக்குத்தொண்டைநாடன் என்னும் பெயரும் வழங்கியதற்கு உதாரணம் கூறுவோம்.

[illegible] சிந்தாமணி,
2168-வது கவி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

துறையெனவழங்கும் வடமொழியதனைத்
தூயசெந்தமிழினாற் செய்தான்
றிறைகோடாவழுதிப் புகழ்தோண்டைநாடன்
றில்லைநாயக மகிபதியே.

சாதகசிந்தாமணியென்னும் இந்நூலானது சமஸ்கிருத பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட காவியம். இதனை மொழிபெயர்த்த ஆக்கியோன் தில்லைநாயக பாண்டியன். இவர் பாண்டியராஜாக்களிலொருவர். மேலே கூறிய கவியில் இவரைத் 'திறைகொடாவழுதி' என்றும், 'புகழ்தொண்டைநாடன்' என்றும் சொல்லியிருக்கிறது:—

திறைகொடாவழுதி = ஒருவருக்குங் கப்பங்கட்டாமல் சுயாதிபதியாய்ச் செங்கோல் செலுத்திய பாண்டியன் என்று பொருள்.

புகழ்தொண்டைநாடன் = 1. புகழ்ச்சிபெற்ற தொண்டைமண்டலத்தை ஜெயித்தரசாண்ட நாடான் என்றும்,
2. கீர்த்திபெற்ற அமுதகுலத்தவனாகிய நாடானென்றும் பொருள் கூறலாம்.

இக்கவியிலும் நாடன் என்னும் சான்றோர்குலப் பட்டப்பெயர் தில்லைநாயகபாண்டியனுக்கு வழங்கியிருக்கிறது.

(10) மதுரைக்கல்விச்சங்கத்தைச்சேர்ந்த சான்றோர் பாடி, பாண்டியனுக்கு முன்பாக அரங்கேற்றிய நாலடியார் என்னும் நீதிவேதத்தில் பாண்டியனை விளிக்குந்தருணங்களிலெல்லாம்

1. காட்டையுடையநாடானே
2. அருவிகளையுடைய நாடானே
3. மலைகளையுடைய நாடானே

என்பதாகப் பலதடவைகளிலும் விளித்திருப்பதை நாலடியாரில் பார்க்கலாம். அவற்றிற்குச்சில திருஷ்டாந்தம் கூறுவோம்:—

A. காட்டையுடையநாடான்.

நாலடியார், பொறையுடைமை,
6-வது கவி.

இன்னாசெயினு மினியவொழிகென்று
தன்னையே தானோவினல்லது — துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானகநாட
விலங்கிற்கும் விள்ளலரிது.

நாலடியார், இன்மை,
3-வது கவி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பாண்டியனுக்கு இங்கே வழங்கிய கானகநாடன் என்னும் பெயருக்குக் காட்டையுடைய நாடான் என்று பொருளென்றறிக.

B. அருவிகளையுடையநாடான்.

நாலடியார், பொறையுடைமை,
9-வது கவி.

இன்பம்பயந்தாங் கிழிவுதலைவரினு
மின்பத்தின்பக்க மிருந்தைக்க—வின்ப
மொழியாமைகண்டாலு மோங்கருவிநாட
பழியாகா வாறேதலை.

நாலடியார், நட்பிற் பிழைபொறுத்தல்,
8-வது கவி.

ஏதிலார்செய்த திறப்பவே தீதெனினு
நோதக்கதென்னுண்டா நோக்குங்கால்—காதல்
கழுமியார்செய்த கறங்கருவிநாட
விழுமிதா நெஞ்சத்துணின்று.

நாலடியார், கூடாநட்பு,
2-வது கவி.

சீரியார்கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன்மாண்டபயத்ததா—மாரி
வறந்தக்காற்போலுமே வாலருவிநாட
சிறந்தக்கால் சீரிலார்நட்பு.

நாலடியார், இரவச்சம்,
7-வது கவி.

என்றும்புதியார் பிறப்பினுமிவ்வுலகத்
தென்றுமவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவிநாட
விரப்பாரை யெள்ளாமகன்.

நாலடியார், கீழ்மை,
3-வது கவி.

பெருநடைதாம் பெறினும் பெற்றி பிழையா
தொருநடையராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக்கடைத்தும் பிறங்கருவிநன்றுடை
வற்றாமொருநடை கீழ்.

நாலடியார், கீழ்மை,
4-வது கவி.

தினையனைத்தேயாயினுஞ்செய்தநன்றுண்டாற்
பனையனைத்தாவுள்ளுவர்சான்றோர்—பனையனைத்
தென்றுஞ்செயினு மிலங்கருவிநாட
நன்றில நன்றறியார்மாட்டு.

இக்கவிகளில் பாண்டியனுக்கு வழங்குகிற அருவிநாடன் என்னும் பெயர்களுக்கு அருவிகளையுடைய நாட்டான் என்று பொருளென்றறிக.

௫. மலைகளையுடையநாடான்.

நாலடியார், செல்வநிலையாமை,

10-வது கவி.

உடாஅதுமுண்ணாதுந் தம்முடம்புசெற்றுங்
கெடாஅத நல்லறமுஞ்செய்யார்—கொடாஅது
வைத்தீட்டினாரிழப்பர் வான்றோய்மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக்கரி.

நாலடியார், பொறையுடைமை,

7-வது கவி.

பெரியார்பெருநட்புக் கோடறாஞ்செய்த
வரியபொறுப்பவென் றன்றே—வரியரோ
வொல்லெனருவி யுயர்வரைநன்னாட
நல்லசெய்வார்க்குத்தமர்.

நாலடியார், மெய்ம்மை,

3-வது கவி.

காலாடுபோழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற்பலராவ ரேலா
விடரொருவருற்றக் காலீர்ங்குன்றநாட
தொடர்புடையேமென்பார் சிலர்.

நாலடியார், தீவினையச்சம்,

8-வது கவி.

உள்ளத்தானுள்ளா துறந்தொழிலராய்க்
கள்ளத்தானட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்றநாட
மனத்துக்கண் மாசாய்விடும்.

நாலடியார், பெரியாரைப்பிழையாமை,

1-வது கவி.

பொறுப்பரென்றெண்ணிப் புரைதீர்ந்தார்மாட்டும்
வெறுப்பனசெய்யாமைவேண்டும்—வெறுத்தபி
னார்க்குமருவியணி மலைநன்னாட
பேர்க்குதல் யார்க்குமரிது.

நாலடியார், பெருமை,

6-வது கவி.

பெருவரைநாட பெரியார்கட்டீமை
கருநரைமேற் சூடேபோற்றோன்றும்—கருநரையைக்
கொன்றன்னவின்னசெயினுஞ் சிறியார்மே
லொன்றானுந் தோன்றாக்கெடும்.

நாலடியார், நட்பாராய்தல்.

2-வது கவி.

இற்பிறப்பெண்ணியிடை திரியாரென்பதோர்
நற்புடைக்கொண்டமையல்லது—பொற்கேழ்
புனலொழுகப்புள்ளிரியும் பூங்குன்றநாட
மனமறியப்பட்டதொன்றன்று.

நாலடியார், நட்பிற் பிழைபொறுத்தல்.

3-வது கவி.

இறப்பவேதீய செயினுந்தன்னட்டார்
பொறுத்தறகுதியொன்றன்றோ—நிறக்கோங்
குருவவண்டார்க்கு முயர்வரைநாட
வொருவர்பொறை யிருவர்நட்பு.

நாலடியார், கூடாநட்பு,

1-வது கவி.

செறுப்பில்பழங்கூரை சேறணையாக
விறைத்துநீரேற்றுங்கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவிதாழும் புனல்வரைநன்னாட
தங்கருமமுற்றுந் துணை.

நாலடியார், கூடாநட்பு,

4-வது கவி.

பெருகுவதுபோலத் தோன்றிவைத்தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதேநந்து—மருகெல்லாஞ்
சந்தனநீள்சோலைச் சாரன்மலைநாட
பந்தமிலாளர் தொடர்பு.

நாலடியார், கூடாநட்பு,

7-வது கவி.

முற்றற்சிறுமந்தி முற்பட்டதந்தையை
நெற்றக்கண்டன்னவிரலான்—ஞெமிர்த்திட்டுக்
குற்றிப்பறிக்கு மலைநாடவின்னாதே
யொற்றுமை கொள்ளாதார்நட்பு.

நாலடியார், இன்மை.

5-வது கவி.

பிறந்தகுலமாயும் பேராண்மைமாயுஞ்
சிறந்ததங்கல்வியுமாயுங்—கறங்கருவி
கன்மேற்கழூஉங் கணமலைநன்னாட
வின்மைதழுவப்பட்டார்க்கு.

நாலடியார், இன்மை,

10-வது கவி.

ஆர்த்தபொறி யவணிகிளர்வண்டினம்
பூத்தொழிகொம்பின்மேற் செல்லாவா—வீழ்த்தருவி
தாழாவுயர்சிறப்பிற் றண்குன்றநன்னாட
வாழாதார்க்கில்லைத்தமர்.

நாலடியார், அவையறிதல்,

9-வது கவி.

பொழிப்பகலநுட்ப நூலெச்சமிந்நான்கிற்
கொழித்தகலங்காட்டாதார் சொற்கள்—பழிப்பி
னிரையாமாசேக்குநெடுங் குன்றநாட
வரையாமோ நாயிற்குரைக்கு.

நாலடியார், கீழ்மை,

8-வது கவி.

கடுக்கெனச்சொல்வற்றாங் கண்ணோட்டமின்று
மிடுக்கண்பிறர்மாட்டுவக்கு—மடுத்தடுத்து
வேகுடைத்தாயிறன் மலைநன்று
வேருமாமெள்ளுநர்கீழ்.

நாலடியார், கயமை,

3-வது கவி.

கணமலைநன்னாட கண்ணின்றொருவர்
குணனேயுங்கூறற் கரிதாற்—குணனழுங்கக்
குற்றமுழைநின்று கூறுஞ்சிறியவர்கட்
கெற்றாலியன்றதோ நா.

நாலடியார், பன்னெறி,

9-வது கவி.

இனியார்தந்நெஞ்சத்து நோயுரைப்பவந்நோய்
தணியாதவுள்ளமுடையார்—மணியிடறி
வீழுமருவி விறன்மலைநன்னாட
வாழ்வின்வரைபாய்தனன்று.

இக்கவிகளில் பாண்டியனுக்கு வழங்கியிருக்கிற

1. மலைநாடன்
2. வரைநாடன்
3. குன்றநாடன்

என்னும் பெயர்களுக்கெல்லாம் மலைகளையுடைய நாடானென்றபொரு ளென்றறிக.

இவ்வாதாரங்களினால் பாண்டியர்கள் [illegible] மன்னர்களைப் [illegible] என்னும் [illegible] என்று அறியலாம.

XIII-வது அத்தியாயம்

தேவேந்திரன் குலவிளக்கம்.



1. தேவேந்திரனை அட்டதிக்குபாலர்களிலொருவர். 2. கற்பக நாட்டுக்கதிபதி. 3. பனையமுங்த அருமையானவர் பானமாக என்னினவர். 4. சுராதிபன், சுரபதி, சுரேந்திரன், சுரேசன், கறைத்தருவுடையகோன், சுரக்கிராமணி. 5. சுரர் அமுதர், புலவர். 6. இந்திரன் மனைவிக்கு அயிராணியென்றும், மகனுக்குச்சயந்தன் என்றும் வழங்கிய பெயர்களின் தாற்பரியம். 7. அயிராணி அமுதகுலச்சான்றூள். 8. சுரர் அமரர். 9. வானவர். 10. மேலோர். 11. உம்பரார். 12. புதர். 13. அண்டர். 14. இந்திரன் வானுடன், வானநாடன். 15. அமரர் நாடன். 16. ஐந்தருநாடன், தாருநாடன். 17. தனடநாடன், துறக்கநாடன். 18. கள்ளர், மறவர், அகமுடையாரின் பூர்வோத்திரம்.

அட்டதிக்கு பாலர் என்னும் எண்மரே வேதங்கள் கூறும் தேவர்களில் முக்கியமானவர்கள் என்றும், அந்த எட்டு பேரும் ஏகுலத்தவர்கள் என்றும் விபரமாய் [illegible] டன் 14-வது பக்கத்தில் [illegible] அட்டதிக்குபாலர் என [illegible] னும் பெயருக்கு எட்டுத்திக்கரென்று [illegible] கீழ்த்திசை, பாலர்-அமுதத்தைக் [illegible] இந்த எட்டு

திசை சான்றாரும் அரசுபுரிந்த தேசங்கள் எவையென்று ஏழாவது அத்தியாயம், 111-வது முதல் 120-வது பக்கம் வரை விரித்துரைத்தோம். இவர்களில் அக்கினிபகவான், சூரியபகவான், சந்திரபகவான் என்னும் மூவர் குலத்திலுதித்த சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் மூவேந்தரும் அமுதகுலசான்றாரென்னும் நாடார்கள் குலத்தவர்கள் என்பதாக முந்தின அத்தியாயத்தில் பார்த்தோம். அம்மூவரிலொருவராகிய சூரியபகவானின் சகோதரனான தேவேந்திரனுடைய குலத்தை இந்த அத்தியாயத்தில் விளக்கிக்காட்டுவோம்.

2. இவர் கிருஷ்ணா ஜில்லாவிலிருக்கும் அமராவதிக்கிறைவன். இவர் நாட்டுக்குக் கற்பகநாடு என்று பெயர். பரஞ்சோதிமாமுனிவரருளிச்செய்த மதுரை யறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பாவில்

> "பூமேவு கற்பகநாடாளும்புரந்தரனார்
> நிமைவிருத்திரனைச் செற்றபழி-போமாறு
> பொற்கமலர்தோய்ந்து விமானமிசைப்பூசிப்ப
> நற்கருணைசெய்த நலம்போற்றி"

என்னும் கவியில் இந்திரனைக் கற்பக நாடாளும் புரந்தரன் என்று கண்டிருப்பதால், இந்திரனுடைய நாட்டுக்குக் கற்பகநாடெனப்பெயரென்றறியலாம். புரந்தரன் என்பது இந்திரன் பெயர்களிலொன்று.

இந்திரன் விருத்திராசுரனைக்கொன்ற பழி நீங்காமல் திரேதாயுகத்தில் தன் நாட்டை விட்டு அலைந்து திரிந்த காலத்தில் தேவர்களெல்லாரும் கற்பகநாடு அரசனில்லாதிருந்ததால் சந்திரகுலத்திலுதித்த நகுடனுக்கு மகுடஞ் சூட்டினார்கள் என்று திருவிளையாடற் புராணம், இந்திரன் பழி தீர்த்த படலத்தில் வாசிக்கிறோம்.

60-வது கவி.

> விரைந்தரன்றிசையோர்வாவி வீழ்ந்தொருகமலநாளுட்
> கரந்தனன்மகவானிப்பாற் கற்பகநாடுபுல்லென்
> றிருந்ததாலிருக்குமென்லே யிம்பரினகுடனென்போ
> னருந்பரிமேதவேள்வி யாற்றினானெற்றமெல்லே.

இக்கவியிலும் தேவேந்திரனுடைய நாட்டுக்குக் கற்பகநாடு என்னும் பெயர் வந்திருக்கிறது.

அருவாசமகாமுனிவர் தெட்சிண [illegible] சென்று இந்திரனுடைய [illegible] லாகத் தாக்கு [illegible] திருவிளையாடற் புராணம், வெள்ளைவாரண [illegible] த்தில் [illegible]

4-வது கவி.

தாங்கிக்கண் சென்னி தடமார்பணைந்துடலம்
வீங்கித்தலைசிறந்த மெய்யுவகைமேற்கொள்ள
நீங்கிக்கழிந்த கருணை நிதியனையான்
பூக்கற்பகநாட்டிற் போகின்றனவவேலை.

இக்கவியிலும் தேவேந்திரனுடைய சுவர்க்கலோகத்துக்குக் கற்பகநாடென்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்றபடலத்தில் நவரத்தினங்களுற்பத்தியான விதத்தைக்கூறிய கவிகளொன்றில் இந்திரனுக்குக்கற்பகநாடுகாவலோன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

2[illegible]-வது கவி.

கடிபடுகற்பகநாடுகாவலோ
னொடியுமச்செவித்தொளை நுழையத்தானவ
னெடியகைபுடைத்துடனுயிர்த்துக்காரிடி
மிடியெனநகைத்திகழ்ந்திவையகூறுவான்.

இதன் தாற்பரியம்.

வாசனை பொருந்திய (கடி) பனையமுது (படு) ஒழுகும்பனைமரச்சோலை (கற்பகம) நிறைந்த நாட்டுக்கு அதிபனாகிய இந்திரன் சொன்ன வார்த்தைகளைக்கேட்ட வலாசுரன், கைகளைக் கொட்டி மேக இடிபோல் நகைத்து இவ்வாறு இந்திரனை இகழ்ந்து கூறுவான் என்பதாம்.

கம்பராமாயணம், பாலகாண்டம், கையடைப்படலம்,

1-வது கவி.

உளைவருகற்பகநாட்டு நன்னகர்
அளைவரும்வெண்டரவயிர்க்குஞ்சிறைதயான்
சினையவுமரியது விசும்பினின்றமோர்
புனைமணிமண்டபம் பொலியவெய்தினன்.

7-வது கவி.

என்னனையமுன்வாருமையுறு மிடையூறொன்றுடையாரால்
பன்னகநாகருவெள்ளிப்பனிவரையும் பாற்கடலும்பதுமபீடத்
தன்னகருங்கற்பகநாட்டண்ணர்கரு மணிமாடயோத்தியென்னும்
பொன்னகருமல்லாதுபுகலுண்டோ விகல்கடந்தபுலவுவேலோய்.

இவ்விரண்டு கவிகளிலும் சுரர்நாட்டுக்குக்கற்பகநாடு, அதாவது, பனைமரச்சோலைநாடென்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன.

கம்பராமாயணம், [illegible]

8-வது கவி.

இப்பார்நாட்டுச்செல்வமெல்லா [illegible] சாளவருந்தாலும்
உம்பர்நாட்டுக்கற்பகக்கா [illegible]
செம்பொன்மீதுவளையப்பத்திரத் [illegible] ன்றிருக்கைமேல்
[illegible]

ஒருவன் இப்பூலோகத்திலுள்ள சகல பவுசு பாக்கியங்களுமுடையனுக அரசாட்சி செய்தபோதிலும், சுரர் நாட்டிலுள்ள கற்பக விருட்சசோலைகளென்னும் பனந்தோப்புகளுக்குள்ளே குடியிருந்தபோதிலும், அவைகள் கம்பநாடானியற்றிய இராமாயணக்காப்பியத்தைப்போல மனதுக்கு மதுரந் தரத்தக்கவைகளல்லவென்று கூறியிருப்பதால், சுரர்கள் பனந்தோப்புகளுக்குள்ளே குடியிருப்பதை இவ்வுலகத்திலுள்ள சகல சம்பத்துகளோடும் அரசாட்சி செய்வதற்குச்சமானமாயெண்ணினார்களென்றும், சுரர் நாடென்னும் இந்திரலோகத்துக்குக் கற்பகச்சோலைகள் நிறைந்த நாடென்னும் பெயருண்டென்றும் அறியலாம்.

3. திருப்பனை நாதராகிய சிவபெருமானுக்குக் கடம்பமாவனத்தான், கடப்பங்காடு கட்டியாளுபவன் என்னும் குலவிளக்கப்பெயர்கள் வழங்கியதுபோல, இந்திரனுக்கும் கற்பகநாடாளும் புரந்தரன், கற்பக நாடுகாவலோன் என்னும் குலவிளக்கப்பெயர்கள் வழங்கியிருப்பதைப் பார்த்தோம். சிவபெருமானுக்குக் கற்பகமதுவென்னும் பனையமுது மிகவும் அருமையான பானமாயிருந்ததுபோல இந்திரனுக்கும் அது அருமையான பானமாகவேயிருந்தது.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், ஆரணியபருவம்.
நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக்கம்.
5-வது கவி.

ஆடையுங்கலனுமத்தரத்துடனடற்படையுநல்கி
யேடவிழலங்கலானோ ராசனத்திருத்தியென்றுந்
தேடுதற்கரியதூய வமுதுசெம்பொற்கலத்திற்
கூடவுண்டமரர்க்கெல்லாங் குரிசிலாஞ்சிறப்புஞ்செய்தான்.

அருச்சுனன் நிவாதகவசர், காலகேயர் என்னும் அசுரர்களின்மேல் படையெடுத்துச் செல்லுகிறதற்கு முன்னதாக தேவேந்திரன் அருச்சுனனை ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருக்கச்செய்து கிடைப்பதற்கரிதாகிய பரிசுத்த தேவாமிர்தமென்னும் பதிநீரை, செம்பொன்னால் செய்யப்பட்ட கிண்ணத்தில் வார்த்து, அருச்சுனனோடு கூடத்தானுமுண்டான் என்று கண்டிருப்பதால் கற்பகமது இந்திரனுக்கு மிகவும் அருமையான பானமாயிருந்ததென்றறிகிறோம்.

தேவேந்திரனுக்கு மிகுந்த துன்பத்தை விளைவித்துக்கொண்டிருந்த ஷை அசுரர்களை அருச்சுனன் ஜெயித்து வந்தபோது, தேவேந்திரனும் அவனைச்சேர்ந்த தேவர்களும் அருச்சுனனுடைய பராக்கிரமத்தை நினைத்து, தேவாமிர்தத்தைப்பானம் செய்தவர்கள்போல் மிகவும் மனமகிழ்ந்து ஆனந்தக்கூத்தாடினார்களென்று ஷை சருக்கம் 143-வது கவியில் கண்டிருக்கிறது.

கன்னின்ற [illegible] சலமின்மையிலனென
[illegible]
[illegible] வகை [illegible]
[illegible] கற்பகமுதலோர்.

இங்கே இந்திரனுக்கு வழங்கிய சுரபதியென்னும் பெயருக்குச் சுராகுல அரசன், அமுதகுலத்தவர்களின் அரசன் என்று பொருள். சுரம்-பனையமுது.

பனையமுதானது தேவேந்திரனுக்கு எவ்வளவு அருமையான வஸ்துவென்பதற்குக்கம்பராமாயணத்திலிருந்து ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

பாலகாண்டம், கையடைப்படலம்,

8-வது கவி.

ஒன்றனிக் கற்பகநறுந்தே னிடைதுளிக்கு
    நிழலிருக்கை யிழந்துபோந்து
மின்றனிக்கும் தனிக்குடைக்கீ ழிமைநிருக்கி
    குறையிரந்து நிற்பவோர்க்கி
குன்றனிக்கும் குலமணித்தோட் சம்பரனைக்
    குலத்தோடுந் தொலைத்துநீகொண்
டன்றளித்த வரசன்றோ புரந்தரனின்
    றாள்கின்ற தரசவென்றான்.

சம்பராசுரனால் ஜெயிக்கப்பட்டுத்தேவேந்திரன் கற்பகநாட்டையிழந்து தசரதனைச்சரணம்புகுய, இராமருடைய பிதாவாகிய தசரத சக்ரவர்த்தி மதனபாண்டியனுடைய உதவியால் சம்பரனைச்செயித்து அவன்குலத்தை நிர்மூலமாக்கித் தேவேந்திரனுக்குக் கற்பகநாட்டரசாட்சியைக் கொடுத்ததை விஸ்வாமித்திரர் தசரதருக்குக்கூறுகிற வாக்கியம். இதில் தேவேந்திரன் கற்பகநாட்டையிழந்தான் என்றுசொல்வதற்குப்பதிலாக

"இன்றனிக்கற்பக நறுந்தேனிடை
துளிக்கு நிழலிருக்கை"

இழந்தான் என்கிறார் கம்பநாடன். இதன் தாற்பரியம்.

"மதுரம் பொருந்திய, திவ்யக்குருத்துகளையுடைய பனைவிருட்சங்களின் வாசனை பொருந்திய பதினீர் நிலை நிலையாக ஒழுகுகின்ற நிழலில் வாசஞ்செய்திருத்தல்"

இழந்தான் என்று வர்ணித்திருப்பதால் பனையமுது தேவேந்திரனால் எவ்வளவாய் நன்குமதிக்கப்பட்டிருக்கிறதென்றறியலாம்.

4. இந்திரன் சுரர் குலத்தவன் என்று பார்த்தோம். சுராகுல மென்பது யாது. திருப்பாற்கடல் கடைந்து அமுதமுற்பத்திசெய்யும் [illegible] அமுதைப்பருகினவர்களுக்குச் சுரர் என்றும், அத் [illegible] அசுரர் என்றும் பெயருண்டா யிற்றென்று [illegible] புராணம் கூறுகிறது. ஆகையால் சுரர் என்றால் அமுதமுற்பத்தி செய்து அதைப்பருகுகிறவர்கள் என்று பொருள். சுரம், சுரா, சுவை என்னும் தமிழ்ப்பெயர்கள் பனையமுதைக்குறிக்கும் பெயர்களென்று அகராதிகள் கூறுகின்றன. ஆகையால் சுரன் என்னும் பெயருக்கு அமுதகுலத்தவன் சான்றோன் என்றுபொருள்.

திருவிளையாடற்புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம்,
47-வது கவி.

மட்டிடுதாரான்விட்ட வானவப்படைக்குமாறு
விட்டுடன்விலக்கிவேறும் விசித்திடக்கனன்றுவஞ்சன்
முட்டிடமானவெங்கான் மூட்டிடக்கோபச்செந்தீச்
சுட்டிடப்பொருதுபொங்கிச் சுராதிபன்றனைச்செய்தான்.

இந்திரன் விருத்திராசுரனோடு யுத்தம் செய்தவிதத்தைக்கூறிய கவிகளில் இதுவும் ஒன்று. இதில் சுராதிபன் என்னும் பெயர் இந்திரனுக்கு வழங்கியிருக்கிறது. சுரபதி என்னும் பெயர் வழங்கினதாக 375-வது பக்கத்தில் பார்த்தோம். இவ்விரண்டும் ஒருபொருட்கொண்ட மொழிகள்.

சுராதிபன் = சுரம் + அதிபர்
= பனையமுது + அரசன்
= அமுதகுலத்தில் தோன்றிய அரசன், சான்றார்குலத்திலுதித்த அரசன்

என்று பொருள். சதுரகராதியாசிரியர் சுரேந்திரன், சுரேசன் என்னும் பெயர்கள் இந்திரனுக்கு வழங்கிய பெயர்களென்கிறார்.

சுரேந்திரன் = சுரம் + இந்திரன்
= அமுதகுலத்தவனாகிய இந்திரன்,
சுரேசன் = சுரம் + ஈசன்
= அமுதகுலத்தவனாகிய அரசன் (ஈசன்)

என்று பொருள்.

கம்பராமாயணம், பாலகாண்டம். மிதிலைக்காட்சிப்படலம்,
118-வது கவி.

நறைத்தருவுடையகோனு நான்முகக்கடவுளானும்
கறைத்தருகளனுமற்றைக் கடவுளர்பிறருந்தொக்குப்
பொறுத்தருண்முனிவகின்னைப் புகல்புகுந்தவனைப்போற்றும்
அறத்திறனன்றுதாரா சனைத்தொடுமைகவன்றான்.

கற்பகநாட்டுக்கதிபதியாகிய தேவேந்திரனை இக்கவியில்

நறைத்தருவுடையகோன்

என்று கூறியிருக்கிறது. நறை-பனையமுது; தரு-விருட்சம்; கோன்-அரசன்; அதாவது, அமுதகுல அரசன், சான்றார்குல அரசன் என்று பொருள்.

வான்மீகி உத்தரராமாயணம், 3-வது, அதிகாரம், 3?-வது பத்தியத்தில் வரும் சமஸ்கிருத சுலோகத்தில்

"இராவணன் இந்திரனும் ஜெயித்தபோது சுரக்கிராமணியாகிய தேவேந்திரனை எதிர்த்து யுத்தஞ் செய்தான்"

என்று சொல்லியிருக்கிறது. சுரக்கிராமணி என்றால் சுரா குலத்தில

தோன்றிய கிராமணி, அமுதகுலத்தில் தோன்றிய கிராமணி என்று பொருள். இங்கே இந்திரனுக்கு வழங்கிய கிராமணி என்னும் பட்டப் பெயரைத் தற்காலத்திலும் சான்றோர் தரித்து வருகிறார்கள் ; 307-வது பக்கம் பார்க்க.

கிராமணி என்னும் பெயரும் நாடான் என்பதைப்போன்ற க்ஷத்திரிய பதம். நாட்டுக்கதிபதிக்கு நாடான் என்றும், க்ஷேத்திரங்களுக்கதிபதிக்கு க்ஷத்திரியன் என்னும் பெயரானதுபோல, கிராமங்களுக்கதிபதிக்குக்கிராமணி என்று பெயர். சதுரகராதியாசிரியர்

கிராமமுற்றோன் } =கிராமணி.
கிராமியன் }

கிராமம் —ஊர் குடியூர்

என்று சொல்லுகிறார்: கிராமணி, கிராமியன் என்னும் ஒரு பொருட்கொண்ட மொழிகளுக்கு சமஸ்கிருத நிகண்டிலும் தமிழ் நிகண்டிலும் கண்டிருக்கும் அருத்தத்தைக்கூறுவோம் :—

அமரகோசம், மூன்றாவது காண்டம்,
208-வது சுலோகம்.

"கிராமணீர்நாபிதேபும்ஸி, ஶ்ரேஷ்டே கிராமாதிபேத்ரிஷு."

சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த்தொகுதி,
45-வது சூத்திரம்.

"அடைவுளகிராமமுற்றோன் கிராமியனாகுமென்றே."

ஆகையால் சான்றோர்குலத்தவர்கள் நாளது வரை தரித்துவரும் கிராமணி என்னும் பெயருக்கு அளவிறந்த கிராமங்களுக்கதிபதி என்று பொருள் என்றும், இப்பெயரை அமுதகுலத்தவனாகிய தேவேந்திரனும் அணிந்திருந்தபடியால், அவனும் அமுதகுலச்சான்றோனென்றும் அறியலாம்.

5. சார்கள் அமுதகுலத்தவர்களானபடியால் அவர்களுக்கு அமுதர், புலவர் என்னும் பெயர்களும் வழங்கி வந்ததாகச் சதுரகராதியாசிரியர் கூறுகிறார்.

அமுதர் = அமுதகுலத்தவர்

புலவர் என்பது புல்லவர் என்பதின் [illegible]

புல்லவர் = புல் + அவர்
= புலை + அவர்
= [illegible]

என்று பொருள். இப்பெயர்களானும் பனை [illegible] குலமிருக்கு மென்றறிகிறோம்.

6. தேவேந்திரன் பனைவிருது வழங்கும் அபிராமி [illegible] என்னும் பெயரோடு மகனுக்கு வழங்கும் [illegible] என்னும் பெயராலும் அவர்கள்

குலம் விளங்கும். அமிராணியென்னும் பெயர் பார்வதிதேவியாருக்கு வழங்கியிருப்பதை முன்னோ விளக்கிக்காட்டினோம். அதற்குப்பனை வெல்லமுற்பத்திசெய்யும் குலத்தவளாகிய சான்றாள் என்று பொருள் (273-வது பக்கம் பார்க்க). சயந்தன் என்னும் பெயரும் பார்வதிக்கு வழங்கிய சயமகள் என்னும் பெயருடன் சம்பந்தப்பட்ட பெயர். சயமகள் என்பதற்குப் பனஞ்சருக்கரையுற்பத்திசெய்யும் குலத்தவளெனப் பார்த்தோம். அதே பிரகாரம் சயந்தன் என்னும் பெயருக்கும்பனஞ் சருக்கரையுற்பத்தி செய்யுங் குலத்தவன் என்று பொருள்.

7. இந்திரன் மனைவியாகிய சசியென்னும் அமிராணி அமுத குலத்தவள் என்றும், சான்றாள் என்றும் காட்டும்படிக்கான ஒரு கவி இவ்விடம் கூறுவோம்.

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம்,

61-வது கவி.

அரசிலா வறுமைநோக்கி யவனிவா னுடையாரும்
விரைசெய்தார் மகுடஞ்சூட்டி வேந்தனைக்கொண்டார்வேந்தாய்
வருபவன் சசியைவேண்டித் தருகென மருங்குளோர்போய்த்
திரைசெய்நீரமுதனாட்குச் செப்பவக் கற்பின்மிக்காள்.

கற்பகநாட்டிலரசனில்லாத காரணத்தால் சுரர்கள் நகுடனை மகுடஞ் சூட்டி இந்திரனாகக்கொண்டபின் நகுடன் தேவேந்திரன் மனைவியைக் கொண்டு வாருங்களென்ன, பக்கத்திலிருந்தவர்கள் அதை அவளுக்குத் தெரிவிக்க, கற்புடைய அவள் தன் கற்பைக்காக்கவேண்டிய வகை தேடினாள் என்று புராணம் கூறுகிறது. இக்கவியில் இந்திராணிக்கு வழங்குகிற பெயர்கள் மூன்று:—சசி, அமுதனாள், மிக்காள். சசியென்றால் சந்திரன்; சந்திரகுலத்தவள், அல்லது சந்திரனைப்போன்றவள் என்று பொருள். அமுதனாள் என்றால் அமுதகுலத்தவள், அல்லது அமுதம் போன்றவள் என்று பொருள். மிக்காள் என்றால் சான்றாளென்று பொருள்; மிக்கார், மிக்கோர் என்பது சான்றோர்குலப்பெயரெனப் பார்த்தோம்.

ஆகையால் இந்திராணிக்கு வழங்குகிற அமுதனாள், மிக்காளென்னும் பெயர்களால் அவள் அமுதகுலத்தவளாகிய சான்றாள் என்றறிகிறோம். கற்பின்மிக்காள் என்பதற்குக் கற்புமிகுதியாயுடையவள் என்று சொல்வது மூடார்த்தம். கற்புக்கு மிகுதியும் குறைவுமில்லை. கற்பு குறைந்தவர்களைக் கற்புடையார் என்று சொல்லுகிறதில்லை. கற்பில் சற்றென்கிலும் பிசகினவள் கற்புடையவள் என்று [illegible] டாள். ஆகையால் கற்புக்கு உயர்வுந் தாழ்வுமில்லை. கற்பு தாழ்ந்தவர்களைக் [illegible] கற்புடையவளென்றெடுத்துக்கொள்ளுகிறவர்கள் பேதைகள். ஆகையால் இந்திராணிக்கு வழங்குகிற கற்பின் மிக்காள் என்னும் பதங்களுக்குக் கற்பிலே [illegible] சான்றாள் என்றே பொருள்.

[illegible] அமுதகுலத்தவளாகிய சான்றாள் என்றறிக.

8. சாரர்களுக்கு அமரர் என்றும் பெயர். திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம், 12, 86-வது கவிகளில் இந்திரனை அமரர்வேந்து, அமரர் கோமான் என்று சொல்லியிருக்கிறது.

12-வது கவி.

தெற்றெனப்பிரமபாவஞ் சிறிவந்தமரர்வேந்தைப்
பற்றலுமதனைத்தீர்ப்பான் பண்ணவர்மரமேன்மண்மேல்
பொற்றொடியார்மேனீர்மேல் வேண்டினர்புகுத்தலோடு
மற்றவரியாந்திர்க்கும் வண்ணம்யாதென்னவின்றோர்.

86-வது கவி.

பாராவட்டாங்க பஞ்சாங்கவிதிமுறையாற் பணிந்தன்வாய்மெய்
நேராகச்சூழ்ந்துடலங்கம்பித்துக்கும்பிட்டு கிருதநஞ்செய்து
தாராருக்தொடையிதப்ப வானந்தக்கண்ணருவி ததும்பநின்றன்
பாராண்மயீக்கொள்ள வஞ்சலித்துத் துதிக்கின்றனமரர்கோமான்.

திவாகரம், தெய்வப்பெயர்த்தொகுதி,
4-வது சூத்திரம், இந்திரன் பெயர்.

புரந்தரன்புனிதன் பொன்னகர்க்கிறைவன்
வாசவனமரர்கோன் மான்முகிலூர்தி
வேள்விநாயகன் விண்முழுதாளி
ஆயிரக்கண்ண னயிராணிகேள்வன்
மருத்துவன்மகவான் வளரிவிருத்திராரி
வெள்ளையானை வெம்மையவர்வேந்தன்
பாகசாசன னுக்கண்டலனே
வச்சிரபாணி சதக்கிருதென்றிவை
எச்சமிலிந்திரற் கியன்றதொல் பெயரே.

சார்களுக்கு வழங்கும் அமரர் என்னும் பெயருக்கு இரண்டு தாத்பரியம் கூறலாம். அமரி என்றால் சாரம், பனையமுது, ஆகையால் அமரர் என்றால் அமுதகுலத்தவர், சான்றார் என்று பொருள். இரண்டாவது அமர் என்றால் போர் (c. f. அமர்க்களம்-போர்க்களம்); ஆகையால் அமரர் என்றால் போர்வீரர், க்ஷத்திரியரென்று பொருள். இவற்றுள் எந்த தாத்பரியமானாலும் சான்றோர் குலத்தையே குறிக்கிறது.

கம்பராமாயணம், தனியன்கள்,
6-வது கவி.

[illegible]மையைக்காட்டி யமரர்க்கமுதமீய்ந்த
[illegible] தமிழ்[illegible]காட்டிக்
கம்பராமெ[illegible] கவிசக்கரவர்த்தி[illegible]
[illegible] மாலையாலே கரருக்கின் றமுதமீய்ந்தான்.

இக்கவியினாலே அமரர் என்னும் பதமானது அமிர்தக்குறிக்கும் அமரி என்னும் மூலபதத்திலிருந்து [illegible], அமுதகுல[illegible]

தவர்களாகிய தேவர்களே அமர்புரியும் க்ஷத்திரியராயுமிருந்தார்கள்.

9. சுரருக்கு வானவர், வானோர் என்றும் பெயர்.

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம்,
38-வது கவி.

வானவர்சேனைமூண்டு விளைத்தலும்வடவைச்செந்தீ
யானதுவரையினேங்கி யழன்றுருத்தெழுந்தாலென்னத்
தானவர்கோனுமானந்தலைக்கொள வெழுந்துபொங்கிச்
சேனையுந்தானுமூண்டு செதிர்நின்றமர்போர்செய்வான்.

திருவிளையாடற் புராணம், வெள்ளியம்பலத்திருக்கூத்தாடிய படலம்,
2-வது கவி.

புண்ணியமலர்மென்கொம்பை வேட்டபின்புவனந்தாங்குங
கண்ணுதன்மூர்த்தியாய கவுரியன்மனைத்தில்வந்த
மண்ணியல்வேந்தர்வானோர் மாதவர்பிறருமுன்னை
நண்ணுதிரொன்னவோடு நண்ணுவார்விரைவினெய்த.

காளமேகப்புலவர்.

சிரித்துப்புரமெரித்தான் சித்திரத்தைப்பற்றி
உரித்துதிரம்பாய வுடுத்தான்—வருத்தமுடன்
வாமேடியாருடனே வானவருந்தானவரும்
ஓடியயர்த்த நஞ்சுண்ணி.

ஆராயுமுத்தமிழாற்றாரிற் சோமியழகுகண்டு
நாராயணனெடுமோலாகினான் மற்றைநான்முகனும்
ஓராயிரமடலூர்ந்தான் விண்மாரனுருவழித்தான்
பேரானவானவர்கோனுங் கண்ணாயிரம்பெற்றனனே.

வானவர் என்னும் பெயருக்குச் சான்றோர் என்பது மூலார்த்தமென்று சிவன் குலவிளக்கவத்தியாயத்தில் கூறினோம்; 266-வது பக்கம் பார்க்க.

வான்=பெருமை
வானவர்=பெருமையிற் சிறந்தோர்
=மேன்மக்கள்
=சான்றோர்

தேவேந்திரன் குலத்தவர்கள் பெருமையிற் சிறந்தோர், மேன்மக்கள் அல்லவென்று இந்நூல்களில் எவன் சொல்லத்துணிவான்? வானவர் என்னும் பெயருக்கு வானத்திலுள்ளவர்களென்று ஒருவரும் [illegible] தில் சொல்லார். ஏனெனில் இந்திரனுடைய அமராபதி [illegible] விண்ணுலகத்திலல்ல மண்ணுலகத்திலே; இருவரும் [illegible] இவ்வாயிலே, இருந்த நகரங்களிலே இன்னுமிருக்கிறது. சான்றோருக்கு வானவர் என்னும் பெயர் [illegible] இருந்தகால், வானவர் என்றிருந்த இடம்பு சான்றோர்கள் பெயர் [illegible] வால் முளைத்த வண்ணம், வானவரென்பதும் தேவேந்திரன் [illegible] குறிக்கும்.

10. சுரர்களுக்கு மேலார், மேலவர், மேலோர் என்னும் பெயர்.

திருவாலவாய்த்தேவாரம், திருத்தாண்டகம்,
2-வது கவி.

விண்ணுலகின் மேலார்கள் மேலான் றன்னை
மேவாபுரமூன்றும் பொடிசெய்தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத்தானைப்
பசும்பொன்னி னிறத்தானைப் பானீற்றானைப்
புண்ணிலவு சடைக்கற்றைக் கங்கையானைக்
சுரர்துணையோ டேறி யிருந்தான்றன்னைத்
தெண்ணிலவு தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே.

இக்கவியில் சிவபெருமானை "விண்ணுலகின் மேலார்கள் மேலான்" என்று சொல்லியிருக்கிறது.

விண்ணுலகம்—தேவலோகம்
மேலோர் —அறிஞர், புலவர், வானோர் } சதுரகராதி.

ஆகையால் விண்ணுலகின் மேலார்கள் என்றால் சுரரைக்குறிக்கிறதென்றறிக. மேலார், மேலோர், மேலவர் என்பதெல்லாம் ஒரு பொருட்கொண்ட மொழிகள். மேலவர் என்றால் சான்றோரைக் குறிக்கிறதென

"சான்றோர் மிக்கோர் நல்லவர் மேலவர்"

என்னும் திவாகரச்சூத்திரத்தை முன் பார்த்தோம். ஆகையால் சுரருக்கு வழங்குகிற "விண்ணுலகின் மேலார்" என்பதற்குக்கற்பகநாட்டுச் சான்றோர் என்று பொருள்.

சிவபெருமான் சான்றோரிற்சிறந்த சான்றோனென நாம் முன்னே பார்த்தவண்ணம் இங்கே அவரை

"விண்ணுலகின் மேலார்கள் மேலான்"

அதாவது தேவேந்திரலோக சுக்கிராமணிகளிலும் சிறந்த சான்றோன் என்று கண்டிருக்கிறது.

11. சுரர்களுக்கு உம்பர், உம்பரார் என்னும் பெயர்.

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்தபடலம்,
5-வது கவி.

ஒல்லெனச்சுரவனேக வும்பர்கோன் றிருவிருக்கம்
பல்லெனச்சிறிதருள்றப் புரந்தரனறிந்திக்கேடு
[illegible]
[illegible]

28-வது கவி.

[illegible]

இக்கவிகளில் இந்திரனை உம்பர்கோனென்றழைத்திருக்கிறது.

திருவிளையாடற் புராணம், திருமணப்படலம்,
25-வது கவி.

நீடித்திருமாமலை காவலனும்பாரித்து
காடிப்பணிதற்கரிதாகிய நம்பிபாதம்
கூடிப்பணிந்தித்திறங் கூறலுங்கொற்றவேனை
தேடிக்கிடையாதுனாத் தேர்ந்தனனர்இயெங்கை.

இக்கவியில் சாருக்கு உம்பரார் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இதுவே சரியான பெயர். உம்பர் என்றால் உயர்வு என்று பொருள். ஆகையால் உம்பரார் என்றால் உயர்ந்தோர். உயர்ந்தோர் என்பது சான்றோர் குலப்பெயர்களிலொன்று.

"சான்றோர் மிக்கோர் நல்லவர் மேலவர்
ஆய்ந்தோர் உயர்ந்தோர் அரியர் உலகு"

என்னும் திவாகர சூத்திரத்தாலறிக.

ஆகையால் சாருக்கு வழங்குகிற உம்பரார் என்னும் பெயருக்குச் சான்றோர் என்று பொருள்.

12. சாருக்குப்புதர் என்னும் பெயர்.

திருவிளையாடற் புராணம், மாணிக்கம்விற்றபடலம்,
31-வது கவி.

அதற்கிசைந்தனை வேந்தனமரர்வேந்தனை முன்போக்கி
மதர்க்கடுங்குருதிச்செங்கண் மைந்தனுக்கிறைமையீந்து
முதற்பெருங்கலையாம்வேத மொழிமரபமைந்தவாறும்
புதர்க்கடுவேள்விச்சாலைப் புறந்தவர்திறத்துமின்றான்

இக்கவியில் சாருக்குப் புதர் என்னும் பெயர் வழங்கியதாகப் பார்க்கிறோம். இப்பெயரின் தாத்பரியமென்னவென்று பார்ப்போம். விஷ்ணு புராணத்தில் சந்திரமகாராஜாவானவர் பிரகஸ்பதியின் மனைவியாகிய தாராதேவியை எடுத்துக்கொண்டாரென்றும், அவளிடத்தில் சந்திர மகாராஜனால் ஒரு புத்திரன ஜனித்தான் என்றும், அக்குழந்தையைச் சந்திரமகாராஜன் பார்த்து

"குழந்தாய்! நீ மிகுந்த புத்தியுள்ளவனாகையால் [illegible] குப்பெயர் தந்தேன்"

என்று சொன்னதாகவும் வாசிக்கிறோம். ஆகையால் புதன் என்னும் பெயருக்குப் புத்தியுள்ளவன், அறிவுடையோன் என்று பொருள். ஆகையால் சாருக்கு வழங்குகிற புதர் என்னும் பெயருக்கு அறிவுடையோர் என்று பொருள். அறிவுடையோர் என்பது சான்றோர் குலப்பெயர் களிலொன்று.

"சான்றோர் மிக்கோர் கல்லவர் மேலவர்
ஆய்ந்தோ ருயர்ந்தோ ராரியருலகென
வாய்ந்த ஆன்றோர் அறிவுடை யோரே."

ஆகையால் புகர் என்னும் பெயர்கொண்ட சுரர் சான்றோரென்றறிக.

13. சுரருக்கு அண்டர் என்னும் பெயர்.

அண்டர்வக்கதி மருசசனைபுரிவ தும்வேனத்தும்
தொண்டரன்பினுக்கெளியவன் சுரர்தொழக்கறுத்த
கண்டனின்னருட் கண்ணினுக்கண்டனனுதவிற்
புண்டரம்பயிலன்புடைப் புண்ணியவணிகன்.

இக்கவியில் சுரருக்கு வழங்கியிருக்கிற அண்டர் என்னும் பெயரானது அண்டமென்னும் மூலபதத்தினின்றுற்பத்தியானது.

அண்டம் என்றால் உலகம்

உலகம் என்றால் உயர்ந்தோர் பெயரென நிகண்டாசிரியர் கூறுகிறார்.

"ஒருசிறுலகமென்ப துயர்ந்தவர்க்கியம்புநாமம்."

உயர்ந்தவரென்பது சான்றோர்குலப்பெயரெனத்திவாகர நூலாசிரியர் கூறுகிறார்.

"சான்றோர் மிக்கோர் கல்லவர் மேலவர்
ஆய்ந்தோர் உயர்ந்தோர் ஆரியர் உலகு."

ஆகையால் சுரருக்கு வழங்குகிற அண்டர் என்னும் பெயருக்கும் சான்றோரென்று பொருள் என்றறிக.

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்தபடலம்,
22-வது கவி.

அண்டரேறனையவவ வசமாறிப்பின்
கண்டகன் கைதவ நினைத்திக்கள்வனேர்
மண்டமாற்றுவான் வலியிலோமெனப்
புண்டரீகத்தவ னுலகிற்போயினன்.

விருத்திராசுரன் இருப்புலக்கையாலடித்த அடியால் மூர்ச்சித்த இந்திரன் மூர்ச்சை தெளிந்து அந்த விருத்திரனுடன் போர்செய்ய வலியிலோமென்றெண்ணி இந்திரன் பிரமலோகஞ் சென்றானென்றுபொருள்.

இக்கவியில் இந்திரனுக்கு அண்டரேறனையவன், அண்டர்களுக்குள் [illegible] போன்றவன், அதாவது சான்றோர்குல வீரன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவருணைக்கலம்பகம்
[illegible]

அண்டர்க்கு [illegible] மருகர் [illegible]
கண்டிக்க [illegible]

இக்கவியிலும் அண்டர் என்னும் சான்றோர்குலப்பெயர் சுரர்களுக்கு வழங்கியிருக்கிறதோடு, அமுதில் தோன்றிய லாகிரிக்குணமுள்ள கள்ளென்னும் விஷமானது அரசராகிய சான்றோருக்கும் முனிவராகிய சான்றோருக்கும் அழல், அதாவது நரகத்துக்குச்சமானமெனக்கண்டிருப்பதால், சான்றோர் லாகிரிக்குணமுள்ள கள்ளை நரகத்துக்குச்சமானமாயெண்ணி வெறுத்தார்களென்றறியலாம்.

கம்பராமாயணத்தில் அநுமாரானவர் சீதாதேவியாரைத்தேடித் தென்றிசை நோக்கிச்செல்லுங்கால், பொன்னி என்னும் காவேரியாற்றைத்தாண்டிப்புனனாடு என்னும் சோழநாட்டைக்கடந்து, தென்றமிழ் நாடாகிய பாண்டிநாட்டுக்கு வந்தபோது, அந்நாட்டின் சிறப்பைக்கண்ணுற்று அதிசயித்து முத்துக்களும் இயலிசை நாடகமென்னும் முத்தமிழும் சிறந்து விளங்கும் அப்பாண்டி நாட்டுக்குச் சுவர்க்கலோகமானது சமமாகாதெனக்கண்டார் என்பதாகக் கூறியிருக்கிறது. அக்கவிகளிலொன்றில் தேவேந்திர லோகமாகிய சுரர் நாட்டுக்கு அண்டர்நாடு என்னும் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது.

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், ஆறுசெல்படலம்,

51-வது கவி.

அனையபொன்னி யகன்புனனாடொரீஇ
மனையின்மாட்சி குலாமலைமண்டலம்
வினையினீங்கிய பண்பினர்மேயினார்
இனையதென்றமிழ் நாடுசென்றெய்தினார்.

52-வது கவி.

அத்திருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்திருக்குமென் றுரையொக்குமோ
எத்திறத்தினு மேழுலகும்புகழ்
முத்துமுத்தமிழும் தந்துமுற்றலால்.

ஆகையால் அமுதகுலத்தவராகிய சுரருக்குச் சான்றோர் எனப்பொருள் கொடுக்கும் அண்டர் எனும் பெயர் வழங்கிவந்திருக்கிறதென்றறிக.

14. சுரர்கள் அமுதகுலத்தவர்களென்றும், சான்றோரென்றும், கிராமணிகள் என்றும் இருவகையாய்ப்பார்த்தோம். இனி [illegible] டார்களென்றுரைக்கலாம்.

சுரக்கிராமணியாகிய தேவேந்திரனை அமரர் இயற்கையில் வானவன், வானாடன் என்றும், மற்றும் சுரர்களை வானவர், அமரநாடர், விண்ணுலகர் என்றும் சொல்லியிருக்கிறது [illegible] இருக்கின்றன [illegible]

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம்,
23-வது கவி.

தாழ்த்துதான்படுதுயர் விளம்பத்தாமரை
வாழ்ந்தவன்வலாரியோ டிணைத்துமாமகள்
வீழ்ந்தமார்பினனடி வீழ்ந்துசெப்பமால்
சூழ்ந்தவானாடனை நோக்கிச்சொல்லுவான்.

மகாபாரதம், ஆதிபருவம், வாரணாவதச்சருக்கம்,
64-வது கவி.

மருவினின்றருக்கன்மைந்தன் வானநாடன்மகனையாம்
இருவருந்தனுக்[illegible]ள்போரியற்றவம்மினென்னலும்
குருகுலந்தழைக்கவந்த குமரனன்புகூரவே
உருகிநின்றெனத்தழீஇ யுகந்துளந்தருக்கினான்.

திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்றபடலம்,
34-வது கவி.

மணித்தலைமலையின்பக்க மாய்த்தவன்வயிரவேலாற்
பிணித்துயிர்செகுத்தவள்ளற் பெருந்தகையாலவைவேதம்
பணித்திடும்வகையைவாங்கிப் படரெரிகளைமுன்பார்க்க
குணித்தவானாடர்க்கூட்டிக் கோதிலாவேள்விசெய்தான்.

வான் என்னும் பதத்துக்குப் பெருமை என்று பொருளென்பதாக முன் சொன்னோம். நாடன் என்றாலும் நாடான் என்றாலும் ஒன்றே. நாடு என்னும் பகுதியோடு ஒன்றில் அன் விகுதியும் மற்றதில் ஆன் விகுதியும் சேர்த்த வித்தியாசமேயன்றி பொருளில் வித்தியாசமில்லை. ஆகையால் சுரக்கிராமணியாகிய இந்திரனுக்கு வழங்கிய வானாடன் (வான் + நாடன்) என்னும் பெயருக்குப் பெருமையிற் சிறந்தோர்குல நாடான் என்றும், வானநாடன் (வானம் + நாடன் = வான் + அம் + நாடன்) என்னும் பெயருக்கு வானவர்குல அழகிய நாடான், சான்றோர் குல அழகிய நாடான் என்றும் பொருள் என்றறிக. சுரருக்கு வழங்கிய வானாடர் என்னும் பெயருக்கும் பெருமையிற் சிறந்தோர்குல நாடார்கள், சான்றோர்குல நாடார்கள் என்றே பொருள்.

இதே பிரகாரம் சுரருக்கு அந்தரநாடர், விண்ணாடர் என்னும் பெயர்களும் வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், கடல்சுவற வேல்விட்ட படலம்,
18-வது கவி.

[illegible]ந்தரவிமைந்தர்பயப் பாரிடத்தொருத்[illegible]
[illegible]த்திசைவேதிரத் ததும்பியெண்டிசை[illegible]த்தாக்க
அந்தரநாடரேத்த வுகல்விசும்[illegible]
[illegible]

அந்தரமென்பது தேவேந்திரனுடைய சுவர்க்கத்துக்குப்பெயர். ஆகையால் அந்தரநாடரென்றால் கற்பகநாட்டின் நாடார்கள், கற்பகநாட்டின் சான்றார் என்றே பொருள்.

திருவிளையாடற் புராணம், வெள்ளையானைச்சாபந்தீர்த்தபடலம்,
8-வது கவி.

அந்தலைவிண்ணாடருகணொத்து வெவ்வேறு
அத்தமனைக்கிசைந்தகையுறைகடாங்கொடுத்துச்
கைத்தலங்கள்கூப்பினர் கண்டார்கடவுளரி
னுத்தமனையர்ச்சித்துப் போந்தமுனியுத்தமனும்.

விண்ணுலகமென்பது தேவேந்திரனுடைய சுவர்க்கலோகத்தின் பெயரெனப்பார்த்தோம். ஆகையால் சாருக்கு வழங்கிய விண்ணாடர் என்னும் பெயருக்குக்கற்பகநாட்டின் நாடார்கள், கற்பகநாட்டின் சான்றார் என்றே பொருள்.

15. இந்திரனுக்கு அமரர்நாடன் என்னும் பெயர்.

திருவிளையாடற் புராணம், தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்,
6-வது கவி.

நன்பொருள்விரும்பினையதற்கிசையஞால
மின்புறுமகப்பெறு மகத்தினையியற்றி
னன்புறுமகப்பெறுதியென் றமரர்நாடன்
றன்புலமடைந்திட நிம்பருதாரான்.

அமரர்நாடனாகிய இந்திரன் மதுரைக்கு மலையத்துவசபாண்டியனிடம் சென்று நீ நல்ல காரியத்தைச் செய்யத்தொடங்கினதினாலே அதற்குத் தகுதியாக இப்பூலோக முழுதும் மகிழும்படியான பிள்ளையைத்தருகிற யாகத்தைச்செய்தால் இன்பங் கொடுக்கும் பிள்ளையைப்பெறுவாயென்று புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்யச்சொல்லி இந்திரன் போனானென்று பொருள்.

இக்கவியில் இந்திரனுக்கு அமரர்நாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு அமரியென்னும் பனையமுளைகையுருக்கும் குலத்தவனாகிய நாடானென்று பொருள். அல்லது போர்வீரராகிய க்ஷத்திரியகுலத்தவனாகிய நாடானென்றும் பொருள் கூறலாம். தேவேந்திரன் முதலான தேவர்கள் க்ஷத்திரியர் என்பதாக நான்காவது அத்தியாயத்தில் எடுத்துரைத்தோம்.

16. இந்திரன் ஐந்தருநாடன், தருநாடன் என்னும் பெயர்[illegible]

திருவிளையாடற் புராணம், [illegible]
[illegible] கவி.

[illegible]

விக்கிரமபாண்டியன் தன் புதல்வனாகிய இராஜசேகரபாண்டியனுக்குப் பட்டங்கட்டி வைத்து இந்திரலோக முதலிய லோகங்களுக்கெல்லாம் மேலான சிவலோகத்தையடைந்தான் என்று பொருள்.

இக்கவியில் கற்பகமுதலான பஞ்சதருக்களைக் குலவிருட்சமாகக் கொண்ட நாடான் என்று பொருள்படும் ஐந்தருநாடன் என்னும் பெயர் இந்திரனுக்கு வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், இந்திரன்முடிமேல் வளையெறிந்தபடலம்,

23-வது கவி.

வான்வழிவந்தமூன்று மன்னரும்பொன்னாடெய்தி
பூன்வழிகுலிசவைவேலும்பர்கோன் மருங்கிற்பக்கர்
தேன்வழிபோர்நின்கண்ணிச் சேரனுமார்த்தார்வேந்தனும்
கான்வழிதாருநாடன் காட்டியதவிசின்வைக.

இதன் கருத்து.

வான் வழி வந்த, அதாவது மென்மக்கள் குலத்திலுதித்த, அதாவது சான்றோர் குலத்தவர்களாகிய, சேரசோழபாண்டியர்களென்னும் மூவேந்தரும், உம்பர்கோன், அதாவது உயர்ந்தோர் என்னும் சான்றோர்குல அரசனாகிய இந்திரனிடம் தேவலோகமடைந்தபோது, பனம்பூமாலையையணிந்த சேரனும், ஆத்திமாலை சூடின சோழனும், இந்திரன் (தாருநாடன்) காட்டிய ஆசனத்தில் வீற்றிருந்தார்களென்பதாம்.

இக்கவியில் இந்திரனுக்கு வழங்குகிற தாருநாடன் என்னும் பெயருக்கு விருட்சகுலநாடான் என்று பொருள். அது கற்பகவிருட்சமென்று சொல்லவேண்டிய அவசியமில்லை.

17. இதே பிரகாரம் இந்திரனுக்கு தண்டநாடன், துறக்கநாடன் என்னும் பெயர்களும் வழங்கியதற்கு ஒவ்வொரு திருஷ்டாந்தம் கூறி முடிப்போம்.

திருவிளையாடற் புராணம், இந்திரன்முடிமேல் வளையெறிந்தபடலம்,

42-வது கவி.

வேட்டத்திற்பட்டசெங்கண் வேழம்போற்கொண்டுபோய்க்
கோட்டத்திலிட்டாளுகக் குன்றிறகரிந்தவென்றி
நாட்டத்துப்படிவத்தண்ட நாடன்மற்றதனைக்கேட்டுக்
காட்டத்தக்கனல்போற்சீறிக் கடுஞ்சமர்குறித்துச்செல்வான்.

இக்கவியில் இந்திரனுக்கு நாட்டத்துப் படிவத்தண்டநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. ஆயிரங்கண்களையுள் நிறைந்த தேகத்தை [illegible] என்று பொருள்.

திருவிளையாடற் புராணம், இந்திரன் பழிதீர்த்தபடலம்,

97-வது கவி.

வந்தர மங்கையர் கவரி மருங்குவீச
பக்கார [illegible] பூமாரி தூற்ற
[illegible] முடிகள் [illegible]
[illegible] துறக்கநாடன் [illegible]

வித்தமெனச்செம்மாந்து விம்முகாக
வெள்ளத்தானுடலழுந்த வுள்ளஞ்சென்று
சுந்தரநாயகன்சருவெ வெள்ளத்தாழ்ந்த
தென்முறையின் முறைசெய்தான் றுறக்கநாடன்.

இக்கவியில இந்திரனுக்கு துறக்கநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்குச் சொர்க்கலோகநாடான் என்று பொருள்.

18. இப்படியாக தேவேந்திரனுனவர் சான்றோர் என்றும், கிராமணிகள் என்றும், நாடாக்கள் என்றும் சொல்லப்படும் அமுதகுலத்தவரென்பதாகப்பார்த்தோம். தேவர்கள் தேவனென்னப்படும் தேவேந்திரனுடைய குலத்தவர்கள் வேறே யாரென்றும் பார்ப்போம்.

நெல்சன் துரை எழுதிய மதுரை நாடு என்னும் புஸ்தகத்தில், தேவேந்திரனவர் கௌதமரிஷி பத்தினியும், பஞ்சகன்னிகைகளிலொருவளாக பிராமணர்கள் அந்திசந்திகளில் பூசித்துவரும் தேவதைகளிலொருவளுமாகிய அகலிகை எனபவளைக்கற்பழித்த தருணத்தில மூன்று புத்திரர் ஜெனித்தாரகளென்றும், அம்மூவரிலொருவன் கௌதமரிஷி ஆச்சிரமத்துக்குத்திரும்பி வருகிறதைக்கண்டு பயந்து கதவுக்குப்பின்னால் சென்று மறைந்துகொண்டபடியால் அவனுக்குக் கள்ளன் என்னும் பெயருண்டாயிற்றென்றும், ஒருவன் மரத்தின்மேலேறிக்கொண்டபடியால் அவனுக்கு மரவன் என்னும் பெயருண்டாயிற்றென்றும், மூன்றாவது புத்திரனே தானிருந்த இடம் விட்டுப் பெயராமல் அகங்காரத்துடன் நின்றபடியால அவனுக்கு அகமுடையான் என்னும் பெயருண்டாகி அப்பெயர் பிற்காலத்தில் அகம்படியன் என்று மருவிற்றென்றும் ஓர் ஐதிகம் வரையப்பட்டிருக்கிறது.

"I may first however give a short legend touching their origin. It is believed that once upon a time the Rishi Gauttama left his house, and went abroad upon some business Devendra took advantage of his absence to debauch his wife; and three male children were the result When the Rishi returned one of the three was frightened and hid himself behind the door He was thenceforward called *Kallan* for did he not act like a Kallan or robber? Another climbed up a tree, and he was called *Maravan* from *Mara* a tree. But the third put on a bold defiant look [illegible] his ground: hence the name *Ahamudeyan* or the possessor [illegible] pride. This last name was corrupted by the vulgar, [illegible] well nigh [illegible] Ahambadiyan."

(Page [illegible] Chapter, Part II of the Madura Country by [illegible] Nelson, M.A.)

நெல்சன் துரை கூறும் இந்த ஐதிகத்தின்படி கள்ளர், மறவர், அகமுடையார் என்னும் மூன்று குலங்களும் தேவேந்திரனுக்கு அகலியையிடம் பிறந்த பிள்ளைகளின் மரபினராகையால் க்ஷத்திரியர். எப்படியெனில் தேவேந்திரனைப்போலவே அகலியை என்பவளும் க்ஷத்திரியப்பெண். சந்திரகுலத்திலுதித்த அரியசுவனுடைய மக்களாகிய பாஞ்சாலர்(80-வது பக்கம் பார்க்க) என்னும் க்ஷத்திரியர் ஐவரில் மூத்தவனாகிய முட்காலனுடைய குமாரன் பாககவன். பாகசுவனுக்கு திவோதாசன், அகலியை என்னும் இருவரும் இரட்டைப்பிள்ளைகளாக ஜெனித்தார்கள். இவ்விபரம் விஷ்ணு புராணம், நாலாமம்சம், 19-வது அத்தியாயத்தில் கண்டிருக்கிறது. ஆகையால் கள்ளர், மறவர், அகமுடையார் என்னும் மூன்று குலங்களும் தாய்வழி தோற்றத்தின்படியும் தகப்பன்வழித்தோற்றத்தின்படியும் சான்றோர்குலமென்னும் க்ஷத்திரியகுலத்தின் கிளைகளென்றறிகிறோம். அவர்கள் தேவேந்திரன் குலத்தவர்களாகையால் தேவர் என்னும் பட்டப்பெயர் நாளது வரை அவர்களுக்கு வழங்கிவருகிறது. அப்பெயருக்கும் அரசன், க்ஷத்திரியன் என்றே பொருளென்பதாக 45-வது பக்கத்தில் பார்த்தோம். நாடான் என்னும் நாட்டுக்கதிபதி, அரசன், க்ஷத்திரியன் என்றே பொருள். இப்பட்டப்பெயரும் சோழமண்டலத்திலுள்ள கள்ளருக்கு வழங்கிவருகிறது.

தாய் தந்தையென்னும் இருவழித்தோற்றத்தின்படியும் க்ஷத்திரியராகிய கள்ளர், மறவர், அகமுடையார் என்னும் மூன்று குலங்களும் க்ஷத்திரிய அரசாட்சிக்குப்பின்னிட்டு பிராமணராலும் சூத்திரராலும் தாழ்த்தப்பட்டு, தற்காலத்தில் அவர்கள் சூத்திரராக எண்ணப்படுகிறார்கள். இப்படியாக அவர்கள் மெள்ள மெள்ளத் தாழ்ந்துபோனார்களென்று காட்டும்படியான பழமொழியொன்று தென்பாண்டி நாட்டில் நாளது வரைவழங்கிவருகிறது :—

"கள்ளன் மறவன் கனத்த அகமுடையான்
மெள்ளமெள்ள வந்து வெள்ளாளனானனே"

என்னும் பழமொழியாலும் இம்மூன்று குலங்களும் தாழ்த்தப்பட்டதென்றறியலாம்.

N.B.—மறவர் என்னும்பெயர்கொண்ட வேறோர் சாதியுமுண்டு. அவர்கள் தாழ்வான சாதியார். அநுலோமமாய்ப் பிறந்த விராத்தியரென் [illegible] வச்சேர்ந்த சங்கரஜாதி [illegible] சாதிநூலாசிரியராகிய ஞானப்பிரகாச [illegible] பற்றி பார்ப்பாரத்தியுடன் களவுப் புணர்ச்சிசெய்த [illegible] வெள்ளாளன [illegible] விபரம் [illegible] அத்தியாயத்தில் 190, 191-வது பக்கங்களில் விளக்கியிருக்கிறதைப்பார்க்கவும்.

XIV-வது அத்தியாயம்

விட்டுணு குலவிளக்கம்.

1. விட்டுணு சிவனுக்கும் இந்திரனுக்கும் இனத்தான். 2. திருப்பாற்கடல் கடைந்தமுதெடுத்த அமரன். 3. சொர்பரவைமாயன், கௌவைநீர்க்கடவுள். 4. பனையைச்சிருஷ்டித்த திருநெல்வேலி நாட்டில் அமுதமிறக்கினவர்களிலொருவர். 5. முகுந்தன். 6. மாதவன். 7. ஸ்ரீதரன். 8. இலக்குமி ஸ்ரீதேவி. 9. முண்டகத்தாள். 10. விசையமகள், சயமகள். 11. கஞ்சப்பூ. 12. விட்டுணுவின் முக்கிய அவதாரங்கள்.

விட்டுணு என்னும் பெயருக்கு ஆகாயத்தையும் நடுங்கச்செய்கிறவர் என்று பொருள்: (விண + துணு) விண—ஆகாயம், துணுக்கம்—நடுக்கம். இவர் காசிபருக்கு அதிதியென்பவளிடம் பிறந்த குமாரன் என்பதாக மகாபாரதம் கூறும் விபரத்தை 16-வது பக்கத்தில் வரைந்திருக்கிறோம். காசிபரின் பிதாவாகிய மரீசிபிரசாபதியும், அதிதியின் பிதாவாகிய தக்கபிரசாபதியும், சிவபெருமானுடைய பிதாவாகிய தனுவும் ஏகசகோதரரென்பதாக மகாபாரதம் கூறுகிறது. சிவபெருமான் அமுதகுலச்சான்றார் என்னும் சாடார்க்கள் குலத்தவர் என்பதாகப் பதினோராவது அத்தியாயத்தில் விஸ்தாரமாய் விளக்கிக்காட்டியிருக்கிறோம். ஆகையால் [illegible] அந்தருக்குப்பெரியதகப்பன் பிள்ளையாகிய விட்டுணுவும் சிவபெருமானைப்போலவே சாடார்க்கள் குலத்தவராவர்.

நாரதீயபுராணத்தில் சிவன், பிரமன், விட்டுணு என்னும் மூவரும் நாராயணனுடைய மரபினர் என்று கண்டிருக்கிறது. நாராயணன் பார்வதி தேவியாரின் சகோதரனென்றும், நாராயணன் என்னும் பெயருக்கே அமுதகுலத்தில் பிறந்தவர் என்று பொருள் என்பதாகவும், அவர் அமுதகுலத்திலுதித்த சான்றான் என்றும் ஒன்பதாவது அத்தியாயத்தில் 170-வது பக்கமுதல் 172-வது பக்கம் வரை ருசுப்படுத்தியிருப்பதாலும், நாராயணனுடைய மரபினராகிய விட்டுணுவும் அமுதகுலச் சான்றானென்றறியலாம்.

இலிங்கபுராணத்தில் சிவனிலிருந்து பிரமனும் விட்டுணுவும் தோன்றினார்களென்று கண்டிருக்கிறது. இது உண்மையாயிருந்தாலும் விட்டுணுவானவர் சிவபெருமானுடைய குலத்தவர் என்பதற்கையமில்லை.

இதன்றியில் விட்டுணுவானவர் தேவேந்திரனுடைய இளையசகோதரனென்றும், அதனால் அவருக்கு உபேந்திரன் என்று பெயரென்பதாகவும் 35-வது பக்கத்தில் பார்த்தோம். தேவேந்திரனானவர் அமுதகுலச் சான்றார் என்னும் நாடாக்கள் குலத்தவர் என்பதாக முந்தின அத்தியாயத்தில் விளக்கிக்காட்டியிருப்பதால், அவருடைய இளைய சகோதரனாகிய விட்டுணுவும் தேவேந்திரனைப்போல நாடாக்கள் குலத்தவர்தான். ஆகையால் விட்டுணுவின் குலத்தை விளக்கிக்காட்டும் சிலகுறிப்புகளை இந்த அத்தியாயத்திலே வரைவோம்.

2. திருப்பாற்கடல் கடைந்து அமுதமுற்பத்தி செய்தகாலத்தில் விட்டுணுவானவர் தாமே முகாமையாய் நின்று அமுதமுற்பத்தி செய்தாரென்றும், பதினேழ் என்னும் தேவாமிர்தம் கடைந்தெடுத்தபோது, அசுரரை வஞ்சித்து சுரருக்கு அமுதளித்தாரென்றும், இதனால் அவருக்குப் பயோததி, அதாவது, அமுதக்கடல் என்றும், மருந்துவந்தளையமரருக்கருளியமாயோன், அதாவது, தம்மை வணங்கிய தேவர்களுக்கு அமுதருளிய திருமால் என்றும் பெயர்களுண்டாயிற்றென்றும் 148-வது பக்கமுதல் 150-வது பக்கம்வரை விவரித்திருக்கிறோம்.

விட்டுணுவானவர் அமுதமுற்பத்தி செய்ததாகச்சொல்லப்படுமிடத்திலேயே அவர் அமுதகுலத்தவர் என்று காட்டும்படிக்காக அவரை அமரன் என்று விளம்பியிருக்கிறது.

கூர்மபுராணம், இரா[illegible]த்தவத்தியாயம்,

57-வது கவி.

மாயிருஞ்சினத்தாழியாமத்து மந்தரமாமதிநியாய்க்
[illegible]புனல்வெண்டயிராக
[illegible]மால்முதலியவமரர்
[illegible]

இக்கவியில் மால்முதலியவமரர் என்று கூறியிருப்பதால் திருமாலும் அமரன், அதாவது, அமுதகுலத்தவன் [illegible] அவர் அமுத குல[illegible] தான் அமுதமுற்பத்தி [illegible]

3. அவர் அமுதகுலத்தவரானபடியால் தான் அருணாசல புராணிகர் அவரைச்

"சொற்பாவைமாயன்"

அதாவது, அமுதக்கடல் விட்டுணு என்றும், இலிங்கபுராணிகரவரைத்

"தேனவைநீர்க்கடற்றுயிலுங்கார்மேகவண்ணன்"

அதாவது, பதிநீர்க்கடலில்பள்ளிகொண்டவரும் கறுத்த மேகம்போன்றவருமாகிய விட்டுணுவென்றும், கூர்மபுராணிகர் அவரைக்

"கவ்வைநெடுநீர்வாவிக்கடவுள்"

அதாவது, பதிநீர்க்கடல் கடவுள் என்றும் பெயர் கூறியிருக்கின்றனர். இதற்குரிய ஆதாரங்களை 151-வது பக்கத்தில் எடுத்துரைத்திருக்கின்றோம்.

4. அவர் அமுதகுலத்தவர் என்னும் ஐதீகத்தை வைத்துக்கொண்டே தாலவிலாசத்தில் சிவன், பிரமன், விட்டுணுவென்னும் மூவரும் ஆலோசனைபண்ணிப் பனையைச்சிருஷ்டித்தார்கள் (156-வது பக்கம்) என்றும், திருநெல்வேலிப்புராணத்தில் அம்மூவரும் சான்றோரைக்காக் கும்பொருட்டுப் பனையமுதுற்பத்தி செய்தார்கள் (168-வது பக்கம்) என்றும் சொல்லியிருக்கிறதென்று எளிதிலறியலாம்.

5. சிவன், பிரமன், விட்டுணுவென்னும் மும்மூர்த்திகளில் மூன்றுவது மூர்த்தியாகிய விட்டுணுவானவர் அமுதகுலத்தவரானபடியால் அவருக்கு முகுந்தன் என்னும் பெயர் பலவிடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது:—

மு = மூன்றுவது

குந்தன் = அமுதகுலத்தவன் (குந்தி—பதநீர்)

என்று பொருள். விட்டுணுவுக்கு வழங்கிய இப்பட்டப்பெயர் தற்காலத்திலும் தென்பாண்டி நாட்டிலுள்ள சான்றோருக்குப்பட்டப்பெயராக வழங்கிவருகிறது. தென் திருநெல்வேலி நாட்டிலுள்ள சான்றோரில் ஒரு பிரிவார் முகுந்தர், முக்குந்தர், முக்கந்தர் என்னும் பட்டப்பெயர் கொண்டுவரை தரித்துவருகிறார்கள்.

விட்டுணுவுக்கு முகுந்தனென்னும் பட்டப்பெயர் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவோம்:—

கூர்மபுராணம், இந்திரத்துய்மன் முத்திபெற்றவத்தியாயம், [illegible] வது கவி.

[illegible]

இக்கவியில் 'பாற்கடல்துயிலும்முகுந்தன்' என்கிறார். பாற்கடல் என்பது அமுதக்கடலைக்குறிக்கிறதென்று பார்த்தோம். ஆகையால் இப்பெயருக்கு மதுக்கடலுளாழ்ந்து மயக்கமெய்[illegible]ாண்ட மூன்றாவது அமுதகுலமூர்த்தி என்றும், மதுவை அபரிமித[illegible]ய்ப்பானம் செய்கிறவர் என்றும் பொருள்.

[illegible] புராணம், பார்வதி தோற்றமுரைத்தவத்தியாயம்,
1-வது கவி.

போதுறைகட வண்மீட் டெலும்புத்தவை
யோதுகென் றின்னரம் புளரும்யாழ்முனி
நீசறுமகபதி கேட்பத்தேம்பழி
தாதவிழ்பசுந்துளாய் முகுந்தன் சாற்றுவான்.

இக்கவியிலும் விட்டுணுவுக்கு வழங்கி[illegible]ம் முகுந்தன் என்னும் பெயருக்கு மூன்றாவது அமுதகுலமூர்த்தி என்றே பொருள்.

அருணாசலபுராணம், ஆதித்தசருக்கம்,
7-வது கவி.

முகுந்தர்தேடமேற்பெவற்பின் முடியின்மேவுமுன்னமே
மிகுந்தசோதிநள்ளிலும் வெடித்தெழுந்துவெம்மையாய்
புகைந்துசெலவிரதழவர் புரமெனப்பொரித்ததே
யுகைந்தபச்சைவாசியோ வுலர்ந்தவாசியானதே.

விட்டுணுவுக்கு வழங்கிய இப்பட்டப்பெயரைத் தற்காலத்தில் கொற்கையென்னும் புராதன பாண்டியராஜதானி நகருக்கருகிலுள்ள சான்றார் தரித்துவரும்

நாகமணிமார்த்தாண்ட முகுந்தர்
சிவனணைந்த பெருமாள் முகுந்தர்

என்பவற்றைப்போன்ற பட்டப்பெயருடன் ஒத்திட்டுப்பார்க்கில் விட்டுணுவானவர் பூர்வகாலத்திலிருந்த சான்றான் என்று பிரத்தியக்ஷமாய் விளங்கும். வேறொரு குலத்தவரும் இப்பட்டப்பெயர் தரித்துவருகிறதில்லை.

இலிங்கபுராணம், சத்தியோசாதத்தோற்றமுரைத்தவத்தியாயம்,
4-வது கவி

துளிநறப்பிலிற்றி முகுதவாயவிழ்க்குந்
தவளவணி முகுந்தனுங்கொழு
[illegible]த்தன்ன முகையவிழ்கமலத்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இக்கவியில் துளபமாலையணிந்த முகுந்தனுக்கு வழங்கிய அடைமொழிகளானவை முகுந்தன் என்னும் பதத்தின் மூலபொருளுடன் சம்பந்தப்பட்ட பதங்கள். துளி-துளிதுளியாக, நறு-தேவாமிர்தத்தை, பிலிற்றி-கொப்பளித்து, முருகு- பதிநீர் என்னும் தேவாமிர்தத்தால், வாயவிழ்க்கும்-முகமலர்ச்சி கொண்ட, முகுந்தன்-மூன்றாவது அமுதகுலத்தவன் என்று கூறியிருப்பதாலும் விட்டுணுக்கு வழங்கிய முகுந்தன் என்னும் குலப்பெயரின் மூலார்த்தம் தெளிவுற அறியலாம்.

திருவருணைக்கலம்பகம்,

கரடித்தாழிசை.

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வதைத்தனையோ
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி தொடுத்தனையே.

இவ்வாதாரங்களினாலே முகுந்தனாகிய விட்டுணுவானவர் முகுந்தர் என்னப்படும் சான்றார் குலத்தவரென்றறியக்கடவீர்.

6. விட்டுணு சான்றார் குலத்தவரானபடியால் அவருக்கு மாதவன் (மாதவப்-பதிநீர்), அதாவது அமுதகுலத்தவன் என்னும் பெயர் :-

திருவருணைக்கலம்பகம்,

6-வது கவி.

யாதவர்தலத்துநெடுமாதவன்கருப்புடைய வேணமிருகத்துருவமாய்
வேதமொழிபெற்றவய னேதிப்பெனப்பறவை வேடமுமெடுத்ததிலையோ
ஓதருணைவித்தகரை மூவரிலொருத்தரென வோதியிமெய்ப்பமதியீர்
சீதமதிவைத்தமுடி பாதமலரைச்சிறிது தேடுதனினைத்தபரமே.

இக்கவியில் பன்றிவடிவமாகிச் சிவபெருமானுடைய அடியைக்கண்டுபிடிக்கவேண்டுமென்று பூமியைக்கிழித்துச்சென்றவிட்டுணுவை

“ யாதவர்தலத்துநெடுமாதவன் ”

என்கிறார். யாது என்றால் பனையமுது ; ஆகையால் யாதவன் என்றால் அமுதகுலத்தவன், சான்றான் என்று பொருள். அவ்விதமாகவே மாதவம் என்றாலும் பனையமுது ; ஆகையால் மாதவன் என்றாலும் அமுதகுலத்தவன், சான்றான் என்றே பொருள். ஆகவே, “ யாதவர்குலத்து நெடுமாதவன் ” என்று விட்டுணுவுக்கு வழங்கிய பெயருக்கு அமுதகுலத்தவர்கள் மரபிலுதித்த நெடுமால் என்னும் சான்றான் என்று தாற்பரியம்.

அருணாசலபுராணம், திருமலைச்சருக்கம்

24-வது கவி.

வே[illegible]பெற்றன [illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஷை புராணம், திருவவதாரச்சருக்கம்.
84-வது கவி.

இலகுமங்கையரனேகர் சீராஞ்சனமெடுப்ப
உலகபாலகிருமருங்கினு டடர்தொதுக்கத்
திலகமாதவனிருகை மேலொருகரஞ்சேர்த்திட்
டலகிலாமணியிழைத்ததோர் மண்டபத்தணைந்தார்.

இவ்விரண்டு கவிகளிலும் விட்டுணுவுக்கு அமுதகுலத்தவன் என்று பொருள்படும் மாதவன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவருணைக்கலம்பகம்.

மணிகொண்டநெடுங்கடலில் விழிவளருமாதவனும்
அணிகொண்டபுண்டரீக மகலாதசதுமுகனும்
ஞானக்கண்ணதுகொண்டு நாடோறுமுணராதே
ஏனத்தின்வடிவாகி யெகினத்தின்வடிவாகி.

இக்கவியில் விட்டுணுவைத்திருப்பாற்கடலில் நித்திரைசெய்த மாதவன் என்று கூறியிருக்கிறது. அதாவது அமுதையதிகமாக அருந்தி மயக்கங்கொண்ட அமுதகுலத்தவன், சான்றான் என்று பொருள்.

7. விட்டுணு அமுதகுலத்தவரானபடியால் அவருக்குச் சீதரன் என்னும் பெயர்.

அருணசலபுராணம், திருக்கண்புதைத்தசருக்கம்,
40-வது கவி.

சோதிபெறுகரநக மறையவம்பு சோரிகையினுற்றாய்மையாய
மாதனையெவர்வீ கலந்தமதிழ்க்கியினும்பொன்கலந்துமருவுநீராற்
போதவரிசனக்கரையைப்பெருநுகரன்மதுவுடையப்பொருத்தலாலே
சீதரனைநிகராகத் திருநிறந்திசைகளெல்லாஞ்சிறந்ததன்றே.

இக்கவியில் விட்டுணுவுக்கு வழங்குகிற நாமம் சீதரன்.

சீதரன் = சீத + அரன்
= பனைபழுத + கடவுள்
= அமுதகுலத்திலுதித்த கடவுள்

என்றுபொருள். நீரானது பெருக்கெடுத்தவரும் சேயாற்றையும் அமுதகுலக்கடவுள் (சீதரன்) எனனும் விட்டுணுவையும் இக்கவியில் செம்மையிச்சிலேடையாக வர்ணித்திருக்கிறது. இதன் தாற்பரியம்.

[illegible]பெறுகரநக மறையவம்புசோரிகையினால்

(சேயாறு) ஒளிபொருந்திய துதிக்கையையுடைய யானைகள் [illegible] சலத்தைப்பெருக்கி வருவதாலும்

(விட்டுணு) ஒளிபொருந்திய கரன் என்னும் [illegible]றுடைய தேசமுறை பப்பரன்னக்களைச்சொரிதலாலும்

தாயினைவரை மாதரைப்போலங் கலந்த மகிழ்ச்சியிறால்

(சேயாறு) தூய்மையாய விசாலம் பொருந்திய கரையெல்லாம் சீர்பரவி வரும் சுக்கிரகட்கிறுதும்

(விட்டுணு) தூய்மை பொருந்திய கோபிகாஸ்திரிகளைக் கலந்த சந்தோஷத்தினாலும்

போலக் கலந்து மருவு நீரால்

(சேயாறு) பொற்பொடிகளைத் திரட்டிக்கொண்டுவரும் சலத்தாலும்

(விட்டுணு) இலக்குமியைக் கலந்து பொருந்தும் தன்மையாலும்

போதவரிசனங் கரையைப் பெருத்தலால்

(சேயாறு) நீண்ட, மஞ்சள் கழனிகள் இருகரையிலும் பெருகியிருப்பதாலும்

(விட்டுணு) அறிவுடையோராகிய அமுதகுலத்தவர்கள் அளவிறந்து பெருகியிருப்பதாலும்

மதுவுடையப் போந்தலாலே

(சேயாறு) வசந்தகாலத்தில் கலையுடைந்து சந்து (உடைப்பு) வழி நீரோடுவதாலும்

(விட்டுணு) மதுவென்னும் அசுரனைச் சாகும்படி யுத்தஞ்செய்ததாலும் சேயாறானது விட்டுணுவைப்போல எங்கு திசைகளிலும் சிறந்ததென்கிறார்.

இக்கவியில் விட்டுணுவுக்கு அமுதகுலக்கடவுளென்று பொருள்படும் சீதரன் என்னும் பெயரும், விட்டுணுவின் குலத்தவர்களாகிய யாதவர்கள் (யாது-பனையமுது) என்னும் அமுதகுலத்தவர்களுக்கு போதவரிசனம் என்னும் பெயரும் வழங்கியிருக்கின்றன:—

போதவரிசனம் = போதம் + அரி + சனம்

போதசனம் = போதம் + சனம்

= அறிவு + சனம்

= அறிவுடையோர் குலம்

= சான்றோர் குலம்

அரிசனம் = அரி + சனம்

= பனையமுது + சனம்

= அமுதகுலத்தவர்கள்

என்று பொருள். ஆகையால் விட்டுணுவின் மரபினருக்கு வழங்கிய போதவரிசனம் என்னும் பெயருக்கு சான்றோர் என்னும் அமுதகுலத்தவர் என்று பொருள்.

(அருணாசலபுராணம், மலைச்சிறப்பு [illegible])

செய்யுள்

பூவிருந்து திசைகளெலா மிருந்தட்டமூர்த்திதனைப் பூசித்தார்க

ளாதலினுற்பமுயபடிதமதுபடி விகலியடைந்தருள்பெற்றார்க

ளேதமறுக்கபடி [illegible] மறைப்பயனெனு ருவாகியிருந்தபோதர்

சீதரனும் பதங்கிரட தடனாதியரன் முடிமேனுத்தேடிகாணுதேயி [illegible]

இக்கவியிலும் விட்டுணுவுக்குச்சித்ரன் என்னும் நாமம் வழங்கியிருக்கிறது.

அருணசலபுராணம், திருநகரச்சருக்கம்,
63-வது கவி.

சித்ராகேட்டியென் வரவின்செய்கையைக்
காததாதுயிரங் கனைத்திடுகேடம்
நாதியாள்முடியறிந் தனுவினென்னை
வோதிருன்கைதையுமுள்ளதேன்றதே.

இக்கவியில பிரமன் விட்டுணுவைப்பார்த்துச்சித்ரா என்று விளிக்கிறார்.

கூர்மபுராணம், கண்ணனவதாரத்தவத்தியாயம்,
6-வது கவி.

ஆதவித்பரித்தவொல்லா வதயவென்றுரைந்துகிற்ப
மேதகுமைமர்சித்தர் விஞ்சையர்யகர்சூழ
பூவமடக்கைதயோடும் பாற்கடற்புறத்தின்மேவிச்
சித்ரப்போற்றிவேத னிக்கினவிசெப்பச்சொன்னான்.

இக்கவிகளிலெல்லாம் விட்டுணுவுக்கு வழங்கிய சித்ரன் என்னும் பெயரும் குவிளக்கப்படுமென்றறிக.

8. விட்டுணுவின் மனைவியாகிய இலக்குமிக்குச்சமஸ்தானமாய் வழங்குகிற சீதேவியென்னும் பெயராலும், அத்தேவியார் குலம் விளங்கும். சீதேவியென்னும் பதமானது சீது + தேவியென்பதின் மரூஉ.

சீது + தேவி = பனையமுது + அரசி
= அமுதகுலத்தவளாகிய அரசி

என்பது பொருள். சீதேவியின் குலம், அமுதகுலமென்று அத்தமக்கிக் காட்டும்படியாகத் தமிழில்

“ சீதேவிதான் பிறந்த திருப்பாற்கடல்
தனிலே மூதேவியென் பிறந்தாள் ”

என்னும் பழமொழி நாளது வரை வழக்கத்தில் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

தேன்மொழிச்சவாயன் திருவேங்கடத்துடனே
ஏன்பிறந்தான் கன்னுக்கினியானே—வான்சிறந்த
சீதேவியாருடனே செய்யதிருப்பாற்கடலில்
மூதேவியேன்பிறந்தாள் சொல்.

(தனிப்பாடல்).

இதனால் சீதேவி உற்பத்தியானது திருப்பாற்கடல் என்று புராணங்களில் கூறியவாறு, அதனின் வழக்கச்சொல்லாலும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாலும்; திருப்பாற்கடல் என்பது பனைமரத்தைக் குறிக்கிறதென்று, மேல் 151, 152-வது பக்கங்களில் விளக்கிக்காட்டியிருக்கிறோம்.

யாலும், சீதேவியென்னும் பெயருக்கே அமுதகுல அரசியென்று பொருளாகிறபடியாலும், விட்டுணுவின் மனைவியும், பிருகுமுனிவரின் மகளும், அசுரகுலரிஷியாகிய சுக்கிரனுக்குத் தங்கையுமான சீதேவி அமுதகுலமாதென்றறிக.

சீதேவியின் சகோதரி மூதேவியென்று பார்த்தோம். மூ + தேவி என்றால் மூத்த அரசியென்று பொருள். மூ என்றால் மூப்பு என்று பொருள் (சதுரகராதி பார்க்க). சீதேவி அதிஷ்டமும், மூதேவி துர் அதிஷ்டமும் விளைவிக்கும் தேவதைகளாக இந்துக்களினும் எண்ணி வருகிறார்கள். நாடாண்டு வந்த நாடாக்கள் குலத்தவர்களாகிய இவ்விருமாதுக்களும், நாட்டை அன்னியர் கைப்பற்றினபின்பு முதலாய் அதிஷ்ட துர் அதிஷ்டங்களையாண்டு வருகிறார்கள் போலும்.

9. இலக்குமிக்குச் சீதேவியென்னும் அமுதகுலப்பெயர் வழங்கினதாகப் பார்த்தோம். அத்தேவியாருக்கு அதே சம்பந்தமாய் நூல்களில் வழங்குகிற வேறொரு பெயரையும் பார்க்கலாம்.

அருணாசலபுராணம், இடப்பாகம்பெற்ற சருக்கம்,
57-வது கவி.

முண்டகமண்டபம்பயிலும் புலோமிசையு முறுஞ்சவளமுளரிமானுங்
கண்டகமும்வழிப்பாலுமொழித்துவர நிலமகடன்கைகணீட்ட
அண்டர்குலமடந்தையருமுனிவர்குல வனிதையருமருவிப்பூந்தேன்
விண்டவிடுஞ்சேறகற்றிமலரினறுந் துகள்சொரிந்து வழிகளாக்க.

தென்னாற்காடு ஜில்லாவிலிருக்கும் திருவண்ணாமலையென்னுமனூருக்கருகாமையிலுள்ள மலையைப் பார்வதிதேவியார் சிவபெருமானுடைய உத்தரவின்படி வலமாகச்சுற்றி வரும்போது, விட்டுணுவின் மனைவியாகிய இலக்குமியும், தேவேந்திரனுடைய பாரியாகிய புலோமிசையும், பிரமனின் பத்தினியாகிய வெண்டாமரை மிசையுள்ள சரசுவதியும், அம்மன் செல்லும் வழியிலிருக்கும் முள்ளுகளையும், கல்லுகளையும் ஒதுக்கிக்கொண்டு வந்தார்கள், பூமிதேவியானவள் தன் கைகளை நீட்டி அம்மனைச்சாக்கிரதையாய்த் தாங்கிவந்தாள்; சான்றோர்குலப்பெண்களும் முனிவர்குலப்பெண்களும் புட்பத்திலிருந்து வழியும் தேனை அருவி போல் வழியில் தெளித்து தூசியைப்போக்கி, புட்பத்துக்குள்ளிருக்கிற பராகப்பொடிகளைக்கொட்டி, அம்மன் செல்லும் வழியில் வாசனை பரிமளிக்கச் செய்தார்கள் என்று பொருள்.

இக்கவியில் இலக்குமி தேவிக்கு வழங்கியிருக்கிற பெயர் முண்டகமண்டபம்பயில் என்பதாம். இதன் தாற்பரியம்.

முண்டகமண்டபம்பயில் = முண்டகம் + [illegible] + [illegible] + [illegible]
= பனைமுதல் + [illegible] + [illegible]
= அமுதகுலத்தின் [illegible]
[illegible]
[illegible]

என்று பொருள். இத்தாற்பரியமானது இலக்குமி தேவிக்கு வழங்குகிற சீதேவியென்னும் பெயரின் பொருளுக்கு ஒத்திருக்கிறது.

10. பார்வதி தேவியாருக்குச் சயமகள், விசயை என்னும் பெயர்கள் வழங்கினதாகவும், அவ்விருபெயர்களுக்கும் பகைஞருக்[illegible] பத்தியைச்செய்யும் குலத்தவளென்று தாற்பரியமாகிறதென்றும் சிவன் குலவிளக்கவத்தியாயத்தில் 273, 274-வது பக்கங்களில் விரித்துரைத்தோம். தாமரைமலர்போன்ற மேனியையுடையவளானதால் கமலினி, கமலை, கமலாலயை என்று பெயர்கொண்ட இலக்குமிக்கும் சயமகள், விசயமகள் என்னும் பெயர்கள் வழங்கியிருப்பதாலும் இலக்குமி அருகதகுலத்தவளென்றறியலாம்.

அருணாசலபுராணம், திருக்கண்புதைத்த சருக்கம்,

10-வது கவி.

விசயமகள் குடைபிடிப்பச் சயமகள்பொன்
னடைப்பைகொடு விரைந்துமேவ
வசையுமணிக் கவரியிருள் டருந்துயெங்
கமலினியு மருகில்வீசத்
திசையிலின் இவ்வெதிக்குத் தாளமணிச்
சிவிகையின்மேற் சென்றபோது
இசைபெருகு மறம்பெருகப் புனல்பெருகும்
புகழ்க்கம்பை நதியைச்சேர்ந்தாள்.

இக்கவியிலே பார்வதிதேவியார் முத்துப்பல்லக்கிலேறித் கம்பை [illegible] நதிகளிலொன்றில் நீராடச்சென்றபோது விசயமகள் என்னும் இலக்குமி குடைபிடித்ததாகவும், சயமகள் என்னும் இலக்குமி பொன்னடைப்பை பற்றிவந்ததாகவும், கமலினி என்னும் இலக்குமியும் அருகிருந்து இரண்டு பக்கங்களில் நின்று சாமரை வீசினதாகவும் புராணத்திற் கூறுகிறது.

இக்கவியில் இலக்குமிக்கு வழங்கிய விசயமகள், சயமகளென்னும் பெயர்கள் குலவிளக்கப்பெயர்களென்றும், கமலினி என்னும் பெயரானது சிறவிளக்கப்பெயரென்றுமறிக. இலக்குமி பாற்கடலிற் பிறந்தாளென்றும் தாமரை மலரிற்றோன்றினளென்றும் கூறுவன [illegible]மாக நம்புவதற்கில்லை. எப்படியெனில் பாற்கடலில் பிறந்ததுண்மையானால், தாமரையில் பிறந்தது பொய்; பின்னையது மெய்யானால் முந்தியது பொய். ஆகிலும் இரண்டும் பொய்யல்ல. பாற்கடலென்பது இலக்குமியின் [illegible]த்தையும், தாமரையென்பது நிறத்தையும் குறிக்கிறதென்றறிக.

11. பார்வதிதேவியாருக்கு அருகதசாமிகளுடைய [illegible] பெயர்களில் கஞ்சமர்த்து என்னும் பெயரும் ஒன்றென்றும், அதற்கு அருகக்குலமாதென்று பொருள் என்றும் 261-வது பக்கத்தில் விவரித்தோம். அப்பிரகாரம் இலக்குமிக்கும் கஞ்சப்பூவை, அதாவது

கஞ்சம்—பனைமுது
பூவை—பெண்

என்னும் பெயரும் வழங்கினதாகப்பார்க்கலாம்.

அருணாசலபுராணம், திருமலை வலம்புரிசருக்கம்,
22-வது கவி.

மாவியாழத்திற்செய்யமணிவரை வலமாய்ச்சூழ்வோர்
மூவரும்புகழத்தேவர்முனிவர் தங்குரவராவார்
தாவிலாவெள்ளிவாரந் தனில்வலம்புரிந்தோர்கஞ்சப்
பூவையைப்புணரும்பூவைப் புணருமால்பரத்திற்சேர்வார்.

வெள்ளிக்கிழமையில் அருணாசலத்தை வலமாய் வந்தவர்கள், அமுத குலமாதாகிய இலக்குமியை (கஞ்சப்பூவை)ச்சேருகிறவரும், பூமிதேவி யையும் (பூ-பூமி) சேருகிறவருமாகிய விட்டுணு பதவியையடைவார்கள் என்று பொருள். இலக்குமியும் பூமிதேவியும் விட்டுணுவின் மனைவிக ளென்று சதுரகராதியாலுமறிக. பூ என்றால் பூமியென்று பொருள் கொடுப்பதற்கும் அதுவே ஆதாரம்.

இவ்வாதாரங்களினாலே தேவேந்திரனுடைய தம்பியும் சிவபெரு மானுடைய இனத்தானுமாகிய விட்டுணுவானவர் அமுதகுலச்சான்று ரென்றறியலாம்.

12. சான்றானாகிய விட்டுணுவானவர் பத்து அவதாரமெடுத்தார் என்று சாதாரணமாய்ச்சொல்லப்படுகின்றன. அவ்வவதாரங்களாவன :

(1) மச்சாவதாரம். பிரமாவானவர் முன்னொரு காலத்தில் கண் துயில்கின்றவேளையில் சோமகனென்னும் அசுரன் வேதங்களையெல் லாம் கவர்ந்துகொண்டு கடலுக்குள் செல்ல, பிரமன் முதலிய தேவர்க ளின் வேண்டுகோளால் விட்டுணு மச்ச ரூபமாக அவதரித்துக்கடலி னுட் புகுந்து, அவ்வசுரனைத்தேடிப்பிடித்துக்கொன்று, அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக்கொணர்ந்து, அன்னவடிவமாய் அவற்றைப் பிரமனுக்கு உபதேசித்தார் என்பதாம்.

(2) கூர்மாவதாரம். துருவாசமுனிவரிட்ட சாபத்தால் சுவர்க்க லோகத்தின் செல்வங்களெல்லாம் கடலினுட்புகுந்து ஒளித்துக்கொள்ள அவற்றையெல்லாம் மீளவும் பெறும்பொருட்டு, இந்திரன் முதலிய தே வர்கள் விட்டுணுவின் நியமனப்படி அசுரர்களுடன் கூடிச்சென்று, மந் தரமலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் நாகத்தைக்கயிறாகப்பூட் டித்திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, அம்மந்தரகிரி கடலினுள்ளே சென்று அழுந்திவிடாதபடி, விட்டுணுவானவர் கூர்மருபந்தரித்து, அம்மலைக்கு ஆதாரமாக எழுந்திருந்தார் என்பதாம்.

(3) வராகாவதாரம். ஒரு காலத்தில் இரணியாக்கனென்பவன் பூமி யைப் பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு [illegible] முழுகிப்போன பொழுது, தேவர் முனிவர் முதலியோர் [illegible] விட்டுணு

வானவர் வராக ரூபமெடுத்து இரணியாக்கனைக்கொன்று, பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக்கொண்டு வந்து, பழையபடி விரித்தருளினார் என்பதாம்.

(4) நரசிங்காவதாரம். தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், ஐம்பெரும் பூதங்களாலும், ஆயுதங்களாலும், தனக்கு மரணமில்லாதபடி அளவற்ற வரங்களைப்பெற்று, தேவர் முதலிய யாவர்க்குங் கொடுமையியற்றித் தன்னையே கடவுளாக வணங்கச் செய்தவனும், வராகாவதாரத்தில் கூறிய இரணியாக்கனுடைய சகோதரனுமான இரணியன் என்பவன், தன் குமாரனும் விட்டுணு பக்தனுமான பிரகலாதாழ்வான் தன் பெயர் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயண நாமஞ் சொல்லி வரவே, அம்மகனைக்கொல்லுதற்கு என்ன உபாயஞ்செய்தும் அவன் மரணமடையாதபடியால், இரணியன் மகனை நோக்கி

“நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கு உளன் காட்டாய்”

என்று சொல்லப் பிரகலாதாழ்வான் தன் பிதாவைப்பார்த்து

“சாணினுமுளனோர் தன்மை யணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக் குன்றினுமுளன்இந்நின்ற
தூணினுமுளன்நீசொன்ன சொல்லினுமுளன் இத்தன்மை
காணுதி விரைவின்”

என்று சொல்ல, உடனே இரணியன் சினந்து தூணைப்புடைக்க, அத்தூணில் நின்றும் விட்டுணுவானவர் நரசிங்க உருவமாய்த்தோன்றித் தம் கைநகங்களால் இரணியன் மார்பைப்பிளந்து அழித்திட்டார் என்பதாம்.

(5) வாமனாவதாரம். மகாபலி என்னும் அசுரன் தன் வல்லமையால் இந்திரன் முதலிய தேவர்களையெல்லாம் ஜெயித்து மூவுலகங்களையும் தன் வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள் விட்டுணுவைச் சரணமடைந்துவேண்ட, அவர் குள்ள வடிவான வாமனாவதாரமெடுத்து, வேள்வியியற்றிய மகாபலி சக்ரவர்த்தியிடஞ் சென்று, தவஞ் செய்தற்குத் தன் காலடியால் மூன்றடி மண் வேண்டி, அதை அவன் கொடுத்தற்கிசைந்து தத்தஞ் செய்த நீரைக்கையிலேற்று, உடனே திருவிக்கிரமனாக ஆகாயத்தை யளாவி வளர்ந்து, ஓரடியால் மண்ணையும், ஓரடியால் விண்ணையும், மற்றோரடியால் அச்சக்ரவர்த்தியையும் பாதாளத்திலழுத்தினார் என்பதாம்.

(6) பரசுராமாவதாரம். க்ஷத்திரியரோர் காலத்தில் அடங்காச்செருக்கினராய் ஒருவருக்கொருவர் கொடுமையியற்றிவர்தபடியால், அவர்கள் செருக்கையடக்கும்பொருட்டாக விட்டுணுவானவர் சந்திரகுலத்தில் தோன்றிய (68-வது பக்கம் பார்க்க) சமிதக்கினி என்னும் க்ஷத்திரியனுக்கும் சூரியகுலத்தில் தோன்றிய இரேணுகை என்னும் க்ஷத்திரியப்பெண்ணுக்கும் பரசுராமராய் அவதரித்து, தம்முடைய பிதாவாகிய சமிதக்கினி [illegible] [illegible] அவனைக்கொன்றிட்ட காரணமாகக் கார்த்

வீரியார்ச்சுனனையும் அவனுடைய குமாரர்களையும் கொன்றழித்து, இருபத்தொரு தலைமுறைகளாக மற்றும் க்ஷத்திரிய வம்சங்களை இம்சித் துக்கடைசியாகத் தசரதமகாராஜாவின் குமாரனுகிய இராமமூர்த்தியால் கெர்வம் அடக்கப்பட்டாரென்பதாம்.

(7) இராமாவதாரம். தேவர்களெல்லாரும் இராவணாதி இராட்சதர் களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் விட்டுணுவைச்சரணமடைந் துவேண்ட, அவர் சூரியகுலத்தில் தோன்றி அயோத்திமாநகரிலரசு புரிந்த தசரதசக்ரவர்த்தியின் குமாரனுகிய இராமராக அவதரித்து, சீதையை இராவணன் சிறையிட்ட காரணமாக அநேக இராட்சதரை அழித்தாரென்பதாம்.

(8 & 9) பலராமகிருஷ்ணாவதாரங்கள். துஷ்ட அசுரர்கள் பலரும் கெட்ட அரசர்கள் பலரும் ஒருங்கே கூடி வசிப்பதாலுண்டான பூமி பாரத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு, பூமிதேவியின் பிரார்த்தனையின் படி தேவர்கள் வேண்டிக்கோளால் விட்டுணுவானவர் வசுதேவருடைய புத்திரராகிய பலராமகிருஷ்ணர்களாக அவதரித்தார் என்பதாம்.

(10) கற்கியவதாரம். இக்கலியுகத்தின் அந்தத்தில் தருமமானது முற்றிலும் அழிகிறதாயிருக்குந்தருணத்தில் விட்டுணுவானவர் தருமத் தை நிலைநிறுத்தும்பொருட்டு மகிமையுடைய குதிரையின் வடிவமாகத் தோன்றுவாரென்பதாம்.

"மீனமைகோலநெடு நரசிங்கமாகிகிலம் விரகாலளந்தகுறளாய்
ஆனஅசிறுமழு வல்வில்லும்வெல்லுமுனை யலமுற்றசெங்கையவராய்
வானுடர்வந்துதொழ மண்ணுடர்பாவரையு மடிவிக்கவந்தவடிவாய்
நானுவிதங்கொள்பரி யானாகின்றருளு நாருயணுயநமவே."

இவ்வாறு கூறப்பட்ட விட்டுணுவின் தசாவதாரங்களில் முக்கியமான அவதாரங்கள் மூன்று:—

வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதம், உத்தியோகபருவம்,
கிருட்டிணன்றூது சருக்கம்,
1-வது கவி.

பேர்படைத்தவிசயனுடன் மும்மைநெடும்பிறவியினும் பிரியானுகிச்
சீர்படைத்தகேண்மையினுற் றேருர்தற்கிசைந்தருளுஞ் செங்கண்மாலைப்
பார்படைத்தசுயோதனற்குப் படையெடேனமரிலெனப் பணித்தகோவைக்
கார்படைத்தநிறத்தோனைக் கைதொழுவார்பிறவாழிக் கரைகண்டாரே.

இதன் கருத்து.

கீர்த்திபெற்ற அருச்சுனனுடன் [illegible] அவதாரங்களிலும்
[illegible] சிறப்புப்பொருந்திய [illegible] அருச்சுனனுக்குச் சாரதி
[illegible] நடத்த உடன்பட்ட சிவந்த கண்களையுடைய விட்டுணுவி
[illegible] மானவரும், இராச்சியபாரஞ் செலுத்திய [illegible] துரியோதனனுக்கு
போர்க்களத்தில் ஆயுதமெடுத்துப் போர் [illegible] யேனென்று வாக்...

களித்தவரும், மேகம்போன்ற கரியநிறத்தையுடையவருமான கிருட்டிணமூர்த்தியைக்கைகூப்பி வணங்குபவரே பிறப்பாகிய கடலின் அக்கரையை அடைந்தவரே யாவரென்பதாம்.

இக்கவியில் சொல்லப்பட்ட மும்மைநெடும்பிறவி எவையென்று வீட்டுமபருவத்தில் கீதையில் கிருட்டிணன் அருச்சுனனை நோக்கிச் சொல்லுகிறார் :—

"உன்னையான்பிரிவதில்லை யொருமுறைபிரிந்துமேல்நான்
நன்னிலாஎதிக்கும்பூணுய் நரனுநாரணனுமானோம்
பின்னொருபிறப்பின்யாமே இராமலக்குமப்பேர்பெற்றோம்
இங்கிம்பிறப்பில்நீயும் யானுமாயீண்டுநின்றோம்"

ஆகையால் விட்டுணுவினவதாரங்களில் முக்கியமான மூன்று அவதாரங்களெவையெனில்

(a) நாருயண அவதாரம்
(b) இராம அவதாரம்
(c) கிருட்டிண அவதாரம்

என்பவைகளாம். இம்மூன்றுக்கும் சமமான கீர்த்திபெற்ற நான்காவது அவதாரமொன்றுண்டென்று விலலிபுத்தூராழ்வார் மகாபாரதம், உத்தியோக பருவம், கிருட்டிணன்றூது சருக்கம், 70-வது கவியில் கண்டிருக்கிறது.

அன்றுதூதுகொண்டிலங்கை தீவினைத்தவரைவர்க்
கின்றுதூதுவந்தெயிற்புறத் திறுத்தனனென்றுந்
துன்றுதூதுவண்டினமுரன்றெடைபலான்றனக்குச்
சென்றுதூதுவரியம்பினர் சேவடிவணங்கி.

இதன் கருத்து.

கிருட்டிணன் பஞ்சபாண்டவர்களின் தூதுவனாக அத்தினுபுரிக்குச் சென்று, அத்தினுபுரிக்குத்தெற்கிலிருந்த ஒரு பூஞ்சோலை வந்திறங்கினபோது, அவ்வரவைத்துரியோதனனுக்கு அறிவிக்கும்படி சென்ற தூதுவர்கள் துரியோதனனைப்பார்த்து முன்பு இராமருடைய தூதுவனாகச் சென்று இலங்காபுரியை எரித்தவா இன்று பஞ்சபாண்டவர்களின் தூதுவனாக வந்து அத்தினுபுரி மதிலின் வெளியில் தங்கியிருக்கின்றூர் என்று சொன்னூர்கள் என்பதாம்.

இக்கவியில் கிருட்டிணமூர்த்தியானவர் முன்பு இராமதூதுவனாகச் சென்று இலங்கையில் நெருப்புவைத்த அனுமார் தானென்று சொல்லியிருப்பதால் அனுமாரும் விட்டுணுவினவதாரங்களிலொன்றென்றறிக.

விட்டுணுவின் இந்நான்கு முக்கியமான அவதாரங்களில் பார்வதிதேவியின் உடன்பிறந்தானுன நாருயணமூர்த்தி அழகருக்குச்சான்றான

என்பதாக 170-வது பக்கமுதல் 172-வது பக்கம்வரை ருசுப்படுத்தி யிருக்கிறோம். ஏனைய அவதாரங்களாகிய

(a) அனுமார் அவதாரம்
(b) இராம அவதாரம்
(c) கிருட்டிண அவதாரம்

என்னும் மூன்றையும் முறையே பின்தின அத்தியாயங்களில் விளக்கிக் காட்டுவோம்.

——(:o:)——

XV-வது அத்தியாயம்

ஆஞ்சநேயர் குலவிளக்கம்.

1. வானரர் சான்ருர். 2. வானரர் என்னும் பெயருண்டான காரணம், 3. அனுமார் ஆஞ்சநேயர், வாயு புத்திரன். 4. அனுமார் க்ஷத்திரியன். 5. அனுமாரின் மேன்மை; 6. அனுமார் சான்ருன். 7. மிக்கோன். 8. நல்லவன் 9. மேலவன். 10. அறிவுடையோன். 11. மைசூரிலர,சாண்ட கடம்ப ராஜாக்கள், சான்ருர ராஜாக்கள்.

வானரர் என்னப்பட்டவர்கள் பதினெண்கண தேவர்களி லொரு பிரிவாரென்றும், அத்தேவகணங்களெல்லாம் ஒரே குலத்திலுதித்த பிற்பல் [illegible] ஜாதியாரல்ல [illegible] அத்தியாயத்தில் பார்த்தோம். நாம் [illegible]

த்தில் பார்த்தபடி அவர்களிருபிரிவார். ஒன்று புலத்திய ரிஷியின் மரபினர்.

"And O tiger among kings, the sons of *Pulastya* of great wisdom are the *Rakshasas*, *Vanaras*, *Kinnaras* and *Yakshas*."

(Mahabharata).

மகாபாரதத்தில் இராட்சதர், வானரர், கின்னரர், இயக்கர் என்னும் நான்கு குலங்களும் புலத்தியரிஷி மரபினரென்று கண்டிருக்கிறது. புலத்தியரிஷி மரபினராகிய இராவணாதி ராட்சதர்கள் சாணார் என்பதாக மக்லீன் துரை கூறுமபிப்பிராயத்தை 165-வது பக்கத்தில் வரைந்திருக்கிறோம். புலத்தியர் மரபினராகிய இராட்சதர் சாணாரானால், அதே மரபினராகிய வானரரும் சாணார் என்பது பிரத்தியக்ஷம்.

வானரரின் இரண்டாவது பிரிவார் வாயு பகவானின் மரபினர் என்று பார்த்தோம். வாயுபகவான் அட்டதிக்கு பாலரில் ஒருவர். அட்டதிக்கு பாலரெல்லாரும் ஒரே மரபினரென்று காட்டும்படியான வம்சவரிசையட்டவணையை 14-வது பக்கத்தில் வரைந்திருக்கிறோம். அட்டதிக்குபாலர் என்னும் பெயருக்கே எட்டுத்திசை சான்றார் என்று பொருளென்பதாகப் பதின்மூன்றாவது அத்தியாயத்தினாரம்பத்திலெடுத்துரைத்தோம். அந்த எண்மரில் தேவேந்திரன் சான்றான் என்று பதின்மூன்றாவது அத்தியாயத்திலும், சந்திரபகவான், சூரியபகவான், அக்கினிபகவான் என்னும் மூவரும் சான்றார் என்பதாகப் பன்னிரண்டாவது அத்தியாயத்திலும், குபேரனானவர் இராவணனின் சகோதரனானபடியால் சான்றான் என்று ஒன்பதாவது அத்தியாயத்திலும் பார்த்தோமாகையால், அட்டதிக்கு பாலரென்னும் எண்மரும் சான்றாரென்றும், அவர்களில் ஒருவராகிய வாயுபகவானின் மரபிலுதித்த வானரரும் சான்றாரென்றும் எளிதிலறியலாம்.

2. வானரர் என்னும் பெயருண்டாகிறதற்கு இரண்டு காரணம் கூறலாம். முதலாவது அவர்கள் சான்றாரானபடியால் அவர்களுக்கு அப்பெயருண்டாயிற்று. வானரர் என்பதும் சான்றோர் என்பதும் ஒரு பொருட்கொண்ட மொழிகள்.

வானரர் = வான் + நரர்
= பெருமை + மனிதர்
= பெருமையிற் சிறந்தோர்
= சான்றோர்.

இரண்டாவது வானரம் என்றால் குரங்கு; ஆகையால் குரங்குக்கொடியுடையவருக்கு வானரர் என்று பெயர். சென்னைராசதானிப் புஸ்தகத்தில் இதைப்பற்றிப் பின் வருமாறு கண்டிருக்கிறது:—

"The name of monkeys may have been given to them from their personal appearance. In one passage however their kingdom

is called that of the "Vannara dhwaja" or monkey banner, so that the symbol may have developed the history."

(Page 115 of the Manual of the Administration of the Madras Presidency, Vol. I).

இதன் மொழி பெயர்ப்பு.

"அவர்களுடைய திரேகத்தின் தோற்றத்தைப்பற்றி அவர்களைக் குரங்குகள் என்று சொல்லியிருக்கலாம். ஆகிலும் ஓரிடத்தில் அவர்களுடைய ராஜ்யத்தை வானரதுவச ராஜ்யம், அதாவது குரங்குக்கொடி ராஜ்யம் என்று கூறியிருப்பதால், அவர்களுடைய கொடியிலிருந்து விகார சரித்திரம் உண்டாகியிருக்கலாம்" என்பதாம்.

இங்கே சொல்லப்பட்ட இரண்டபிப்பிராயங்களில் முந்தினது சரியான அபிப்பிராயமல்ல. எப்படியெனில் வானரர் எனப்பட்டவர்கள் குரங்குகளைப்போன்ற விகார ரூபமானவர்களல்ல. இதற்கு திருஷ்டாந்தமொன்று கம்பராமாயணத்திலிருந்து கூறலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலம்,

111-வது கவி.

அறிவுமீதேயுருவிதே யாற்றலீதே யரும்புலத்தின்
செறிவுமீதேசெயலீதே தேற்றமீதேதேற்றத்தின்
நெறியுமீதேவினைவீதே நீதியீதேநினக்கென்றால்
வெறியரன்றேகுணங்களான் விரிஞ்சன்முதலமேலானோர்.

இக்கவியில் வானரனாகிய அனுமாரைப் பார்த்துச்சீதாதேவியார் உருவிதே என்கிறார்; அதற்கு உரையாசிரியர் அழகின் சொரூபியும் நீயே என்று பொருள் கூறுகிறார்கள். ஆகையால் அழகின் சொரூபியாகிய அனுமார் குரங்கின் ரூபமாயிருந்தார் என்று சொல்வது பொருந்தாது. இக்கவியில் விரிஞ்சன், அதாவது, பிரமன் முதலான தேவர்களிலும் அழகால் சிறந்தவர் என்று கூறியிருப்பதால், அனுமாரானவர் அவர்களிலும் சிறந்த அழகர் என்றே சொல்லவேண்டும். ஆகையால் திரேகத்தின் தோற்றத்தால் அவர்களுக்கு வானரர் என்னும் பெயருண்டாயிற்றென்று சொல்வது பிசகு; அவர்கள் குரங்குக்கொடி மன்னராயிருந்தபடியால் அப்பெயருண்டாயிற்றென்று சொல்லலாம். புலிக்கொடிவேந்தரைப்புலிகள் என்றும், மீனக்கொடி வேந்தராகிய பாண்டியராஜாக்களை மீனவர் என்றும் நூல்களில் சொல்லியிருக்கிறபடி குரங்குக்கொடி மன்னரைக்குரங்குகள் என்று சொல்லியிருக்கிறது. அனுமாரின் மரபினருக்கு வழங்கிய வானரர் என்னும் பெயரானது குரங்கைக்குறிக்கின்ற வானரம் என்னும் பெயருடன் ஒரே தொனியைக்கொடுக்கும் பெயராயிருப்பதைக்கொண்டு, பெயரின் ஒலியாலும் அவ்வரசர்களின் விருதுக்கொடியின் சம்பந்தத்தாலும் வானரர் என்னும் பதத்தையும் வானரம் என்னும் பதாப்பத்த[illegible]ம் வித்துவான்[illegible] இடைக்[illegible]யே [illegible] காவியங்களில் [illegible]யால், [illegible]

என்றென்னும்படியாகிவிட்டது. குரங்கு என்னும் பதமானது சாதாரணமானவர்கள் வாயில் வந்தாலும், விகாரமாகச்சொல்லப்படும். அப்படியிருக்க வித்துவான்கள் கையில் வானரர் என்னும் பெயராகப்பட்டுக் கொண்டால், அதை வானரம் என்று மாற்றுவதும், அதற்கு வாலும் காலும் கொடுப்பதும், அது விஷயமாய் விகார ரூபங்கள் சிருட்டிகளை செய்கிறதும், வித்துவான்களுக்கு மிகவும் சுலபமான காரியம் என்று யாவருமறிவோம். சுக்கிரீவன் முதலானவர்களை வானரங்கள் என்றும் இராவணன் முதலானவர்களை இராட்சதரென்றும் கூறியிருக்கும் இராமாயணத்தில் முதலாய், இவ்வீரர்களெல்லாம் தென்னாட்டிலிருந்தகாலத்தில் விகார ரூபங்கொண்டிருந்தார்கள் என்றும், அதன் பின்பு சுக்கிரீவனும் அவனுடைய வானரப்படைகளும் விபீடணனும் அவனுடைய இராட்சதப்படைகளும் இராமருடன் அயோத்திக்குச்சென்ற பின்பு விகாரரூபம் நீங்க, மானிட வடிவங் கொண்டார்களென்றும் கூறியிருப்பதால் மனிதரைத்தேவர்களாக்குகிறவர்களும் குரங்குகளாக்குகிறவர்களும் வித்துவான்கள் தானென்றறியலாம்.

கம்பராமாயணம், உயுத்தகாண்டம், மீட்சிப்படலம்,

160-வது கவி.

தேனுடையலங்கன்மவுலிச் செங்கதிர்ச்செல்வன்சேயு
மீனுடையகழிவேலை யிலங்கையர்வேந்தும்வெற்றித்
தானையும்பிறருமற்றைப் படைப்பெருந்தலைவர்தாமு
மானிடவடிவங்கொண்டார் வள்ளறன்வாய்மைதன்னால்.

ஆகையால் விட்டுணுவினவதாரமும், இராமருடைய புகழை நாட்டினவரும், சீதையைச்சிறை மீட்டவருமாகிய அனுமாரானவர் குரங்கல்ல மனிதன் தானென்றறியலாம்.

3. அனுமாரானவர் அஞ்சனாதேவியின் குமாரனானபடியால் அவருக்கு ஆஞ்சநேயர் என்னும் பெயருண்டாயிற்று. அஞ்சனாதேவி மேருமலையிலிருந்த கேசரி என்னும் வானரனுடைய மனைவி. கேசரியென்பவர் மேருமலைக்கருகிலுள்ள பிரதேசங்களைக்கட்டியரசாண்ட வாயுபகவானின் மரபினனானபடியால் கேசரியின் புத்திரனாகிய அனுமாருக்கு வாயுபுத்திரன், அதாவது, வாயுபகவானின் மரபினனென்னும் பெயர் உண்டாயிற்று. திருஷ்டாந்தமாக:—

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலம்,

31-வது கவி.

அன்னவன்றன்னோடவ்வக் கோனைப்பொன்றுலாவிவாங்கி
பின்னவற்கரசளித்துத் துணைவனைப்பிடித்தானங்கள்
மன்னவன்றனக்குமாயோன் மந்திரத்துள்ளோன்வாயு
தன்னிடத்தின்மைந்தன் ......னென்றான்.

இக்கவியில் அனுமாருக்கு வழங்குகிற காலின்மைந்தன் என்னும் பெயருக்கு வாயுபுத்திரன் என்று பொருள்.

4. மகாபாரதத்திலே முன்னால் அனுமாரவதாரமெடுத்து இலங்கையைச்சுட்டெரித்தவர் இப்போது கிருட்டிணவதாரமாக வந்திருக்கிறார் என்று கூறியிருக்கிறபடியாலும், கிருட்டிணமூர்த்தி விட்டுணு அவதாரமானபடியாலும், அனுமாரும் விட்டுணுவின் அவதாரமென்றறிகிறோம். இவர் சூரியகுலத்திலுதித்த சுக்கிரீவமகாராஜனுக்கு மந்திரியும் தளகர்த்தருமானவர். கிருட்டிணமூர்த்தியையும் பஞ்சபாண்டவர்களையும் போலப்போர்வீரர் என்னப்பட்ட க்ஷத்திரிய குலத்தவர். இவருக்குப்போர்வீரத்தூதுவன் என்னும் பெயரும் கம்பராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப்படலம், 51-வது கவியில் வழங்கியிருக்கிறது.

இவ்விடை யண்ணலவ் விராமனேவிய
வெவ்விடையனைய போர்வீரத்தூதனும்
அவ்விடையெய்தின னரிதிநோக்குவான்
றொவ்விடைமடந்தைதன் னிருக்கைநோக்கினான்.

5. விட்டுணுவினவதாரமாகிய அனுமாருக்கு அநேக கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவர் எக்காலத்திலும் புகழ் பெற்றிருப்பாரென்றும், பிரமன் முதலான தேவர்களுக்கெல்லாம் அனுமார் மேலானவர் என்றும் [illegible]பார் அனுமாரைப்பார்த்துக் கூறியதாகக் கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலத்தில் கூறியிருக்கிறது.

72-வது கவி.

பாழியப்பணைத்தோள்வீர துணையிலேன்பரிவுதீர்த்த
வாழியர்வள்ளலேயான் மறுவிலாமனத்தேனென்னின்
ஊழியோர்பகலாயோதும் யாண்டெலாமுலகமேழும்
ஏழும்வீவுற்றஞான்று மின்றெனவிருத்தியென்றாள்.

சீதை அனுமாரைப்பார்த்து மிகவும் பருத்ததோளையுடைய வீரனே! துணையில்லாமல் வருந்திய என்னுடைய துன்பத்தைப்போக்கியபெருங்கொடையாளனே! சீதையாகிய நான் குற்றமற்ற மனத்தையுடையவளேயானால் ஊழிகாலமெல்லாம் ஒரு நாளென்று சொல்லப்படும் வருடங்களெல்லாம், பதினான்கு உலகங்களுமழியுங்காலம் வரை, உன்புகழ் இக்காலத்தில் எவ்வளவு பிரஸ்தாபமாயிருக்கிறதோ அவ்வளவு பிரஸ்[illegible]வேயென்றுமிருக்கும் என்றாள் என்று பொருள்.

109-வது கவி.

இடந்தாயுலகைமலையோடு மெடுத்தாய்விசும்பைப்பிவைசுமக்கும்
படந்தாழரவையொருகரத்தாற் பறித்தாயெனினும்பயனின்றால்
நடந்தாயிடையேயென்றாலு நானுநினக்குநவிர்கட லைக்
கடந்தாயென்றுவென்றருங் காற்றுமன்னகடுமையாய்.

சீதை அனுமானைப்பார்த்து உலகத்தை நீ பேர்த்தெடுத்தாய் [illegible] சொன்னாலும், மலைகளையும் ஆகாயத்தையும் எடுத்தாய் [illegible] நான் [illegible] இவற்றையெல்லாம் சுமக்கும் படங்களையுடைய ஆதிசேடனை [illegible] கரத்தால் பிடுங்கினாய் என்று சொன்னாலும், இவையெல்லாம் [illegible] பொருந்தும் [illegible] [illegible]

கடலைக்கடந்துவந்தாயென்று சொன்னால் அது உனக்கு ஒரு பொருட்டாகுமா என்று பொருள்.

110-வது கவி.

ஆழிநெடுங்கையாண்டகை தன்னருளும்புகழுமூழியின்றி
வாழ்பலவுநிலைநிறுத்தற் கொருவனீயேயுளையானை
பாழிநெடுந்தோள்வீர நின்பெருமைக்கேற்பப்பகையிலங்கை
ஏழுகடற்குமப்புறத்த தாகாதிருந்ததிழிவன்றோ.

சுதரிசனமென்னும் சக்கரத்தை யேந்திய இராமருடைய கருணையையும் புகழையும் அழிவில்லாமல் பல ஊழிகாலமும் நிலைபெறச்செய்வதற்கு நீயொருவனே போதுமாகையால், உயர்ந்த தோளையுடைய வீரனாகிய அனுமாரே! நமக்குப்பகைவராயிருக்கும் இராட்சதர் வசிக்கும் இவ்விலங்கை நகரானது, இவ்வளவு சமீபமாயிராமல், ஏழுகடலுக்கும் அப்புறத்திலில்லாமலிருந்தது உன் பெருமைக்குக் குறைவன்றோ என்று கேட்டாள் சீதாபிராட்டியார் என்று பொருள்.

111-வது கவி.

அறிவுநீதேயுருவுநீதே யாற்றலுநீதேயருமறத்தின்
செறிவுநீதேசெயலுநீதே தேற்றமுநீதே தேறலின்
நெறியுநீதேநினைவுநீதே நீதியுநீதேயினக்கென்றால்
வெறியரன்றேகுணங்களால் விரிஞ்சன்முதலமேலோனோர்.

அறிவின் சொரூபியும் நீயே, அழகின் சொரூபியும் நீயே, வலிமையும் உன்னிடத்திலுள்ளதே, பஞ்சேந்திரியங்களை நிக்கிரகஞ் செய்தவனும் நீ ஒருவனே, செயல் என்று கூறுந்திறனும் உன்னிடத்திலுள்ளதே, தெளிவென்பதும உன்னிடத்திலுள்ளதே, தெளிவின் காரணமென்பதுமுன்னிடத்திலுள்ளதே, நீதியானும் நீயொருவனே, இவ்வாறு சகல நற்குணங்களுமுன்னிடத்திலே பொருந்தியிருப்பதால், இக்குணங்களிலொன்றையுடைய பிரமன் முதலான சான்றோரையெல்லாம் உன்னோடு ஒப்பிட்டுப்பார்த்தால், சான்றோர் என்று சொல்லக்கூடாமல், அமுதகுலத்தவரானபடியால் வெறியர் என்று மாத்திரமே சொல்லக்கூடும் என்று பொருள். (வெறி-பதினீர்).

இக்கவியிலே சீதாபிராட்டியார் அனுமானைப்பார்த்துசகல நற்குணங்களுமுன்னிடத்தே யமைந்திருப்பதால் குலத்தாலும் குணத்தாலும் நீயொருவனே சான்றோன், பிரமன் முதலான சான்றோர் எல்லாரும் குலத்தால் சான்றோராயிருந்தபோதிலும், சான்றோருக்குரிய எல்லா இலக்ஷணங்களும் நிறைவாகப்பொருந்தியவர்களல்லாதபடியால், அவர்களைச்சான்றோர் என்று சொல்லாமல அமுதகுலத்தவர்களென்று மாத்திரம் சொல்லவேன்று கூறியிருக்கிறபடியால் பிரமன் முதலான தேவர்களுடைய குறையும் அனுமாரின் புகழும் விளங்குகின்றன.

6. இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் வால்மீகி சான்றோன் [illegible] அனுமாருக்கு வழங்கும் [illegible] அனுமாருக்குச் சான்றோன் என்றும் [illegible]

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், நாடவிட்டபடலம்,

50-வது கவி.

முல்லையுமுருந் தமுத்து முறுவலென்றுரைத்தபோது
சொல்லையுமமிர் தும்பாலுந் தேனுமென்றுரைத்தசொன்றும்
அல்லவெதான்றுவதில்லை யமிர்திற்குறுவமையுண்டோ
வல்லையேலதிந் துகோடி மயிலாவாறுசான்றேய்.

இக்கவியில் அனுமாரைச் 'சான்றோய்' என விளிவேற்றுமையிலழைத்திருப்பதால் அவர் சான்றோன் என்றறிக.

66-வது கவி.

மங்கையரிவளையொப்பார் மற்றுளரில்லையென்னுஞ்
சங்கையிலுள்ளந்தானே சான்றெனக்கொண்டசான்றேய்
அங்கவணிலைமையெல்லா மனத்தறிந்தருசார்ந்து
இங்கள்வான்முகத்திருட்குச் செப்பெனப்பின்னுஞ்செப்பும்.

இக்கவியிலும் அனுமாரைச்சான்றோய் என விளித்திருக்கிறது.

7. அனுமாருக்கு மிக்கோன் என்னும் சான்றோர்குலப்பெயரும் வழங்கியிருப்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்:—

கம்பராமாயணம், உயுத்தகாண்டம், ஒற்றுக்கேள்விப்படலம்,

30-வது கவி.

கல்விக்கண்மிக்கோன்சொல்லக் கருமனிருந்தக்கள்வர்
வல்விற்கைவீரயத்தில் வானரர்வலியைநோக்கி
வெல்விக்கையரிதென்றெண்ணி விளையத்தாலெம்மையெல்லாங்
கொல்விக்கவந்தான்மெய்ம்மை குரங்குகாங்கொள்கவென்றார்.

இக்கவியில் அனுமார் கல்வியறிவினையுடைய மிக்கோன் என்று கூறியிருப்பதால் அவர் சான்றோன் என்றறிக.

8. அனுமாருக்கு நல்லோன் என்னும் சான்றோர்குலப்பெயரும் வழங்கியிருக்கிறது.

டை ராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், நாடவிட்டபடலம்,

64-வது கவி.

பூவரும்மழலையன்னம் புனைமடப்பிடியென்றின்ன
தேவருமருளத்தக்க செலவினளென்வந்தேறேன்
பாவருங்கிழமைத்தொன்மைப் பருணிதர்தொடுத்தபத்தி
நாவருங்கிளவிச்செவ்வி நடைவருநடையனல்லோய்.

இக்கவியில் அனுமானை 'நல்லோய்' என விளித்திருப்பதால், அவருக்கு நல்லவன் என்னும சான்றோர்குலப்பெயர் வழங்கியிருக்கிறதென்றறிக.

டை காண்டம், பிலநீங்குபடலம்,

58-வது கவி.

நான்முகனளித்தநெறி நாறுவரகொப்ஞாய்
[illegible]
[illegible]
[illegible]

இக்கவியிலும் அனுமாரை 'நல்லோய்' என விளித்திருக்கிறது.

9. அனுமாருக்கு மேலவன் என்னும் சான்றோர்குலப்பெயரும் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம். சூடாமணிப்படலம்,
76-வது கவி.

சேறியைவிரைந்தனை நீயவையெல்லாம்
வேறியானினியொன்றும் விளம்பலென்மேலோய்
கூறுகின்றனமுன்குறி யுற்றனகோமாற்
கேறுமென்றவைசொல் லெனவின்னவிசைப்பாள்.

இக்கவியில் அனுமாருக்கு மேலவன் என்னும் சான்றோர்குலப்பெயர் வழங்கியிருக்கிறது.

10. அனுமாருக்கு அறிவுடையோன் என்னும் சான்றோர்குலப்பெயரும் வழங்கியிருக்கிறது.

ஷை காண்டம், நாடவிட்டபடலம்.
73-வது கவி.

இனையவாறுரைசெயா வினிதினேகுதியென
வனையுமாமணிநன் மோதிரமளித்தறிஞநின்
வினையெலாமுடிகென விடைகொடுத்துதவலும்
புனையும்வார்கழலினு னருளொடும்போயினன்.

இக்கவியில் அனுமாரை 'அறிஞ' என்றழைத்திருக்கிறது. அதற்கு அறிவுடையோர் குலத்தவன்; சான்றோன் என்று பொருள்.

ஷை காண்டம், ஆறுசெல் படலம்,
18-வது கவி.

அன்னதன்மையா லறிஞர்நாடியச்
செக்கெல்வேலைசூழ் சிந்துநாடொரீஇத்
[illegible]றெண்ணு[illegible] தகைபுருத்தனார்
தன்[illegible]தண்டசம கழி தந்தனினர்.

இக்கவியிலும் அனுமாருக்கும் அவருடன் கூடச்சென்ற கிஷ்கிந்தா நாட்டுச்சான்றோருக்கும் 'அறிஞர்' எனும் குலப்பெயர் சொல்லப்பட்டிருக்கிறது.

அனுமாருக்கு அறிவுடையோன் என்று பொருள் கொடுக்கும் வித்தகன் என்னும் பெயரும் வழங்கியிருப்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்:—

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுதபடலம்,
27-வது கவி.

[illegible]த்தலையெஃகினார்க்கு முடிப்பருங்கருமமுற்றி
வித்தகன் [illegible] திருத்தியாய்விளைந்த தன்மை
அத்தலை[illegible]தவெல்லா மறைந்[illegible]
[illegible]த்தலைக்கழத்தியெல்லா [illegible]

ஆகையால் அனுமானவர் [illegible].

11. [illegible]

மிருக்கிறது. அம்மாகாணத்தில் குரங்குக்கொடி மன்னர் கிறிஸ்துவுக்குப்பின்னிட்ட நூற்றாண்டுகளில் கடம்பராஜாக்கள் என்னும் பெயர் பூண்டிருந்தார்களென்று மக்ளீன் துரை சென்னையாசாட்சிப்புஸ்தகம் 1-வது வாலியூம் 136, 137-வது பக்கங்களில் வரைந்திருக்கிறார்.—

"85. The *Cadamba* nation proceeded in the first instance from the west coast region now styled Canara, but then known as Heiga and Tooloova. Their principal capitals were Palaushaca now Halsee in the Bombay Presidency due west of Kurnool; and Banavausy near the north-western confines of Mysore in nearly the latitude of Cuddapah, with Haungal adjacent to Banavausy. In the early centuries of the Christian era these people possessed the western half of the present *Mysore*. *Their banner was a monkey*, and their signet a lion."

(Pages 136 and 137 of the Manual of the Administration of the Madras Presidency, Vol: I).

இக்தக்கடம்பராஜாக்கள் அமுதகுலத்தவர்களென்பதாக ஸ்டேவர்ட்துரை முதலானவர்களெழுதியிருப்பதை 233-வது பக்கத்தில் வரைந்திருக்கிறோம். சான்றாகிய அனுமாரின் மரபினராசாண்ட அதே நாட்டில் அமுதகுலத்தவர்களாகிய கடம்பராஜாக்களரசு புரிந்தார்களென்று தெரிவதாலும், அனுமாரின் மரபினருக்கிருந்த குரங்குக்கொடியே கடம்பராஜாக்களுக்கும் விருதுக்கொடியாயிருந்தபடியாலும், கடம்பராஜாக்களென்னும் அமுதகுலத்தவர்கள் அனுமாரின் மரபினராகிய சான்றாரென்றறியலாம். இக்கடம்பராஜாக்களின் பெயர்கள் ராபர்ட்சீவெல் துரை (Robert Sewell) இயற்றிய Lists of Inscriptions and Sketch of the Dynasties of Southern India என்னும் புஸ்தகத்தின் 179-வது பக்கமுதல் 182-வது பக்கம்வரை கூறப்பட்டிரு[illegible]கின்றன. அமுதகுல அரசர்களாகிய அவர்களிலொருவனுன இரண[illegible]வது [illegible]ந்திவர்மன் என்பவன் பாண்டியன் வம்சத்தை[illegible] சிரியாதேவியை மணம் புரிந்தான் என்று ஷை புஸ்தகத்தின் 181-வது பக்கத்தில் வரைந்திருப்பதாலும், கடம்பராஜாக்களைப்போல பாண்டியர்களும் அமுதகுலத்தவர்களென்று நாம் விளக்கிக்காட்டியிருப்பதாலும், கடம்பராஜாக்கள் குலமும் பாண்டியர் குலமும் ஓரே குலம், அதாவது சான்றார்குலமென்றறிகிறோம்.

கடம்பராஜாக்களரசு புரிந்த அதே மைசூர் நாட்டிலுள்ள நாகர் பூமியில் சான்றார ராஜாக்களரசு புரிந்தார்களென்றும் அதே புஸ்தகத்தின் [illegible]35-வது பக்கத்தில் பார்க்கிறோம். அங்கே சொல்லப்பட்டிருக்கும் சான்றார ராஜாக்க[illegible]லொருவனை ஜகதேகவருடையதாயும், கடம்பராஜாக்களி[illegible] [illegible]லாவது விசயாதித்த[illegible] [illegible] [illegible] [illegible] ஷை புஸ்தகத்தின் 182-வது பக்கத்திலே கண்டிருப்ப[illegible] [illegible] சான்றார ராஜாக்களுடைய [illegible]லமும், அமுதக்குலத்தவர்களாகிய கடம்பராஜாக்களி[illegible] [illegible] தான் என்றறியலாம்.

XVI-வது அத்தியாயம்

இராமர் குலவிளக்கம்.



1. இராவணனுடைய மூப்பிதாவாகிய புலத்தியனும் இராமர்குல மூப்பிதாவாகிய அத்திரி, மரீசி, என்பவர்களும் சகோதரராகையால் இராமர் சான்றான். 2. இராமருடைய முற்பிதாக்களுக்கு வழங்கிய மநு, தருத்தன், சுயோதனன், பிரமேயன், பிரபோதி, விருத்தன், அயுதாயு, சுகேந்திரன் [illegible] பெயர்கள் சான்றார் குலத்தைச் சுட்டிக்காட்டும் [illegible] கு, பிருகன்,

அரிட்டன், மாந்தாதா, அனறணியன், அரிசந்திரன், விசயன், பாகு, இளைபிழி, தீர்க்கபாகுவென்னும் பெயர்கள் அமுதகுலத்தைச்சுட்டிக்காட்டும் பெயர்கள். 3. இராமரின் மரபினர் தமியர் என்னும் அமுதகுலத்தவர்: தசரதன் தமியன், கௌசலை தமியள், கைகேசி தமியள், இராமர் தமியன், சீதை தமியள். 4. இராமருடைய தேவிக்கு வழங்கிய சீதை, அமிர்தம், அரிவை, அமிர்தின் வந்ததேவி, அமிழ்துகொண்ட நங்கவேள் செய்த ஓவியம் என்னும் பெயர்களின் தாற்பரியம். 5. இராமரைப்பற்றிய 'பனையினிள்கரம்' என்னும் வசனத்தின் தாற்பரியம். 6. இராமருடைய இனத்தாருக்குப்பதினீர் அருமையான பாணம். 7. சீதை சான்றோர் மாது, சான்றாள்; தசரதன் சான்றோர் புகழ் தாதை, இராமருடைய சுற்றத்தார் சான்றவர். 8. கோசலை மிக்கார் குலத்தவள். 9. சீதை நல்லாள், இராமர் நல்லன்; பரதன் நல்லன், இராமர் நல்லவர் குலத்தவன். 10. மேலவர் குலத்தவன். 11. தசரதன், கோசலை, சீதை உயர்ந்தோர் குலத்தவர்கள். 12. இராமர் ஆரியன். 13. இராமர் குலத்தவர் உலகு, அண்டர். 14. இராமர் ஆன்றன், தசரதன் ஆன்றன். 15. சீதை அறிவுடையோர் குலத்தவள், இராமர் வித்தகன். 16. இராமர் கிராமணிகள் குலத்தவர். 17. இராமர் நாடர்க்கள் குலத்தவர்.

இராமர் என்னும் பெயருக்கு அழகன், சுந்தரன் என்று பொருளென்பதாக 137, 138-வது பக்கங்களில் பார்த்தோம். அவர் சூரியகுலத்தில் தோன்றிய அயோத்தியரசனாகிய தசரதமகாராஜனுடைய புத்திரரிலொருவர். தசரதமகாராஜன் மனைவிகள் மூவரில் கௌசலாதேவியிடம் இராமரும், கைகேசியிடம் பரதனும், சுமித்திரையிடம் இலக்குமணரும் சத்துருக்கினனும் பிறந்தார்கள்.

கூர்மபுராணம், இராமனவதரித்தவத்தியாயம்.

9-வது கவி.

ஆத்திபதமுனிந்தேரூக்கு மவியிளையணங்கனூர்க்கு
வீற்றுவீற்றகால்கக் கவுசலைவிறல்கொள்வாலி
கூற்றையீனறனள்கைகேசி குணப்பெருங்கடலையீன்றாள்
மாற்றிலாவிருவர்தம்மை சுமித்திரைவயிறுவாய்த்தாள்.

10-வது கவி.

இராமன்வேற்பரதன்றூய விலக்குவனிவர்கள்வேந்தர்
பராவுசத்துருக்கனென்னப் பழிப்பறுநாமஞ்சாத்தித்
தராதலமுழுதும்போற்றச சவுளமேமுதலவாக
விராவுசத்கருமமியாவும் விழுமிதின்வசிட்டன்செய்தான்.

இராமருடைய மனைவி சீதைகியவள் மிதிலாபுரியரசனாகிய சனகன் என்னும் சிரத்தவச[illegible] இராமருடைய குலத்தரசர்களின்

வம்சவரிசையட்டவணை 56-வது பக்கமுதல் 61-வது பக்கம் வரையிலும், சீதாதேவியாரின் குலத்தரசர்களட்டவணை 62-வது பக்கமுதல் 65-வது பக்கம்வரையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இராமருடைய மனைவியாகிய சீதையை இராட்சதகுலச்சான்றோனாகிய இராவணன் சிறையெடுத்துக்கொண்டுபோன காரணத்தால் இராமருக்கும் இராவணனுக்கும் கொடும்போர் நேரிட்டது. இப்போருக்குச் சமமாகச் சொல்லக்கூடிய போர் வேறொன்றுமில்லையென்று சொல்லும் நோக்கமாய்க் கூர்மபுராணிகர்

"ஒலிக்குங்கடலுக்குச்சமமாக ஒலிக்கும் கடலேயன்றி வேறொருபொருளில்லாமைபோலும், பனியிருக்கப்பெற்ற ஆகாயத்துக்குச்சமமாகப் பனியிருக்கப்பெற்ற ஆகாயமேயன்றி வேறொரு பொருளில்லாமை போலும், இராமரும் இராவணனும் புரிந்தபோருக்குச்சமமாக இராமரும் இராவணனும் புரிந்தபோரையன்றி வேறொரு போரையும் ஒப்புமை கூறமுடியாது"

என்கிறார்.

கூர்மபுராணம், இராவணன் வதைப்படலம்,

95-வது கவி,

கனைகடற்குவமை யுரைத்திடலந்தக் கனைகடலலதுவேறில்லைப்
பனியிருவிசும்பிற் கிணையெடுத்துரைப்பிற் பனியிருவிசும்பலாவில்லை
வினைகழலிராம னிராவணனுடற்றும் போரினுக்கிணை வகுத்துரைப்பி
னனையபெற்றிராம னிராவணனுடற்று மருஞ்சமரன்றிவேறிலையால்.

இத்தன்மைய வீரர்களாகிய இராமர், இராவணன் என்னும் இருவரில் இராவணன் புலத்தியரிஷி மரபினனான சான்றோன் என்பதாக 164, 165-வது பக்கங்களில் பார்த்தோம். இராமருடைய முற்பிதாவாகிய சூரியமகாராஜனைவர் ஷை புலத்தியரிஷியின் சகோதரனான அத்திரியின் குமாரனென்று அருணாசல புராணம், திருமலைச்சருக்கம், 14-வது கவி கூறுகிறது.

அங்கிராசனபதிகள் காத்தருவரையளித்தார்
தங்குமத்திரிகதிர்மதி புலத்தியன்றனையர்
பொங்கிரர்க்கதர் வானரர்கின்னரர்புலக
னக்குமைந்தர் கிம்புருடர் பின்விலங்கையுமளித்தான்.

இக்கவியில் கதிர் என்னப்பட்ட சூரியன் அத்திரியின் குமாரனென்று சொல்லுகிறது. இவ்விதம், கூர்மபுராணிகர் சூரியமகாராஜன் காசிபரின் புதல்வன் என்று கூறினார்கள்.

இலிங்கபுராணம், சூரியன் வங்கிசமுரைத்தவத்தியாயம்,
2-வது கவி.

மாசறுதவத்தாலுயர்ந்தழியாத மறையொருநான்கையுமுணர்ந்த
காசிபன்புதல்வன்கலிகெழுபரவைக் கருங்கடன்முகட்டினிற்றோன்றி
யேசவிலுலகுமாசுறமூடு மிருள்படக்கதிர்க்குலம்பரப்பித்
தேசுகண்படுக்கும் பசும்பொன்மால்வரையை வலம்வருந்தினகரனுமால்.

இக்கவியில் தினகரன் என்னப்பட்ட சூரியன் காசிபரின் குமாரனென்று கண்டிருக்கிறது.

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்தவத்தியாயம்,
2-வது கவி.

அருமறைநான்குமங்கமோராறு மறத்தொடுமினிதிருந்தாலும்
பொருவருஞ்சென்னுக்காசிபனென்னும் புரையறுமுனிவரன்மைந்தன்
விரிதிரையுடுத்தவுலகமோரேழும் விழுங்கிருட்பிழம்புசீத்தொளிரு
மெரிசுடர்க்கற்றையேழ்பரித்தடந்தேர் நடவியவிரவியஞ்செல்வன்.

இக்கவியிலும் இரவி என்னப்பட்ட சூரியன் காசிபரின் புதல்வனென்று கண்டிருக்கிறது.

காசிபரோவெனில் மரீசியென்பவரின் புத்திரன்.

அருணசலபுராணம், திருமலைச்சருக்கம்,
8-வது கவி.

உன்னுமைந்தரின் மரீசிபாற்காசிபனுதித்தான்
பன்னுதக்கனுமைம்பது பெண்களைப்பயிந்தா
னன்னகாசிபனவர்பதின் மூவரையணைந்தான்
முன்னளாகியஅதிதிபா லிமையவர்முளைத்தார்.

இவ்வாதாரங்களினாலே இராமருடைய குலமாகிய சூரியகுலத்து முதல்வனான சூரியமகாராஜனை

(1) அத்திரியின் குமாரனென்றும்

(2) மரீசியின் குமாரனாகிய காசிபரின் புதல்வனென்றும்

இரண்டபிப்பிராயங்கள் புராணங்களில் வெளியாகின்றன. அத்திரி, மரீசி என்னுமிருவரும், இராவணன்குல முற்பிதாவாகிய புலத்தியரும் சகோதரர்.

இலிங்கபுராணம், படைப்புவகையுரைத்தவத்தியாயம்,
7-வது கவி.

அவர்களிருக்கப்புலத்தியனற் கிருதுபிருகுவத்திரி [illegible]த்
தவமாமரீசிபுலகனொடுதக்கன் வசிட்டனங்கிரா
கலைவதிர்தருமந்தன்மனையொடு தவிர்ந்தற்கருஞ்சங்கற்பனொடு
மிவரைப்படை[illegible]வர்கள் இல்வாழ்க்கையினில்வாழ்ந்தார்.

இக்கவியில் புலத்தியன், அத்திரி, மரீசி என்னும் மூவரும் பிரமனின் குமாரரென்று சொல்லியிருப்பதால், அம்மூவரும் ஏகசகோதரர்கள். புலத்தியன் மரபினராகிய இராவணாதி இராட்சதர் சான்றார் என்றுபார்த்தோம். ஆகையால் அவர் சகோதரராகிய அத்திரி, மரீசி என்பவர்களின் மரபினனென்று சொல்லப்படும் சூரியமகாராஜனும் அக்குலத்தவரே. அச்சூரியமகாராஜன் மரபில் தோன்றிய இராமரும் சான்றாரென்பதற்கையமில்லை.

2. சூரியகுலந்தரசர்கள் சான்றோர் என்பதாக 330-வது பக்கமுதல் 332-வது பக்கம் வரையிலும், அவர்கள் அமுதகுலத்தவர்களென்பதாக 333-வது பக்கமுதல் 349-வது பக்கம் வரையிலும் ருசுப்படுத்தியிருக்கிறோமாகையால், அவற்றைத்திரும்பவும் எழுதாமல், இராமருடைய குலத்தை விளக்கிக்காட்டும் சில குறிப்புகளை மாத்திரம் வரைவோம்.

(a) இராமருடைய குலத்து முற்பிதாவுக்கு வழங்கும் சூரியன் என்னும் பெயரும், சான்றோன் என்னும் பெயரும் ஒரு பொருட்கொண்ட மொழிகளென்று நாம் 330-வது பக்கத்தில் விளக்கிக்காட்டியபடி. சூரியனுடைய குமாரனுக்கு வழங்கும் மனுவென்னும் பெயருக்கும் சான்றோன் என்றே பொருள். மனுவென்னும் பெயருக்கு மன் என்பது மூலபதம்.

மன் = பெருமை, Greatness, (Winslow).

ஆகையால் மனுவென்னும் பெயருக்கு பெருமையிற் சிறந்தோன் (A great man) என்று பொருள். சான்றான் என்னும் பெயருக்கும் பெருமையிற் சிறந்தோன் (A great man) என்னும் தாற்பரியமே உண்டென்பதை கூறுகிறோம். ஆகையால் சூரியமகாராஜனுடைய குமாரனுக்கு வழங்கிய மனு சக்ரவர்த்தியென்னும் பெயருக்குச்சான்றார்குல சக்ரவர்த்தியென்று பொருளாம்.

(b) மனுமகாராஜனுடைய குமாரன் இக்குவாகு. இப்பெயருக்கு அமுத்குல அழகன் என்று பொருள் (இக்கு-பனையமுது, வாகு-அழகு). இப்பெயராலும் சூரியகுலத்தரசர்கள் அமுதகுலமென்னும் சான்றார் குலத்தவரென்றறியலாம். இந்த இக்குவாகுவின் மரபில் அயோத்தியரசர்களுதித்தார்கள்.

"Ayodia was founded by the race of Soorya by Ikshwaku; Mithila was founded by Mithila, the grandson of Ikshwaku" (Vide Tod, Vol: I Chapter 16.)

(c) இக்குவாகுவின் பேரனும் விகுக்ஷியின் குமாரனுமாகிய புரஞ்சயனுக்குக்ககுத்தன் என்றும் பெயர்.

இலிங்கபுராணம், சூரியன் வங்கிசமுரைத்தவத்தியாயம்,

5-வது கவி.

எரியுமிழ்வடிவேல் மனுவருள்புதல்வ
னெழில்பெறு மிக்குவாகவன்றன்
பொருவறு புதல்வன் விகுக்கியாங் கவன்றன்
பொற்புறு புதல்வன் றகுத்தன்
திருமலி குத்தன் மகன் சுயோதனன்மற்
றவன் மகன் பிருதவன் மகன்சி
ருரைசெய் விச்சவக னவன்மக னிவனச்
சுவனென்னு மொளிறு வானுரவோன்.

இக்கவியினுல் இக்குவாகுவின் பேரனாகிய புரஞ்சயனுக்குத் தகுத்தன் என்னும் பெயரொன்றுண்டென்றறிகிறோம். தகுத்தன் என்னும் பெயருக்கு மூலபதம் தகுதி. தகுதியென்னும் பதத்துக்கு மேன்மை (Excellence) என்பதாக உவின்சுலோ அகராதி கூறுகிறது. ஆகையால் தகுத்தன் என்னும் பெயருக்கு மேன்மகன், சான்றேன் என்று பொருள் என்றறிக.

(*d*) தகுத்தனுடைய குமாரனாகிய அன்னை நசுவுக்குச்சுயோதனன் என்பதும் ஓர் பெயரென மேலே கூறிய கவியாலறியலாம். சுயோதனன் என்னும் பெயருக்குச்சுபாவத்திலே சான்றேன், அதாவது, சான்றோர்குலத்தில் பிறந்ததினுல்மட்டும் அவன் சான்றேன் என்றல்ல, அவனுடைய சுபாவமும் சான்றோர் குலத்துக்குப்பொருந்தியதானபடியால் அவனைப்பிறப்பினுலும், குணதிசயங்களினுலும் சான்றேன் என்று சொல்லலாமென்று பொருள். சுயம்-சுபாவம், ஒதனம்-பெருமை (Greatness); சுபாவத்திலே பெருமையிற் சிறந்தோன், சான்றேன என்று பொருள்.

(*e*) சுயோதனனுடைய குமாரனாகிய பிருகுவுக்குப் பிருகன் என்னும் பெயர்.

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்தவத்தியாயம்,

11-வது கவி.

சிலைபயின்றகன்ற திருவளர் தடந்தோட்
சுயோதன னளித்தருள் சிறுவன்
கலிபுறந் தரந்து மாநில முழுதுங்
களைகணாய்க் காக்குமப் பிருக
னுலகமீக்கூறும் பெரும்புகழன்றே
ஞமீச் சிகர் சிறுவன் விசுகவு
னென்றுவன்மை யாங்கவன்சிறுவ
னடையலர் பரவு மத்திரசன்.

இக்கவியில சுயோதனனுடைய குமாரனுக்குப் பிருகன் என்னும் பெயரென்பார்க்கிறோம். பிருகு என்பது பனங்கிழங்கின் பெயரென உவின்

சுலோ அகராதியாசிரியர் கூறுகின்றார். ஆகையால் பிருகன் என்னும் சூரியகுலத்தாசன் பெயருக்கு அமுதகுலத்தவன் என்று பொருள். இப்பெயரானது அமுதகுலத்தவராகிய சான்றோரிடத்தக்கபெயரே யன்றி, ஈனயோரிடத்தக்க பெயரல்ல. அமுதகுலத்தவர்களுக்கே பனங்கிழங்கு மிகவும் அருமையான பொருள். ஆகையால் சூரியகுலத்தாசன் அமுதகுலத்தவனென்றறியலாம்.

(f) பிருகனுடைய பேரனுக்கு அரிட்டன் என்று பெயரென்பதாக விஷ்ணு புராணம் கூறுகிறது. அரிட்டன் என்றாலும் அமுதகுலத்தவன் என்றே பொருள் (அரிட்டம்—பனையமுது).

(g) அரிட்டனுடைய மரபிலுதித்த திரிடாக்ஷவனுடைய குமாரனுக்குப் பிரமேயன் என்று பெயரெனப்பார்க்கிறோம். கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்தவத்தியாயம், 14-வது கவியை இவ்விடம் பெயர்த்தெழுதுவோம்.

இருநிலமளக்கு மொருதனிச் செங்கோ
　　லெறழ்வலி முழவுறழ் தடந்தோட்
பிருகதக்ஷவன் பெட்புடை மைந்த
　　னியத்திரிடாச் சுவனவன் சேய்
வரை நிரைத்தனைய கொடி நெடுமாடக்
　　கடையினில் வான் நிறையோடு
மரசு கண்டுயிலு மணிநெடு முன்றி
　　லப்பிரமேய னென்றுரைப்பார்.

இந்தப் பிரமேயனுக்குப் பிரமோதி என்றும் பெயரென்பதாக இலிங்க புராணம், சூரியன் வங்கிசமுரைத்தவத்தியாயம், 6-வது கவியில் கூறியிருக்கிறது.

மற்றவன் புதல்வன் பிரகதச்சுவனுங்
　　கவன் மகன் வடவரையனைய
பொற்றடந் திணிதோட் குவலயாச்சுவனுங்
　　கவனருள் புதல்வன் மேவலரைப்
பற்றி யுள்ளாவி யருந்தவாட் டிருடாச்
　　சுவனவன் பயந்திடு புதல்வ
னென்று தெண்டிரைநீர் மண்ணகம் புரக்கு
　　மெழில் பிரமோதி யென்றுரைப்பார்.

பிரமேயன், பிரமோதி என்னும் இவ்விரண்டு பெயர்களுக்கும் பிரமை என்பது மூலபதம். பிரமை என்றால் அறிவு; ஓதி என்றாலும் அறிவு (சதுர்அகராதி). ஆகையால் பிரமோதி என்றால் அறிவுடையோர் குலத்தி லுதித்த அறிவன், அதாவது சான்றோர் குலத்தில் தோன்றிய சான்றோன் என்று பொருள்.

(h) இந்தப்பிரமோதியின் மரபிலுதித்த மாந்தாதா சக்கரவர்த்தி யைப்பற்றி விஷ்ணு புராணத்தில் [illegible] அவனிருக்கும்போது தே

வேந்திரனுடைய பவித்திர விரலைச்சூப்பி அவ்விரலினின்றொழுகின தேவாமிர்தத்தையுண்டு வளர்ந்தாரென்றும், அதனாலே அவருக்கு மாந்தாதா என்னும் பெயருண்டாயிற்றென்றும் விளம்பியிருக்கிறது. மாந்தாதா என்னும் பெயருக்கு அமுதபானமே ஆதரவாகக் கொண்டவன் என்று பொருள். மாந்து-அமுதபானம், ஆதம்-ஆதரவு. தேவேந்திரனுடைய பவித்திர விரலிலிருந்து அமுதொழுகாமல், தேவேந்திரனுடைய குலவிருட்சமாகிய பனையிலிருந்தே யமுதொழுகுமாதலால், மாந்தாதா சக்ரவர்த்தி உண்டு வளர்ந்த பானமானது பனையமுதென்னும் பதநீர் என்றறிக.

(i) மாந்தாதாவின் மரபிலுதித்த சம்பூதனுடைய குமாரன் அனறணியன் என்று விஷ்ணு புராணம் கூறுகிறது. கூர்மபுராணிகர் சம்பூதியின் குமாரன் விருத்தன் என்று கூறுகிறார்.

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்தவத்தியாயம்,
25-வது கவி.

பஞ்சிகுழ்கிடந்தபையரவல்குற் பாவையர்விரும்புசம்பூதி
நஞ்சணிமிடற்றுச்சாமிதன்வரத்தா லளித்தருணைவேற்குருசி
லஞ்சிறையறுகாலேழிசைப்பாட லளிவிருந்தூட்டநெக்குலடந்த
மஞ்சரிதவழும்பசுட்டெழின்மார்பன் வாகைவேலுழவன்மால்விருத்தன்.

இவ்வாறு கூறப்படும் அனறணியன், விருத்தன் என்னும் இருபெயர்களும் சூரியகுலத்தரசன் ஒருவனையே குறித்தாலும் அல்லது இருவரைக்குறித்தாலும் சரி. அவ்விரண்டும் குலவிளக்கப்பெயர்கள். அனறணியன் (அனல் + தணியன்) என்றால் கொடுங்கோபியான அமுதகுலத்தவன் என்று பொருள். அனல்-நெருப்பு, தணியல்-பனையமுது. விருத்தன் என்னும் பெயருக்குச்சான்றான் என்று பொருள்.

விருத்தர்—மேலோர், (சதுரகராதி).

மேலோர் என்பது சான்றோர் குலப்பெயர்களிலொன்றானபடியால், விருத்தன் என்னும் பெயருக்குச்சான்றோன் என்பது பொருளென்றறிக.

(j) அதே மரபிலுதித்த அயோத்தியரசனாகிய அரிச்சந்திரனும் அவருடைய மனைவியாகிய சந்திரமதியும் பூண்ட நாமங்களும் குலவிளக்கப்பெயர்கள்.

அரிச்சந்திரன் = அமுதகுலத்திலுதித்த சந்திரனைப்போன்றவன்
(அரி—பனையமுது),
சந்திரமதி = சந்திரனைப்போன்ற அமுதகுலத்தவள் (மது-
பனையமுது)

என்று பொருள். இவர்கள் அமுதகுலத்தவர்களானபடியால் [illegible] கிராமணியென்னும் அமுதகுலத்தவர்களின் பட்டப்பெயர் அரிச்சந்திர மகாராஜனுக்கு வழங்கியிருக்கிறதென்றறிக. திருஷ்டாந்தமாக அரிச்சந்திரோபாக்யானம் என்னும், சமஸ்கிருத நூலின் 3-வது காண்டம், 4-வது பத்தியத்தில் [illegible] கிராம ஸ்லோகத்தில்—

"விசுவாமித்திர மகாமுனி தன் சிஷியவர்க்கத்தோடு அயோத்தியாபுரியைப் பரிபாலனஞ் செய்யும் வசுந்தராதிபக்கிராமணியாகிய அரிச்சந்திர மகாராஜனிடம் வந்தார்"

என்றும், மேற்படி நூலின் 4-வது காண்டம், 46-வது பத்தியத்தில் வரும் சுலோகத்தில்

"அரிச்சந்திரமகாராஜன் காட்டிற்சேருங்கால் நட்சத்திரேசன் உபாதையைப்பொறுக்காது வருத்தமுற்ற காலத்தில் சந்திரமதி அவரைப் பார்த்து ஓ! தாத்திரிசாசுவயக்கிராமணியாகிய அரிச்சந்திரமகாராஜனே! சத்தியமே முக்கியமானது விசனமுறவேண்டாம்"

என்றும் சொல்லியிருப்பதால் சூரியகுலத்தரசர்கள் அமுதகுலத்தவராகிய சான்றோர் என்றறியலாம்.

(k) இத்தன்மையாகவே அரிச்சந்திரன் மரபிலுதித்த விசயன் (விசயம்-பனைவெல்லம்), பாகு (பனங்கற்கண்டு), இளைபிழி (இளகுனாகிய அமுதகுலத்தவன், இளை-இளமை, பிழி-பனையமுது), தீர்க்கபாகு (பராக்கிரம அமுதகுலத்தவன்) முதலிய பெயர்களாலும், அயுதாயு (10,000 சான்றோரில் சிறந்த சான்றான், அயுதம்-10,000, ஆயு-ஆய்ந்தோன், சான்றோன்), சுகோத்திரன் (நற்குடிப்பிறந்தோன், சான்றோன்) முதலிய இராமருக்கு முன்னிட்ட அயோத்தியரசர்களுடைய பெயர்களாலும் அவர்கள் அமுதகுலத்தவர்களாகிய சான்றோரென்றறியலாம்.

3. இராமருடைய முன்னோர்களாகிய அயோத்தியரசர்கள் அமுதகுலத்தவர்களாகிய சான்றோர் என்பதற்கு நாம் மேலே கூறிய நியாயங்கள் போதுமானவையானபடியால் அத்தோடு நிறுத்தி இராமருடையபிதாவாகிய தசரதமகாராஜனும் அவர் குடும்பத்திலுள்ளவர்களும் அமுதகுலத்தவர்கள், சான்றோர், கிராமணிகள், நாடாக்கள் என்று காட்டும்படிக்கான ஆதாரங்களில் சிலவற்றை இவ்விடம் கூறுவோம்.

தமியம் என்னும் பதத்துக்குப் பனையமுதென்று பொருள் என்பதாக முன்னமே எடுத்துரைத்தோம். அப்பெயரிலிருந்துண்டாகும் தமியன், தமியள் என்னும் உயர்திணைப்பெயர்களுக்கு முறையே அமுதகுலத்தவன், அமுதகுலத்தவள் என்று பொருள். இப்பெயர் தசரதமகாராஜனுக்கும் அவர் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவாம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
2-வது கவி.

புக்கபின் னிருபரும் பொருவில்சுற்றமும்
பக்கமும்பெயர்கெனப் பரிவினீக்கினன்
தக்கின் றுலகளித் தியோகியெய்திய
சக்கரத் தலைவனைத் தமியன் [illegible]

இக்கவியில் இராமருடைய பிதாவாகிய தசரத சக்ரவர்த்தியைப்பற்றி

'ஒக்கநின்றுலகளித்தி யோகினெய்திய
சக்கரத்தவனெனத் தமியனுயினன்'

என்று கூறியிருக்கிறது- இதன்பொருளென்னவெனில்

"சான்றோரோடு (உலகு) உறவாடி நின்று பாதுகாத்தவரும், உயர்ந்தோர் (*யோகின்) என்னும்சான்றோர் குலத்திலுதித்தவருமாகிய விட்டுணு (சக்கரத்தவன்)வைப்போன்ற அமுதகுலத்தவன் (தமியன்)"

என்று பொருள்.

இக்கவியில் தசரதமகாராஜன் விட்டுணுவைப்போன்ற (தமியன்) அமுதகுலத்தவன் என்று கூறியிருப்பதால், விட்டுணுவின் குலமும் தசரதன் குலமும் ஒன்றுதானென்றறியலாம். விட்டுணு அமுதகுலத்தவரென்று முன்னமே பார்த்தோம். ஆகையால் விட்டுணுவைப்போன்ற தமியனாகிய தசரதமகாராஜனும் அமுதகுலத்தவர்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
31-வது கவி.

பிரியார்பிரிவேதென்னும் பெரியோய்தகவோவென்னும்
செறியோவடியேம்நிலைநீ நினையாநினைவேதென்னும்
வறியோர்தனமேயென்னுந் தமியேன்வலியேயென்னும்
அறிவோவினையோவென்னு மரசேயரசேயென்னும்.

கைகேசியின் வஞ்சனையில் சிக்கிக்கொண்டு, இராமரை வனவாசம் போகச்சொல்லும்படி தசரதசக்ரவர்த்தியிணங்கி, ஆறாத்துயரத்திலாழ்ந்து மூர்ச்சித்துக் கிடக்குந்தருணத்தில் இராமருடைய தாயாகிய கோசலை கீழே விழுந்து கிடக்கும் மகாராஜனைப்பார்த்துப் புலம்பிய விவரம் இக்கவியில் சொல்லியிருக்கிறது:—

"ஒருபோதும் பிரியாதவர் இப்போது பிரிதல் யாதுகாரணமென்பாள்? பெருமையிற் சிறந்த சான்றோனே (பெரியோய்) இதுவுமக்கு மேன்மையோ? இது முறையோ? அடியாருடைய நிலையை நீர் நினையாத எண்ணம் யாது காரணம்? வறியவரடைந்த தனத்தைப்போலருமையானவனே! அமுதகுலத்தவளாகிய என்னுடைய (தமியேன்) வலிமையே! உம்முடைய அறிவு வும்மைவிட்டு நீங்கினதோ? அரசனே! அரசனே! என்று புலம்புவாள்."

இக்கவியில் இராமருடைய தாயாகிய கோசலைதேவி தசரதனைத்தமியேன் வலியே, அதாவது, தமியகுலத்தவளாகிய என்னுடைய, அமுதகுலத்தவளாகிய என்னுடைய வலிமையே என்று கூறுகிறாள். தசரதமகாராஜன் அமுதகுலத்தவர் என்று முன்னே பார்த்தோம். ஆகையால் இராமருடைய தாயும் தகப்பனும் தமியம் என்னும் அமுதகுலத்தவர்களென்றறிகிறோம்.

---

* யோகின் — [illegible] (யோகசாதி)

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், கைகேசி சூழ்வினைப்படலம்,
103-வது கவி.

ஆயனநிகழும்வேலை யண்ணலுமயர்ந்துதேருந்
தூயவளிருந்தசூழலு வினன்வருதனோக்கி
நாயகனுரையான்வாயா லினிதுபகர்வனென்னாத்
தாயெனநினைவான்முன்னே கூற்றெனத்தமியள்வந்தாள்.

இதன் கருத்து.

இராமருடைய மகுடாபிஷேகத்துக்கான காரியங்கள் நடக்கும் சமயத்தில், இராமர் தன் தந்தையைக்காணாமையால் நிலை தளர்ந்து பின் தெளிந்து, சிற்றன்னையாகிய கைகேசியிருக்கும் மாளிகையில் அரசனிருக்குமிடத்தைத்தேடிவந்தார். அதையறிந்த கைகேசியானவள், பரதாழ்வான் முடி சூடுவான் நீ பதினான்கு வருடம் காட்டிற்குச்செல்லென்று இராமரைப்பார்த்து அரசன் தன் வாயாற் கூறமாட்டானாகையால் நானே கூறுவேன் என்று கைகேசி தீர்மானித்துக்கொண்டு, அவள் தன் தாய் என்றே எண்ணி வந்த இராமருக்கு முன்பாக, இயமனைப்போன்ற அமுதகுலத்தவளாகிய (தமியள்) கைகேசி வந்து நின்றாள் என்று பொருள்.

தசரதமகாராஜனும் கோசலாதேவியும் தமியர் குலத்தவரென்று கூறினதுபோல, இக்கவியில் தசரதனுடைய இரண்டாவது மனைவியும் இராமருடைய சிற்றன்னையுமாகிய கைகேசியும் தமியள் (தமியம்-பனையமுது), அதாவது, அமுதகுலத்தவளெனப்பார்க்கிறோம். தசரதமகாராஜனை விட்டுணுவைப்போன்ற தமியன் என்று முன்னே கூறியதுபோல, இக்கவியில் கைகேசியை இயமனைப்போன்ற தமியள் என்று கூறியிருக்கிறது. இயமன் சூரியமகாராஜனுடைய குமாரரில் ஒருவன், மனுச்சக்ரவர்த்திக்கு உடன் பிறந்தான். ஆகையால் இயமதருமராஜனென்னும் தென்றிசைப்பாலனும் சூரியகுலத்தரசனானபடியால் அமுதகுலத்தவன் தான். ஆகையால் கைகேசியை இயமனைப்போன்ற தமியள் என்று கூறியதானது இருவருடைய குலத்தாலும் கொடுஞ்செய்கையாலும் பொருந்திய ஒப்புமையென்றறிக. தாயாகப்பாவித்துவரும் இராமருக்குக்கடுஞ்சொல் கூறிய கைகேசி, தாயென்றும் பிள்ளையென்றும் இரக்கம் காட்டாது பிராணனை வாங்குகிறவனாக மதிக்கப்படும் இயமதருமராஜனுக்குச்சமமான தமியளென்பதற்கையமில்லை.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
2-வது கவி.

குழைகின்றகவரியின்றிக் கொற்றவெண்குடையுமின்றி
இழைக்கின்றவிதிமுன்செல்லத் தருமம்பின்னிரங்கியேக
மழைக்குன்றமனையான்மௌலி கவித்தனன்வருமென்றென்று
தழைக்கின்றவுள்ளத்தன்னாள் முன்னொருதமியன்சென்றான்.

இதன் கருத்து.

மேகம்படிந்த மலையையொத்த இராமர் சாமரையில்லாமலும் தவளக்குடையில்லாமலும் [illegible] முன் செல்லவும் தருமக்கடவுள்

பின்செல்லவும், முடி சூடி வருவானென்றெண்ணிக்கொண்டிருந்த கோசலைதேவிக்கு முன்பாக அமுதகுலத்தவரில் சிறந்தவராகிய இராமர் தோன்றினார் என்று பொருள்.

இக்கவியில் இராமருக்கு ஒரு தமியன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு ஒப்பற்ற அமுதகுலத்தவன், சிறந்த அமுதகுலத்தவனென்று பொருள். ஆகையால் தசரதனுக்கும் கோசலாதேவிக்கும் கைகேசிக்கும் வழங்கியபடி, இராமருக்கும் அமுதகுலத்தவனென்று பொருள்படும் தமியன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறதென்றறிக.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடி தொழுதபடலம்,

69-வது கவி.

அரக்கியரளவற்றுரு பலகையின் குழுவாலு
செருக்கினல்கண்டுசெய்ய மெய்க்கன நீக்கச்சேர்ந்த
இரக்கமென்றொன் றுதானே யேந்திழைவடிவமெய்தித்
தருக்கியசிறையுற்றன்ன தகையளாத்தமியளம்மா.

இதன் கருத்து

ஏராளமான இராக்ஷதப்பெண்களும் பைசாசரின் கூட்டமுஞ்சேர்ந்து கொண்டு சீதாபிராட்டியார் அஞ்சும்படியாகச்செருக்கோடு துன்பஞ்செய்வதைப்பார்த்து உடம்பிலெழுந்த வெப்பமானது தணிக்க, தமியளாகிய அந்தப்பிராட்டியார் சிறந்த இரக்கமென்னும் வஸ்துவே பிராட்டியின் வடிவங்கொண்டு கொடிய சிறைக்களமடைந்தாலொத்த தன்மையுடையவளாயிருந்தாள் என்று பொருள்.

இக்கவியில் அமுதகுலமாதென்று பொருள்படும் தமியள் என்னும் பெயர் சீதைக்கு வழங்கியிருக்கிறது.

ஆகையால் இராமருடைய குலத்தவர்கள் தமியர் என்னும் அமுதகுலத்தவரென்றறியலாம்.

4. தசரதமகாராஜனுக்கும் கௌசலா தேவிக்கும் கைகேசிக்கும் இராமருக்கும் சீதைக்கும் அமுதகுலத்தவரென்று காட்டும்படிக்கான தமியன், தமியள் என்னும் பெயர்கள் வழங்கியதெனப்பார்த்தோம்; சீதை என்னும் பெயருக்கும் தமியள், அமுதகுலத்தவளென்றே பொருள். சீதை என்னும் பதத்துக்கு சீது என்பது மூலபதம். சீது என்றால் பனியமுது; ஆகையால் சீதையென்றாலே அமுதகுலமாது என்று பொருளென்றறிக.

சீதையென்னும் பெயருக்கு அமுதகுலத்தவளென்றே பொருள் என்று பின்வரும் மாகாவியத்தாலுமறியலாம்.

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், நாடவிட்ட படலம்,
50-வது கவி.

முல்லையு முருந்து முத்து முறுவலென் றுரைத்தபோது
சொல்லையு மமிர்தும்பாலுந் தேனுமென் றுரைத்ததோன்றும்
அல்லதொன்றுவதில்லை யமிர்திற்றழவமையுண்டோ
வல்லையேலறிந்துகோடி மாறிலாவாறுசான்றோய்.

இராவணன் சிறையெடுத்துப்போன சீதையைத்தேடிப்பார்த்து வரும்படி அனுமாரை இராமரனுப்பும்போது, சீதையின் அங்கமச்ச அடையாளங்களை இராமர் சொல்லியனுப்புகிறார். அக்கவிகளிலொன்றில் இராமர் அனுமாரைப்பார்த்து

"சான்றோனே! முல்லையரும்பும் மயிலின் அடியிறகும் முத்துக்களும்சீதையி[illegible]க்கு உபமானமாகுமென்று சொன்னாலோ, அமுதும் பா[illegible] சீதையின் வார்த்தைகளுக்குபமானமென்று சொல்லவேண்டியதாயிருக்கும். ஆனாலோ அவைகளை உபமானங்களாகச் சொல்லக்கூடாது. ஏனெனில் அமிர்திற்றழவமையுண்டோ? (அதாவது சீதையென்னும் பெயருக்கே அமுதமாது என்று பொருளானபடியால் அமுதுக்கு அமுதமே உபமானமாகக்கூறுவதெப்படி")

என்கிறார். இக்கவியில் சீதையின் வார்த்தையை அமுதுக்கொப்பிடலாகாதென்பதற்குக்கூறிய காரணத்தால், சீதை என்னும் பெயருக்கு அமுதகுலமாது, தமியள் என்றே பொருள் என்று விசிதமாகும்.

சீதை என்னும் பெயரும் தமியள் என்னும் பெயரும் ஒருபொருட்கொண்ட மொழிகளென்றுரைத்தோம். அத்துடன் ஒரு பொருட்கொண்ட வேறோர் பெயர் சீதைக்கு வழங்கியிருக்கிறதென்று பின்வரும் கவியாலறியலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுதபடலம்,
85-வது கவி.

ஆண்டையினருக்கன்மைந்த னையகேளரிவைதம்பால்
காண்டலுக்கெளியளானா ளென்றனுங்காலந்தாழ
ஈண்டினுமிருத்திபோலா மென்றனன்னென்றலோடும்
தூண்டிரண்டனையதோளான் பொருக்கெனவெழுந்துசொன்னான்.

சூரியகுலத்தரசனாகிய சுக்கிரீவன் இராமரைப்பார்த்து அரிவையாகிய சீதையிருக்குமிடமின்னதென்று அனுமார் மூலமாய் ஞாமறிந்தபின்பும் காலதாமதமேன் செய்யவேண்டுமென்று சொன்னான் என்பதாகக்கூறியிருக்கிறது.

இக்கவியில் சீதைக்கு வழங்கிய அரிவை என்னும் பெயரும் சீதை, தமியள், என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்ட மொழி எனறிக. அரி—பனையமுது; ஆகையால் அரிவை என்றால் அமுதகுலமாது, சீதை, தமியள் என்று பொருள்.

ஆகையால் சிதை, தமியள், அரிவை என்னும் பெயர்களெல்லாம் ஒரு பொருட்கொண்ட மொழிகள் என்றும், சீதையென்னும் பெயருக்கு அமுதகுலமாது என்பதே சரியான தாற்பரியம் என்றுமறிக. சீதையின் குலம் அமுதகுலமென்று காட்டும்படிக்கான வேறு சில ஆதாரம் கூறுவோம்.

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், வாலி வதைப்படலம்,

78-வது கவி.

கோவியற்றருமமுங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணு வுருவத்தாயுடைமையன்றே
ஆவியைச்சனகன்பெற்ற வன்னத்தையமிர்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்பு திகைத்தனைபோலுஞ்செய்கை.

இக்கவியில் சீதைக்கு 'அமிர்தின்வந்ததேவி' என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு அமுதகுலத்திலுதித்த அரசி என்று பொருள்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப்படலம்,

11-வது கவி.

ஆவியந்துகில்புனைவதொன் றன்றிவேறறியாள்
தாவியன்னமென்புனலிடைத் தோய்கிலாமெய்யாள்
தேவிதெண்கடலமிழ்து கோண்டநங்கவேள்செய்த
ஓவியம்புகையுண்டதே யொக்கின்றவுருவாள்.

அனுமார் சீதாதேவியாரைத் தேடிக்கொண்டு போய் அசோகவனத்தில் கண்டதருணத்தில் பிராட்டியாரிருந்த விதம் இக்கவியில் கூறியிருக்கிறது. இதன் கருத்து :—

அகிற்புகைபோன்ற அழகிய ஆடையை உடுப்பதொன்றல்லாமல் வேறொரு செய்தியையுமறியாதவளும், தாவியையுடைய அன்னமுலவும் மெல்லியபுனலில் மூழ்காத வுடம்பையுடையவளும், திருப்பாற்கடலில் தோன்றிய அமிர்தத்திஞலே மன்மதனமைத்த சித்திரம் புகையிற் படிந்ததையொத்த உருவத்தையுடையவளுமாயிருந்தாள்

என்பது கருத்து. இக்கவியில் சிதையை 'அமிழ்துகோண்டநங்கவேள் செய்த ஓவியம்' என்பதாகக்கூறியிருக்கிறது. இதில் பிராட்டியார் அமிர்தத்திஞலே அமைக்கப்பட்டவள் என்று கூறியிருப்பதானது அம்மணுடைய குலம் அமுதகுலம் என்பதையும், மன்மதனமைத்த சித்திரம் என்பது அவளுடைய மிகுந்த அழகையும் குறிக்கின்றதெனறிக.

5. அமுதகுலத்தவராகிய திருப்பனே நாயர் என்னும் சிலபெருமானுடைய கண்டத்தைப் பனையோடொப்பிட்டிருக்கிறதுபோல, இராமருடைய கரத்தையும் பனைக்கு ஒப்பிட்டிருக்கிறது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
228-வது கவி.

அனையவேலை யகன்மனை யெய்தினள்
புனையுஞ்சீரந் துணிந்து புனைந்தனள்
நினைவில்வள்ளல்பின் வந்தய னின்றனள்
பனையினீள்கரம் பற்றிய கையினள்.

இதன் கருத்து.

அத்தருணத்தில் அகன்ற மாளிகையையடைந்து, இராமருடுத்த மரவுரியைத் தானுந் துணிந்துடுத்து, தம்மை மறந்து நிற்கும் இராமரின் பின்வந்து, அவர் பக்கத்தில் நின்றவள் யாரென்றால் 'பனையினீள்கரம் பற்றிய கையினள்' என்னும் சீதாபிராட்டியார் என்று பொருள்.

இக்கவியில் சீதாதேவியார் திருவிவாக சம்பந்தமாய்ப்பற்றிய கரத்தைப் பனையினீள்கரம் என்று கண்டிருக்கிறது. இப்பெயருக்குப் பனையைப்போல் நீண்ட கரமென்றால் இராமருடைய தேகவளர்ச்சியைவிட அவருடைய கரமானது அதிகமாய் நீண்டு பனைமரத்தைப்போல் உயர்ந்திருந்தது என்று கூறுவது மூடார்த்தம். அதன் யதார்த்த தாற்பரியமாவது :—பனை-அமுதவிருட்சம், நீள்-உயர்ச்சி (சதுரகராதி). ஆகையால் பனையினீள்கரம் என்றால் அமுதவிருட்சத்தினுயர்ந்தகரம், அதாவது அமுதகுலத்தில் தோன்றிய உயர்ந்தோன் கரம், அமுதகுலத்தவனாகிய சான்றோன் கரம் என்பதாம். இதுவே சான்றோர் தாற்பரியம். பனையைப்போல் இராமருடைய கரம் நீண்டிருந்ததென்பது சான்றோர் நம்பத்தக்க சத்தியமன்று. அறிவிலிகளாகிய கீழ்மக்கள் தான் அத்தன்மைய அசாத்திய வசனங்களை நம்பக்கூடியவர்கள்.

ஆகையால் இராமருடைய திருக்கரங்களுக்கு வழங்கிய 'பனையினீள்கரம்' என்னும் பெயராலும் அவர் அமுதகுலத்தவனாகிய சான்றான் என்றறியலாம்.

6. இராமர் அமுதகுலத்தவரானபடியால் தான் சிவபெருமானுக்கும் தேவேந்திரனுக்கும் பனையமுது எவ்வளவு அருமையான பானமாக இருந்ததோ, அதேபிரகாரம் இராமருடைய குலத்தவர்களுக்கும் அவ்வமுது இருந்ததென்று பார்க்கிறோம். இராமர் சீதையை மணம்புரியச்சென்றபோது, அவருடைய மணக்கோலங் காணும்பொருட்டு தசரதன் தன் இனஜனங்களோடும் சதுரங்க சேனையோடும் அயோத்தியினின்று புறப்பட்டு, மிதிலாபுரிக்குப்போகின்ற வழியில் நதிகளும் பொய்கைகளும் வாவிகளும் மிகுந்த அழகிய ஒரு வனத்திலுள்ள கற்பகவிருட்ச சோலைகளில் அவர்களிறங்கி, அந்திப்பொழுதில் இராமருடைய இனத்தாரான க்ஷத்திரியகுல ஆடவரும் பெண்களும் அங்குள்ள சோலைகளில் புஷ்பங்கள் கொய்து, பூரண சந்திரோதயமான நிலவில் விளையாடிக்கொண்டே, அங்குள்ள கற்பக விருட்சத்தினமுதாகிய பனீரை இலைக்கொண்டைகளிலும் பொற்கிண்ணங்கள் வெள்ளிக்கிண்ணங்களிலும், வெண்கல்வட்டில்களிலும் வார்த்து உண்டு மகிழ்ந்தார்கள்

என்பதாகக்கம்பராமாயணம், பாலகாண்டம், உண்டாட்டுப்படலத்தில் வாசிக்கிறோம். இதைப்பற்றி ஷை படலத்தின் 6-வது, 10-வது கவிகளை இவ்விடம் பெயர்த்தெழுதுவோம்.

6-வது கவி.

பூக்கமழோதியர் போதுபோக்கிய
சேக்கையின்பச் செருக்குஞ்சிந்தையார்
ஆக்கியவமிர்தென வம்பொன்வள்ளத்து
வாக்கியபசுநற மாந்தன்மேயினார்.

இக்கவியில் இராமருடைய இனத்தார் பசுநறு என்னும் பதநீரை பொன் வட்டில்களில் வார்த்து உண்டார்களென்று கண்டிருக்கிறது.

10-வது கவி.

விடனுக்குநெடியநோக்கி னுழுதொகருமின்சொலார்தம்
மடனுக்குமடனுமுண்டே வாணுதலொருத்திகாணத்
தடனுக்குநிழலைப்பொன்செய் தன்னுணுந்தேறல்வள்ளத்
துடனுக்கவுவந்துநீயே யுண்ணுதிதோழியென்றாள்.

இக்கவியில் இராமருடைய இனத்தாளொருத்தி பொற்கின்னத்தில வார்த்திருந்த பதநீரினுள் தன் சாயலைக்கண்டு, அது தன் தோழியென்றெண்ணி, அச்சாயலைப்பார்த்துத் தோழியே! நீயே இந்தப்பதநீரை உண்ணு என்றாள் எனச்சொல்லியிருக்கிறது. இராமருடைய இனத்தார் பதநீரை இவ்வளவு அருமையாயெண்ணியிருப்பதாலும், அவர்கள் அமுதகுலத்தவரென்றறியலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம்,

6-வது கவி.

அருந்ததியுரைத்தி யழகற்கருகுசென்றான்
மருந்தனையதேவிசெசி வஞ்சர்சிறைவைப்பில்
பெருந்துயரினோடுமொரு வீடுபெறலில்லா
திருந்தனளெனப்பகரி னென்னடிமையென்னும்.

இக்கவியில் சீதாபிராட்டியார் இராமருக்கு மருந்தனையதேவி என்று கண்டிருக்கிறது. மருந்து என்றால் அமுது (சதுரகராதி). ஆகையால் மருந்தனையதேவியென்றால் அமுதைப்போலருமையான தேவியென்று பொருள். யேனையோரைப் பார்க்கிலும் அமுதகுலத்தவர்களுக்கே அமுது மிகவும் அருமையானதென்று தெரிவிக்கவேண்டியதில்லை. ஆகையால் சீதை இராமருக்கு அமுதைப்போலருமையானவள் என்று சொல்லியிருப்பதால் இராமா அமுதகுலத்தவரென்றறியலாம். பிராமணனுக்கு முட்டி எவ்வளவு அருமையோ, செட்டிக்குத் [illegible] எவ்வளவு அருமையோ வெள்ளாளனுக்குக் கலப்பை எவ்வளவு அருமையோ, அமுதகுலத்தவனுக்கு அமுது அவ்வளவு அருமையென்றறிக.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
49-வது கவி.

பெண்ணினின்னமுதன்னவள் தன்னொடும்பிரியா
வண்ணவெஞ்சிலைக் குரிசிலுமருங்கினிதிருப்ப
அண்ணலாண்டிருந்தா னழகருநறவனைத்தன்
கண்ணுமுள்ளமும் வண்டெனக்களிப்புறக்கண்டான்.

பெண்களுக்குள் இனிய அமுதம்போன்ற சீதையோடும், இராமனைவிட்டு ஒருபோதும் பிரியாத, அழகிய, கொடியவில்லையேந்திய இலக்குமனரோடும், இராமர் அவ்விடத்தில் அழகிய அருமையான அமுதம்போல் வீற்றிருந்தார். அதைச்சுமந்திரன் என்னும் மந்திரி தன் கண்களும் மனமும் அம்மதுவையுண்ணும் வண்டு போல மகிழ்கூரப்பார்த்தானென்று பொருள்.

இக்கவியில் சீதை பெண்களுக்குள் அமுதம் போன்றவள் என்றும், இராமர் புருடர்களுக்குள் அழகிய அருமையான பனையமுதுபோன்றவர் என்றும் கண்டிருக்கிறபடியால், பனையமுதானது இராமருடைய குலத்தவர்களுக்கு மிகவும் அருமையான பானமென்றறியலாம். இவற்றையெல்லாம் ஒருங்கே சேர்த்தாலோசிக்கையில் சூரியகுலத்தில் தோன்றிய அயோத்தியிலரசாண்ட அரசர்கள், தென்னாட்டிலரசாண்ட சூரிய குலத்தரசர்களைப்போலவே அமுதகுலத்தவர்கள் என்று தெளிவாயறியலாம்.

7. இராமர் அமுதகுலத்தவரெனப்பார்த்தோம். இராமருடைய முற்பிதாக்கள் சான்றோர் குலத்தவர்கள் என்று காட்டும்படிக்கான ஆதாரங்களில் சிலவற்றையும் அதே சம்பந்தமாய்க்கூறினோம். இனி மேல் திவாகர நாலாசிரியர் சான்றோர் குலத்தவர்களுக்குப்பூர்வத்தில் வழங்கியதாகக்கூறும்

சான்றோர் மிக்கோர் நல்லவர் மேலவர்
ஆய்ந்தோர் உயர்ந்தோர் ஆரியர் உலகு என
வாய்ந்த ஆன்றோர் அறிவுடையோரே

என்னும் பத்துப்பெயர்களில் இராமருடைய குலத்தவர்களுக்கு வழங்கிய குலவிளக்கப்பெயர்களில் சிலவற்றை வரைவோம்.

கம்பராமாயணம், யுத்தகாண்டம், பிரமாஸ்திரப்படலம்,
211-வது கவி.

சான்றோர்மாதைத் தக்கவரக்கன்சிறைதட்ட
ஆன்றோர்சொல்லுநல் லறமன்றேன்வசமானால்
மூன்றாய்நின்றபேருல கொன்றாமுடியாவேற்
றோன்றுந்தேவரென் வலியினின்வீரத்தொழிலம்மா.

இதன் கருத்து.

சான்றோர்குல மாதாகிய என் நாயகி சீதையை இராவணன் எடுத்துக்கொண்டுபோனது சான்றோரால் (ஆன்றோர்) புகழப்படும் தருமநீதவனதையும்

அந்த இராவணனுக்கு வசப்படுமோனால், சுரர், அசுரர், நரர் என்று மூன்று பிரிவினராய்க்கீர்த்திபெற்று விளங்கும் சான்றோர (உலகு) எல்லாரும் ஒருமிக்க இக்கோதண்டத்தால் அழியாது பிழைப்பார்களோ? என்று பொருள்.

இக்கவியில் அமுதகுலத்தவளாகிய சீதையைச்சான்றோர் மாது என்று தெளிவாய்க்கூறியிருப்பதால் அவள் சான்றாள் என்றும், அதே குலத்திலுதித்த இராமரும் சான்றான் என்றுமறியலாம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுதபடலம்,
58-வது கவி.

உன்பெருந்தேவியென்னு முரிமைக்குமுன்னைப்பெற்ற
மன்பெருமருகியென்னும் வாய்மைக்கும்மிதிலைமன்னன்
தன்பெருந்தனயையென்னுந் தகைமைக்குந்தலைமைசான்றாள்
என்பெருந்தெய்வமையா வின்னமுங்கேட்டியென்பான்.

இதன் கருத்து.

உனது பெருமைக்கமைந்த மனைவியென்னும் உரிமைக்கும், உன் பிதாவாகிய தசரதமகாராஜனுடைய மூத்த மருமகள் என்னும் வாய்மைக்கும், மிதிலைபாசனாகிய சனகமகாராஜனுடைய சிறந்த புத்திரியென்னும் தகைமைக்கும் முதன்மையான சான்றாளாகிய சீதையே எனது பெரிய தெய்வமாவாள் என்றார் அனுமார் இராமரைப்பார்த்து.

இக்கவியிலும் சீதை சான்றாள் என்று கூறியிருக்கிறது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
138-வது கவி.

ஆன்றான்பகர்வான்பி னுமையவிவ்வையமெய்யல்
தோன்றுநெறிவாழ்துணைத் தம்பியைப்போர்தொலைத்தோ
சான்றோர்புகழுந்தவத் தாதையைவாதைகொண்டோ
ஈன்றாளைவென்றோவினி யிக்கதந்தீர்வதென்றான்.

இராமர் வனவாசம் செய்யவேண்டுமென்றும், பரதன் ராட்சியபாரஞ் செய்யவேண்டுமென்றும் கைகேசி தசரத சக்ரவர்த்தியிடம் வரம்பெற்று, இராமரை வனஞ் செல்லக்கட்டளையிட்டபோது, இளையபெருமாளாகிய இலக்குமணர் கோபித்தெழுந்து என் கையிலிருக்கும் வில்லானது இன்றைக்குச்செய்யும் தொழிலைக்காண்பாய். என்று இராமரைப்பார்த்துக்கூறினபோது

"சான்றோனாகிய (ஆன்றான்) இராமர் இலக்குமணரைப்பார்த்து ஐயனே! இப்பூலோகத்தின் மாய்கையையறியாது நன்னெறியிலொழுகுகின்ற துணைவனும் தம்பியுமாகிய பரதனைக்கொன்ற பிற்பாடோ, சான்றோர் புகழுந் தவத்தையுடைய நம் பிதாவாகிய தசரதசக்ரவர்த்தியைக்கொன்றோ, நம் தாயாகிய கைகேசியின் உயிரை வாங்கியோ நீகொண்ட இக்கோபம் தணியுமென்று கேட்டார்."

என்று பொருள். இக்கவியில் இராமருக்கு ஆன்ருன் என்னும் சான்ருேர்குலப்பெயரும் அவருடைய பிதாவுக்குச்சான்ருேர் புகழுந் தவத்தாதையென்னும் பெயரும் வழங்கியிருக்கின்றன. தசரதமகாராஜன் சான்ருேர் குலத்தவரானபடியால தான் அவரைச் சான்ருேர் புகழுந் தாதை என்று கூறியிருக்கிறதென்றறிக.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், கிளைகண்டு நீங்குபடலம்,

137-வது கவி.

ஈன்றவர்முதலிய வெண்ணில்சுற்றமுஞ்
சான்றவர்குழுவொடு தவத்துளோர்களும்
வான்றருசேனையு மற்றுஞ்சுற்றுற
மூன்றுநூல்கிடந்தமார்பன் முனிவனும்போயினுன.

இராமலக்குமணர்களும் சீதாபிராட்டியாரும் வனத்துக்கேகின பின்னா கைகேசியின் குமாரனுன பரதாழ்வான் தான் கிரீடாதிபதியாக உடன்படாமல், இராமருக்கே பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமென்று கருதி, அவரைத்தேடி வனத்துக்குப்புறப்பட்டான். அப்போது அவனுடன் கூடச்சென்றவர்கள் யாரென்ருல்

"கைகேசி கோசலை என்னும் தாய்மார் முதலிய எண்ணிறந்த உறவினரும் மற்றும் சான்றேருடைய கூட்டமும், க்ஷத்திரிய ரிஷிகளும், சேனைதளங்களும், மற்றவர்களும் சூழ்ந்துவர முப்பிரி நூலணிந்த க்ஷத்திரிய ரிஷியாகிய வசிட்டரும் போனுர்" என்று பொருள்.

இக்கவியில் பரதனேடு அவனுடைய சுற்றத்தாரும் மற்றும் சான்ருேரும் போனுர்களென்று சொல்லியிருப்பதாலும், இராமருடைய குலம் சான்ருேர்குலமென்றறியலாம்.

கம்பராமாயணம், உத்தரகாண்டம், சீதை வனம்புகுபடலம்,

27-வது கவி.

விழிபெரும்பசலேபூத்தது மேனி வெளுத்தது மெல்லியன்முன்கை
தழுவியசரிகள்சரிந்தனகெற்பந் தரித்தது சான்றவர்க்கெல்லா
மொழிவனகபோல முலேகன்பால்பாய வலைமுகங்கறுத்தனவாக
வெழுதருஞ்சிலைதக்கிவ் வகையாய விலக்கணம்பலவுமுண்டாக.

சீதாதேவியார் கற்பவதியானபோது தோன்றிய அடையாளங்கள் கூறப்பட்டிருக்கும் இக்கவியில் சீதையின் அழகு சான்ருேரெல்லாரும் சிறந்ததெனப்பேசிக்கொள்ளும் ஒப்பற்ற அழகு என்பதாகவும், அத்தன்மைய திருமேனியானது கெற்பங்கொண்டவுடனே வேறுபாடானதென்பதாகவும கூறியிருக்கிறது. இங்கே சான்ருேர் என்று கூறிய பதமும் சீதையின் குல[illegible]தென்றறிக.

8. [illegible]மக்கோன் என்னும் சான்ருேர்குலப்பெயரும் வழங்கிய[illegible] பேற்கோள் கூறுவாம்:—

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், கைகேசி சூழ்வினைப்படலம்,
66-வது கவி.

மாதர்கள்கற்பின்மிக்கார் கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனொத்தார் வேறுளமகளிரெல்லாம்
சீதையையொத்தாரன்னுள் திருவினையொத்தாளவ்வூர்
சாதுகைமாந்தரெல்லாந் தயரதன்றன்னையொத்தார்.

இராமருக்குப்பட்டாபிஷேகமாகப் போகிறதென்னும் செய்தி வெளியானவுடனே அயோத்திமா நகரிலுள்ள பெண்கள் எல்லாம் கற்பினையுடைய சான்றோர்குல (மிக்கார்) மாதாகிய கோசலையென்னும் இராமருடைய தாயைப்போல் களி கூர்ந்தார்கள், அந்தணர்களெல்லாம் க்ஷத்திரிய ரிஷியாகிய வசிட்டனைப்போல் மகிழ்ந்தார்கள், மற்றுள்ள பெண்களெல்லாம் சீதையைப்போல் களி கூர்ந்தார்கள், சீதையானவள் இலக்குமியைப்போல் சிறந்து விளங்கினுள், அந்நகரிலுள்ள சற்குணவான்களாகிய புருடரெல்லாம் தசரத சக்ரவர்த்தியைப்போல் மகிழ்ந்தார்கள் என்று பொருள்.

இக்கவியில் இராமருடைய தாயாகிய கோசலாதேவியை "கற்பின் மிக்கார் கோசலை" என்று கூறியிருக்கிறது. இதற்குக் கற்பினை மிகுதியாகவுடைய கோசலையென்பது மூடார்த்தம். கற்புக்கு மிகுதியும் குறைவுமில்லையென்பதாக முன்னமே விளக்கிக் காட்டினேம். ஆகையால் 'கற்பின் மிக்கார் கோசலை' என்பதற்குக்கற்பினையுடைய மிக்கார் என்னும் சான்றோர்குலக்கோசலாதேவி என்பதே பொருள்.

9. இராமருடைய குலத்துக்கு நல்லவர் என்னும் சான்றோர் குலப்பெயர் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவாம் :—

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம்,
42-வது கவி.

நல்லோய்நின்னை நலிந்தோரைக்
கொல்லேமெம்முயிர் கொண்டிங்கே
எல்லோருஞ்செல வெங்கோனும்
வில்லோடுஞ்செல வேண்டாவோ.

இராவணனுடைய சிறைக்களத்திலிருந்த சீதை அனுமாரைப்பார்த்து, இராமர் என்னுடைய சிறையை மீட்க வரவாபோகிறார், அயோத்திக்குத்திரும்பிப்போவார், ஆகையால் நீ திரும்பிப்போய்ச்சுக்கிரீவமகாராஜனைப்பார்த்து அவர் இராமரோடு அயோத்திக்குச்சென்று, இராமருக்குப் பட்டங்கட்டிவைக்கும்படியாகச்சொல்லு என்று சீதை சொன்னபோது, அனுமார் தேவியாரைப்பார்த்து

"நல்லோய்! (சான்றுனே!) உன்னை [illegible] இராவணனை [illegible]
[illegible], நாங்கள் எமதுயிரை [illegible] கொண்டு [illegible],
இராமமூர்த்தியும் தம்முடைய வில்லைக்கையிற்கொண்டு அயோத்தி
[illegible]ச்சென்றால் எவ்வளவு மகிமையாயிருக்கும்"

என்கிறார். இக்கவியில நல்லவள் என்னும் பெயர் சீதைக்கு வழங்கியிருக்கிறதென்றறிக.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
39-வது கவி.

மண்ணினுநல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணினுநல்லள் பெரும்புகழ்ச்சனகியோநல்லள்
கண்ணினுநல்லன் கற்றவர்கற்றிலாதவரும்
உண்ணுநீரினுமுயிரினு மவனையேயுவப்பார்.

இதன் கருத்து.

சீதையானவள் பூதேவியிலும் சிறந்த சான்றாள், இலக்குமி சரசுவதி துர்க்கை என்னும் மாதரிலும் சிறந்த சான்றாள், பெருங்கீர்த்திபெற்ற சீதையே சான்றாள்; இராமரோவெனில் கண்ணிலும் அருமையான சான்றான், கற்றோருமற்றோரும் தாமுண்ணு நீரிலும் தமதுயிரினும் இராமனையே சிரேஷ்டமாகக்கொண்டு மகிழ்வார்கள் என்று பொருள்.

இக்கவியிலே இராமருக்கு நல்லன் (நல்லவன்) என்னும் சான்றோர் குலப்பெயரும், சீதைக்கு நல்லள் (நல்லவள்) என்னும் சான்றோர்குலப் பெயரும் வழங்கியிருக்கிறதென்றறிக.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
5-வது கவி.

முறைமையன்றென்பதொன் றுண்டுமும்மையின்
நிறைகுணத்தவ னின்னினுநல்லனால்
குறைவிலன்னெனக் கூறினள்நால்வர்க்கும்
மறுவிலன்பினில்வேற் றுமைமாற்றினாள்.

இதன் கருத்து.

அந்தணர், சான்றோர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு குலத்தவரிடத்திலும் வேறுபாடில்லாத அன்புள்ள கோசலாதேவி இராமரைப்பார்த்து மூத்தானிருக்க இளையானுக்கு முடி சூட்டுதல் முறைமையல்லவென்று கூறும் ஒரு வார்த்தையுளதேயல்லாமல், உன் தம்பியாகிய பரதாழ்வான் உன்னிலும் மும்மடங்கு சிறந்த குணசீலன், உன்னிலும் சிறந்த சான்றான் (நல்லன்), நல்லொழுக்கங்களில் குறைவில்லாதவன் என்று சொன்னாள் என்று பொருள்.

இக்கவியில் இராமருடைய தம்பியாகிய பரதனுக்கு நல்லன் (நல்லவன்) என்னும் சான்றார்குலப்பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
80-வது கவி.

தானமுந்தருமமுந் தகவுந்தன்மைசால்
ஞானமுநல்லவர்ப் பேணுநன்மையும்
மானவவையகின் மகற்குவைகலும்
ஈனமில்செல்வம் [illegible]

இதன் கருத்து.

மானவ ஐய, அதாவது, மனு மரபிலுதித்த அரசனாகிய தசரத மகாராஜனே! தானமும் தருமமும் நடுநிலைமையும் உயிர்க்குறுதியான ஞானமும் சான்றோரையுபசரிக்கும் நன்மையும் பழுதற்ற செல்வமும் எந்நாளும் உன் மகனாகிய இராமருக்குப் பொருந்தக்கடவதென ஆசீர்வதித்தார்கள் என்பதாம்.

இக்கவியில் இராமருக்குச் சான்றோரையுபசரிக்கும் நன்மையுண்டாகக்கடவதென இராஜ சபையிலுள்ளவர்கள் ஆசீர்வதித்தார்கள் என்று கூறியிருப்பதினால், அந்தணர், சான்றோர், வணிகர், வேளாளர் என்பதாகத்திவாகரம் கூறும் நான்கு குலங்களில் இரண்டாவதாகிய சான்றோர் குலமே இராமருடைய குலமென்றறியலாம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், கைகேசி சூழ்வினைப்படலம்,

95-வது கவி.

சத்திரங்கிழற்றவுயிர் தானையொடோரு
அத்திரம்சிழற்றவரு ளோடவனியாள்வோர்
புத்திரரினிப்பெறுதல் புல்லிதெனநல்லோர்
சித்திரமெனத்தனி திகைத்தருகின்றார்.

இதன் கருத்து.

தவளக்கொடை நிழல் செய்யவும் நெருங்கிய சேனைகளோடு பலவகைப்பட்ட அம்புகள் ஒளி வீசவும் கருணையோடு உலகினை அரசாளும் சான்றோர் (நல்லோர்) இனிமேல் புத்திரரைப்பெற்றெடுப்பதினால் பயனென்ன, ஒன்றுமில்லையென்பதாக அறிவு கலங்கி மனமுருகி ஓவியம்போல் நின்றார்கள் என்று பொருள்.

இராமமூர்த்தி தேரினில்வரும் மகிமையைக்கண்ணுற்ற சான்றோர் தசரதமகாராஜன் பெற்ற இராமனைப்போல் சிறந்த புத்திரன் நமமுடைய வயிற்றில் ஜெனிக்கவாபோகிறான், ஆகையால் இனிமேல் பிறக்கும் பிள்ளைகள் இராமருடைய மகிமைக்குச் சமமாகத்தோன்றமாட்டார்களானதால் அத்தன்மைய பிள்ளைகளைப்பெறுதிருப்பதே மேன்மையென்பதாக இராமருடைய பொலிவைப்பார்த்து மயங்கி நின்றார்கள் சான்றோர் என்று கூறியிருப்பதாலும், இக்கவியில் கூறப்பட்ட நல்லோர் என்னும் சான்றோர் இராமருடைய குலத்தவர்களாகிய சான்றோர் என்றறியலாம்.

10. இராமருடைய குலத்தவருக்கு மேலவர் என்னும் சான்றோர் குலப்பெயர் வழங்கியதற்கும் மேற்கோள் கூறுவோம்:—

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,

13-வது கவி.

வெய்யவன்குலமுதல் வேந்தர்மேலவர்
செய்கையி னொருமுறை திறம்பலின்றிய
வையம்யா னுண்டவா னென்ன மாட்சியால்
[illegible]

இதன் கருத்து.

சூரியமகாராஜன் மரபிலுதித்த மனு முதலிய அரசர்களாகியசான்றோரது அரசியல் சிறிதும் மாறுபடாமல் உங்கள் பெருந்தகைமையால் உலகினை யாளுண்டவருடம் 60,000 என்பதற்கையமில்லை என்றார் தசரதமகாராஜன்.

இக்கவியில் சூரியமகாராஜன் மரபினருக்கு மேலவர் என்னும் சான்றோர்குலப்பெயர் வழங்கியிருப்பதால், அதே குலத்திலுதித்த இராமரும் மேலவனாகிய சான்றேனென்றறிக.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்தரைசூழ்ச்சிப்படலம், 64-வது கவி.

வெயின்முறைக்குலக்கதிரவன் முதலியமேலோர்
உயிர்முதற்பொருடிறம்பினு முறைதிறம்பாதோர்
மயின்முறைக்குலத்துரிமையை மனுமுதன்மரபைச்
செயிருறப்புலச்சிந்தையா லென்சொனாய்தீயோய்.

கூனியென்பவள் கைகேசியைப்பார்த்து உன் மகனாகிய பரதாழ்வானுக்குப்பட்டாபிஷேகஞ் செய்யாமல் உன் சக்களத்தியாகிய கௌசலாதேவியின் குமாரனாகிய இராமருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தால், அதன்பின்பு இராமரும் கௌசலாதேவியும் உன்னை மதியார்கள் என்று கூறியபோது கைகேசியவளைப்பார்த்து

"தீயவளாகிய கூனியே! சூரியமகாராஜன் முதலான சூரியகுலத்தரசர்களாகிய சான்றோர் (மேலோர்) உயிர்மோசம் பொருள்மோசம் நேரிட்ட காலங்களில் முதலாய்த்தருமந்தப்பி நடக்கமாட்டார்கள்; அப்படியிருக்க சூரியனுக்குச்சமானமான மானஸ்தராகிய மனுச்சக்ரவர்த்தியின் மரபினருக்குக் குற்றமான பேச்சைச்சொன்னாய்"

என்பதாகக்கடிந்துகொண்டாள் என்பதாம். இக்கவியிலும் இராமருடைய குலமாகிய சூரியகுலத்தரசர்களுக்கு மேலோர் என்னும சான்றோர்குலப்பெயர் வழங்கியிருக்கிறது.

11. உயர்ந்தோர் என்னும் சான்றோர்குலப்பெயரும் இராமருடைய குலத்தவர்களுக்கு வழங்கியதற்குத் திருஷ்டாந்தம் கூறுவோம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம், 55-வது கவி.

உணராவானனையாளுரையா லுயர்ந்தானுரைசால்குமரன்
புணராவிலமேவனமே போவானேயாமென்னா
இணையார்திருதாரரசனிடரா லயர்வான்வினையேன்
அ[illegible]வானென்றன் [illegible]தோன்றுமென்றான்.

இதன் கருத்து.

(உயர்ந்தான் உரைசால் குமரன்) சான்றோனாகிய த[illegible]
புகழ்பெற்ற குமாரனாகிய இராமர் இவ்வுலகையாளாது வனவாசஞ்

செய்யப்போகிறுன் என்று, பூங்கொத்துகள் நிறைந்த மாலையையணிந்த தசரதன் அக்கௌசலாதேவியின் வார்த்தையாலறிந்து, துன்பத்தாற் சோர்ந்து, தீவினையேனது துணைவனே! துணைவனே! என்று புலம்பி, பெருமையிற் சிறந்த சான்றேனே (தோன்றல்) என் கண் முன் தோன்றுவாயென்று கதறினுன் என்று பொருள்.

இக்கவியில் உயர்ந்தான் என்னும் சான்றோர்குலப்பெயர் தசரத சக்ரவர்த்திக்கு வழங்கியதாகப்பார்க்கிறோம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,
51-வது கவி.

என்னைக்கண்டும்மேகாவண்ண மிடைநூறுடையான்
உன்னைக்கண்டும்மிலனேயென்று ஞுயர்கோசலையைப்
பின்னைக்கண்டானவையான் பிரியக்கண்டதுயரம்
தன்னைக்கண்டேதவிர்வான் தளர்வாணிலமிற்றளர்வான்.

54-வது கவி.

போவாதொழியாயென்றுள் புதல்வன்றன்னைக்கணவன்
சாவாதொழியானென்றேன் றுள்ளந்தளர்வற்றயர்வாள்
காவாயென்றுன்மகனைக் கணவன்புகழுக்கழிவாள்
ஆவாவுயர்கோசலையா மன்னம்மென்னூற்றனளே.

இவ்விரண்டு கவிகளிலும் இராமருடைய தாய்க்கு உயர்கோசலை என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு உயர்குலகோசலை, உயர்ந்தோர்குலகோசலை, சான்றோர்குலகோசலை என்று பொருள்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம்,
75-வது கவி.

ஆகவிம்மொழியா சிலகேட்டறிவுற்றுள்
ஓகைகொண்டுகளிக்கு மனத்தளுயர்ந்தாள்
போகைநன்றிவனென்பது புந்தியின்வைத்தாள்
தோகையுஞ்சிலவாசக மின்னனசொல்வாள்.

இதன் கருத்து.

அறிவுற்றுள் (அறிவுடையோர் குலத்தவள்) ஆகிய சீதையானவள் அனுமார் சொன்ன குற்றமில்லாத இத்தன்மைய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்து களிகூருமனமுடையவளாய், உயர்ந்தாள் (உயர்ந்தோர் குலத்தவள்) ஆகிய சீதையானவள் இராமரிடம அனுமார் செல்வதே நல்லதென்பதாக எண்ணி, மயில்போன்ற அவள் பின்வரும் சில வார்த்தைகளைக்கூறுவாள் என்று பொருள்.

இக்கவியில் சீதையின் குலம் அறிவுடையோர்குலமென்றும் உயர்ந்தோர் குலமென்றும் கூறியிருக்கிறது.

இராமருக்கு ஆரியன் என்னும் சான்றோர்குலப்பெயர் வழங்கியதாகக்கிருஷ்ணாரும் கூறுவாம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், தைலமாட்டுபடலம்,
46-வது கவி.

அரியனிளவலை நோக்கியய்யவிச்
சிரியவல்லன செப்பலென்றபின்
பாரிடைவணங்கினன் பதைக்குநெஞ்சினன்
தேரிடைவித்தகன் சேறல்மேயினன்.

இராமர் இலக்குமணரைப்பார்த்துப் பயனற்ற வார்த்தைகளை என் சொல்லுகிறாய் என்றதன் பின் சுமந்திரன் என்னும் மந்திரி விடைபெற்றுக்கொண்டு தேரேறிப்பட்டணத்துக்கு நேராக நடத்தினானென்று பொருள். இக்கவியில் இராமருக்கு ஆரியன் என்னும் சான்றோர்குலப் பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலம்,
25-வது கவி.

ஐயுறலுளதடை யாளமாரியன்
மெய்யுறவுணர்த்திய வுரையும்வேறுள
கையுறுநெல்லியங் கனியிற்காண்டியால்
ஐய்யுறுவிளக்கனாய் நினையல்வேறென்றான்.

சீதாதேவியார் இலங்காபுரியில் சிறையில் வைக்கப்பட்டிருக்கையில் ஒரு நாள் மிகுந்த மனத்துயரடைந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ள வேணுமென்கிற எண்ணங்கொண்டவளாய் ஒரு மாதவிச்சோலையையடைந்த தருணத்தில் அனுமார் தேவியார் முன்தோன்றிச்சொல்லிய கவிகளில் ஒன்று. இக்கவியின் கருத்து:—

> செய்யமைந்த தீபத்தையொத்த அன்னையே! நீ சந்தேகப்படாதே; ஆரியனாகிய இராமமூர்த்தி கொடுத்தனுப்பிய அடையாளமென்னிடத்திலிருக்கிறது; உண்மையாகச்சொல்லியனுப்பிய வார்த்தைகளுமுண்டு; அவற்றின் உண்மையை உள்ளங்கையிலமைந்த நெல்லிக்கனிபோற் காண்பாய்; ஆகையால் வேறே எவ்வித எண்ணமும் கொள்ளாதே என்று பொருள்.

இக்கவியிலும் இராமருக்கு ஆரியன் என்னும் சான்றோர்குலப்பெயர் வழங்கியிருக்கிறது.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலம்,
95-வது கவி.

அன்பினனிவ்வுரை யுணர்த்தவாரியன்
வன்பொறைநெஞ்சினன் வருத்தமுன்னுவான்
என்புறவுருகின னிரங்கியேங்கினன்
தன்பழமுலகையுஞ் சுமந்தவுள்ளத்தான்.

சீதாதேவியார் இலங்கையில் சான்றோர்தக்காவலாய்ச் சிறையிருக்கும் [illegible] இராமரடைந்த வருத்தத்தையெல்லாம் அனுமார் எடுத்துப்பிர[illegible] சொன்னபின் இக்கவி வருகிறது. இதன் கருத்து:

அன்புள்ளவராகிய அனுமார் இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, ஆரியனும் மிகுந்த பொறுமையுடைய மனத்தவருமாகிய இராமமூர்த்தியின் வருத்தத்தைக்கருதி அன்பமும், அவருக்குத்தன்பேரிலுள்ள கனிவைக்கருதிக்களிப்புமுள்ள மனத்தையுடைய பிராட்டியார், எலும்புகள் மிகவும் நெக்குவிட்டுருகி மனங்கரைந்து வருந்தினுள் என்று பொருள்.

இக்கவியிலும் இராமர் ஆரியன் என்று கண்டிருக்கிறது.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுதபடலம்,

31-வது கவி.

ஆரியனருந்துயர்க் கடலினழ்பவன்
சீரியதன் றுநஞ் செய்கைதீர்வரும்
பூரியர் வெம்பழி பொடித்ததாமெனச்
சூரியன்சிறுவனை நோக்கிச்சொல்லினன்.

இராமரும் வானரக்கொடி வேந்தனுகிய சுக்கிரீவமகாராஜனும் தென்திசைநோக்கிச்சென்ற அனுமாருடைய வரவையெதிர்பார்த்துக்கொண்டிருக்கும் தருணத்தில் நடந்த சம்பவத்தைத்தெரியப்படுத்தும் கவி. இதன் கருத்து:—

ஆரியனுகிய இராமமூர்த்தி கொடிய துக்கசாகரத்தில் ஆழ்ந்து, சூரியகுலத்தரசனுகிய சுக்கிரீவனைப் பார்த்து, நம்முடைய செய்கையானது முடிவு பெருதிருப்பதினுல் சிறப்பில்லை, நீசர்கள் ஓயாமல் கொடிய பழிச்சொல்லைச் சொல்லவும் நமக்கு நேர்ந்தது என்றுன் என்று பொருள்.

இக்கவியிலும் இராமருக்கு ஆரியனை என்னும் சான்ருேர்குலப்பெயர் வழங்கியிருக்கிறது.

கூர்மபுராணம், இராமன் வைகுந்தமடைந்தவத்தியாயம்,

38-வது கவி.

கங்கைமாநதியைக்கடந்துவான்மீகி கருதருஞ்சாலையினணித்தாய்ச்
சிங்கவேறனையவிலக்குவனெய்திச் சீதையைவணங்கியீதுரைப்பான்
மங்கைகேளரக்கன்வெளவியபின்னை மனையகமீட்டுவைத்திடலா
லங்கண்மாஞாலம்பழித்ததென்றுணர்ந்தாங் காரியன்றுறந்தனனென்றுன்.

41-வது கவி.

மாறைமென்றெருத்திருடருளினது கற்புடை மாட்சிமையின்ற
வாழ்திருமுனிவரெல்லாருமுலா வாரியன்றுறந் [illegible]
புத்தேனயாரேயப்புறங்காண்பா ரென்றுகண் [illegible]
குறிமாச் [illegible]

கூர்மபுராணம், இராமனவதரித்தவத்தியாயம்,

16-வது கவி.

சூர்வளியொ திபுங்கானித் துணைவினிவேனுமேல்லை
யாரியன்றேன் றுங்கானம் யாதுயைறுதியென்னப்
போர்கெழுசகேகவேதன் பொன்னடிக்கமலம்போற்றி
வாரிறவீக்குகொங்கை மங்கையையினிதினின்றான்.

இம்மூன்று கவிகளிலும் இராமருக்கு ஆரியன் என்னும் சான்றோர் குலப்பெயர் வழங்கியிருக்கின்றன.

13. இராமருடைய குலத்தவர்களுக்கு உலகு என்னும் சான்றோர் குலப்பெயரும் வழங்கினதாகப்பார்க்கிறோம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,

67-வது கவி.

என்றுவொன்றொன்றொவ்வா வினைதந்தரசன்னுயிரும்
சென்றனன்றேடென்னுந் தன்மைபெய்தித்தேய்ந்தான்
மென்றேன்மார்பினமுனிவன் வேந்தேயயரேலவனை
இன்றேகாதவண்ணந் தகைவெனுலகோடென்றான்.

இதன் கருத்து.

இத்தன்மையாக ஒன்றொடொன்று ஒவ்வாத சொற்களைக்கூறித்தசரத மகாராஜனும் இன்றைக்கே உயிரிழந்தானென்று கண்டோர் கூறும் தன்மையையடைந்து மெலிந்தான்; மெல்லிய மான்தோல் மார்பிலணிந்த வசிட்டமுனிவர் அரசனைப்பார்த்து அரசனே நீ வருந்தாதே நான் சான்றோரோடு சென்று இராமர் இன்று காட்டுக்குச்செல்லாதபடி தடுப்பேனென்று கூறினார் என்று பொருள்.

அந்தணர், சான்றோர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை மரபினரில் இரண்டாவது மரபினராகிய உலகு என்னும் சான்றோரே இராமருடைய மரபினராகையால் வசிட்டர் சான்றோரோடு சென்று இராமர் வனஞ்செல்லாது தடுப்பேனென்று சொல்லுகிறார் என்றறிக.

69-வது கவி.

மறந்தானினைவும்முயிரும் மன்னன்னென்றுமறுகா
இறந்தான்கொல்லோவரசன் னென்றுவிடருற்றழிவாள்
துறந்தாய்மகனேயுலகோ டமையும்மென்னத்துணையாம்
அறந்தானிதுவோவையா வரசர்க்கரசேயென்றாள்.

இதன் கருத்து.

தசரதமகாராஜன் தனது நினைவையு முயிரையு மறந்தனனென்று சுழன்று, அவ்வரசனிறந்தனனேயென்று துன்பங்கூர்ந்து மனமழியுங் கோசலாதேவியானவள், அப்பா மகனே! சான்றோரோடு எம்மையுங் கைவிட்டாய், இது என்ன துணை, ஐயனே! அரசர்க்கரசனே! இது உனக்குத் தருமமோவென்று புலம்பினள் என்றுபொருள்.

இக்கவியிலும் இராமருடைய குலத்தவர்களுக்குச்சான்றோரென்று பொருள்படும் உலகு என்னும் பெயர் வழங்கியிருக்கிறதெனப்பார்க்கிறோம்.

70-வது கவி.

மெய்யின்மெய்யேயுலகின் வேந்தர்க்கெல்லாம்வேந்தே
உய்யும்வகைநின்னுயிரை யோம்பாதிங்ஙனேம்பில்
வையம்முழுதுந்துயரான் மருகும்முனிவனுடனம்
ஐயன்வரினும்வருமா லயரேலையசேயென்றாள்.

இதன் கருத்து.

உண்மைச்சொரூபியே! சான்றோர்குல அரசர்களுக்கெல்லாமரசனே! உன்னுயிரைப்பிழைப்பிக்கும் வழிபாராமல் நீ இவ்விடத்தில் வருந்துவாயானால் உலகமுழுதுந் துன்பத்தால் வருந்தும்; வசிட்டமுனிவருடனே நம்முடைய இராமமூர்த்தி வந்தாலும் வருவான், அரசனே! நீ வருந்தாதேயென்று கூறினாள் கௌசலாதேவியென்று பொருள்.

இக்கவியில் தசரதமகாராஜனுக்குச்சான்றோர்குல அரசர்க்கரசன் என்று பொருள்படும் 'உலகின் வேந்தர்க்கெல்லாம் வேந்தன்' என்னும் பெயர் வழங்கியிருக்கிறதெனப்பார்க்கிறோம்.

52-வது கவி.

மாற்றாள்செயலாமென்றுங் கணவன்வரமீந்துள்ளம்
ஆற்றாதயர்ந்தானென்றும் மறிந்தாளவளுமவனைத்
தேற்றாநின்றாள்மகனைத் திரிவானெனன்றாளரசன்
தோற்றான்மெய்யென்றுலகஞ் சொல்லும்பழிக்குஞ்சோர்வாள்.

இதன் கருத்து.

இச்செய்கையானது கைகேசியின் செய்கையென்றும், தன் கணவன் அவளுக்கு வரந்தந்து மனமாற்றாது சோர்ந்தானென்றும் கோசலை அறிந்தவளாய், அக்கௌசலாதேவியும் அரசனைத்தேற்றத் தொடங்கினாள், இராமமூர்த்தி திரும்பி வருவானென்று கூறினாள், அரசன் உண்மையிழந்தானென்று சான்றோர் இகழ்ந்து பேசுவார்களேயென்றெண்ணிச்சோர்ந்தாள் என்பதாம்.

இக்கவியிலும் இராமருடைய குலத்தவர்களுக்கு உலகு என்னும் சான்றோர்குலப்பெயர் வழங்கியிருக்கிறதென்றறிக.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப்படலம்,

22-வது கவி.

கண்டனனனுமனுங் கருத்துமெண்ணினன்
கொண்டனன்றுணுக்க மெய்திண்டக்கூசினான்
அண்டர்நாயகனரு டேறன்பாடெனத்
தொண்டைவாய்மயிலினைத் தொழுதிறைஞ்சினான்.

இதன் கருத்து.

இராட்சதருடைய சிறைக்களத்தில் சீதாதேவியாரிருக்கக்கண்ட அனுமாரானவர் ஆலோசனை பண்ணிப்பிராட்டியாரைத் தூக்கிக்கொண்டுபோய் இராமரிடம் சேர்ப்பிக்கலாமென்றாலோ பிராட்டியாரின் திருமேனியைப்பரிசிக்க நடுக்கங்கொண்டு, நான் அண்டர்க்கரசனின் தூதுவன் என்று கூறித்தேவியாரை வணங்கி முன்னின்றான் என்று பொருள்.

இக்கவியில் இராமருக்கு அண்டர்நாயகன் என்னும்பெயர் வழங்கியிருக்கிறது. அண்டம் என்றால் உலகமென்றும், உலகமென்பதுயர்ந்தோர் என்றும், உயர்ந்தோர் என்றால் சான்றோர் என்றும், ஆகையால் அண்டர் என்றால் சான்றோரைக்குறிக்கிறதென்றும் முன்னமே ஆதாரங்களுடன் விளக்கிக்காட்டினோம். ஆகையால் இராமருக்கு வழங்கிய அண்டர்நாயகன் என்னும் பெயருக்குச்சான்றோர்குல அரசன் என்று பொருள் என்றறிக.

14. இராமருடைய குலத்தவர்களுக்கு ஆன்றோர் என்னும் பெயர் வழங்கியதாகவும் பார்க்கிறோம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம்,

138-வது கவி.

ஆன்றான்பகர்வான்பி னுமையவிவ்வையமையல்
தோன்றாநெறிவாழ்துணைத் தம்பியைப்போர்தொலைத்தோ
சான்றோர்புகழுந்தவத் தாதையைவாய்மைகொண்டோ
வீன்றாளைவென்றோவினி யிக்கதந்தீர்வதென்றான்.

இக்கவியில் ஆன்றான் என்னும் சான்றோர்குலப்பெயர் இராமருக்கு வழங்கியிருக்கிறது என்று முன்னமே எடுத்துரைத்தோம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், கைகேசி சூழ்வினைப்படலம்,

8-வது கவி.

ஆன்றவனவ்வுரைகூற வையமில்லாள்
தோன்றியபேரவலந் துடைத்ததுண்டேல்
சான்றிமையோர்குல மாகமன்னநீயன்
றீன்றவரங்களிரண்டு மீதியென்றாள்.

இதன் கருத்து.

ஆன்றவனாகிய தசரதன் அவ்வாறு உறுதிமொழி சொன்னபோது, கைகேசியவனைப்பார்த்து, சுரர்குலசாட்சியாக நீர் முன்னமிரண்டு வரங் கொடுப்பேனென்று வாக்களித்தீரே, அவற்றைக்கொடுமென்று கேட்டாள் என்று பொருள். இக்கவியில் இராமருடைய பிதாவாகிய தசரதமகாராஜனுக்கு ஆன்றவன் என்னும் சான்றோர்குலப்பெயர் வழங்கியிருக்கிறதென்றறிகிறோம்.

N.B.—சம்பரன் என்னும் அசுரன் சுரர் என்னும் சான்றோர்குல அரசனாகிய தேவேந்திரனுடைய நாடாகிய மகேந்திரகிரிப்பிரதேசங்களைக் கைப்பற்றிச் சுரர்குலச்சான்றோருக்கு மிகுந்த துன்பம் செய்துவந்தபோது, தேவேந்திரன் தசரதனுடைய உதவியைக்கோர, தசரதன் சம்பரன் மேற் படையெடுத்துச்செல்லுகையில், கைகேசியானவள் சாரதியாயிருந்து தேரை நடத்தினபடியால் தசரதன் அத்தமியள்பேரில் பிரியங்கொண்டு நீ கேட்கும் வரங்களிரண்டு கொடுக்கிறேனென்று வாக்களித்திருந்தபடியால், கூனியானவள் அவ்வறனைக் கைகேசிக்கு நினைப்பூட்டி, பரதனாழ்வான் இராட்சியபாரஞ் செய்யவேண்டுமென்றும் இராமர் பதினான்கு வருடம் வனவாசஞ் செய்யவேண்டுமென்றும் தசரதனிடம் கேட்கும்படியாய்த் தூண்டிவிட்டதின் பேரில் கைகேசியானவள் அவ்வரங்களைக்கேட்டாள் என்பதாம்.

15. இராமருடைய குலத்தவருக்கு அறிவுடையோர் என்னும் பெயரும் வழங்கியதற்கு ஒரு திருஷ்டாந்தம் மேலே கூறினோம்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம்,

75-வது கவி.

ஆகவிம்மொழியா சிலகேட்டறிவுற்றள்
ஓகைகொண்டுகளிக்கு மனத்தளுயர்ந்தாள்
போகைநன்றிவனென்பது புந்தியின்வைத்தாள்
தோகையுஞ்சிலவாசக மின்னனசொல்வாள்.

இக்கவியில் சான்றோர் மாதாகிய சீதாதேவியாருக்கு அறிவுற்றாள், அதாவது, அறிவுடையோர் குலத்தவள் என்னும் பெயர் வழங்கியதென்று முன்னமே எடுத்துரைத்தோம். அதே பிரகாரம் இராமருக்கு வித்தகன் என்னும் சான்றோர்குலப்பெயரும் வழங்கினதாகப்பார்க்கிறோம். வித்தகன் என்னும் பெயருக்கு அறிவுடையோன், சான்றோன் என்று பொருள்.

கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுத படலம்,

81-வது கவி.

வைத்தபின்றுகிலின்வைத்த மாமணிக்கரசைவாங்கிக்
கைத்தலத்தினிதினீந்தா டாமரைக்கண்களார
வித்தககாண்டியென்று கொடுத்தனன்வேதநன்னூல்
உய்த்துளகாலமெல்லாம் புகழொடுமோக்கநிற்பான்.

இதன் கருத்து.

அநுமாரானவர் சீதாதேவியார் கூறிய செய்திகளையெல்லாம் இராமருக்குத்தெரிவித்துக்கடைசியாகப்பிராட்டியார் இனி ஒரு மாதந்தான் அடியாள் இச்சிறையிலிருப்பேன்; [illegible] அதற்குள் என்னுடைய நாயகனாகிய இராமசுவாமிக்கு அடியாளிடத்திற் கிருபையுண்டா[illegible] யச்சிறையை மீட்காவிடில் உயிரை மாய்த்துக்கொள்வேன் [illegible] தேவரீருடைய திருவடி[illegible] [illegible]ச் சமர்ப்பித்தச்செ[illegible] அநுளள், அத[illegible]

சீதாபிராட்டியார் தம்முடைய ஆடையிற் பொதிந்து வைத்திருந்த தனது சூடாமணியையெடுத்து எனது கைகளில் மகிழ்ச்சியோடே கொடுத்தாள், சான்றோனாகிய (வித்தகன்) இராமமூர்த்தியே அந்தச் சூடாமணியை உம்முடைய தாமரைக்கண்களாரப்பாரும் என்றுகொடுத்தார் அனுமார்; அந்த அனுமார் யாரென்றால் நல்லோர் என்னும் சான்றோரின்புகழ் கூறும் வேதநூல் நிலைபெற்றிருக்குங்காலமெல்லாம்கீர்த்தியோடு தானும் கூடவிருக்கும் அனுமார் என்று பொருள்.

இக்கவியில் இராமருக்குச் சான்றோர் குலப்பெய[illegible]ன்றாகிய அறிவுடையோன் என்று பொருள்படும் வித்தகன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அத்தோடுகூட நான்குவேதங்களும் சான்றோர் புகழைக்கூறும் நூல்கள் என்பதாகவும் விளம்பியிருக்கிறது.

வேதநன்னூல் = வேதம் + நல் + நூல்
= வேதமாகிய + நல்லவர் + நூல்
= வேதமாகிய + சான்றோர் + நூல்
= வேதமாகிய சான்றோர் புகழ் கூறும் நூல்

என்று பொருள்படுமென்றறிக. வேதாகம புராண இதிகாசங்களெல்லாம் சான்றோர் புகழையே கூறுகின்றதென்று இந்த அமரர் புராணம் [illegible]வதும் வாசித்து முடித்தபின்பு தெளிவாய் விளங்கும்.

16. இராமருடைய குலத்தவர்கள் அமுதகுலத்தவரென்றும் சான்றோர் என்றும் விளக்கிக்காட்டினோம். அவர்கள் அமுதகுலச் சான்றோரானபடியால் அக்குலத்தவருக்குத் தற்காலத்தில் வழங்கும் கிராமணி, நாடான் என்னும் பட்டப்பெயர்கள் வழங்கியிருப்பதை விளக்கிக்காட்டுவோம்.

இராமருடைய முற்பிதாக்களி லொருவராகிய அரிச்சந்திரமகாராஜனுக்குச் சமஸ்கிருத நூல்களில் கிராமணி என்னும் பட்டப்பெயர் வழங்கியிருக்கிறதாக நாம் முன்னே பார்த்த பிரகாரம், வான்மீகியின் சமஸ்கிருத உத்தரராமாயணம்,

(a) 1-வது ஆசிவாசம், 85-வது பத்தியத்தில் சொல்லப்பட்டிருக்கும் சுலோகத்திலே "சீதையின் சுயவரத்தில் வில்லையொடித்து திருமணஞ்செய்தவர் இரதக்கிராமணி என்னும் இராமர்" என்பதாகவும்,

(b) 3-வது ஆசிவாசம், 212-வது பத்தியத்தில் "இராவணனுடைய வேவுகாரர்கள் நரக்கிராமணி என்னும் இராமர் சேதுபந்தனஞ் செய்கிறதைக்கண்டு இராவணனுக்கறிவித்தார்கள்" என்று[illegible]

(c) 5-வது ஆசிவாசம், 66-வது பத்தியத்தில் அகத்தியமுனி இராமரைப் [illegible] உம்முடைய வல்லமையை என்னவென்றுரைப்பேன், [illegible]ருந்திய இராவணனைச்சங்கரித்த காதுஸ்தான் [illegible]கிராமணி [illegible] என்றும்.

(d) 6-வது ஆசிவாசம், 32-வது வசனத்தில் "தாணிகுலக்கிராமணியாகிய இராமர் சீதையோடு சில விஷயம் பேசினர்" என்றும்

கூறியிருப்பதால், அமுதகுலச்சான்றோனாகிய இராமருக்குக்கிராமணி என்னும் சான்றோர்குலப்பட்டப்பெயரும் வழங்கியதாக அறிகிறோம்.

17. நாடான், நாடன் என்னும் சான்றோர்குலப்பட்டப்பெயர்களும் இராமருடைய குலத்தவர்களுக்கு வழங்கியிருக்கின்றன. சான்றோர் குலத்தவர்களுக்குள்ளே கீர்த்திபெற்றவர்களையும் கன்னியமாக எண்ணப்படுகிறவர்களையும் பெயர் சொல்லுகிற வழக்கம் தற்காலத்திலுமில்லை. திருஷ்டாந்தமாக

மதுரையில் ... ... மதப்புலி என்றும்
அருப்புக்கோட்டையில் ... சத்துருசங்காரவேலு என்றும்
பாலையம்பட்டியில் ... ... அன்னதானம் என்றும்
கரிசக்குளத்தில் ... ... சித்திரபுத்திரன் என்றும்
தூத்துக்குடியில் ... ... ஞானதிரவியம் என்றும்

பெயர் பெற்ற சான்றோர் அதிக கீர்த்திபெற்ற பிரபுக்களாக இருப்பார்களாகில், அவர்களுக்கடிமைகளாயிருப்பவர்கள், தங்கள் எஜமான்களைக் குறித்துப்பேசுந்தருணத்தில்

மதப்புலி நாடார்
சத்துருசங்காரவேலு நாடார்
அன்னதான நாடார்
சித்திரபுத்திர நாடார்
ஞானதிரவிய நாடார்

என்று பெயர் சொல்லத்துணியாமல், தங்கள் எஜமான்களாகிய

மதுரை நாடார்
அருப்புக்கோட்டை நாடார்
பாலையம்பட்டி நாடார்
கரிசக்குளத்து நாடார்
தூத்துக்குடி நாடார்

என்பதாகத்தங்கள் எஜமான்களுடைய ஊர்ப்பெயர்களோடு சான்றோர் குலப் பட்டப்பெயரையும் சேர்த்துச் சொல்லுகிறதே வழக்கம். இடப்பெயர்களுடன் சாதிப்பட்டப்பெயர்களைச் சேர்த்துச் சொல்வது கன்னியமாகவும், இயற்பெயர்களுடன் சாதிப்பட்டப்பெயர்களைச்சேர்த்துச்சொல்வது கன்னியக்குறைவாகவும் எண்ணப்பட்டு வருகிறதைப் பார்க்கிறோம். பெண்கொடுத்த மாமனும் மாமியும் தங்கள் மருமக்களைக்குறித்துப்பேசும்போது

[illegible]
[illegible]
[illegible]

என்பதாகத்தங்கள் மருமக்களுடைய ஊர்ப்பெயர்களுடன் குலப்பெய ரைச்சேர்த்துச் சொல்லுகிறார்களேயன்றி, தங்கள் மருமக்களுடைய இயற்பெயருடன் குலப்பெயர் சேர்த்துச்சொல்லுகிறதில்லை. அத்தன் மையாகவே டாக்டர் மக்ளீன் துரையும் திராவிட சாதிகள் வழக்கங் களை எடுத்துக்கூறுமிடத்தில் அவர்கள் தங்கள் அரசர்களுடைய இயற் பெயர் சொல்லுகிறதில்லை குலப்பெயரே சொல்லுகிறதவர்கள் வழக்கம் என்கிறார்.

"It is the Dravidian custom to call rulers by their title and not by any personal name" (Page 120, Vol: I of the Manual of Administration of the Madras Presidency 1886).

இத்தன்மையாக இராமருடைய குலத்தவர்களுக்கு நாடன், நாடான் என்னும் குலவிளக்கப் பட்டப்பெயர்கள் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவாம்.

கம்பராமாயணம், பாலகாண்டம், தாடகைவதைப்படலம்,
68-வது கவி.

கங்கைதீம்புன னாடன்கருத்தையும்
மங்கைத்தீயனை யாளுமனக்கொளா
செங்கைச்சூலவெந் தீயினைத்தீயதன்
வெங்கட்டீயொடு மேற்செலவீசினள்.

இராமருடைய மனக்கருத்தையறிந்து தாடகை என்னும் இராக்ஷசி அவர் மீது தன்னுடைய சூலாயுதத்தை எவினள் என்று கூறிய இக்கவி யில் இராமருக்குக்

கங்கைதீம்புனல்நாடன்

என்பதாக இடப்பெயரோடு சான்றோர்குலப் பட்டப்பெயரும் வழங்கி யிருக்கிறது.

கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சூர்ப்பநகைப்படலம்,
121-வது கவி.

எற்றவனை வரிசிலையோ னியம்பாமுனிகலரக்கி
சேற்றவனைதன்கணவ னாருயிருட்பசினர்ந்திருகி
சூற்றவனைநீருழக்குந் துறைகெழுநீர்வளநாடா
மாற்றவனைக்கண்டாச்கா லழலாதோமனமென்றாள்.

இக்கவியில் இராவணனுடைய சகோதரியாகிய சூர்ப்பநகையான்வள் இராமரைப்பார்த்து நீர்வளம் பொருந்திய தேசத்தையுடைய நாடானே என்று பொருள்படும்

நீர்வள்நாடா

என்று கூறுகிறாள் எனப்பார்க்கிறோம்.

கூர்மபுராணம், இராவண வதையத்தியாயம்
18-வது கவி.

அமங்கலம்பருவாமத்திற லக்கினிகேதுவோக்கு
[illegible]வொன்றுநின்றோன் வலிசற்சிபிகேதுவொன்னூர்
[illegible]சமுமெச்சகோபனவி சாழிசசத்தகனென் னுங்
[illegible] நாடன்.

இக்கவியில் இராமருக்குக் கங்கைநாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இதற்கு இரண்டு தாற்பரியம் கூறலாம்.

1. கங்கை என்னும் நதியையுடைய நாடான்.
2. கங்கையென்பது பனையின் சிறப்புப் பெயரென்ன முன்னே விளக்கிக்காட்டினோம். ஆகையால் கங்கை நாடன் என்னும் பெயருக்கு அமுதகுலநாடான் என்றும் பொருள்.

இவ்விரண்டு தாற்பரியங்களும் இராமருக்குப் பொருந்தியவைகளே.

இராமரின் முன்னோர்களாகிய அயோத்தியிலரசாண்ட சூரியகுல மன்னர்களுக்கும் இராமரைப்போலவே சான்றோர்குலப் பட்டப்பெயர்கள் வழங்கி வந்திருக்கிறது. அதற்கு மேற்கோள் வருமாறு:—

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்தவத்தியாயம்,

23-வது கவி.

வேய்த்தலைதொடுத்தேனிறாலுடைந்து வீழ்தருப்சுரு வளர்த்த
காய்த்துணர்ப்பசியகதிக்கொடிவிசும்பிற் கற்பகக்கோட்டினிற்படருஞ்
சேய்த்து மீதுயர்ந்தவளமலைநாடன் றிறற்புருகுச்சனன்மைந்தன்
பேய்க்கணஞ்சூழ்நெட்டிலைச்சுடர்வேற் றிரிசதேச்சென்றிடும்பெரியோன்.

இக்கவியில் மாந்தாதா சக்ரவர்த்தியின் குமாரனாகிய புருகுச்சனை 'வளமலை நாடன்' அதாவது, அழகிய மலைநாடான் என்று கூறியிருக்கிறது.

35-வது கவி.

கருங்கொடிக்கவலைக்கிழங்ககழ்பரப்பிற் கானவர்களிறுகோட்படுக்கும்
விரிந்தபல்வளங்கூர்கானகநாட னுரோகிதாச்சுவனருள்விடலை
திருந்தலர்மடவார்பவளவாய்ச்செம்மை சேல்விழிக்கீய்ந்துகட்கருமை
பொருந்து நன்டுகிலுக்களித்திடச்சிரிக்கும் புலவுவேலுரோகிதனெனப்பர்.

இக்கவியில் அரிச்சந்திரமகாராஜனின் குமாரனாகிய லோகிதாசனைக் கானகநாடன் அதாவது காட்டுநாடானென்று கூறியிருக்கிறது.

37-வது கவி.

உடைபடுகையோலமதசலக்கலுழி யுவட்டெடுத்தொழுகுமால்யானை (ன்
பிடியெனமதந்தீர்ந்தோழுகைகள்விதிர்க்குமுரோகிதன்பெற்றவேல்மைந்த
நடவரைக்குடுமியி றுவரைத்தூங்குந் தண்ணருப்பஃறலையிருவின்
விடுகதிர்த்திங்கட்கோடுகேன் டுழக்கும்வியன்மலைநாடன்வேற்றுத்தன்

இக்கவியில் லோகிதாசனுடைய பௌத்திரனும் லோகிதனுடைய புத்திரனுமான துந்துவை வியன்மலை நாடன் என்று கூறியிருக்கிறது; அதற்குப்பெருமையிற் சிறந்த மலை நாடான் என்று பொருள்

41-வது கவி.

கொழுமுகந்தாக்கவயிறுநெக்குடைந்து குழைகளுஞ்சேற்றகமுழக்கிக்
கழனியிற்குடைவாய்ச்சங்குமுத்துமிழ்க்குங் கங்கைநீர்நாட [illegible]
விழைவுறுமைந்தனுடவரேனும் பெண்மை [illegible]
மழகுவீற்றிருந்தா [illegible]

இக்கவியில் சகரனுடைய பிதாவாகிய வாகுமகாராஜனைக்கங்கைநீர்நாடன் என்று கூறியிருக்கிறது. அதற்கு இரண்டு தாற்பரியம் கூறலாம்.

1. கங்காஜலத்தையுடையவனாகிய நாடான் என்றும்,
2. கங்கையென்றால் பனியின் காரணப்பெயர் என நாம் முன் விளக்கிக்காட்டினபடி, கங்கைநீர் நாடன் என்றால், பனிநீர் நாடான், அமுதகுல நாடான்

என்றும் பொருளென்றறிக.

45-வது கவி.

வண்சிறைச்சுரும்பர்பேட்டைவிரியோடு மருவியகாமவெம்மயக்கிற்
கண்படைபொருந்துமாலைதாழ்புயத்துப் பகீரதன்காதன[illegible]ந்
விண்டொடர்க்கோங்குமாலைவெள்ளருவிக் குன்றினில்வருடைபாய்ந்திழி
தண்புனலுடுத்தகானகநாடன் ருமகேவற்குத்தனென்றுரைப்போன்.

இக்கவியில் பகீரதச்சக்ரவர்த்தியின் குமாரனாகிய குலுதனைக்கானக நாடன் என்கிறார். அதற்குக்காட்டு நாடான் என்று பொருள்.

இராமருடைய பிதாவாகிய தசரதமகாராஜனுக்கும் நாடன், நாடான் என்னும் குலவிளக்கப்பட்டப்பெயர்கள் வழங்கியதற்குத்திருஷ்டாந்தம் கூறுவோம்.

கம்பராமாயணம், பாலகாண்டம், கோலங்காண்படலம்,

41-வது கவி.

வாளையுகளக்கயல்கள் வாவுமதின்மேதி
மூளைமுதுகைக்கிழிய மூரியவரால்மீன்
பாளைவிரியக்குதிகொள் பண்ணைவளநாடா
நாளையெனவுற்றபடி யற்றவனுரைத்தான்.

இக்கவியில் வசிட்டமாமுனிவர் தசரதமகாராஜனைப்பார்த்துப் பண்ணை வளநாடா என்று விளிக்கிறார். அதற்கு வயல்கள் நிறைந்த அழகிய நாடானே என்று பொருள்.

கம்பராமாயணம், பாலகாண்டம், எதிர்கோட்படலம்,

5-வது கவி.

கங்கைநீர்நாடன்சேனை மற்றுளகடல்களெல்லாஞ்
சங்கினமார்ப்பவந்து சார்வனபோலச்சாரப்
பங்கயத்தணங்கைத்தந்த பாற்கடலெதிர்வதேபோல்
மங்கையைப்பயந்தமன்னன் வளநகர்வந்ததன்றே.

இக்கவியில் தசரதமகாராஜனுக்குக் கங்கைநீர்நாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு

1. கங்காஜலத்தையுடையவனாகிய நாடான் என்றும்
2. பனிநீர் நாடான், அமுதகுல நாடான் என்றும்

பொருள் கூறலாமென முன்னே விளக்கிக்காட்டினோம்.

இராமருக்கும் அவருடைய முன்னோர்களுக்கும் வழங்கிய நாடன் என்னும் சான்றார்குலப்பட்டப்பெயரானது அவருடைய பின் சந்ததியாருக்கும் வழங்கி வந்திருக்கிறது.

கூர்மபுராணம், இராமன் வைகுந்தமடைந்தவத்தியாயம்,

175-வது கவி.

மழைகுன்றுதிராவகடுளைந்து வாய்விட்டலறப்பிடியென்ன
முழையூடுறங்கும்வாலுளைகள் சிலைக்குழரிமலைநாடன்
றழையுஞ்சேர்த்தியதிதியருண் மைந்தனென்னார்தசைவீக்கிப்
பொழியுங்குருதிவாய்மடுக்கும் போர்வேல்நாடதன்புலிபோல்வான்.

இக்கவியில் இராமருடைய பௌத்திரனும் குசனுடைய குமாரனுமாகிய அதிதிமகாராஜனை சூரிமலை நாடன் என்று விளம்பியிருக்கிறது. அதற்கு

பெருமைவாய்ந்த மலைப்பிரதேசத்தையுடைய நாடான்

என்று பொருள்.

179-வது கவி.

நெட்டிலைக்கரும்புஞ்சாலியுந்துலைவத்து நெறிமருப்பெருமைமேய்ந்துறங்கும்
மட்டுவார்கழனிவிளிம்புதேத்தோங்கு வளங்கெழுமருதநீர்நாடன்
கட்டழகுடையவிவன்மகன்றேவா னீகன்மற்றவன்மகன்களத்தி
லொட்டலர்செய்த்தோர்மடுவெணகிறைக்கு மொளிறுவேற்பீனகுவாமால்.

இக்கவியில் குசன் குமாரனாகிய அதிதியின் மரபில் தோன்றிய கேமதன்னுவாவென்னுமரசனை மருதநீர்நாடன் என்று சொல்லியிருக்கிறது. அதற்கு

வயலில் நீர் நிறைந்த பிரதேசத்தையுடைய நாடான்

என்று பொருள்.

180-வது கவி.

குண்டலந்திளைக்குங்குழைமுகமுனரிக் கொடிச்சியர்கிளிகடிந்தோச்சும்
பண்டருகிளவிகேட்டுவானவர்கள் கின்னரர்பாட்டினைவெறுக்குந்
தண்டலில்வளங்கூர்செழுமலைநாடன் பீனகுவளித்தருடனையன்
மண்டலவேந்தர்மணிமுடியுரிஞ்சி வழன்றதாட்சகச்சுவாவென்பார்.

இக்கவியில் கேமதன்னுவாவின் பௌத்திரனும் தேவாநீகனுடைய குமாரனுமாகிய பீனகுவென்னும் அரசனைச் செழுமலைநாடன் என்று கூறியிருக்கிறது. அதற்கு

அழகிய மலைப்பிரதேசத்தையுடைய நாடான்

என்று பொருள்.

184-வது கவி.

திரிமருப்பிரலையேறழத்தாக்கித் தின் [illegible]
கரிமருப்பிளையம்பறித் [illegible]
[illegible]
[illegible]

இக்கவியில் அதே மரபில் தோன்றிய பானுசித்திரனைக்கானகநாடன் என்கிறார். அதற்குக்

காட்டையுடைய நாடான்

என்று பொருள். ஆகையால் இராமருடைய குலத்தவர்கள்

(a) அமுதகுலத்தவர்கள்
(b) சான்றோர் குலத்தவர்கள்
(c) கிராமணிகள்
(d) நாடாக்கள்

என்று ஐயமற விளங்கும்.

——(:o:)——

XVII-வது அத்தியாயம்

கிருட்டிணன் குலவிளக்கம்.

1. கிருட்டிணன், கண்ணன், வாசுதேவன் என்னும் பெயர்களின் தாற்பரியம். 2. துரியோதனாதிகள், பஞ்சபாண்டவர்கள். 3. கிருட்டிணன் குலமும் பாண்டியர்கள் குலமும் ஒன்றே. 4. சந்திரன் அமுதகுலத்தவன். 5. புதன் அமுதகுலச்சான்றான். 6. கிருட்டிணன் யாதவன். 7. வெந்றியோர் பனம்பழம். 8. கிருட்டிணன் அமரர்கோமான். 9. மாதவன். 10. மாலோன். 11. முகுந்தன். 12. பனைக்கொடியோன். 13. சான்றான். 14. திக்கோன். 15. உபர்ந்தோன். 16. ஆரியன் 17. உலகு, அண்டர்

பிரான். 18. அறிவுடையோன், வித்தகன். 19. கிருட்டிணன் கிராமணிகள் என்னும் நாடாக்கள் குலத்தவர். 20. தேவகிரி யாதவர். 21. உடையார் என்னும் மைசூரரசர்.

கிருட்டிணன் சந்திர வம்சத்திலுதித்த அரசன். இவருடைய பிதாவாகிய வசுதேவனும் அன்னையாகிய தேவகியும் சந்திரவம்சத்[illegible] தோன்றியவ[illegible]ள் என்று காட்டும் குலவரிசை அட்டவணையை 74-வது பக்கத்தில் கூறியிருக்கிறோம். இவருடைய இயற்பெயர் கண்ணன், அதாவது, கண்ணைப்போலருமையானவன் அல்லது யாவருக்கும் கண்ணைப்போலுதவுகிறவன் என்று பொருள். மிகவும் கறுத்த மேனியையுடையவரானபடியாலிவருக்குக் கிருட்டிணன் என்னும் காரணப்பெயருண்டாயிற்று, கிருட்டிணம்-கறுப்பு. வசுதேவனுடைய குமாரனானபடியால் இவரை வாசுதேவன் என்று கூறுவது தத்திதாந்த நாமபதம். இவருடைய தாயாகிய தேவகியின் சிற்றப்பனாகிய உக்கிரசேனனின் குமாரனாகிய கஞ்சன் வசுதேவனையும் தேவகியையும் சிறையில் வைத்திருந்த காலத்தில கிருட்டிணன் பிறந்து கஞ்சனால் கொல்லப்படாதபடி, இரவிலே இரகசியமாக திருவாய்ப்பாடியிலுள்ள நந்திகோபன் வீட்டுக்குக் கொண்டு போகப்பட்டு, அவன் மனைவியாகிய அசோதையிடம் இளம்பிராயமெல்லாம் வளர்ந்தார். அக்காலத்தில் அந்த ஆயர்பாடியிலுள்ளவர்கள் இந்த இராஜகுமாரனுடைய பெயர்சொல்லியழைக்கக்கூடாதவர்களானதால், அவரை அரசகுமாரன் என்று பொருள்படும் கோபாலன் என்னும் பெயராலே அழைத்து வந்தார்கள், கோ-அரசன், பாலன்-புத்திரன். மகாபாரத வீரர்களாகிய பஞ்சபாண்டவர்கள் இவருக்கு முறைக்கு மைத்துனர்; அவர்களுடைய தாயாகிய குந்திதேவி இவருக்கு மாமி. அத்தோடுகூட கிருட்டிணனுடைய சகோதரியாகிய சுபத்திரையை குந்திதேவியின் குமாரர்களிலொருவனாகிய அருச்சுனன் மணம் புரிந்ததாலும பஞ்சபாண்டவர்கள் இவருக்கு மைத்துனராகிறார்கள். இவர் முதலில் யமுனையாற்றங்கரையிலுள்ள வடமதுரை என்னும் பட்டணத்துக்கரசனாயிருந்தார். அப்பட்டணத்தைக் கஞ்சனுடைய மாமனாகிய சராசந்தன் பிடித்துக்கொண்டபடியால், அதன்பின்பு குஜராத் நாட்டிலுள்ள துவாரகை நகருக்கு அரசரானார்.

2. கிருட்டிணமூர்த்தியின் மைத்துனராகிய பஞ்சபாண்டவர்களும் அவர்கள் தாயாதிகளாகிய துரியோதனாதிகளும் அதே சந்திர குலத்தில் தோன்றினவர்கள். சந்திரகுலத்தரசனாகிய யயாதியின் குமாரரில் யா[illegible]மகாராஜன் மரபில் கிருட்டிணமூர்த்தியின பெற்றோரும் பஞ்சபாண்டவர்கள் தாயாகிய கு[illegible] பிறந்தார்கள். யயாதியின் வேறோர் குமாரனாகிய புரு[illegible] வம்சத்தில் சந்தனமகாராஜன் தோன்றினான். சந்தனமகாராஜனுடைய மனைவியாகிய பகிரதியம்மனிடம் பனைக்கொடியோன் (தாலத்துவசன்) என்னும் பெயர்கொண்ட வீடுமன் பிறந்தார். வீடுமன் [illegible] பின்பு சந்தனமகாரா[illegible] [illegible] ரிஷியாகிய பராசரமுனிவரின் [illegible] வியாசருடைய [illegible]

கிய சத்தியவதியை மணம்புரிய அவளிடம் விசித்திரவீரியன் பிறந்தான். விசித்திரவீரியன் காசிராஜாவின் புத்திரிகளாகிய அம்பிகை, அம்பாலிகை என்னும் இருவரையும் கலியாணம் செய்து குழந்தையில்லாமல் இறந்தபடியால், அவனுடைய தாயின் மூத்தமகனாகிய வேதவியாசர் தன் தம்பியினுடைய மனைவிகளிடம் சந்தானவிருத்தியுண்டுபண்ணும்படி. அவர்களைச்சேர, அம்பிகை வயிற்றில் திருதராட்டிரனும், அம்பாலிகை வயிற்றில் பாண்டுவும் பிறந்தார்கள். திருதராட்டிரன் காந்தாரதேசத்தரசனாகிய சுபலனுடைய மகள் காந்தாரியை மணம்புரிய அவள் வயிற்றில் துரியோதனன், துச்சாசனன, விகன்னன் முதலான 100 பிள்ளைகளும் துச்சளையென்னுமொரு பெண்ணும் பிறந்தார்கள். இவர்களுக்குத்தான் துரியோதனாதிகள் என்றும், கௌரவர்கள் என்றும் பெயர்.

பாண்டுவின மூத்தமனைவி கிருட்டிணமூர்த்தியின் பிதாவாகிய வசுதேவனுக்கு உடன்பிறந்தவள், சூரராஜனுடைய மகள், அவளுக்குப் பிருதையென்று பெயர். அவளைச்சிறு பிராயத்திலேயே குந்தி போசதேசத்தரசனாகிய குந்திராஜனுக்குச்சூரன் தத்துப்பிள்ளையாகக்கொடுத்திருந்தான. ஆகையால் அவளுக்குக்குந்திதேவியென்று பெயருண்டாயிற்று. குந்திதேவி கன்னிகையாயிருக்கும் காலத்திலே கன்னன் பிறந்தான. அவன் பிற்காலத்தில் அங்கதேசத்தரசனானான். பாண்டுவைக் கலியாணம் செய்தபின்பு குந்திக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள்:— 1. தருமராஜன் 2. வீமன் 3. விசயன் என்னும் அருச்சுனன். பாண்டுவின் இரண்டாவது மனைவியாகிய மத்திரைதேவியிடம் நகுலனும் சகாதேவனும் பிறந்தார்கள். இந்த ஐவருக்கும் பஞ்சபாண்டவர்கள் என்று பெயர்.

3. சந்திரகுலத்தவராகிய கிருட்டிணமூர்த்தியின் குலமென்னவென்று பார்ப்போம்.

தென்னாட்டிலரசாண்ட சந்திரகுலத்தரசர்களாகிய பாண்டியர்கள் அமுதகுலத்தவர்களென விளக்கிக்காட்டினோம். தென்னாட்டிலுள்ள சந்திரவங்கிசமும் வடநாட்டிலரசாண்ட சந்திரவங்கிசமும் ஒன்றுதான். ஆரியர்கள் தென்னாட்டிலிருந்துவடநாட்டில் பரவினவர்களானபடியால், வடநாட்டிலுள்ள சந்திரகுலத்தரசர்களின் முற்பிதாக்கள் தென்னாட்டிலிருந்தவர்கள். வடநாடு, தென்னாடு என்னும் இருபிரிவிலுமுள்ள சந்திரகுலத்தரசர்கள் ஒரே மரபினரானபடியால் தான், கிருட்டிணனுடைய தங்கையாகிய சுபத்திரையை மணம்புரிந்த அருச்சுனன் தென்னாட்டில் வனவாசஞ் செய்தகாலத்தில் சித்திரவாகனபாண்டியன் குமாரத்தியாகிய சித்திராங்கதையை மணம்புரிந்து 3-வருஷம் பாண்டிநாட்டிலிருந்து திரும்பினார் என்று மகாபாரதம், அருச்சுனன் வனவாச பருவத்தில் காட்டுகிறது. கூர்மபுராணம், கன்னன் மணம்புணர்ந்த அத்தியாயத்திலும் இக்கலியாணத்தைப்பற்றிச்சொல்லியிருக்கிறது.

129-வது கவி.

கங்கைநீராடுமேல்வையுலூபியைக் கண்ணினோக்கி
யங்கலுழ்மேனிச்செவ்வா யணிமுலைப்போகமாந்திச்
சிங்கவேறனையவெற்றி மைந்தனைச்சிறப்பினீன்று
தங்குபாதலத்தினின்றுந் தமிழ்தெரிமதுரைசார்ந்தான்.

130-வது கவி.

சித்திரர்ங்கனையைக்காணுச் சித்திரப்படத்திற்கோட்டி
மத்தரில்விசயனெஞ்ச மருளலும்வழுதிகேட்டு
முத்தவெண்முறுவற்கொம்பை முழங்கெரிசான்றதாக
வித்தகச்சிலைவல்லாற்கு வியப்பொடுமளித்தானன்றே.

இவ்வாறு வடநாட்டிலுள்ள சந்திரகுலத்தரசனாகிய பாண்டுவின் குமார
னான அருச்சுனன் தென்னாட்டிலுள்ள சந்திரகுலத்தரசனாகிய சித்திர
வாகனபாண்டியன் மகளாகிய சித்திராங்கதையை மணம் புரிந்தான்
என்று மகாபாரதமும் கூர்மபுராணமும் கூறுகிறபடியால் வடநாட்டி
லுள்ள சந்திரகுலமும் தென்னாட்டிலுள்ள சந்திரகுலமும் ஒன்றுதான்
என்றும், தென்னாட்டிலுள்ள சந்திரகுலத்தரசர்கள் அமுதகுலமாகிய
சான்றார் குலத்தவர்களானபடியால், வடநாட்டிலிருந்த சந்திரகுலத்தர
சர்களும் அதே மரபினர் தானென்றுமறியலாம். ஆகையால் கிருட்டிண
மூர்த்தி சந்திரகுலத்தரசனானபடியால் அவரும் அமுதகுலத்தவரென்
றறிக.

4. சந்திரவம்சத்து முதலரசனாகிய சந்திரமகாராஜனுக்கு நூல்க
ளில் வழங்கிய பெயர்களில் சிலவற்றை உற்றுராய்ந்து பார்க்கில், அப்
பெயர்களே அவர் குலத்தை நன்றாய் விளக்கிக்காட்டும். சூரியமகா
ராஜனுக்கு பானு, அருக்கன் என்னும் அமுத சம்பந்தமான பெயர்க
ளிருக்கின்றவண்ணம், சந்திரமகாராஜனுக்கும் சோமன், மதி, ஆலோன்
என்னும் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன (சதுரகராதியைப்பார்க்க).
இப்பெயர்களிலொவ்வொன்றும் குலவிளக்கப்பெயரே. சோமன் என்
னும் பெயருக்கு அமுதகுலத்தவன் என்று பொருள் என்பதாகச்சிவ
பெருமானுக்கு வழங்கிய சோமக்கந்தன், சோமசுந்தரன் என்னும் பெயர
்களுக்குக் கூறிய விபரத்தாலறியலாம் (241, 242-வது பக்கம் பார்க்க).
மதி என்னும் பெயருக்கும் அமுதகுலத்தவன் (மது+இ) என்பதோர்
பொருள் என்பதாகப் பாண்டியர்கள் குலத்துக்கு வழங்கிய மதிக்குலம்
என்னும் பெயரை விளக்கிக்கூறியிருக்கிற விபரத்தால் அறியலாம்
(357-வது பக்கம் பார்க்க). ஆலோன் என்னும் பெயரும் மேற்கண்ட
இருபெயர்களுடன் ஒரு பொருட்கொண்ட மொழிதான்; அதற்கும்
அமுதகுலத்தவன் என்றே பொருள், ஆலி-பனையமுது. ஆகையால
சந்திரமகாராஜனுக்கு வழங்கிய சோமன், மதி, ஆலோன் என்னும் பெ
யர்களானவை அவருடைய சகோதரனாகிய சூரியமகாராஜனைப்போல
சந்திரமகாராஜனை அமுதகுலத்தவர் என்பதாக விளக்கிக்காட்டும்
பெயர்களாக இருக்கின்றன.

5. சந்திரமகாராஜனுடைய குமாரனாகிய புதன்மகாராஜனுக்கு வழங்கிய பெயர்களாலும் சந்திரகுலத்தரசர்கள் மரபு தெளிவுற விளங்கும். திவாகரத்திலும் நிகண்டிலும் புதனுக்குக்கூறிய பெயர்களாவன :

புதன் பெயர்.

"அருணன் ஆதவன் அனுவழி மேதை
மதிமகன் பாகன் மாலவன் கணக்கன்
புந்தி புலவன் பண்டிதன் சௌமியன்
சிந்தை கரியோன் அறிவன் புதனென
வசந்த நாமம் மற்றவர்க்காகும்."

(திவாகரம்)

"வந்த ஆதவனே மாலே மதிமகன் அறிஞன் பாகன்"

(நிகண்டு).

இப்பெயர்களின் யதார்த்த தாற்பரியமென்னவென்று பார்ப்போம்.

(a) அருணன் என்னும் பெயரானது அருணம் என்னும் மூலபதத்தினின் உற்பத்தியான பதமல்ல. எப்படியெனில் அருணம் என்றால் மிகு சிவப்பு என்று பொருள் (சதுரகராதி); அருணன் என்றால் மிகவும் சிவந்த நிறமானவன் என்று பொருளாகவேண்டும். புதன்மகாராஜனே செந்நிறமேனியனல்ல. அதே திவாகர சூத்திரத்தில் புதனுக்குக்கரியோன் என்னும் பெயர் வழங்கியிருப்பதால் புதனுக்கு வழங்கிய அருணன் என்னும் பெயரானது அருணம் என்னும் மூலபதத்தினின் உற்பத்தியான பெயரல்லவென்றறிக. அருணன் என்னும் பெயரானது சிவபெருமானுக்கு வழங்கிய அருணைநாதர் என்னும் பெயருக்குச்சம்மந்தமான பெயர். அதற்கு அரிணை என்பது மூலபதம். அரிணை என்றால் பனையமுது. ஆகையால் அருணன் என்றால் அமுதகுலத்தவன் என்றே பொருள். ஆகையால் ஆலோன், சோமன், மதி என்று பெயர்கொண்ட சந்திரமகாராஜனுக்குப்பிறந்த குமாரனாகிய புதனுக்கு வழங்கிய அருணன் என்னும் பெயரும குலவிளக்கப்பெயரென்றறிக.

(b) புதனுக்கு வழங்கிய மேதை என்னும் பெயருக்கு மூன்று தாற்பரியங்கூறலாம்.

1. அறிவு
2. மேன்மை
3. பனையமுது

} சதுரகராதி.

இப்பெயரால் புதன் மகாராஜன் அறிவுடையோர் என்னும் சான்றோர் குலத்தவனென்றும், மேன்மக்கள் என்னும் சான்றோர் குலத்தவனென்றும், அமுதகுலத்தவர் என்னும் சான்றோர் குலத்தவன் என்றுமறிக.

(c) சிவபெருமானுக்குப்பாகன் என்னும் பெயர் வழங்கியிருப்பதால் அவர் பார்வதி தேவியாரைத் [illegible] த்திலே ஒரே சரீரமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு இருக்கிறார் என்று கூட தாற்பரியம் கூறுகிற [illegible] புதன்மகாராஜனும் அத்தன்மையாகவே இளாதேவியாரைச்

காமர்த்துகொண்டு திரிந்தார் என்பதாகச்சொல்லக்காணும். புதனுக்கு வழங்கிய பாகன் என்னும் பெயரும் சிவபெருமானுக்கு வழங்கியபாகன என்னும் பெயரும் ஒன்றே. அதற்கு நாம் முன்னே விவரித்துக்காட்டியபடி பனங்கற்கண்டுற்பத்தி செய்யும் குலத்தவன் என்றுபொருளான படியால் அதுவும் குலவிளக்கப்பெயரே.

(*d*) மாலவன், மால் என்னும் பெயர்களுக்கு மாலி என்பது மூலபதம். மாலி என்றால் பனையமுது. ஆகையால் புதனுக்கு வழங்குகிற மாலவன் என்னும் பெயருக்கு அமுதகுலத்தவன் என்று பொருள்.

(*e*) புலவன் என்னும் பெயருக்கு இரண்டு தாற்பரியம் கூறலாம். புலம் என்றால் அறிவு ; ஆகையால புலவன் என்றால் அறிவுடையோன், சான்றோன் என்று பொருள். அல்லது புலவன் என்பது புல்லவன் என்பதின் மரூஉ. புல்-பனை. ஆகையால் புல்லவன் என்றால் பனைமாநாதன், அமுதகுலத்தவன் என்று பொருள்.

(*f*) அறிவன், அறிஞன் என்னும் பெயருக்கு அறிவுடையோன், சான்றோன் என்று பொருள். இப்பெயர்களினாலே சந்திரவம்சத்து முதலரசனாகிய சந்திரமகாராஜனும் அவனுடைய குமாரனாகிய புதன் மகாராஜனும் அமுதகுலத்தவர்களாகிய சான்றோர் என்று ஐயமற அறிகிறோம். ஆகையால் சந்திரகுலத்தவர்கள் சூரியகுலத்தவர்களைப்போலவே அமுதகுலத்தவரானபடியால், அதே மரபில் தோன்றிய கிருட்டிணமூர்த்தியும் அமுதகுலத்தவர்.

6. கிருட்டிணமூர்த்தியின் கோத்திரப்பெயராலும் அவருடைய குலம் விளங்கும். அவர் யாதவக்குலத்தவர். யாது-பனையமுது. ஆகையால் அவர் அமுதகுலத்தவரென்றறியலாம். அவருடைய குலம் யாதவக்குலமென்பதற்குச்சில திருஷ்டாந்தம் கூறுவாம்.

கூர்மபுராணம், கண்ணன் வைகுந்தமடைந்தவத்தியாயம்,
10-வது கவி.

கண்ணனைமுதலாயுள்ள யாதவர்காக்கொணுதென்
றெண்ணினொருப்பத்தெண்ணீ ரெழுகடன்ஞாலம்போற்று
மண்ணலர்தனிவில்லாண்மை யருச்சுனன்மறையோன்முன்னர்
நண்ணி[illegible]யைநோக்கி நகைத்திவையுரைக்கலுற்றான்.

இக்கவியினால் க[illegible]ணனுடைய குலம் யாதவக்குலமென்றறியலாம்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம்,
[illegible]சுதேவனைப்படைத்துணை யழைத்த சருக்கம்,
17-வது கவி.

எம்மையேயொழியவுள்[illegible] யாதவக்குலத்துளோர்க
ளும்மையுமெம்முனை தாலசேனையுஞ்சேரச்
செம்மையோடுதவியாகக் [illegible]
மும்மையுமுணர்ந்த [illegible]

இக்கவியிலே கிருட்டிணமூர்த்தி துரியோதனனைப்பார்த்து என்னைத் தவிர மற்றும் யாதவர்களையும் என் அண்ணனாகிய பனைக்கொடியோன் (தாலகேது) என்னும் பலராமனையும் சேர்த்துக்கொள் என்று சொன்னார் என்பதாகக்கண்டிருக்கிறபடியால் கிருட்டிணமூர்த்தியின் குலத்துக்கு யாதவக்குலமென்று பெயர் என்பதாக அறியலாம். யாதவக்குலமென்றால் அமுதகுலமென்றே பொருளானபடியால் கிருட்டிணமூர்த்தி அமுதகுலத்தவர்.

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்,

203-வது கவி.

அலைகடலவனிகாக்கும் யாதவர்மற்போர்காண்பான்
மலையுறழ்குடுமிமாடம் தனித்தனிவகுத்துவாய்ந்த
இலைமகம்புரவித்தெய்தும் வீ[illegible]ச்சிறப்புச்செய்யாக்
கலைபயிலக்குருநன் மனக்கிவைகழறலுற்றான்.

இக்கவியில் கிருட்டிணமூர்த்தியின் குலத்தவர்களாகிய யாதவர் என்னும் அமுதகுலப்பிரிவாரை அலைகடலவனி காக்கும் யாதவர், அதாவது, அலைவீசுங் கடலால் சூழப்பெற்ற உலகத்தைப் பாதுகாக்கும் யாதவர் என்று கண்டிருக்கிறது. அக்குலத்தரசர்கள் சுமார் 4000-வருஷக்காலமாய் இத்தேசத்தைப் பாதுகாத்து வந்ததோடு, அக்குலத்தவர்கள் நாளது வரை தேவாமிர்தத்தை மானிடருக்குக்கொடுத்துப் பாதுகாத்து வந்திருக்கக்கீழ்மக்கள் நன்றிகேட்டையே காட்டிக்கொண்டு வந்தபோதிலும், தேவர்குலத்தவர்கள் தங்குலத்துக்குரிய பொறுமையைக்கையாடி, மானிடரைப்போஷித்துக்கொண்டே வருகிறார்கள்.

244-வது கவி.

அலக்கல்வேந்தகஞ்சன்றன்னை யினிதினிலளித்தவெற்றி
யுலப்பொருதுயர்த்ததிண்டோ ளுக்கிரசேனன்றன்னைப்
புலம்புறுகாவலேற்றி யாதவர்பணிந்துபோற்ற
வலங்கெழுதிகிரிமாயோன் மணிமுடிசூட்டினானே.

இயமுனையாற்றங்கரையிலுள்ள மதுரையில் கிருட்டிணமூர்த்திக்கு மகுடாபிஷேகம்செய்யப்பட்டபோது அவருடைய குலத்தவர்களாகிய யாதவர் என்னும் அமுதகுலத்தவர்கள் பணிந்து போற்றினார்கள் என்று கூறியிருக்கிறது.

கூர்மபுராணம், கண்ணன் மணம்புணர்ந்தவத்தியாயம்,

24-வது கவி.

வென்றிகூர்தருசராசந்த னுடல்வேலினு
னென்றுசேனையிருபானொடு மூன்றக்குரோணியு
மன்றன்மாடமதுராபுரி[illegible]ஞ்சிவளைத்தலுங்
கன்றுநெஞ்சமொடு யாதவர்சிந்தைகலங்கினார்.

இக்கவியில் சராசந்தன் தன்சேனைகளோடு வந்து மதுராபுரியை முற்றுகையிட்டபோது கிருட்டிணமூர்த்தியின் குலத்தவர்களாகிய யாதவர்

கள் என்னும் அமுதகுலத்தவர்கள் சிந்தை கலங்கினார்களெனப்பார்க்கி றோம்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், உத்தியோக பருவம்,
கிருட்டிணன் றூதுசருக்கம்,
170-வது கவி.

தீதறுமதிவல்லோரைச் செழுமதிக்குடையானேக்கிப்
பாதவவனத்திற்போன பாண்டவர் தம்மைமீண்டு
மேதகவழைத்துநாடு வேண்டுமின்னென்றுமூட்டும்
யாதவன்றனித்துவந்தா னென்செய்வதியம்புமென்றான்.

கிருட்டிணமூர்த்தியானவர் தம்முடைய மைத்துனராகிய பஞ்சபாண்ட வர்கள் தூதுவனாய் அவர்கள் சகோதரராகிய துரியோதனாதிகளிடம் அத்தினபுரிக்குத் தனியனாய்ச்சென்றபோது, துரியோதனன் கிருட் டிணமூர்த்திக்கு விரோதமாய்ச்சதி யோசனை செய்தான். இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்கு யாதவன் என்னும் குலவிளக்கப்பெயர் வழங்கி யிருக்கிறது.

இவ்வாதாரங்களினாலே கிருட்டிணமூர்த்தியின் குலத்துக்கு யாத வக்குலம் என்று பெயரென்றும், ஆகையால் அவர் அமுதகுலத்தவ ரென்றும் அறியலாம்.

7. கிருட்டிணமூர்த்தியும் அவருடைய தமையனை பலராமரும் அமுதகுலத்தவர்களானதால், பனந்தோப்பைக்காத்துக்கொண்டிருந்த அசுரனாகிய தேனுகனைப் பலராமர் பனம்பழத்தால் எறிந்துகொன்றதைப் புராணிகர் கூறுமிடத்து வெற்றியோர் பனம்பழம் என்று சிறப்பித்துக் கூறுகிறார். வெற்றியோர் என்றால் ஜெயவீரர் என்று பொருள். வெற்றி யோர் பனம்பழமென்றால் ஜெயவீரர்குல விருட்சமாகிய பனையின்பழம் என்று பொருள். இந்தச்சந்தர்ப்பத்தில் கூறப்படும் ஜெயவீரர் கிருட்டி ணரும் பலராமருமாகிய யாதவர்களே. ஆகையால் வெற்றியோர் பனம் பழமென்றால் கிருட்டிணமூர்த்தி பலராமர் என்பவர்களின் குலவிருட்ச மாகிய பனையின் பழம் என்று பொருள்.

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்,
89-வது கவி.

கழுதையுருவாகியசுரன் கடிதினெய்த
விழுமெயிலெறிப்பவெதிர் சென்றிகலிராமன்
வழுவிலாடியவெற்றியோர் பனம்பழமெறிந்தான்
விழுதலுநிலத்திடை புரண்டுயிர்விளிந்தான்.

இக்கவியினாலே கிருட்டிணமூர்த்தி அமுதகுலத்தவரென்றும், பனையா னது ஜெயவீரர் என்னும் க்ஷத்திரியரின் குலவிருட்சமென்றுமறிக.

8. கிருட்டிணமூர்த்திக்கு அமரர்கோமான் என்னும் குலவிளக்கப் பெயரும் வழங்கியதாகப்பார்க்கிறோம்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், உத்தியோகபருவம்,
கிருட்டிணன் றூதுசருக்கம்,

5-வது கவி.

செய்வராலினமுகளுந் திருநாடுபெறநினைவோ சென்றுமீளப்
பைவராயருங்காணிற் பயின்றுதிரிதரநினைவோ பகைத்தபோரி
லுய்வராரெனவிரைவி னுருத்தெழுந்துபொரநினைவோ வுண்மையாக
வைவராமவனிபர்க்கு நினைவேதென்றருள்புரிந்தா னமரர்கோமான்.

இதன் கருத்து.

கிருட்டிணமூர்த்தி தம்முடைய மைத்துனர்களாகிய பஞ்சபாண்டவர்களைப்பார்த்து, கழனிகளில் வரால் மீன்கள் துள்ளப்பெற்ற குருநாட்டைச்சமாதானமாய்ப் பெற்றுக்கொள்ள எண்ணமோ?, அல்லது மறுபடியும் வனவாசஞ்சென்று துன்பமனுபவிக்க எண்ணமோ?, அல்லது உடனே போர் செய்து நாட்டைக்கட்டிக்கொள்ள எண்ணமோ? ஐந்து அரசர்களே! உங்களுடைய உண்மையான எண்ணம் என்ன? என்று வினவினர்.

இக்கவியில் யாதவர் குலத்தரசனாகிய கிருட்டிணமூர்த்தியை அமரர் கோமான் என்று கூறியிருப்பதால், யாதவர் என்பதும் அமரர் என்பதும் ஒரு பொருட்கொண்ட மொழிகளென்றறியலாம். அப்பெயர்களின் மூலபொருளும் ஒன்றே. யாதவர் என்பதற்கு யாது மூலபதம்; அமரர் என்பதற்கு அமரி மூலபதம்.

யாது = பனையமுது
அமரி = பனையமுது

ஆகையால் கிருட்டிணமூர்த்திக்கு வழங்கிய அமரர்கோமான் என்னும் பெயருக்கு அமுதகுலமாகிய யாதவகுலத்தரசன் என்று பொருளேயன்றி தேவேந்திரன் நாட்டுக்கரசன் என்று பொருளல்ல. இப்பெயரும் அவருடைய குலவிளக்கப்பெயர்களிலொன்று.

9. சிவபெருமானுக்கு மாதவன் என்னும் பெயர் வழங்கியிருப்பதற்கு அமுதகுலத்தவன் என்று பொருள் என்பதாகவும், அப்பெயரானது பனையமுதைக்குறிக்கும் மாதவம் என்னும் மூலபதத்தினின்றுற்பத்தியான பதமென்றும் விவரித்துக்காட்டினேன். கிருட்டிணமூர்த்திக்கும் இக்குலவிளக்கப்பெயர் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவாம்:

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், ஆரணியபருவம்,
அருச்சுனன் றவநிலைச்சருக்கம்,

6-வது கவி.

மாதவத்தின் பயனென மாதவன்
[illegible]யாதவக்குலத்தே நிலையோர்பதி
[illegible]வைக்கு நிழல்போலருள்
வேதவித்[illegible] மேவினான்,

இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்குச் சொல்லப்பட்டிருக்கும் மூன்று பெயர்கள் அவருடைய குலத்தைத்தெளிவுற விளக்கிக்காட்டுகின்றன :—

1. மாதவத்தின் பயனேன யாதவன்—பெருந்தவத்தின் பயன்போலுதித்த அமுதகுலத்தவன்
2. யாதவக்குலத்தேறு—அமுதகுல ரிஷபம் போன்றவன்
3. வேதவித்தகவிரன்—வேதங்கள் கூறும் சான்றோனாகிய வீரன்

என்னும் இம்மூன்று பெயர்களும் கிருட்டிணமூர்த்தியானவர் அமுதகுலத்தவராகிய சான்றான் என்று ஐயமறக்காட்டுகின்றன. வித்தகன் என்பது சான்றோர்குலப்பெயர் என்பதாக முன்னமே விளக்கிக்காட்டியிருக்கிறோம்.

வில்லி பாரதம், உத்தியோகபருவம், கிருட்டிணன் தூதுசருக்கம்,
210-வது கவி.

மாதவனேமுனியே லெமையாளுடை வானவனேமுனியேல்
யாதவனேமுனியே விதயத்திலிருப்பவனேமுனியேல்
ஆதவனேமுனியேல் மதிவெங்கனலானவனே முனியேல்
நீதவனேமுனியேல் முனியேலென நின்றுபணிந்தனரே.

இக்கவியிலும் கிருட்டிணமூர்த்திக்கு மாதவன், யாதவன் என்னும் பெயர்கள் அமுதசம்பந்தமாயும்,வானவன் என்பது சான்றோர் குல சம்பந்தமாயும் வழங்கியிருக்கின்றன. வானவன் (வான்-மேன்மை) என்றால் மேன்மக்கள் குலத்தவன், சான்றான் என்பதாக இப்பெயர் சிவபெருமானுக்கு வழங்கிய இடத்தில் விளக்கிக்காட்டினோம்.

கூர்மபுராணம், கண்ணன் பூமிபாரந் தீர்த்தவத்தியாயம்,
38-வது கவி.

தூதுவனுரைத்தமாற்றங் கேட்டலுந் துளவத்தண்டார்
மாதவன்முறுவல்கோட்டி வண்சிறைக்கலுழனூர்ந்து
போதரவமரிற்புக்க பவுண்டரவாசுதேவன்
மேதகுமவுலிநேமிப் படையினால்வீழ்த்தினானே.

60-வது கவி.

தூதுவர்மன்னவர் சொன்னயாவையு
மாதவன்சேவடி வணங்கிக்கூறலு
நாதயாழ்முனிவரன் றருமன்மகக்
தீதறப்புரிவது செப்பினனரோ.

90-வது கவி.

மாதவன்சூழ்வற் செருத்தமாண்பொடும்
போத[illegible]திருதியினிற் புசல்வன்படை[illegible]
தாதலர்பசுங்[illegible] [illegible]
காதிவெ[illegible]மிழ் [illegible]கடவினான்.

இக்கவிகளிலெல்லாம் கிருட்டிணமூர்த்திக்கு வழங்கும்மாதவன் என்னும் பெயருக்கு யாதவன், அமுதகுலத்தவன் என்றே பொருள்.

10. கிருட்டிணமூர்த்திக்கு மாலோன், மாலவன் என்னும் பெயர்கள் வழங்கினதாகவும் பார்க்கிறோம். மாலோன், மாலவன் என்றால் அமுதகுலத்தவன், யாதவன் என்று பொருள். மாலி-பனையமுது.

பெருந்தேவனார் பாரதம், உத்தியோக பருவம்,
151-வது கவி.

விதுரனுடன்மேவி விருந்தமுதசெய்து
மதுரமொழிபயின்றன் மாலோன்—அதிபற்
கெதிரோனிருந்தவிட மேந்தெழிலான்செல்லக்
கதிரோனுக்தோற்றினன் காய்ந்து.

கூர்மபுராணம், கண்ணன் மணம் புணர்ந்தவத்தியாயம்,
35-வது கவி.

காலவயவனுடற்றுசமர்க் காற்றான்போலக்கருந்துளவ
மாலோன்மான்றேரிழிந்தோடி மலையின்முழைபயிற்கண்டுயிலு
ஞாலம்புகழுமுசுகுந்தன்பின்போ யொளிப்பகனிதுடர்ந்து
சாலுமுழையினிடைபுகுந்து துயிலுமரசன்றனையுதைத்தான்.

இவ்விரண்டு கவிகளிலும் மாலோன் என்னும் பெயர் கிருட்டிணமூர்த்திக்கு வழங்கியிருக்கிறது.

பெருந்தேவனார் பாரதம், உத்தியோகபருவம்,
111-வது கவி.

கின்னைச்செலவிட்டா லீர்நாடுதாரானேல்
பின்னைப்பொருகை பிழையன்றே—உன்னைக்காண்
மாதவனேமாயவனே மாலவனேமற்றெமக்கோர்
தூதுவனேயாக்கத் துணி.

இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்கு வழங்கிய மாதவன், மாலவன் என்னும் இரண்டு பெயர்களும் யாதவனையே குறிக்கிறது. இவற்றிற்கெல்லாம் அமுதகுலத்தவன் என்று பொருள்.

11. கிருட்டிணமூர்த்திக்கு வழங்கும் முகுந்தன் என்னும் பெயரும் அவருடைய குலத்தை விளக்கிக்காட்டும். முகுந்தர், முக்கந்தர் என்னும் பட்டப்பெயர்கொண்ட சாணேர் தற்காலத்திலும் தென்திருநெல்வேலி காட்டிலிருக்கிறார்கள் என்றும், முகுந்தன் என்னும் பெயருக்கு (மு + குந்தன்) மூன்றாவது குந்தன், அதாவது, மூன்றாவது அமிர்தமூர்த்தி என்னும் பொருள் [illegible], மும்மூர்த்திகளில் மூன்றாவதான விட்டுணு [illegible] பெயர் என்றும் [illegible]டுத்துரைத்தோம். இ[illegible] மூர்த்திக்கு வழங்கியதற்கு பேற்[illegible] கூறுவாம்:—

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்,

179-வது கவி.

எய்தியவ்வாயர்பாடி யினிதமர்ந்துறையுநாளிற்
றெய்வநீர்பெருக்கனுத சரச்சோதிதிரந்தன்னின்
மையணிமிடற்றுப்புத்தேள் விழாவணிவணங்கியேத்தக்
கொய்துழாய்முகுந்தனுயர் குழாத்தொடுமெய்தினானே.

இக்கவியில் மூன்றாவது அமுதகுல மூர்த்தியென்று பொருள்படும் முகுந்தன் என்னும் பெயர் கிருட்டிணமூர்த்திக்கு வழங்கியிருக்கிறது.

கூர்மபுராணம், கண்ணன் மணம் புணர்ந்தவத்தியாயம்,

141-வது கவி.

சேட்டிளம்பருதியீன்ற காளிந்தியாறுசெந்தேன்
பாட்டளிதுகர்ந்துதுஞ்சும் பைந்துழாய்முகுந்தன்மார்பின்
மோட்டிளமுலைகள்சாட முயங்குதல்விரும்பித்தேன்றே
யூட்டரக்குண்டசெவ்வா யொண்டொடியாயிற்றன்றே.

இக்கவியிலும் கிருட்டிணமூர்த்திக்கு மூன்றாவது அமிர்தமூர்த்தி என்று பொருள்படும் முகுந்தன் என்னும் குலவிளக்கப் பெயர் வழங்கியிருக்கிறது.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், கிருட்டிணன்றூது சருக்கம்,

22-வது கவி.

மைக்காலமுகிலூர்திவானவர்கோன் திருமதலைவணங்கிநின்று
முக்காலங்களுமுணருமுகுந்தனுக்கு முதல்வனுக்குமொழிவான்மன்னே
வக்காலம்பொறுத்தவெலாமமையாம விண்ணையிருந்தறமேசொன்ன
லெக்காலம்பகைமுடித்துத்திரௌபதியுங் குழன்முடிக்கவிருக்கின்றாளோ

பஞ்சபாண்டவர்கள் வனவாசஞ் செய்து திரும்பி வந்தபின் துரியோதனனிடம் ராட்சியத்தைக்கேட்டும் அவன் கொடாவிட்டால் மகாபாரத யுத்தம் இனத்தாரோடு செய்வது தருமமல்லவென்று பாண்டவர்களின் முதல்வனை தருமபுத்திரன் சொல்லும்போது, அருச்சுனன் கண்ணனையும் தருமபுத்திரனையும் பார்த்து முன்பு சூதாடின காலத்தில் துரியோதனனிகள் பிழைகளெல்லாம் பொறுத்தது போதாமல், இன்னும் போர் புரியக்கூடாதென்று தருமத்தையே போதித்துக்கொண்டிருந்தால், நாம் பகைவர்களாகிய துரியோதனாதிகளை எக்காலத்தில்கொன்று, அதன்பின் திரௌபதியின் சபதத்தையும் நிறைவேற்றி, அவளும்தான் அன்று விரித்த கூந்தலை என்றைக்கு எடுத்து முடித்து அலங்கரிக்க இருக்கின்றாள் என்று சொன்னான் என்று பொருள். இக்கவியிலும் கிருஷ்ணமூர்த்திக்கு மூன்றாவது அமிர்தமூர்த்தி என்றருத்தங்கொடுக்கும் முகுந்தன் என்னும் பெயர் வந்திருக்கிறது.

30-வது கவி.

நகுலனிவையுரைத்த [illegible]றெனக்கை [illegible]தருளிக்குலன்சொல்லு
மிகல்விசயனதன் [illegible]புத்திரல்வீம [illegible]டேறும்
புகலரிய [illegible] [illegible]ன்ன
[illegible]திருமேனிமுகுந்தனுக்கு [illegible]

இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்கு முகுந்தன் என்னும் சான்றோர்குலப் பெயர் வழங்கியிருக்கிறது.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், உத்தியோக பருவம்,

கிருட்டிணன் தூதுசருக்கம்,

187-வது கவி.

மாதவனிருந்தகோயில் வந்தடிவணங்கிமன்னன்
றூதுவராழியங்கைத் தோன்றலேதுளபமாலை
யாதவக்குலத்தோரேறே யெழுந்தருள்கென்றானின்றெய்
மேதகுமா[illegible]னென்றுமுகுந்தனும்விரைந்துசென்றான்.

இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்கு அமுதகுல சம்பந்தமான பெயர்கள் மூன்று வழங்கியிருக்கின்றன.—மாதவன், யாதவன், முகுந்தன் என்பவைகளே. தோன்றல் என்னும் பெயரானது கிருட்டிணமூர்த்தி சான்றோர குலத்தவன் என்று தெரிவிக்கிறது.

தோன்றல்—பெருமையிற் சிறந்தோன்

(சதுரகராதி)

சான்றோன் என்று பொருள்.

12. கிருட்டிணமூர்த்தியின்னவர் அமுதகுலத்தவரான காரணத்தாலே, அவருடைய தமையனாகிய பலராமர் என்னும் பலபத்திரர் (பலம்-வலிமை, ராமம் or பத்திரம்-அழகு) பனந்தாரான், பனைக்கொடியோன் என்று அழைக்கப்படுகிறார்.

பனந்தாரான்—சேரன்; பலபத்திரன்

(சதுரகராதி)

இதற்கு மேற்கோள் கூறுவாம்.

கூர்மபுராணம், கண்ணன் மணம் புணர்ந்தஅத்தியாயம்,

47-வது கவி.

கவிபொற்றகொ[illegible]க்கியெழுந்துணர்த்த கைதைதக்காடுத்த
கடல்சூழ்துவாரபுரியெய்திக்கண்ணற் குரைப்பமகிழ்சிறந்து
மிடல்சேர்வென்றிப்பனைக்கொடியோ னெடுமெய்விரைமான்றேர்கடவிக்
கொடிவான்றெருக்குண்டினபுரத்துக் குளிர்பூஞ்சோலையருங்கணைந்தான்.

117-வது கவி.

எந்தையைக்கற்குற்பாறு விபற்சதத்தனுவாவெய்தி
மைந்துடைவாளிற்செம்பொன் மணிமுடிதடிந்தாவென்னப்
பைந்துழாய்முகுந்தன்சீறிப் பனைக்கொடித்தோன்றலோடும்
வெந்திறன்மான்றேரே[illegible] விரைந்தவண்டுவரையுக்கான்.

சிவபெருமானுக்கு திருப்பினோதர் [illegible] என்று கூறியது போல மூன்றாவது [illegible] அவ்வாறுபோல் கிருட்டிணமூர்த்திக்கு முன் [illegible] பலபத்திர[illegible] பனந்தாரான்; பனைக்கொடியோன்,

பனைக்கொடித்தோன்றல் என்று கூறியிருப்பதாலும் அவர்கள் ஏக குலத்தினரென்றறியலாம்.

பனைக்கொடித்தோன்றல் என்னும் பெயர் வழங்கிய கவியிலேயே கிருட்டிணருக்கு முகுந்தன், அதாவது, மூன்றாவது அமிர்தமூர்த்தி யென்னும் பெயர் வழங்கியதோடு, பனைக்கொடித்தோன்றல் என்னும் பெயரில் தோன்றல் என்னும் பெயரானது சான்றோர்குலப்பெயரென்று அறியவேண்டியது.

தோன்றல்—பெருமையிற் சிறந்தோன்

(சதுரகராதி)

ஆகையால் பனைக்கொடித்தோன்றல் என்னும் பெயருக்குப் பனையை விருதுக்கொடியாகவுடையவனான சான்றோனென்றுபொருளென்றறிக.

13. கிருட்டிணமூர்த்தி அமுதகுலத்தவர் என்று காட்டும்படிக் கான ஆதாரங்களைப்பார்த்தோம். அதே சந்தர்ப்பத்தில் அவர் சான்றோன் என்றனுமானிக்கக்கூடியதாய் அவருக்கு வழங்கிய வித்தகன், வாணவன், தோன்றல் என்னும் மூன்று பெயர்களிடைக்கிடையே வந்ததையும் விரித்துரைத்தோம். அவர் சான்றோன் என்பதற்கு வேறு சில ஆதாரம் இங்ஙனம் வரைவோம்.

மகாபாரதம், சாந்திபர்வம், தருமசாஸ்திரவியல்புரைத்த சருக்கம்,
கண்ணன் றுதி விருத்தம்.

கலைகற்றவர்க்குமது கல்லாதவர்க்கும்
நிலைபெற்றவர்க்குநிலை நில்லாதவர்க்கும்
கொலைமுற்றுவோர்க்குமுயிர் கொல்லாதவர்க்கும்
தலையுற்றசான்ற னவன்றாள் துதிப்பாம்.

இக்கவியிலே அமுதகுலத்தவராகிய கிருட்டிணமூர்த்தியைச் சான்றான் என்று கூறியிருப்பதால், அவர் சான்றார் குலத்தவரென்றறிக.

கிருட்டிணமூர்த்தியானவர் ருக்குமணியம்மனைக்கலியாணஞ்செய்து வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் ருக்குமணி கருவுற்று 'சான்றோர்' மகிழும்படியான புத்திரனைப்பெற்றாள் என்றும் வாசிக்கிறோம். ஆகையால் கிருட்டிணமூர்த்தியின் குலமாகிய யாதவக்குலமென்னும் அமுத குலம் சான்றோர்குலமென்றறியலாம்.

கூர்மபுராணம், கண்ணன் மணம்புணர்ந்தவத்தியாயம்,
79-வது கவி.

உருவத்தடமுலை யொண்டாமரையினள்
பருவ[illegible]குமுலை பினையென்றிரள்புய
ம[illegible]பொருசிலை ம[illegible]னைப்பகிவொடு
கருவுற்றிட்டவெழில [illegible]ணிவுற்றனள்,

80-வது கவி.

வான்றோய்நிலவுமிழ் மழவெண்பிறையெனச்
சான்றோர்மகிழ்வுறு தனிநாளதனிடை
தேன்றோய்கனிநிகர் செவ்வாய்மடமயி
லீன்றனள்திருவனை யின்புற்றிடவே.

இதனாலும் கிருட்டிணமூர்த்தி சான்றான் என்றறியலாம்.

கிருட்டிணமூர்த்தியின் மைத்துனராகிய பஞ்சபாண்டவர்களும் அவர்கள் தாயாதிகளாகிய துரியோதனாதிகளும் சான்றோர் குலத்தவர்கள்.

பெருந்தேவனார் பாரதம், உத்தியோக பருவம்,

113-வது கவி.

நன்றார்க்கோர்மாதுன்ப மின்னார்க்கோரின்னாச்சொல்
சான்றோர்கட்கெல்லாந் தலையிறக்கந்—தோன்றுங்
கொடுவில்வாள்வாட்டானைக் கொற்றவனேபார்மேல்
வடுவிலாள் பட்டவடு.

வீமன் தருமராஜனைப்பார்த்து கொடிய வில்லையும் வாளையும் பயின்றுபயோகிக்கின்ற சேனையையுடைய தருமராஜனே! இவ்வுலகில் எவ்வித மாசுமற்ற திரௌபதியானவள் துச்சாசனனால் ராஜசபையிலடைந்த அவமானமானது, அவளுடைய தாய் தந்தையருக்குப் பெருந்துன்பத்தையும், நம் பகைவர்களாகிய துரியோதனாதிகள் நம்மைக்கண்டபடி பேசிப்பரிகசிக்கும்படியான ஒரு பழிச்சொல்லையும், நம் குலத்தவராகிய சான்றோரெல்லாம் தம் தலையைக்கீழே கவிழ்க்கும்படியான பழிப்பையும் உண்டாக்கிற்றன்றோ? என்று கேட்கிறார்.

இக்கவியில் சான்றோர் என்பது பஞ்சபாண்டவர்களினினத்தாரைக் குறிக்கிறதென்றறிக. பாஞ்சாலராஜன் மகளாகிய திரௌபதி என்னும் வடுவிலாள் பட்டவடு என்னவென்று

நாடறியநாட்டார் சபையகத்தேபாஞ்சாலி
நாடறியதுசிர்த நாசத்தால்—நாடறியத்
தன்னைவந்தீர்க்கத் தழைபூங்குழல்விரித்த
பொன்னே யவன்றன்மகள்.

என்னும் இப்பாரதவெண்பாவாலறிக.

மகாபாரதம், உயுத்தகாண்டம், மவுலிசூட்டு சருக்கம்,

10-வது கவி.

ஆதலாலரவுயர்த்தோனொடுமோது மநுமரணமானபோது
சாதலாகியதலைவர்சான்றோர் முத்தமையனிருசமரிற்சாய்ந்தோ
ரீதெலாநலமிழந்தியிருக்கும மீரறுநாளியற்றிச்செய்த
நீதெல்லாமகன்றதெனவகமலர்ந்து பூ[illegible]மதிர்ந்தார்.

பதினெட்டாம் நாள் [illegible]போரில் துரியோதனாதிகள் முதலான வீர[illegible]க்களத்தில் மடிந்தார்கள். துரியோதனன்

தேவியாகிய பெருந்திருவானே தன் நாயகனுடனே அனுமரணமானுள்; பஞ்சபாண்டவர்களும் கிருட்டிணமூர்த்தியும் துரியோதனனுடைய உடலை மயானஸ்தலம் கொண்டுபோய்த் தகனஞ் செய்தபின்பு இக் கொடிய போரில் மாண்ட மற்றும் தலைவர்களாகிய சான்ருேருடைய உடல்களையும் போரில் மடிந்த மற்றவர்களுடைய உடல்களையும் முறைப் படி மயானக்கிரியை செய்தார்களென்று பொருள். இக்கவியில் துரி யோதனனுடைய தம்பிமாராகிய தொண்ணூற்ருென்பது பேருக்கும் சான்ருேர் என்னும் குலவிளக்கப்பெயரும், கிருட்டிணமூர்த்திக்கு முகுந் தன் என்னும் குலத்தொழில் விளக்கப்பெயரும் வழங்கியிருக்கின்றன.

கம்பராமாயணம், உயுத்தகாண்டம், வருணனை வழிவேண்டுபடலம், 25-வது கவி.

மொய்த்தமீன்குல முதலறமுருங்கினமொழியிற்
பொய்த்தசான்றவன்குலமெனப் பொருகளையெரிய
வுய்த்தகூம்புடை நெடுங்கலமோடுவகடுப்பத்
தைத்தவம்பொடுந் திரிந்தனசாலமீன்சாலம்.

இராமர் சமுத்திராஜனுகிய வருணன்மீது கொண்ட கோபத்தைச் சமுத்திரத்தின்மீது செலுத்தும் பொருட்டுத்தமது கோதண்டத்தை எடுத்து நாணேற்றிக்குணத்தொனி செய்து சமுத்திரத்திற்குள்ளாகப் பாணப்பிரயோகஞ் செய்தபோது அச்சமுத்திரத்திலிருந்த மீன்கள் எவ்வாறு நிலைதடுமாறி யலைந்ததென்ருல், பஞ்சபாண்டவர்கள் வனவா சஞ்செய்து திரும்பினுல் இராஜ்யத்தை திரும்பவுமவர்களுக்குக்கொ டுத்து விடுவோமென்று வாக்களித்திருந்த துரியோதனுதிகள் தங்கள் வாக்கைக்காப்பாற்ருததால் மகாபாரத யுத்தத்தில் எவ்வளவாய் நிலை குலைந்தழிந்தார்களோ அவ்வளவாய் சமுத்திரத்திலுள்ள மீன்கள் இராம ருடைய பாணத்தால் நிலைகுலைந்தழிந்தார்கள் என்கிருர் கம்பநாடன்.

இக்கவியில் துரியோதனுதிகளைப் 'பொய்த்தசான்றவன்குலம்' அதா வது, சொல்வாக்கு மாறிய சான்ருேர் குலம் என்று கூறியிருக்கிறது.

இப்படியாக கிருட்டிணமூர்த்தி சான்ருன் என்று கூறியிருக்கிறபடி யாலும், அவருடைய குலத்தவர்களாகிய யாதவர்களுக்கும், அவருடைய மைத்துனராகிய பஞ்சபாண்டவர்கள் இனத்தாருக்கும், அவர்களுடைய தாயாதிகளாகிய துரியோதனுதிகளுக்கும் சான்ருேர் என்னும் குலப் பெயர் கூறியிருப்பதாலும் அவர்களெல்லாரும் சான்ருேர் என்றறிக.

N.B. துரியோதனுதிகளுக்குப்பொய்த்த சான்றவன் குலமென்னும் பெயருண்டாகிறதற்குக் காரணமென்னவெனில் பாண்டவர்கள் சூதாட் டத்தால் இராஜ்யத்தை யிழந்தபோது துரியோதனுதிகள் 'அவர்களைப் பார்த்து

அரிவையோடகன் றநீவி ரவருமடவியெய்திச்
சுரர்[illegible]மீராறகன்று தன்னுயிர்மன்னுநாட்டின்
ஒரு[illegible]மியாவண்[illegible]
பெருவிறலரசம்[illegible]

என்பதாகப்பதின்மூன்று வருடங்களுக்குப்பின் இராஜ்யத்தைத்திரும்ப அவர்களிடம் கொடுப்பதாக வாக்களித்திருந்தபோதிலும்,

காடுறையுமாண்டுங் கரந்துறையுமாண்டும்போய்
ஈடுறையும் பாண்டவர்கள் நண்ணினரால்—நீடுறையிற்
பூவேந்தேவாவிப் புனவேந்தநன்றுடர்
கோவேந்தேயென்னுன் குறிப்பு

என்பதாகப்பதின்மூன்று வருடங்களுக்குப்பின் இராஜ்யத்தைக்கேட்ட போது, துரியோதனன் சொல்வாக்கு மாறி,

கழிந்திடுவாண்டெல்லாங் கட்டவுதியொட்ட
ஒழிந்திடுகவாளமரேயாக—ஒழிந்து
மயிர்முனைக்குமண்கொடேன் மன்னவனேயென்றான்
செயிர்முனைக்கணிற்பான் செயிர்த்து

வருடங்களெல்லாம் கழிந்திடட்டும், வாக்குறுதிகளெல்லாம் ஒழிந்திடட்டும், மகாபாரதயுத்தம் நேரிடட்டும், ஒரு மயிர் நாட்டுதற்கு முதலாய் ராஜ்யத்தில் இடந்தரமாட்டேன் என்பதாகக்கூறிய வாக்கால் அவன் குலத்துக்குப்பொய்த்த சான்றவன் குலம் என்னும் பெயருண்டாயிற் றென்றறிக.

14. கிருட்டிணமூர்த்தியின் தாயாகிய தேவகிக்கு மிக்கவள் என்னும் சான்றார்குலப்பெயர் வழங்கியிருப்பதாலும், கிருட்டிணமூர்த்தி சான்றோர் குலத்தவனென்றறியலாம்.

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்,
16-வது கவி.

இன்னணம்பின்னுமைந்த நறுவரையெதிவேற்கஞ்சன்
கன்மிசைப்புரளவெற்றி யாருயிர்கடிந்தபின்னர்
பன்மணிக்கடிகைநெற்றிச் சேடனைப்பவளச்செவ்வாய்க்
கன்[illegible]கற்பின்மிக்க தேவகிகருக்கொண்டாளே.

குறிப்பு—சேடன்-அழகன், சேடு-அழகு.

இக்கவியில் கிருட்டிணமூர்த்தியின் தாயாகிய தேவகியைக்கற்பின் மிக்க தேவகி என்று விளம்பியிருக்கிறது. அதற்குக்

கற்பினையுடைய மிக்கவளாகிய தேவகி

ஆகாவது, கற்பினையுடைய சான்றாளாகிய தேவகியென்று பொருள். இப்பெயருக்குக்கற்பினை மிகுதியாகவுடைய தேவகியென்பது கீழ்மக்கள் தாற்பரியம். கீழ்மக்களாகிய சூத்திரர் ஆதிகாலங்களில் அந்தணர், சான்றோர், வணிகரென்னும் உயர்குலமாக்கள் மூவர் குடும்பங்களிலும் ஏவின குற்றேவல் செய்யத்தங்கள் பெண்களை விட்டிருக்கமையால், அப்பெண்களின் பிச்சபனைவர்கள் தங்கள் கற்[illegible]நிலையைக்காத்திருப் [illegible] தன்மையா[illegible] சூத்திர ஸ்திரீகள் [illegible]

கள் பொருந்துமேயல்லாமல், அத்தன்மைய தாற்பரியம் அரசர் குலத்தவர்களுக்கேற்ற தாற்பரியமன்று. அரசர் குலத்தவர்களுக்கோ கற்பு என்னும் பெயரில் உயர்வும் தாழ்வுமில்லை. கற்புநிலை சிறிதும் பிசகுகிறவளைச் சான்றோர் கற்புடையவள் என்று சொல்லமாட்டார்கள். அந்நிலை அணுவளவும் பிசகாதவளே கற்புடையவள். ஆகையால் கிருட்டிண மூர்த்தியின் தாயாகிய தேவகிக்கு வழங்கிய கற்பின் மிக்கதேவகி என்னும் பெயருக்குக் கற்பை மிகுதியாகவுடைய தேவகி என்று கீழ்மக்கள் தாற்பரியம் கூறாமல், கற்பினையுடைய மிக்கவளாகிய சான்றாள் என்று கூறுவதே மேன்மக்கள் குலத்துக்குரிய தாற்பரியமென்றறிக.

15. கிருட்டிணனுக்கு உயர்ந்தோன் என்னும் சான்றோர்குலப் பெயர் வழங்கியதற்கு மேற்கோள் கூறுவாம்:—

கூர்மபுராணம், கண்ணன் சிவபூசை பண்ணினவத்தியாயம்,
2-வது கவி.

தீங்கறக்கண்ணன்செய்யுஞ் சிவலிங்கபூசைநோக்கிப்
பாங்கினிலினிதுவைகும் பழிப்பின்மார்க்கண்டனென்போ
னீங்கரும்பிரமனீயே யின்னிலும்முயர்ந்தோர்யாவ
ரீங்குநீபூசைசெய்வ தியாவனையியம்புகென்றான்.

இக்கவியில் கிருட்டிணமூர்த்தியானவர், சான்றோனாகிய சிவபெருமானுடைய லிங்கபூசை செய்துகொண்டிருந்ததைக் கண்ணுற்ற மார்க்கண்டன் அவரைப்பார்த்து நீயே பிரமனாயிருக்கிறாயே, உன்னிலும் சான்றோர் யார்?, நீ யாரைக்கருதிப் பூசை செய்கிறாயெனக் கேட்டான் என்று கண்டிருக்கிறபடியால், கிருட்டிணமூர்த்தியானவர் சிவனுக்கும் பிரமனுக்கும் சமமான சான்றோனெனப்பார்க்கிறோம். பிரமன் சான்றோன் என்னும் விபரம் பிரமகுலவிளக்கவத்தியாயத்தில் கூறப்படும்.

16. கிருட்டிணமூர்த்திக்கு ஆரியன் என்னும் சான்றோர்குலப் பெயரும் வழங்கியிருக்கிறது.

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்,
209-வது கவி.

சார்தலுமக்குமரன் றன்புனல்படியுமெல்லை
தேரினற்புனலிற்கண்ணனின் மனத்தினிற்றிசைகளெட்டி
னாரியன்றன்னைக்கண்ணுற் றற்புதனீராகி
யீர்மலர்தூவியைய னிணையடியேத்தினானே.

இக்கவியில் வழங்கும் ஆரியன் என்னும் பெயரானது கிருட்டிணமூர்த்தி சான்றோர் குலத்தவரென்று அறிவிக்கிறது.

கூர்மபுராணம், கண்ணன் பூமி[illegible]த்தவத்தியாயம்,
63-வது கவி.

ஆரியனை[illegible]டலங்க[illegible]குன்றதனை
வேதிருந்தே[illegible]
[illegible]
[illegible]

இக்கவியிலும் கிருட்டிணமூர்த்திக்கு ஆரியன் என்னும் சான்றோர்குலப் பெயர் வழங்கியிருக்கிறது.

17. கிருட்டிணன் குலத்தவர்களுக்கு உலகு என்னும் சான்றோர் குலப்பெயரும் வழங்கியிருக்கிறது. இரண்டாவது அத்தியாயம் 22, 23-வது பக்கங்களில் கிருட்டிணமூர்த்திக்கு

1. உலகமீன்ற செல்வன்
2. எவ்வுலகமீன்ற குழவி
3. உலகம் பூத்த இறைவன்

என்னும் பெயர்கள் வழங்கியதற்கு மேற்கோள் கூறினோம். அவரைப் பற்றி 'உலகனைத்தினையுமுண்டோன்' என்றும் வாசிக்கிறோம்.

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்.
23-வது கவி.

உலகனைத்தினையுமுண்டோன் றமதிடத் தாறநீம்பால
மலைவறநுகர்ந் தாரூம் வளர்வனென் றுவந்துகொல்லோ
விலைவிதழ்க்கோதையெல்லா வுறுப்பினுமெழில்கொண்டோங்கி
யலர்கணங்கணித் துவீங்கி யணிமுலை பருத்ததன்றே.

இவ்வாறு கூறிய வாக்கியங்களின் தாற்பரியமின்னவென்று முன்னே எடுத்துரைத்தோம்.

உலகமீன்ற செல்வன்—உலகு என்னும் சான்றோர் குலத்தில் பிறந்த செல்வன்

எவ்வுலகமீன்ற குழவி—எவ்வகையான சான்றோர்குலப் பிரிவுகளிலும் பிறந்த சான்றான்

உலகம்பூத்தவிறைவன்—சான்றோர் குலத்திலுதித்த அரசன்

உலகனைத்தினையுமுண்டோன்—சான்றோர் யாவரையும் விழுங்கக்கூடியவன், அதாவது சான்றோர் யாவரிலும் சிறந்த சான்றானென்றே பொருள்.

'உலகமேலோர்பெயருயர்ந்தவர்க்கியம்புநாமம்'

(நிகண்டு).

உயர்ந்தோர் என்பது சான்றோர்குலப்பெயர்களிலொன்றெனத் திவாகரம் கூறுகிறது. ஆகையால் கிருட்டிணமூர்த்தி சான்றானென்றறிக.

அண்டர்பிரான் என்னும் பெயரானது சிவபெருமானுக்கு வழங்கிய நாமதேயங்களிலொன்றென்றும், அதற்குச் சான்றோர்குல தெய்வம் என்று பொருள் என்பதாகவும் சிவபெருமான் குலவிளக்க அத்தியாயத்தில் [illegible] அப்பெயர் கிருட்டிணமூர்த்திக்கும் வழங்கியிருக்கின்றது [illegible]ோம்.

கூர்மபுராணம், கண்ணன் மணம்புணர்ந்தவத்தியாயம்,
92-வது கவி.

வண்டுவரைமாநகரி விரதியொடும்வந்தடைந்த மைந்தன்றன்னைக்
கண்டுருகியுருக்குமணி கதிர்முலைப்பால்வழிந்தொழுகக் கண்ணீர்வாரப்
வண்டர்பிரான்முகநோக்கி யார்கொலிவனெனப் போல்வானைநதியென்
பண்டரும்யாழ்முனியெய்திமுன்னிகழ்ந்த வாறனைத்தும்பகர்ந்திட்டானே.

க்கவியில் சான்றோர்குல தெய்வம் என்று பொருள்படும் அண்டர் ரான் என்னும் பெயரானது கிருட்டிணமூர்த்திக்கு வழங்கியிருப்ப ல் கிருட்டிணமூர்த்தி சான்றோனென்றறியலாம்.

பெருந்தேவனார் பாரதம், உத்தியோக பருவம்,
137-வது கவி.

பெண்டுகளும்பிள்ளைகளும் பித்தர்களுமென்னறிவார்
அண்டர்தொழநின்றருளு மச்சுதனே—மண்டு
ஐந்தலைநாகக் கொடியோன் பாலீண்டு
எழுந்தருளவென்றனெடுத்து.

இக்கவியில் தருமன் கிருட்டிணமூர்த்தியைப்பார்த்து 'அண்டர் தொழநின்றருளுமச்சுதனே' என்றழைக்கிறார். அதாவது யாதவராகிய சான்றோர்வணங்க அவர்களுக்குத்தலைவனாக நின்று கருணை செய்கின்ற கடவுளே என்று பொருள்.

18. கிருட்டிணமூர்த்திக்கு அறிவன் என்னும் சான்றோர்குலப் பெயரும் வழங்கியிருக்கிறது.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், உத்தியோக பருவம்,
கிருட்டிணன்றூது சருக்கம்,
181-வது கவி.

மல்லர்பப்பரவர்தம்மை மற்றதினிரட்டிவைத்தான்
வில்லுடைவீரர்தம்மை வேறதினிரட்டிவைத்தான்
பல்படைவல்லோர்தம்மைப் பதின்மடங்கதனில்வைத்தா
னல்லிலோர்கடிகைதன்னி லறிவனையழைக்கவென்றே.

இதன் கருத்து.

துரியோதனன் கிருட்டிணமூர்த்தியைப் பிடித்து நிலவறையினுள் வைக்கும்படியாக, அன்றிரவு ஒரு நாழிகைப்பொழுதுக்குள்ளாக மற்போரில் வல்லவர்களாகிய பப்பரர்களை இராட்சதர்களுக்கு இரண்டு மடங்காக அந்த அறைக்குள் வைத்தான்; வில் வீரர்களை அதற்கும் இரண்டு மடங்காக வைத்தான்; பற்பல ஆயுத வித்தைகளிலும் சிறந்த சூரர்களை அதனில் பத்து மடங்காக் அங்கேயிருத்தினான் என்பதாம்.

இக்கவியில் அறிவுடையோன், சான்றோன் என்று பொருள்படும் அறிவன் எனும் பெயர் வழங்கியி[illegible] கிருட்டிணமூர்த்தி சான் றோனென்றறியலாம். இப்[illegible] தகன் என்னும் பெயர்

கிருட்டிணமூர்த்திக்கு வழங்கினதாக ஓர் திருஷ்டாந்தம் முன்னமே பார்த்தோம்.

கூர்மபுராணம், கண்ணன் மணம்புணர்ந்த வத்தியாயம்,
110-வது கவி.

செய்த்திருள்கனிந்தகூந்த னேர்வழக்கறுக்குஞ்செவ்வாய்ச்
சத்தியபான்மையம்மென் றடமுலைநெருழுங்கப்புல்லி
நத்தமும்பகலும்விள்ளா நறைகமழ்துளவத்தண்டார்
வித்தகனுறையுகாவிற் புகுந்தமைவிளம்பலுற்றும்.

இக்கவியிலும் கிருட்டிணமூர்த்தியானவர் வித்தகர் என்னும் அறிவுடையோராகிய சான்றோர் குலத்தவரெனப்பார்க்கிறோம்.

ஆகையால் கிருட்டிணமூர்த்தியானவர் சான்றோர் குலத்திலுதவரென்றறிக.

19. கிருட்டிணமூர்த்தி அமுதகுலத்தவரென்றும் சான்றோர் குலத்தவரென்றும், முக்கந்தர் குலத்தவரென்றும் பார்த்தோம். இனிமேல் அவர் கிராமணிகள் குலத்தவரென்றும் நாடாக்கள் குலத்தவரென்றும் பார்ப்போம்.

இவருக்குக்கிராமணி என்னும் பட்டப்பெயர் சமஸ்கிருத நூல்களில் வழங்கியிருக்கிறது. உதாரணமாக பாகவத புராணம், தசம்ஸ்கந்கம், கிருட்டிணன் கஞ்சனுடைய பட்டத்துயானையைச்சங்கரித்த சரிதம், 8-வது பத்தியத்தில் கண்ட சுலோகத்திலே அவரைக் கோபால கிராமணி என்று கூறியிருக்கிறது. அச்சுலோகத்தின் மொழிபெயர்ப்பு:

"கஞ்சனுடைய குவலயம் என்னும் பட்டத்து யானையைக்கீழ்தள்ளிக்காலாலுதைத்து அதன் கொம்பைப் பிடுங்கி அதைக்குத்திக்கொன்றவர் யாரென்றால் கோபாலகிராமணி என்னும் கிருஷ்ணமூர்த்தி"

என்று கூறியிருப்பதால் கிருட்டிணமூர்த்திக்குக் கிராமணி என்னும் சான்றோர்குலப்பட்டப்பெயரும் வழங்கியிருக்கிறதென்றறிகிறோம்.

மகாபாரதம், துரோணபருவம், 15-ம் போர்ச்சருக்கம்,
கண்ணன் றுதி விருத்தம்,

சித்தசித்திலங்கினின்று செப்புகின்றமுவகை
தத்துவத்தின்முடிவுகண்ட சதுர்மறைப்புரோகிதன்
சொத்தவிழ்த்தசோலைமன்றல் கூரனுடனென்கிலே
வைத்தழுந்த்நாடனன்றி வானநாடர்முதல்வர்யார்.

இக்கவியில் கிருட்டிணமூர்த்திக்கு முத்திநாடன். எனும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் நாடானென்று பொருள்.

பெருந்தேவனார் பாரதவெண்பா, உத்தியோக பருவம்,
31-வது கவி.

"முத்தன்மிருக்க வி[illegible]யானர்காளல்
சோத்தரு[illegible] இன்றும் கொற்றவனே—மாத்தன்
[illegible] செய்யலைக்குநாடா
[illegible]தோ.

இக்கவியில் கிருட்டிணமூர்த்தியின் தமையனான பலராமருக்கு நாடான் என்னும் பட்டப்பெயர் வழங்கியிருக்கிறது.

சந்திரகுலத்திலுதித்த யாதவர்களாகிய கிருட்டிணமூர்த்திக்கும் பலராமருக்கும் நாடன், நாடான் என்னும் சான்றோர்குலப்பட்டப்பெயர்கள் வழங்கியதுபோல அதே குலத்திலுதித்த பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் இப்பட்டப்பெயர் வழங்கியிருப்பதற்கு சில திருஷ்டாந்தம் கூறுவோம்.

பெருந்தேவனார் பாரதம், உத்தியோகபருவம்,

208-வது கவி.

* * *

கங்கைமகனு மம்பிகைச் சிறுவனு
மங்கநாடனு மடுபோர் வீரனுந்
துரோணனு மகனுந் தோன்றன் மாமனுஞ்
சிந்துநாடனுந் திரிகர்த்த ராசனுங்
குருகுலக்கேண்மை கொண்டோர் கூட்டமு
முயர்குலத்தரசர் வந்தோரீட்டமும்

* * *

இக்கவியில் பஞ்சபாண்டவர்களுக்குமுன் குந்திதேவியிடம் பிறந்த கன்னனுக்கு அங்கநாடன் எனும் பெயர் வழங்கியிருக்கிறது அதற்கு அங்கதேசத்து நாடான் என்று பொருள். இதே பிரகாரம் தற்காலத்திலும் சான்றோர் குலத்தவர்கள் ஒருவரைப்பற்றியொருவர் கமுதிநாடான் என்றும், சிவகாசி நாடான் என்றும், குட்டத்து நாடான் என்றும் பேசுகிற வழக்கம் இன்னுமிருக்கிறது.

46-வது கவி.

மூதாதைதன்னைமுகநோக்கித் தான்முனிந்து
போதாருஞ்சோலைப் புனநாடன் — னீதாலும்
வாயதியாய்மன்னர்வலி யதியாய்வன்செருவிற்
போயதியா யென்றே புகன்று.

இக்கவியிலும் கன்னனுக்குப்புனல்நாடன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. அதற்கு நதிவளம் பெற்ற பூமியையுடைய நாடான் என்று பொருள்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம், ஆரணியபருவம்,
நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக்கம்,

24-வது கவி.

மங்கையர்வாய்மைகேட்டு மணிக்குறுமுறுவல்செய்து
கங்கையம்பழனநாடன் கடிமதில்வாயில்செல்ல
வங்கவன் றன்னைக்கண்ட வணிகழலமரரெல்லா
மங்குல்வாகனனென்றெண்ணிக் கதுமெனவந்துசேர்க்கார்.

இக்கவியில் பாண்டவர்களிலொருவனாகிய விசயன் என்னும் அருச்சுனனுக்குக் 'கங்கையம்பழனநாடன்' [illegible] வழங்கியிருக்கிறது.

அதற்குக்கங்காநதிப் பாய்ச்சலான கழனிகளையுடைய நாடானென்று பொருள்.

பெருந்தேவனார் பாரதம், உத்தியோக பருவம்,

165-வது கவி.

ஓட்டியகாலங்கழிந்தன காண்காவலன்ற
னெட்டியவாட்ட மொழிந்திரேற்—கட்ட
கரும்பழிசாறலை கமழ்நாடாகேட்டாற்
பெரும்பழிதானாகாதோ பேச.

169-வது கவி.

உரிமையிருவர்க்கு மொக்குநாடொன்றை
யிருவருடனாண்டாருமில்லை—செருவில
வலியார்வலியராய் மண்ணாள்வதென்று
னலியார்நன்றாட னுடன்று.

இவ்விரண்டு கவிகளிலும் துரியோதனனுக்கு முறையே நாடான், நல்நாடன் என்னும் பெயர்கள் வழங்கியிருக்கின்றன. இவற்றில் நல் நாடன் என்றால் நல்லவர்குல நாடான், சான்றோர்குலநாடான் என்று பொருள்.

இத்தன்மையாக கிருட்டிணமூர்த்திக்கும் அவருடைய மைத்துனர்களாகிய பாண்டவர்களுக்கும் அவர்களுடைய தாயாதிகளாகிய துரியோதனாதிகளுக்கும் நாடன், நாடான் என்னும் சான்றோர்குலப்பட்டப்பெயர்கள் வழங்குவதால் அமுதகுலச்சான்றோனாகிய கிருட்டிணமூர்த்தி நாடாக்கள் குலத்தவரென்றுமறிக.

20. கோபால கிராமணி என்றும், மூத்திநாடன் என்றும் பெயர் தரித்த சான்றோனாகிய கிருட்டிணமூர்த்தியானவர், இந்தியாவின் வடபாகத்திலிருந்த யாதவக்குலத்தவர் என்று பார்த்தோம். அந்தயாதவக்குலத்தவர்களாகிய சான்றோர் வடநாட்டில் மாத்திரமல்ல, தென்னாட்டிலுமிருந்தார்கள். பூர்வத்தில் விதர்ப்பநாடென்றும் தற்காலத்தில் பீரார் தேசமென்றும் சொல்லப்படும் நாட்டுக்கருகில் தற்காலத்தில் தவுல்தாபாத் என்று பெயர் வழங்கும் பட்டணமொன்றிருக்கிறது. தவுல்தாபாத் என்னும் பெயரானது மகமதியரால் கொடுக்கப்பட்ட பெயர். இந்து ராஜாக்களரசாண்ட காலத்தில் அதற்கு தேவகிரி என்று பெயர். அப்பட்டணத்தில் யாதவக்குலத்தரசர்கள் மகமதியருக்கு முன்னரட்டாசாண்டார்களென்று அங்கிலேயர் கண்டெழுதி வைத்திருக்கிறார்கள். விட்டுணுவினவதாரமாகிய கிருட்டிணமூர்த்தியின் மரபினரான துபற்றி விட்டுணுவுக்கு உவணகேதனன், கருடகேதனன் என்னும் பெயர்கள் பூர்வநூல்களில் வழங்குகிற பிரகாரம், தேவகிரியிலிருந்த யாதவர்களுக்கும் கருடக்கொடிவேந்தர் என்னும் பெயர் வழங்கியதாகவும் தெரிகிறது. இது விஷயமாய்ச்சென்னை [illegible] ராசாட்சிப்புஸ்தகம், I-வது வாலியூம், 140-வது [illegible] சொல்லியிருக்கும் விஷயங்களை இவ் விடம் பெயர்த்தெழு [illegible]

Extracts from page 140 of the Manual of the Administration of the Madras Presidency, Volume I.

"The Jadows or *Yadavas* were a tribe allied to the Hoysala Ballaulas who established themselves at Devagherry, afterwards called by the Mahomedans Dowlatabad. Their *crest was a golden kite.*" × × ×

"Sketch History of the Yadavas of Devagherry.—On the downfall of the Kalachooryas, the southern parts of their dominions fell into the hands of the Hoysala Ballaulas, while the northern parts were appropriated by the Yadavas of Devagherry, who were probably of the same original stock as the Hoysalas. *Their banner bore the device of a golden Garooda.* The first of the line was Singhana, who is mentioned as having obtained successes against the kings of the Carnatic (probably the Hoysala territory), Pandya and Goorjara. He was succeeded by his son Malloogy, about whom nothing is known. He in turn was succeeded by Bhillama, who reigned from A.D. 1187 till 1191. During Bhillama's reign his son Jeitoogy was defeated by the Hoysala king Ballaula II in a battle at Lakkoondy in Dharwar District. He was succeeded by Jeitoogy, who reigned from 1191 till 1209. Vijayapoora or Beejapore was then the capital. Jeitoogy killed the king of Tricalinga (the Chola king or Viceroy of Telingana), and seized his kingdom. He was succeeded by Singhana II, who reigned from 1209 till 1247. In this reign Devagherry is first mentioned as the capital. Singhana II conquered the Telingana, Kalachoorya, and Andhra kings. Thirty-eight inscriptions of his reign are extant, which prove that the kingdom had extended in size. Singhana's son Jeitoogy died in his life time, and Singhana was succeeded by his grandson Krishna, who reigned from 1247 till 1260. This king's Viceroy in the southern provinces was the son of a general who is said to have conquered the Rattas, the Cadambas of the Concan, the Pandyas of Gooty, and the Hoysalas, and to have set up pillars of victory near the Cauvery. The next king Mahadeva, Krishna's younger brother, usurped the kingdom, He died in 1271 and his son Amana was ousted by Ramchendra, son of Krishna, who reigned from 1271 till 1309. He was successful in a war against the Hoysalas. In A.D. [illegible] he was attacked by,

the Mahomedans under Allah-ood-deen, nephew of Jellal-ood-deen of Delhi and was forced to make terms with the invaders. In 1306 Ramchendra having refused to pay tribute, Allah-ood-deen who had meanwhile succeeded to the throne of Delhi, sent an army against him under Malik Caufoor. Ramchendra was forced to submit, and was sent to Delhi, but was honourably treated, and finally restored to his kingdom. He was succeeded by his son Shuncara, who reigned from 1309 till 1312. This king refused to pay tribute, whereupon in 1312 Malik Caufoor marched against him, seized him and put him to death. Malik Caufoor then ravaged the Deccan and took up his residence at Devagherry, but finally returned to Delhi. Ramchendra's son-in-law Haripaula took advantage of the absence of Malik Caufoor to stir up the Deccan, and succeeded in expelling a number of the Mahomedan garrisons, and regaining the former territories of Devagherry. In 1318 Moobaurak, then on the throne of Delhi, marched in person against Haripaula, who was captured, flayed alive, and decapitated, and in him the dynasty came to an end."

இப்படியாகக்கருடக்கொடி வேந்தரென்னும் தேவகிரி யாதவராஜாக்களாகிய சான்றூர் கி. பி. 1318-வரை வரையிலும் அரசாட்சிசெய்துவந்திருக்கிறூர்கள் என்பதாகச்சரித்திரங்கள் கூறுகின்றன. இதேபிரகாரம் மைசூர் நாட்டிலுள்ள துவாரசமுத்திரம் என்னும் பட்டணத்தில் யாதவக்குலத்தரசர்கள் ராஜ்யபாரம் செய்தார்களென்றும், மாணியகேதயாதவர்கள் என்றும், இராட்சத கூட்டத்தார் என்றும் பெயர்பெற்ற யாதவர்கள் பம்பாய் ராஜதானியிலுள்ள கன்னடஜில்லாக்களில் ராஜ்யபாரஞ் செய்தார்கள் என்றும் சரித்திரங்களாலறிகிறோம்.

21. இந்த யாதவகுலத்தைச்சேர்ந்த பிரிவொன்று நாளதுவரை மைசூர் மாகாணத்தில் ராஜ்யபாரம் நடத்திவருகிறது. அவர்கள் தான் மைசூரரசரென்னும் உடையார்குலம். உடையார் என்னப்பட்ட மைசூரரசர்கள் யாதவர் என்பதாக Robert Sewell துரை யியற்றிய Lists of Inscriptions and Sketch of the Dynasties of Southern India என்னும் புஸ்தகத்தின் 194-வது பக்கத்தில் பார்க்கிறோம்.

* The account given by tradition of the origin of the family of the Rajas of Maisur is that two young brothers of the *Yadava* tribe, dependants at the Court of the Vijayanagar kings, having left that court on an adventurous expedition to the south, rescued from an enforced marriage with the chief of Karugahalli in Maisur, whom they slew, the daughter of the

chief of Hadanad. The elder of them, by name Vijaya, at once married the rescued damsel and thus became *lord* (or *Udaiyar*) of Hadanad and Karugahalli."

மைசூர் ராஜாக்களின் குலத்தைப்பற்றிய ஐதீகமென்னவெனில் விஜய நகரம் சமஸ்தானத்திலிருந்த யாதவக்குலத்தவர்களாகிய சகோதரரிருவர் விஜயநகரத்தை விட்டுப்புறப்பட்டுத் தென்திசை நோக்கிச்செல்லுகையில், அடநாட்டரசனின் குமாரத்தியை மைசூர் நாட்டிலுள்ள காருகஅள்ளி அரசன், அவள் விருப்பத்துக்கு விரோதமாய்ப்பாணிக்கிரணஞ் செய்ய முயன்றதால், அச்சகோதரரிருவரும் காருகஅள்ளி அரசனைக் கொன்று, அவர்களில் மூத்தவனாகிய விசயன் அக்கன்னியை மணந்து, அடநாட்டையும் காருகஅள்ளியையும் உடையவனானபடியால்; அதாவது, அவ்விரண்டு நாட்டுக்கும் அரசனானபடியால், அக்குலத்தரசராகிய மைசூர் ராஜாக்களுக்கு உடையார் என்னும் பட்டப்பெயருண்டாயிற்றென்பதாம்.

இவ்வாதாரத்தில் மைசூரரசர்கள் யாதவர் என்னும் அமுதகுலத்தவரென்றும், நாட்டுக்கதிபதிகளான (நாடாக்களான) காரணத்தால் உடையார் என்னும் பட்டப்பெயர் தரித்துக்கொண்டார்களென்றும் பார்க்கிறோம்.

உடையார் என்னும் பெயரானது சான்றோர் என்னும் பெயருடன் ஒருபொருட்கொண்ட மொழி என்பதாகச்சூத்திரவேதமாகிய நாலடியாரில் கண்டிருக்கிறது. அந்நூலின் 16-வது அதிகாரம் மேன்மக்கள் என்னும் சான்றோருடைய தன்மையைக்கூறுகிறது. அவ்வதிகாரத்திலுள்ள பத்துக்கவிகளில் முதல்மூன்று கவிகளிலும் மேன்மக்களுக்குச் சான்றோர் என்னும் பெயரும், 4-வது கவியில் சான்றவர் என்னும் பெயரும், 5-வது கவியில் நல்லார் என்னும் பெயரும், 6-வது கவியில் குடிப்பிறந்தார் என்னும் பெயரும், 7-வது, 8-வது கவிகளில் வடுவறுகாட்சியார் என்னும் பெயரும், 9-வது கவியில் விழுமியோர் என்னும் பெயரும், 10-வது கவியில் உடையார் என்னும் பெயரும், ஒருபொருட்கொண்ட மொழிகளாக உபயோகிக்கப்பட்டிருப்பதால், உடையாரென்பதும் சான்றோர்குலப் பெயர்களிலொன்றென்று அறியலாம். அக்கவி வருமாறு:—

நாலடியார், மேன்மக்கள்,

10-வது கவி.

உடையாரிவரென் றொருதலையாப்பற்றிக்
கடையாயார்பின்சென் றுவாழ்வ—ருடைய
பிலந்தலைப்பட்டது போலாதேநல்ல
குலந்தலைப்பட்ட விடத்து.

உடையார் என்னும் சான்றோரைச் சார்ந்து நிற்பவர்கள் எப்போதும் வாழ்வடைவார்கள் என்பது தாற்பரியம். இக்கவியில் உடையாரென்னப்பட்டவர்கள் சான்றோர் என்று சொல்லப்படியால் அவர்களுக்கு நல்ல குலம் என்னும் பெயருஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

நல்ல குலம்=நல்லவர் குலம்
=சான்றோர் குலம்

என்று பொருள். நாம் மேலே 389, 390-வது பக்கங்களில் குலவிபரம் கூறியிருக்கும் அகமுடையார் என்னும் சான்றோருக்கும் உடையார் என்னும் பட்டப்பெயர் நாளது வரையிலும் வழங்கி வருகிறது.

——(:o:)——

XVIII-வது அத்தியாயம்

பிரமன் குலவிளக்கம்.

1. சர்வம் பிரமம் மயம், பிரமன். 2. பிரசாபதி. 3. கஞ்சன். முருகுமலரயன். 4. முண்டகன். 5. அமரன். 6. சான்றான்.

சர்வம் பிரமம் மயம் என்பதாகப்பரதகண்டத்தில் வழங்கும் பழமொழியிலே வேதமாதி நூல்களுணர்த்தும் உண்மைப் பொருள் அடங்கியிருக்கிறது. இப்பழமொழியின் புதைபொருளையறியாமல் கோடானகோடி இந்துக்கள் தங்கள் வாழ் நாளை வீண்செலவிட்டுப்பாகதியை யிழந்துவருகிறார்கள். ஆகாய விரிவிலே தோன்றும் சூரியசந்திர நட்சத்திரங்களும், கடலில் சஞ்சரிக்கும் சகலவித நீர் வாழும் ஜந்துக்களும், பூமியில் காணப்படும் புல் பூண்டு விருட்ச வர்க்கங்களும், பறக்கு[illegible] நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், [illegible] பிராணிகளும், [illegible] லோகங்களும், மற்றுமுள்ள

சகல வஸ்துக்களும் கடவுளர்களென்றெண்ணி, சர்வம் பிரமம் மயம் என்பதாக அவைகளை வணங்கி வருகிறார்கள். காணப்படும் வஸ்துக்களெல்லாம் தெய்வமானால், தெய்வமல்லாத வஸ்து தான் எது?. எல்லாம் தெய்வமானால், தெய்வந்தானே தெய்வத்தை வணங்குகிறதின் பிரயோசனமென்ன? இதுவல்ல இப்பழமொழியின் தாற்பரியம்.

சர்வம் பிரமம் மயம் என்னும் பழமொழியில் வந்திருக்கிற பிரமம் என்னும் பதத்துக்குக்கடவுளென்று பொருளல்ல. பிரமம் என்பதற்குப் பிரமை என்பது மூலபதம். அம்மூலபதத்துக்குச்சதுரகராதியாசிரியர் இரண்டு தாற்பரியங் கூறுகிறார்.

பிரமை = 1. அறிவு
2. மயக்கம்

மயக்கமானது மது சம்பந்தமாயுண்டாகிறது. ஆகையால் வேதமாதி நூல்கள் கூறுவதெல்லாம் பிரம்மம் மயம் என்றால், அமுதகுலத்தவர்களாகிய அறிவுடையோர் என்னும் சான்றோரின் மேன்மையேயன்றி வேறல்லவென்பதே யதார்த்த தாற்பரியம்.

பிரமை என்னும் பதத்துக்குச்சதுரகராதியாசிரியர் கூறுகிற மேற்கண்ட தாற்பரியங்களால், பிரமன் என்னும் பெயருக்கு

1. அறிவுடையோன், அதாவது, சான்றோன்;
2. மயக்கமுண்டு பண்ணுகிற அமுதகுலத்தவன்

என்பதாக இரண்டு பொருள் உண்டென்று பிரத்தியக்ஷமாகும். ஆகையால் பிரமனுக்கு வழங்குகிற பெயரினாலே, பிரமன் அமுதகுலச்சான்றோனென்றறிகிறோம்.

2. பிரமன் அமுதகுலத்தவரானபடியால் அவருக்குப் பிரஜாபதி என்னும் பெயர்.

"In this world, when it was destitute of brightness and light, and enveloped all round in total darkness, there came into being, as the primal cause of creation, a mighty egg, the one inexhaustible seed of all created beings. It is called Mahadivya, and was formed at the beginning of the yuga, in which, we are told, was the true light Brahma, the eternal one, the wonderful and inconceivable being present alike in all places; the invisible and subtile cause, whose nature partaketh of entity and non-entity. From this egg came the lord Pitamaha, Brahma, the only one *Prajapati*."

(See: I Adi Parva of the Mahabharata translated by Protap Chundra Roy).

மகாபாரதத்தில் பிரமனுக்குப்பிரசாபதி என்னும் பெயர் வழங்கியிருக்கிறதுபோல, சதுரகராதியாசி[illegible] என்பது. பிரமன்

பெயர்களில் ஒன்றென்பதாகப்பெயரகாதியில் கூறுகிறார். பிரமனுக்கு வழங்குகிற இப்பெயருக்கு

அமுதகுலத்திலுதித்த அரசன்

என்பது மூலார்த்தம். பிரசம்-பனையமுது, பதி-அரசன். இப்பெயராலும் பிரமன் அமுதகுலத்தவனென்றறியலாம்.

3. பிரமன் அமுதகுலத்தவரானபடியால் அவருக்குக் கஞ்சன் என்னும் பெயர். இப்பெயரும் பிரசாபதி என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்ட மொழி. கஞ்சா-பனையமுது (சதுரகராதி). திவாகரத்திலும் கஞ்சா என்பதற்குப்பனையமுதென்றே கண்டிருக்கிறது:—

“மாவிழுண்டகம் சாவி மாரி
பாடலி மௌலி சிக்கர் ஞாளி
யாணி குந்தி மதுகாஞ் சவிகை
ஆசவமாம்பல் அம்மியம்பதை
மேதை க்ஞ்சா விருணி சலோபி
எனும்வகையுக்கட் பெயரென வறைவர்.”

ஆகையால் கஞ்சாவென்றால் பனையமுதைக்குறிக்கிறதென்றும், அப்பதத்திலிருந்துண்டான கஞ்சன் என்னும் பெயருக்கு அமுதகுலத்தவனென்று பொருள் என்றும் அறிகிறோம்.

பிரமனுக்குக்கஞ்சன் என்னும் பெயர் உண்டென்பதற்கு மேற்கோள் கூறுவோம்:—

அருணாசலபுராணம், திருமலைச்சருக்கம்,
20-வது கவி.

எஞ்சதவிலாவிறைவ னென்பதனையென்பேர்
கஞ்சனெனுமைந்தனை மறந்திடுகெரத்தா
லஞ்சலில்படைப்பொழியி லெப்படியளிப்பாய்
செஞ்சுவரிலாதெழுது சித்திரமுமுண்டோ.

பிரமன் தன் தகப்பனாகிய விட்டுணுவைப்பார்த்து குறைவில்லாத சகலத்துக்கும் நானே காத்தாவென்பதையும், என் பிள்ளை தான் கஞ்சன் எனப்பெயர்கொண்ட பிரமன் என்பதையும் மறந்துவிடு, நான் உலகைப்படைக்காவிட்டால் நீ எப்படி காப்பாற்றுவாய்? சுவரில்லாமலெழுதுகிற சித்திரமுமுண்டோ? என்றார் என்பது பொருள். அமுதகுலச்சான்றோனாகிய விட்டுணுவின் குமாரனுக்குக் கஞ்சன் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால், கஞ்சன் என்னும் பெயருக்கு அமுதகுலத்தவன் என்னும் அருத்தமே பொருந்தியது.

சான்றோனாகிய சிவபெருமான் பனம்பூவைத்தமக்கு இருப்பிடமாகக்கொண்டவர் என்பதாக அருணாசல புராணிகர் கூறியதை 208, 209-வது பக்கங்களில் விரித்துரைத்தோம். அதே புராணிகர் அதே பொருட்கொண்ட [illegible] மனுக்கும் வழங்கியிருக்கிறார்.

அருணாசலபுராணம், திருவவதாரச்சருக்கம்.
71-வது கவி.

குலவுமாலனுமிப்போற்றக் குமுதவாய்மலர்ந்தான்கஞ்ச
மலரோன்வணங்கச்சற்றே மணிமுடியசைத்தான்விண்ணோர்
தலைவனுமெதிர்நின்றேத்தத் தனிநகைபுரிந்தான்றேவர்
பலரும்வந் திறைஞ்சியேத்த வவர்க்கெலாம்பார்வையீந்தான்.

இதன் கருத்து.

விட்டுணு வந்து தம்மை வணங்க சிவபெருமான் வாருமென்றுபசரித்தார்; பிரமன் வந்து வணங்க திருமுடியையசைத்தார்; தேவேந்திரன் நமஸ்கரிக்க புன்சிரிப்புக்கொண்டார்; மற்றும் தேவர்கள் வந்தனஞ்செய்ய அருட்கண்ணால் பார்த்தார் என்பதாம்.

இக்கவியில் பிரமனுக்குக் கஞ்சமலரினன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இதற்குப் பனம்பூவாகிய அலவரையையே தமக்கு இருப்பிடமாகக்கொண்டவர், அதாவது, அமுதமுற்பத்தி செய்வதில் விடாமுயற்சி கொண்டவர் என்பதே சரியான தாற்பரியம். எப்படியெனில் திருவவதாரச்சருக்கத்தில் பிரமனைக்கஞ்சமலரினன் என்று கூறிய புராணிகர், இடப்பாகம் பெற்ற சருக்கத்தில் அதே பிரமனை முருகுமலரயன் என்கிறார்.

அருணாசலபுராணம், இடப்பாகம் பெற்ற சருக்கம்,
58-வது கவி.

முருகுமலரயன்றடத்திற்படிந்துவெண்ணீ றணிந்துசெங்கைமுடியிற்கூப்பி
யருகுவருங்கோதமன்சொற்படிதொழுதுட் புகுந்துகண்ணாரமுதைக்கண்ணுற்
பருகிநிலமுறவிழுந் துபணிந்தெழுந்து பரவசமாய்ப்பாடியாடி
யுருகியுவந்தழுதுயிர்த்துவலம்புரிந்து தனதுகுறையுரைத்துப்போற்றி.

இக்கவியில் பிரமனுக்கு வழங்குகிற முருகுமலரயன் என்னும் பெயரும் முந்தின கவியில் வழங்கிய கஞ்சமலரினன் என்னும் பெயரும் ஒரு பொருட்கொண்ட மொழிகள். முருகுமலர் என்றால் பனையமுதை (முருகு) க்கொடுக்கும் மலராகிய பனம்பூ. கஞ்சமலர் என்றாலும் பனையமுதை (கஞ்சா) க்கொடுக்கும் மலராகிய பனம்பூ. கஞ்சாவென்றால் பனையமுதென்பதற்கு மேற்கோள் கூறினோம். முருகு என்றாலும் பனையமுதையே குறிக்கிறதென்பதற்கு ஷை திவாகரத்திலிருந்தே மேற்கோள் கூறுவாம்:—

"இக்கு நனைதேன் முருகு தொப்பி
நறவு பிரசம் தணியல் சுரைபடு
வேரிமட்டு தேறல் சாறு
பானம் வடிபிழி மதுஅளி தொண்டி
ஆன அரிட்டமும் சாதியும் கள்ளாம்."

ஆகையால் பிரமனுக்கு வழங்கிய கஞ்சன், கஞ்சமலரினன், முருகுமலரயன் என்னும் பெயர்கள் அவர் அமுதகுலத்தவரென்று தெரிவிக்கும் பெயர்களென்றறிக.

4. மேலே நாம் கூறிய திவாகர சூத்திரங்களிலொன்றில் முண்டகம் என்றாலும் பனையமுதைக்குறிக்கிறதென்று பார்த்தோம். இப்பத சம்பந்தமாயும் பிரமனுக்கு முண்டகன், முண்டகத்தவன், முண்டகாசனன், முண்டகமலரோன் என்னும் பெயர்கள் பலவிடங்களிலும் வழங்கிவந்திருக்கின்றன. அவைகளும் அவருடைய குலத்தை விளக்கிக்காட்டும் பெயர்கள் தான்.

திருவருணைத்தனிவெண்பா மாலை,

18-வது கவி.

அடைக்கலமாச்சோணகிரி யப்பனடிசார்ந்தோம்
கடைப்பிறவிமுந்நீர்கடந்தோம்—படைக்குமந்த
முண்டகனையும்மதியோம் முரிக்கடாவேறும்
கண்டகனையும்மதியோங் காண்.

இக்கவியில் பிரமனுக்கு முண்டகன் என்னும் பெயர் வழங்கியிருப்பதானது பிரமன் என்னும் பெயரின் மூலதாற்பரியத்துக்குப்பொருந்தியதாய் அமுதகுலத்தவனையே குறிக்கிறதென்றறிக.

அருணாசலபுராணம், திருமலைச்சருக்கம்,

65-வது கவி.

முண்டகவகக்கையின் மொழிந்தவுரைநன்றென
மொழிந்துநகை கொண்டவளவே
அண்டபகிரண்டமுகடிங்கின வொடுங்கின
வடங்கின விடுஞ்சுடரெலாம்
கொண்டலு மறைந்தன இறந்தன விறைத்தன
குறைந்தன நிறைந்த[illegible]வா
வெண்டிசை இரிந்தன எரிந்தன பொரிந்தன
வெரிந்தன விரிந்த தருவே.

சிவன் பிரமனைப்பார்த்து முண்டக! அதாவது பிரமனே உன் அகங்கார மொழி நன்றாயிருக்கிறதென்று நகைத்தார் என்று கூறிய இக்கவியிலும் பிரமனுக்கு முண்டகன் என்னும் குலவிளக்கப்பெயர் வழங்கியிருக்கிறது.

சிதம்பரம் குரு நமச்சிவாய சுவாமிகள்
அருளிச்செய்த அண்ணாமலை வெண்பா,

17-வது கவி.

முக்கோணமாக முளைத்தமலை முண்டகன்மா
லக்கோடுகாகமணிந்தமலை—திக்கோடு
அன்னிமலைதன்னைத் துதிக்குமடியாருளத்தின்
மன்னுமலை யண்ணாமலை.

இக்கவியிலும் பிரமனுக்கு முண்டகன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், திருமணப்படலம்,
177-வது கவி.

விண்டலத்தவருளாதி வேதியன்பாதநீர்த்த
முண்டகத்தவனுமாலு முனிவரும்புரந்தராதி
யண்டருநந்திதேவு மடுகணத்தவருமேனைத்
தொண்டரும்புறம்புமுள்ளு நனைத்தனர்சுத்திசெய்தார்.

இக்கவியில் பிரமனுக்கு அமுதகுலத்தவன் என்று பொருள்படும் முண்டகத்தவன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

சான்றோர் புராணம், காருகன் வதைப்படலம்,
180-வது கவி.

முண்டகத்தன்வாளிவிஞ்சை முனிமகன்[illegible]டுத்தனன்
முண்டகத்தன்வாளியான் முடித்தனன்நிசாசரன்
விண்டுவத்திரந்தொடுத்து விட்டனனற்சான்றவன்
விண்டுவத்திரத்தினால் விலக்கினன்றயித்தியன்.

கரந்தமாரிஷியென்னப்பட்ட சூராபாண்டியன் குமாரனாகிய திலகபாண்டியன், அக்கினியக்கன் என்னும் அசுரனோடு சண்டை புரிகையில்சான்றோனாகிய திலகன் தான் பிரமனிடத்தில் பெற்ற அஸ்திரத்தை அசுரன்மேல் ஏவ, அசுரன் தன்னிடத்திலிருந்த பிரமாஸ்திரத்தால் தடுத்தானென்று பொருள்.

இக்கவியில் பிரமனுக்கு முண்டகத்தன், அதாவது, அமுதகுலத்தவன் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது.

பிரமனுக்கு முண்டகத்தன் என்னும் குலவிளக்கப்பெயர் வழங்கியிருப்பதுபோல் சரசுவதி தேவியாருக்கும் முண்டகத்தாள் என்னும் குலவிளக்கப்பெயர் வழங்கிவந்திருக்கிறது.

திருவிளையாடற் புராணம், பாயிரம்,
16-வது கவி.
சரசுவதியம்மை.

பழுதகன்றநால்வகைச்சொன்மலரெடுத்துப் பத்திபடப்பரப்பித்திக்கு
முழுதகன்றுமணந்துசுவையொழுகியணி பெறமுக்கண்மூர்த்திதாளிற்
றொழுதகன்றவன்பெனுநாரொடுத்தலங்கல் சூட்டவர்க்கரும்புந்தேனுங்
கொழுதகன்றவெண்டோட்டுமுண்டகத்தாளடிமுடிமேற்கொ[illegible]வாழ்வாம்

இக்கவியில் சரசுவதி தேவிக்கு வழங்கிய முண்டகத்தாள் என்னும் பெயருக்கு அமுதகுலத்தவள், சான்றாள் என்று பொருள்.

பிரமனுக்கு முண்டகாசனன் என்னும் பெயர் வழங்கியதற்கும் திருஷ்டாந்தம் கூறுவோம்.

திருவிளையாடற் புராணம், வருணனுக்குச்சிவலோகங் காட்டியபடலம்,
39-வது கவி.

முண்டகாசனன்பதமிது மூவுலகளந்த
தண்டுழாயவன்புரமிது தனிமுதல்வடிவக்
கொண்டவீருசாருத்திரர் கோப்பதியின்ன
வெண்டிசைமுனைவ[illegible]ன்.

மகாபாரதம், மகப்பிரதானிக பர்வம்,
கண்ணன்றுதி விருத்தம்,

அண்டமுட்டையி னகத்திலும்புறத்தினுமாகிக்
கண்டவண்டர்கள்கண்ணிலு நெஞ்சினுங்கலந்தோன்
பண்டைவேதங்கள்பதிச்சியு மறிகொளுப்பழையோன்
முண்டகாசனனுதியா மூவர்கண்முதல்வன்,

இவ்விரண்டு கவிகளிலும் பிரமனுக்கு வழங்கிய முண்டகாசனன் என்னும் பெயருக்குப்பனையமுதிருக்குமிடத்திலே வீற்றிருப்பவன், அமுதில் பிரியங்கொண்டவன், அமுதகுலத்தவன் என்று பொருள்.

முண்டகமலர் என்பது முருகுமலர், கஞ்சமலர் என்பவற்றைப் போலப்பனைப்பூவைக்குறிக்கும் பெயர்.

திருவிளையாடற் புராணம், விறகு விற்றபடலம்,
24-வது கவி.

வண்டலைகொன்றையான் முன்வர்துங்யாரையென்றான்
பண்டருவிபஞ்சிபாணன் பத்திரனடிமையென்றான்
முண்டகமலரோன்மாயோன் புரந்தரன்முதன்மற்றேனை
யண்டருந்தன்குற்றேவலடிமையாக்கொண்டவம்மான்.

இக்கவியில் பிரமனுக்கு வழங்குகிற முண்டகமலரோன் என்னும் பெயருக்குப்பனம்பூவை இருப்பிடமாகக்கொண்டவன, அமுதகுலத்தவன் என்று பொருள்.

5. பிரமன் அமுதகுலத்தவரென்று காட்டும்படியாக அவருக்கு அமரன் எனும் பெயரும் வழங்கியிருக்கிறதெனப்பார்க்கிறோம்.

கூர்மபுராணம், கண்ணனவதரித்தவத்தியாயம்,
7-வது கவி.

முருகவிழ்கமலப்புத்தேள் முதலியவமரர்யாரு
மிருநிலத்தரசராகி யெய்துகயாமுர்தாய
பொருவருக்கடவுட்கற்பிற் றேவகிவயிற்றிற்பொற்பா
ரொருகுலமுழையொருவன் செங்கட் கண்ணனுதித் தனன்றே.

இக்கவியில் பிரமன் முதலான தேவர்களை 'முருகவிழ்கமலப்புத்தேள் முதலிய அமரர்' என்கிறார். முருகு-பனையமுது; அவிழ்-விரிக்கும்; கமலம்-தாமரை, அல்லது நீர்; புத்தேள்-தெய்வம். ஆகையால் முருகவிழ்கமலப்புத்தேள் என்றால் பனையமுதிறக்கும் குலத்தவனும் தாமரை மலர் போன்றவனுமாகிய கடவுள் என்றும், பனையமுதிறக்கும் குலத்தவனாகிய நீர்க்கடவுள் அதாவது பதிநீர்க்கடவுளென்றும் பொருள் கூறலாம. தாமரையில் பனையமுதொழுகுகிறதில்லையாகையால் கமலப்புத்தேள் என்னும் பெயருக்கு நீர்க்கடவுள், அதாவது, பதிநீர்க்கடவுள் என்பதே சரியான தாற்பரியம். ஆகவே, முருகவிழ்கமலப்புத்தேள் என்னும் பிரமன் அமுதகுலத்தவனென்று அப்பெயரே தெரிவிக்

கின்றது. அத்தோடுகூட பிரமன் முதலிய அமரர் என்கிறார். அமரர் என்றால அமரி பருகுகிறவர்கள். அமரி-பனியமுது; ஆகையால் அமரர் என்றால் அமுதகுலத்தவர் என்று பொருள். பிரமன் முதலான அமுதகுலத்தவர்கள் என்றால் பிரமனும் அமுதகுலத்தவனென்றறியலாம்.

ஆகையால் இக்கவியில் பிரமனுக்கு வழங்குகிற

1. முருகவிழ்கமலப்புத்தேள் என்னும் பெயராலும்
2. அமரன் என்னும் பெயராலும்

பிரமன் அமுதகுலத்தவன் என்றறியலாம்.

6. பிரமன் அமுதகுலத்தவனென்று தெரிவிக்கும் பிரசாபதி, கஞ்சன், முண்டகன், முருகுமலரயன், அமரன் முதலிய ஒரு பொருட் கொண்ட மொழிகளின் தாற்பரியத்தை எடுத்துரைத்தோம். அவர் அமுதகுலத்தவரான காரணத்தால் தான் கூர்மபுராணத்தில் பிரமன் முதலான தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்தமுதமெடுத்தார்களென்றும், திருநெல்வேலிப்புராணத்தில் பிரமன் முதலான தேவர்கள் சான்றோரைக்காக்கும் பொருட்டு திருநெல்வேலி நாட்டில் அமுதமிறக்கினார்களென்றும், தாலவிலாசத்தில் பிரமன் தம்முடைய கீழுதட்டில் விரலை வைத்துக்கொண்டு நெடுநேரம் ஆலோசனை செய்து பனையைச்சிருட்டித்தார் என்றும் கண்டிருக்கிறது. பிரமன் சான்றோன் என்று காட்டும் சில குறிப்புகளைப்பார்ப்போம்.

பிரமனின் மனைவிகள் மூவரில் முதல்வளாகிய சரசுவதி என்னும் வாணியின் மரபில் தோன்றினவர்கள் தான் மதுரையில் முதலாவது தமிழ்ச்சங்கம் ஸ்தாபித்தார்கள். இதைப்பற்றிய புராணக்கதையை 143, 144-வது பக்கங்களில் எடுத்துரைத்தோம். அக்கதையின்படி சரசுவதியின் மரபினராகிய நக்கீரர், கபிலர், பாணர் முதலான 48 சங்கப்புலவருக்கும் சான்றோர் என்னும் பெயர் திருவிளையாடற் புராணத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், சங்கப்பலகை தந்தபடலம்,

17-வது கவி.

மறையினொ டொழுகும் பன்மாண் கலைகள்போன் மாண்டகேள்வி
துறையினொ டொழுகுஞ் சான்றோர் குழுமீண்டேடிக்கூடற்
கறையினார் கண்டத்தாரைப் பணிந்து தக்காக்கு நாற்றைப்
பிறையினுத் மகுடக்கோற்ற தறிஞராய் வந்தபெம்மான்.

இக்கவியில் நாற்பத்தெண்மராகிய சான்றோரும் மதுரைக்கு வந்தவுடனே சிவபெருமானுடைய கோயிலுக்குச்சென்று அவரை வணங்கினார்கள் என்று கூறியிருக்கிறது.

18-வது கவி.

விழ்த்தியமைடக் நாசான்றோர் விண்ணிழிவிமான மேய
செம்மலைவேறு வேறு செய்யுளாற் பரவியேத்திக்
கைம்மலைப்புரியினார் தங் காதில்முதிறைஞ்சிமீண்டு
[illegible] செழியனைக்குறுகிக் கண்டார்.

இக்கவியில் சான்றோர் சிவபெருமானைத்தனித்தனியே தமிழ்ச்செய்யுள்கள் படித்துதித்து வணங்கியபின் பாண்டியனைக்கண்டார்கள் என்கிறார்.

19-வது கவி.

மறமலிநேமிச்செங்கோன் மன்னவன்வந்தசான்றோ
ரறமலிகேள்விநோக்கி யவைக்களக்கிழமைநோக்கித்
திறமலியொழுக்கநோக்கிச் சீரியர்போலுமென்னு
நிறைமலியுவகைபூத்த நெஞ்சினனிதனைச்செய்தான்.

இக்கவியில் பாண்டியன் சான்றோருடைய கல்வி கேள்வி ஒழுக்க முதலியவற்றால் அவர்கள் சான்றோரென்றறிந்து மனமகிழ்ந்தான் என்கிறார்.

20-வது கவி.

திங்களங்கண்ணிவேய்ந்த செக்கரஞ்சடிலநாதன்
மங்கலம்பெருகுகோயில் வடகுடபுலத்தின்மாடோர்
சங்கமண்டபமுண்டாக்கித் தகைமைசால்சிறப்புநல்கி
யங்கமர்ந்திருத்தினென்ன விருத்தினனறிஞர்தம்மை.

இக்கவியில் பாண்டியனானவன் சிவபெருமான் கோயிலுக்கு வடமேற்றிசையில் ஒரு சங்கமண்டபமுண்டாக்கி அறிஞராகிய சான்றோருக்குத் தகுந்த சிறப்புகள் செய்து, அம்மண்டபத்திலே தானே அமர்ந்திருக்கச் செய்[illegible]ன் என்கிறார். அறிஞர் என்றால் அறிவுடையோர், சான்றோர் என்று பொருள்.

"சான்றோர் மிக்கோர் நல்லவர் மேலவர்
ஆய்ந்தோருயர்ந்தோர் ஆசிரியர் உலகென
வாய்ந்த ஆன்றோர் அறிவுடையோரே."
(திவாகரம்),

29-வது கவி.

மேதகுசான்றோர் நூலின் விளைபொருள்விளங்கத்தம்மி
லேதுவுமெடுத்துக்காட்டு மெழுவகைமதமுங்கூறும்
[illegible]தவைதெளிந்தகிள்ளை பூவையேபுறம்புபோந்து
வாதுசெய்வார்கள்வந்தால் மறுத்துநேர்நிறுத்துமன்றே.

இக்கவியில் அச்சான்றோர்கள் நூற்பொருள் விளங்கக் காரணமும், உதாரணமும், உடன்படல் மறுத்தல் முதலிய எழுவகை மதங்களும் பேசும்போது கேட்டறிந்த கிளிகளும் பூவைகளுமுதலாய், வாதுசெய்பவர்கள் வந்தால் அவர்கள் வாதைத்தடுத்துச்செவ்வையாக விலகிற்கச் செய்யும் என்பதாகச் சான்றோர் கல்வித்திறமையை வியந்து பேசுகிறார்.

இப்படியாகப் பிரமனின் மனைவியாக சாகுவதி மரபில் தோன்றியவர்களுக்குச் சான்றோர் என்னும் பெயர் வழங்கியிருப்பதால், அமுதகுலத்தவனாகிய பிரமன் சான்றோனே என்றறியலாம்.

இலிங்கபுராணம், தேவாசுரர் தோற்றமுரைத்தவத்தியாயம்,
2-வது கவி.

புரிவாய்விழுநறுங்கமலப் புத்தேடனதுமனத்தி
லுரைசால்பிரமாபதின்மர் தமைப்படைத்தானவ்வாறுயர்தக்கன்
பரிவாற்படைப்பப்படைத்த வெலாம்பாழ்பட்டொழித்ததிறநோக்கி
மருவார்கூந்தற்சூதிவயிரிணியா மிவரைமணந்தனனால்.

இக்கவியில் பிரமனிலிருந்து பத்து பிரமாக்களுதித்தார்க ளென்றும் அவர்களிலொருவராகிய தக்கனெனவர் சூதி, அயிரிணி என்னும் மாதுக்களை மணம்புரிந்தார் என்றும் கூறியிருக்கிறது. இங்கே தக்கனுக்கு வழங்கும் அடைமொழியாகிய உயர் என்னும் பதமானது குலவிளக்க சம்பந்தமாய் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

உயர்தக்கன் = உயர்குலதக்கன்
= உயர்ந்தோர்குல தக்கன்
= சான்றோர்குல தக்கன்

என்று பொருள். தக்கன் சான்றோர்குலத்தவனானபடியால், அவருடைய சகோதரராகிய மரீசி, அங்கீரன், புலத்தியன் முதலானவர்களும் சான்றோர். அவர்களுடைய பிதாவாகிய பிரமனும் சான்றோன்.

மேலே சொல்லிய பிரமனின் குமாரர் பதின்மர் யாரென்று, இதே இலிங்கபுராணம் படைப்புவகையுரைத்தவத்தியாயம் 7-வது கவியிலும், தத்துவதோற்றமுரைத்தவத்தியாயம், 8-வது, 9-வது கவிகளிலும் பெயர் விபரங் கண்டிருக்கிறது.

படைப்புவகை யுரைத்தவத்தியாயம்,
7-வது கவி.

அவர்களிருக்கப்புலத்தியனற் கிருதுபிருகுவத்திரிமெய்த்
தவமாமரீசிபுலகனொடு தக்கன்வசிட்டனங்கிரா
னவைதீர்தருமந்தன்னமொடு நவிற்றற்கருஞ்சங்கற்பமெனு
மிவரைப்படைத்தான்மற்றிவர்க ளில்வாழ்க்கையினில்வாழ்குவார்.

தத்துவதோற்றமுரைத்தவத்தியாயம்,
8-வது கவி.

தோன்றியவேதியன்படைப்பானெண் ணிருசிதன்மனத்திலுவந்துதய்த
மான்றமறையறிகின்றவங்கிரா வத்தலையினிடையுமங்கே
கான்றொளிசேர்கண்ணினிடைமரீசி யையுமத்திரியைக்கரத்தினுள்ளுந்
தான்றவியேயுறைகின்றபிராண னிடைத்தக்கனையுந்தோற்றுவித்தான்.

9-வது கவி.

இதையத்திற்பிருகுவையும்வியானவா யுவிற்புலகன்றனையுமேதின்
மதியுற்றபுலத்தியனையுதானவா யுவினிடையுமாசின்றிக்
கதிபெற்றவசிட்டனைச்சொல்சமானவா யுவினிடையுங்கதீரர்தம்மாற்
றுதிபெற்றகிருதுவினையபானவா யுவினிடையுந்தோற்றுவித்தான்.

இக்கலைகளில் சொல்லப்பட்ட பதின்மராகிய

1. அத்திரி	6. மரீசி
2. புலத்தியன்	7. அங்கிரன்
3. வசிட்டன்	8. கிருது
4. தக்கன்	9. புலகன்
5. பிருகு	10. தருமன்

என்பவர்கள் பிரமனின் குமாரராகிய பிரமாக்கள். இவர்களிலொருவராகிய தக்கன் சான்றோர் குலத்தவரென்று சொல்லியிருப்பதால், அவருடைய சகோதரராகிய நவப்பிரமாக்களும், அவர்களுடைய பிதாவாகிய பிரமதேவரும் சான்றோர்குல முற்பிதாக்களென்றறிக.

பிரமனின் குமாரனாகிய புலத்தியரிஷி மரபில் தோன்றிய இராவணாதி ராட்சதர்கள் சாணார் என்று மக்ளின் துரை எழுதியிருப்பதாலும் (165-வது பக்கம் பார்க்க), பிரமன் சான்றான் என்றேற்படுகிறது. பிரமன் சான்றானானபடியால் தான் அவர் மரபிலுதித்த அட்டதிக்கு பாலரும் சான்றோர் என்பதாக 12, 13-வது அத்தியாயங்களில் பார்த்தோம். பிரமன் சான்றோனானபடியால் தான் அவர் மரபினராகிய சிவனும் விட்டுணுவும் சான்றோர் என்பதாக 11, 14-வது அத்தியாயங்களில் பார்த்தோம். பிரமன் சான்றோனானபடியால் தான் அவர் மரபினராகிய சூரியசந்திர குலத்தரசர்களெல்லாம் அமுதகுலச்சான்றார் என்பதாக 12, 16, 17-வது அத்தியாயங்களில் பார்த்தோம்.

ஆகையால் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலான பூர்வநூல்களெல்லாம் சான்றோரைக்குறித்துப்பேசுகின்றதேயல்லாமல் ஏனையோரைக்குறித்தல்லவென்றும், சான்றோரின் மேன்மைக்குச்சமமான மேன்மையுள்ள சாதியார் இந்நாட்டிலில்லையென்றும் அறிவீராக.

——(:o:)——

XIX-வது அத்தியாயம்.

சான்றாண்மை என்னும் சான்றோர்குண நலம்.

1. சான்றாண்மையைப்பற்றி எமகண்டனடைந்த வுபதேசம். 2. குணநலம் இன்றியமையா அவசியம்; குணநலம் குலநலம் என்னுமிரண்டினையுமுடையவரே சான்றோர். 3. சான்றோருக்கு உயிரினும் மானம் பெரிது. 4. தாமடைந்த அற்ப உதவியையும் பெரிதாக எண்ணுவார்கள். 5. வறுமையடைந்த காலத்திலும் கடன் கொண்டாகிலும் தம் கடமையினைச்செய்வார். 6. மரணம் சேர்வதாயினும் பாவவழிகளுக்குடன்படார். 7. மேன்மையல்லாத காரியத்தைக்கனவிலும் கருதார். 8. சிறந்த அன்புடையவர்கள். 9. சுடசனை நலைப்கருதாமல் இராஜ்ய மன்னி

மைபக்கருதுவார்கள். 10. கோபங்கொண்ட காலத்தில் முதலாய் உதவுவார்கள். 11. தாய் தந்தையரை யுபசரிப்பார்கள். 12. சான்றோர் தாழ்த்தப்பட்ட காரணம்.

இந்தியாவில் வணங்கப்படுகிற தேவர்களெல்லாரும் சான்றார் குலத்தி லுதித்த பிரபுக்கள் என்பதாகப்பார்த்தோம். அக்குலத்தவர்களின் ராசாட்சி ஒழிந்துபோன பிற்பாடு முதலாய் அத்தேவர்கள் வணங்கப்பட்டு வருகிறதைப்பார்க்கில், அக்குலவீரர்கள் பூர்வத்தில் சிறந்த குணசீலராயிருந்திருக்க வேண்டுமென்றே சொல்லவேண்டும். சான்றோருக்கிருக்கவேண்டிய இலக்ஷணங்கள் சிலவற்றைப்பூர்வ நூல்களிலிருந்தெடுத்துரைப்பதினால், சான்றோர் பயனடைவார்களானதால், அவற்றை இந்த அத்தியாயத்தில் கூறுவாம்:—

அமுதகுலத்தவராகிய சான்றோர் என்னும் பெயருக்கு இயல்பான தாற்பரியம் 'சான்றாண்மை பயின்றோர்' என்பதாக மதுரைக்கலம்பகம், 24-வது கவியில் கண்டிருப்பதை, சிவபெருமான் அமுதகுலத்தவரென்று விளக்கிக்காட்டிய இடத்தில் முன்னமே வரைந்தோம் (229-வது பக்கம் பார்க்க). ஆகையால் சான்றோரின் சிறந்த இலக்ஷணம் சான்றாண்மை. சான்றோனாகிய சோமகாந்தராஜன் தன் மகனாகிய ஏமகண்டனுக்கு முடிசூட்டக்கருதி தன் குலத்துக்குரிய சான்றாண்மையியல்பென்னவென்று போதித்திருக்கிறார்.

விநாயகபுராணம், அபிஷேகப்படலம்,

146-வது கவி (சான்றாண்மை).

அன்பொப்புரவு கண்ணோட்ட மழிவில் வாய்மை நாணைந்தும்
இன்பம்பெருக்குஞ் சான்றாண்மைக்கெல்லா நிறைந்த தூணென்றோர்கள்
அன்புற்றவர்க்கு மினியனவே வருஞ்சுவர் அவையின் வியமுடியா
வன்பித்தளரார் கட்டார்க்கு வணங்கித் தோற்றகாலே.

இக்கவியில் சோமகாந்தன், ஏமகண்டனுக்குபதேசித்த சான்றாண்மையின் இலக்ஷணங்களாவன:—

(a) அன்பு=முதலாவது மக்கள் மனைவியர் முதலான உறவினிடத்துண்டாகும் பிரீதி, இரண்டாவது தொடர்புபற்றி தன் குலத்தவராகிய சான்றோர் ஒவ்வொருவரிடத்து முண்டாகும் பிரேமம், மூன்றாவது தொடர்பு பற்றாது இயல்பாக வருந்துமுயிர் கிருபைத்தவர்கள் மேல் செல்லும் அருள் என்று மூவகைப்படும்.

(b) ஒப்புரவு உலகம் ஒப்பும்படி செய்யுமுபகாரம்; உலகம்=உயர்ந்தோர்=சான்றோர். சான்றோர் ஒப்பும்படியாகச் செய்யுமுபகாரம், பார்ப்பார் ஒப்பும்படி செய்யுமுபகாரமன்று; க்ஷத்திரியரொப்பும்படி செய்யுமுபகாரமுமன்று; சான்றோரொப்பும்படி செய்யுமுபகாரமேயென்றறிக.

(c) கண்ணோட்டம் தாக்ஷிண்யம், அதாவது தன் குலத்தவராகிய சான்றோர் கூறியதை மறுக்காமை.

(d) அழியாவாய்மை. தவறாத சத்தியம். சான்றோனாகிய அரிச்சந்திரமகாராஜன் வாக்கு. துரியோதனாதிகளைப்போல "பொய்த்தசான்றவன் குலம்" எனப்பெயர் பெறாமை. அல்லது திருக்குறள் கூறுகிறபடி

"வாய்மையெனப்படுவ தியாதெனின்யாதொன்றுந்
தீமையிலாத சொலல்"

என்னும் பொருள் கூறலாம்.

(e) நாண். வெட்கம். அதாவது தாம் பிறந்த மேலான சான்றோர் குலத்துக்குத்தகாத காரியங்களைச்செய்ய நாணுதல்.

இவ்வைந்து லக்ஷணங்களும் பஞ்சபாண்டவர்களின் புகழ்போலும் பஞ்சகன்னிகைகளின் திகழ்போலும் சான்றோர் பெருமையை நிலைநிறுத்தும் சான்றாண்மையின் பஞ்ச தூண்களாம்.

"அன்புநாணொப்புரவு கண்ணோட்டம்வாய்மையொடு
ஐந்துசால் பூன்றியதூண்"

என்னும் திருக்குறளாலுமறிக.

சான்றோர் குலத்திலுதித்த காரணத்தால் மட்டிலும் சான்றோனாயிருப்பது மேன்மையன்று. குலத்தாலும் குணத்தாலும் சான்றோனாயிருப்பவனே மேன்மைக்குரிய சான்றோன். ஆகையால் எம்கணடன், குலத்தால் சான்றோனாயிருந்தபோதிலும் குணத்தாலும் சான்றோனாகும்படி போதிக்கப்படுகிறான். மேலே சொல்லப்பட்ட பஞ்சகுணங்களே சான்றோர் குலத்தவருக்குச்சிற்றின்பம், பேரின்பம் என்னும் இருவகையின்பங்களையும் கொடுக்கும் நற்குணங்களாம். இப்படியாகக் குலத்தாலும் குணத்தாலும் சான்றோராயிருப்பவர்கள்,

(f) துன்புற்றவர்க்கு மினியனவேசெய்வர், அதாவது, குணத்தாலன்றிக் குலத்தால் மட்டிலும் சான்றோராயிருப்பவர்கள் தீமைக்குத்தீமைசெய்த போதிலும், அவர்களுக்குத்தீமைக்குத்தீமை செய்யாமல் நன்மையே செய்வார்கள். இதற்கிணங்க

"இன்னாசெய்தார்க்கு மினியவேசெய்யாக்கால்
என்னபயத்ததோ சால்பு" என்றும்
"இன்னாசெய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ்செய்து விடல்"

என்னும் திருக்குறள் கூறுகின்றன.

குலத்தால் சான்றோராயிருப்பவர்கள் குணத்தாலும் சான்றோராயிராவிட்டால், அவர்களுக்கு நன்மையையே செய்து அவர்களையும் குணநலச்சான்றோராக்குவது மேன்மையேயன்றி அவர்களுக்குப்பிரதி தீங்கு செய்வது குணநலமன்று. சான்றோரிதைக்கவனிக்கவேண்டியது. இதைக்கவனித்து நடப்பார்களாயின் சான்றோர் ஊர்களில் சான்றோருக்குள்ளே இரண்டு மூன்று பிரிவினைகளும் அதனால் பொருள் முதலான நஷ்டங்களும், கூத்திருக்கு முன் கைகட்டி நிற்கவேண்டிய இகழ்ச்சி

யும் வெகுசாய் நீங்கும். இராஜ்யமிழந்த நாள் முதலாய்க்குலமேன்மை யற்றிருக்கும் சான்றோர்குண மேன்மையால் மேன்மக்களாகவேண்டு மென்றிப்பூர்வநூல்கள் கூறும் மேன்மையை எண்ணி எண்ணியிருப்பதினால் பயனன்று. சான்றோர் துன்புற்றவர்க்கும் இனியனவேசெய்வர் என்பதற்கு ஒரு உபமானம் கம்பராமாயணத்தில் வருகிறது. அதாவது, தேவர்கள் கரியமந்தரமலையைத்தன்னிடம் மத்தாக நாட்டி நெருப்புப்பொறிபறக்கும்படி உக்கிரமாக அவர்கள் தன்னைக்கடைந்து வருத்திய போதிலும், திருப்பாற் கடலானது தேவர்கள் உய்யும்படியாக அமுதைக்கொடுத்துதவினதுபோல, அமுதகுலத்தவர்களாகிய சான்றோருமுதவுவார்கள் என்பதாம்.

கம்பராமாயணம், யுத்தகாண்டம், விபீடணனடைக்கலப்படலம்,
128-வது கவி.

தீர்வருமின்னலம்மைச் செய்யினுஞ்செய்பசிந்தைப்
பேருளாளர்தத்தஞ் செய்கையிற்பிழைப்பதுண்டோ
கார்வரைநிறுத்தித்தன்னைக் கனலெழக்கலக்கக்கண்டும்
ஆர்கலியமாருய்ய வமிழ்துபண்டளித்ததன்றே.

இராட்சதகுல சான்றோனாகிய விபீடணன் சூரியகுல சான்றோனாகிய இராமரை அடைக்கலமடைய வந்தபோது, இராமர் அவனை ஏற்றுக்கொள்ளத் திருவுளங்கொண்டு அவனையழைத்து வரும்படி சுக்கிரீவமகாராஜனையனுப்ப, சுக்கிரீவன் விபீடணனைக்கண்டபோது, விபீடணன் மிகமகிழ்ந்து, பெருந்தீங்கு விளைத்த இராவணனது தம்பியான தன்னை வரும்படி திருவுளம்பற்றிய இராமருடைய பெருங்கருணையைப்பாராட்டிக்கூறின கவி.

(g) துணையின் வினைமுடிப்பர். தங்குலத்தவர்களாகிய சான்றோருக்குத்துணை நின்று அவர்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை முடித்துக்கொடுப்பார்கள். தன்னயம் பாராட்டாமல் குலநயம் பாராட்டுவார்களென்று பொருள்.

(i) வன்மின்தளரார். தங்குலத்தவர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்கிற வைராக்கிய உறுதியினின்று சோர்வடையமாட்டார்கள்.

(j) நட்டார்க்கு மடங்கித்தோற்ற நாணாரே. தங்குலத்தவராகிய சிநேகிதருக்குக்கீழடங்கி அவருடைய விருப்பத்துக்கு இசைந்து நடப்பதால் தம்முடைய பெருமைக்குக்குறைவுண்டாகுமென்றெண்ணமாட்டார்கள். அவர்கள் எப்போதும் தங்குலத்தவரோடு ஐக்கியமாகவேயிருப்பார்கள்; அவசியமான தருணங்களில் தங்குலச்சிநேகிதருக்குக் கீழ்ப்படிந்து அடங்கி நடப்பார்கள்; ஒருமைப்பாடு குன்[illegible]வார்கள் என்பது பொருள். [illegible]த்து இலக்ஷணங்களுமுடையவர்களே குணநலச்சான்றோர்.

2. குணநலம் சான்றோருக்கு இன்றியமையாத அவசியமானது.

திருக்குறள், பொருட்பால்,
99-வது அதிகாரம், சான்றாண்மை,
1-வது கவி.

கடனென்ப நல்லவையெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு

என்னும் கவியால் சான்றோர் மேலான குலத்திலுதித்தது மாத்திரம் போதாதென்றும், தம் குலமேன்மைக்குத்தகுந்த குணமேன்மையும் அவர்களிடமிருக்கவேண்டுமென்றும் சான்றோரறியக்கடவர்.

2-வது கவி.

குணநலஞ்சான்றோர் நலனேபிறநல
மெந்நலத்துள்ளதூஉமன்று

என்னும் கவியிலும் சான்றோர் குணநலம் பொருந்தியவர்களாயிருப்பது அவசியமென வற்புறுத்திச்சொல்லியிருக்கிறது.

10-வது கவி.

சான்றவர்சான்றாண்மை குன்றினிலந்தான்
றாங்காது மன்னோபொறை.

சான்றோர் தம் மேலான குலத்துக்குரிய சான்றாண்மை குன்றி நடப்பார்களாகில் சகலமும் பாழ். கீழ்மக்களுக்கு முன் பணிந்து நிற்க வேண்டிய ஈனஸ்திதிக்கு வருவார்களென்பது திண்ணம்.

நாலடியார், பொருட்பால்,
15-வது அதிகாரம்; குடிப்பிறப்பு,
2-வது கவி.

சான்றாண்மைசாய லொழுக்கமிவைமூன்றும்
வான்றோய்குடிப் பிறந்தார்க்கல்லது—வான்றோயு
மைதவழ்வெற்பநாட பெருஞ்செல்வ
மெய்தியக்கண்ணும்பிறர்க்கு.

இதன் கருத்து.

ஆகாயத்தையளாவி நின்று மேகங்கள் கவிந்து மூடுகிற மலைகளையுடைய பாண்டியனே! சான்றோர் குண நலமாகிய சான்றாண்மையும், குலநலமாகிய சாயலும், இவ்விரண்டும் பொருந்தியதாலுண்டாகும் குணநிசயங்களும் நடவடிக்கைகளுமான ஒழுக்கமும், ஆகிய இம்மூன்றும், உன் குலத்தவர்களுக்கு ஒருங்கே அமைந்திருக்குமேயன்றி, பிற குலத்தவர்கள் எவ்வளவு பொருளுடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்கில்லையென்பதாம். ஆகையால் சான்றோர் குலநலம் குணநலம் என்னுமிரண்டும் பொருந்தியவர்கள் திருக்குறளில்

'குணநலஞ் சான்றோர் நலனே'

என்று சொல்லியபடி, நாலடியார், 18-வது அதிகாரம் (நல்லினஞ் சேர்தல்), 9-வது கவியில்

நிலநலத்தானந்திய நெல்லேபோற்றத்தங்
குலநலத்தாலாகுவர் சான்றோர் — கலநலத்தைத்
தீவளிசென்றுசிதைத் தாங்குசான்றாண்மை
தீயினஞ்சேரக்கெடும்

குலநலமும் சான்றோருக்கே பொருந்தியது என்று கண்டிருக்கிறது. இவ்விருநலமும் பொருந்தியவர்களே சான்றோர். ஆகையால் பிறகுலத்தவராகிய பார்ப்பான், சூத்திரன் முதலானவர்கள் சான்றாண்மை என்னும் குணநலம் பொருந்தி நடக்க முயன்றாலும் குலநலமில்லாதபடியால் சான்றோன் என்னும் பெயருக்கு யோக்கியதையுடையவராகார்.

3. சான்றோர் உயிரினும் மானம் பெரிதாக எண்ணுவார்கள்.

நாலடியார், பொருட்பால்,
16-வது அதிகாரம், மேன்மக்கள்,
1-வது கவி.

அங்கண்விசும்பி னகனிலாப்பாரிக்குந்
திங்களுஞ்சான்றோரு மொப்பர்மற் — றிங்கண்
மறுவாற்றுஞ்சான்றோ ரஃதாற்றார்தெருமந்து
தேய்வரொருமாசுறின்.

இதன் கருத்து.

ஆகாயத்திலுலாவுஞ் சந்திரனுஞ் சான்றோருமொப்பாவார், ஆகிலும் ஒரு பேதமுண்டு — சந்திரன் தன் உடலிலிருக்கின்ற களங்கத்தைப் பொறுத்துக்கொள்ளுமாயினும், சான்றோர் தங்களுக்கொரு மானவீனமுண்டாகுங்காலத்தில் அதைப்பொறுக்கமாட்டார்கள் என்பதாம்.

இதைப்பற்றியே அடுத்த கவியிலும் 'வசைதீரவெண்ணுவர்சான்றோர்' என்று கண்டிருக்கிறது.

2-வது கவி.

இசையுமெனினு மிசையாதெனினும்
வசைதீரவெண்ணுவர் சான்றோர் — விசையி
னரிமாவுளங்கிழித்த வம்பினிற்றீதோ
வரிமாப்பிழைப்பெய்த கோல்.

ஜெயங் கிடைத்தாலும் கிடையாதிருந்தாலும் உயிரினும் மானம் பெரிதென்றெண்ணுவார் சான்றோர். ஆகையால் களங்கத்தைப்பொறுத்துக் கொள்ளும் சந்திரன் சான்றோருக்கு ஒப்பாகாது. கம்பராமாயணத்தில் சான்றோர் கவரிமானுக்குச்சமமான மானமுடையவர்களென்று கம்பர் கூறுகிறார்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
6-வது கவி.

உற்றதுகொண்டு மேல்வந் துறுபொருளுணருங்கோளார்
மற்றதுவினையின் வந்த தாயினுமாற்றலாலும்
பெற்றியர்பிறப்பின்மேன்மைப் பெரியவர்சிறியரேனும்
கற்றவர்மானநோக்கிற்கவரிமாவனையநீரார்.

இதன் கருத்து.

முன் நடந்த விஷயங்களைக்கொண்டு பின்னால் வருங்காரியங்களை அறியத்தக்கவல்லவர், ஊழ் வினைப்பயனை முதலாய் நீக்க வல்லவர்; (அவர்கள் யாரெனில்) "பிறப்பின் மேன்மைப்பேரியவர்", அதாவது, பிறப்பிலே மேன்மக்களாகப் பிறந்த சான்றோர், அவர்களே நுண்ணிய பொருளமைந்த நூல்களைக்கற்றவர், அவர்கள் தங்கள் மானத்தைக்காத்துக் கொள்ளும் விஷயத்தைப் பார்த்தாலுமோ கவரிமானையொத்த தன்மையுடையவரென்று பொருள்.

கவரிமானானது தன்னுயிரினும் தன் மயிர்த்திரள் சிறந்ததாக அதனைக்காத்தலும் அதிலொரு மயிர் நீங்குங்காலம் வரின் உயிர்விடுதலும் போல, சான்றோர் தம்முயிரினும் மானஞ் சிறந்ததென அதனைக்காத்தலும், மானபங்கமுண்டாகும் காலத்தில் உயிர்விடுதலுமுடைமையால் "மானநோக்கிற் கவரிமாவனையரோர்" எனக்கூறினார்.

"மயிர்நீப்பின்வாழாக் கவரிமாவன்னார்
உயிர்நீப்பர் மானம்வரின்,"

என்னும் திருக்குறளாலுமறிக. இத்தன்மையுடையவர்கள் யாரென்றால் பிறப்பின்படி சான்றோர் குலத்தவர் என்று கண்டிருக்கிறது. அதாவது சான்றோருக்குரிய சான்றாண்மை என்னும் பதம் குறிக்கும் இலக்ஷணங்களைக்கற்றுக்கொண்டு அவைகளை முயற்சி செய்து தங்களை மேன்மக்களாக்கிக்கொள்ள முயலும் பிறகுலத்தவர்களல்ல, சான்றோராகிய தாய் தகப்பனுக்குப்பிறந்த காரணத்தால் பிறப்பின்படியே சான்றோர் என்னும் மேன்மக்கள் குலத்திலுதித்தவர்களே இத்தன்மைய சிறப்புற்றோங்கியவர்கள் என்றறிக.

களங்கத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கும் சந்திரனானது மானபங்கத்தைச்சகிக்காத சான்றோருக்குச்சமமாகாதபடியால், திங்களினும் சான்றோரே சிறந்தவர். ஆகையால் சான்றோர் புராணம் எழுதியவர், பூர்வகாலங்களில் சான்றோருடையபுகழ் இந்நாட்டில் எத்தன்மையாகப் பரவியிருந்ததோ அதே பிரகாரம் சந்திரனுடைய கிரணங்கள் பூமியின்கண் பரவுகின்றனவென்பதாகச் சந்திரனுடைய கிரணங்களைச் சான்றோருடைய புகழுக்கு ஒப்பிட்டிருக்கிறார்.

சான்றோர் புராணம், பசீரதிப்படலம்,

14-வது கவி.

ஏர்மேவுமிலங்கையர் வேந்தரென
சீர்மேவுசெகந்தனில் வாழ்வுபெறுந்
தார்மேவியசான்றவர் தம்புகழ்போற்
பார்மீதுபரந்தது பானிலவே.

4. சான்றோர் தமக்குச்செய்யப்பட்ட உபகாரத்தை ஒரு காலத்திலும் மறக்கமாட்டார்கள். அது அற்பமாயினும் பெரிதாகவே எண்ணுவார்கள்.

நாலடியார், கீழ்மை,
4-வது கவி.

தினையனைத்தேயாயினுஞ் செய்தநன்றுண்டால்
பனையனைத்தாவுள்ளுவர்சான்றோர்—பனையனைத்
தென்றுஞ்செயினு மிலங்கருவிநன்னாட
நன்றிலநன்றறியார் மாட்டு.

இதன் கருத்து.

விளங்குகிற மலையருவிகளையுடைய சான்றோர்குல நாடாளுகிய பாண்டியனே! தினையென்னுஞ் சிறிய தானியத்தினளவேயானாலும் ஒருவர்செய்த உபகாரத்தைத்தாம் அனுபவித்தால், (உன் குலத்தவராகிய) சான்றோர் (உன் குலவிருட்சமாகிய) பனையவ்வளவு பெரிதாக நினைப்பார்கள்; எப்பொழுதும் பனைமரத்தவ்வளவு பெரிதான உபகாரங்களையே செய்து வந்தாலும் நல்லோரென்னும் அறிவுடையோரல்லாத கீழ்மக்களிடத்தில் அவ்வுபகாரங்கள் சிறப்பிக்கப்படமாட்டாவாம்.

செய்ந்நன்றியறிதல் என்னும் சான்றோர்குலலக்ஷணமும் செய்ந்நன்றி மறத்தல் என்னும் கீழ்மக்கள் குலலக்ஷணமும் பிரசித்தமானவை. குலத்தளவேயாகும் குணமென்றறிக.

சான்றோர் தமக்கொருவர் செய்த அற்ப உதவியையும் பெரிதாகக் கொள்ளுவார் என்பதாக நாலடியாரில் சொல்லிய பிரகாரம், விட்டுணுவானவர் வாமன சொரூபராய் மாவலிச்சக்ரவர்த்தியிடம் சென்று மூன்றடி மண்வேண்ட, மாவலிச்சக்ரவர்த்தியானவர் அப்படியே கொடுத்தேன் வாங்கிக்கொள்ளுமென்று சொல்லிக்கையிலிருந்த ஜலத்தைத் தாரை வார்த்தபோது விட்டுணுவின் திருமேனி எப்படி உயர்ந்ததென்றால் சான்றோருக்குச்செய்த உதவியைப்போல் அண்டகடாகமட்டுக்கும் உயர்ந்ததென்று கம்பர் கூறியிருப்பதால், விட்டுணுவின் மகா குருகின சுரூபமானது ஆகாயத்துக்கும் மேலான சுரூபமாக உயர்ந்ததுபோல சான்றோரும் பிறர் தமக்குச்செய்த அற்ப உபகாரத்தை முதலாய் மிகவும் பெரிய உபகாரமாக எண்ணுவார்களென்று கண்டெழுதியிருக்கிறார் என்றறியலாம்.

கம்பராமாயணம், பாலகாண்டம், வேள்விப்படலம்,
34-வது கவி.

கயந்தருநறும்புனல் கையிற்றீண்டலும்
பயந்தவர்களுமிகழ் குறளன்பார்த்தெதிர்
வியந்தவர்வெருக்கொள விசும்பினோங்கினான்
உயர்ந்தவர்க்குதவிய வுதவியோப்பவே.

வாமன சுரூபியான விட்டுணு விசுவரூபியானதினால், சான்றோருக்குச் செய்த அற்பவுதவியும் அவர்களால் பெரிதாக மதிக்கப்படும் என்று பொருள். உயர்ந்தோர் என்பது சான்றோர்குலப் பெயர்களிலொன்றென்று கூறும் திவாகர சூத்திரம் முன்னமே எடுத்துரைத்திருக்கிறோம்.

5. வறுமையடைந்த காலத்தில் முதலாய்ச்சான்றோர் தாம்செய்ய வேண்டிய கடமைகளைக்கடன் கொண்டாகிலும் செய்வார்.

பழமொழி.

அடர்ந்துவறியரா யாற்றுதபோழ்தும்
இடங்கண்டறிவாமென் றெண்ணியிராஅர்
மடங்கொண்டசாயல் மயிலன்னாய்சான்றோர்
கடன்கொண்டுஞ் செய்வார்கடன்.

இதன் கருத்து.

பேதைமைக்குணமமைந்த மயிலின் சாயலையுடைய பெண்ணே! சான்றோர் வறுமையடைந்து செல்வமிழந்த காலத்திலும், பின்பு செல்வம் மீளவும் வந்தகாலத்தில் பார்த்துக்கொள்ளலாமென்று சும்மாயிராமல், தம் குலத்தவர் மேன்மையடையும்படிக்கான பிரயத்தனங்களைக் கடன் கொண்டாகிலும் செய்வார்கள் என்பதாம்.

சான்றோர் இராஜ்யமிழந்து தாழ்வடைந்திருக்குமிக்காலத்தில் தம் குலமேன்மையை ஸ்தாபிக்கும் விஷயமாய்க்கடன் கொண்டாகிலும், தத்தம் கடமைகளைச்செய்வார்களென்பது திண்ணம்.

முட்டி தூக்கும் பார்ப்பானைப்போல சான்றோர் வறுமையடைந்த காலத்தில் முதலாய் ஏற்றுத்தொழில் புரியார்கள். அவர்களுக்கு ஒளவையார் சொல்லியிருக்கிறபடி ஏற்பதிகழ்ச்சி. தரித்திரரானாலும் தாம்செய்யவேண்டிய கடமைகளைக்கடன் கொண்டாகிலும் செய்வார்களேயன்றி, பார்ப்பானைப்போல பிச்சையெடுத்துச்செய்யமாட்டார்கள்.

நாலடியார், பொருட்பால்,
16-வது அதிகாரம், மேன்மக்கள்,
8-வது கவி.

கரம்பெழுந்துகல்லார்ந்தா ராயினுஞ்சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண்டேறார்—உரங்கவறு
வுள்ளமெனுநாரினாற் கட்டியுளவரையாற்
செய்வர்செயற்பாலவை

என்னும் கவியாலுமறிக. சான்றோர் வறுமையடைந்தபோதிலும் அது அவர்களுக்கு இழிவல்ல, சான்றாண்மைக்குப்பங்கமுண்டாகும்படி நடந்தாலதுவே இழிவு.

திருக்குறள், பொருட்பால்,
99-வது அதிகாரம், சான்றாண்மை,
8-வது கவி.

இன்மையொருவற்கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்.

இதற்கடுத்த கவியில் கடல் முதலானவை நிலைகுலையும் ஊழிகாலமாகிய பிரளயகாலத்திலும் சான்றாண்மைக்கடலாகிய சான்றோர் தம் குணநலம் குன்றாரெனக்கண்டிருக்கிறது.

9-வது கவி.

ஊழிபெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழியெனப்படுவார்.

6. மரணம் நேர்வதாயிருந்தாலும் சான்றோர் பாவம் பழிகளுக்குடன்படார்.

நாலடியார், மானம்,
5-வது கவி.

பாவமுமேனைப் பழியும்பட்வருவ
சாவினுஞ்சான்றவர்செய்கலார்—சாதல்
ஒருநாளொருபொழுதைத் துன்பமவைபோல்
அருநவையாற்றுதலின்று.

இதன் கருத்து.

மறுமையில் பாவங்களாக எண்ணப்படுகிறவைகளையும் இம்மையில் பழிகளாக எண்ணப்படுகிறவைகளையும் சான்றோர் தமக்கு மரணம் நேர்வதாயிருந்தாலும் செய்யமாட்டார்கள்; ஏனெனில் மரணம் ஒரே நாளிலனுபவிக்கும் துன்பம், நரகவேதனையோ என்றும் நீங்காத துன்பம் என்பதாம்.

நரகவேதனை எக்காலத்திலும் நீங்காத துன்பமானதால் சான்றோர் உயிர் நீங்குவதாயினும் பழி பாவங்களைச் செய்யமாட்டார்கள் என்று பொருள்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
8-வது கவி.

தம்முயிர்க்குறுதியெண்ணார் தலைமகன்வெகுண்டபோதும்
வெம்மையைத்தாங்கிநீதி விடாதுநின்றுரைக்கும்வீரர்
செம்மையிற்றிறம்பல்செல்லாத் தேற்றத்தார்தெரியுங்காலம்
மும்மையுமுணரவல்லா ரொருமையேமொழியுநீரார்.

இதன் கருத்து.

தம்முயிரை ஒரு பொருட்டாக எண்ணாதவர்கள், அரசன் கோபங்கொண்ட காலத்தில் முதலாய் அக்கோபத்துக்கு அஞ்சி நீங்காமல் இராஜ நீதியைக்கைவிடாது அருகில் நின்று கூறும் வீரர், செம்மையான வழியினின்று பாவமான வழிகளுக்குத்திரும்பாத துணிவுடையவர்கள், முக்காலங்களிலும் நிகழும் விஷயங்களையுணர வல்லவர்கள், ஒற்றுமையான விஷயங்களையே வாய்திறந்து கூறும் தன்மையுடையவர்கள் என்பதாம்.

அரசன் வெகுண்ட காலத்திலும் சான்றோர் நீதி நெறியைக்கை விடார்கள் என்று பொருள்.

7. சான்றோர் மேன்மையல்லாத காரியத்தைக்கனவிலும் கருதார்.

தாயுமானவர் பாடல், பராபரக்கண்ணி,
193-வது பாடல்.

இல்லாதகாரியத்தை யிச்சித்துச்சிந்தைவழி
சொல்லாமைநல்லோர் திறங்காண்பராபரமே.

இதன் கருத்து.

மேலோராகிய தேவர்களுக்கும் மேலான கடவுளே! மேன்மையல்லாத காரியத்தை, அதாவது, தாம் பிறந்த மேலான குலத்துக்கிழி

வான காரியத்தை விரும்பி, தம் மனம்போனவழியிற் செல்லாமை நல்லோர் என்னப்பட்ட சான்றோரின் தன்மையன்றோ? என்று பொருள்.

சான்றோர் தம்முடைய மேலான குலத்துக்கிழிவான செய்கைகளை விலக்குவார்கள் என்று பொருள்.

நீதிநெறி விளக்கம்,
61-வது கவி.

நல்லாறெழுக்கின்றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லனசெய்தற்கொருப்படார்—பல்பொறிய
செங்கட்புலியேறறப் பசித்துந்தின்னுவாம்
பைங்கட்புனத்த பைங்கூழ்.

இதன் கருத்து.

சிவந்த கண்களையும் புள்ளிகளையுமுடைய புலியானது மிகுந்த பசியடைந்த காலத்திலும் வயலின் பசுமையான பயிரை தின்னமாட்டாது; அதுபோல, சான்றோர் வழியென்னும் ஒழுக்கத்தில் நிலைபெற்றிருப்பவர்கள் வறுமையடைந்த காலத்தும் தாம் பிறந்த மேலான குலத்துக்குத்தகுதியல்லாத செயல்களைச்செய்தற்குடன்படார்.

நல்லாறு=நல் + ஆறு
=நல்லவர் + வழி
=சான்றோர்வழி

புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது, அதுபோல குணநலம் பொருந்திய சான்றோர் தாழ்வடைந்த காலத்திலும், குலத்துக்கிழிவானவற்றைச் செய்யமாட்டார்கள் என்பது பொருள்.

8. சான்றோருக்கிருக்கவேண்டிய முதல் இலக்ஷணம் அன்பு என்பதாகப்பார்த்தோம். பிரபுலிங்கலீலை, வசவண்ணாகதி, 43-வது கவியும் அவ்வாறே கூறுகிறது. அக்கவியில் அன்பில்லாதவரிடம் சான்றோர் உறவாடமாட்டார்களென்று கண்டிருப்பதால், அன்பு சான்றோருடைய சிறந்த இலக்ஷணமென்றறிக.

துறவறமனையறஞ்சீர் தூய்மை நற்கல்விநல்லோர்
உறவொடுமகங்கடானமொண்டவம்விரதம்பூசை
அறிவிவையனைத்துமில்லை யாதரவில்லையாயின்
பெறுவனமெய்வருத்தம் பெரும்பொருளழிவுமாதோ.

இதன் கருத்து.

சான்றோனாகிய ஒருவனுக்கு அன்பு இல்லாவிட்டால், துறவறமும், இல்லறமும், புகழ்ச்சியும், பரிசுத்தமும், (நலகல்வி) நல்லோர் குலத்துக்குப்பொருந்திய படிப்பும், நல்லோர் என்னும் சான்றோருடைய சேர்க்கையும், யாகங்களும், தானமும், சிறந்த தவமும், விரதங்களும், பூசைகளும், அறிவும் இவையெல்லாம் சேர்ந்து வரமாட்டா. அவனுக்கு மெய் வருத்தமும் மிகுந்த பொருள் நஷ்டமுமே கூடி வரும் என்று பொருள்.

ஆகையால் சான்றோருக்கிருக்கவேண்டிய சிறந்த லக்ஷணம் அன்பென்றறிக. அவர்கள் தங்களுடைய அன்பைத்தம் உற்றார் உறவின

ரிடத்தும், அதன் பின் தங்குலத்தவரிடத்தும், அதன் பின் ஏனையோரிடத்தும் செலுத்தவேண்டும். அப்படிச்செய்யத்தவறுவாராயின் மெய் வருத்தமும் பொருள் நஷ்டமுமே முடிவாம்.

பாண்டியன் குலத்தவராகிய சான்றோருடைய நட்பு என்னும் குணதிசயம் லோக பிரசித்தமானதென்று நாலடியார், பொருட்பால், மேன்மக்கள் என்னும் 26-வது அதிகாரம், 4-வது கவியில் கண்டிருக்கிறது.

செல்வழிக்கண்ணொருநாட் காணினுஞ்சான்றவர்
தொல்வழிக்கேண்மையிற் றோன்றப்புரிந்தியாப்பர்
நல்வரைநாடசில நாளடிப்படிற்
கல்வரையுமுண்டா நெறி.

அழகிய மலைகளையுடைய நாடாளுகிய பாண்டியனே! நீ வனவேட்டையாடப்போகின்ற காலங்களில், மானிடர் காலடிகள் மலையின் மீது படவே, அம்மலைமீது வழியுண்டாகப்பார்த்ததில்லையா? அதுபோல உன் குலத்தவராகிய சான்றோர் முகப்பழக்கமில்லாதவர்களையும் கண்ணுற்ற மாத்திரத்தில், அவர்களைத்தொல்வழிச்சிநேகிதர்போல மதித்து, அவர்களுக்கு நட்புப்பாராட்டும் குலமேன்மையையுடையவர்களென்பதாம்.

9. சான்றோர் சுயநன்மையைக்கருதாது, ராஜ்ய நன்மையையே கருதுவார்கள்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,
7-வது கவி.

காலமுமிடனுமேற்ற கருவியுந்தெரியக்கற்ற
நூலுறநோக்கித்தெய்வ நுணித்தறங்குணித்தமேலோர்
சீலமும்புகழ்க்குவேண்டுஞ் செய்கையுந்தெரிந்துகொண்டு
பாலவருமுறுதியாவுந் தலைவற்குப்பயக்குநீரார்.

இதன் கருத்து

தெய்வத்தன்மை பொருந்திய நுண்ணறிவமைந்த தருமசாஸ்திரங்களை ஏற்படுத்திய சான்றோர் (மேலோர்), தம்முடைய பகைவர்களை வெல்லும்படியான காலமும் இடமும் அதற்கு உதவத்தக்க சாமபேததானதண்ட முதலான கருவிகளும் இவையிவையென்று தாம் தெளிவாய்க்கற்ற நூல்களில் ஆராய்ச்சி செய்தறிந்து, தருமத்தையும் புகழ்ச்சியையும் ஸ்தாபிக்கும் செய்கைகளைத்தெரிந்துகொண்டு, இவ்வறிவின் பயனை அரசனுக்கு அடைவிக்கும் தன்மையுடையவர்கள் என்பது பொருள்.

சான்றோர் தருமசாஸ்திரங்களைக்கற்றறிந்த நிபுணர் என்றும், தம்முடைய சிறந்த அறிவைத்தம் சுயநன்மையைக்கருதிப் பிரயோகிக்காமல், இராஜாங்கம் உறுதிப்பட்டிருக்கும்படியாக உபயோகிக்கின்றவர்களென்றும் பொருளாம்.

10. சான்றோர் கோபங்கொண்ட காலத்தில் முதலாய் உதவுவார்கள்.

நன்னெறி, 28.

முனிவினுநல்குவர் மூதறிஞருள்ளக்
கனிவினுநல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினுமாகுங் கதலிதானெட்டிபழுத்
தாயினுமாமோ வறை.

இதன் கருத்து.

வாழைமரமானது முற்றிலும் பழுக்காத காய்களையுடையதா

யிருந்தாலும் பயன்படும், எட்டி மரமானது பழுத்த பழங்களையுடையதாயிருந்தாலும் பயன்படாது; அதுபோல பூர்வகுடிகளாகிய சான்றோர் கோபங்கொள்ளுங்காலத்திலும் உதவுவார்கள், கீழ்மக்கள் முகமலர்ச்சியைக்காட்டினாலும் உதவார்கள் என்று பொருள்.

இக்கவியில் சான்றோருக்கு மூதறிஞர் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. மூதா, முது என்னும் பதங்களுக்கு பழமை என்றும், அறிஞர் என்னும் பதத்துக்கு அறிவுடையோர், சான்றோர் என்றும் பொருள்; ஆகையால் மூதறிஞர் என்றால் பழமையான சான்றோர், பழைய குடிகளான சான்றோர், அதிபூர்வகுடிகளான சான்றோரென்று பொருள்.

வாழை பழுத்தால் மாத்திரமேயன்றிக்காயினும் பயன்படுதல்போல சான்றோர் மனமுவந்த காலத்தில் மாத்திரமேயன்றிச்சினந்த காலத்திலும் தம்மை நம்பியடைந்தவர்களுக்கு உதவி செய்வார்கள். எட்டிகாயில் மாத்திரமேயன்றிப்பழத்திலும் பயன்படாமைபோலக் கீழ்மக்கள் சினந்தகாலத்திலன்றி உவந்த காலத்திலும் தம்மை நம்பினவர்களுக்கு உதவி செய்யமாட்டார்கள் என்பது பிரசித்தம்.

தம்மை நம்பினவர்களை எப்போதும் காப்பது சான்றோர்குல லக்ஷணம் என்பது பொருள்.

11. சான்றோர் தம்மைப்பெற்று வளர்த்த தாய் தந்தையரை நன்றுபசரிப்பார்கள்.

கூர்மபுராணம், வியாசர் கருமமுரைத்தவத்தியாயம்,
13-வது கவி.

தாயினிற்சிறந்ததெய்வ மிலையுயர் தந்தைதன்னின்
மேயநற்குருவுமில்லை யென்னின்மற்றிவர்கடாளில்
ஆய்மலர் தூவியாளுந் தொழுதியேற்றினர்தாமே
ஆய்கதிர்பரப்பும்பொன்னாட் டமரராயினிதுவாழ்வார்.

இக்கவியில் சான்றோர் தம்மை அருமையாய்ப்பெற்று வளர்த்த தாய் தந்தையரிடம் அன்புகொண்டு அவர்களை விரும்பியுபசரிக்கும் விதம் கூறப்பட்டிருக்கின்றது. இக்கவியின் கருத்து:—

சான்றோருக்குத் தாயைக்காட்டிலும் சிறந்த தெய்வம் இல்லை; அதே பிரகாரம் உயர் தந்தை (உயர்குலத்தந்தை, உயர்ந்தோர்குலத் தந்தை) என்னும் சான்றோனாகிய பிதாவிலும் சிறந்த குருவுமில்லை. தாய் தந்தையரென்னும் இருவருடைய பாதங்களில் தூய்மையான புஷ்பங்களையிட்டு அருச்சித்து அனுதினமும் வணங்குகிற சான்றோர் சுவர்க்கம் தேவேந்திர லோகமென்னும் கற்பகநாட்டில் அமரியென்னும் தேவாமிர்தமாகிய பானமுண்டருந்தும் தேவர்களாகச் சுகமாக வாழ்வார்கள் என்பதாம்.

இக்கவியில் தேவேந்திரன் மரபினராகிய சான்றோர் தங்கள் பெற்றோரை எவ்வளவு மகிமையாய் எண்ணி மதித்து வந்தார்களென்று கூறியிருக்கிறது. மற்றும் தேவர்களின் மரபினராகிய சான்றோரும் இதைக் கவனத்தில் வைத்துத் தாய் தந்தையருக்குச்செய்யவேண்டிய கடமையை மறப்பதுமாய் நிறைவேற்றித் தம்மைக்குலநலச்சான்றோர் என்று மாத்திரமல்ல, குணநலச்சான்றோர் என்றும் கீழ்மக்களுக்கு தம்முடைய நடக்கையால் விளக்கிக் காட்டுவார் என்பது திண்ணம்.

இக்கருத்துக்கொண்ட பாட்டொன்று தனிப்பாடலிலும் வருகிறது.

"ஈன்றுவளர்த்ததாய்தந்தைக் கெவரேகைமாறியற்றிவோர்
ஆன்றமதலை நூறுவயதளவு மடிமைத்திறம்பூண்டு
மூன்றுபுவனத்துள்ளபொருண் முற்றுமளித்துமுறைமுறையே
என்றுவழிபாடியற்றிடினு மொருநாள்வளர்த்ததற்கிணையாதே.

முந்தின கவியில் தந்தையென்னும் பெயருக்கு உயர் என்னும் அடைமொழி சேர்த்துக்குலத்தை விளக்கிக்காட்டியபடி, இக்கவியில் மதலை என்னும் பெயருக்கு ஆன்ற என்னும் அடைமொழி சேர்த்துக்குலத்தை விளக்கிக்காட்டியிருக்கிறதென்றறிக.

ஆன்றமதலை = ஆன்றவர் மதலை
= ஆன்றவர்குல மதலை
= சான்றோர்குல மதலை

என்று பொருள். ஆகையால் இக்கவி சான்றோர் குலத்தைச்சுட்டிக் காட்டுகிறதென்றறியலாம். இக்கவியின் தாற்பரியமாவது:—

தன்னைப்பெற்று வளர்த்த தாய் தந்தையருக்குப் பிரதியுபகாரம் செய்திடவல்ல சான்றான் யாவன்? சான்றானாகிய புத்திரன் (ஆன்ற மதலை) 100 பிராயம் வரையிலும் தன் தாய் தந்தையருக்கு அடிமைத் தொழில் செய்தலை ஏற்றுக்கொண்டு, மூன்று புவனத்திலுமுள்ள பொருள்களையெல்லாம் அவர்களுக்குக்கொணர்ந்து கொடுத்து, முறைமை தவறாமல் மனமிணங்கி உபசாரஞ் செய்தாலும், அவ்வுபகாரமானது அவனுடைய தாய் தந்தையராகிய சான்றோர் அவனை ஒரு நாள் வளர்த்ததற்கும் ஈடாகாதன்றோ என்று பொருள்.

ஆகையால் சான்றோர் எக்காலத்திலும் தங்கள் பெற்றோரை மிகவும் நன்குமதித்து உபசரிக்கிறவர்களென்று விசிதமாகிறது.

12. சான்றோர்குல பிரபுக்களே! இத்தன்மைய சிறந்த குலமேன்மை குணமேன்மை என்னும் இருவகை மேன்மையையுமுடையவர்களாயிருந்த நீங்கள் தாழ்த்தப்பட்ட காரணமென்ன? தேவர்களாக மதிக்கப்பட்ட நீங்கள் சர்க்கார் கணக்கில் சூத்திரருக்கும் தாழ்வாக தாக்கல் செய்யப்படுவதெதினால்? வானபரியந்த முயர்த்தப்பட்ட கப்பர்நகூமே நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்பட்டதேன்? 4000-வருஷங்களாக ராஜ்யபாரம் செய்த நீ க்ஷத்திரியனென்று முதலாயொப்புக்கொள்ளப்படாத காரணமென்ன? உன் குலத்தவர்களே தேவர்களாக வணங்கப்படுகின்ற கோவிலுக்குள்ளாக, நீ போகக்கூடாதென்று உன்னைத் தடுக்கும் சர்வ வல்லவருடைய அன்பான செய்கையைச் சற்று கவனித்துப்பார். நீ அறிவுடையோனானபடியால் உனக்கு அதிகமாக விஸ்தரிக்கவேண்டியதில்லை. உன் குலத்தவர்கள் செய்த தேய்வ துரோகமே உன்னைத்தாழ்த்தினதென்றறியக்கடவாய். மேலான பதவியில் நெடுநாளாய் வீற்றிருந்த நீ தெய்வ துரோகியானாய். உனக்குச்சகல மேன்மையையும் கொடுத்த சர்வ வல்லவருக்கு விரோதமாய் உன் [illegible] காலைத்தூக்கினாய். உன்னையே தெய்வமாக்கினாய். இந்தியா முழுவதிலுமுள்ள கோடானகோடி ஜனங்களும் உன் குலத்தவர்களையே வணங்கும்படி அளவிறந்த கோவில்களைக்கட்டிவைத்து தெய்வதுரோகியானாய். ஆகையால் சர்வ வல்லவர் உன் மேன்மையை உன்னைவிட்டு விலக்கினார். சூத்திரனுக்குங்கீழாக உன்னைத்தாழ்த்தினார். நீ உன் துரோகத்தைவிட்டு, சர்வ வல்லவரிடம் திரும்பவேண்டுமென்றே இவ்

படிச்செய்தார். நீ இன்னும் உணர்வடையாமல் உன் குல
யே தெய்வமாக வணங்கும் கோவிலுக்குள் போக முய
ஆகிலும் கர்த்தர் உன்னைப்போகவொட்டாமல் தடுக்கிறார்.
வான அன்பினால் உன்னைத்தடுக்கிறார். உன் துரோகத்துக்
உன்னைப்பட்சிக்க அவரால் முடியாதென்றல்ல. நீ சாவ
நேசிக்கப்பட்டு மேன்மை பெற்றிருந்த பிள்ளையானதால் உ
டிக்காமல் இரட்சிக்கவே விரும்புகிறார். அவருடைய அன்பா
பை அலட்சியம் பண்ணாதே. தெய்வதுரோகியான உன்னிட
லாய் அன்பைக்காட்டுகிற சர்வ வல்லவரின் வார்த்தைகளுக்
கொடு. உன் குலத்தவர்கள் தங்களைத்தாங்களே தேவர்களாக்
டதினால் தங்களை மாத்திரம் கெடுத்துக்கொள்ளாமல், எல்
கடங்காத ஜனங்கள் அவர்களைத்தெய்வம் என்று நம்பி மோ
ரர்களாகையால், மரணத்திற்குப்பின் கடைசி நியாயத்தீர்ப்பு
இந்துக்கள் எல்லாருக்காகவும் நீ தண்டிக்கப்படுவாய். தேவ
சனத்தில் வீற்றிருந்து நியாயம் விசாரிக்கும் தருணத்தில் இ
ல்லாமென்று கனவிலும் நினையாதே. உன் துரோகத்துக்கு
தண்டனைதான் அப்போது உனக்கு விதிக்கப்படும். ஆகையா
முன் உன் ஆத்தும ஈடேற்றத்துக்கானவற்றை நாடித்தேடிக்
உனக்காகவும் உன் குலத்தவர்களுக்காகவும் பரிதபிக்கிற
தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறி
பாவத்தைப்போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்து, அவர்
லடைந்த ஈனமரணத்தினாலே தேவநீதியைச்சரிப்படுத்தி, கி
திலே இப்போது வீற்றிருக்கிறார். இக்கிருபையின் காலத்தி
டைய பாதாரவிந்தத்தையடைந்து, பாவங்களையறிக்கைசெ
சிரடைந்து, மன்னிப்புப்பெற்றுக்கொண்டால், நியாயத்தீர்ப்
நீ கணக்குக்கொடுக்கவேண்டியதிராது. இதுவே கிருபையி
இரக்ஷண்ய நாள், இக்காலத்தை வீண்போக்காதே. சத்திய
97-வது சங்கீதம், 7-வது வசனம் கூறுகிறபடி

> “சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப்பெருமை பா
> யாவரும் வெட்கப்பட்டுப்போவார்களாக; தேவர்களே,
> லாரும்அவரைத்தொழுது கொள்ளுங்கள்.”

அவர் உங்களை மறுபடியும் உயர்த்துவார், மறுபடியும் உங்க
வதிப்பார். அவர் அளவற்ற இரக்கமுள்ளவர், அவருடைய திரு
சரணமென்று அவரைக்கிட்டிச்சேருங்கள். அப்படிச்செய்வீர்
நீங்கள் இப்பிறப்பில் மாத்திரமல்ல, மரணத்துக்குப்பின் உயிர்
வின் காலத்திலும் சான்றோராய் விளங்கி, நித்தியபாக்கியத்தை
சுகித்திருப்பீர்கள். எம்பெருமானாகிய இயேசுபகவான் உங்க
வதிப்பாராக. ஆமென்.

அமரர் புராணம்
முற்றிற்று.